JL 1877
Br6m 21, MPA
M88
161293

நற்போதகம்.

ஜனுவரிமீ. ௯௮௭௬௰.

நவ வருடத் தியானம்.

நவ வருடத்தின் ஆரம்பத்திலே மெய்ப்பக்தர் இறந்த காலம், நிகழ்காலம், வருங்காலம் இம்முக்காலங்களையும் உற்று ஆராய்வார்கள். பின்னிட்டும், இடையிட்டும், முன்னிட்டும் பார்ப்பார்கள்.

க. பின்னிட்டுப் பார்க்கும் இடத்தில் துதியின் களிப்பும், துக்கத்தின் கண்ணீரும் சுரக்கும். சென்ற வருஷத்தில் நமக்கு உடுக்க வஸ்திரமும், உண்ண அமுதும், இருக்கச் சுகமும் அளிக்கப்பட்டது. தேவசமுகத்தின் அருள் நமது இருதயத்தில் மகிழ்ச்சியைக் கொடுத்தது. தேவ ஆசீர்வாதம் நம்முடைய வீட்டை நடத்தினது. பல கவலைகள் வந்தபோதிலும் அவைகளை நீக்குகிறவர் கூட இருந்தார். சுகத்தோடு துக்கம் கலந்திருந்தபோதிலும், தேவனை நேசிக்கிறவர்களுக்கு சமஸ்தமும் நன்மையாக முடியும் என்று பரீட்சையினாலே அறிந்துகொண்டோம். ஆகையால் அவருடைய துதி எப்போதும் நமது வாயிலே இருக்கவேண்டியது நியாயமே.

ஆனால் என்ன? நாம் துக்கப்படவும் வேண்டாமா? செய்யவேண்டும் என்று தேவன் விதித்ததைக் குறைவின்றி நிறைவேற்றினோமா? வேண்டாம் என்று அவர் விலக்கினதை மனதார விட்டுவிட்டோமா? பக்தியில் தேறியிருக்கிறோமா? அவரை முன்னாகவும் உலகத்தைப் பின்னாகவும், அவர் சித்தத்தை ஆதியாகவும் நமது இஷ்டத்தை அந்தமாகவும், அவர் மகிமையை மேலாகவும் நமது பெருமையைக் கீழாகவும் வைத்து, நடந்திருக்கிறோமா? நமது உயிருக்காகத் தமது உயிரைக் கொடுத்த அருமை இரட்சகரை நேசித்து நடந்திருக்கிறோமா? தன்னைப்போல பிறனைப் பேணவேண்டும் என்ற கற்பனையைப் புரட்டி, நம்மைப் பேணி, பிறனை கைவிட்டிருக்கவில்லையா? மொத்தத்துக்கு நாம் முழுகவேண்டிய இன்பக் கடலாகிய கடவுளினது பாசத்தில் மூழ்கி, துன்பக்கடலில் அகப்பட்டிருக்கிற பாவிகளை கைதூக்கி யெடுத்து, கரையில் ஏற்றியிருக்கிறோமா? ஐயோ! இல்லை என்று பரதாபித்

தால் நல்லது. தன் குறைவுகளை உணர்ந்தவன் அவைகளை நிவர்த்தி செய்யவும், இனி குறைவின்றி நடக்கவும் முயலுவானே.

உ. இடையிட்டுப் பார்க்கும் இடத்தில், செய்யவேண்டியதை சீக்கிரம் செய்வதே புத்தி. மாற்றவேண்டியதை மாற்றவும், கூட்ட வேண்டியதைக் கூட்டவும், துவக்கவேண்டியதைத் துவக்கவும், தற்காலமே நல்ல காலம். பாவஉணர்வடைந்து, பாவச்செய்கைகளைக் களைந்துபோடவும், பரிசுத்த குணம் அணிந்து, அதைப் பேணிக்கொள்ளவும், தன் நயத்தை வெறுத்து, சன அபிமானத்தை விரும்பி நடக்கவும், புது வருஷத்தோடு தொடங்க நிர்ணயம்பண்ணினால் நல்லது.

ங. முன்னிட்டுப் பார்க்கும் இடத்தில், தைரியமாயிருக்கவேண்டும். பரீட்சை திடனைக் கொடுக்கும். பத்துதரம் மிதித்த பாதையில் நடக்கிற கால் கூசாமல் செலலும். முற்காலத்தில் தேவசகாயம்பெற்றவர்கள் பிற்காலத்துக்கு அவரை நம்பி, பதறாமல் நடப்பார்கள். நம்மில் நற்கிரியை தொடங்கினவர், இயேசுகிறிஸ்துவின் நாள் பரியந்தம் நம்மை நடத்துவார் என்பது மெய்ப்பக்தருக்கு மாறாத தேவவாக்காயிருக்கிறது.

ஆகையால் சென்றகாலத்தில் பெற்ற தயவுக்கு துதியும், செய்த பாவத்துக்குத் துக்கமும், செல்லுகிற காலத்துக்குரிய கடமைகளுக்குச் சுறுசுறுப்பும், செல்லும்காலத்தில் நேரிடும் அறியாச்சம்பவங்களுக்குத் தேவசகாயம் கிடைக்கும் என்கிற தைரியமும் உடையவர்களாய்இருப்போமாக.

161293

இப்படிக்கு
பத்திராதிபர்.

வட இந்தியாவுக்கும், தென்னிந்தியாவுக்கும் இருக்கும் ஒற்றுமைப் பேதகங்கள்.

பின்வருமாறுள்ள சென்னபட்டணம் சிந்தாத்திரிப்பேட்டையைச் சேர்ந்த புதுப்பிரசங்க மண்டபத்தில் இங்கிலீஷில் செய்யப்பட்ட பிரசங்கத்தின் பொருள். இந்தப் பத்திரிகையைப் பார்ப்போர் இதை ஆவலோடு வாசிப்பார்களென்று நம்புகிறோம்.

வட இந்தியாவானது பல விஷயங்களிலுஞ் சிறந்ததும் விசேஷித்ததுமாயிருக்கிறது. அதின் தேசகுணம் ஆகாயகுணம் அதிலுள்ள எண்ணிறந்த ஜனங்கள் அவர்களுடைய மதாசாரம், குலாசாரம், உடை, நடை, பாவனை, பாஷைமுதலிய இவைகளெல்லாம் கேட்போருக்கும் வாசிப்போருக்கும் பிரியத்தையுண்டாக்கத்தக்கவைகள். வட இந்தியாவானது இந்த உலகத்திலிருக்கும் ஐந்து கண்டங்களிலுமுள்ள எல்லாத் தேசங்களிலும் நானாவிஷயங்களில் மிகவுஞ் சிறந்த ஓர் ஸ்தானம். இந்துக்களுடைய புராணகாவியங்களிலும், இதிகாசங்களிலும், கதைகளிலும் வடதேசமே விசேஷித்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

Ac 6m 211 M82
M82

கிரேக்கைத் தேசமொன்று தவிர வட இந்தியாவைப்போல பூர்வீகத்தில் கல்வியிலுஞ், செல்வத்திலும் விசேஷமாகச் சிறந்து கூறப்பட்டிருக்கும் தேசம் வேறொன்றுமில்லை. அதிலேதான் மகதம், மிதுலம், அயோத்தி, மாளவம், கன்னோசைமுதலிய அநேகஞ் சிறந்த இராச்சியங்கள் இருந்தன. அதிலே ஜெயவீரர், யுத்தவீரர், பெரிய முடிமன்னர்கள், கலைக்கியானிகள், வேதாந்திகள் முதலியவர்கள் தோன்றினார்கள். இந்த வட இந்தியாவில்தான் இராமயாணத்தில் சொல்லப்படுகிற இராமர், இலட்சுமணரும், மகா பாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிற பஞ்சபாண்டவரும், புத்தசமயத்தை ஸ்தாபித்த கௌதமரும், நாலு வேதங்களையும் எழுதிய வேதவியாசர்களும், ஆறு சாஸ்திரங்களையும் உண்டுபண்ணின கபிலரும், செய்யுளில் சிறந்த காளிதாசரும், வான்மீகரும் தோன்றினார்கள். இந்துமத சாஸ்திரங்கள் அவ்விடத்தில்தான் முதலில் தோன்றி தேசமெங்கும் வியாபித்தது. இக்காரணங்களினாலே வட இந்தியாவானது தென்னிந்தியாவைவிட மிகவுஞ் சிறந்தது.

அதிலுள்ள பயிர்வகைகளும், பல ஜாதிகளும், பாஷைகளும், அங்குள்ளவர்களுடைய குணாசாரங்களும் பார்ப்பவர்களுக்கு அநேக விஷயங்களில் வித்தியாசமாகத் தோற்றும். நம்முடைய தேசத்தில் இமையகிரி தொடங்கி கன்னியாகுமரி மட்டும் இந்துக்கள்தான் அதிகமாய்ப் பரவியிருக்கிறார்கள். வடதேசங்களிலுள்ள இந்துக்களுக்கும் தென்னிந்தியாவிலுள்ள இந்துக்களுக்கும் சொற்ப விஷயங்களில் மாத்திரம் ஒற்றுமையுண்டு. நம்முடைய தேசத்திலுள்ள பற்பல நாடுகள் மாகாணங்களிலுள்ள ஜனங்கள் நிறத்திலும், வடிவிலும், குணத்திலும், ஒருவருக்கொருவர் அதிகமாய்ப் பேதப்பட்டிருக்கிறார்கள். நாம் போய் விசேஷமாய்ப் பார்த்துக் கவனித்த இடங்கள் கல்க்குத்தா, பட்ணா, காசி, லட்சுமணபுரி, ஆக்ரா, டில்லி, ஆலிக்கா, அலகபாத்து, ஜபல்ப்பூர், பெம்பாய், பூனா இவைகளே.

கல்க்குத்தாவுக்கு நானும் என்னுடைய கண்யம்பொருந்திய ஒரு சிநேகிதரும் புகைக்கப்பல் வழியாக சென்ற டிசம்பர் மாசம் 26உ போய்ச் சேர்ந்தோம். கல்க்குத்தாவுக்கும் பங்காளக் கடலுக்குஞ் சற்றேறக்குறைய (70) மைல் இருக்கும். கடலிலிருந்து கல்க்குத்தாவுக்கு கப்பல்கள் கங்கைநதியின் பிரதான கிளையாகிய ஊக்கிளி நதி வழியாய்ப் போகிறது. இந்த நதியின் காட்சி சிறந்தது. அதில் நீராவிக்கப்பல்களும் பாய்மரக்கப்பல்களும் அங்குமிங்குந் திரிந்துகொண்டிருப்பதைப் பார்க்கலாம். இந்த நதி அதின் முகத்துவாரத்தில் அதிக அகலமாயிருக்கிறது. மேலே போகப்போக அதின் அகலங் குறைந்துகொண்டே வருகிறது. கல்க்குத்தாப் பக்கத்தில் இதின் அகலம் சற்றேக்குறைய (2) மைல் இருக்கும். இந்த ஆற்றில் ஜலம் எப்போதும் (50) அடி ஆழத்திற்குக் குறையாமல் ஓடிக்கொண்டேயிருக்கிறது. அதின் இருகரைகள்மட்டும் ஓடிக்கொண்டிருக்கிற சேறு கலந்த அழுக்குத் தண்ணீரைப் பார்த்தால் மழைகாலத்தில் தாம்பிரவர்ணி ஆற்றில் இருகரையும் புரண்டு வெள்ளம் ஓடும்போது காணப்படுகிற தோற்றத்தைப் போலிருக்கும். அதின் கப்பல்துறைமுகத்தைப் பார்த்தால் மூன்று நாலு மைல் தூரத்திற்குக் கப்பல்மேல் தோன்றுகிற பாய்மரங்கள் ஒரு நீண்ட சோலையைப்போல காணப்படும். நாங்கள் போன சமயத்தில் உவெல்ஸ் தேச இளவரசர் கல்க்குத்தாவுக்கு வந்ததினிமித்தமும், சில சுதேச ஐரோப்பிய பிரபுகளுக்கு இந்திய நக்ஷத்திரப் பட்டம் சூட்டவேண்டியிருந்ததினிமித்தமும், வந்திருந்த பற்பல இராஜாக்களைக் கண்டோம். இவர்கள் தங்களுடைய மந்திரி, உத்தியோகஸ்தர்கள், பரி

வர்கள், தளங்களோடே வந்திறங்கியிருந்ததினால் பற்பல ஜாதியர்களையும் பற்பல காட்டாளையும் ஏக சமயத்தில் பார்க்கிறதற்கு ஏது கேரிட்டது. அங்கே வந்திருந்த இராஜாக்களில் முக்கியமானவர்கள் காஸ்மீரம், பட்டியாலா, ஜீன்ட், நீவா, ஜெயப்பூர், மலையாளம் இவைகளின் மகா இராஜாக்களும் ஜோட்பூர் மகாராஜாவும், சிந்தியா ஹோல்கார் மகா ராஜாக்களும், சாலார்ஜங் மந்திரியும் போபால தேசத்து பேகம் என்ற இராசாத்தியும், வந்திருந்தார்கள். இவர்களெல்லாரும் இந்திய நட்சத்திரப் பட்டஞ் சூட்டுஞ் சமயத்தில் ஒரு மைதானத்தில் கால் நடையாய் ஒருவர் பின்னொருவராய் தங்களுடைய விருதுகளுடன் பவனி சென்றார்கள். இந்தக் காட்சி மிகவும் அலங்காரமாயிருந்தது.

நாங்கள் கப்பலிலிட்டு இறங்கின இடத்துக்குச் சமீபத்தில் உவெல்ஸ் பிரபுவைப் பார்க்கும்படியாக ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூடி நின்றார்கள். அவர்களில் பங்காளிகள்தான் அதிகமாயிருந்தார்கள். அவர்களுடைய உடையையும், அவர்களுடைய தேகக்கூறையும் நன்றாய்க் கூர்ந்து பார்த்தோம். பார்த்ததில் மாரிஸ் என்பவர் போட்ட இந்துசரித்திரத்தில் பங்காளிகளைப்பற்றி அவர்கள் மிகவும் பெலவீன தேகமுள்ளவர்களும் கோழைகளுமென்று சொல்லியிருப்பது முழுச் சத்தியமென்று தெரியவந்தது. அங்கே கூடிவந்திருந்தவர்கள் சாதாரணமாய் தாழ்ந்த ஸ்திதியிலுள்ளவர்கள். அவர்களைப் பார்த்தபோது நெடுநாள் பட்டினி கிடந்தவர்கள்போலவும் வியாதியினால் இளைத்துப் போனவர்கள்போலவுமிருந்தது. ஆகையினாலே அவர்கள் எங்களுடைய பார்வைக்கு விகாரமாகத் தோன்றினார்கள். நம்முடைய தேசத்திலுள்ள தாழ்ந்த ஸ்திதியிலுள்ளவர்களை அந்த ஸ்திதியிலுள்ள பங்காளிகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் தேக பலத்திலும், வடிவிலும், சுறுசுறுப்பிலும் நம்முடைய தேசஸ்தர்கள் பங்காளிகளிலும் சிரேஷ்டமானவர்களென்று தெரியவரும். பங்காளிகளில் உயர்ந்த ஸ்திதியிலிருக்கப்பட்டவர்களும் தாழ்ந்த ஸ்திதியிலுள்ளவர்களைப்போலவே எல்லா விஷயங்களிலும் நம்மைவிடத் தாழ்ந்திருப்பார்களென்று நாங்கள் உடனே முதலில் உத்தேசித்தோம். ஆனால் அவர்களை நன்றாய் கவனித்துப் பார்க்கப் பார்க்க தென்னிந்தியாவிலுள்ள உயர்ந்த ஸ்திதி ஜனங்களைப் பார்க்கிலும் அநேக விஷயங்களில் வித்தியாசம் காட்டுகிறதாகக் கண்டோம். கல்குத்தாவில் நாங்களிருந்தது 22 நாள். அவ்வளவுநாளும் அங்குள்ள ஜனங்களில் நாலுவித ஸ்திதியிலுள்ளவர்களுடைய குணதிசயங்களையும் அவர்களுடைய வீட்டுக்ரம ஒழுங்குகளையும் கூடிய அளவில் நன்றாய் ஆராய்ந்து பார்த்தோம்.

கல்குத்தா நகரம் சாதாரணமாய் "அரண்மனை நகரி" என்று அழைக்கப்படுகிறது. அதை அப்படிச் சொல்வது சரிதான். அந்த ஊரில் எத்திசையில் பார்த்தாலும் தனவந்தர்களுடைய ஆபீஸ்களும் மாடமாளிகைகளும் கூட கோபுரங்களும் அலங்காரமாய்த் தோன்றும். இந்த நகரத்தில் அநேக சுதேச பிரபுக்களும் ஜமீன்தாரிகளும், பாரி வர்த்தகர்களும் இருக்கிறார்கள். அவர்களுடைய வீடுகளில் அநேகத்தைப் பார்த்தோம். அவைகளெல்லாம் வெள்ளைக் கற்களினால் தளவரிசைப் படுத்தப்பட்டு விலையுயர்ந்த இரத்தினக்கம்பளங்கள் விரித்து மேசை, நாற்காலி, விந்தையான கண்ணாடி விளக்குகள், சரவிளக்குகள், அபூர்வமான படங்கள், வெள்ளைக் கல் பிரதிமைகள், நிலைக்கண்ணாடிகள், பூந்தட்டிகள்முதலிய தட்டுமுட்டுகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் உவெல்ஸ் பிரபுவை இந்தப் பிரபுக்கள் மரியாதைசெய்யும்படி கூடிவந்திருந்த "பெல்காச்சியாவில்லா" என்னும் மாளிகை

யில் அறுபதினாயிரம் ரூபாய் விலை பெறுமான இரண்டு படங்களைக் கண்டோம். அதிலொன்று ஆதாம் ஏவாள் பாவஞ்செய்யாத காலத்தில் அவர்களிருந்த நிலைமையையும் மற்றது பாவஞ்செய்த பின்னிருந்த நிலைமையையும் காட்டுகிறது. இதில் பிந்திய படம் சகலத்திலும் சுபாவத்துக்குச் சரியாக எங்களுக்கு முன்னதாக ஒரு ஆணும் பெண்ணும் நிற்கிறார்போலும் அவர்கள்பேரில் அப்பொழுதுதான் பனிதொன்று பின்னொளி பிரகாசிக்கிறார்போலும் தோற்றுவதைக் கண்டு அதிசயித்தோம். அந்த மாளிகையையுடைய இராஜாவையும் அவருடைய மூன்று சகோதரராயுங் கண்டு இங்கிலீஷில் சம்பாஷித்தோம். அவர்கள் எங்களை அன்பாய் உபசரித்தார்கள். மற்றுஞ் சில இராஜாக்களையும் கல்குத்தாவில் பார்த்தோம். நாலுவித மனுஷரோடும் அதிகப் பழக்கஞ் செய்தோம். ஜமீன்தாரிகள் சுதேச உயர்ந்த சீவில் உத்தியோகஸ்தர்கள், டாக்ட்டர்கள், ஹைக்கோட்டு வைக்கீல்கள், பாரீஸ்ற்றர்கள், சுதேசக் குருமார்கள், உயர்ந்த கல்விப்பட்டம்பெற்றவர்கள், இந்தஜன அபிவிர்த்திக்குத் தலைவர்கள், அநேக பத்திராதிபர்கள், இப்படிப்பட்ட பற்பல அந்தஸ்துள்ளவர்களையும் பார்த்து அவர்களோடே சம்பாஷித்து அவர்களுக்குள்ளே அதிகமாய்ச் சகவாசஞ் செய்தோம். நாங்களிருந்த நாட்களில் பாதி நாளுக்கு மேலாக அங்குள்ள அநேக கனவான்களோடு விருந்து சாப்பிட்டு அவர்களுடன் அதிக நேசமாயிருந்தோம். இரண்டோநாள் மாத்திரம் கிறிஸ்தவர்களோடு சாப்பிட்டது தவிர மற்றக் காலமெல்லாம் இந்துக்களோடேதான் சாப்பிட்டுக்கொண்டிருந்தோம். இதென்ன ஆச்சரியம்! இதென்ன மாறுதல்! ஜாதிக்கட்டுப்பாடும் தப்பறைகளும் குடிகொண்டிருக்கிற சென்னை இராச்சியத்திலுள்ள எங்களுக்கு இந்த விஷயத்தில் பங்காளிகளுடைய விருத்தி வியப்பைக்கொடுக்கத்தக்கதாய் இருந்தது. இங்குபோலவே வங்காளத்திலும் பிராமணர், க்ஷத்திரியர், வெள்ளாளரைப்போன்ற காயஸ்த ஜாதியார், வைசியர் இப்படி பற்பல வர்ணத்தாராகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சம்பந்த விஷயத்தில் குலம்விட்டுக் குலம் கலவாவிட்டாலும் போசன விஷயங்களில் வித்தியாசங் காட்டுகிறதில்லை. தீட்டு என்கிற பயித்தியம் நாளுக்குநாள் அடியோடே ஒழிபட்டுப்போகிறது. கலியாண காலங்களிலும், தக்ககாலங்களிலுமாத்திரம் மற்றச் சாதியாரை விருந்துக்குக் கூப்பிடுகிறதில்லை. மற்றக் காலங்களில் இந்துமத பிராமணர்கள் முதலாய் சூத்திரர்களோடும், கிறிஸ்தவர்களோடுங் கூட ஒரே பந்தியில் உட்கார்ந்து அச்சமற்று, நாணமற்று சாப்பிடுவது சாதாரணமான காரியம். தென்னிந்தியாவில் இப்படிப்பட்டவர்களைக் காண்பதே மெத்த அபூர்வம். நாங்கள் பலவர்ணத்தாரான பங்காளிகளோடே ஒரே பந்தியிலிருந்து சாப்பிட்டதும் அச்சமயங்களில் பேசப்பட்ட காரியங்களும் இன்னம் என் மனதில் நன்றாய்ப் பதிந்திருக்கிறது. ஒரு சமயத்தில் இங்கிலாந்து கேம்பிரிஜ் சருவகலாசாலையில் கனம்: இராக்கிலான்றய்யரவர்களைப்போல முங்கிலர் என்னுஞ் சிறந்த கல்விப்பட்டம் பெற்றவரும் கல்குத்தாச் சருவகலாசாலையில் M. A. பட்டம்பெற்றவரும் ஐக்கோட்டில் பேரஸ்ற்றருமாகிய ஆனந்தமோகன் போஸ் என்னும் ஒரு இந்துப் பிரபுவின் வீட்டில் போசனஞ்செய்தோம். அச்சமயத்தில் எங்களுடன் சாப்பிட்டவர்கள் இருபது இந்துக்கள். அவர்களெல்லாரும் பங்காளத்தின் மேற்பாகத்திலுள்ள டாக்காவைச் சேர்ந்தவர்கள். அவர்களில் இரண்டுபேர் ஜமீன்தாரிகள், ஏழுபேர் டிப்பிட்டி கலெக்கட்டர்கள். இரண்டுபேர் வைக்கீல்கள். கூடிவந்திருந்தவர்களுடைய இங்கிலீஷ் வாக்கு வல்லமை

யைப்பற்றி ஆச்சரியப்பட்டோம். பெரும்பாலும் இப்படிப்பட்ட காரியங்களைப் பார்த்தபோது பங்காளிகள் நம்மைவிட கல்வியில் அதிக வல்லவர்களென்று தெரியவந்தது. பேசுவதிலும், எழுதுவதிலும், பிரசங்கஞ்செய்வதிலும், அங்கிலேயரைப்போலவே செய்வார்கள். ஆக்ஸ்போட் சருவகலாசாலையிலுள்ள சமஸ்கிருத சாஸ்திரியாகிய மானியர் உவில்லியமஸ் என்னும் துரை கூட்டின சபைக்குப் போயிருந்தோம். அங்கே சில பங்காளிகள் இங்கிலீஷில் சாதுரியமாய்ப் பண்ணின பிரசங்கத்தைக் கேட்டு ஆச்சரியப்பட்டோம். இன்னொரு விசை ஒரு பேர் போன சுதேச டாக்ட்டர் கூட்டின சங்கத்திலும் அப்படி அவர்கள் பேசக்கேட்டோம். வைத்தியசாஸ்திரம், நீதிசாஸ்திரம், பாஷை நடை, பிரசங்கத் திறமை இவைமுதலானவைகளில் இந்துதேசத்திலுள்ள மற்றெல்லாச் சாதிக்காரரைப் பார்க்கிலும் பங்காளிகள் நிபுணரென்பது என்னுடைய அபிப்பிராயம். பங்காளத்தில் வசூலாகிற அரசிறைப் பணங்களில் அதிகமானவைகள் ஜமீன்தாரிகளிலிருந்து வருவதால் அங்கே அநேக கனவான்களும் தனவான்களும் இருக்கிறார்களென்பது தெளிவாகிறது. இந்த முறை அங்கே வழங்குவதிலுலேதான் அங்குள்ள உயர்ந்த ஸ்திதியைச் சேர்ந்த ஜனங்கள் செல்வத்திலும், நாகரீகத்திலும், நம்மைவிட மேலாகவும் இழிதரச் சனங்கள் ஜமீன்தாரிகளால் ஒடுக்கப்பட்டு நம்மைவிட அதிகத் தாழ்வான நிலைமையிலுமிருக்கிறார்கள். பங்காளிகளெல்லாரும் எந்த ஸ்திதியைச் சேர்ந்தவர்களாயினும் பெலவீனதேகமும், கோழைமனமுமுடையவர்கள். தடி எடுத்தால் 10 காதம் பறப்பார்கள் மகமதியர் 14-ம் நூற்றாண்டில் படையெடுத்து வந்தபோது ஜனப்பெருக்கமுள்ள அந்தப் பெரிதான இராச்சியத்தை ஆண்ட அரசன் யாதொரு சண்டைசெய்யாமல் மகமதியர்கையில் தேசத்தை விட்டு ஓடிப்போய் விட்டான். அப்படியே சென்ற நூற்றாண்டில் கிளைவ் என்பவன் பங்காளம், பேகார், ஒரிசா, என்ற பெரிதான மூன்று மாகாணங்களையும் மிகவும் லேசாய் கைவசப்படுத்திக்கொண்டான்.

அங்கிலேய இராணுவங்களில் இவர்கள் தங்களை யுத்த வீரராக எழுதிக்கொள்ளுகிறதில்லை. இப்படிப் பங்காள சமஸ்தானத்தில் போர்ச் சேவகராய் அமர்ந்திருப்பவர்கள் வடமேற்கு மாகாணங்களிலிருந்து குடியேறியிருக்கும் இந்துஸ்தானிச் சனங்கள்தான். இவர்களிப்படிப் பெலவீனமாயிருப்பதற்கு இரண்டு பெலத்த காரணங்களுண்டு.

1வது. அவர்களிருக்கிற தேசத்தின் ஆகாயகுணம் உஷ்ணமாயும் அதிக ஈரிப்பாயும் இருக்கிறது. தேசம் அதிகத்தாழ்வாயும் ஈரிப்பாயுமிருப்பதினுலே அது தேக சவுக்கியத்துக்குப் பிரதி கூலமாயிருக்கிறது. கொள்ளை நோய் கொள்ளைக் காய்ச்சல் சாதாரணமாய் மிகுந்து நடக்கும்.

2வது. பலத்தமுகாந்தரம் சோற்றையுஞ் சருக்கரை சேர்ந்த பதார்த்தங்களையும் அவர்கள் அதிகமாய் அருந்துகிறார்கள். மச்சம் ஒன்று தவிற மற்றமாமிச போசனஞ் சாப்பிடுவது அபூர்வம். கோதுமை, சோழம், கேழ்வரகு முதலிய தானியங்களைச் சாப்பிடுகிறவர்கள் மெத்தச்சொற்பம். அவர்கள் விருந்துகளில் சோறும், மரக்கறிகளும் மிட்டாயிகளும் அதிகமாய் நடமாடும். மேலும் உக்காக்குடிப்பது அவர்களுக்கு மெத்தப் பிரீதி. இது தேகத்தைப் பலட்சயப்படுத்துந்தன்மையுள்ளது. இந்த முகாந்திரங்களினுலே அவர்கள் ஊக்கமற்றவர்கள் போலவுங் காணப்படுகிறார்கள். பட்டப்பகலில் சூரியன் வெயில் உறைக்க 10-மணி மட்டும் படுக்கையில் கிடப்பவர்களையும், வண்டிகள் பல்லக்குகளில் குறட்டை போட்டுத் தூங்குபவர்களையும், நடமத்தியான

வெயிலில் தூணியில்லாமல் வெயில் காய்பவர்களையும் சாதாரணமாய்க் காணலாம்.

இவர்கள் தேக பெலத்தில் கோழைகளாயிருந்தாலும், வாய்ப் பேச்சில் அதிக வீரம் பேசுவார்கள். ஐரோப்பியரைப்பற்றியும், துரைத்தனத்தாரைப்பற்றியும், மனத் தாங்கலோடே பேச்சுகளிலாவது, பத்திரிகைகளிலாவது குறை சொல்வது அவர்கள் இயல்பு. இவர்கள் குணாதிசயங்களைப் பற்றி அதிகத் திட்டமாய்ச் சொல்லக்கூடாது. மக்காலே என்னும் சாஸ்திரியார் பங்காளிகளை அதிக வஞ்சகர்கள், பொய்யர்கள், கபடர் என்று சொல்லுகிறார். ஆனால் என்னபிப்பிராயப்படி அவர்களுடைய குணங்கள் வெகுதூரம் சீர்திருத்தமடைந்திருக்கிறது. தேசாபிமானம், நாகரீக விருப்பம், சுயாதீனப் பிரியம் இவைகளில் மற்றெல்லாரைப் பார்க்கிலும் இவர்கள் முந்தியிருக்கிறார்கள். இந்து மதத் தப்பறைகள், கைம்பெண்கள் புனர் விவாக நிறுத்தல், சிசு விவாகம், ஜாதிவேற்றுமையின் தீமைகள், இக்கேடுகளையெல்லாம் அகற்றும்படி அநேக கனவான்கள் பிரயாசப்படுகிறார்கள். இப்படிச் சீர்திருத்தஞ் செய்யத் தலைமைப்பட்டிருக்கும் பண்டிதர் "ஈசுவரச் சந்திர வித்தியாசகர்" பாபுகேஷப் சுந்தர்சேன் முதலிய பெரியோர்களைக் கண்டு சம்பாஷித்தோம். அங்குள்ள இந்துமத பிராமோ மத நிலைமையைப் பற்றிப் பின்னுல் சொல்லுவோம். இங்கே சுதேசக் கிறிஸ்தவர்களைப்பற்றிச் சற்று சொல்லுகிறோம். பங்காள சமஸ்தானம் முழுவதும் இருக்கப்பட்ட ஜனத்தொகை ஆறாக்கோடி. அதில் கிறிஸ்தவர்களின் தொகை ஐம்பதினுயிரத்துக்குக் குறைவுதான். மகமதியருடைய தொகை கொஞ்சங்குறைய இரண்டாக்கோடி. இந்தத் திருநெல்வேலி ஜில்லா வொன்றில் மாத்திரம் 1800000 குடிகளுக்குள் 60000 பேர்வரையும் புரோட்டஸ்ற்ருண்டு மார்க்கத்தைச் சேர்ந்திருக்கிறார்கள். இப்படித் தொகையில் அவர்கள் குறைந்திருந்தாலும் தென்னிந்தியா முழுவதிலும் உள்ள சாதாரணக் கிறிஸ்தவர்களைப் பார்க்கிலும் கல்வியிலும், உத்தியோகத்திலும், அந்தஸ்திலும் மேலாயிருக்கிறார்கள். இங்குவிட அவ்விடத்தில் மேல்ஜாதிக் கிறிஸ்தவர்களின் தொகை அநேக மடங்கு அதிகம். பெரும்பான்மையோர் மேல் குலத்தைச் சேர்ந்தவர்களாயிருப்பதினுல் வித்தியாசமில்லாமல் ஒருவரோடொருவர் கலியாண சம்பந்தஞ் செய்து நமக்குள்ளே இருக்கிறதுபோல ஜாதிச்சச்சரவின்றி அன்னியோன்னியமாய் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்களிலநேகரைப் பார்த்தோம். அவர்களில் திருவஷ்ணமோகன் பனர்ஜி என்னும் ஐயர் சமஸ்கிருத கல்வியில் தேர்ந்த நிபுணர். அவருடைய இரண்டு குமாரத்திகளைக் கனமுள்ள இரண்டு ஐரோப்பிய துரைகள் விவாகஞ் செய்திருக்கிறார்கள். அவர் வீட்டில் ஒரு நாளிருந்து விருந்து சாப்பிட்டோம். அவருக்குப் பிராயம் 60 இருக்கும். நாங்கள் கண்ட ஐயன் மார், டாக்ட்டர் மார், வைக்கில்கள் முதலான கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரையும் பற்றிச் சொன்னுல் அதிகமாய் விரியும். இந்தச் கிறிஸ்தவர்களுக்குள் நம்மைப் பார்க்கிலும் மதாபிமானமும், சுயாதீனப் பிரியமும் அதிகமாயிருக்கிறது. சுதேசக் கிறிஸ்தவர்களாலே ஒரு தூதன மிஷியோன் ஸ்தாபிக்கப்பட்டு நடந்துவருகிறது. அந்த மிஷியோனில் அலுவல் பார்த்துவரும் போதகரைப் பார்த்தோம். அவர் B. A ;-B. L, பட்டம் பெற்றவர் ; குலத்திலும், கல்வியிலும், அந்தஸ்திலும் அவர்கள் உயர்ந்திருப்பதினுல், இந்துக்கள் கிறிஸ்தவர்களை அதிகமாய் மதித்து, அநேக காரியங்களில் அவர்களுடன் தாராளமாய் சகவாசஞ் செய்கிறார்கள்.

அதற்கப்புறம் நாங்கள் பார்த்த இடம் பாரக்புரி. இது கல்க்குத்தாவுக்கு வடக்கே ஊக்ளி ஆற்றின் கீழ்கரையிலிருக்கின்றது. இது ஒரு பட்டாளத்து ஸ்தானம். அதில் இராஜ பிரதிநிதியுடைய அரண்மனை ஒன்றிருக்கிறது. இந்த இடத்தில்தான் 1857-ம்-ஞுத்தில் சிப்பாயிகள் தோட்டா வாங்க மாட்டோமென்று மறுத்து முதல் முதல் கலகித்தார்கள். இங்கிருந்ததான் கலகந்தோன்றி வட இந்தியாவில் வியாபித்தது இங்கே ஊக்ளி ஆற்றங்கரையில் ஜலசூத்திரத்தினால் அதின் ஜலத்தை யெழுப்பித் தெளிய வைத்துக் கல்குத்தாவுக்குக் குழாயின் வழியாய் அனுப்பும்படி செய்திருக்கும் கட்டிடங்களையும் வேலை நடக்கும் முறைமையையும் பார்த்தோம். கங்கையின் அழுக்கான தண்ணீர் கல்குத்தாவுக்கு மிகவுஞ் சுத்தமாகவும் அதிகத் தெளிவாகவும் போகிறது. இதிலுஞ் சுத்தமான ஜலம் வேறெங்கும் பார்த்திருப்பதுமில்லை, சாப்பிட்டிருப்பதுமில்லை. ஆற்றுக்கு நேர் அந்தக் கரையில் வெகு காலத்துக்குமுன் இந்தியாவுக்கு வந்த குருமாராகிய மார்ஷமன், காரி என்பவர்கள் வசித்த சிரம்பூர் என்னும் பட்டணத்தைப் பார்த்தோம்.

அதற்கப்பால் நாங்கள் பார்த்தது பர்துவான் என்னும் பட்டிணம். இந்தப் பட்டணத்தையடுத்த சீமை இந்தியாவிலுள்ள மற்றெல்லா இடங்களைப்பார்க்கிலும் அதிகச் செழிப்பானது. இந்த நாட்டில்தான் அதிகமான நெல்விளைச்சல். இதின் இராஜா மகாராணிக்குக் கீழ்ப்பட்ட எல்லாக் குடிகளிலும் அதிகத் தனவர்த்தனர். இவர் இராணிக்குக் கொடுக்கிற வருஷாவரி 4000000 ரூபாய். அவருடைய விசாலமான பூந்தோட்டத்தையும், நந்தவனத்தையும், தெற்பக்குளங்களையும், அரண்மனையையும், அதின் விலையுயர்ந்த தட்டுமுட்டுச் சாமான்களையும் பார்த்தோம். கல்குத்தாவிலுள்ள சுதேசப் பிரபுக்களின் மாளிகைகளில்கண்ட சாமான்களிலும் இவைகள் அதிக விலையுயர்ந்தவைகள்.

அதற்கப்பால் பட்னவுக்குச் சமீபத்திலுள்ள டினப்பூருக்குப் போனேம், போகிற வழியில்—இராணிக்கஞ்சு—என்கிற இடத்தில் நிலக்கரி வெட்டி எடுக்கிற கேணிகளிருக்கின்றன.—ஊக்ளிநதிமுகத்துவாரந்தொடங்கி பாகார் மட்டும் பார்த்தால் மகாதியோ என்கிற இடத்திலுள்ள பரும்புகள் தவிர மற்ற இடங்களிலெல்லாம் குன்றுகள் மலைகளில்லாமல் கண்ணெட்டும் தூரங்கள் மட்டும் ஏகமைதானமாய் நெல் வயல்களாகவே தோற்றும். பாகாருக்கப்புறம் எங்கே பார்த்தாலுந்தோன்றுகிற கங்கை நதியடித்த மைதானங்களில் கோதுமை, துவரை, கடலை முதலான புஞ்சைத் தானியங்கள்தான் மிகுதி.

(இன்னும் வரும்.)

Life of Arch Bishop Cranmer.

கிரான்மர் சிரேஷ்ட கண்காணியார் சரித்திரம்.

(தொடர்ச்சி.)

கி. பி. 1542 ம் வருஷத்தில் பாப்புமார்க்கத்தார் இங்கிலிஷ் வேதாகமத்தைத் திருத்தி அச்சிடப் பிரயத்தனம்பண்ணினார்கள். இதற்கு அவர்களே ஏவின எதார்த்தமான நோக்கம் அதைத் திருத்தவேண்டு

மென்பதல்ல, அதை எடுபடித்தவேண்டுமென்பதுதான். கிரான்மர் என்பவர் அவர்களுடைய உள் நோக்கத்தைக் கிரகித்துக்கொண்டு அதைப் பிரசுரஞ்செய்ய முதலில் பிரயாசப்பட்டதைப் பார்க்க இப்பொழுது மிகவும் அதிகமாய்ப் பிரயாசப்பட்டார். அப்பால் பாப்புமார்க்கத்தாருடைய ஏவுதலின்பேரில் சீர்திருத்தத்துக்கு இடையூறுகத்தக்க தந்திரமான சில கேள்விகள் இராசாவினுலே புராட்டெஸ்தாந்து வேதசாஸ்திரிகளிடத்தில் கேட்கப்பட்டன. கிரான்மர் அவைகளுக்குச் சொன்ன அனுகூலமான உத்தரவுகளினுலே பாப்புமார்க்கத்தாருடைய தந்திர யோசனை சித்திக்காமற்போனபடியால், மேற்படியார் அவர்பேரில் அதிக மூர்க்கமாய்ப் பகைசாதிக்கத்தொடங்கி அவரை யெடுபடுத்திவிடும்படி வெகுவாய் முயன்றார்கள். இராசா சிரேஷ்ட கண்காணியாருக்குச் சார்பாயிருந்திராவிட்டால் அப்பொழுதே அவரை எடுபடுத்தியும்போடுவார்கள். இந்தக்காலம்போலவே இரண்டுவிசை அவர் பேரில் பொய்யாய்க் குற்றஞ்சாட்டினார்கள். இரண்டுவிசையும் அவர் தேவசெயலால் அற்புதமானவிதமாய்த் தப்பிக்கொண்டார். அப்பால் இராசா அவருக்கும் அவருடைய சத்துராதிகளுக்கும் ஒருவகையாய்ச் சமாதானம்பண்ணுவித்தபோதிலும், நோமானித்தார் ஒருபொழுதும் உண்மையாயிருக்கமாட்டார்களென்றும் எப்படியும் சிரேஷ்ட கண்காணியாரை மோசப்படுத்திப்போடுவார்களென்றும் இராசா உணர்ந்துகொண்டு, அதுமுதல் அவர் சத்துருக்களுக்கு இடங்கொடாமல் அவரைக் காப்பாற்றிக்கொண்டே வந்தான். அதன்றியும் சிரேஷ்ட கண்காணியார் கேட்டுக்கொண்டதின்பேரில், தேவாராதனை இங்கிலிஷ் பாஷையிலும் நடத்தப்படவேண்டுமென்றும், தேவாலயங்களிலுள்ள சொரூபங்களையெல்லாம் அகற்றிவிடவேண்டுமென்றும் இராசா உத்தரவு பிறப்பித்தான். ஹென்ரி அரசன் இன்னம் சிறிதுகாலம் உயிரோடிருந்திருப்பானுகில், மார்க்க சீர்திருத்தத்துக்கு அனுகூலமான மற்றும் பல ஏற்பாடுகளும் உண்டாகியிருந்திருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆகிலும் அவனுடைய அந்தியகாலம் வந்துவிட்டது. அவன் மரணப்படுக்கையிலிருக்கையில், மற்றும் கண்காணிமார்களாவது குருமார்களாவது தன்னண்டை வர இடங்கொடாமல் கிரான்மர் ஒருவனை மாத்திரம் வருவிக்கச் சம்மதித்தான். சிரேஷ்ட கண்காணியார் வந்தபொழுது இராசாவின் புத்தி மயங்காவிட்டாலும் காவு விழுந்துபோனதினுலே அவன் பேசக்கூடவில்லை. சிரேஷ்ட கண்காணியார், கிறிஸ்து இரட்சகர் முன்னிலையில் தேவனிடத்தில் நம்பிக்கை வைக்கும்படி புத்திசொல்லியபின் அந்தப்படியே செய்ததற்கு ஒரு அடையாளங்கேட்க, அவர் கையை ஆவலோடு பிடித்து இருத்திவிட்டு உடனே மரித்துப்போனான்.

அதன்பேரில் அவனுடைய பாலியக்குமாரனுகிய ஆரும் எட்வார்ட் சிம்மாசனமேறினான். எட்வார்ட் அரசனுக்குப் பட்டம் சூட்டுகிற சமயத்தில், சிரேஷ்ட கண்காணியார் சுத்தமான தேவாராதனையைத் திரும்ப ஏற்படுத்துகிற விஷயத்தில் அவனே யோசியா ராசாவுக்கு ஒப்பிட்டு அவன் நிறைவேற்றவேண்டிய கடமைகளைக்குறித்து அவனுக்குப் புத்திசொன்னார். சிறிதுநாளைக்குப்பிறகு, குருக்கள்மார் பிரசங்கஞ் செய்வதில் மிகுதியான தாறுமாறுகள் நடப்பாயிருந்ததை அவர் அறிந்து, அவர்களைப் பிரசங்கஞ்செய்யவேண்டாமென்று தடுத்து, தாம் ஆயத்தம்பண்ணியிருந்த ஓமிலி என்னும் பிரசங்கங்களைச் சனங்களுக்கு வாசிக்கும்படி நியமித்தாமல்லாமல், அக்காலத்தில் சிரேஷ்டமான தென்று எண்ணப்பட்ட எராஸ்மூஸ் என்பவனுடைய வேதவியாக்கியா

னத்தையும் இங்கிலிஷில் மொழிபெயர்த்துக் கொடுத்து வாசித்து வரும் படி உத்தரவுபண்ணினார். ஒமிலியென்னும் பிரசங்கங்களடங்கிய மேற் படி புஸ்தகமுழுமையும் கிரான்மர் தானே எழுதினதல்ல. சீர்திருத்தம் நடந்தேறுகிறதற்கு முக்கிய கருவிகளாயிருந்தவர்கள் எல்லாரும் கூடி உண்டுபண்ணினதுதான்.

இங்கிலாந்து சபைக்குரிய உபதேசங்களை விளக்கிய இத்தப் புஸ்தகம் தேசமெங்கும் பிரசித்தமாகி, மேற்படி சபையைச் சேர்ந்த எல்லோரும் அதை வாசித்து திட்டமாய் உணர்ந்துகொண்டிருப்பார்களானால் மிகுந்த நன்மை பலிக்கிறதற்கு ஏதுவிருக்கும். எப்படியென்னில் சுபாவப்படி மனுஷனுடைய சீர்கேடு, இரட்சகரின் அருமை, பரிசுத்தாவியினாலே மறு ஜென்மம் அடையவேண்டிய அவசியம் இவைமுதலிய வேதஉபதேசங்களைக்குறித்து சபையைச் சேர்ந்த எல்லாருக்குள்ளும் ஒரே வகையான கொள்கையும் விசுவாசமுமிருக்குமே.

கி. பி. 1549 வரைத்தில் கிரான்மர் சிரேஷ்ட கண்காணியார் புதிதாய் ஒரு பொதுவான செபபுத்தகம் உண்டுபண்ணுவதில் முயற்சியாயிருந்தார். அதுவரையில் சபையில் வழங்கிவந்த ஆராதனை முறைமைலத்தின் பாஷையில் நடப்பிக்கப்பட்டு வந்தது. குருமார்களிலும்கூட அநேகருக்கு அதின் பொருள் விளங்கவில்லை. அப்பேர்ப்பட்ட ஆராதனை ஒழுங்கு புத்திக்கும் தேவவசனத்துக்கும் முற்றும் விரோதமல்லவா? அதை வழங்குகிறவர்கள் ஆவியோடாவது புத்தியோடாவது செபிக்கக் கூடுமோ? ஆகையால் புத்தியுள்ள ஓர் ஆராதனை முறைமையை ஏற்படுத்தவேண்டுமென்று சிரேஷ்ட கண்காணியார் வெகுகாலமாய் விருப்பமுற்றிருந்தார். அவ்விருப்பத்தின்படி செய்வதற்கு எட்வார்ட் அரசன் இப்பொழுது தாராளமாய்ச் சம்மதித்துக்கொண்டான். அதன் பேரில் சிரேஷ்ட கண்காணியாரும் ரிட்லிக் கண்காணியாரும் வேறு ஐந்து கண்காணிமார்களும் தேறின குருமாரில் ஆறுபேர்களும் மேற்படி வேலையை நடப்பிக்கும்படி நியமிக்கப்பட, அவர்கள் 1548 ல் மேற்படி வேலையைத் தொடங்கி நடப்பித்து, 1552 ல் இந்த அரசன் காலத்திலேயே மறுபடியும் பார்வையிட்டுத் திருத்தி ஏற்படுத்தினார்கள்.

அப்பால் சிரேஷ்ட கண்காணியார், புரோட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களெல்லாரும் வேத உபதேசத்திலும் சபைக் கட்டுப்பாட்டிலும் ஒருமைப்பட்டிருக்கும்படிக்கான ஒரு ஏற்பாடு செய்ய முயற்சித்தார். இப்பேர்ப்பட்ட முயற்சி எவர்களும் மெச்சிக்கொள்ளத்தக்கதுதானே. அதுபோலவே அதில் ஏற்பட்டவருடைய பாரிப்புத்தியும் கிறிஸ்தமான சற்குணமும் நன்றாய் வெளியாகிறது. ஆயினும் அவர் எதிர்பாராதவிதமாய் அதில் அநேக தொல்லைகளும் இடையூறுகளும் நேரிட்டமையால் அதைக் கைநெகிழவேண்டியதாயிற்று. அதன்பிறகு, குருமார்கள் விபரீதமான கொள்கைகளையுடையவர்களாயிருப்பதையும் வேத விரோதமான உபதேசங்களைப் போதிக்கிறதையும் அறிந்து, தம் சுதேசத்திலுள்ள புரோட்டெஸ்தாந்து குருமார்களுக்குள் அது விஷயத்தில் ஐக்கியமிருப்பது அவசியமென்று உணர்ந்துகொண்டு, செபபுத்தகம் உண்டுபண்ணுகிறதற்கு உதவிசெய்த ரிட்லிக் கண்காணியார் முதலியவர்களை இப்பொழுதும் சேர்த்துக்கொண்டு நாற்பத்திரண்டு வேதமார்க்கப் பிரமாணங்களை எழுதியேற்படுத்தினார். சிலகாலத்துக்குப்பின் இந்தப் பிரமாணங்களோடு இரண்டொன்றை கூட்டி சிலவற்றை தள்ளி தற்காலத்திலிருக்கிறபடி முப்பத்தொன்பது ஆக்கினார்கள்.

Bible Sketches and their Lessons.

பாலபோதனை.

எரேமியா தீர்க்கதரிசியைக்குறித்தது.

எரேமியா 26 ம் அதிகாரம்.

(தொடர்ச்சி.)

இராசாவும் சனங்களுமேயென்றால் அவன் சொன்ன புத்தியைக் கேட்டு நடக்க மனமில்லாதவர்களாயிருந்தார்கள். அப்படியே சிதேக்கியா ராசா எகிப்தியரிடத்தில் உதவிதேடிக்கொண்டு நேபுகாத்நேச்சாருக்கு விரோதமாய்க் கலகம்பண்ணினான். அதன்பேரில் பாபிலோனிராசா பார்வோனுக்கும் யூதருக்கும் விரோதமாய் யுத்தஞ்செய்யும்படி திரண்ட சேனை அனுப்பினான். எரேமியா அவ்வாறு உண்டான சண்டையையும் சஞ்சலத்தையும் பார்த்து, மனஞ்சலித்துப்போய் தன் ஜனன ஊராகிய ஆனதோத்திற்போய் அமரிக்கையாயிருக்கவேண்டுமென்று கருதி இராஜ நகரியைவிட்டுப் புறப்பட்டுப்போனான். போகிறமார்க்கத்தில் இராசாவின் போர்ச்சேவகர் அவனைக் கண்டுபிடித்து, பாபிலோனியனைச் சேர்ந்துகொள்ளப்போகிறதாக அநியாயமாய் அவன்பேரில் குற்றஞ்சாட்டி அவனைச் சிறைச்சாலையிற் போட்டார்கள். அவன் வெகுநாள் சிறையிலிருக்கையில், அவன் சொல்லிவந்த யோசனையினிமித்தம் பிரபுக்கள் அவன்பேரில் கோபதாபமாகி உள்ளுஞ் சேறுமிருந்த ஒரு தாவில் அவனைப் போட்டார்கள். எத்தியோப்பியனான ஏபெத்மெலேக்கு என்னும் பிரதானி ஒருவன் அவன்பேரில் மனதருகி இராசாவினிடத்தில் அவனுக்காக பரிந்துபேசி, கிழிந்துபோன பழம் புடவைகளையுங்கந்தைகளையும் ஒரு கயிற்றில் கட்டி அதை எரேமியாவின் அக்குள்களிற்போட்டு மெதுவாய் வெளியே தூக்கிவிட்டான். அதற்குப் பின்பும் அவன் சிறைச்சாலையில் தானேயிருந்து சிதேக்கியாவுக்கு நல்ல ஆலோசனை சொல்லிக்கொடித்துக் கொண்டுவந்ததோடு, பட்டணம் பிடிபட்டு அக்கினியால் சுட்டெரிக்கப்படுமென்று அறிவித்துக்கொண்டும் வந்தான். அந்தப்படியே கொஞ்சகாலைக்குள்ளாக நடந்தது. இராசா நம்பிக்கையற்றவனும் இரண்டொரு சிநேகிதர்களோடு இராத்திரியே இரகசியமாய்ப் பட்டணத்தைவிட்டுத்தப்பியோடிப்போனான். ஆகிலும் போகிற மார்க்கத்தில் எரிகோவின் மைதானத்தில் அவனைப் பிடித்துக் கொண்டுவந்து நேபுகாத்நேச்சாருக்கு முன்னிருத்தினார்கள். அதன்பேரில் நேபுகாத்நேச்சார் சிதேக்கியாவின் பிள்ளைகளை தகப்பன் கண்களுக்கு முன்பாக நிஷ்காருணியமாய்க் கொலைசெய்வித்து, அவனுடைய கண்களையும் பிடுங்கிப்போட்டான். அப்புறம் வெண்கல விலங்குகளினாலே அவனைக் கட்டி பாபிலோனுக்குச் சிறையாகக்கொண்டுபோனார்கள்.

அதற்குப்பின் ஒருமாதம் கழிகிறதற்குள்ளாக கல்தேயருடைய சேனைகள் எருசலேமுக்கு வந்து அதைச் சமூலமாயழித்துப்போட்டு ஆயிராயிரமான சனங்களைப் பாபிலோனுக்குச் சிறைகளாகக் கொண்டுபோனார்கள். எரேமியாவோ விடுதலையடைந்தான். என்றாலும் அவன் உள்ளம் சஞ்சலத்தால் நொறுங்கிப்போய்விட்டது. ஒருகாலத்தில் மகா

அழகியதாயிருந்த அந்தப் பட்டணத்துக்கு நேரே ஒரு மலையின் மீது அவன் உட்கார்ந்துகொண்டு அதின் அழிவைப் பார்த்து ஒப்பாரிவைத்து அழுதானும். அவனுடைய புலம்பல்கள் அந்தச் சமயத்திலேயே பாடப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

வேதாகமத்தில் இந்த ஆகமத்தைப் பார்க்கத் தக்கசரமான பகுதி வேறொன்றில்லை. அதை நீங்கள் வாசிக்கும்பொழுது அந்தத் துக்கமெல்லாம் பாவத்தினாலேயே வந்தது என்பதை நினைத்துக்கொள்ளுங்கள். எரேமியா எருசலேமின் அழிவைப் பார்த்து, "வழியில் நடந்து போகிற சகல சனங்களே, இதைக்குறித்து உங்களுக்குக் கவையில்லையா? கர்த்தர் தமது உக்கிரமான கோபமூண்ட நாளிலே என்னைச் சஞ்சலப்படுத்தினதினால் எனக்குண்டான என் துக்கத்துக்குச் சரியான துக்கம் உண்டோவென்று என்னை நோக்கிப் பாருங்கள்" என்று புலம்புகிறாரே. பாவமானது இன்னொரு மகாத்துமாவின்பேரில் அதனிலும் அதிக பயங்கரமான துக்கத்தை வருவித்ததை இது நமக்கு ஞாபகப்படுத்துகிறதில்லையா?

தீர்க்கதரிசி அதிகக்காலம் எருசலேமின் அழிவைப் பார்த்து புலம்பிக்கொண்டிருக்க இடங் கிடைக்கவில்லை. நேபுகாத்நேச்சாரால் தேசாதிபதியாக ஏற்படுத்தப்பட்டிருந்த கெதலியா என்பவன் எரேமியாவைப் பட்சமாய் நடத்திவந்தான். இந்தக் கெதலியாவைக் கொஞ்சநாளைக்குள்ளாகக் கொலைசெய்துபோட்டார்கள். அதன்பேரில் தேசத்தில் மீதியாயிருந்த யூதர்கள் பயந்துபோய் எகிப்துக்கு ஓடிப்போய்விடத் தீர்மானித்துக்கொண்டார்கள். எரேமியா அவர்களைத் தேவநாமத்தினாலே அங்கேபோகவேண்டாமென்று சற்பித்தும், அவர்கள் அதைக் கேளாமல் தாங்கள் போனதுமல்லாமல், எரேமியாவையும் அவனுடைய உண்மையுள்ள சிநேகிதனாகிய பாருக்கையும் பலவந்தமாய் தங்களோடுகூடக் கொண்டுபோய்விட்டார்கள்.

இதோடு அவனுடைய சரித்திரம் முடிகிறது. அவன் சிலகாலம் அந்த யூதர்கள் நடுவிலிருந்து, அவர்களுக்கு தேவனுடைய சித்தத்தை அறிவித்து உண்மையாய் ஊழியஞ்செய்துகொண்டிருந்தான் என்பது அவ்வளவுதான் நமக்குத் தெரியும். அப்புறம் அந்த யூதர்கள் அவனுடைய எச்சரிப்புகளைக் கேட்டு சலித்துப்போய்க் கடைசியில் அவனைக் கல்லெறிந்து கொன்றார்களென்று பூர்வ நூலாசிரியர் சிலர் குறிப்பிட்டிருக்கிறார்கள். வேறு சிலரோ, அவன் அங்கிருந்து பாபிலோனுக்குத் தப்பியோடிப்போய் அவ்விடத்தில் மரித்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். இவ்விரண்டில் எது உண்மையோ தெரியாது.

பிரியமானவர்களே, துக்கமான இந்தச் சரித்திரத்தில் விவரித்திருக்கிற பிரகாரம் புலம்புகிற தீர்க்கதரிசியை நாம் நினைக்கும்போது, அவன் எழுதியிருக்கிற நம்பிக்கை தரும் செய்தியை மறந்துபோகாதிருப்போமாக. அழிந்துபோகப்போகிற அழகிய அந்த நகரத்தையும் கழிந்துபோகிற மகிமையையும் வரப்போகிற ஒரு நல்ல காலத்தையும் சுட்டிக் காண்பிக்கிறானே.

"அந்நாட்களுக்குப் பிற்பாடு நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது, நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் சனமாயிருப்பார்களென்று கர்த்தர் சொல்லுகிறார். இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி, கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை, அவர்களில் சிறியவன் முதல் பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்களென்று கர்த்தர் சொல்லுகிறார். நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்."

Notes on Exodus.

யாத்திராகம வியாக்கியானம்.

32 அதிகாரம்.

கன்றுக்குட்டி விக்கிரகாராதனை.

1. மோசே ஏறக்குறைய 40 நாள் இவர்களைவிட்டுப் பிரிந்திருந்தான்.

"தெய்வங்களே." தெய்வம் என்று ஒருமையாய்த் திருப்பப்பட்டால் அதிகத் திட்டமாயிருக்கும். எபிரேய மூலத்தில், மெய்த்தேவனுக்கும் இந்த வார்த்தையே நெடுக வழங்கப்பட்டிருக்கிறது.

4. முதலாவது கருமூரடாய் வார்ப்பித்து பிறகு இராவி மினுக்கியிருப்பான். எகிப்தியர் வணங்கின முக்கிய தெய்வம், கன்றுக்குட்டி விக்கிரகந்தான்,

5. "கர்த்தருக்கு" அதாவது எகோவாவுக்கு. இந்தக் கன்றுக்குட்டி விக்கிரகம் எகோவாவைக் குறிக்கும்படியான நோக்கமாய்ச் செய்யப்பட்டது. 4 வா.

6. அஞ்ஞான உற்சவங்களில் வழக்கமாய் நடக்கிறபடி சிற்றின்பக் கிரியைகளைச் செய்தார்கள். இவர்கள் இருதயம் எகிப்தியருடைய விக்கிரகாராதனையினால் கறைப்பட்டுப்போயிருந்தது.

20. "அரைத்து." பொற்கன்றுக்குட்டியை மறுபடியும் அக்கினியிற்போட்டு உருக்கி, தண்டுதண்டாய் உடைத்து பலபேர் சேர்ந்து அரத்தினால் இராவி இலேசாய்ப் பொடித்திருப்பார்கள்.

"குடிக்கும்படி செய்தான்." மலையிலிருந்து ஓடிவருகிற தண்ணீரில் போட்டான். இதைத் தவிர வேறே தண்ணீருமில்லை. ஆகையால் இவர்கள் குடிக்கும்படி நேரிட்டது. இப்பொழுது அவர்கள் செய்த பாவத்துக்கு ஏற்ற தண்டனையை அடைய அவர்கள் எதிர்பார்த்திருக்கவேண்டுமென்று இதினாலே குறிப்பித்தான்.

21. ஆரோனைக் குற்றவாளியாகத் தீர்த்து இப்படிக் கேட்கிறான்.

22-24. புத்தியீனமான வீண் போக்கு. குற்றமுள்ள மனச்சாட்சி இப்படி அலப்புகிறது வழக்கந்தான்.

25. "நிர்வாண." அதாவது அலங்கோலமாக்கியிருந்தான். எபிரேயமூலத்திலுள்ள வார்த்தை: அலங்கோலம், கவலையின்மை, அல்லது சிற்றின்பம் என்று பெரும்பாலும் அர்த்தம்பண்ணப்படும். 6 வா. 1 கொரி. 10: 7, 8.

26. "பாளயத்தின் வாசலில்." அதிகாரிகள் நியாயம் விசாரிக்கிற இடம். எபிரேயருடைய சட்டத்தின்படி, விக்கிரகாராதனை தேச அதிகாரிகளால் தண்டிக்கப்படவேண்டிய குற்றம்: 22: 20 வியா.

"லேவியின் புத்திரர்." ஆதி. 49: 7 வியா.

30. "ஏறி." சீனாய் மலையின் உச்சிக்கு அல்ல. பாளயத்துக்குச் சற்று தூரமான இடத்தில் என்று தோன்றும்.

31, 32. "புஸ்தகம்." "ஜீவபுஸ்தகம்," அதாவது நித்திய ஜீவனை அடைகிறவர்களுடைய பேர்டாப்புப் புஸ்தகம். சங்கீ. 69: 28. தானி. 12: 1. லூக். 10: 20. பிலிப். 4: 3. வெளி. 3: 5. 13: 8. 20: 12.

"கிறுக்கிப்போடும்." என்னை நித்திய நரகத்திலே போட்டுவிடும் என்ற விருப்பமாயல்ல, இந்தச் சனங்களுக்குப் பதிலாக என்னைக் கொன்றுபோடுமென்று சரீர மரணத்தைக்குறித்துப் பேசுகிறதாக அநேகர் அர்த்தம்பண்ணுகிறார்கள். என்றாலும் பெரும்பாலுமுள்ள கருத்துப்படி,—அவர்களுடைய பாவத்தை நான் சுமக்கும்படி என்னைப் பாவபலியாக ஒப்புக்கொடுக்கிறேன்; அவர்களுக்கு வரும் தண்டனையை என்பேரில் செலுத்தும் என்றர்த்தமாய் மோசே மகா வைராக்கியத்தோடு சொல்லுகிறான். எப்படியிருந்தாலும், நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த திவ்விய மீட்பரைத் தவிர மற்றொருவருக்கும், பாவப்பிராயச்சித்தம்செய்ய உத்தரவுமில்லை, அவர்களாலே ஏலவும் ஏலாது.

என் நேச ரட்சகா! அருளின் சொரூபா!
நீர்தாமல்லோ! சாபத்தைச் சகித்தீர்! பாவத்தை ஜெயித்தீர்!
என்றைக்கும் ரட்சிப்பீர், என் ரட்சகா!

34. தேவ சமுகம் அவர்களுடன் சென்றது சந்தேகமில்லாமல் அவர்களுக்குப் பாக்கியந்தான். ஆனால் அது அவர்களுடைய ஆபத்தை அதிகப்படுத்துவதுபோலிருந்தது. 33: 2, 3.

35. "உபாதித்தார்." ஏதாவது ஒரு வியாதியினாலே என்று தோன்றும். ஆரோனும் சனங்களும் ஒன்றுபோலவே குற்றவாளிகளாயிருந்தார்கள்.

படிப்பினை.

அதிகாரிகள், குருக்கள், குடும்பத் தலைவர்கள் ஆகிய இவர்கள் நெடுங்காலமாய் தங்கள் வேலையை விட்டுப் பிரிந்திருப்பது சோதனைக் கேதுவானகாரியம்.—வரப்போகிற நியாயத்தீர்ப்பைக்குறித்த அவிசுவாசந்தான், அநியாயத்துக்கும் அவபக்திக்கும் மூடாயிருக்கிறது. "என் ஆண்டவன் வர நாள் செல்லும்" என்ற மோசமான எண்ணத்தினாலேதான் அநேகர் துணிந்து அக்கிரமஞ்செய்கிறார்கள். 1 வா. மத். 24: 48-51. 2 பேது. 3: 4.—பெரும்படியான அக்கிரமஞ்செய்ய ஆரோன்களும் சிலவேளைத் தலைப்படுவது ஆச்சரியமல்ல. 4.—மனுஷ சுபாவத்தின் கேட்டை என்ன சொல்ல! இஸ்ரவேலர் சீனாயின் பயங்கரக் காட்சிகளை எவ்வளவு சீக்கிரத்தில் மறந்துவிட்டார்கள்! சாத்தான் நமது புத்தியின் கண்களைக் குருடாக்கும்போது, ஐயோ, நாம் கெத்செமனேயின் வியாகுலக் காட்சியையும், கொல்கதாவின் வேதனைக் காட்சியையும் நன்றிகேடாய் மறந்துவிடுகிறோம்! 6.—"இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது. இஸ்ரவேலர் பொற்கன்றுக்குட்டியை இருதயத்திலே வைத்துக்கொண்டுவந்தார்கள். இப்பொழுது கண்ணுக்குமுன் நிறுத்திக்கொண்டார்கள். "எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள். 8.—எந்தப் பொருளுக்கு நமது இருதயத்தைக் கொடுக்கிறோமோ, அந்தப் பொருளுக்கு நமக்குள்ளதெல்லாவற்றையும் கொடுப்போம். 3, 25.—சுபாவ இன்ப அநுபவங்களுக்கும் தண்டனை வருகிறது. அறியாமையினாலும் கவலைத்தாழ்ச்சியினாலும் இரண்டாம்பேரோடு மூன்றாம்பேராய்க் கூடிச் செய்த பாவத்துக்கு,

துணிகரத்தோடு செய்யும் பாதகத்துக்குரிய தண்டனை வருகிறது!. 4, 28, 35. ஆகையால் விழிப்பாயிரு. ஒரு காரியத்தைக்குறித்து இப்படியோ அப்படியோ என்று உனக்குள் சந்தேகமிருக்கிற விஷயத்தில், அதைக்குறித்து கிறிஸ்துநாதருடைய உத்திரவு என்ன? என்று சிந்தித்து நட.

---

௩௩. அதிகாரம்.

"உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும்."

---

5. "உங்கள் ஆபரணங்களைக் கழற்றிப்போடுங்கள்." தண்டனை அடையப்போகிற கைதிகள் செய்வதுபோல.

7. "கூடாரத்தை" இது சீனாய் மலை உச்சியில் மோசேக்கு அருளப்பட்ட கட்டளையின்படி செய்த கூடாரம் அல்ல. ஏனென்றால் அது இன்னம் செய்யப்படவில்லை. ஆனால் இது மோசே இதுவரையும் தன் ஊழியத்தை நடப்பித்தும் தேவனோடு சம்பாஷித்தும் வந்த வேறொரு கூடாரத்தைக்குறிக்கும்.

"பேர்த்து" பாளயத்துக்குப் புறம்பே போட்ட செய்கை, தேவனுடைய நேரான பிரசன்னம், விக்கிரகாராதனையினிமித்தம் அவர்களைவிட்டெடுபட்டதைக் குறிப்பாய்க் காட்டினது. 3 வா.

"கர்த்தரைத் தேடும் யாவரும்" உத்தமர் இன்னாரென்று இப்போ வெளிப்பட்டது. மற்றவர்கள் செய்த விக்கிரகாராதனையின்பேரில் வெறுப்புக்கொண்டவர்கள், தங்களுக்குண்டாயிருந்த வெறுப்பைக் காட்டும்படி பாளயத்தைவிட்டு வெளியேபோனார்கள்.

11. "முகமுகமாய்." மோசே தேவனைக் கண்ணினால் கண்டான் என்பது பொருளல்ல. ஏனென்றால் "தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை." (யோவான் 1: 18) ஆனால் இந்த வார்த்தைகள், மோசே தேவனோடு தாராளமாய்ப்பேசி நெருங்கிப் பழகி அடிக்கடி சம்பாஷித்து வந்ததை அறிகுறியாய்க் காட்டும்படி இப்படிச் சொல்லப்படுகிறது.

12. "உன்னைப் பேர்சொல்லி அறிந்திருக்கிறேன்." உன்பேரில் எனக்கு விசேஷித்த பட்சமிருக்கிறது என்றர்த்தம்.

14. இஸ்ரவேலரைவிட்டு எடுபட்டுப்போன சலாக்கியம் (32: 34) மோசேயின் மன்றாட்டின்பேரில் மறுபடியும் அருளப்பட்டது.

18. "மகிமையை" உம்முடைய திவ்விய லட்சணங்களில் சிலவற்றை எனக்கு விசேஷித்தவகையாய்க் காண்பிக்கவேண்டுமென்று மோசே பிரார்த்தித்தான். கேட்டதைத் தேவன் அருளினார்: என்றாலும் மறுமையில் விளங்கிய அவரது பிரத்தியட்ச மகிமையை ஒருவனும் இம்மையிலிருக்கும்போது காண்பது கூடாத காரியம் என்று அவனுக்குக் காட்டினார். "என்றைக்குக் காண்பேனோ! என் ஏசு தேவா!

19. "தயையெல்லாம்." தமது பராக்கிரமத்தின் மகிமையைப் பார்க்கிலும் தமது இரக்கத்தின் மகிமையை நமக்குக் காண்பிப்பது அவருக்குப் பிரியச்சித்தமாயிருக்கிறது.

23. "கரம்,—பின்புறம்,—முகம்." மற்றும் வேதவாக்கியங்களிற்சொல்லியபடி, இவைகள் நம்முடைய சிற்றறிவுக்கு விளங்கும்படி சொல்லப்படுகிற உபமான வார்த்தைகளாம்.

மோசே தாங்கக்கூடிய அளவுக்குத்தக்கதாக மட்டும், தமது மகிமையையும் முக்கியமாய் தமது தயா இலட்சணங்களையும் காண்பிக்க தேவன் விருப்பங்கொண்டார் என்று இந்த வாக்கியம் நிட்டமாய்க் காட்டுகிறது.

படிப்பினை.

தேவன் செபத்தைக் கேட்கிற தேவனாயிருக்கிறார். நீ சோர்ந்து போகாமல் செபம்பண்ணு. 12-14.—நாம் இம்மையிலிருக்கும்போது தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கவேண்டும். 18—"இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம். "அப்பொழுது (சுவை) முகமுகமாய்ப் பார்ப்போம்." 22, 23.

நகு. அதிகாரம்.

10 கற்பனை இரண்டாந்தரம் அருளப்பட்டது.

---

5. "நாமத்தை." அதாவது அவருடைய மகத்துவமான லட்சணங்களை என்றர்த்தம். 6, 7 வியா.

9. "வணங்காக் கழுத்தள்ளவர்கள்." எகோவா இஸ்ரவேல் கோடு செல்லாததற்கு இந்த முகாந்தரத்தையே சொல்லியிருந்தார். (33: 3) இப்பொழுது மோசே அந்த முகாந்தரத்தைத் தன் காரியத்துக்கு அநுகூலமாகத் திருப்பி, அப்படிப்பட்ட வணங்காக்கழுத்துள்ளவர்களுக்குத்தான் மேலே 6, 7 வாக்கியங்களிற் சொல்லிய இலட்சணமுடைய ஒரு வழிகாட்டிவேண்டுமென்று சொல்லுகிறான்.

15. "சோரமார்க்கமாய்." இஸ்ரவேலின் தேவன் எகோவா. அவரைத் தள்ளி விக்கிரகத்தை வணங்குகிற இரண்டகத்தையும் உண்மையில்லாமையையும் குறிக்கும்படி இந்த உபமான வார்த்தை அடிக்கடி வேதத்தில் வழங்கப்பட்டிருக்கிறது. 12 முதல் 26 வாக்கியம்வரையும் வருவது, இப்போ சனங்கள் செய்த விக்கிரகாராதனையை அடித்தாய்ச் சொல்லப்படுகிறது.

21. "விதைப்பு...அறுப்பு." இப்படிப்பட்ட தத்தரவேலைசெய்யும் காலத்திலும் ஓய்ந்திருக்கவேண்டும். எகோவா இந்த உத்தரவை நம்முடைய நன்மைக்காகவே கொடுத்திருக்கிறார். 4 கற்பனை வியா. காண்க.

24. "இச்சிப்பதில்லை" இது மூகமார்க்கம் தேவனுண்டானதென்பதற்குப் பிரத்தியட்சமான அத்தாட்சியாம். தேவனுடைய ஏற்பாடுகளை இஸ்ரவேலர் கைக்கொண்டு நடக்கிறவரையும் அவர்கள் இந்த அத்தாட்சியைக் காண்பார்கள்.

30. "பிரகாசித்திருப்பதை." எபிரேயமூலத்தில், "ஒளிவீசினதை" என்றிருக்கிறது. (2 கொரி. 3: 16.) மோசே தேவனால் அதிகாரம் பெற்றவனென்று இஸ்ரவேலர் அறியும்படியான நோக்கமாய் இது நடந்ததென்று தோன்றும்.

படிப்பினை.

நாம் தேவனோடு நெருங்கிப் பழகும்போது, தேவனுடைய சாயல் நம்மில் விளங்கும். நம்முடைய முகம் இம்மையில் மோசேயின் முகம்போல் பிரகாசியாவிட்டாலும், "நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொழுந்துவிட்டெரியவில்லையா?" (லூக். 24: 32) வெற்றிதந்த சபையில் சேர்ந்து கிறிஸ்துவை முகமுகமாய்த் தரிசிக்கிற பரிசுத்தவான்கள், "ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போல், என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்." 29.

நகு. அதிகாரம்.

ஆசரிப்புக்கூடாரத்துக்கு உற்சாகக் காணிக்கை.

---

6. மோசே கடைசிவிசையாய் மலையிலிருக்கும்போது தேவன் அவனுக்குச் சொன்ன கட்டளைகளை முக்கியமாய்ச் சொல்லுகிறான்.

2, 3. ஓய்வுநாள் ஏற்பாடு அடிக்கடி வெகு கண்டிப்பாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

"கொலைசெய்யப்படக்கடவன்." ஓய்வுநாள் ஆசரிப்பு யூதருக்குத் தேசச் சட்டமாயிருந்தது. தற்காலத்து யூதரும் இங்கே சொல்லியபடி ஓய்வுநாளை வெகு கண்டிப்பாய் ஆசரித்து வருகிறார்கள். அதில் தீமூட்டமாட்டார்கள். ஆனால் மற்றப் புறச்சாதியார் தீமூட்டினால் பாதகமில்லையென்று அவர்களே வேலைகொள்ளுகிறார்கள். காமோ, தேவாராதனை, அவசியம், தர்மம் ஆகிய இவற்றுக்கேதுவைகளை ஓய்வுநாளில் செய்யலாம். மத். 12 அதி.

14. "அகல்கள்." விளக்குகள்.

19. 28 அதி. 31: 10 வியா.

30-35. 21: 1—6 வியா.

படிப்பினை.

நாம் கர்த்தருக்காக எப்பேர்ப்பட்ட பெரிய காணிக்கை கொடுத்தாலும், மனதிலே உற்சாகமில்லாவிட்டால் அது அவருக்கு அருவருப்பாம். கிறிஸ்துநாதர் தமது ஜீவனே உற்சாகப் பலியாகச் செலுத்தினார். மத். 26: 53, 54. யோவான். 10: 15.

நகூ. அதிகாரம்.

இந்த அதிகாரத்திலும் இதற்குப் பின்வரும் மூன்று அதிகாரங்களிலும் சொல்லிய சங்கதிகளுக்கு 25 அதி. முதல் 27 அதி. வரை வியாக்கியானம் காண்க.

படிப்பினை.

இங்கே சொல்லப்பட்டவர்கள் அவலட்சணமான ஆதாயத்தை நாடாமல், எவ்வளவோ உண்மையாய் நடந்திருக்கிறார்கள். ஒருவனுடைய பொருளைத் திருடுவதைப்பார்க்கிலும், பொதுப்பொருளைத் திருடுகிறது மகா பெரிய பாதகம்.

நகஎ. அதிகாரம்.

ஒருவிசை சொன்னதை மறுபடியும் திரும்பத்திரும்பச் சொல்வது இஸ்ரவேலருக்கு மிகவும் பிரயோசனமாயிருந்தது. புதிய ஏற்பாட்டிலும் இரண்டோர் இடங்களில் இதைப்போலொத்த திருஷ்டாந்தம் காணலாம்.

படிப்பினை.

இந்த முன்னடையாள நியமங்களில் சுவிசேஷம் அடங்கியிருக்கிறது. நாம் அதைக் கூர்ந்து கவனிக்கவேண்டும்.

நஅ. அதிகாரம்.

தகன பலிபீடம். தொட்டி. பிரகாரம்.

8. "தர்ப்பணங்கள்." அதாவது முகம்பார்க்கிற கண்ணாடிகள். எகிப்தியரும் இஸ்ரவேலரும், நல்ல வெண்கலத்தை இராவி விளக்கி மெருகிட்டு அதிலே முகம்பார்ப்பார்கள். இப்பொழுது நமக்குள் வழங்குகிற பளிங்குக் கண்ணாடி கண்டுபிடிக்கப்படுமுன், பூர்வத்தார் வெண்கலத்தைக் கண்ணாடியாக உபயோகித்துவந்தார்கள். இது பெண்பிள்ளைகளுக்கு முக்கியமான ஆபரணமாயிருந்தது.

"ஸ்திரீகள்." எபேன்எஸ்ரா என்ற யூத வியாக்கியானி, இந்த ஸ்திரீகள் நாடோறும் செபம்பண்ணவும் நியாயப்பிரமாணம் கேட்கவும் ஆசரிப்புக் கூடாரத்துக்குமுன் கூடினார்களென்று சொல்லுகிறார். 1 சாமு. 2: 22. லூக். 2: 37.

24, 25. ஒரு தாலந்து, 3000 சேக்கலுக்குச் சமம். இது 26 ம் வாக்கியத்தில் சொல்லிய கணக்குக்குச் சரியாயிருக்கிறது. இப்போ இஸ்ரவேலர் கொடுத்த பொன், வெள்ளி இவற்றின் விலை ஏறக்குறைய 20 லட்சம் ரூபாய்க்குச் சமமாயிருக்கும்!

இவற்றில் மிகுதியான பாகம் இவர்களுக்கு எகிப்தியராலே கிடைத்ததென்பதற்குச் சந்தேகமில்லை.

படிப்பினை.

எக்காலத்திலும் சிலபேர் மற்றவர்களைப் பார்க்கிலும் அதிகமாய்த் தங்களைத் தேவனுக்கென்று ஒப்புக்கொடுத்திருக்கிறதைக் காணலாம். இஸ்ரவேலருடைய உதார குணத்தையும் கவனித்துக்கொள்ளக்கடவோம்.—பிரகாரம் சுளுவாய் விசாலிக்கக்கூடிய திரைகளாற் செய்யப்பட்டது, பிற்காலத்தில் புறச்சாதியாரும் திருச்சபையில் சேர்க்கப்படுவார்களென்பதை முன்குறிப்பாய்க் காட்டினது. உலகத்தாரெல்லாரும் கிறிஸ்து ராட்சகரை அறிந்து வணங்கும்படி நாம் செபம்பண்ணவேண்டும்.

நக. அதிகாரம்.

3. பொன்னைக் கம்பிவாங்குகிற விதம் அக்காலத்தோருக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் இந்த வேலைக்கு நன்றாய் உதவும்.

43. "கர்த்தர் கற்பித்தபடியே." இந்த வார்த்தைகள் இந்த அதிகாரத்தில் 10 விசைக்குக் குறையாமல் வருகிறது. இது தேவ கட்டளையை சரியாய்ப் பிடித்து நடந்ததைக் குறிக்கிறது.

படிப்பினை

மோசே மெச்சிக்கொண்டதுபோல், கிறிஸ்துநாதர் நம்மை, "நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே" என்று மெச்சிக்கொள்ளும்படி நடந்துவரக்கடவோம். 43.

சுஎ. அதிகாரம்.

ஆசரிப்புக்கூடாரம் எடுப்பிக்கப்பட்டது.

2. முதலாம் மாதம் 15 ம் தேதியில், இஸ்ரவேலர் எகிப்தின் சிறையிருப்பிலிருந்து புறப்பட்டார்கள். அதற்குப் பின் 50 ம் நாளில் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது. இதன்பின் மோசே ஊடே ஊடே இடையிட்டு மலையிலேமட்டும் 80 நாளிருந்திருக்கிறான். ஆகையால் ஆசரிப்புக் கூடார வேலையைத் தவக்குமுன் அவர்கள் எகிப்தை விட்டு 6 மாசம் அல்லது அதற்குச் சற்று அதிகமாய்ச் சென்றிருக்கவேண்டும். அப்படியே ஆசரிப்புக்கூடார வேலையெல்லாம் 6 மாசத்தில் அல்லது அதற்குச் சற்றுப் பதிவான காலத்தில் முடிந்து முற்றுப் பெற்றது. உடனே வாசஸ்தலத்தை ஸ்தாபனம்பண்ணும்படி கர்த்தர் கட்டளையிட்டார்.

"ஸ்தாபனம்பண்ணு." மரவேலையாகிய உட்பக்கத்தை எடுத்து நிறுத்து என்றர்த்தம்.

3, 4. 25: 10—39.

5. 26: 36, 37. 30: 1—8 வியா.

6. 27: 1—8 வியா.

7, 8. 27: 9—19. 30: 18—21 வியா.

9–11, 29: 35—37. 30: 22—33.

12–14. 29: 1—37.

15. "நித்திய." மோசேயின் ஏற்பாடு இருக்குமட்டும் என்றர்த்தம்.

17. "இரண்டாம் வருஷம்." இஸ்ரவேலர் எகிப்தைவிட்டு விடுதலையடைந்த இரண்டாம் வருஷம்.

17–33. மோசே இதுவரை ஆசாரிய உத்தியோகத்தையும் நிறைவேற்றியிருக்கிறான். இந்த விஷயத்தில், தீர்க்கதரிசியும், ஆசாரியும், இராசாவுமாயிருந்தவருக்கு முன்னடையாளமாயிருந்தான். (உபா. 18: 15—18.) ஆரோனும் அவன் குமாரரும் ஆசாரிய ஊழியத்துக்குப் பூரணமாய் நியமிக்கப்பட்டபின் ஆசாரிய ஊழியத்தில் மோசே பிரவேசிக்கவே இல்லை.

19. "கூடாரத்தை" திரித்த மெல்லிய பஞ்சுநூலால் செய்யப்பட்ட உள் மூடியை.

20. "சாட்சிப்பிரமாணம்." 31: 18 வியா.

34. "மேகம்." ஆசரிப்புக்கூடாரத்தின் வேலையை தேவன் அங்கீகரித்தார் என்பதற்கும், அவர் இஸ்ரவேலரோடு ஒப்புரவானார் என்பதற்கும் அடையாளமாக "மேகம் ஆசரிப்புக் கூடாரத்தை மூடினது." இந்த மேகம் கூடித் திரண்டு, கிருபாசனத்தின்மேல் இரண்டு கேரூபின்களுக்கும் நடுவே தங்கினது. இதுதான் செக்கினு என்று சொல்லப்பட்டது. இது எகோவாவின் விசேஷித்த சமுகத்துக்குக்கண்ணினால் காணக்கூடிய அடையாளமாயிருந்தது.

36–38. மோசேயின் ஆகமங்கள் திவ்விய அதிகாரமுள்ளதென்பதற்கு இது ஓர் அத்தாட்சி.

படிப்பினை.

நம்மைத் தேவனுக்கு உகந்த வாசஸ்தலமாக எடுப்பிக்கவேண்டும். உள்ளுக்குள்ளான நமது இருதயம், எகோவாவாகிய கிறிஸ்துவும் அவருடைய பிரமாணங்களும் தங்கியிருக்கும் மகா பரிசுத்த ஸ்தலமா

யிருக்கவேண்டும். நாம் பரம காருணரைச் சேரும்பரியந்தம் விழிப்பான செபத்தினால் நம்மை அவர் கையில் ஒப்புவித்து, அவருடைய நடத்துதலுக்குள்ளாயிருக்கவேண்டும். 2, 37, 38.

ஆதியாகமத்திலும், யாத்திராகமத்திலும் விளங்கிய முக்கிய உபதேசங்களாவன.

I. தேவனுண்டு.
II. அவர் திரியேக தேவன்.
III. அவர் உலகத்தைப் படைத்து, ஆண்டு நடத்திவருகிறார்.
IV. மனுஷர் யாவரும் ஜென்மத்திலும் செய்கையிலும் பாவிகள்.
V. பாவப்பிராயச்சித்தமில்லாமல் ஒருவரும் தேவனிடத்தில் சேரக்கூடாது. இரத்தம் சிந்துதலில்லாமல் மன்னிப்பு இல்லை.
VI. ஏசுக்கிறிஸ்து பாவிகளுக்கு ஒன்றான மத்தியஸ்தர். அவர் தீர்க்கதரிசனங்களினாலும் விசேஷமாய் பலிகளினாலும் முன் குறிக்கப் பட்டிருக்கிறார்.
VII. பாவிகளுக்கு அவரைப்பற்றிய விசுவாசத்தினாலே நித்திய இரட்சிப்புண்டு. ஆம் அவர் சர்ப்பத்தின் தலையை நசுக்கி, மரணத்தின்பேரிலும் ஜெயம் தருவார். ஆமன்.

நிகரில்லாத சோதியே!
எப்போதும் பேசினாலும்
பொருளடங்கவில்லையே!
விரும்பிக்கொள்ளும் யாவும்
உம்மாலுண்டாகும், ஏசுவே!
தயையுடைய நேசரே!
என்றைக்கும் என்னை ஆளும்.

Miscellaneous.

பொது வர்த்தமானம்.

வங்காளக் குடாக்கடலின் வடபாகத்தில் நவம்பர் மீ 12உ அழற்காற்று அடித்ததினால், சமுத்திரத்தின் சலம் பிரவாகமாய் எழும்பி கரையில் மோதிக் கடந்து சில மாகாணங்களை மூடி, வீடுகளை இடித்து அழித்து, ஆடுமாடு மனுஷரையும் சர்வசங்காரமாய் வாரிக்கொண்டு போய்விட்டது. பத்து இலக்ஷம் சனங்களில் 215,000 பேர் மாண்டார்கள் என்று சொல்லுகிறார்கள். ஐயோ! ஒரு பக்கத்தில் பஞ்சமும் ஒரு பக்கத்தில் வெள்ளமும் தேசத்தை அழிக்கிறதே! ஆண்டவரே! எங்களை மட்டாகத் தண்டியும். எங்கள் பாவங்களை எங்களுக்கு உணர்த்தி, மறுபடியும் எங்களைத் தயவாய்க் கண்ணோக்கும்.

இலங்கை. இத்தீவின் கண்காணியாருக்கும் சர்ச்சுமிசியோனுக்கும் உண்டாயிருந்த போராட்டம் இன்னும் முடியவில்லை. இரு பட்சத்தாரும் விடாபிடியாகப் பிடிக்கிறார்கள். கணம்பொருந்திய கனாக்கையரவர்கள் நமது கண்காணியாரிடத்தில் அபயமிட்டிருக்கி

றார்கள். கர்த்தர் இக்காரியத்தைச் சமாதானமாகவும் இலங்கையி லுள்ள திருச்சபைக்கு அநுகூலமாகவும் முடியப்பண்ணுவாராக.

துருக்கி. சர்வியருக்கும் துருக்கியருக்கும் அநேக காலாய் நடந்திருக்கிற சண்டை தற்காலத்துக்கு அமர்ந்த போகிலும், அது மறுபடியும் பக்கெனத் தீப்பிடித்து எரியும் என்கிற எண்ணம் சாதாரணமாயிருக்கிறது. தமை சமாசார பத்திரங்களை யாவரும் ஆவலாய்த் திறந்து, சமாதானமோ, சண்டையோ? ருஷியர் அமளியில் தலையிட்டிருக்கிறார்களா? இங்கிலிஷ்காரர் துருக்கியருக்கு உதவி செய்வார்களா? என்று பார்க்கிறார்கள்.

ஜப்பான். போன மாசத்து சஞ்சிகையில் இத்தீவுகளின் சில சமாசாரங்களை அறிவித்தோமே. எல்லாரும் சந்தோஷப்படத்தக்க ஒரு சங்கதியை இதில் அச்சடிக்கிறோம். அது என்னவென்றால், ஜப்பான் தூரத்தனத்தார் கிறிஸ்தவர்கள் பரிசுத்தமாய் ஆசரித்து வருகிற ஞாயிற்றுக்கிழமையை தங்கள் தேசம் எங்கும் ஒய்வுநாளாக விதித்திருக்கிறார்கள். முற்காலத்தில் 1-ம், 6-ம், 11-ம், 16-ம், 21-ம், 26-ம் தேதிகள் அவர்களுக்கு வேலையில்லாத தினங்களாயிருந்தன. ஆகையால் இத்தப் புதுச் சட்டம் அவ்விடத்துக் கிறிஸ்தவர்களுக்கு அநுகூலமாயிருப்பதுமன்றி, தூரத்தனத்தாருக்கும் இலாபமாயிருக்கும்.

பஞ்சம். பம்பாய் சமஸ்தானமும், நிசாம் இராச்சியமும், மைசூர் இராச்சியமும், சென்னபட்டணம் மாகாணத்தில் 6-ஜில்லாக்களும் இந்த வாதைக்குட்பட்டிருக்கின்றன. அதின் விஸ்தாரத்தை மொத்தமாய்ச் சொல்லவேண்டுமானால் 3-கோடி ஜனங்கள் வசிக்கிற லட்சத்து ஐம்பதினாயிரம் சதுரமயில் ஆகும். கடந்துபோன நூற்றாண்டில் ஒருபோதாவது இவ்வளவு கொடுமையான பஞ்சம் வந்திருப்பதில்லை. சோலாப்பூரில் சனங்கள் தங்கள் ஆடுமாடுகளை ஓட்டிக்கொண்டு புருஷர் தங்கள் வீட்டுச் சாமான்களை தங்கள் தலையிலும், ஸ்திரீகள் தங்கள் பிள்ளைகளை தங்கள் தோளிலும் இடுப்பிலும் கைக்குழந்தைகளை மார்போடும் அணைத்து, நம்பிக்கையற்றவர்களாய் இன்ன விடத்துக்குப் போகிறோமென்று அறியாமல் வலசைவாங்கிப் போகிறார்கள். பஞ்சம் தாங்கள் இருக்கிற இடத்தில் மாத்திரம் இருக்கிறதென்று எண்ணி புல்லுள்ள தலங்களைக் கண்டுபிடிக்க விரும்பி இப்படிச் செய்கிறார்கள். ஆனால் சுற்றிலுமிருக்கிற மைதானம் அராபியாவின் வனாந்தரம்போலவே இருக்கிறது. மூன்று அங்குலம் திண்ணமுள்ள புழுதியால் தரை மூடப்பட்டிருக்கிறது. சில வேளை இடமேகம்போல எழும்பிப் பறந்துபோவதுமுண்டு. சனங்களோடு கூடப் போகிற மிருகஜீவன்கள் காய்ந்த புல் இருக்குமென்று தரையை நக்கிக்கொண்டு தள்ளாடி நடக்கின்றன. அநேக ஊர்கள் ஜனசஞ்சாரமற்றதாகிவிட்டது. சில இடங்களில் ஊரைவிட்டுப் போகிறவர்கள் ஒருவனுக்கு ஆகாரத்துக்கு வகைபண்ணி அவன் வசத்தில் தங்கள் சொத்துக்களை ஒப்புவித்துப் போகிறார்கள். அவர்களுடைய மிருகஜீவன்களுக்கு விலையில்லை. கையில் பணமாவது நகையாவது இடையாது. இவர்கள் தங்கியிருக்கும் இடதைப் பார்க்கப் பரிதாபமாய் இருக்கும். இந்த இடத்தைவிட்டு 25,000, ஜனங்களும் 40,000 ஆடுமாடுகளும் நிசாம் இராச்சியத்துக்குப் போய்விட்டன. மிருகஜீவன்கள் இருக்குமட்டும் ஜனங்கள் அவைகளைவிட்டுப் பிரியப்போகிறதில்லை. அவர்களுடைய மிருகஜீவன்கள் மிகுதியாய்ச் சாகின்றன. ஒருநாள் ஓரிடத்தில் காளைகளும் பசுக்களுமாக 20 உருப்படிகள் செத்துக்கி

டந்தன. கொடிய பசியினாலும் கெட்ட தானியத்தைச் சமைத்துச் சாப்பிட்டதினாலும் ஒரு நாளில் 24 பேர் விஷபேதி கண்டு மாண்டார்கள். இவ்விதமாய் நாடோறும் அநேகர் மரிக்கிறார்கள். சிலர் 4, 5 நாள் ஆகாரமின்றி இருப்பதினால் இந்த வாதையால் சீக்கிரத்தில் வாரிக்கொண்டுபோகப்படுகிறார்கள். சில இடத்தில் தானியம் இருந்தாலும் வாங்கப் பணம் இல்லை. அதினால் சர்காரில் வேலைகொடித்து 45,000 ஜனங்கள் நாடோறும் கூலி வாங்குகிறார்கள். தானியம் கிராக்கியாய் இருக்கிறதுமன்றி, குடிக்கத் தண்ணீரும் கிடையாமல் போய்விட்டது. ஓரிடத்தில் காய்ந்துபோன குளத்தை ஜலசூஸ்திரத்தால் கிரப்பி உதவி செய்கிறார்கள். சில இடங்களில் தண்ணீரை சர்கார் உத்தியோகஸ்தர் கூட இருந்து கிரயத்துக்கு விற்கிறார்கள். நம்முடைய ஜில்லாவின் வடபாகத்திலும் பஞ்சத்தால் கஷ்டப்படுகிறவர்கள் அநேகர். நம்முடைய பாவங்களினிமித்தம் தேவனுக்குமுன்பாக நம்மைத் தாழ்த்தி, நம்முடைய தேசத்தை விட்டு இந்தத் தீங்கு நீங்கும்படியாக ஜெபிக்கவேண்டியது நமுடைய கடமை.

இந்திய சக்கரவர்த்தினி. ஜெனவரிமாசத் துவக்கத்தில் டில்லி நகரில் பெரிய தர்பார் வைத்து காருண்ணிய விக்டோரியா ராணியார் இந்திய சக்கரவர்த்தினி என்ற புதுப் பட்டம் தரித்துக் கொண்டார்களென்று உலகத்தில் விளம்பரம் செய்யப்போகிறார்கள். அதற்கு ராஜ பிரதிநிதியாகிய லிட்டன் பிரபு, சென்னை கவர்ணர், பொம்பாய் கவர்ணர் முதலிய அநேகம் அங்கிலேய பிரபுக்களும் துரைமக்களும், சுதேச ராசாக்களும், பிரபுக்களும் போகிறார்கள். டில்லி நகரம தேவேந்திர லோகம்போல அலங்கரிக்கும். தேசமாத்திரம் கடும் பஞ்சத்தினால் கலங்கும். (தேசாபிமானி.)

செபவாரம். 1877.

சனுவரிமீ 7உ ஞாயிறு.

கிறிஸ்தவர்களுக்குள் இருக்கவேண்டிய ஐக்கியத்தைப் பற்றிய பிரசங்கம். (1 யோ. 1: 7.)

சனுவரிமீ 8உ திங்கள்.

கடந்த வருஷத்தைச் சம்பவங்களோடு நினைத்துப் பாவ அறிக்கையும் தோத்திரமும்.

சனுவரிமீ 9உ செவ்வாய்.

பொதுவான திருச்சபையின் பேரில் (யோவேல் 2: 28.) பரிசுத்த ஆவி ஊற்றப்பட வேண்டும் என்றும், அது தப்பறையான உபதேசம் நீங்கி, சீர் அடையவேண்டும் என்றும், விசுவாசம், முயற்சி, பரிசுத்தம், அன்பு முதலியவைகள் பெருகிவர வேண்டும் என்றும் செபம்.

சனுவரிமீ 10உ புதன்.

குடும்பங்களுக்காகச் செபம். அதிலே குணப்படாதவர்கள்; பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் படித்துவருகிற நமது பிள்ளைகள்; புறத்தேசங்களுக்குப் போயிருக்கிறவர்கள்; வியாதி, துன்பம், சோதனையில் அகப்பட்டிருக்கிறவர்கள்; திருச்சபையைப் புதிதாய்ச் சேர்ந்திருக்கிறவர்கள், இவர்களை நினைப்பது நன்று.

சனுவரிமீ 11உ வியாழன்.

இராச்சியங்களுக்காகச் செபம். இராசாக்கள், நியாயாதிபதிகள், மந்திராலோசனைக்காரர் இவர்களுக்காகவும், ஜனபிமானத்தை காப்பிக்கும் கூட்டத்தாருக்காகவும், நூற்களை உண்டாக்குவோர் சனசுதந்தத்தை விரும்பி ஜாக்கிரதையாய் எழுதவும், பெரியோர் சிறியோர் மெய் அறிவை அடையவும், தேச சமாதானம் காக்கப்படவும்.

சனுவரிமீ 12உ வெள்ளி.

யூதர்கள் அஞ்ஞானிகளிடத்தில் ஸ்தாபித்திருக்கிற மிசியோன்களுக்காகவும் (அப்போ. 24: 27.) ஒய்வுநாள் பள்ளிக்கூடங்களுக்காகவும், சர்வலோகமும் கிறிஸ்து நாதருக்குள் அடங்கவும் செபம்.

சனுவரிமீ 13உ சனி.

ஒய்வுநாள் பரிசுத்தமாய் ஆசரிக்கப்படவும், குடிவெறி ஒயவும், கப்பல்களில் ஏறி யாத்திரை பண்ணுகிறவர்கள், வியாபாரிகள் முதலானவர்கள் சுகமே காக்கப்படவும் செபம்.

சனுவரிமீ 14உ ஞாயிறு.

எபே. 4: 5, 6 ன் பேரில் பிரசங்கம்.

நோட்டிஸ்.

1877-ஆம் ஜனுவரிமீ 11உ வியாழக்கிழமையன்று ஜில்லா ஆலோசனைச் சங்கம் கூடும்.

12உ வெள்ளிக்கிழமையன்று வேதாகம சங்கம் கூடும்.

E. SARGENT. D. D.

ஜனுவரிமீ நாள் 31. மார்கழிமீ 19உமுதல், தைமீ 20உவரை.

வாரம்.	இங்கிஷ் தெய்தி.	தமிழ்த் தெய்தி.	அன்றாடகத் தியானம்.
தி	1	கசு	கர்த்தர் உன்னைக் காக்கிறவர். சங்கீதம் 121:5.
செ	2	உ0	என் வழிகளைக் காத்து நடக்கிறவர்கள் பாக்கியவான்கள். நீதி. 8:
பு	3	உக	உமது கட்டளைகளால் உணர்வடைந்தேன். சங். 119: 104. [32.
வி	4	உஉ	உம்மை என் ஆத்துமா அண்டிக்கொள்ளுகிறது. 57: 1.
வெ	5	உங	கர்த்தர் தமது சனத்தை நெகிழாதிருப்பார். 94: 14.
ச	6	உச	தீங்கான காரியத்தை என் முன் வைக்கமாட்டேன். 101:3.
ஞா	7	உரு	தேவனை ஸ்தோத்திரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். 2 தெச. 1: 3.
தி	8	உசு	தீமைக்குத் தீமை செய்யாதபடி பாருங்கள். 1 தெச. 5: 15.
செ	9	உஎ	சாந்தகுணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்துவார். சங். 25: 9.
பு	10	உஅ	துன்மார்க்கருடைய நம்பிக்கை கோபாக்கினை. நீதி. 11: 23.
வி	11	உகூ	கர்த்தரோ உண்மையுள்ளவர். 2 தெச. 3: 3.
வெ	12	க	நீதிமானுடைய தகப்பன் களிகூருவான். நீதி. 23: 24.
ச	13	உ	பயப்படாதே, நான் உன்னோடிருக்கிறேன். ஏசா. 43: 5.
ஞா	14	ங	சத்திய உதடு என்றும் நிலைத்திருக்கும். நீதி. 12: 19.
தி	15	ச	நீர் ஒருவரோ என்னைச் சுகமாய்த் தங்கப்பண்ணுகிறீர். சங். 4: 8.
செ	16	ரு	உம்முடைய வசனம் சமூலமும் சத்தியம். 119: 160.
பு	17	சு	நீதிமான் ஒருவனாகிலுமில்லை. ரோமர் 3: 10.
வி	18	எ	என்னை ஆதரித்தருளும், அப்பொழுது இரட்சிக்கப்படுவேன். சங்.
வெ	19	அ	நாம் தேவனுடனே போர்செய்வது தகாது. நடபடி 23: 9. [119: 117
ச	20	கூ	சீவ ஊற்று உம்மிடத்திலிருக்கிறது. சங். 36: 9.
ஞா	21	க0	அநியாயத்தை விதைக்கிறவன் வருத்தத்தை அறுப்பான். நீதி. 22.
தி	22	கக	கர்த்தரைத்தேடக் காலமாயிருக்கிறது. ஓசி. 10: 12. [8.
செ	23	கஉ	புத்தியைக் கேட்டு, ஞானமடையுங்கள். நீதி. 8: 33.
பு	24	கங	உமது வார்த்தை மிகவும் புடமிடப்பட்டது. சங். 119: 140.
வி	25	கச	என்னைத்தவிர தேவனில்லை. ஏசா. 45: 5.
வெ	26	கரு	எப்பொழுதும் பயந்திருக்கிறவன் பாக்கியவான். நீதி. 28: 14.
ச	27	கசு	கர்த்தர் கொல்லுகிறவரும் உயிர்ப்பிக்கிறவருமாயிருக்கிறார். 1 சா:
ஞா	28	கஎ	நீங்கள் சீவனுள்ள தேவனுடைய பிள்ளைகள். ஓசி. 1: 10. [மு. 2: 6.
தி	29	கஅ	மனுஷனுடைய அகந்தை அவனைத் தாழ்த்தும். நீதி 29: 23.
செ	30	ககூ	கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளிருப்பதாக. கொலோ. 3: 16.
பு	31	உ0	கர்த்தரைப் பக்தியுடன் பாடி ஸ்தோத்திரியுங்கள். 16.

விசேஷித்த நாட்கள்.

1. கிறிஸ்து விருத்தசேதனத் திருநாள்.
6. பிரசன்னத் திருநாள்.
7. பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும், முதலாம் ஞாயிறு.
14. பிரசன்னத் திருநாளுக்குப்பின்வரும், இரண்டாம்ஞாயிறு. அமாவாசை.
21. பிரசன்னத் திருநாளுக்குப் பின்வரும், மூன்றாம் ஞாயிறு.
28. செப்துவகெசிமா ஞாயிறு.
29. பௌரணமி.

நற்போதகம்.

உ. பெபுருவரிமீ. ௲அஎஎ௵.

1 கொரிந்தியர் I அதிகாரம்.

1 "சொஸ்தேனே." இந்த வாக்கியத்தில் காட்டப்பட்ட பேரையுடையவனாகிய கிறிஸ்தவன் சொஸ்தேனேயும், நடபடி 18: 17 ல் இந்தப் பேராலே அழைக்கப்படுகிற செபஆலயத்தலைவனும், வெவ்வேறானவர்களென்று நினைக்க இடமுண்டு. எப்படியென்றால், (1) சொஸ்தேனே என்பது அந்தக்காலத்தில் ஒரு வழக்கப்பேராய் இருந்தது. (2) அவன் யூதனும் செபஆலயத்துக்குத் தலைவனுமாய் இருந்தவன். இவனோ கிறிஸ்தவன். அவன் பிற்பாடு கிறிஸ்துமார்க்கத்தில் அமர்ந்திருக்கலாம். என்றாலும், ஆசியாவுக்குப் பவுலுடன் போனவர்களில் இவன் ஒருவன் அல்ல. நடபடி 18: 17 வா. யும் 20 அதி. 4 வாக். யும் காண்க. இவன் கொரிந்துபட்டணத்துச் சபையாரால் அறியப்பட்டவனாயும், கனமாய் எண்ணப்பட்டவனாயும் இருந்திருக்கவேண்டும். ஆகையினாலும் தன்தாழ்மைக்குக் குறிப்பாகவும் அப்போஸ்தலனாகிய பவுல் தம்பேரோடு அவன் பேரையும் சேர்த்துச் சபையை வாழ்த்துகிறார்.

2. "தேவனுடைய சபையார்." இது கொரிந்து சபைக்குரிய பேரா? என்று கேட்குமிடத்தில் கல்வின் என்னும் வேதசாஸ்திரியார் எழுதியிருக்கிறதைக் கவனிப்பது நன்று. அவர் சொல்லியிருக்கிறது என்னவென்றால், "கொரிந்துசபையைத் தேவனுடைய சபையென்று அழைப்பது சிலருக்கு ஆச்சரியமாகத் தோன்றும். அதில் காணப்பட்ட சீர்கேடுகளைப் பார்க்கும்போது, அதைச் சாத்தானுடைய இராச்சியமென்று சொல்லவேண்டுமேயல்லாமல், தேவனுடைய சபையென்று சொல்லவொண்ணாதே என்று ஆட்சேபிப்பது ஒருவகையாய் நியாயமாய் இருக்கிறது. அப்படியிருந்தும் இந்தப் பேர் வந்ததெப்படி? அப்போஸ்தலன் கொரிந்துசபையைப் பார்த்து இச்சகமாய்ப் பேசமாட்டான் பது நிச்சயம். ஏனென்றால், தேவாவியைக்கொண்டு பேசினவருக்கு இச்சகம் ஆகாதே. பின்னை ஏன் இந்த வார்த்தையை வழங்கினார் என்றால், அவ்வளவு துர்நடத்தையும் துர்ப்போதனையும் ஊடாடின இடத்திலும் மெய்ச்சபையின் அடையாளங்கள் காணப்பட்டதாலேதான். ஒவ்வொரு இடத்தின் ஸ்திதியையும் நாம் கவனிக்கவேண்டியது அவசரம். இவ்வுலகத்தில் மாசுமறுதியையும் இல்லாத சபையைக் கண்டுபிடிப்பது கூடாத காரியம். நம்முடைய கோரிக்கைக்கு ஏற்றபடி நடவாத சபையை, சபையல்லவென்றும், அசுத்தம் கலவாத சுத்த பக்தர் இருக்கும் சபைதான் சபையென்றும் தீர்க்கிறது சரியல்ல. ஆகையால் அப்போஸ்

தலன் பல குறைபாடுள்ள கொரிந்தசபையை ஏன் தேவனுடைய சபை யென்று அழைக்கிறானென்றால், சுவிசேஷ போதனையும் ஞானஸ்நான மும் கர்த்தருடைய இராப்போசனமும் அவர்களுக்குள் வழங்கிவந்த தினாலேதான்" என்பதே.

"எங்களுக்கும் தங்களுக்கும்...அனைவருக்கும் அவருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற என்கிற வாக்கியம் புதியஏற்பாட் டிலும் பழையஏற்பாட்டிலும் அடிக்கடி வருகிறது. (உபாபடி 9: 14, 21. ரோ. 10: 13. சகரி. 13: 9.) அது எழுபதுபேர் பழையஏற்பாட்டை மொழிபெயர்த்ததிலிருந்து உறபத்தியாகி, தேவவணக்கத்தைக் குறிக் கும். இயேசுகிறிஸ்துவின் நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற என்பது வருவதால், அப்போஸ்தலன் அவரைத் தெய்வமாகக்கொண்டு எழுது கிறார் என்று விளங்குகிறது. எங்கும் தொழுதுகொள்ளுகிற அனை வருக்கும் என்பதை ஏன் கூட்டி எழுதுகிறார் என்றால், பவுல் நட்டதும், பவுலாவது அப்பொல்லோவாவது கேபாவாவது கண்காணிப்பதுமான சபை, தேவனுடைய சபையல்ல; நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தைத் தொழுதுகொள்ளுகிற சபையே தேவனுடை ய சபையென்று காட்டும்படிதான். இதின்பேரில் நம்முடைய ஜெப புத்தகத்தில் பற்பல நிலைமையுள்ள மனுஷருக்காக வழங்கவேண்டிய செபத்தில் "விசேஷமாய் தேவரீர் பொதுவாய் இருக்கிற திருச்சபைக் கு ற்சீரைத் தந்து, தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள் ளுகிற யாவரும் சத்தியமார்க்கத்தில் நடக்கவும் ஆவியின் ஒருமையி லும் சமாதானக்கட்டிலும் நீதியுள்ள நடக்கையிலும் நிலைத்து விசுவா சத்தைப் பற்றிக்கொண்டே இருக்கவும் அந்தச் சபையை உம்முடைய நல்லாவியினாலே நடத்தியருளவேண்டும்" என்று நன்றாய் வியாக்கியா னம் பண்ணியிருக்கிறது.

7 "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வெளிப்படு வதற்குக் காத்திருக்கிறீர்கள்." இந்த வாக்கியத்தில் சொல்லப் பட்டிருக்கிற வரங்கள் 12: 4ல் காட்டிய வரங்களல்ல. அப்பேர்ப்பட் டவைகள் எம்மாத்திரம்? கிறிஸ்தவர்களுக்குள்ளே தேவாவியான வர் கிரியைசெய்து, விசுவாசம், நம்பிக்கை, அன்பு என்னும் சிறு குணங்களை உண்டாக்கினாரே. அவைகள் அல்லவா உத்தம வரங்கள். அவைகளில் ரட்சகருடைய வருகைக்குக் காத்திருக்குதலே விசேஷித்த து. விசுவாசம் இருதயத்தில் இருப்பதால், கர்த்தருடைய வாக்கை நம் பினார்கள். நம்பிக்கை இருப்பதால் அது எப்போது நடக்கும் என்று எதிர்பார்த்தார்கள். அன்பு இருப்பதால் அவர் வெளிப்படுவதற்கு ஆவ லோடு காத்திருந்தார்கள்.

11. "குலோவெயாள்" இன்னாள், இன்னதேசம் முதலிய விபரங் கள் நமக்குத் தெரியாது.

12. "நான் பவுலைச் சேர்ந்தவன்." அப். பவுலுடைய பிரசங்கத் தைக் கேட்டு கிறிஸ்தவர்கள் ஆன இவர்கள், மற்றவர்களைப் பார்க்கி லும் தங்களை விசேஷித்தவர்கள் என்று மேன்மைபாராட்டினது இய ல்பே. அவர் அப்போஸ்தல அதிகாரம் உடையவர் என்றும், அவர்போ தனை திவ்விய தன்மையுள்ளது என்றும், வெகுசாதனையாய்ச் சாதிப்ப தும் சரியே. இவர்கள் சாதித்த காரியம் சரிதான்; என்றாலும் விதமும் நோக்கமுமோ தப்பு. ஆகையால் மற்ற கொள்கைக்காரரோடு கட்சிக் காரராகிய இவர்களையும் சேர்த்துக் கண்டித்து, 2 ம் 3 ம் 4 ம் அதிகா ரங்களில் காட்டியபடி, அவர் தம்மையும் தமது கட்சிக்காரரையும் உயர்த்துகிறவராக மனம்காட்டாமல், எக்கொள்கைக்காரரையும் கிறி

ஸ்துவாகிய அஸ்திபாரத்தின்மேல் ஏறக்கட்டும்படி முயலுகிறவராகக் காட்டுகிறார். "நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவன்." சுட. 18: 24. பார்க்கும்போது பவுல் கொரிந்தை விட்டுப்போனபிற்பாடு, அப்பொல் லோ வந்ததாகத் தோன்றுகிறது. இவரோ சாதாரியமுள்ளவர். பவுலின் தோற்றமோ பலவீனமும் வசனம அற்பமுமாயிருந்தது. இதனால் சிலர் பவுலை அற்பமாகவும் அப்பொல்லோவை மேன்மையாகவும் எண் ணும்படி நேரிடுவதுண்டு. மனுஷனையும் புறம்பான வரங்களையும் அரு மையாக மதிப்பது சரியல்ல என்று இந்த அதிகாரத்தின் கடைசியிலும் பிந்தின அதிகாரத்தின் துவக்கத்திலும் குற்றஞ்சாற்றுகிறார். 16 அதி. 12ல் பார்க்கும்போது அப்பொல்லோ, சபைக்குள் அப்படிப்பட்ட எண்ணம் உண்டென்று கண்டு அது அதிகப்பட விருப்பமில்லாதவன் ஆனதால், கொரிந்துசபையைத் திரும்பப்போய்ப் பார்க்க மனமில்லா மல் இருந்தானென்று விளங்குகிறது.

16 "ஸ்தேவானுடைய வீட்டாருக்கு." ரோமர் 6: 3. எழுதி னவர் ஞானஸ்நானத்தை அற்பமாக எண்ணினதக்கவர் அல்லவே. அவன் அனுப்பப்பட்ட தொழிலோ அதுவல்ல. பிரசங்கம்பண்ணுதலே அவரு க்குக் குறிக்கப்பட்ட வேலை. "திறிஸ்பு". இவன் மூன் செபூலயத்தலை வன். (உபாபடி 18: 8.) "காயுபு". இவன் பவுலையும் சபையினத்தையும் உப சரித்து வந்தவன். (ரோ. 16: 23.) ஸ்தேவான் இன்னான் என்று அறியும் படி. 1 கொ. 16: 15, 17 காண்க.

17 ஞானம் என்பது பொருளைக் குறிக்குமேயல்லாமல் விதத்தைக் குறிக்கமாட்டாது. வேதத்தை சாதாரியமானவிதமாய்ப் போதிக்கத் திறமையுடையவர்கள் அந்த வரத்தை உபயோகப்படுத்துவது நன்று. ஆகையால் கள்ள ஞானத்தைக் கண்டிக்கிறாயல்லாமல் நல்ல ஞானத் தைக் கொண்டு சாதாரியமாய் வேதத்தை விளக்கிக் காட்டுவதை அவர் கண்டிக்கிறதில்லை. சிலுவைக்குரிய ஞானமே ஞானம். அதையே விளக்குவது சாதாரியம்.

31 "அவரோ...ஞானம்...நீதி...பரிசுத்தம்." உலக ஞானம் அல் ல, அவரோ நமக்கு ஞானம். அவருடைய திருஅவதாரம், கீழ்ப்படிதல், உபதேசம், பிராயச்சித்தம், திவ்விய மகிமை, பரிசுத்தாவியை அனுப பினது இவைகளில் அவரோ நமக்கு ஞானமாயிருக்கிறதுதவிர நமக் குச் சுத்திகரிப்பும் தேவனுக்கு முன்பாக குற்றம் அற்றவர்களாக விளங் கும்படியான நீதியும் பரிசுத்தமுமாய் இருக்கிறார்.

வட இந்தியாவுக்கும், தென்னிந்தியாவுக்கும் இருக்கும் ஒற்றுமைப் பேதகங்கள்.

(தொடர்ச்சி.)

பட்ணவுக்குச் சமீபத்தில் சந்திரகுப்தன், அசோகன்முதலிய இராஜாக்களாண்ட மகததேசத்தின் பிரதான நகரியாகிய பாடலிபுரம் இருந்ததாக அநேக சாஸ்திரிமார் உததேசிக்கிறார்கள். பட்ண பாகார் மாகாணத்திக்குப் பிரதான பட்டணம். இதில் மகமதியர் மிகுதி. கொ ஞ்சநாளைக்கு முன்னதாக பாகாப் என்னும் புதிய மகமதியக்கொள் கைக்காரர் குழப்பம்பண்ணிக்கொண்டிருந்தார்கள். அதற்கு எட்டி

மைல் தூரத்திலுள்ள டினப்பூருக்குச் சமீபத்தில் சோண்நதி கங்கை ஆற்றோடு வந்து சேர்ந்துகொள்ளுகிறது. டினப்பூர் ஒரு பெரிய இராணுவ ஸ்தானம்.

அதற்கப்புறம் நாங்கள் போய்ப் பார்த்த இடம் காசி நகரம். இந்துக்கள் இதை பரிசுத்தஸ்தலமாக எண்ணுவது யாவருக்குந் தெரிந்த காரியமே. இது வடமேற்கு மாகாணத்தைச் சேர்ந்திருக்கிறது. இது கங்கைநதியின் வடகரையில் இருக்கிறது. இது உலகத்திலுள்ள பூர்வீகமான பட்டணங்களிலொன்று. இதில் 5,000 விக்கிரகக்கோவில்களுண்டு. ஐந்து ஆறு ஏழு மெத்தை, உயரம் மட்டுங் கட்டப்பட்டிருக்கிற அநேக வீடுகளும் கட்டிடங்களும் இருக்கின்றன. அங்கே சென்னை இராச்சியத்தைச் சேர்ந்த விஜையநகரம் மகா ராஜாவைப் பார்த்தோம். அவர் எங்களுக்கு வீடு, வண்டி, சாப்பாடு முதலானவைகள் கொடுத்து அன்பாய் உபசரித்தார். அவருடைய படவிலேறி கங்கைநதியின் கரையெல்லாம் நன்றாய்ச் சுற்றிப்பார்த்தோம். 3 மைல் தூரத்திற்கு ஒரே தொடர்ச்சியாய் புத்தமத, இந்துமதக் கோவில்களும் துலுக்கருடைய பள்ளிவாசல்களும் பலதேசத்து அரசர்களுடைய மாளிகைகளும் சிறந்து விளங்கின. அவைகளெல்லாம் கற்களால் வெகு உன்னதமாய்க் கட்டப்பட்டிருக்கின்றன. அவைகளிலொன்று 250 வருஷத்துக்கு முன்னதாக ஜெயசிங் இராஜா கட்டின நட்சத்திரசாலை. சூரியசந்திராதிகளுடைய ஓட்டத்தைக் கணிக்கும்படியாகச் செய்திருக்கும் சமஸ்கிருதத்தில் எழுதியிருக்கும் அளவு கணக்குகளைப் பார்த்தோம். ஆற்றங்கரையின் நெடுக இருக்கப்பட்ட படித்துறைகளில இந்துதேசத்தின் நாலா திசைகளிலுமிருந்து ஆடவர்கள், ஸ்திரீகள் யாத்திரைசெய்து கெங்கா ஜலத்தில் தீர்த்தமாடுவதைப் பார்க்கலாம். நாங்கள் படவு ஏறிப்போன நேரத்திற்குள்ளாக ஆற்றங்கரையில் சில பிரேதங்கள் வேகிறதையும் இரண்டு மூன்று பிரேதங்கள் ஜலத்தில் மிதந்துவருவதையும் கண்டோம். வடதேசத்திலுள்ள கோவில்கள் தென்னிந்தியாவிலுள்ள விக்கிரகக் கோவில்களைப்போல பருமனும் விசித்திரமும் உன்னதமுமானவைகளல்ல. அங்குள்ள கோபுரங்கள் உயரத்தில் ரெம்பத் தாழ்வாயும் கூச்சாயுங் கட்டப்பட்டிருக்கிறது. காசி பூர்வீக பட்டணமானதினால் அதின் தெருக்கள் மிகவும் ஒழுங்கீனமாயும் அசங்கியமாயும் அதிக நெருக்கமாயுமிருக்கும். ஒரு சாதாரண வண்டிபோகிறதற்குங்கூட இடமிருக்கமாட்டாது. பட்டணத்தைப் பார்த்தால் ஜனங்களுடைய உடையிலும் நகையிலும் அவர்கள் ஏறிச்செல்லும் வாகனங்களிலும் பழைமையாகத் தோற்றும். வட இந்தியாவில் அநேக ஜனங்கள் இது காரியங்களில் தென்னிந்தியாவிலுள்ள ஜனங்களைப் பார்க்கிலும் நாகரீகக் குறைவுள்ளவர்களாயிருக்கிறார்கள். காதுக்கும் விசேஷமாய் மூக்குக்கும் பெண்கள் போடுகிற வளையங்கள் அதிக அகலமானவைகள். முழங்கைமுதல் மணிக்கட்டுமட்டும், உரலுக்குப் பூண்கட்டினாப் போல, முழுவதுங் காப்புக்களாய் அணிந்திருப்பார்கள். வடதேசப் பெண்கள் சாதாரணமாய் உடுத்தியிருக்குந் துணி 10–முழந்தானிருக்கும். அவர்கள் ஏறிச்செல்லுகிற வாகனங்கள், கட்டை வண்டிகள் பார்வைக்கு விகாரமாயிருக்கும். காசிநகரமானது ஆதிமுதல் சமஸ்கிருத கல்விக்குப் பேர்போனது. இக்காலத்திலும் ஓர் சமஸ்கிருத கல்விச்சாலை அங்கிலேயரால் ஆதரிக்கப்பட்டு நடந்துவருகிறது. காசிப்பட்டென்று சொல்லப்படுகிற சவளிவகைகள் இங்கேதான் நெய்யப்படுகிறது. இவ்விடத்தில் சர்ச்சுமிசியோனும், லண்டன் மிசியோனும் இருக்கின்றன.

அதைவிட்டு ரோகில் கண்டு என்னும் ரேயில் உவே மார்க்கமாய் அயோத்தி நாட்டின் தலைநகரியாகிய இலச்சிமணபுரிக்குப் போனோம். போகிற வழியில் தசரதன், இராமன், இலட்சிமணன், அரிச்சந்திரன் முதலிய இராஜாக்கள் வாசஞ்செய்த அயோத்தியா பட்டணம் இருந்த இடம் அயோத்தியா என்கிற ஸ்ற்றேஷனுக்குச் சமீபத்தில் இருக்கிறது. கட்டிடங்கள் ஒன்றுமில்லாவிட்டாலும் அவ்விடத்தில் தான் இந்தப் பூர்வீக பட்டணமிருந்ததாகப் பாரம்பரையாய்ச் சொல்லி வருகிறார்கள். இலட்சிமணபுரி குமிட்டி என்னும் ஒரு சிறு ஆற்றோரத்தில் கட்டப்பட்ட ஒரு சிறப்பான பட்டணம். எத்திசையில் பார்த்தாலும் அயோத்திய நபாபுகள் ஆண்ட காலங்களில் கட்டின பிரமாண்டமான அரண்மனைகளும் பள்ளிவாசல்களும் கோரிகளும், தோட்டங்களும் காணலாம். இவைகள் செங்கல்லினாலுஞ். சாந்தினாலுங், கட்டப்பட்டிருப்பதினால் அத்தனை உறுதியானவைகளல்ல. ஆனாலும், தூரப்பார்வைக்கு அலங்காரமாய்த் தோன்றும். அவைகளில் காசியாப் பாக் என்பது ஒரு பெரிய கட்டிடம். அதையும் அதைச் சேர்ந்த கட்டிடங்களில் கமிஷனருடைய ஆபீசுகள் வைத்திருக்கிறது. சாந்துமார்ட்டினீயர் காலேஜ் என்கிற மார்ட்டினீயர் என்னும் பிராஞ்சுக்காரனால் சென்ற நூற்றாண்டில் கட்டப்பட்ட ஏழு மெத்தை உயரமுள்ள பெரிய உன்னதமான கட்டிடத்தைக் கண்டோம். 1857ஆம் நடந்த சிப்பாய்க் கலகத்தில் இலட்சிமணபுரி ஒரு விசேஷித்த இடம். ஐரோப்பியருக்குங் கலகசிப்பாய்களுக்கும் சண்டை நடந்த இடத்தைப் பார்த்தோம். ரெசிடன்று துரை வீட்டில் அங்குள்ள அங்கிலேயர்கள் அடைக்கலம் புகுந்து பசியினாலும் நோயினாலும் இளைப்பினாலும் இளக்கரித்துப்போகாமல் ஐரோப்பியப் படை வந்து தங்களை இரட்சிக்கும்வரையிலும் வீரியமாய்ச் சண்டை செய்தார்கள். ரெசிடென்று துரை வீட்டுக்கூரையெல்லாம் எடுபட்டுப் போயிற்று. சுவர்கள் மாத்திரம் இடிந்து நிற்கின்றன. பிரங்கி துப்பாக்கிக் குண்டுகள் பட்ட இடமெல்லாம் இன்னம் தெரிகிறது. அதின் பக்கங்களிலிருந்த பங்களாக்கள், வீடுகள் எல்லாம் சமூலமாய் எடுபட்டுப் போயின. துரோகித்து எழும்பின சிப்பாய்கள் நல்ல பாடுபட்டார்கள். ஆலம்பார்க்கு என்கிற ஒரு தோட்டத்தில் மாத்திரம் அடைக்கலம் புகுந்திருந்த 2000க்கு அதிகமான சிப்பாய்கள் ஒருவர் தப்பாமல் கொல்லப்பட்டார்கள். அயோத்தியா நாட்டார் விசேஷமாய் அங்குள்ள பிராமணர்கள், க்ஷத்திரியர்கள், பட்டாணிகள் மிகவும் யுத்தப்பிரியர். அவர்கள் வளர்த்தியும் பருமனுமுள்ளவர்கள். பங்காள சுதேசப் பட்டாளத்திலுள்ள சிப்பாய்களில் அநேகர் இந்த நாட்டைச்சேர்ந்தவர்கள். நம்முடைய நாட்டிலுள்ள கோழைப் பிராமணர்களுக்கும் அயோத்தி நாட்டிலுள்ள யுத்தப்பிரியமுள்ள பிராமணர்களுக்கும் வெகு வித்தியாசம். அநேக பட்டாளங்களில் பாதிக்கு அதிகம் சிப்பாய்கள் பிராமணர்கள்தான். இந்தப் பட்டணத்தில் சில நல்ல கிறிஸ்தவர்களைக் கண்டோம். அங்குள்ள கிறிஸ்தவர்களின் தொகை சற்றேறக்குறைய 1000க்கு இருக்கும்.

இதைவிட்டு கான்புரிக்குப் போனோம். இங்கே நானாசாஹிப் என்ற பாதகன் ஆதரவற்ற ஐரோப்பிய துரைகளையும் பெண்கள் குழந்தைகளையும் கொன்ற இடமுமிருக்கிறது. அவர்களுடைய பிரேதங்களைப் போட்ட கிணற்றுக்குமேலாக "ஞாபக ஆலயம்" என்ற ஒரு கோவில் கட்டியிருக்கிறது. அந்த இடத்தைப்பற்றி வேறே விசேஷமில்லை.

அதைவிட்டு ஆக்கிரா என்ற விசேஷித்த நகரிக்குப் போனோம். இந்த நகரம் இந்துதேசம் முழுவதிலும் கட்டிடங்களையிட்டு சிறந்த

இடம். நாங்கள் போன சமயத்தில் உவெயில்ஸ் பிரபு அங்கே வந்திருந்ததினால் சூழ்ந்த இடங்களிலிருந்த ஜனங்கள் திரள்திரளாய் வந்திருந்தார்கள். அதிலுள்ள கட்டிடங்களில் சிறந்தது "தாச்சுமகால்." இது உலகத்திலுள்ள ஆச்சரியமான கட்டிடங்களிலொன்று. அது அழகில் பேர்போன ஜிஹாங்கீர் என்னுஞ் சக்கிரவர்த்தியினுடைய பத்தினியாகிய நூர்ஜுஹான் என்பவளுடைய கல்லறைக்கு மேலாகக் கட்டப்பட்ட கோரி. அதின் அழகையும் அதின் சிறப்பையும் வாயினால் சொல்லிமுடியாது. கண்ணாரப் பார்த்தால்தான் அதினுடைய அழகைச் சரியாய்க் கிரகித்துக்கொள்ளக்கூடும். 200ஆண்டுக்குமுன் இதைக் கட்டுவதற்குச் சென்ற செலவு 30,000,000 ரூபாய். தற்கால மதிப்புப் போட்டால் 200,000,000 ரூபாய்க்கு இருக்கும். நடுவில் கூண்டு வடிவமான உயர்ந்த ஒரு கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது. அதின் நாலு பக்கங்களிலும் 150 அடி உயரமுள்ள தூண்கள் எழுப்பியிருக்கிறது. கட்டிடம் முழுவதும் வெள்ளைக்கற்களால் கட்டப்பட்டிருக்கிறது. கட்டிடத்துக்குள்ளாக வெள்ளைக்கற்களில் பூவேலைகளும் சித்திரவேலைகளும் வெகு விநோதமாய்ச் செய்யப்பட்டிருக்கிறது. அங்கே இதல்லாமல் கற்களில் பூவேலைகள் வெட்டி அதில் விலையுயர்ந்த கற்களைப் பதித்திருக்கிறது. பச்சை நிறமான கொடிக்கும் இலைக்கும், புஷ்பராகமும் சிவப்பு நிறமான பூவுக்குக் கெம்பும் அழுத்தியிருக்கிறது. இந்தப் பூவேலைகளெல்லாம் அச்சில் அச்சடித்தாற்போல அளவுப் பிரமாணப்படி இருக்கிறது. இதைக் கட்டும்படியாக ஷாஜிஹான் அரசன் ஐரோப்பாவிலிருந்து இரண்டு பெரிய இஞ்சினீர்களை வரவழைத்து அதிகச் சம்பளங்கொடுத்து வைத்திருந்தான். ஆக்கிரா நகரமானது ஆக்பார் என்னும் அரசனால் கட்டப்பட்டு வெகுகாலமாய் முகல் இராச்சியத்திற்கு இராஜதானியாயிருந்தது. இந்தப் பேர்போன ஆக்பார் என்கிற சக்கிரவர்த்தியை அடக்கஞ்செய்த கோரி ஆக்கிராவுக்கு வடக்கே ஐந்து மைல் தூரத்தில் செக்கண்டிரா என்ற இடத்தில் இருக்கிறது. ஆக்கிராவுக்குத் தென்மேற்கே 25 மைல் தூரத்தில் பட்டிப்பூர் சிக்கிரி என்ற இடம் இருக்கிறது. இதில் பேபருக்கும் ரஜபுத்திரருக்கும் கொடிய சண்டை நடந்தது. இதிலே ஒரு சிறு குன்றின்மேல் ஆக்பாருடைய அரண்மனைக்கொலுமண்டபம் இராணியுடைய அரண்மனைமுதலான கட்டிடங்கள் கற்களால் கட்டப்பட்டு சிறப்பாய்த் தோன்றுகிறது. இதின் மேலிருந்து வெகுதூரம் பார்த்ததில் தென்னிந்தியாவைப்போல ஓரிடத்திலாவது ஏரிகளும், குளங்களும் காணப்படவில்லை. ஆக்கிராவில் விசேஷமாய்ச் சர்ச்சுமிசியோன் சபையும் மிசியோனுக்குச் சொந்தமான ஒரு காலெச்சும் இருக்கிறது. ஆக்கிராவுக்கு 25 மைல் தூரத்தில் இந்துக்களுடைய திரிமூர்த்திகளில் ஒருவனாகிய கிருஷ்டணன் பிறந்ததாகச் சொல்லப்படுகிற மதுராபுரியிருக்கிறது.

அதற்கப்பால் டில்லிப் பட்டணத்துக்குப் போனோம். இதினுடைய விசேஷத்தைப்பற்றி பலவகையாயும் கேள்விப்பட்டிருப்பீர்கள். இதற்குச் சமீபத்தில்தான் பஞ்சபாண்டவர்கள், திரியோதனாதிகள், வசித்த அஸ்தினாபுரம் இருந்ததாக உத்தேசிக்கப்படுகிறது. ஒருகாலத்தில் ஆசியாக்கண்டம் முழுவதும் சிறப்புப்பெற்று விளங்கின இந்தப் பட்டணம் அநேகவிடங்களில் அழிந்து கிடக்கிறது. அது அழிந்து கிடக்கிறவிடம் சற்றேறக்குறைய 40 மைல் சுற்றளவுள்ளது. தற்காலத்தில் இருக்கிறபடி டில்லிப் பட்டணம் 200 வருஷத்துக்கு முன்னாகத்தான் கட்டப்பட்டது. இது காசி இலட்சிமணபுரியைப்போல அவ்வளவு பெரிதான பட்டணமல்ல. ஆனாலும் இது மகமதிய சக்கிரவர்த்திகளு

டைய இராஜதானியானதால் அது விசேஷிக்கப்படத்தக்கது. 1857ஆண்டுக்குக் கலகத்தில் இந்தப் பட்டணத்தில்தான் பெரிய கொடிய சண்டை நடந்தது. அதினிமித்தம் பட்டணத்தின் ஓர் பாகமும் சில கட்டிடங்களும் எடுபட்டுப்போயின. ஆனாலும் கோட்டைக்குள்ளாக முகல் சக்கிரவர்த்திகளுடைய கொலுமண்டபமும், ஸ்நானஞ்செய்யும் இடமும், பள்ளிவாசலும் பழுதுபடாமலிருக்கின்றன. அவைகள் தாஜிமகாலைப் போல வெள்ளைக்கற்களினால் சித்திரவேலைகளுடன் கட்டப்பட்டிருக்கின்றன. கலகத்துக்கப்புறம் சக்கிரவர்த்திகளுடைய குடும்பம் கொஞ்சங்குறைய சமூலமாய் அற்றுப்போயிற்று. கோட்டைக்கு வெளியே பேர்போன ஜமமாமசூதி என்கிற பள்ளிவாசல் இருக்கிறது. பட்டணத்துக்கு ஒன்றரை மைலுக்கப்புறம் இடிந்து கிடக்கும் கட்டிடங்களையும், பட்டணங்களையும் பார்க்கலாம். இதிலுள்ள விசேஷித்த கட்டிடங்கள், அசோக இராஜனுடைய தூண், இம்மாயூன் சக்கிரவர்த்தியினுடைய கல்லறை, அவன் விழுந்து இறந்த புஸ்தகசாலை, குட்டுப்மின்னாரென்று சொல்லப்படுகிற உலகத்திலுள்ள எல்லாவற்றிலும் உயர்ந்த ஸ்தம்பம் இவைகளே. இங்கே சுதேசப் பிரபல்லிய மிசியோன் இருக்கிறது. அங்குள்ள சில கிறிஸ்தவர்களைக் கண்டோம். அவர்களிலொருவர் கணிதசாஸ்திரத்தில் பேர்போன இராமக்ஷந்திரா என்பவர். இவர் முதலில் கவர்ன்மென்று வித்தியாசாலையில் கணிதம் கற்பிக்கும் உவாத்தியாயராயிருந்தார். கொஞ்சக்காலத்துக்கு முன்னதாகத்தான் பட்டியாலா என்னும் மாகாணத்துக்கு வித்தியாதிகாரியாய் இருந்தார். அவரைக் கண்டு அவருடன் விருந்து சாப்பிட்டோம். கணிதசாஸ்திரத்தில் சில அருமையான கருகலான பிரபந்தங்களை எழுதியிருக்கிறார். இதினிமித்தம் ஐரோப்பாவிலுள்ள சில கணிதசாஸ்திரிகள் அவருடைய கல்வியின் நுண்பத்தைப்பற்றி வியந்துபேசியிருக்கிறார்கள். இவர் உறுதியுள்ள கிறிஸ்தவர். கலக்ககாரர் அங்குள்ள கிறிஸ்தவர்களில் அநேகரைக் கொன்று இவரையும் கொல்லும்படியாகத் தேட இவர் வேஷமாறி ஓடி தப்பிப் பிழைத்தார். இந்தப் பட்டணம் பஞ்சாப் இராசாங்கத்தைச் சேர்ந்தது. சில சீக்கியச் சனங்களைக் கண்டோம். அவர்கள் வளர்ந்து புஷ்டியான பலத்த தேகமுடையவர்கள். அங்கே பெண்களும் ஆண்களைப்போலவே கால்சீராய்த் தரித்துக்கொண்டு வெளியேறிவருவதைப் பார்க்கலாம். டில்லிப் பட்டணம் நகைவேலைகளுக்காகப் பேர்போனது.

அதற்கப்புறம் நான் ஒண்டியாய்த் திரும்பும்படி நேரிட்டது. திரும்பிவருகிற வழியில் ஆலிகர் என்னும் பட்டணத்தில் சில இந்து சிநேகிதருடன் ஒருநாள் தங்கி ஆக்கிராவுக்கு வந்து அங்கிருந்து அலகப்பாததுக்குப் போனேன். இதற்குச் சமீபத்தில் யம்னாவும் கங்கையும் ஒன்றாய்க் கலக்கிறது. தற்காலத்தில் இது வடமேற்கு மாகாணத்திற்கு இராஜதானி. இங்கேயும் சர்ச்சுமிசியோன் விசேஷமாயிருக்கிறது. சர்ச்சுமிசியோன் விசேஷித்த போதகரையும் அவருடைய அலங்காரமானதும் கிறிஸ்தவர்களாலே மாத்திரம் குடியேற்றப்பட்டதுமாயிருக்கிற ஒரு கிராமத்தையுங் கண்டேன். அது கங்கைநதியோரத்தில் ஒரு மாந்தோப்புக்குள்ளிருக்கிறது. அந்தப் போதகர் என்னிடத்தில் தம்முடைய சபைதான் வட இந்தியாவிலுள்ள சபைகளிலெல்லாம் பெரிதென்று சொன்னார்.

(இன்னும் வரும்.)

Life of Arch Bishop Cranmer.

கிரான்மர் சிரேஷ்ட கண்காணியார் சரித்திரம்.

(தொடர்ச்சி.)

சிரேஷ்ட கண்காணியார் மேற்படி வேதமார்க்கப்பிரமாணங்களையும் அதன்பின் சபைக்குரிய சட்டப் புத்தகம் ஒன்றும் எழுதிமுடித்தபின், 1552-ம் ௵ த்தில் கென்று மாகாணத்தில் நூதனமாயெழும்பிய அவலட்சணமான சில கொள்கைகளை அனுசரித்திருந்த ஒரு வகுப்பாரைப் பரிசோதிக்கும்படி இராசாவின் ஆலோசனைச் சபையினால் நியமகம்பெற்றார். அதன்றியும் இராசாவுக்குக் கையளிக்கப்பட்டிருந்த கோவிலுடைமைகளைக் கவர்ந்துகொண்டவர்கள் இன்னின்னாரென்று விசாரித்துக் கண்டுபிடிக்கும்படியாயும் அவரை நியமித்தார்கள். ஆயினும் தாம் கண்டுபிடிக்கும் பொருட்கள் இராசாவின் கையிற் சேராமல், பொருளாசைக்காரனான நோர்தம்பர்லாந்து டியூக் பிரபுவையும் அவன் சிநேகிதரையும் சேர்ந்துபோமென்று நிச்சமாய் அறிந்திருந்தபடியால் இரண்டாவது விஷயத்தில் பிரவேசிக்க மனமில்லாமல், தமக்கு மிகவும் இஷ்டனாயிருந்த துரைத்தன காரியதரிசியாகிய செசில் என்பவருக்கு எழுதிப் போக்குக் காண்பித்து அதற்கு நீங்கலாகிக்கொண்டார். இக்காலம்போல எட்வார்ட் அரசன் சுகவீனத்தினால் மெலிவடைந்துவந்தான். அதையறிந்த நோர் தம்பர் லாந்து பிரபு, அவன் மரணமடையும்போது தன் குமாரனுடைய மனைவியாகிய ஜேன் கிரே என்னும் பெருமாட்டிக்குப் பட்டம் கிடைக்கவேண்டுமென்று கருதி, மேரி எலிசப்பேத்து என்னும் இராச கன்னிகைகள் சோரப் பிள்ளைகளானதால் அவர்கள் பட்டத்துக்குப் பாத்தியஸ்தர்களல்லவென்றும், இனிமேல் பட்டமடையும் ஆள் புராட்டெஸ்தாந்து மார்க்கத்துக்குச் சார்பாயிராதபட்சத்தில் சபைக்கு எவ்வளவோ மோசம் நேரிடுகிறதாயிருக்குமென்றும் இராசாவுக்கு வஞ்சகமாய் வற்புறுத்திக் காண்பித்தான். "பக்தியுள்ள அரசன், தேவனுடைய மகிமையும் பிரஜைகளுடைய நன்மையும் இடையூறு அடையத்தக்கதாயிருக்கும்பொழுது, வம்சவரிசையைக் கவனிக்காமல் காரியத்தை நடப்பிக்கிறதே கடமையென்றும், மற்றப்படி செய்கிறதானால் தான் தேவனுக்கு என்ன விதமாய் உத்தரவாதம் செய்யக்கூடுமென்றும்" கள்ளத்தனமாய் அவனிடத்திற் பேசினான். அதன்பேரில் மரணத்தறுவாயிலிருந்த அந்த அரசன் நோர் தம்பர் லாந்து பிரபுவின் தந்திரத்தை அறியாமல் அவன் சொன்ன யோசனைக்கிணங்க, ஜேன் கிரே என்ற பெருமாட்டி தனக்குப்பின் பட்டத்துக்கு வரும்படி சம்மதித்துக்கொண்டான். சிரேஷ்ட கண்காணியார் மேற்படி நடபடிக்கை சரியானதல்ல, அநியாயமானதென்று அந்தப் பாலிய அரசனிடத்தில் பலமுறையும் நியாயம் பேசினார். இராசாவோடு தனித்துச் சம்பாஷித்துக்கொள்ள அவருக்கு இடங்கிடைத்திருக்குமாகில், இராசாவின் மனதையும் சம்மதியையும் மாற்றியுமிருப்பார். ஆயினும் அப்படிச்செய்ய இடங்கிடையாதபடிக்கு நோர் தம்பர் லாந்து பிரபு நன்றாய் வகைபண்ணிக்கொண்டான். அதினாலே கிரான்மரும் கடைசியாய் அதற்குச் சம்மதித்தார்.

ஆனாலும் அவருடைய சம்மதம் மனப்பூர்வமானதல்ல, பலவந்தத்தினாலேயே அவர் சம்மதித்தது என்று அவருடைய சத்துராதிகளும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். பிற்காலத்தில் அவர் சொல்லமுடியாத துன்பத்தையும் அவமானத்தையும் அனுபவித்த நாட்களிலெல்லாம் ஒரு விசையாவது மேற்படி காரியத்தில் அவர் எவ்வளவேனும் சம்பந்தப்பட்டிருந்ததாக எவர்களும் அவரைக் கண்டித்து ஈங்கிஷையாய்ப் பேசினதேயில்லை.

எட்வார்ட் அரசன் மாணமடைந்த பிறகு ஜேன் கிரே என்ற பெருமாட்டி பட்டமடைந்தாள். ஆயினும் பதினொரு நாளைக்குள்ளே மேரி ராணி இராசாங்கத்தைக் கைப்பற்றிக்கொண்டாள். இவள் சிம்மாசனமேறினதோடு கிரான்மர் என்பவருடைய தொல்லைகளும் ஆரம்பமாயின. எப்படியென்றால், முதலாவது எட்வார்ட் அரசனுடைய தேகம் க்ஷேமிக்கப்பட்ட சமையத்தில் கிரான்மர் என்பவர் பூசை நடப்பிக்க ஒப்புக்கொண்டதாகவும், கந்தர்புரி ஆலயத்தில் மறுபடியும் பூசை நடக்க ஏற்பாடு செய்துவிட்டதாகவும் ஒரு பொய்ச் செய்தி கேள்வியாயிற்று. கந்தர்புரி ஆலயத்தில் பூசை நடந்தது மெய்தான். ஆனால் அது காரியம் கிரான்மர் என்பவருக்குத் தெரியவுமாட்டாது. அவருடைய சம்மதத்தின்பேரில் நடந்ததுமல்ல. அந்த ஆலயத்தைச் சேர்ந்த குருக்களில் தோர்ண்டன் என்ற ஒருவன் சிரேஷ்ட கண்காணியாருக்குத் தெரியாமல் நடப்பித்து வந்தான். அபகீர்த்தியான இந்தப் பேச்சைச் சிரேஷ்ட கண்காணியார் கேள்விப்பட்டபொழுது, அவர் மிகவும் விசனமடைந்து மேற்படி செய்தி பரவாதபடி தடுக்கும்பொருட்டு தமது சிநேகிதர்களில் ஒருவருக்கு ஒரு நிருபமெழுதி, பூசை நடப்பிக்க தாம் ஒருபொழுதும் வாக்குக்கொடுக்கவேயில்லையென்றும், கந்தர்புரி ஆலயத்தில் பூசையைத் திரும்ப ஏற்படுத்தினது தாம் அல்லவென்றும், அவ்வாலயத்தைச் சேர்ந்த குருக்களில் பொய்யனும் பித்தலாட்டக்காரனுமான தோர்ண்டன் என்ற ஒருவனாலே தமக்குத் தெரியாதபடி அது நடந்த காரியமென்றும் மற்றவர்களறிய வெளியிட்டார்.

அதல்லாமலும் பூசையை மறுபடியும் ஏற்படுத்தினதாக தம்பேரில் சொல்லப்படுகிற குற்றம் நியாயமானதல்லவென்று காட்டிய பத்திரிகை ஒன்று அவர் எழுதிப் பிரசுரஞ்செய்தார். இந்தப் பத்திரிகை பிரசுரமாகிக்கொண்டு வரும்பொழுதே, கிரான்மர் என்பவர் இராணியின் கம்மிஷனர்களுக்குமுன் ஆஜராகவேண்டுமென்றும், ஆஜராகும் சமையத்தில் தமமுடைய சாமான் தட்டுமுட்டுகளுக்கெல்லாம் ஒரு இடாப்பு எழுதிக்கொண்டுவரவேண்டுமென்றும், அப்படி ஆஜராகும்படி உத்தரவு வருகிறவரையில் அவர் தமது மாளிகையைவிட்டு எங்கும் போகப்படாதென்றும் அவருக்குக் கட்டளை பிறந்தது. அந்தப் பிரகாரமே 1553-ம் ௵ ஆகஸ்ற்று மாதத் துவக்கத்தில் தம்முடைய சாமான் தட்டுமுட்டுகளுக்கு இடாப்பு எழுதிவைத்துக்கொண்டு மற்றும் தமது காரியாதிகளையெல்லாம் திட்டஞ்செய்துவிட்டு கர்த்தருடைய கிருபையை முன்னிட்டு என்ன வந்தாலும் வரட்டுமென்று ஆயத்தமாய்க் காத்திருந்தார். இவ்வளவும் அவர் செய்து முடிக்கிறதற்குள்ளாக இராஜ சங்கத்தாருக்கு முன்பாக ஆஜராகும்படி கட்டளை பெற்றுவரவே, மேற்படி சங்கத்தார், ஜேன் கிரே என்ற பெருமாட்டியைச் சிம்மாசனத்திலேற்றின தஸ்தவேசுக்கு அவர் கையொப்பம் வைத்ததற்காகவும், எட்வார்ட் அரசன் மார்க்க விஷயமாய் நடப்பித்த காரியங்கள் நியாயமானவைகளென்று பகிரங்கமாய்க் காண்பித்ததற்காகவும் அவரைச் சிறைச்சாலைக்கு அனுபபினார்கள். அப்பால் நொவம்

பர்மீ 13உ அவரைக் குற்ற விசாரணைசெய்கிறதுபோல பாவனை காண்பித்து, அவரை இராஜ துரோகியென்று தீர்த்தார்கள். ஆனாலும் பின்பு இராஜ துரோகம் என்ற குற்றத்தை மன்னித்துவிட்டு, மார்க்கத் தப்பறைக்காக ஆக்ஞையடையவேண்டுமென்று தீர்த்தார்கள். அப்பால் சிரேஷ்ட கண்காணியார் சிறைச்சாலையிலிருந்த ஜேயின் ஹோ என்ற பெருமாட்டியைப் பார்க்க இடம்பெற்றுப் போய், ரோமான் மார்க்கத்துக்கு அவளைத் திருப்பும்படி மேரி இராணி செய்த பிரயத்தனங்களுக்குக் கடைசிவரைக்கும எதிர்த்து நிற்க அவளைப் பலப்படுத்தினார். அவளும் மேற்படி காரியத்தில் மகா உறுதியும் வைராக்கியமுமாகவே யிருந்தாள். "ஆளம்பிராயமான நான் வேணே விரும்பி என் விசுவாசத்தை மறுக்கவேண்டுமோ? வேண்டியதில்லை. அப்படியாகாதிருப்பதாக" என்றாள். சிரேஷ்ட கண்காணியாரோடு ரிட்லி, லத்திமர் என்ற கண்காணிமார் இருவரும் பிராத்போர்ட் என்ற குருவும் காவலிலடைபட்டிருந்தார்கள். இந்த நாலு பேரையும் தவக்கத்தால் வெவ்வேறு அறைகளில் அடைத்திருந்தார்கள். ஆகிலும் காவலிலடைபட்டவர்களுடைய தொகை அதிகரிக்கிரமாய்ப் பெருகிவிட்டபடியால், மேற்படி நாலு பேரையும் இப்பொழுது ஒரே அறையில் அடைத்து வைத்தார்கள். அவர்களைக் கனவீனபடுத்தவேண்டுமென்ற நோக்கமாய் இவ்வாறு செய்தபோதிலும், அது அவர்களுக்கு மிகுந்த ஆறுதலுண்டாகிறதற்கேதுவாயிருந்தது. இது காரியத்தைக் குறித்து லத்திமர் கணகாணியார் ஒக்ஸ்போர்ட் நகரத்திற் கூடிவந்த கம்மிஷனர்களிடச்தில் அடியில் வருமாறு பேசினார். "கந்தர்புரி சிரேஷ்ட சண்காணியாராகிய கிரான்மர் என்பவரும், லண்டன் நகரத்துக் கண்காணியாராகிய ரிட்லி என்பவரும், பிராத்போர்ட் என்ற பரிசுத்தவானும் லத்திமர் என்னப்பட்ட விருத்தனுமாகிய நாலும் கிறிஸ்துநாதருடைய சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததினிமித்தம் லண்டன் கோபுரமாகிய காவற்சாலையில் அடைபட்டிருந்தோம். நாங்கள் பாப்புமார்க்கப் பூசையை நடப்பிக்கமாட்டோம் என்றதினாலே எங்களைத் தனித்தனியே ஒவ்வொரு அறையில் அடைத்துக் கண்டிப்பாய்க் காபந்துசெய்தார்கள். அப்பால் ஷிகாவற்சாலை மற்றும் கைதிகளால் நிறைந்துபோனபடியால், எங்கள் நாலு பேரையும் ஈங்கிலஷைசெய்யவேண்டுமென்று ஒரே அறையில் அடைத்துப்போட்டார்கள். ஆகிலும் இது காரியத்துக்காக கர்த்தருடைய திருநாமத்துக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக. என்னத்தினாலென்றால் நங்கள் நாலு பேரும் ஒன்று சேர்ந்து, எங்களுக்கு மிகுந்த சந்தோஷமும் ஆறுதலுமுண்டாவதற்கேதுவாக, மகா களிலியோடும் யோசனையோடும் புதிய ஏற்பாட்டை வாசித்து வந்தோம். தேவனுடைய நியாயாசனத்துக்கு முன்னின்று சொன்னாற்போல சொல்லுகிறேன், கர்த்தருடைய இராபபோசனத்தில் கிறிஸ்துநாதர் ஆவிக்குரியவகையாய் பிரசன்னமாயிருக்கிறாரேயன்றி வேறெந்தவகையாயுமிருக்கிறதில்லையென்றும், பாபபுமார்க்கத்தார் செய்யும் பூசையானது பாவநிவாரணப்பலியல்லவென்றும் புதிய ஏற்பாட்டினால் தெரியவருகிற தேயல்லாமல் மற்றப்படியல்ல. மேலும் இயேசுக்கிறிஸ்துவாகிய நமது மீட்பர் சிலுவையிற் செலுத்தின பிராயச்சித்தப் பலியானது பூரணமும், பரிசுத்தமும், உத்தமமுமானதென்றும், பரமபிதாவாகிய தேவன் வேறொரு பலியைக் கேட்கிறதில்லையென்றும் அந்த ஏற்பாட்டிலேயே பரிஷ்காரமாய் விளங்குகின்றது" என்பதே.

மேரி ராணி பட்டமடைந்த சமையத்தில், தேவன் தமது வசனத்தைக்கொண்டு எவர்களையாவது ஏவினதே தவிர, தான் ஒருவரையும்

தங்கள் மனச்சாக்ஷிக்கு விரோதமாய் நடக்க கட்டாயம்பண்ணுகிறதேயில்லையென்று வாக்குக்கொடுத்திருந்தும், 1553-ம் ஜூன்த்தில் செய்வித்த ஒரு விளம்பரத்தில், இந்த வாக்குத்தத்தத்தை ஒப்புக்கொண்டு அதோடு வேறு உத்தரவு பிறக்கும் வரையில் என்ற சொற்களைகளத்தனமாய்ச் சேர்த்திருந்தது. அப்பால் கார்டினர் என்பவன் ஏவிவிட்டபடி, புரோட்டஸ்தாந்து போதகன்மார்கள் பிரசங்கிக்காதிருக்கும்படி செய்யத் தீர்மானித்து, கண்காணிமார்களிலும் குருமார்களிலும் முக்கியமான சிலரை இராஜ சங்கத்தாருக்குமுன் ஆஜராகும்படி கட்டளையனுப்பினான். அதன்பேரில் பிற்காலத்தில் இரத்த சாக்ஷியாய் மரித்த கூப்பர் கண்காணியார் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டார். இங்கிலிஷ் வேதாகமத்தைப் பிரசாரஞ்செய்த மைல்ஸ் கோவர்டேல் என்ற கண்காணியாரை உத்தியோகத்தினின்று நீக்கிவிட்டார்கள். அதற்குச் சிறிது நாளைக்குப்பின் கர்த்தருடைய இராப்போசனத்தில் அப்பமும் திராட்ச ரசமும் கிறிஸ்துநாதருடைய சரீரமும் இரத்தமுமாய் மாறிப்போகிறது என்கிற உபதேசத்தைத் தீர்த்து நிலைப்பித்தும் பொருட்டு, இராணியின் உத்தரவுப்படி லண்டன் நகரத்துச் சிரேஷ்ட தேவாலயத்தில் குருக்கள்மார் சங்கமாகக் கூடினார்கள். மேற்படி சங்கத்துக்கு முதலாளியாயிருந்த டாகற்றர் உவெஸ்ற்றன் என்பவனும் சங்கத்தார்களில் ஐந்தாறுபேர் தவிர மற்றெல்லாரும் கர்த்தருடைய இராப்போசனத்தில் அப்பமும் திராட்ச ரசமும் கிறிஸ்துநாதருடைய சரீரமும் இரத்தமுமாக மாறியே போகின்றனவென்று சாதித்தார்கள். ஆகிலும் மேலே குறித்திருக்கிற கண்காணிமார் மூவரும் நியாயம்பேசுவதில் தங்களே மேற்கொள்ள வல்லவர்களாயிருந்ததினாலே, அவர்களை அவ்விடத்துச் சிறைச்சாலையிலிருந்து ஒக்ஸ்போர்ட் நகரத்துக்குக் கொண்டுபோகும்படியாயும் அங்கே பாப்புமார்க்கக் குருமார்கள் சிலரோடு அவர்கள் தற்சிக்கவேண்டுமென்பதாயும் திட்டம்பண்ணினார்கள். இவ்வாறு அவர்கள் செய்த ஏற்பாடு மறு வருஷம் ஏப்பிறல் மாதத்தில்தான் நடந்தது.

ஏப்பிறல் மாதம் பதினாலாம் தேதியில் மேற்படி கண்காணிமார் மூவரும் தங்கள் எதிராளிகளோடு வாதாடும்படி ஒக்ஸ்போர்ட் நகரத்துச் சிறைச்சாலையிலிருந்து கொண்டுவரப்பட்டார்கள். அவர்கள் வந்தவுடனே உவெஸ்ற்றன் என்பவன் ஒரு பிரசங்கஞ் செய்து, சிலவிய காரியங்களில் ஐக்கியமாயிருப்பது எவ்வளவோ சிறப்பு என்பதுபோல காண்பித்ததின்பின் ஒரு காகிதத்தை கிரான்மர் என்பவரிடத்தில் நீட்டி, "இந்தப் பிரமாணங்களுக்குக் கையொப்பம் வைக்க மறுக்கமாட்டீரென்று நம்புகிறோம்" என்று சொல்லிப் பிரசங்கத்தை முடித்தான். கர்த்தருடைய இராப்போசனத்தில் அப்பமும் திராட்ச ரசமும் கிறிஸ்துநாதருடைய சரீரமும் இரத்தமுமாக மாறிப்போகிறது என்கிற உபதேசமே அந்தக் காகிதத்தில் எழுதியிருந்தது. கிரான்மர் அதை வாங்கி வாசித்துப்பார்த்த உடனே தலையை அசைத்துக்கொண்டு, இந்தக் காகிதத்திற் காட்டிய காரியத்திலுல், விரும்பிய ஐக்கியம் உண்டாகவேமாட்டாது என்றார். அதன்பேரில் அவரைச் சிறைச்சாலைக்கு அனுப்பிவிட்டார்கள். இரண்டு நாளைக்குப் பின்பு கிரான்மரையும் மற்றவர்களையும் திரும்பவும் தங்கள் முனபாகக் கொண்டுவரச்சொல்லி, மேற்படி பிரமாணங்களுக்கு நீங்கள் கையொப்பம் வைக்கிறதுண்டாவென்று கேட்டார்கள். கையொப்பம் வைக்கமாட்டோம் என்று அவர்கள் மாறுத்தரஞ் சொன்னபொழுதி, அவர்களைப் பதிதர் என்று தீர்த்து அவர்களின் பேரில் மரணக்கிணையும் கூறினார்கள்.

Bible Sketches and their Lessons.

பாலபோதனை.

தானியேலின் பக்தியுள்ள நிர்ணயம்.

தானியேல் 6 ம் அதிகாரம்.

"பாபிலோனின் ஆறுகள் அருகே நாங்கள் உட்கார்ந்து அங்கே சியோனை நினைத்து அழுதோம். அதின் நடுவிலிருக்கும் அலரிச்செடிகளின்மேல் எங்கள் இன்னரங்களைத் தூக்கிவைத்தோம்" என்று தொடங்குகிற தக்கராமான அந்த அழகிய சங்கீதத்தை நீங்கள் அறிவீர்களா? அறிவீர்களாகில், அங்கே அழுத புலம்பினவர்கள் இன்னொன்றும் ஏன் அப்படி அழுதார்களென்றும் உங்களுக்குத் தெரிந்திருக்கும். யூதர்கள் இப்பொழுது அஞ்ஞான தேசத்தில் அந்நியரையும் சிறைகளாயுமிருந்தார்கள். அங்கே அவர்களைக்கொண்டு போனது அவர்களுடைய பாவமே அல்லாது வேறல்ல. தேவன் அவர்களைத் தண்டிக்கும்பொருட்டு அவர்கள் சத்துருக்கள் கைகளில் அவர்களை ஒப்புக்கொடுத்தார். இவ்வாறு அவர்களுக்கு கேரிட்ட சஞ்சலத்தினால் அவர்கள் தேவனை நினைக்க ஏவிவிடப்பட்டார்கள். அவர்கள் தேவனைத் தேடினார்கள். தேவன் அவர்களைச் சந்தித்தருளினார். தேவனை நோக்கிப் பிரார்த்திக்க காலம் கடந்துபோயிற்று என்று ஒருபொழுதும் நினைக்கத் தேவையில்லையே. அவர்கள் சும்மா அழுதார்களென்று மாத்திரமல்ல, வேறொரு நல்ல காரியமுஞ் செய்தார்கள். அவர்கள் சும்மா அழுதுகொண்டுமாத்திரமிருந்திருப்பார்களாகில், அது எரிந்து பொங்குகிறதாயிருக்குமேயல்லாமல் மற்றப்படியல்ல. இளைஞராலும் முதியோராலும் அப்படிச்செய்வது எவ்விதத்திலும் தகாது. ஒருவனுக்குத் தன்பமுண்டாயிருக்கையில் அதைக்குறித்து எரிச்சலடைந்து முறைப்பாடு செய்வதினால் எவ்வளவேனும் பிரயோசனமுண்டாகுமா? உண்டாகவேமாட்டாது. அவன் விவேகியாயிருந்தால், தன்பமுண்டாயிருந்தபோதிலும் அத்தன்பத்தில் எவ்விதமாயாவது சந்தோஷமாயிருக்கவும் பிரயோசனமடையவும் பார்ப்பான். நாகமான் வீட்டில் அடிமையாயிருந்த எபிரேயப்பெண் செய்தது இப்படித்தான். அவள் அடிமைப்பட்டிருந்தும் தன் வீட்டைவிட்டுத் தூரமான இடத்திற்போயிருந்தும் நன்மைசெய்ய முயன்றாளே. அவள்மூலமாய் குஷ்டரோகியாயிருந்த நாகமான் அக்குஷ்டரோகம் நீங்கி சொஸ்தமடைந்தான். இங்கே பாபிலோனிலும் அப்படியே சிலரிடத்தில் இந்தச் சிறு அடிமைப்பெண்ணின் சிந்தையிருந்தது. அவர்கள் முதலாவது தங்கள் சொந்த தேசத்திலிருந்து சிறைப்பட்டுப்போகையில், "தேவன் உங்களைச் சிறைப்பட்டுப் போகப்பண்ணின பட்டணத்தின் சமாதானத்தைத் தேடி, அதற்காகக் கர்த்தரை விண்ணப்பம்பண்ணுங்கள்; அதற்குச் சமாதானமிருக்கையில் உங்களுக்கும் சமாதானமிருக்கும்" என்று தேவனுடைய தீர்க்கதரிசி ஒருவன் சொன்ன வார்த்தைகளை நினைத்து நடந்தார்கள்.

இந்தக் கற்பனையைக் கைக்கொண்டு நடக்கப் பிரயாசப்பட்டவர்களில் தானியேல் ஒருவன். அவன் பாபிலோனுக்கும் அதின் இராசாவுக்கும் அதின் சனங்களுக்கும் நன்மைசெய்யக் கரிசனையாயிருந்தான். அவன் தேசாதிபதியாகி தேசத்தை ஞானமாயும் அனுகூலமாயும் ஆண்டுவந்தான். அதுமாத்திரமல்ல, அவன் பிரார்த்தித்துக்கொண்டும் வந்தான். எனைத்துக்காகப் பிரார்த்தித்துவந்தானென்று நினைக்கிறீர்கள்? தீர்க்கதரிசி சொல்லியிருந்ததுபோல, பாபிலோனுக்கு நல்வாழ்வும் சமாதானமுமுண்டாகவேண்டுமென்றும், தேவனுடைய சனங்கள் சீக்கிரம் சிறைமீண்டு சுகமாய் தங்கள் சொந்த தேசம்போய்ச் சேரவேண்டுமென்றும், உலகத்தை இரட்சிக்கக் கிறிஸ்துநாதர் வரவேண்டுமென்றும், தேவன் தன்னுடைய பாவங்களை மன்னித்து தான் கையிட்டுக்கொள்ளும் வேலையிலெல்லாம் தனக்கு உதவிசெய்யவேண்டுமென்றும் பிரார்த்தித்துவந்தான். பக்தியுள்ள எந்த உத்தமனையும்போலவே, தானியேலும் சபமின்றி சீவிக்கமாட்டாதவனாயிருந்தான்.

நல்லது, தானியேல் இவ்வளவாய் நன்மை செய்கிறவனாயும் பரிசுத்தமான நடக்கையுள்ளவனாயுமிருந்தால், பற்றத் தேசாதிபதிகள் அவனைப் பகைக்கவேண்டியதென்ன? அவர்கள் விக்கிரகாராதனைக்காராராயும் இவன் மெய்த்தேவனை ஆராதிக்கிறவனாயுமிருந்ததினாலோ? அப்படியல்லவென்றே நினைக்கத்தக்கது. தானியேல் மற்ற விஷயங்களிலெல்லாம் தங்களைப்போல நடந்திருப்பானாகில், அவன் எந்தத் தெய்வத்தைக் குறைபிட்டாலும் அதை எண்ணவேமாட்டார்கள். தானியேலோ அவர்களைப்பார்க்க உத்தமனாயும், புத்திசாலியாயும், மேன்மையுள்ளவனாயுமிருந்தான். இதுதான் அவர்களுக்கு விசனத்தை உண்டாக்கிற்று. இதைத்தான் அவர்கள் சகிக்கமாட்டாதிருந்தார்கள். இந்தக் குணத்திற்குப் பேர் தெரியுமா? ஆம், பொறுமை என்பது இதுவே. இந்தத் தூர்க்குணம் பெரியோர், சிறியோர், விருத்தாப்பியர், இளைஞர் ஆகிய சகலரிடத்திலும் காணப்படுகிறதுண்டே.

பூர்வத்திலிருந்த ஒரு பெரிய நகரத்தில் ஒரு விசை ஒரு மகா சங்கம் கூடிவந்தது. மேற்படி சங்கம் கூடின நோக்கம் யாதெனில், அந்நகரவாசிகளில் ஒருவனைப் பிரதேசத்துக்குத் தாதாவிடும்படியாகத்தான். அம்மனுஷன் பெயர் அரிஸ்தைடீஸ என்பது. இவன் மகா உத்தமனாயிருந்தபடியால், எல்லாரும் இவனை "நீதிமான்" என்று சொல்வது வழக்கம். சங்கமாய்க் கூடிவந்திருந்த ஒவ்வொருவரும் அவனைத் தாதாவேண்டும் அல்லது வேண்டாமென்று தன்தன் அபிப்பிராயத்தை ஒரு பலகையில் எழுதிக்கொடுக்கவேண்டியிருந்தது. அங்கு வந்திருந்த ஒரு மனிதனுக்கு எழுதத்தெரியாது. அவன் பக்கத்தில் நின்ற ஒருவனைத் தனக்கு எழுதிக்கொடுக்கும்படி கேட்டான். பக்கத்தில் நின்ற மனிதன் மேற்குறித்த அரிஸ்தைடீஸ் என்றவனே. அது காரியம் அவனிடத்தில் எழுதச்சொல்லிக் கேட்டவனுக்குத் தெரியமாட்டாது. அதன்பேரில் அரிஸ்தைடீஸ், "நான் என்ன எழுதட்டும்" என்று கேட்க, "அரிஸ்தைடீஸ் என்பவனைத் தாதாவிடவேண்டுமென்றுதான்" எழுதவேண்டும் என்றான். "ஏன் அவனைத் தாதாவேண்டும், அவன் செய்த கெடுதியென்ன, ஒன்று சொல்லு பார்ப்போம்" என்று கேட்டதற்கு, இல்லை இல்லை, அவன் கெடுதி ஒன்றும் செய்யவில்லை, ஆனால் எவர்களும் அவனை நீதிமான் நீதிமான் என்று சொல்வது எனக்கு மகா சலிப்பாயிருக்கிறது" என்று பிரதியுத்தரம் சொல்வது எனக்கு மகா சலிப்பாயிருக்கிறது" என்று பிரதியுத்தரம் சொன்னானும். பிரியமானவர்களே, இது உங்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறதோ? உங்களோடு படிக்கிற அல்லது விளையாடுகிற ஒரு பிள்ளை உங்களைப்பார்க்க நல்ல பிள்ளையாயிருக்கிறதைப் பார்த்து உங்களில்

ஒருவராவது மனதிலே ஆயாசமோ, சலிப்போ, கோபமோ, பொறுமையோ கொள்ளவில்லையா? அப்படிமாத்திரமல்ல, மேற்படி பிள்ளை ஒரு குற்றத்தைச் செய்த அதினிமித்தம் தண்டனையடைந்தபொழுது சந்தோஷப்படவில்லையா?

கல்லது, தாண்யேலின் சத்துருக்கள் அவனிடத்தில் குற்றங் கண்டுபிடிக்குப்படி வெகுகாலம் விழிப்பாய்க் காத்திருந்தும், ஒரு குற்றமாவது கண்டுபிடிக்கக் கூடவில்லை. சடைசியிலே அவனுடைய மார்க்க விஷயமாய்க் குற்றங் கண்டுபிடிக்கப் பார்த்தார்கள். அச்சமையத்தில் அவர்கள் சொன்ன வார்த்தைகள் நாம் எவ்வளவாய்க் கவனிக்கத்தக்க வார்த்தைகள் என்று பாருங்கள். "நாம் இந்தத் தானியேலை அவனுடைய தேவனைப்பற்றிய வேத விஷயத்திலே குற்றப்படுத்தும் முகாந்தரத்தைக் கண்டுபிடித்தாலொழிய அவனே வேறொன்றிலும் குற்றப்படுத்தும் முகாந்தரத்தைக் கண்டுபிடிக்கக்கூடாது என்றார்கள்.

தேவனை அறியாமலும் அவரைச் சிநேகியாமலுமிருந்த சுத்த உலகத்தாருனை ஒரு பட்டாளத்துத் தனை தன் பட்டாளத்தைச் சேர்ந்த சில போர்வீரரைக்குறித்து ஒருவிசை எப்படிச் சொன்னானென்றால், "அவர்கள் சொம்பவும் தேவபக்தியுள்ளவர்களாயிருக்கிற ஒரு காரியமே தவிர மற்றப்படி நான் அவர்கள் பேரில் ஒரு குற்றமாவதி சொல்ல இடமில்லை" என்றான். பக்தியில்லாத ஒரு தாயும் பக்தியுள்ள தன் மகளைப்பற்றி ஒருவிசை இந்தப் பிரகாரமே சொல்லியிருக்கிறாள். "அவளைப்பற்றி நான் ஒரு குறைவும் சொல்ல இடமில்லை, அவள் மகா நல்ல பிள்ளை, மகா சாக்கிரதையுள்ள பிள்ளை, மகா தேற்பிடிதலுமுள்ள பிள்ளைதான். ஆனால் அவள் மகா பத்தியுள்ளவளாயிருப்பதுதான் எனக்கு விசனம்" என்றாள். இப்படிச் சொல்லப்பட்டது அந்தப் போர்ச்சேவகருக்கும் அந்தப் பிள்ளைக்கும் விசேஷித்த கனமில்லையா?

தானியேலுக்கும் அப்படியேயிருந்தது. இப்பொழுது புதிய ஓர் அரசன் சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறான். அவனுடைய சேனை பாபிலோன் நகரத்தைச் செயித்துக் கட்டிக்கொண்டது. அவன் தன் அதிகாரத்தையும் வல்லமையையும் ஸ்திரப்படுத்திக்கொள்ளக் கவலையாயிருந்தான். அப்படிப்பட்ட அவனிடத்தில் மேற்படி பொல்லாத அதிகாரிகளும் தேசாதிபதிகளும் வந்து, "மகா ராஜாவே நீர் கருதியிருக்கிற இந்தக் காரியத்தை நிறைவேற்றிக்கொள்ளுகிறதற்கு ஒரு வழி இருக்கிறது, அதென்னவென்றால் எவனுகிலும் ஒரு மாதம் வரையில இராசாவாகிய உம்மையே தவிர வேறு யாரையாவதும் நோக்கியா தொரு காரியத்தைக்குறித்து விண்ணப்பம்பண்ணப்படாதென்று கட்டளையிடவேண்டும். அப்பொழுது உம்முடைய வல்லமையும் மகத்துவமும் நன்றாய் விளங்கும்" என்றார்கள்.

தரியு இராசா இந்தக் காரியத்துக்குச் சம்மதித்துக்கொண்டது மகா புத்தியீனம் என்பதற்குச் சந்தேகமில்லை. பாபிலோனிலுள்ளவர்கள் தங்கள் இராசாக்களைக் கனப்படுத்துகிற வகையாக்கும் என்று அவன் நினைத்தானும் நினைத்திருக்கலாம். எப்படியும் மேற்படி சட்டம் பிறந்தது. அது எவ்வளவு காலம் நடப்பாயிருந்ததென்று தெரியாது. என்றாலும் அது நடப்பாயிருந்த காலத்தில் பாபிலோனிலே என்னென்ன விபரீதமான காட்சிகளெல்லாம் காணப்பட்டிருக்குமென்று நினைக்கிறீர்கள். தேவாலயங்களெல்லாம் அடைபட்டுப்போயின, செபதபங்களில்லை, பலிகள் காணிக்கைகளில்லை,—ஆ. இது பெரியகாரியமல்ல, அந்தத் தேவர்கள் செபதபங்களைக் கேட்கக்கூடியவர்களல்லவே, என்று சொல்லுகிறீர்களாக்கும். கல்லது அது இருக்கட்டும். பட்

டணத்திலுள்ள வீதிகளில் நடக்கிற காரியத்தைப் பாருங்கள். "ஐயா, உம்மிடத்தில் இன்னது கேட்கப்போகிறேன்" என்று ஒரு பிள்ளை சொல்லுகிறது. தகப்பன் பயந்துபோய், அது யாருக்காவது கேட்டிருக்குமோ என்று இங்கும் அங்கும் சுற்றிப்பார்த்துகொண்டு, "அப்பா பேசாதே, இராசா ஒருவரிடத்திலேயன்ய அல்லாமல் நீ என்னிடத்தில் ஒன்றும் கேட்கப்படாது" என்கிறான். மனிதர் ஒருவரோடொருவர் தாராளமாய்ப் பேசிக்கொள்ளவும் பயப்படுகிறார்கள். ஏன்? பேசும் பொழுது ஒருவேளை யோசனையில்லாமல் எதையாவது கேட்டுவிடுவோம, அப்பொழுது சிங்கங்களின் கெபியில் போட்டிவிடுவார்களோ என்ற பயத்தினால்தான்.

ஆகிலும் ஒரு மனிதன் தைரியசாலியாய் விளங்கினான். இந்த வாக்கியம் எத்தனை நேர்த்தியாயிருக்கிறது, கேளுங்கள். "தானியேலோவென்றால், அந்தப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்தபோதிலும், தன் வீட்டுக்குள்ளேபோய், தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராக பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்துவந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுகுமுன்பாக முழங்காற்படியிட்டு செபம்பண்ணி ஸ்தோத்திரஞ் செலுத்தினான்.

இப்பொழுது மேற்படி வார்த்தைகளில் அடங்கிய குறிப்புகளைச் சற்று கவனித்துக்கொள்வோம்.

முதலாவது. அவன் தான் செய்த காரியத்தைத் திட்டமாய் அறிந்துதான் செய்தான். அந்தப் பத்திரத்துக்குக் கையெழுத்துப் போடப்பட்டதென்று அறிந்திருந்தான். அதோடுகூட, தான் சீக்கிரம் சிங்கங்களின் குகையிலே இருக்க நேரிடுமென்றும் அறிந்திருந்தான். எனறாலும் தேவனை நோக்கிப் பிரார்த்திக்க அவன் பயபடவில்லையே.

Notes on Leviticus.

லேவியராகம வியாக்கியானம்.

முகவுரை.

தேவாராதனைக்குரிய சட்டதிட்டங்கள் இவ்வாகமத்திலடங்கியிருக்கிறது. தேவாராதனையை நடப்பிக்கும்படி தேவனுலே லேவியர் நியமிக்கப்பட்டிருந்ததினாலே இதற்கு "லேவியராகமம்" என்று பேர் வந்தது. இஸ்ரவேலருடைய சடங்கு, தேசாசாரம், ஸ்தானம் ஆகிய இவற்றுக்கடுத்த பிரமாணங்கள் இதிற் கற்பிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரமாணங்கள்: குறைவற்ற சர்மார்க்கம். ஞானம், நீதி, பரோபகார சிந்தை, மகத்துவம், மனுஷருடைய மனதை எழுப்பும் தன்மை ஆகிய லட்சணம் பொருந்தியது. பூர்வத்திலுள்ள வேறெந்த சாஸ்திரங்களிலாவது இப்பேர்ப்பட்ட மகத்தான பிரமாணங்களிருந்ததில்லை.

சடங்குப் பிரமாண ஏற்பாடுகள்தான் இப்புஸ்தகத்தின் மிகுதியான பாகத்தை அடக்கியது. ஆகையால் அவற்றின் நோக்கத்தை இங்ஙனம் கவனிப்போம்.

1. சடங்குப் பிரமாண ஏற்பாடுகள் சில விஷயங்களில் தேக சுகத்துக்கேற்றவைகளாயிருந்தது. திருஷ்டாந்தமாக, சுத்திகரிப்பு முறை, குஷ்டரோகிகளை விட்டுப் பிரிந்திருக்கவேண்டுமென்பது, இன்னின்ன மாமசம் சாப்பிடக்கூடாதென்று விலக்கப்பட்டது.

2. இஸ்ரவேலருக்குள் தேவனைப்பற்றிய அறிவு வம்ச பாரம்பரையாய்க் காக்கப்பட்டு நிலையாயிருந்து வரவும், பரிசுத்த காரியங்களை அவர்கள் இடைவிடாமல் கண்யமாய் மதித்து வரவும், நாடோறுமுள்ள நடக்கையிலே அவர்களுக்குள் தேவ பக்தியை எழுப்பிவிட்டு பழக்கம் பண்ணுவிக்கவும் இந்தப் பிரமாணங்கள் ஏதுவாயிருந்தது. 23-ம் அதிகாரத்திற் காட்டிய பண்டிகைகள் இதற்குத் திருஷ்டாந்தமாம். மேலும் இந்தப் பண்டிகைகள்: தேவன் இஸ்ரவேலருக்குச் செய்த மகத்தான நன்மைகளை அவர்களுக்கு ஞாபகப்படுத்திக்கொண்டுமிருந்தது.

3 மேலும் இந்த ஏற்பாடுகள்: இஸ்ரவேலர் அக்கம்பக்கம் சாதியாரோடு கலந்து போகாதபடி அவர்களைத் தடுக்கிறதாயும் (எபே. 2: 14), அந்நிய சாதியாருடைய விக்கிரகாராதனையிலும் சிற்றின்பங்களிலும் இவர்கள் சிக்கிக்கொள்ளப்படாதபடி இவர்களைக் கட்டுகிறதாயும், புதிய ஏற்பாட்டின் காலம்வரையும் உலகத்திலுள்ள மற்றவர்களோடு ஐக்கியப்படாமல் பிரத்தியேகமான சாதியாராயிருந்து வரும்படி இவர்களைக் காத்துக்கொள்ளுகிறதாயுமிருந்தது.

4 அல்லாமலும் இந்தச் சடங்குகள் உபமானக் கருத்தாக இன்னொரு முக்கியமான பிரயோசனமுள்ளதாயிருந்தது. என்னவென்றால் இஸ்ரவேலருடைய மனமானது, திவ்விய சத்தியங்களைத் தாராளமாய் அங்கிகரிக்கத்தக்க விசாலமான புத்தியுள்ளதாயிருக்கவில்லை. ஆகையால் ஆவிக்குரிய காரியங்கள் புறம்பாக கண்ணுக்குத் தெரியக்கூடிய பொருட்களால் காட்டப்பட்டது. திருஷ்டாந்தமாக: ஆட்களையும் வீடுகளையும் அடிக்கடி சுத்திகரிக்கிறது,—பலிக்குச் சுத்தமான மிருகங்களைத் தெரிந்துகொள்வது,—பலி பழுதற்றதாயிருக்கவேண்டுமென்பது,—ஆசாரியத் தொழில் ஒருவகைப் பேருக்கு மட்டும் கொடுக்கப்பட்டது,—அவர்களை அடிக்கடி ஸ்நானம் செய்விப்பது ஆகிய இவைகள் குறைவில்லாத சமார்க்கத்தையும், தேவனுடைய பரிசுத்த லட்சணத்தையும் காட்டினது. மேலும் பலியிட வருகிறவன் பாவநிவாரணப் பலியின் தலைமேல் தன் கைகளை வைத்து தன் பாவத்தை அந்தப் பலியின் பேரில் சுமத்திவிட்டு அதைக் கொலலுவதும், அதின் உயிராகிய இரத்தம் தேவனுக்குமுன்பாகத் தெளிக்கப்படுவதும்,—பாவத்துக்குப் பலன், "இரண்டாம் மரணமாகிய" மீட்சியில்லாத மட்டற்ற தண்டனைதான் என்றும், தனக்குப் பதிலாக இன்னொரு பிரதிபலி செலுத்தப்பட்டாலொழிய மற்றப்படி அந்தத் தண்டனை நிவிர்த்தியாகமாட்டாதென்றும் காட்டினது. இப்படியாக பக்தியுள்ள இஸ்ரவேலனுக்கு, தான் மீறின நியாயப்பிரமாணத்தன் நீதியையும் பரிசுத்தத்தையும், தன் சொந்தக் குற்றத்தையும் அதற்கு தேவ இரக்கம் அவசியமாய் வேண்டுமென்பதையும் இந்த முன்னடையாளக் கிரியைகள் ஓயாமல் ஞாபகப்படுத்திககொண்டேயிருந்தது. இந்த ஆராதனையை உண்மையாய் நிறைவேற்றுகிற இஸ்ரவேலனுடைய மனதில் தேவ இரக்கத்தினாலே நம்பிக்கையுண்டாகும். அந்த நம்பிக்கை, அவனுக்குள் நன்றியையும், கீழ்ப்படிதலையும், அன்பையும் பிறப்பிக்கும்.

5. வெவ்வேறான இந்த ஏற்பாடுகள் மகத்தான நல்ல காரியங்களை முன்னறிவிக்கிறவைகளாயிருந்தது. இவ்வாகமத்துக்குத் திறவுகோல் என்றும், தேவாவியின் ஏவுதலால் எழுதப்பட்ட வியாக்கியானமென்றும் சொல்லப்படுகிற எபிரேயர் நிருபத்தினால்,—ஆசாரிய முறை, பலிகள், சடங்கு ஆகிய இவைகள், திவ்விய மீட்பரையும் அவருடைய மீட்பின் கிரியையையும் தீர்க்கதரிசன அறிகுறியாய்க் காட்டினது என்றறிகிறோம்.

இவ்வாகமத்தின் முக்கிய பிரிவுகளாவன.

I. பலவகையான பலிகளைக் குறித்த சட்டங்கள். தகனபலி (1 அதி); போசன பலி (2 அதி); சமாதானப் பலி (3 அதி); அறியாமல் செய்த பாவத்துக்குப் பலி (4 அதி); குற்ற நிவாரணப் பலி (5 அதி-6 அதி. 1—7); பலிகளைக்குறித்து ஆசாரியருக்குக் கற்பிக்கப்பட்ட பிரமாணங்கள். (6 அதி. 8 வா. முதல்-7 அதி. முடிய.)

II. ஆசாரிய ஏற்பாடு. ஆரோனும் அவன் குமாரரும் அபிஷேகம்பண்ணப்பட்டது. நாதாப் அபியூ செய்த பாவம். (8 அதி—10 அதி).

III. சுத்திகரிப்புக் கடுத்த சட்டங்கள். (11 அதி—22 அதி).

IV. பரிசுத்த பண்டிகைகள், பொருத்தனைகள், தசமபாகங்கள். (23 அதி—27 அதி.)

க. அதிகாரம்.

சர்வாங்கத்தகன பலிகள்.

---

2. வெவ்வேறான பலிகள் பலவிதமான சடங்காசாரங்களோடு கற்பிக்கப்பட்டிருக்கிறது. நோக்கம் என்னவென்றால், பாவி தேவனோடு ஒப்புரவாகிறதற்கடுத்த பெரிய பெரிய சத்தியங்களையெல்லாம் பூர்த்தியாய் உவமித்துக காட்டவும், தொழ வருகிறவர்களுடைய நானாவித குறைப்பாடுகளுக்கும் மன உணர்ச்சிகளுக்கும் திர்பதி செய்யததக்க பாவனை காட்டவுமே.

3. "செலுத்துவது" 2-ம் 3-ம் அதிகாரங்களிற் சொல்லியது போல இதுவும உறசாகக் காணிக்கைதான். ஆனால் இது சர்வாங்கத் தகனமாகவேண்டும். இது 4-ம் 5-ம் அதி-ல் சொல்லிய பாவநிவாரணப் பலிக்கும் குற்றநிவாரணப் பலிக்கும் வித்தியாசமானதாக, பாவத்தைக்குறித்துள்ள பொதுவான உணர்ச்சிக்காகச் செலுத்தப்பட்டிருக்கலாம்; அல்லது ஒருவன் தன்னை விசேஷித்த ஆளாக முழுதுமாய் தேவனுக்கு ஒப்புக்கொடுப்பதற்கு அடையாளமாகச் செலுத்தப்பட்டிருக்கலாம்.

"மந்தை" இங்கே சொல்லப்படுகிற காளை, ஆட்டுக் கடா, பறவை ஆகிய மூன்று வகைப் பலிகள், சனங்களுடைய ஏற்றத் தாழ்ச்சியான ஸ்திதிக்கு ஏற்றதாயிருந்தது. ஏனென்றால் தேவன் ஒருவனுக்கு "இல்லாததின்படியல்ல அவனுக்கு உள்ளதின்படியே அங்கிகரிக்கிறார்." (2 கொரி. 8: 12). மேலும் மேற்காட்டிய மூவகைப் பலிகளில் எதையாகிலும் தன்னிஷ்டப்படி தெரிந்துகொள்ளத்தக்க சுயாதீனத்தை தேவன் கொடுத்திருந்தது, இவன் செலுத்தும் பலியாகிய முன்னடையாளத்திலே யாதொரு விசேஷமில்லை, அத்தால் குறிக்கபபட்ட பொருள்தான் விசேஷமென்று அவன் கவனிக்கும்படி இவனை ஏவுகிறதாயிருந்தது.

5. "கொல்லக்கடவன்." அதாவது பலியைக் கொண்டுவந்தவனும் வழக்கமாய் பலியடிக்கிற லேவியரோடு சேர்ந்து கொல்லுவான்.

"தெளிக்கக்கடவர்கள்." பலியின் இரத்தத்தைத் தெளித்தது, பலியின் ஜீவனை தேவனுக்குக் கொடுத்ததற்குச் சரியாக எண்ணப்பட்டது.

படிப்பினை.

நாம் இந்தப் பலிகளைக்குறித்து வாசிக்கும்போது நம்முடைய பாவங்களை உணர்ந்து, தேவ அன்பையும், கிறிஸ்துவின் அகோர பாடுகளையும் தியானிப்போமாக. "என மூச்சுப் போகும் அந்தக் கடைசிக்கட்டிலும்! நீர் எனக்காயிறந்த கோலத்தைக் காண்பியும்." "இத்தனை பாடேன் பட்டீர்! என் இறையே என்னுலே இத்தனை பாடேன் பட்டீர்!"

Miscellaneous.

பொது வர்த்தமானம்.

நூற்றாண்டு அரங்கேற்றம். அமெரிக்காக் கண்டத்தில் தெல்பியா நகரத்தில் நடந்த பெரிய அரங்கேற்றம் சென்ற நவம்பர்மீ 10உ முடிந்தது. அத்தேதியில் எழுதப்பட்ட ஓர் கடிதத்திலிருந்து பின்வருவதை எடுத்துக் காட்டுகிறோம்.

உலகத்தில் பெருஞ் சந்தையென்று சொல்லத்தகும் நூற்றாண்டு அரங்கேற்றமானது நவம்பர்மீ 10உ யாகிய இன்று முடிகிறது. வந்த ஜனத்தொகையைக் கவனிக்குமிடத்து அது அனுகூலமாயிருந்ததென்றே சொல்லலாம். அது நடத்தப்பட்டுவந்த ஆறு மாசக் காலத்திலும் எண்பது லட்சம் பேர்வரையில் பணங்கொடுத்துப் பிரவேசச் சீட்டுப் பெற்றார்கள். இந்த அதிசய காட்சி பார்க்கவந்தவர்கள் தேசத்தின் எல்லாப் பாகங்களிலுமுள்ளவர்களே. அவர்களில் மிச்சமான பேர் தனித்தனியே போகவும் வரவுமாக 500 மைல் பிரயாணஞ் செய்திருக்கிறார்கள். இந்த அரங்கேற்றமானது அது நடந்த இடத்துக்குரிய தாய்மாத்திரம் இராமல் தேச முழுவதையும் அடித்த காரியமாயிருந்தது. தேசத்தின் நாலா திசையிலுமிருந்து பொருட்கள் கொண்டு வரப்பட்டது. தூரமான இடத்திலிருந்து வந்தவைகளே திருஷ்டி வேலைப்பாட்டைக் காட்டிற்று.

அங்கு கூடின ஜனங்களையும், அவர்கள் பிரயாணத்துக்கு அனுகூல சாதனமான புகை ரத ரஸ்தாவின் சிறப்பையும் பற்றிப் பின் வருவதை வாசித்தால் சந்தோஷமாயிருக்கும்.

சென்ற செப்தெம்பர்மீ பின் பாதியில் ஒன்றுக்கொன்று 90 மைல் தூரத்தில் இருக்கப்பட்ட நீயூயார்க்கு, பிலதெல்பியா என்னும் நகரங்களுக்கு இடையில் ஒன்றிலிருந்தொன்றுக்கு புகைவண்டி மார்க்கமாய்ப் பிரயாணஞ்செய்தவர்கள் 5 லட்சம் பேர். இவ்விரண்டு நகரங்களுக்கும் ஊடே நாள்தோறும் 60 புகை ரதங்கள் ஓடிக்கொண்டிருந்தபோதிலும் யாதொரு உயிர்ச்சேதமும் நேரிடவில்லை. பிலதெல்பியா நகரத்திலிருந்து பின்னும் அந்த இருப்புப் பாதை 300 அல்லது 400 மைல் வரை மேற்கே செல்லுகிறது. ஒரு நாள் இந்த ரஸ்தாவின் ஒவ்வொரு ஸ்தானத்திலும் கால் மணி நேரத்திற்கு ஒரு தடவை வண்டி கள் வந்துகொண்டேயிருந்தது. ஒரு வண்டிக்கு நூறு ஜனங்களடங்

கிய நூற்றுமுப்பது வண்டிகள் பூட்டப்பட்ட ஒரு பிரம்மாண்ட தொடர் ரதமும் அதில் ஓடினதுண்டு.

பிலதெல்பியா நகரத்தில், தண்டவாளங்கள் மேல் ஓட்டத்தக்க தெரு ரதங்களும் அவைகளின் உபயோகத்தை மிதமிஞ்சிக் காட்டிற்று.

எப்படியென்றால் செப்தெம்பர்மீ 28உ ஒரு பாதையில் மாத்திரம் ஓடிய வண்டியில் லட்சத்து இருபத்தையாயிரம் பேர் ஏறிப்போனார்கள். வேறொரு பாதை மார்க்கமாய் 75000 பேர் ஏறிப்போனார்கள். இவைகள் தவிர வேறு பாதைகள் வழியாய் வேறு ரதங்களில் ஏறிப்போனவர்களுமுண்டு. எல்லாம் பட்டணத்தினூடாகவே சென்று அரங்க சாலைக்குப் போக்கும் வரத்துமாயிருந்தது. இந்தக் காட்சி, தானி. 12: 4; "அநேகர் இங்கும் அங்கும ஓடி ஆராய்வார்கள். அறிவும் பெருகிப்போம்" என்ற வசனத்தை நினைப்பூட்டுகிறது.

துர்க்கி. துர்க்கி தேசத்தில் சமீபித்து நேரிட இருந்த யுத்தம் தேவனுக்கிரகத்தால் நிறுத்தலாகும்போல் காண்கிறது. கொனஸ்தந்திநோபுரியில் கூடிய ஆலோசனைச் சங்கத்தில் பல்காரியா மாகாணம் இரண்டு பிரிவாக்கப்படவேண்டுமென்றும், பாஸ்னியா, ஹர்சிகோவினு மாகாணங்கள் ஒன்றுடன் சேர்க்கப்படவேண்டுமென்றும், தீர்மானிக்கப்பட்டது. மூன்று கிறிஸ்தவ தேசாதிபதிகளும் நியமிக்கப்படுவார்கள். சர்வியாவின் எல்லை மாற்றப்பட்டு மண்டி நிகிரோவின் எல்லை பெரிதாக்கப்படும்,

அறியாவினு. அமெரிக்காவில் ஆக்ட்டன் பட்டணத்தில், ஒரு மரத்தை வாளால் அறுக்கும்போது, பக்கத்துச் சிராயும் ஒரு பலகையும் எடுத்தபின், வாட்காரர் மரத்தைப் புரட்டுகையில் ஒரு பெரிய தேரை அம்மரத்திலுள்ள ஒரு பொந்திலிருந்து தலையை நீட்டி, வாளுக்குச் சற்றே தப்பிற்று. மரம் அறுப்போர் அதைக் கண்டவுடன் பிரயத்தப்போனார்கள். அது மனிதனுடைய கைத் தண்டியில் தட்டையாய் இருந்தது. சற்றெண்ணிலும் பார்வை இல்லை. கீழே விட்டபோது நகர்ந்துபோக முயன்றது. இது இருந்த பொந்துக்குக் கீழே ஒரு அடி நீளம் தவிர மரத்தினுடைய மற்றப் பாகமெல்லாம் உறுதியாய் இருந்தது. இது கண்டுபிடிக்கப்பட்ட குற்றி, அடியிலிருந்து 4-வது அல்லது 5-வது துண்டாய் இருந்தபடியால், தரையில் இருந்து 50 அல்லது 60 அடி உயரத்திலிருந்திருக்கவேண்டும். அதற்குள் இந்தத் தேரை முற்றிலும் பொதியப்பட்டுப் போக்கு வரவுக்கு இடமற்றிருந்ததால், எந்த வகையாய் அது அதற்குள் சென்றிருந்ததென்பது மறைவாய் இருக்கிறது. ஒரு வேளை சிசுப் பிராயமுதல் மரத்தோடே வளர்ந்து 100 வயதுள்ளதாய் இருக்கலாம்.

இது அங்கே நுழைந்த தெப்படி? பிழைத்த தெப்படி?

புதுக் கண்காணிமார். மகாகனம்பொருந்திய கல்குத்தாக் கண்காணியாரவர்கள் நாளது வரை மார்ச்சுமீ 11உ ஞாயிற்றுக்கிழமை கனம் டாக்ட்டர் கால்டுவெல் ஐயரவர்களுக்கும், கனம் டாக்ட்டர் சார்ஜென்றையாவர்களுக்கும் தேவனுக்குச் சித்தமானால், கல்குத்தாவில், கண்காணிப்புப் பட்டங் கொடுக்கத் தீர்மானித்து இருப்பதாய் மகாகனம்பொருந்திய சென்னைபட்டணங் கண்காணியாரவர்களுக்குத் தந்தியில் பேசியிருக்கிறார்கள்.

கனம் டிப் ஐயரவர்கள். கடந்த வருஷத்தில் கனம்பொருந்திய டிப் ஐயரவர்கள் மரித்துப்போனதால் திருநெல்வேலி மிஷியோனுக்குப் பெரிய நஷ்டமுண்டாயிற்று. இவர்களுக்கு நேரிட்ட சுகவீனத்தைப்பற்றி யாவருக்குந் தெரியும். இங்கிலாந்தில் களைசேர்ந்து இரண்டு நாளுக்குப்பின் சென்ற அக்டோபர்மீ 15உ அவர்களுடைய நித்திய இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார்கள். கப்பல் பிரயாணத்தில் மிகவும் பெலவீன ஸ்திதியில் இருந்தபடியால் உயிரோடு இங்கிலாந்தில் போய்ச் சேர்வார்களென்று நினைக்க இடமிருந்ததில்லை. களைசேர்ந்து அவர்களுடைய பிள்ளைகளையும் இனத்தாரையுங் கண்டுகொண்டதும், அவர்களுடைய பிரேதம் சமுத்திரத்தின் அலைகளில் எறிந்து விடப்படாமல் அவர்கள் இனத்தாருடைய உடல்கள் அடக்கஞ்செய்யப்பட்ட மயான ஸ்தலத்திலேயே சேமிக்கப்பட்டதும் அவர்களுடைய வீட்டாருக்கும், சிநேகிதருக்கும் ஆறுதலாயிருந்தது.

திருநெல்வேலி மிசியோனுக்கு இவர்களுடைய மரணத்தையிட்டு மிகுந்த துக்கந்தான். வேத அறிவில் வல்லவர்கள். அவர்களுடைய ஊழியத்துக்குத் தங்களை யொப்புவித்து நடந்த விதம் எல்லாருக்கும் சிறந்த மாதிரி. பவுல் அப்போஸ்தலனைப்போல "ஒன்று செய்கிறேன்" என்று இவர்களும் தங்கள் ஊழியத்தைக்குறித்துச் சொல்லத்தக்கவர்களாயிருந்தார்கள். சுதேச சபையை சுய ஆதரவும் சுய நடத்துதலும் உள்ளதாக்குவதில் இருந்த வருத்தங்களை நன்றாய் உணர்ந்திருந்தார்கள். சுய அபிப்பிராயத்தைப் பலமாய் சாதித்தபோதிலும் சங்கத்தாருடைய ஏற்பாடுகளுக்கு முற்றிலும் இணங்கினார்கள். கடந்த மூன்று வருஷக் காலங்களிலும் அவர்கள் பார்த்துவந்த முக்கியமான வேலை சுதேச குருமார் வரிசைக்கு ஆட்களைப் படிப்பிப்பதே. இந்த வேலைக்குச் சிறந்த யோக்கியதையுடையவர்களாயிருந்தார்கள். ரோமான் மார்க்கத்துக்குச் சார்பான கொள்கைகள் சற்றென்கிலும் இவர்களிடத்தில் இடையாது. இங்கிலாந்து சபையின் கொள்கைகளைப் பலமாய் ஸ்தாபித்து வந்த சத்தியவேத பக்திவைராக்கியன் என்று இவர்களைக்குறித்துச் சொல்லலாம்.

1855ல்ஹ மிசியோனைச்சேர்ந்து 21 வருஷக்காலம் உழைத்திருக்கிறார்கள். சீமைக்குப்போய்த் திரும்பி வந்து ஐந்து வருஷங் கூடச் செல்லாததால் பின்னும் அவர்கள் அநேக வருஷம் உண்மையுள்ள ஊழியஞ் செய்ய இடம் இருக்குமென்று நம்பியிருந்தோம். என்றாலும் தேவன் இவ்வளவு காலம் அவர்களை இவ்வுலகத்தில் வைத்திருந்ததற்காக நாம் அவருக்குத் தோத்திரஞ் செலுத்தி இன்னமும் அவர்களைப்போன்ற தேவ ஊழியக்காரரை எழும்பச்செய்யும்படி தேவனை நோக்கிச் செபிப்போமாக.

சிவகாசிச் சேகரம் தேவசகாயம் அந்தோனி உபதேசியாரின் மரணம்.

1876 ம்ஹ செப்தெம்பர்மீ 25உ சாட்சியாபுரத்தில் மணம் அடைந்த இவருடைய சுருக்கமான சங்கதி இவரைப்போல் தேவ ஊழியத்தை நிறைவேற்றி வருகிறவர்களுக்கும் மற்றக் கிறிஸ்தவர்களுக்கும் எழுப்புதலாயும் மாதிரியாயும் இருக்குமென்று நினைத்து, அதைப் பின் வருமாறு எழுதி அறிவிக்கிறோம்.

இவர் உரோமான் மார்க்கத்தில் பிறந்தவர். ஜாதியில் பறைப் பிள்ளை. பக்தியிலும், படிப்பிலும், குணபாகங்களிலும் இறந்தவர். ஆனதால், எம்மதஸ்தரும், உலகப்பிரகாரமான இவருடைய தாழ்ந்த வரிசையை எண்ணுமல், இவரை அருமையாய் மதித்துவந்தார்கள். தூதன கிறிஸ்தவனான சாட்சியாபுரம் பிராமணஜபர், தம்முடைய குணப்படுதலுக்குப்பின், அவர் தமக்கு வலதுகரமபோல் இருந்தார் என்றார். தனிரவும் அவருடைய மரணதினத்தில் இப்பிராமணஜபர் அவருடைய சிறு குழந்தையை ஒருகையால் ஏந்தி அணைத்துக்கொண்டு, மறுகையால் அவருடைய இரண்டு பெரிய பையன்களை அணைத்து, அழுகை அமர்த்தினதும் கவனிக்கத்தக்கது.

இவருக்குக் கல்வித்திறமை மெத்த உண்டு. இங்கிலீஷ் நன்றாய்த் தெரியும். தமிழில் மிகவும் தேறினவர். வேதசத்தியங்களடங்கிய உருக்கமான பாட்டுகள் கட்டியிருக்கிறார். மலையாளம், தெலுங்கு, சமஸ்கிருதம் முதலிய பாஷைகளையும் ஓர் அளவாய்க் கற்றிருந்தார். நமது நாட்டில், சற்பாஷைகளிலும் சிலைகளிலும் காணப்படும் பூர்வ அட்சர வாசகங்களை வாசிக்கக் கற்றிருந்தார். கழுகுமலையிலும், சாத்தூரிலும் அப்படியே சில வாசகங்களைக் கண்டு, எழுதிக் கொண்டுவந்து அவற்றின்பொருளை விபரித்ததுண்டு.

அவருடைய நடக்கையில் நாம் கவனிக்கத்தக்க குறிப்புகள்;

(I) பட்சமும், சகதாபமும். இதைத் தம்முடைய வீட்டிலும், சபையிலும் அடிக்கடியாய்க் காட்டிவந்தார். விவாகத்துக்குமுன், இவர் ஸ்திரீசாலைக்குறித்துப் பொதுவாய் நம்புதல் இல்லாமல் பேசுவார். அதினால் இவருடைய விவாகமனவி என்ன சந்தோஷத்தை அனுபவிக்கப் போகிறாள்? என்று சந்தேகிக்க இடமிருந்தது. என்றாலும் மரியாளென்றஒரு உத்தமமனவியை அவர் மணஞ்செய்து, இருவரும் பிணக்கின்றி சமாதானமாய் வாழ்ந்துவந்தார்கள். ஒருதாளாவது தமது மனவியைப்பார்த்துச் சூடானவார்த்தை சொன்னார் என்றுவது, அவளைக்கை நீட்டினார் என்றுவது, சத்தம் உண்டானது இல்லை. தமது தேசத்தற்கு இது ஒரு பெரியகாரியந்தான். ஒரு ஸ்திரீ மரித்துப்போகிறபோது தன் கணவனுடைய கையை எடுத்து, என்னை ஒருதாளும் அடித்திராதகையென்று முத்தமிட்டாளாம்.

பணியடிப்பட்டிச் சபையார் இவர்கள் இருபேருடைய முயற்சியால் அதிகத்தேர்ச்சி அடைந்திருக்கிறார்கள். இவர்கள் அந்தச்சபையாரோடு அதிகமாய்க் கலந்துகொண்டு, அவர்களுடைய இன்ப துன்பங்களில் ஒத்தணர்வுகாட்டி அவர்களைக்குறித்துக் கவலைப்பட்டு வந்ததே அந்தச் சபையாருடைய விர்த்திக்குக் காரணம்.

(II) பணஆசையின்மை. போர்டிங் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயராய் இருக்கும்போது, சம்பளமும், பரீட்சை உபகாரமுமாக

௴ ரூ 19 வரை வருமானம் இருந்ததால், பனையடிப்பட்டிக்கு அவரை மாற்றுகையில், நஷ்டம் இராதபடி, கனம்பொருந்திய மேடோஸ் ஐயரவர்கள் முந்தி ௴ ரூ 15 கொடுப்பதாகவும், கமிட்டிமார் அனுமதி பெற்றுக்கொண்டபின் கூட்டிக்கொடுப்பதாகவும், சொன்னபோது, ரூ 15 தமக்குப்போதுமென்றும், அதிகம் வேண்டுவது இல்லை என்றும் சொல்லிப்போட்டார். ஒருகாலத்தில் அவருடைய மீதியான நேரத்தை ஒரு துரைசாணிக்குத் தமிழ்ப் படிப்பிப்பதில், செலவிட்டுவந்த அவருடைய பிரயாசத்துக்காக அந்த அம்மாள் அவருக்கு உபகாரஞ்செய்ய விரும்பினபோது, அதைப் பெற்றுக்கொள்ளச் சம்மதியாமல், கனம்பொருந்திய மேடோஸ் ஐயரவர்களுடைய கட்டாயத்தின் பேரில் சம்மதித்தார். தமது மரணத்துக்குப்பின் தமது மனைவிக்குக் கஷ்டம் இராதபடிக்கு ௴ 5 ரூ உபகாரங் கிடைக்கத் தக்கதாகக் கைம்பெண் சங்கத்துக்கு உயர்ந்ததொகை கொடுத்துச் சேர்ந்திருந்தார். சுதேச சங்கத்துக்கு உதாரமாய்க் கொடுத்து வந்ததோடுகூட, அவர் உபாத்தியாயராய் இருக்கையில், சர்க்கார் பரீட்சை வருமானத்திலும் பத்தில் ஒன்று கொடுத்துவந்தார்.

(III) சத்தியத்தைச் சொல்ல அஞ்சாமை. இந்தவிஷயத்தில் அவர் நமக்குச் சிறந்த மாதிரியே. ஒவ்வொருவரும் உண்மையான தீர்மானஞ்செய்துகொண்டு, சத்தியத்தை வெளியிடவேண்டிய நேரத்தில் பயமின்றி வெளியிடவேண்டும். தேவபயத்தோடு கூடிய இப்படிப்பட்ட சுயாதீனம் சுதேச சபையின் நன்மைக்கு அவசியம் வேண்டியது.

இவர் நாளடவில், தமக்குண்டாயிருந்த பலவிதமான சுகவீனங்களாலும், இயல்பாகவும், மரணத்தை எப்போதும் எதிர்பார்த்தவர்போல் இருந்தார். ஓர்சமையத்தில் இவருடைய புஞ்சை விதைப்பாகிறபோது, சமீபத்தில் நின்றவர்களைப் பார்த்து, இந்த வித்து முளைத்துப் பலனைக் கொடுப்பது நிச்சயம்; ஆனால் நாம் அந்தப்பலனை அனுபவிப்போமோ? இல்லையோ? என்பது, நமக்குச் சந்தேகமாய் இருக்கிறது என்றார். சென்ற ஏப்பிரில் ௴ அவர் வியாதிப்படுக்கையில் இருந்தபோது தம்முடைய மைத்துனனுக்கு எழுதிய கடிதத்திலும் இவர் எப்போதும் மரண ஆயத்தமுடையவராய் இருந்தாரென்று தோன்றுகிறது. அதாவது "நான் கடந்த இரண்டு மூன்று வருஷங்களாய் வியாதிப்படுக்கையில் இருக்கத் தேவன் சித்தங்கொண்டிருக்கிறார். இனிமேல் எவ்வளவுகாலம் பூலோகத்தில் இருக்கக் கர்த்தர் எனக்குக் குறித்திருக்கிறாரோ, தெரியவில்லை. சுருக்கமாய் இருக்கும் என்றே எனக்குத் தோன்றுகிறது. என் போராட்டம் தேவகிருபையால் செவ்வையாய் நடந்திருப்பதாலும், நான் யாரை நம்பியிருக்கிறேன் என்று எனக்குத் தெரியும் ஆதலாலும், எனக்குச் சாவைப்பற்றிய பயம் இல்லை. ஒருவகையாய் உம்முடைய வீட்டுக்காரியங்களையும் நான் இதுவரையும் பார்த்துவர நேரிட்டிருந்தது. ஆனால் என் காரியங்கள் இப்படியிருப்பதால், அதை இதுமுதல் வீட்டுக்குத் தலைமையாய் இருக்கிற உமதுபேரில் இறக்கிவைக்கிறேன்" என்பது.

அவர் இருந்த பனையடிப்பட்டி ஊர்ச் சபையாரிடத்திலும் இதற்குமுன் இங்கே மரித்திருக்கிற கனம்: எவரி ஐயர் கனம்: பேரம்புர்க் ஐயர் முதலானவர்களைப்போல, உங்களுக்குச் சாட்சியாக நான் மரிக்க வந்திருக்கிறேன். நீங்கள் குணப்பட்டு நல்ல கிறிஸ்தவர்களாகவேண்டும் என்று புத்திசொல்லி வந்திருக்கிறார். பனையடிப்பட்டியில் வயிற்றுநோவு அகோரமானபோது, சாட்சியாபுரத்துக்கு மிஷன் ஆஸ்பத்திரியில் மருந்து சாப்பிடவருகையில், சபையார் இடத்தில் தம்முடைய

மரணத்தைக்குறித்து நிச்சயமுடையவராய், இனிமேல் இங்கே என்னைக் காணமாட்டீர்கள் என்றார். பனையடிப்பட்டியில் அவர் பின்னிட்ட கடைசி ஞாயிற்றுக்கிழமையில், அவர் ஆபிரகாமுக்கு நேரிட்ட சோதனையைக்குறித்துச் செய்த பிரசங்கம் தமக்கும் தமது வீட்டாருக்குமே ஏற்றதாயிருந்ததென்று, தமக்கு நேரிட்ட உபத்திரவத்தால் உணர்ந்துகொண்டார். வழியில் மனைவியிடத்திலும், நீ இனிமேல் என்னை நம்பாதே. இவ்வளவுகாலந்தான் நாம் வாழ்ந்திருக்கத் தேவனுக்குச் சித்தம். தேவனை நம்பு. பக்தியாய்ப் பிள்ளைகளை வளர்க்கப் பார். இப்படிச்செய்வாய் என்று நம்புகிறேன் என்றார். சாட்சியாபுரத்திலும் வயிற்றுநோவால் அவஸ்தைப்படுகையில், கனம்பொருந்திய மேடோஸ் ஐயரவர்கள் மரணத்துக்கு ஆயத்தமாய் இருக்கிறீர் அல்லவா என்று கேட்டபோது, ஆம் என்றார். இரக்ஷகருடைய பாடுகளை நினைத்து பொறுமையாய் இருக்கவேண்டும். ஏசுநாதர் தேவசித்தத்துக்கு இணங்கினதுபோல, நீரும் உம்மை ஒப்புவிக்கவேண்டும் என்று சொன்னபோது, செபசிந்தையாய் "உம்முடைய சித்தமே ஆவதாக ஐயா" என்றார். வேதனை மிஞ்சினபோது, இதுவே தேவன் என்னை அழைக்கும்படி அனுப்பின மரண தூதன். நாளைக்கு நான் தப்பாமல் மரிக்கப்போவேன் என்றார். மரணதினத்தில் அவரைப் பார்க்கவந்த ஸ்திரீகளைப் பார்த்து, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக; நான் ஆண்டவர் இடத்துக்குப்போகிறேன் என்றார். அவருடைய நம்பிக்கையைக்குறித்து அறிய விரும்பி, உமக்கு இரக்ஷிப்பைகுறித்துப் பூரண நிச்சயம் இருக்கிறதா? இரக்ஷகரை உறுதியாய்ப் பிடித்திருக்கிறீரா என்று கேட்டபோது, பாவிக்கு இரக்ஷகரையல்லாமல் கதியேது என்றார். சமீபத்தில் நின்ற ஒருவர், "நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்" என்று சொல்ல, அவர் "ஆதலால் நான் வெட்கப்படுகிறதில்லை" என்று சொல்லிக்கொண்டார். மரிக்க சில நிமிஷங்களுக்குமுன் தமது மனைவியைக் கிட்டத்தில் கூப்பிட்டுக் கொஞ்சநேரம் கையைப்பிடித்துச் செபம்பண்ணிக்கொண்டேயிருந்து விட்டுவிட்டுச் சற்றுநேரத்திற்குப்பின் மரணம் அடைந்தார். மனைவி மக்களைவிட்டு பிரிகிறோமே என்கிற கலக்கம் இவருக்குள் சற்றென்கிலும் இல்லை. இவர் 15 வருஷக்காலம் போர்டிங் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயராயும், பனையடிப்பட்டி சபையில் ஏறக்குறைய $1\frac{1}{2}$ வருஷம் உபதேசியாராயும் இருந்து, உண்மையோடும் ஆவலோடும் தமது கடமையை நிறைவேற்றிவந்தார். அவரோடு பழகினவர்கள் "அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்." என்று இவருடைய நன்னடக்கையினிமித்தம் சொல்லத்தக்கதாயிருக்கிறது. சுதேச கிறிஸ்தவர்களாகிய நாம் இவருடைய நல்மரணத்துக்காகக் கடவுளை ஸ்துதித்து, அவருடைய மாதிரியையும் பின்பற்றுவதோடு இன்னமும் நம்முடைய சபையில் இப்படிப்பட்ட உத்தம தேவஊழியக்காரர் எழும்பும்படி செபம்செய்வோமாக.

பெபுருவரிமீ நாள் 28. தைமீ 21உ முதல், மாசிமீ 19உ வரை.

வாரம்.	இங்கிலிஷ் தேய்தி.	தமிழ்த் தேய்தி.	அன்றாடகத் தியானம்.
வி	1	உக	என் முகத்தைத் தேடுங்கள். சங்கீதம் 27:8. [நீதி. 29: 8.
வெ	2	உஉ	ஞானத்தில் பிரியப்படுகிறவன் தகப்பனை மகிழப்பண்ணுகிறான். [4:3.
ச	3	உங	விண்ணப்பம்பண்ணியும் பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள். யாக்.
ஞா	4	உச	தேவனிடத்தில் சேருங்கள். யாக். 4: 8.
தி	5	உரு	உங்களை நடத்துகிறவர்களுக்கு அடங்குங்கள். எபி. 13: 17.
செ	6	உசு	நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள். 1 தெச. 5: 21.
பு	7	உஎ	மாம்சமெல்லாம் புல்லைப்போலிருக்கிறது. 1 பேதுரு 1: 24.
வி	8	உஅ	கர்த்தரில் பலப்படுங்கள். எபேசியர் 6: 10.
வெ	9	உகூ	ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்துங்கள். 1 பேதுரு 2: 5.
ச	10	க	பாவங்களை நமக்கு மன்னிப்பதற்கு அவர் உண்மையுள்ளவர்.
ஞா	11	உ	எப்பொழுதும் நன்மைசெய்ய நாடுங்கள். 1 தெ. 5: 15. [1யோ. 1: 9.
தி	12	ங	தேவரீர் என் இளவயதின் அதிபதி. எரேமியா 3: 4.
செ	13	ச	கர்த்தர் தாழ்த்துகிறவரும் உயர்த்துகிறவருமானவர். 1சாமு. 2: 7.
பு	14	ரு	மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும். சங். 19: 12.
வி	15	கூ	என்னுடைய வீடு செபவீடாயிருக்கிறது. லூக். 19: 46.
வெ	16	எ	விசுவாசத்தினால் வராத யாவும் பாவமே. ரோமர் 14: 23.
ச	17	அ	விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு. 1 தீமோ. 4: 12.
ஞா	18	சு	எல்லாமனிதரோடும் சமாதானமாயிருங்கள். ரோ. 12: 18.
தி	19	௧௦	பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாதிருங்கள். ரோ. 12: 2.
செ	20	கக	உங்கள் நன்மை தூஷிக்கப்பட இடங்கொடாதிருங்கள். ரோ. 14:
பு	21	கஉ	நன்மையைப் பற்றிக்கொண்டிருங்கள். ரோமர் 12: 9. [16.
வி	22	கங	ஆவிக்கேற்ற படி நடந்துகொள்ளுங்கள். கலாத். 5: 16.
வெ	23	கச	பிள்ளைகள் என்னிடத்தில்வருகிறதற்கு இடங்கொடுங்கள். மத். 19:
ச	24	கரு	இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள். மத். 5: 8. [14.
ஞா	25	கசு	ஒருவர் பாரத்தை ஒருவர் சுமவுங்கள். கலாத். 6: 2
தி	26	கஎ	அக்கிரமத்துக்குத் திரும்பாதபடி எச்சரிக்கையாயிரும். யோபு 36:
செ	27	கஅ	எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக்கா. நீதி. 4: 23. [21.
பு	28	கஙூ	இயேசுக்கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள். ரோமர் 13: 14.

விசேஷித்த நாட்கள்.

4. செக்சகெசிமா ஞாயிறு.
11. கின்குவ கெசிமா ஞாயிறு.
13. அமாவாசை.
14. லெந்தென்னும் நாட்களில் முதலாம் நாள்.
18. லெந்தென்னும் நாட்களில் முதலாம் ஞாயிறு.
25. லெந்தென்னும் நாட்களில் இரண்டாம் ஞாயிறு.
27. பௌரணமி.

நற்போதகம்.

ங. மார்ச்சுமீ. ௬அஎஆ.

கொரிந்தியரின் முதலாம் நிருபம். I—III அதி.

(முதல் மூன்று அதிகாரங்களின் சம்பந்தம்.)

கொரிந்து சபையார் தங்கள் போதகர்களைக் குறித்து மேன்மை பாராட்டவும், கலைக்கியானத்தைம் சாதுரிய வித்தையையும் முக்கியப் படுத்தவும் தக்க இயல்புடையவர்களாயிருந்தார்கள்.

பவுல் அப்போஸ்தலன் இந்த எண்ணத்திற்கு, தேவன் மானிடரை ஈடேற்றும் விஷயத்தில் உலக ஞானத்தையாவது, பலத்தையாவது பிரயோகியாமல், சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவை தாழ்மையுள்ளவர்களுக்கு பிரசங்கிப்பதையே கருவியாக வழங்குகிறார் என்று கூறுகிறார். II அதி. அவர் தாம் கொரிந்தியர் மத்தியில் தத்துவ சாஸ்திரிபோலும் சாதுரியப் பிரசங்கிபோலும் வராமல், சிலுவைப் பிராணதியாகேசராகிய கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறவனாயும் தேவ பலத்தையே சாருகிறவனாயும் வந்து நீதி மார்க்கத்தைத் தெரிவித்ததாகச் சொல்லுகிறார். ஆயினும் தேவாவியின் போதனையை அடைந்தவனாகவும் தேவ பக்தர்களை கிரகித்துக்கொள்ளத்தக்கவிதமாயும் அவர் பிரசங்கித்ததினாலே அவருடைய போதனை ஞானத்தைச் சார்ந்ததாகவேயிருந்தது. அவர்கள் கிறிஸ்து ரட்சகரைப் பற்றிய பேரறிவில் குழந்தைகளாயும், பல கட்சிகளைச் சேர்ந்திருந்த வகையில் மாம்சசிந்தையுள்ளவர்களாயும் இருந்ததால் அந்த திவ்விய ஞானத்தை அதிகமாய்ப் போதிக்க ஏதுவில்லாமல் இருந்தது. பவுல், அப்பொல்லோ முதலானவர்கள் தேவதாசர்களாயிருந்ததால் அவர்களைக்குறித்து மேன்மைபாராட்டுகிறதற்கு இடமேது! ஆயினும் அவர்களுக்குப் போதகர்களாயிருக்க விரும்பினவர்கள், தாங்கள் தேவனுக்கு உடன் வேலைக்காரராயிருந்ததால், தாங்கள் முக்கிய உத்தரவாதமுடையவர்களென்று தாங்கள் நினைக்கக்கடவர்கள். திருச்சபையாகிய சிறந்த மாளிகையை ஒன்றான அஸ்திபாரத்தின் மேல் எப்படிக் கட்டினார்களென்று அக்கினி போன்ற நியாயத்தீர்ப்பு நாளில் விளங்கும். ஆம், விசுவாசிகள் தேவனுடைய ஆலயமாகவேயிருக்கிறார்கள்—குருக்கள்மார் அவர்களுக்கு ஊழியக்காரர்—சகலமும் அவர்களுடைய பக்திவிர்த்திக்கு அநுகூலமான வைகள்.

II. அதிகாரம். பவுல் அப்போஸ்தலன் கொரிந்துவுக்குப் பண்ணின முதல பிரயாணம் அப். 18-ம் தில் காட்டியிருக்கிறது. அவர்

அக்கே பதினேட்டு மாசம் வரையில் (கி. பி. 53, 54,) தாமதித்தார். மூன்று காலு வருஷத்துக்குப் பிறகு இந்த நிருபத்தை எழுதினார். 2-ம் வா. "இயேசுக்கிறிஸ்துவை" பவுல் அப்போஸ்தலன் இயேசுக்கிறிஸ்துவைப் பற்றியல்ல, இயேசுக்கிறிஸ்துவையே மூக்கியப்படுத்துகிறார். உலக இதிகாசத்தில் விளங்கா நின்ற கிறிஸ்து ரட்சகர் உலக முடிவு பரியந்தம் தமது பக்தருடன் இருக்கும் ஜீவாயகராயும் விளங்குகிறார். உயிரோடிருக்கும் ஒரு சிநேகிதரைப்பற்றி அவனே அறிவோம் என்று சொல்லுவோமேயல்லாமல், அவனைக் குறித்து அறிவோம் என்று சொல்லமாட்டோமே.—3-ம் வா. "பலவீனத்தோடும்" இதை அப்போஸ்தலன் தன் சரீர பலவீனத்தைக் குறித்து மாத்திரமல்ல, தமக்கு நியமிக்கப்பட்ட மேன்மையான ஊழியத்தைச் செய்வதில் தமது பலவீனத்தை உணர்ந்தவராயும் சொல்லுகிறார்.—

7-ம் வா. "இரகசியமான தேவ ஞானத்தையே" ரோமர் நிருபத்திலும், எபிசேயர் நிருபத்திலும் பக்தியில் தேறினவர்கள் விஷயத்தில் விளங்கின எட்டாத தேவ ஞானத்தைப் பார்க்கலாம்.—9-ம் வா. "தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு" என்பது, பரம மகிமைகளையல்ல, சுவிசேஷ இராச்சியபாரத்தின மகிமையைக் குறிக்கும். (2) பவுல் அப்போஸ்தலன் பழைய ஏற்பாட்டின் வசனங்களைச் சரியாய் எடுத்தாளாவிடினும், அவைகளின் பொருளைக்கொண்டு தமது நியாயத்தைத் திருஷ்டாந்தப்படுத்துகிறார்.

படிப்பினை. போதகன்மார் உலக சாஸ்திரங்களினாலும் சொல்லலங்காரத்தினாலும் தங்கள் போதனையைக் கேட்கிறவர்களுடைய மனதிற்கு இன்பத்தையுண்டாக்கலாம், ஆயினும் கிறிஸ்துவைப் பிரசங்கியாவிடில் அவர்களுடைய ஆத்துமாக்களைக் குணப்படுத்தச்கூடாது. என்றும் பிரசங்கங்களை நன்றாய் யோசித்து ஜெபத்தஞ்செய்யவேண்டியது அவசரமே.—

மத்தேயு 13: 52. "தேறின வேதபாரகன் எவனும் தன் பொக்கிஷத்திலிருந்து—"

பிரசங்கி 12: 10. "இதமான வார்த்தைகளைக் கண்டுபிடிக்க பிரசங்கி வகைதேடினான்."

III-ம் அதிகாரம்.

6-ம் வா. "அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான்." பவுல் அப்போஸ்தலன் கொரிந்துப்பட்டணத்தைவிட்டு புறப்பட்டவுடனே அப்பொல்லோ என்பவன் அப்பட்டணத்திற்குப் போய், அவன் சாதாரியப் பிரசங்கத்தினாலும் ஞானமார்க்கத்தைப்பற்றி அவனுக்குண்டாயிருந்த பூரண அறிவினாலும் அவ்விடத்தில் காட்டப்பட்டிருந்த கிறிஸ்த சபைக்கு அதிக நன்மைசெய்ததாகத் தோன்றுகிறது. அப். 18: 27. அவன் தீமோத்தேயுவைப்போலும், லோவைப்போலும் பவுல் அப்போஸ்தலனுக்கு உதவிசெய்கிறவனாய் மாத்திரமிராமல், சுவாதீனப் பிரசங்கியாயிருந்தது, அவன் பெற்றிருந்த விசேஷ வரப்பிரசாதங்களினால் மற்றப் போதகன்மார் எல்லாரிலும் சிறந்தவனாய் விளங்கியிருப்பான். அவன் பவுல் அப்போஸ்தலனே மிஞ்சக்கூடாவிடினும், சாதாரியம் நியாயத்தை எடுத்தாளாக்கும் திறமை இவைகளில் ஒருவேளை அவனிலும் சிரேஷ்டமுடையவனாய் இருந்திருப்பான். பரி. கிளெமெந்து என்பவர் சில வருஷங்களுக்குப் பின்பு கொரிந்தியருக்கு எழுதிய ஒரு நிருபத்தில்

அப்பொல்லோ என்பவனே பவுலப்போஸ்தலனுக்குச் சமனாக்கி, அவன் மற்றெல்லாப் போதகன்மாரிலும் சிரேஷ்டமானவன் என்பதாய்த் தன்டிருக்கிறது.

ஒரு வயலில் உழுகிறவனும், விதைக்கிறவனும், அறுக்கிறவனும் வேலைசெய்தாலும், இவர்களில் ஒருவனுவது அறுப்பு தன்னுடையதென்று சொல்லமாட்டான். சிறு பிள்ளைகளும்கூட அறுப்புக்கு உதவிசெய்கிறவர்களாயிருக்கலாமே.

12-ம் வா. இவைகளைக் கட்டினால். "பொன், வெள்ளி, புல், வைக்கோல் என்பவை மூக்கியமாய் உபதேசங்களைக் குறிக்கும். இந்த உபதேசங்களைக் கேட்டு குணப்பட்டவர்களையும் ஒருவேளை குறிக்கிறதாயும் இருக்கும்.

சில போதகன்மார் அஸ்திபாரத்திலேயே நிற்கிறார்கள். அவர்கள் அதின்மேல் மாளிகையைக் கட்டுகிறதில்லை. தங்கள் ஜனங்கள் பக்திவிர்த்தியடைவதற்கேற்ற முயற்சிகள் செய்கிறதில்லை.

சிலர் கிறிஸ்துவாகிய ஒரே அஸ்திபாரம் உண்டென்று ஒப்புக்கொண்டாலும் அதின்மேல் அவர்கள் கட்டி எழுப்புகிற மாளிகை சரியானதல்ல. உரோமான் சபையாளாப்போலும் இரோக்க சபையாளாப்போலும் ஆத்துமத்திற்கு நாசத்தையுண்டாக்கத்தக்க அநேக தப்பறையான உபதேசங்களைப் போதிக்கிறார்கள்.—

15-ம் வா. (a) "அவனவனுடைய வேலைப்பாடு." என்பது அவனவன் கட்டினதைக் குறிக்கும். (b) "நாளானது" கர்த்தருடைய நாள், நியாயத்தீர்ப்புநாள். (c) "அக்கினியானது பரிசோதிக்கும்." இது நரக அக்கினியுமல்ல, உத்தரிக்கும் ஸ்தலமாகிய அக்கினியுமல்ல, நியாயத்தீர்ப்பாகிய அக்கினியே. புல், வைக்கோல் மாத்திரமல்ல. பொன் வெள்ளியும் அந்த அக்கினியால் பரிட்சிக்கப்படுமாகையால் இது நியாயத்தீர்ப்பாகிய அக்கினியையேகுறிக்கும். 2 தெச. 1. 8. மல்கி. 3. 2, 3; 4. 1.

15. "அதுவும் அக்கினியில் அகப்பட்டுத் தப்பினதுபோல". ஒன்றான அஸ்திபாரத்தின்மேல் கட்டுகிற போதகன் சர்வ பக்தர்களுக்கும் கிடைக்கும் தேவ ஈவாகிய இரட்சண்யத்தைப் பெறுவான். ஆனால் அவன் உண்மையுள்ள போதகனுக்கு கூலி ஒன்றையும் பெறமாட்டான்.

16-ம் வா. இதில் பரிசுத்த ஆவி தேவஸ்தானம் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. 1 கொரி. 6. 19; 2 கொரி. 6. 16. எபே. 2. 22.

"தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள்." தேவாலயம் என்கிற உபமானத்தைப்பற்றிச் சில விபரங்கள் காட்டப்படுகின்றன.

17-ம் வா. "தேவன் கெடுப்பார்." உலகத்திற்குரிய தேவாலயத்தைத் தீட்டுப்படுத்துகிறவர்களுக்கு மரண ஆக்ஞை விதிக்கப்பட்டிருந்தது. உபா. 28. 48. ஆவிக்குரிய ஆலயத்தைத் தீட்டுப்படுத்துகிறவர்களுக்கும் அவ்வாறே ஆவிக்குரிய மரணம் நேரிடும்.

"நீங்களே அந்த ஆலயம்." மூலபாஷையின் கருத்தின்படி "ஆகையால் நீங்கள் பரிசுத்தராயிருக்கிறீர்கள்" என்றிருக்கவேண்டும்.

18—20. அவர்களுக்குள் கள்ளப்போதகர்களும் போதகர்களாகவேண்டுமென்று விரும்பினவர்களுக்கேற்ற எச்சரிப்பு இந்த வாக்கியங்களில் அடங்கியிருக்கிறது.

21, 22-ம் வா. "எல்லாம் உங்களுடையதே." போதகன்மார் நிருச்சபையை சத்திய வழியில் நடத்துகிறவர்களாயன்றி அதை ஆளு

கிறவர்களல்ல. தேவ செயல்களெல்லாம் பக்தர்களுடைய நன்மைக்கென்று நடக்கின்றன. உலகமானது கிறிஸ்த பக்தர்கள் கிரீடங்களைச் சம்பாதிக்கத்தக்க யுத்த களமாயிருக்கின்றது. ஜீவனானது அவர்கள் தேவனுக்கு ஊழியஞ்செய்யத்தக்க காலமாயிருக்கிறது. மரணமானது அவர்கள் கடவுளை மகிமைப்படுத்துவதற்கு ஏற்ற சமையமாயிருக்கிறது.

23-ம் வா. "கிறிஸ்து தேவனுடையவர்." அவர் பிதாவின் ஒரே பேறான குமாரன்; மானிடரை ஈடேற்றும்பொருட்டு பிதாவினால் அபிஷேகஞ்செய்யப்பட்ட அருள்நாதன். லூக். 9. 20. வெளி. 11. 15; 12. 10.

IV. அதிகாரம்.

1—5. அப்போஸ்தலன் போதகன் மாரை மதிக்கவேண்டியவிதத்தைப்பற்றி அவர்களுக்குச் சொல்லுகிறார். அவர் மனுஷனுடைய தீர்ப்பைக்குறித்துக் கவலைப்படவுமில்லை. தாமே தம்மைக்குறித்து தீர்ப்புச் சொல்லிக்கொள்ளவுமில்லை. ஆகையால் அவர்களும் சகலமும் பிரத்தியட்சமாய் விளங்கும் காலமாகிய கர்த்தரின் பிரசன்னநாள்வரையும் ஒன்றைக்குறித்தும் தீர்ப்புச்சொல்லாமல் இருப்பதே உத்தமம் என்கிறார்.

"தேவனுடைய இரகசியங்கள்." புதிய ஏற்பாட்டில் இரகசியம் என்று வழங்கிய பதம் முன்னொருகால் மறைவாயிருந்து இப்போது வெளியாக்கப்பட்ட சத்தியத்தையாவது இப்போது மறைவாயிருந்து இனிமேல் வெளிப்படப்போகிற சத்தியத்தையாவது குறிக்கும். 2: 7. ரோ. 16: 25, 26.

4. "என்னிடத்தில் நான் யாதொரு" இங்கிலீஷ் வேதாகமத்தில் பழய இங்கிலீஷ் பாஷை நடையை அநுசரித்து எழுதியிருப்பதைக் கவனிக்குங்கால் தமிழ் திருப்புதலுக்குச் சரியாயிருக்கிறது என்று அறியலாம்.

5. "அவனவனுக்குரிய புகழ்ச்சி" பூர்வ சபையில் சில போதகன்மாருக்கு மட்டுமிஞ்சிய புகழ்ச்சி செலுத்தப்பட்டது. சபையில் எல்லாருக்குமுன்பாக பகிரங்கமாய்க் கைதட்டிப் போதகன்மாரைப் போற்றுகிறவர்களைக் கிறிசொஸ்தம் என்பவர் கண்டித்திருக்கிறார்.

8-ம் வா. "திருப்தியடைந்திருக்கிறீர்களே." பவுல் அப்போஸ்தலன் இதை எதிர்நிலைப் பொருளாய்ச் சொல்லுகிறார். நீங்கள் உங்கள் ஓட்டத்தை முடித்து பந்தையப் பொருளைப் பெற்றுக்கொண்டவர்கள் போலும், நீதியின்பேரிலுள்ள பசிதாகத்தைத் தீர்த்துக்கொண்டவர்கள்போலும், நீதியின் இராச்சியத்தையடைந்தவர்கள்போலும் நடக்கிறீர்கள் என்கிறார்.

"நீங்கள் ஆளுகிறவர்களானால்" இதை அப்போஸ்தலன் மனஊக்கத்தோடும் ஜெப வாஞ்சையோடும் சொல்லுகிறார்.

9. "கடைசியானவர்களாய்." கொடுங்கோல் அரசு நடந்து வந்த உரோமாபுரியில் மரணாக்கினைவிதிக்கப்பட்டவர்கள் துஷ்ட மிருகங்களோடு போர்செய்யவும் ஒருவரோடொருவரும் போர்செய்யத்தக்கதாக விளையாட்டுச் சாலைகளுக்கு கடைசியாக கொண்டுபோகப்படுவார்கள்.

"பலவீனர்." 2. அதி. 3—12 வரை காண்க.

"எங்கள் கைகளினாலே வேலை செய்து." அப். 18 3—20. 34.

"தகப்பன்மார் உங்களுக்கு இல்லையே." பவுல் என்பவருக்குப் பின்வந்த போதகன்மாராகிய அப்பொல்லோமுதலானவர்கள் பிள்ளைகளுக்குக் கற்பித்து அவர்களை விசாரிக்கிறவர்களாயிருந்தார்களேயன்றி பிதாக்களுக்குரிய பட்சமும் சிலாக்கியமுமுடையவர்களுமல்ல.

19. "நான் சீக்கிரமாய் உங்களிடத்திற்கு வந்து." பவுல் அப்போஸ்தலன் 57ம் வருஷத்தின முடிவில் கொரிந்துப் பட்டணத்திற்கு இரண்டாம்விசை போனார். போய் மூன்று மாதம் இருந்தார். அப். 20. 3.

வட இந்தியாவுக்கும், தென்னிந்தியாவுக்கும் இருக்கும் ஒற்றுமைப் பேதகங்கள்.

(தொடர்ச்சி.)

அதற்கப்பால் நானும் சிந்து நாட்டிலுள்ள என்னுடைய சிநேகிதராகிய ஒரு டெப்பியுட்டி கலெக்ட்டரும் ஜபல்பூருக்குப் போய் அங்குள்ள தொழிற் சாலையைப் பார்த்து, 12 மைல் தூரத்துக்கப்பாலிருக்கிற வெள்ளைக்கல் மலையைப் பார்க்கப் போனோம். இந்த மலைக்கு ஊடாக நருமதை ஆறு ஓடுகிறது. அதில் படவிலேறி ஒன்றரை மைல் தூரம் போய்ப் பார்த்தோம், அது மெம்ப அழகான காட்சி. நாங்கள் போன தூரமட்டும் ஆற்றின் இரு கரையிலும சுவர் எழுப்பினாற்போல வெள்ளைக்கல் பாறைகள் ஒரே தொடர்ச்சியாய் 20,—30 அடி உயரத்திற்குச் செங்குத்தாயிருக்கின்றன. இப்படியிருப்பதினாலே விலங்குகள், மனுஷர்கள் சந்தடியில்லாமல் மிகவும் அமைதலாய் மனதுக்குச் சந்தோஷத்தையும் எழுப்புதலையுங் கொடுக்கத்தக்கதாய் இருக்கின்றது, இந்தப் பட்டினம் மத்திய மாகாணத்தைச் சேர்ந்தது. தமிழர் அநேகர் அங்கே வசிக்கிறார்கள். காந்தார் என்னுங் காட்டுச் சனங்களைக் கண்டேன்.

அதற்கப்புறம் பம்பாய்க்குப் போனேன். இந்நகரி இந்து தேசங்களிலுள்ள எல்லாப் பட்டணங்களிலும் ஜனப்பெருக்கத்திலும், வியாபார முயற்சியிலும், செல்வத்திலும், சிறப்பிலும் விசேஷமானது. இது பெரிய வியாபார ஸ்தலமானதினால் ஆப்பிரிக்கர், சீனர், இத்தாலியர் இப்படிப் பற்பல தேசச் சனங்களையும் அங்கே பார்க்கலாம். அதின் ஜனத் தொகை 8 லட்சம். 6, 7. மெத்தை வீடுகள் அநேகம். அவைகள் காசிப்பட்டணத்திலுள்ள வீடுகளைப் பார்க்கிலும் சிறப்பாயும் சௌக்கியத்துக்கேதுவானவைகளாயும் இருக்கின்றன. அங்குள்ள அநேக கிறிஸ்தவர்களையும் சில இந்து பிரபுக்களையுங் கண்டேன். பார்சிக்காரர் அங்கே மிகுதி. அவர்கள்தான் வியாபாரம் கைத்தொழில் விர்த்தியிலும், கல்வியிலும், நாகரீகத்திலும் அதிகமாய் முன்னுக்கு வந்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவருடைய நிசவுத் தொழில் இயந்திரச்சாலைக்குப் போனேன். ஒரே சூத்திரத்தினால் அநேகஞ் சூத்திரங்கள் இயக்கப்பட்டு பருத்தியை ஒன்றில் அரைத்து, ஒன்றில் வெட்டி, வேறொன்றில் நூற்று, மற்றொன்றில் பாவோடி அதற்கப்புறம் 500, க்கு அதிகமான தறிகளில் ஏக சமையத்தில் துணி நெய்யப்படுகி

றது. இவைகளையெல்லாம் ஆட்டுகிறது ஒரே யந்திரந்தான். பின்னும் கப்பல் அறைமுகத்தையும், கப்பல்கள் செய்யும் தறவுகளையும், படகில் ஏறி யுத்தக் கப்பல்களையும் பார்த்தேன்.

அதைவிட்டுப் பூனுவுக்குப் போய் அப்பால் சென்னபட்டணம் வந்து சேர்ந்தேன். பூனு மராட்டியருடைய விசேஷித்த ஸ்தலம். இதைமட்டும் பற்பல இடங்களையும் அதின் காட்சிகளையும் பற்றி விசேஷித்துப் பேசினேன். இப்போது பற்பல நாட்டிலுமுள்ள ஜனங்களுடைய உடை நடை பாவனையைப் பற்றி சற்றுச் சொல்லுகிறேன். மகமதியர் இதுகாரியங்களில் சற்றேறக்குறைய ஒன்றுபோலவே இருக்கிறார்கள். ஆனால் இந்தக்கள்தான் பற்பல இடங்களில் பற்பலவிதமாயிருக்கிறார்கள். வடமேற்கு மாகாணங்கள், பஞ்சாப், அயோத்தி நாடு முதலிய இடங்களிலுள்ள இந்தக்கள் துலுக்கனைப் போலவே சற்றேறக்குறைய உடையில் காணப்படுவார்கள்.

வடதேசத்தார் தாடி வளர்க்கிறது மிகவுஞ் சாதாரணம். பங்காளிகள் சாதாரணமாய் சோமன் அங்கவஸ்திரந் தரித்து காலுக்கு ஐரோப்பிய பாதரட்சையும் மேல்சோடும் போட்டுக்கொள்ளுகிறார்கள். பம்பாய், மராட்டிய ஜனங்களைப்போலாவது, தென்னிந்தியாவிலுள்ள ஜனங்களைப்போலாவது, குடுமி வளர்க்காமலும், துலுக்கனைப்போல முழுவதும் மொட்டையடியாமலும் தலை ரோமத்தைக் குறுகத் தரித்துக்கொள்ளுவார்கள். அதேகர் ஐரோப்பியரைப்போலவே தலையைச் சிலிக்கொள்வதைப் பார்க்கலாம். தலைக்கு தலைப்பாகை தரியாமல் மொட்டைத்தலையாய் வெளியே போவார்கள். சிலர் மாத்திரம் ஐரோப்பியருடைய சிறு கருப்புக் குல்லாவாவது கடைகளில் செய்த விற்கிற தலைப்பாகையாவது வாங்கித் தரித்துக்கொள்ளுவார்கள். அவர்களுக்குள் பெண்கள் வெளியே வருகிற வழக்கமில்லை. இதைப்பற்றி அவர்களுக்குள் மற்றெல்லாவிடங்களிலிருக்கிறதைப் பார்க்கிலும் அதிகக் கட்டு. தாழ்ந்த ஸ்திதியிலுள்ள பெண்கள் தவிர மற்றைய பெண்களையாவது பெண் குழந்தைகளையாவது வெளியே பார்ப்பது அருமை. வீட்டுக்குள் அவர்கள் எப்போதுமிருப்பார்களானதினால் வெளியே நடமாடுகிற பெண்களுக்கு வேண்டிய கல்ல ஆடைகள் அவர்களுக்கு வேண்டிய அவசியமில்லை. இந்தக் கட்டுப்பாட்டினாலே மிகவும் கண்ணுக்கு கல்வியில் தேறின கொஞ்சப் பெண்கள் தவிர மற்றப்படி பெண்கள் சாதாரணக் கல்வி தென்னிந்தியாவில்தான் அதிகமாய் விர்த்தியடைந்திருக்கிறது. வடமேற்கு மாகாணங்களிலும் பஞ்சாப்பிலும் பெண்களுக்குச் சற்று சுயாதீனமிருப்பதினாலே அவர்கள் சற்று வித்தியடைந்திருப்பார்களென்று நிச்சயிக்க ஏதவுண்டு. பங்காளிகள் தேகத்தில் கோழைகள், ஆனால் படிப்பில் மிகுந்த புத்திக்கூர்மையுடையவர்கள். வட இந்தியாவிலுள்ள ஜனங்களோ இந்த இரண்டு விஷயங்களிலும் மூற்றும் மாறுகவேயிருக்கிறார்கள். அவர்கள் காத்திர தேகமும் படிப்பில் மந்தப்புத்தியுமுள்ளவர்கள். இதினாலே பஞ்சாப் தொடுத்த கல்குத்தாமட்டும் பங்காளிகள் கவர்னமென்று சேவில்லை, உத்தியோகங்களில் அதிகமாய் அமர்ந்திருக்கிறார்கள். வடக்கே இமையகிரிதொடங்கி தெற்கே நாகப்பூர்மட்டும் அவர்களை விசேஷித்த இடங்களிலெல்லாம் பார்க்கலாம். கல்குத்தா சர்வகலாசாலை உலகத்திலுள்ள எல்லாச் சருவகலாசாலைகளிலும் பெரிதென்று சொல்லப்படுகிறது. வடதேசத்தில் அதேக பிராமணர்களுக்கு வாசிக்கமுதலாய்த் தெரியாது. பம்பாய்ப் பக்கங்களில் கூர்ஜாதிகளும், மராட்டியரும் மிகுதி. இவர்கள் தலைப்பாகை ஒன்றுதவிர மற்ற விஷயங்களிலெல்லாம்

தென்னிந்தியாவிலுள்ள ஜனங்களைப்போல உடுத்துகிறார்கள். கூர்ஜாதிகள் அதேகர் பார்சுக்காரருடைய தொப்பியைப்போல தங்கள் தலையில் தரித்துக்கொள்ளுகிறார்கள். மராட்டியருடைய தலைப்பாகை அதிகப் பெரிதாயும் அகலமாயுமிருக்கும். கொஞ்சங்குறைய ஒரு சிறுகுடை அவ்வளவு அகலமிருக்கும். வாவரச் சிலர் இந்த அகலமும் பளுவுமான தலைப்பாகையைத் தள்ளிப்போட்டு சென்னபட்டினத்தார் மாதிரி கட்டுகிறார்கள். பெண்கள் சற்றேறக்குறைய நம்முடைய நாட்டுப் பெண்களைப்போலவே உடையில் தோற்றுகிறார்கள். பார்சு, இந்து, கிறிஸ்தவப் பெண்களிலனேகர் உயர்ந்த கல்வியில் அதிகமாய்த் தேறியிருக்கிறார்கள். என்னே உயசரித்த ஒரு பெரிய இந்து டாக்ட்டருடைய பெண்மக்களுடைய கல்வியையும் நாகரீகத்தையும் பார்த்து அதிக ஆச்சரியப்பட்டேன். தேகத்தையும் வஸ்திரங்களையும் சுசியாய் வைப்பதில் தென்னிந்தியாவிலுள்ள மேல்குலத்தவர்கள் வடக்கேயுள்ளவர்களைப் பார்க்கிலும் புகழப்படத்தக்கவர்கள். குளித்த உடம்பில் அழுக்கு வஸ்திரங்களை அருவருப்பின்றி தரித்துக்கொள்வது ழக்கம்.

ஜாதிக்கட்டு தென் இந்தியாவில்தான் குடிகொண்டிருக்கிறது. பம்பாய்மட்டும் நாங்கள் அதிகமாய்ச் சாப்பிட்டதும், சகவாசஞ்செய்ததும் கிறிஸ்தவர்களோடல்ல, இந்துக்களோடேதான். அவர்களுக்குள் சம்பந்த விஷயத்தைப்பற்றி பற்பல வேற்றுமைகளிருந்தாலும், போசனபானங்களிலும் நீட்டு என்கிற விஷயங்களிலும் நம்முடைய தேசத்து ஜனங்களைப்போல அவ்வளவு வேற்றுமை காட்டுகிறதில்லை. அப்படிப்பட்ட பெருந் தன்மையுள்ள இந்துக்களை தென் இந்தியா முழுவதிலும் காண்பது அரிது. தேசோபகாரம், தேசாபிமானம், சுயாதீனப் பிரியம், பரோபகாரம் என்னும் சிறந்த இலட்சணங்களில் அடிமைத்தன ஆவியையுடைய தென் இந்தியாவிலுள்ள ஜனங்கள் மிகவும் குறைந்தவர்கள். அந்தியரை உபசரிக்கும் சுபாவம் எவ்விடத்திலும் சிறந்த இலட்சணம். இந்துக்களுக்கு அந்தச் சுபாவமிருக்கிறது; ஆனால் தென் இந்தியாவிலுள்ள வீண் ஜாதிநீட்டுப் பயித்தியம் மற்றவர்களை அவர்கள் எப்படிப்பட்டவர்களாயிருந்தாலும் குறைவாய் எண்ணவும், தீழ்ப்பாய் நடத்தவும் ஏவுகிறது. நம்முடைய தேசத்திலுள்ள ஜனங்கள் ஒருவரையொருவர் விரோதிக்கிறதற்கு இதே பெரிய மூகாந்திரம். ஆகையினாலே அந்தியரை உபசரிக்கும் சிறந்த இலட்சணத்தில் வடக்கேயுள்ளவர்கள் நம்மைவிட மேலானவர்கள். இங்கேயிருக்கிறதுபோல அநேக ஜாதிகளாவது ஒரு ஜாதிக்குள் அநேக உட்பிரிவுகளாவது வடதேசத்தில் அதிகமாய் இல்லை. அங்கே பிராமணர்களுடைய அதிக்கிரமம் இங்குபோல அதிகமாய் இல்லை. இங்குபோல் பிராமணர்கள் மாத்திரம் உயர்ந்த உத்தியோகங்களில் அதிகமாய் அமர்ந்திருப்பதும் இல்லை. புத்த மதத்தினாலோ அல்லது பிரமோஜமாஜ் என்கிற மதத்தாருடைய முயற்சியினாலோ கூடியித்தானியினுடைய கொள்கையினாலோ மகம்மதியருடைய கொடுங்கோன்மையினாலோ கிறிஸ்து மத அங்கிலேயக் கல்வி விருத்தியினாலோ என்னத்தினாலோ பிராமணர்களுடைய நிலைமை முன்னைவிடத் தற்காலத்தில் அதிகமாய் மாறியிருக்கிறது. கல்வி, கனம், அந்தஸ்து முதலானவைகளில் சூத்திரர்கள் பிராமணருக்குச் சரியாகவேயிருக்கிறார்கள். பிராமணர்கள் அநேகர் மிகவும் தாழ்வான வேலை செய்கிறார்கள். தென் இந்தியாவில் சாதாரண சனங்களுடைய நாகரீகத்துக்குப் பிராமணர் முறையே பலத்த தடையென்று சொல்லலாம். இந்ததேசம் முழுவதிலும் மதவிஷயத்தில் பெரிய மாறுதல் நடக்கிறது. ஐரோப்பிய மிஷ

னெரிமார்களுடைய முயற்சிகளினாலும், சற்கார், மிஷன் பாடசாலைகளில் படித்துக்கொடுக்கும் கல்வியினாலும், இந்துமதத் தப்பறைகள் நாளுக்குநாள் எடுபட்டுப்போகிறது. ஐரோப்பிய சாஸ்திரம் படித்தவர்கள்; இந்துப் புராணங்கள், பூமிசாஸ்திரம், வானசாஸ்திரம் எல்லாம் பழங்கிழவிகளுடைய கட்டுக்கதையென்று தள்ளிவிடுகிறார்கள். 3000 ஆண்டு காலமாய் நிலைபெற்றிருந்த இந்து மதமும் அதின் வேதங்கள், வேதாந்த சாஸ்திரங்கள் எல்லாம் வேரோடே பிடுங்கப்பட்டு விழுகின்றது. கிறிஸ்துமார்க்கம் அங்கிலேய பாஷையின் மூலமாகவும் தேசமெங்கும் பிரகாசிக்க உரோமை இராச்சியத்திலுண்டான மாறுதல்போலவே இங்கேயும் அஞ்ஞான இருள் நாளடவில் நீங்கிப்போகிறது. கல்வியில் தேர்ந்த அநேகர் இந்துமதக் கொள்கைகளை உள்ளாக வெறுத்து வெளியில் அனுசரிக்கிறவர்கள்போல காணப்படுகிறார்கள். இந்த விஷயத்தில் பங்காளிகள் வெகுதூரம் மாறியிருக்கிறார்கள். படித்தவர்களுக்குள் விபூதி பூசுகிறதும், பட்டைநாமம் போடுவதும் காண்பது அபூர்வம். இந்துமார்க்கத்தைப்பற்றிய அபிமானம் கட்டோடே அநேகருக்குள் அற்றுப்போயிற்று. சிலர் ஒரு மார்க்கத்தையும் ஏற்றுக்கொள்ளாமல் நிரீச்சுரவாதிகளாயிருக்கிறார்கள். மற்றவர்கள் பிரமோ மார்க்கமென்ற ஒரு புதுமார்க்கத்தை ஸ்தாபித்திருக்கிறார்கள். இது 1828 ம் ஆண்டுத்தில் இராம் மோகனராய் என்பவரால் இந்துமதத் தப்பறைகளைச் சீர்திருத்தவேண்டுமென்ற நோக்கத்தோடு ஏற்படுத்தப்பட்டது. இவர் கோரானையும், கிறிஸ்து வேதங்களையும், ஆராய்ந்து கிறிஸ்துமார்க்க உபதேசங்களைப்பற்றி ஒரு அருமையான பிரபந்தம் செய்தார். இவர் 1833ம் ஆண்டு இங்கிலாந்துக்குப் போய் ஜீவித்துப்போக அந்தச் சீர்திருத்தம் விருத்தியடையாமல் தாழ்ந்துபோயிற்று. 1841 ஆண்டு பாபு தேவேந்திரனாத்தாகோர் என்பவர் தலைமையாக ஏற்பட்டு இந்துச் சமைய புஸ்தகங்களை ஆராய்ச்சி செய்யும்பொருட்டு தத்துவபோதினி சபையென்னப்பட்ட ஒரு கூட்டத்தை நியமித்தார். இவரும் இக்கூட்டத்தாரும் பிரமோ மார்க்கத்துக்கு நாலு வேதங்களும் ஆறு சாஸ்திரங்களுமே ஆதாரமென்று ஏற்படுத்தி, தாங்களாயும் தாங்கள் காசிக்கு அனுப்பின நாலு சமஸ்கிருத பண்டிதர்களாலும் ஆராய்ச்சி செய்ததில் இந்துவேத சாஸ்திரங்கள் விக்கிரகாராதனையையும் அதற்குச் சார்பான அத்துவிதக் கொள்கையையும் போதிக்கிறதென்று தள்ளிவிட்டார்கள். அதற்கப்புறம் 1850 ஆண்டுத்தில் மனுஷன் உலகத்தையும் அதின் சிருஷ்டிகளையும் ஆராய்கிறதினால் தேவனைப்பற்றியறிந்து கொள்ளலாமென்று தத்துவமதக் கொள்கைகளை ஸ்தாபித்தார்கள். 56 ஆண்டுத்தில் மனுஷன் இயல்வேதத்தினாலே தன் புத்தியைக்கொண்டு ஆண்டவனையும் மத காரியங்களையும் கிரகித்துக்கொள்ளலாமென்று போதித்தார்கள். இப்படி அதின் கொள்கைகள் நேரத்துக்கொரு விசை மாறிக்கொண்டு வந்தன. 61 ஆண்டு முதல் இந்த மார்க்கத்தில் இரண்டு கட்சிகளுண்டாகி ஒரு கட்சிக்காரர் பாபுதேவேந்திரனாத்தாகோர் என்பவனைச் சேர்ந்து இந்துமதத்துக்குச் சார்பான முறைமைகளை அனுசரித்துவருகிறார்கள். மற்றொரு கட்சிக்காரர் பாபுகேஷப் சந்தர்சன் என்பவனைச் சேர்ந்து இந்துமத ஆசாரங்களெல்லாவற்றையும் சமூலமாய் விட்டுவிட்டார்கள். இவருடைய தப்பறைக் கொள்கைகளாவன.

1வது. அருள்வேதம் மனுஷருக்கு அகத்தியமே இல்லை. இயல்வேதமே போதும்.

2வது. மனுஷனுடைய பாவத்துக்கு மன்னிப்பே இல்லை. ஒவ்

வொரு பாவமும் தண்டிக்கப்படவேண்டும். தண்டித்த பிற்பாடுமாத்திரம் மனுஷன் தன்னுடைய புண்ணிய கருமங்களினாலே தன்னை இரக்ஷித்துக்கொள்ளக்கூடும். நித்திய தண்டனை அபத்தமென்று சொல்லுகிறார்கள்.

3வது. கிறிஸ்துநாதர் மனுஷன், தெய்வமல்ல. ஆனால் எல்லா மனுஷரிலும் மகா புண்ணியாத்துமா. தேவனுக்கும் மனிதனுக்கும் மத்தியஸ்தர் இருப்பது அவசியமில்லை.

இந்தக் கொள்கைகள் ஆரம்ப கிறிஸ்து திருச்சபைக்கு விரோதிகளாயிருந்த நாஸ்திகர்னியோ பிளேற்றோனியர் மனிக்கேயருடைய கொள்கைகளைப்போலவேயிருக்கிறது. இவைகளுக்கு ஆட்சேபம் சொல்ல நேரமில்லை. இந்த மதமானது அநேக விஷயத்தில் கிறிஸ்துமார்க்கச் சத்தியங்களைத் திருடிப் போதிக்கிறது.

ஜெப ஆராதனை ஒழுங்கில் கிறிஸ்தவர்களைப்போலவே செய்து பரமண்டலச் செபம் முதலிய செபங்கள் சொல்லிப் பிரசங்கஞ்செய்வார்கள். இந்த மார்க்கம் நிலையற்றதும் தப்பறைகளுள்ளதுமாயிருப்பதினால் அது விர்த்தியடைகிறதில்லை. நான் பார்த்த இடங்களில் இந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் முன்னைவிடத் தொகையில் அதிகமாய்க் குறைந்திருக்கிறார்கள். மதவிஷயத்திலும் நாகரீக விஷயத்திலும் நம்முடைய தேசத்தை முன்னுக்குக் கொண்டுவருவது அவர்களுடைய ஆசை. இதற்காக அவர்களை அதிகமாய்ப் புகழவேண்டியது. யாவற்றையும் ஆராய்ந்து நலமானதைப் பிடித்துக்கொண்டு கிறிஸ்துமார்க்கச் சத்தியங்களை அவர்கள் ஏற்றுக்கொள்ளும்படியாக கருணைநிறைந்த கடவுள் கிருபை செய்வாராக.

முடிவுரையாக நான் மேலே சொன்ன காரியங்களில் கவனமாய் வாசித்து அதினால் நீங்கள் நன்மையடையவேண்டுமென்பது என்னுடைய ஆசை. நீங்கள் என்னைப்போல பிரயாணிகள் சொன்னதைக் கேட்டும் பூமிசாஸ்திரம் முதலானதுகளை வாசித்தும் இந்தக் காரியங்களை ஒருவாறு அறிந்துகொள்ளக்கூடும். ஆனால் இவைகளைக் கண்ணாரப் பார்த்தாலொழிய மற்றப்படி அதிக உபயோகமில்லை. பற்பல தேசங்களையும் இடங்களையும் அவைகளின் சிறந்த காட்சிகளையும் நாலாவித ஜாதி மனுஷனையும் அவர்கள் உடைநடை பாவனை பாஷைகளையும் போய்க் கவனித்துப் பார்ப்பதினால் கல்விப் பெருக்கமும் புத்திதீக்ஷண்யமும் விசாலமும் உண்டாகும்.

மேலும் நான பூனாவில் சில இந்துப் பிரபுக்கள் கேட்டுக்கொண்டதின்பேரில் "ஜாதிகளின் ஒற்றுமை" என்ற காரியத்தைப்பற்றி இங்கிலீஷில் பிரசங்கம் செய்தேன். அதில் ஜாதியார் பற்பல நாட்டாராயும் பாஷைக்காரராயுமிருந்தாலும் அவர்கள் அங்கிலேயனைப்போலவே ஒருவருக்கொருவர் அந்நியொந்நிய ஐக்கியமாயிருக்கவேண்டுமென்றும் அப்படி இருப்பதற்கு ஐந்து ஏற்பாடுகளைக் கையாடவேண்டும் என்றும் பிரசங்கித்தேன். அவைகளில் மூன்றைமாத்திரம் விசேஷித்துச் சொல்லுகிறேன்.

1வது. இந்துக்கள் நம்முடைய தேசத்தில் அதிகமாய்ப் பிரயாணம்பண்ணவேண்டியது.

2வது. அங்கிலேயருக்குள் இருக்கிறதுபோல பற்பல நாட்டிலிருந்தும் சிலர் காலாகாலங்களில் விசேஷித்த இடங்களில் ஒன்றுகூடி நம்முடைய தேசத்தின் பொது நன்மைகளைப்பற்றிப் பேசவேண்டியது.

3வது. நம்முடைய தேசத்தாரெல்லாருக்கும் பொதுவாக ஒரே

மத்திய இடத்திலிருந்து அங்கிலேய பாஷையில் ஒரு பத்திரிகையும் பற்பல சுதேச பாஷையில் பத்திரிகைகளும் அச்சிட்டுப் பிரசுரஞ் செய்து நானு இடங்களுக்கும் அனுப்பவேண்டியது.

இந்த ஏற்பாடுகளைக் கையாடினால் ஒற்றுமை சற்றென்கிலும் இல்லாத இந்துக்களுக்குள் ஒற்றுமை இருக்குமென்று வற்புறுத்திப் பேசினேன். இவைகளைக் கூடிவந்திருந்த எல்லாருஞ் சரியென்று ஒப்புக்கொண்டு சந்தோஷமாய்க் கேட்டார்கள். பிரசங்கம் முடிந்த பிற்பாடு அந்தகரத்திலுள்ள கல்வியிலும் தேசாபிமானத்திலும் சிறந்த பிரின்ஸிப்பல் சதுரமீன் சில கவனிப்புகள் சொன்னார்.

2வது. ஏற்பாட்டைப்பற்றி அது மெத்த நல்ல காரியந்தான். ஆனால் சென்னை சமஸ்தானத்திலிருந்து பிரதிநிதிகள் போகும்படியாக நான் ஜனங்களுக்குப் பேசவேண்டுமென்றும் இந்தியாவின் தென் அந்தமாகிய திருநெல்வேலியிலிருந்தும்கூட பிரதிநிதிகள் போகவேண்டுமென்றும் வற்புறுத்திச் சொன்னார். பிரசங்கம்பண்ணின நான் திருநெல்வேலிக்காரனென்று அவருக்குத் தெரியாது. திருநெல்வேலி ஜில்லாவைச்சேர்ந்த நான் என் சொந்த நாட்டாரை அபிமானத்தோடு இந்த ஏற்பாடுகளை ஏற்றுகொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

1வது. ஏற்பாட்டிற்கண்டபடி பிரயாணம்பண்ணுவதினால் நம்முடைய தேசத்தாருக்குள்ளே அதிகப் பாசமும் ஐக்கியமும் உண்டாவதற்கு ஏதுவாயிருக்கிறது. அதை நான்தானே பரீட்சித்துப் பிரயாணத்தின் பலன்களை அனுபவித்தவன். ஆக்ரா, டில்லி முதலிய இடங்களிலுள்ள சில சிநேகதரை என்னுடைய இனத்தாரைப்போல வே எண்ணியிருக்கிறேன். இந்தவிதமாகப் பிரயாணத்தினால் பற்பல நாட்டார் ஒருவருக்கொருவர் இருக்கப்பட்ட வெறுப்பு நீங்கி ஐக்கியத்துக்கும் அன்புக்கும் இடமுண்டாகிறது. அங்கிலேயர் சனசம்பந்தக் கட்டிலும், தேசாபிமானத்திலும், நாகரீகவிஷயத்திலும் தேறியிருப்பதற்குப் பிரயாணம் பண்ணிவருவதே முக்கிய காரணம். இதைப் பெரிதான நன்மைகள் நம்முடைய தேசத்துக்கும், நம்முடைய ஜனங்களுக்கும் உண்டாகும்படியாக நம்மைவிட, நாகரீகத்திலும், கல்வியிலும் சிறந்திருக்கும் அங்கிலேயரைப்போலவே தேசாந்திரப் பிரயாணஞ்செய்து அவர்களுடைய மாதிரியைப் பின்பற்றுவோமாக.

Life of Arch Bishop Cranmer.

கிரான்மர் சிரேஷ்ட கண்காணியார் சரித்திரம்.

(தொடர்ச்சி.)

இவ்வாறு கிரான்மருக்கும் அவர் சிநேகிதர்களுக்கும் விரோதமாய்க் கூறப்பட்ட ஆக்ஞைத்தீர்ப்பு ஒரு வருஷம்வரையும் நிறைவேற்றப்படவில்லை. அவர்கள் இம்மட்டும் பாப்புவின் அதிகாரமின்றியே காரியத்தை நடப்பித்து வந்திருந்தபடியால், ரோமாபுரியிலிருந்து அதிகாரப்பத்திரம் வருகிறவரையில் காத்திருக்கவேண்டியதாயிற்று. இந்த ஒரு வருஷக்காலமும் காவலிலடைபட்டிருந்த கண்காணிமார்கள் அனுபவித்த கஷ்டம் கொஞ்சமல்ல. சேஷுர்த்தத்துக்கு அவசிய

மானவைகள் முதலாய் அவர்களுக்குப் போதுமான அளவு கொடுக்கப்படவில்லை. என்றாலும் கிரான்மர் என்பவருடைய சீவிய சரித்தாந்தத்தை யெழுதின ஒருவர் குறிப்பித்திருக்கிறபடி, உலகம் கொடுக்கக்கூடாததும் எடுக்கக்கூடாததுமான திவ்விய ஆறுதல்களே அவர்கள் தம் உள்ளத்தில் அனுபவிக்கிறவர்களாயிருந்தார்கள். அவர்கள் நம்பியிருந்த தேவன் இந்த ஆபத்துக் காலத்தில் அவர்களைக் கைவிடவில்லை. "அவர்கள் எப்படகத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகவில்லை. கலக்கமடைந்தும் மனமுறிவடையவில்லை. துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படவில்லை. தாழ்த்தள்ளப்பட்டும் மடிந்துபோகவில்லை" என்று பவுல் அப்போஸ்தலன் சொன்னதுபோல அவர்களும் சொல்லக்கூடியவர்களாயிருந்தார்கள். இவ்வாறு அவர்கள் மனுஷ உதவி எவ்வளவேனும் இல்லாதவர்களாயிருந்தும், கர்த்தருடைய சித்தத்துக்கு முற்றும் தங்களைக் கையளித்து அவருக்குள் நல் நம்பிக்கையுள்ளவர்களாய், தங்களைப்போல துன்பப்பட்டவர்களுக்குத் தைரியஞ்சொல்லி ஆறுதல்படுத்திக்கொண்டுவந்தார்கள். அவர்கள் காவலிலடைபட்டிருந்தபொழுது தங்களுக்கிருந்த காலத்தை வீணே கழித்தவர்களுமல்ல. இலத்திமர்க் கண்காணியார் அதற்குள் புதிய ஏற்பாடு முழுமையையும் ஏழுவிசை சாவதானமாய் வாசித்து, தமது விசுவாசத்துக்கு ஆதாரமான கோட்பாடுகளை ஆராய்ந்து தெளிந்துகொண்டுவந்தார். ரிட்லிக் கண்காணியார் நூல்கள் எழுதுவதில் அரிய ஊக்கத்தோடு முயற்சி செய்துகொண்டிருந்தார். சிரேஷ்ட கண்காணியார் கார்டினருக்கு விரோதமாய்ச் சாக்ரமெந்தின்பேரில் எழுதியிருந்த நூல்களுக்குச் சார்பாய் நியாயமெடுத்துக் காட்டுவதில் தளராமுயற்சியாயிருந்து, தாம் விரும்பிய பிரகாரம் மரணத்துக்கு முன் அந்த நூலை முடித்ததுமல்லாமல், லத்தின் பாஷையில் அதற்கு சேர்த்தியான மொழிபெயர்ப்பு ஒன்றுஞ் செய்து பிரசித்தப்படுத்தினார்.

இதற்குள்ளாக பாப்புமார்க்கத்தார் எதிர்பார்த்திருந்த அதிகாரப் பத்திரம் ரோமாபுரியிலிருந்து வந்து சேர்ந்தது. அது வந்துசேர்ந்ததோடு சிரேஷ்ட கண்காணியாருடைய விசாரணை மறுபடியும் தொடங்கிற்று. விசாரணை தொடங்கின சமையத்தில் சிரோசெஸ்டர் நகரத்து புரூக்ஸ் கண்காணியார் ஒரு பிரசங்கஞ்செய்து, சிரேஷ்ட கண்காணியாரை இழிகுலத்திற் பிறந்தவனென்றும், தாழ்வான நிலைமையிலிருந்து மகா தாழ்மைக்கு விழுந்தெழும்பினவனென்றும், மேன்மையிலிருந்து மகா தாழ்மைக்கு விழுந்தவனென்றும் பலவாறு ஈங்கிஷையாய்ப் பேசின பிறகு, அவர் இதற்குமுன் இங்கிலாந்து முழுமைக்கும் சிரேஷ்ட கண்காணியாராயிருந்தும், தமது தப்பறைகளை விட்டுப் பாப்புமார்க்கத்துக்குத் திரும்பிவிடுகிறதுண்டானால் அதனிலும் அதிக மேன்மை கிடைத்தாலும் கிடைக்குமென்று நயப்பாய் வசனித்து, அந்தப்படி மனந்திரும்பும்படி புத்தி சொல்லி ஏவினார்.

அதன்பேரில் கிராமர் என்பவர் உத்தரவு சொல்லிக்கொள்ள இடம்பெற்று, ஒருவரையும் குற்றமாய்வது குறைவாய்வது பேசாமல், தாம் நடந்துகொண்ட நடக்கையும் கொண்டிருந்த கொள்கைகளும் சரியானவைகளென்று பலமாயும் தெளிவாயும் விரிவாயும் நியாயமெடுத்துக் காண்பித்தார். அப்பால் அவர் எண்பது நாளைக்குள்ளாக ரோமாபுரிக்குப் போய் பாப்புவுக்கு முன் உத்தரவு சொல்லிக் கொள்ளக் கட்டளையிட்டார்கள். அந்தப்படியும் நடவாதபடிக்கு அவருடைய சத்துராதிகள் அவரைக் காவலிலேயே அடைத்துவைத்தார்கள். குறித்த காலத்தில் அவர் ரோமாபுரிக்குப் போகாதபடியால்,

பாப்பு அவனை அடங்காத முரடன் என்று சொல்லி அவனை இழிவுப் படுத்தி லௌகே அதிகாரத்துக்கு ஒப்புவிக்கும்படி உத்தரவு அனுப் பினன்.

Notes on Leviticus.

லேவியராகம வியாக்கியானம்.

உ. அதிகாரம்.

போசன பலியின் சட்டங்கள்.

1. "போசன" பலி அல்லது கோதுமைக் காணிக்கை என்றும் சொல்லலாம். இது இரத்தம் சிந்தும் பலியல்ல. இதைக்குறிக்கும் எபி ரேயவார்த்தை, இறைச்சியைக் குறிக்கவேமாட்டாது. இதின் மிகுதியா னபாகம், சுட்டெரிக்க அல்ல, போசனமாக உபயோகிக்கப்பட்டது. இந்தப் போசன பலி முக்கியமாய் மெல்லிய மாவாயாவது அல்லது மெ ல்லிய மா அடைகளாயாவது கொண்டுவரப்பட்டது. இத்தோடு பான பலியாக தகுந்த அளவான திராட்சாரசமும் கூடக் கொண்டுவருவார் கள். (யாத். 29: 40, 41. லேவி. 23: 13. எண். 15: 5, 10). இரத்தம் சிந் தும் பலியில்லாமல் இது தனிமையாகச் செலுத்தப்படும்போது, தே வன் அருளும் பொதுவான ஆசீர்வாதங்களுக்காக அவருக்குத் தோத்தி ரஞ்செலுத்தும் அடையாளமாயிருந்தது. இந்தப் போசன பலி ஆசாரி யனுடைய மத்தியஸ்தத்தினால் நடந்தேறும், அதில் ஒரு பாகம் தகன மானதும், நம்முடைய துதி தோத்திரங்கள் தேவனுக்கே அங்கிகரிக்கப் படுவதற்கு கிறிஸ்துவின் மத்தியஸ்தமே ஒன்றுன வழி என்பதை முன் னடையாளமாய்க் காட்டினது. (எபி. 13: 15, 16). இது பலவகையாய்ச் செலுத்தப்பட தேவன் திருவுளமானது (வா. 2, 4, 5, 7) சனங்க ளுடைய பலவகையான அந்தஸ்துக்கு ஏற்றதாயிருந்தது.

2. "ஞாபகக்குறியாக." ஒரு சிறிய பாகம் தகனிக்கப்பட்டா லும், காணிக்கை முழுவதும் தகனிக்கப்பட்டதற்குச்சரி என்பதற்கு ஞாபகக்குறியாக.

11. "புளித்த" எபிரேயர் பிசைந்த மாவையும், திராட்சரச மண் டியையும் புளிக்கவைப்பார்கள். இப்படிப் புளிப்பாவதினால், அதற் சாக்கிலுள்ள நித்திப்பும் மதாமுமெல்லாம் கெட்டுப்போகிறது. இப் படியாக அதிலுள்ள சிலேஷ்டதன்மை அற்றுப்போவதால் அது தே வனுக்குச் செலுத்த உதவாது. ஆனால் உப்போ, அதற்கு மாறுக, மாம் ச பதார்த்தங்கள் அழுகிக் கெட்டுப்போகாமல் காக்கும் தன்மையுள் ளதாகையால், சுத்தத்திற்கும், நிறைவுக்கும், முடிவின்மைக்கும் அடை யாளமாயிருந்தது. இந்த முகாந்தரத்தினாலும், எல்லா வகைப் போச னத்தோடும் இதைச்சேர்த்துச் சாப்பிடவேண்டுமென்றும், இது சகோதர ரிரேகத்துக்கு அடையாளமாயிருந்தது. "தேன்," இத்திப்பாணவைக ளுக்கெல்லாம் பொதுவாகச் சொல்லப்படுகிறது. அது புளிப்பாக மா றும் தன்மையுள்ளதால், விலக்கப்பட்டது.

14. தேவனுக்கு எதைச் செலுத்தினாலும், அதின் முதன்தரமா னதும் முக்கியமானதுமட்டும் தேவனுக்கு அங்கிகாரப்படும் என்ப தைக் காட்டுகிறது.

படிப்பினை.

தேவன் நமக்குக் கொடுத்ததைப் பார்க்கிலும் அதிகமாய் நம்மி டத்தில் கேட்கமாட்டார். ஒருவன் என்ற ஸ்திதியிலிருந்தாலும் கர்த் தருக்கு ஊழியஞ்செய்யலாம், ஊழியஞ்செய்யவும்வேண்டும். 2 4, 5, 7.—நம்முடைய நற்கிரியைகளைப் பெருமையினாலும், தர் இச்சைகள் னாலும் புளிப்பாக்காதிருப்போமாக. ஆனால் உப்பாகிய கிருபையினா லும் அன்பினாலும் அது சாரமாக்கப்பட்டதாயிருக்கவேண்டும். 11.—நம்முடைய முதற்பலனை, முதற்பலனை, முழுமனதை, முக்கியத தைக் கர்த்தருக்குச் செலுத்தவேண்டும், இரண்டாம் தரம் அவருக் கு உதவவே உதவாது. நீ விசுவாசி என்பதற்குப் பரீட்சை என்னவெ ன்று தெரியுமா? தெய்வம் உனக்கு முதற்காரியமாயிருப்பதே. அப் போ, கிறிஸ்துவே உனக்கு எல்லாத்துக்குஎல்லாமுமாயிருப்பார். 12,14.

ங. அதிகாரம்.

சமாதான பலியை குறித்த சட்டங்கள்.

1. "சமாதான பலி." இந்த ஒரே பலியின் மாம்சத்தைமட்டும் சனங்கள் புசிக்க உத்தரவிருந்தது. பலியிடுகிறவனுடனும் அவன் சிநே கிதரோடும் இந்த விருந்திலே தேவனும் விருந்தாளிபோல ஒரு பா கத்தை எடுத்துக்கொள்ளுகிறவராக எண்ணப்பட்டார். இப்படியாக இந்தச் செய்கை: புறம்பான விருந்தானது எப்படி ஆவிக்குரியவகை யாகவும் இருக்கிறது என்று காட்டுகிறதாயும், தேவன் மனுஷனுடை ஒப்புரவாகிறதை பூர்த்தியாய் விளக்குகிறதாயும் இருந்தது. மேலும் இப்படிப்பட்ட ஒப்புரவாகுதலுக்கு பாவநிவாரணப்பலி அவசியமாய் வேண்டும் என்பதை இது பிரத்தியட்சமாய்க் காட்டினது. இந்த அதி காரத்திலும் மூன்ன இரண்டு அதிகாரங்களிலும் காட்டிய பலிகளை யும் காணிக்கைகளையும் செலுத்துகிறவனுடைய மன விருப்பங்களை சங். 66: 13—20 மெத்த கன்றுக் காட்டியிருக்கிறது.

"மாட்டு மந்தையில்." மேலே காட்டியபடி மனுஷருடைய உயர்வு தாழ்வுக்குத்தக்கதாகச் செலுத்தும்படி தேவன் இடங்கொ டுத்திருக்கிறார்; அதாவது, காளை அல்லது பசு (1 வா); ஆட்டுக்குட்டி (7 வா); வெள்ளாடு (12 வா).

2. "தன் பலியின் தலைமேல் தன் கையையைவைத்து." பலியி டுகிறவன் தன் பலியின்மேல் தன் குற்றத்தைச் சாட்டிவிடுகிறதைக் குறிக்கிறது.

9. "முழு வாலையும்." கீழ்தேசங்களில் ஆட்டின் வால் விசே ஷமாக எண்ணப்பட்டது.

17. "இரத்தத்தையாவது." அஞ்ஞானிகள் சில வேளைகளில் தங்கள் பலியின் ரத்தத்தை குடித்தார்கள். சங். 16: 4.

படிப்பினை.

தேவன் நம்மோடு ஒப்புரவாகவேண்டியது தீராத அவசியம்.—அதற்காக கிறிஸ்துதாதர் சமாதானப் பலியானார்.

Communicant's Companion.

நற்கருணை விளக்கம்.

௰௩. அதிகாரம்.

நாம் நற்கருணைப் பந்தியைச் சேர்ந்துவந்ததின் பிறகு நடந்து கொள்ளவேண்டிய நடையுடை பாவனைகளைப்பற்றின சில எச்சரிப்புகள்.

பொழிப்புரை.

I. மாட்சிமை பொருந்திய நம்முடைய பரிசுத்த மார்க்கத்தைச் சோடிக்கும் அலங்கார பூஷணங்களாய் நடந்துகொள்ளவேணும்.

II. நாம் தலையிட்டுக்கொண்ட ஏற்பாடுகளைப் பக்குவமின்றி நிறைவேற்றுகிறவர்களாயிருக்கவேணும்.

III. நன்றி மறவாமையைக் காட்டவேணும்.

IV. அடைந்த சந்தோஷங் குன்றாதிருக்கவேணும்.

V. நாம் தேவனோடு ஐக்கியமாயிருக்கிறோம் என்பதற்கு திருஷ்டாந்தரங்களாகவேணும். எப்படியெனில்,

1. நாம் மெய்ப் பக்தியுள்ளவர்களாயும்.
2. மனக்ஷாக்ஷிக்கேற்க நேர் நிதானமுள்ளவர்களாயும்,
3. சாந்தமும் இணக்கமுமுடையோராயும்.
4. பூரண தயாளராயும்.
5. இகத்துக்கு மரித்து பரத்துக்கு உயிர்த்தவர்களாயுமிருக்கவேணும்.

நற்கருணையைச் சேர்ந்தவுடனே காரியமெல்லாம் ஆகிப்போச்சுது என்றெண்ணிக் கவலையற்றவர்களாயிருப்பது பிசகு. வருத்தத்திலெல்லாம் வருத்தம் இதின் பிறகுதான். நான் தேவனோடே ஐக்கியமாயிருப்பதை நம்முடைய கிரியையாகிய கனிகளால் ரூபிக்கவேண்டியிருப்பதால் எத்தனையோ எச்சரிப்பும் விழிப்புமாயிருக்கவேணும். இதெப்படிப்போலென்றால், மோசே மலையிலிருந்திறங்கும்போது பத்துக்கற்பனைப் பலகைகளை கையிலேந்திக்கொண்டுவந்தது போலிருக்கவேணும். இந்தப் பரிசுத்த பருவதமாகிய நற்கருணைப்பந்தியிலிருந்து திரும்பும்போது கர்த்தருடைய பரிசுத்த கற்பனைகளை நம்முடைய இருதயமாகிய பலகைகளிற் பதித்திருக்கிறவர்களாய்க் காணப்படுவது உத்தமம். இதற்கென்று

1-வது. நம்முடைய நடக்கைகளைச் சீர்ப்படுத்திக்கொள்ளும்பொருட்டு சாதாரண சில சட்டங்களையும்,

2-வது. சில திருஷ்டாந்தங்களையும் எடுத்துரைப்போம்.

கிறிஸ்துவின் மரணத்தை நினைவுகூருதலுக்காகமாத்திரம் நற்கருணைப் பந்தி ஏற்படாமல் எக்காலத்திலும் அதை நம்முடைய ஞாபகத்தில்வைத்துக்கொள்ளும்படியாயும் ஏற்படுத்தப்பட்டது. இதனால் சகல தீமைக்கும் விலகி சகல நன்மைக்கும் உடன்பட இடமுண்டு. இந்தக் கருத்தாகவே கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படி இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்திலே சுமக்கிறோமென்று அப்போஸ்தலன் சொல்லுகி

றான். அப்படிக்கில்லாத விஷையத்தில் நாம் ஒரு கையினால் கட்டின வீட்டை மற்றொரு கையினால் இடிக்கிறவர்களாகக் காணப்படுவோம்.

I. கர்த்தருடைய பந்தியில் நாம் கிறிஸ்துவோடு ஐக்கியப்பட்டவர்களென்று தெரியப்படுத்தியிருக்கிறோம். அதை நம்முடைய நடையுடைபாவனையால் நிலைப்படுத்தவேணும். அதினால் உலகத்தார் நம்மை கிறிஸ்துநாதருடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களென்று லேசிற் கண்டுகொள்வார்கள். அப்படிப்பட்டவர்களிடத்தில் கிறிஸ்துநாதருடைய திருச்சாயல் குதிகொள்ளும். அதினால் இவர்களிருக்குமிடங்களிலெல்லாம் சுடரொளிபோல் ஜொலித்துக்கொண்டிருப்பார்கள். அப்படியாகும் விஷையத்தில் நீதிச்சூரியனுடைய கதிர் ஒவ்வொரு கிறிஸ்தவனிடத்திலுமிருந்து பிரதிவிம்பம் வீசப் பிரகாசித்துக்கொண்டிருக்கும். இதற்கெதிரிடையாய் நடக்கிற கிறிஸ்தவர்கள்தான் கிறிஸ்துவினாமத்துக்கு அவதூறையுண்டுபண்ணுகிறவர்கள். அப்படிப்பட்டவர்களாகாதபடி பார்க்கவேணும். மோசே மலையிலிருந்திறங்கிவந்தபோது அவன் முகம் பிரகாசித்ததே. அப்படியல்லவோ கர்த்தருடைய பந்தியை விட்டு வருகிற ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய காரியமுமிருக்கவேணும். "உண்மையுள்ளவைகள் எவைகளோ ஒழுக்கமுள்ளவைகள் எவைகளோ" ஸ்ரீ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருக்கக்கடவோம்.

II. நற்கருணையில் நாம் கொடுத்த வாக்கைக் காத்துக்கொள்ளுகிறோம் என்பதை நம்முடைய நடையுடை பாவனை வெளிப்படுத்தவேணும். அப்படி நடந்துகொள்ளாத விஷையத்தில் சாலொமோன் சொல்லுகிறபடி "நாம் நேர்ந்துகொண்டதைச் செய்யாமற்போவதைப் பார்க்கிலும், நேர்ந்துகொள்ளாமலிருப்பதே நலம்." ஆகையினாலே சோதனைக்கான அக்கினி அம்புகளை உன்பேரில் எய்து வரும்போது பின்வரும் நியாயங்களைக்கொண்டு அதுகளை அவித்துப்போடும்படி பார். "தேவனே நான் உமக்குப்பண்ணின பொருத்தனைகள் என்மேலிருக்கிறது" அதைக் காத்துக்கொள்வேன். சாத்தான் என்னை மேற்கொள்ளாதபடி எனக்குத் துணைநில்லும் என்று கெஞ்சு. அப்புறம் "நான் என் நாவினாற் பாவஞ்செய்யாதபடிக்கு என் வழிகளைக் காத்து துன்மார்க்கன் எனக்குமுன்பாக இருக்குமட்டும் என் வாயைக் கடிவாளத்தினால் அடக்கிவைப்பேன்" என்று நான் சொல்லவில்லையா? அப்படியானால் என் வாய்க்குக் கடிவாளம் போடுவேன் என்றும் "என் கண்ணோடு உடன்படிக்கைபண்ணவில்லையா? அப்படியானால் என் கண்கள் பாவத்துக்கு வழியாயிராதபடி அந்த உடன்படிக்கையை என் கண்களுக்கு முக்காடாக்கிக்கொள்வேனாக என்றும், இப்படியே நாம் பண்ணியிருக்கும் உடன்படிக்கைகளை ஞாபகப்படுத்திக்கொண்டு சாத்தானின் சோதனைகளை ஜெயிக்கப் பிரயாசப்படவேணும்.

III. செய்நன்றி மறவாதிருக்கிறோம் என்பதை நம்முடை நடையுடை பாவனைகளைக்கொண்டு திருஷ்டாந்தப்படுத்தவேணும். நன்றி மறவாமை இயற்கைப்பிரமாணத்துக்கு விரோதமல்ல.

"மாடு தன் எசமானையும் கழுதை தன் ஆண்டவனின் முன்னணையையும் அறியும்" உலகப்பிரமாணத்துக்கும் விரோதமல்ல. "நன்றிமறப்பது நன்றன்று" என்று கிறிஸ்துமார்க்கப் பிரமாணத்தையறியாத இந்துக்களும் போதிக்கிறார்கள். நற்கருணைப்பந்தியில் கிறிஸ்துநாதர் நமக்குச் செய்ததின்னதென்பதையும் அவர் நமக்குக்கொடுக்க நாம் பெற்றுக்கொள்ளுகிறதின்னதென்பதையும் அறிகிறோம். இந்த இரண்டையும் கவனிப்பதால் அவர் சித்தத்துக்கிணங்கி நம்முடைய உயிருள்ளபரியந்தம் அவருக்கென்று நம்மை ஒப்புக்கொள்ளுகிறவர்களாயிருக்கவேணும்.

IV. நற்கருணையில் நாம் பெற்றுக்கொள்ளும் மனப்பாக்கியத்தையெப்போதும் காத்துக்கொள்ளுகிறவர்களாயிருக்கவேணும். கர்த்தருடைய வீட்டிலுள்ள பொக்கிஷவைப்பால் நாம் திர்ப்திகரமடைந்தண்டாலும் தெவிட்டாக் கனிபோல் எக்காலத்திலும் அதின்மேல் ஆகாவுகொள்ளவேணும். கிறிஸ்து ரகூடகைக் கண்டடைந்தண்டாலும் அவரைப் பார்த்தகண்ணைடாமலும் பிடித்தகை விடாமலுமிருக்கக் கடவோம். எல்லாவற்றிற்கும் மேலான தேவசமாதானத்தை நாம் அடைந்தண்டாலும் உலகக் கவலைக்கு இடங்கொடுத்து அந்தச் சமாதானத்தை இழந்துபோகாதிருக்கக்கடவோம். கர்த்தர் நல்லவரென்று ருசித்தண்டாலும், மாம்ச இச்சைக்கிடங்கொடுத்து அந்த ருசிக்குக் கெடுதிவரவழையாதிருக்கக்கடவோம். கர்த்தருடைய பந்தியைச் சேர்ந்தபின் நாம் கவலையற்றவர்களாய் நடப்போமென்றால் சாத்தான் நம்முடைய உள்ளத்தில் வந்து குடிகொள்ளுவான். தேவனும் தம்முடைய திருமுக வெளிச்சத்தை நம்மைவிட்டெடுத்துப் போடுவார். யூதாஸ் தணிக்கையை வாங்கவே சாத்தான் அவனுக்குள் பிரவேசித்தான என்று வாசிக்கிறோம். அது நமக்கு ஜீவனுக்கேதுவான ஜீவவாசனையாயிராதிருக்குமானால் மரணத்துக்கேதுவான மரண வாசனையாய்த்தான் முடியும்.

V. நாம் கர்த்தருடைய பந்தியில் கிறிஸ்துவோடு ஐக்கியப்பட்டிருந்தோம் என்பதை நம்முடைய நடக்கையால் ருசுப்படுத்தவேணும். வெறும்பேச்சு உதவாது. எந்த மாயசாலகனும் கிறிஸ்துவோடு ஐக்கியமாயிருக்கிறதாகப் பேசிக்கொள்வான். பேச்சிலே காரியமில்லை. அவர் நடந்ததுபோல நடக்கவேணும். அதுதான் காரியம். நாம் பெற்றனுபவிக்கும் எந்தப் புறம்பான நன்மையும் அவரால் வந்ததென்றெண்ணி அவரை நோக்கிப் பார்க்கவேணும். துன்ப துயரங்கள் நேரிடுங்காலத்திலும் அவரை நோக்கிப்பார்த்து உம்முடைய சித்தம் ஆகக்கடவதென்று அமைதலோடு அவருக்குக் காத்திருக்கவேணும். நம்முடைய சம்பாஷணை நாம் கர்த்தரோடு ஐக்கியமாயிருக்கிறோம் என்பதை வெளிப்படுத்தவேணும். பேதுருவும் யோவானும் ஆலோசனைச் சங்கத்துக்கு முன்பாக நின்று பேசினபோது அவர்கள் பேசினதைக் கேட்டவர்கள் இவர்கள் இயேசுவோடிருந்தவர்களென்றறிந்தார்கள்.

கர்த்தருடைய பந்தியைச் சேர்ந்து வந்தவர்கள் பின்வரும் ஆறு காரியங்களுக்கு இசைந்து நடக்கவேணும்.

1. சுத்தப் பக்தியுள்ளவர்களாயிருக்கப் பார்க்கவேணும். சொஸ்தப் புத்தியுள்ளவர்களாய் நீதிநெறி தவறாதவர்களாய் மாத்திரமிருப்பது போதாது. மெய்ப் பக்தியுள்ளவர்களாயுமிருக்கவேணும். நம்முடைய இஷ்டர்களைக் கண்டுபேசி அகமகிழ்ச்சிகொள்வதோடுகூட நம்முடைய சிநேகக் கட்டுப்பாடு நிலைபெற்றிருக்கும்பொருட்டு இடைக்கிடை கடிதங்களெழுதிக்கொண்டிருப்பதுமுண்டே. அவ்வண்ணமாகவே நாம் கர்த்தருடைய பந்தியில் அவரோடு முகாமுகமாய்ப் பேசிவந்ததின்பிறகு ஓயாமல் அவர் முகதரிசனையை நம்முடைய முகத்தினெதிரே நிறுத்திக்கொண்டிருப்பதும் மனம் பரவசமடைந்து அவரை இடைக்கிடை தியானித்துக்கொண்டிருப்பதும் மேக்காகவேண்டியகாரியங்களேயெல்லாம் அவருக்குத் தெரியப்படுத்திக்கொண்டிருப்பதும், அடிக்கடி திருபையின் எத்தனங்களைக் கையாடிக்கொண்டிருப்பதும் அவருக்கும் நமக்கும் கடிதங்கள் போக்குவரத்துப் பண்ணிக்கொண்டிருப்பதற்குச் சரியாகும். தேவனைடிருப்பது நன்றென்று கண்டால் அடிக்கடி அவரைக் கிட்டிச்சேர விருப்பங்கொள்ளவேணும்.

1877. ஜெனுவரிமீ.

சேரூற்றக்கர் வெகுமதி.

போன மாசம் 13-ம் தேதி சாயங்காலம் பாளையங்கோட்டை சேரற்றக்கர் பெண் பாடசாலையில் ஒரு கூட்டம் வைக்கப்பட்டு அந்தப் பாடசாலையிலும் அதைச் சேர்ந்த கிராமப் பள்ளிக்கூடங்களிலும் படித்துவருகிற பிள்ளைகளுக்கு புத்தகமுதலிய வெகுமதி கொடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கனம்பொருந்திய டாக்டர் சார்ஜெண்ட் ஐயரவர்களும், கனம் டாக்டர் கால்டுவேல் ஐயரவர்களும், சர்க்கார் மிஷியன், சுவிசேஷபிரபலிய சங்கத்தைச்சேர்ந்த மற்ற ஐயன்மார்களும், இச்சில்லா நீதியதிபராகிய கார் அவர்கள் முதலிய இத்தலத்தில் வசிக்கும் கவர்ன்மென்று உத்தியோகஸ்தராகிய துரைகள் துரை சாணிமார்களும், இந்தக்களில் பாரிக் குடித்தனக்காரரும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களுமாகிய அநேகரும், மிஷியோன் அலுவற்காரர்களாகிய சுதேச குருமார்களும், உபதேசிஉபாத்திமார்களும் கூடிவந்திருந்தார்கள்.

சேரூற்றக்கர் பாடசாலை மாணாக்கர் 85 பேருடன் இப்பட்டணத்துக்குள்ளும் இதனோடித்த பேட்டை புறங்களிலுமுள்ள பெண்பிள்ளைகள் சுமார் 30) வரையும் வந்திருந்தார்கள். இது சுதேசிகளுக்குள்ளே தைப் பொங்கல் காலையுமிருந்தபடியால், தேச குலாசாரப்படி அந்தப் பெண்பிள்ளைகள் அநேகரைப் பெற்றோர் நல்ல வஸ்திராபரணம் புஷ்பகந்தாதிகளால் சிறப்பித்தனுப்பினதுமன்றி பெற்றோர் சிலரும் வந்திருந்தார்கள்.

பாடசாலையின் விசாலமான உள்ளங்கணத்தில் இதசமயத்தில் கொன்றயர்த்திச்செய்யப்பட்ட விசுப்பலகைகளில் பிள்ளைகள் வகுப்புவாரி பத்திபத்தியாய் உட்கார்ந்திருந்தார்கள்.

E. Buée மிசியம்மாளவர்கள் வாத்தியம் வாசிக்கப் பாடிமுடிந்தவுடன், கனம்பொருந்திய மெடோஸ் ஐயரவர்கள் பிரார்த்தனை செய்தார்கள். பின்பு பாடசாலைத் தலைவராகிய The Rev. A. H. Lash ஐயரவர்கள் அறிக்கைப்பத்திரம் வாசித்ததில் சொன்னது என்னவெனில்,

இந்தப் பாடசாலை 1868-ம் வருடம் ஆரம்பித்து காலதவரை தேவகடாட்சத்தினாலே நடந்தேறிவந்தது. இதில் தேறின வகுப்பார் போதனைசக்தி முறை படிக்கிறார்கள். அம்முறை கற்று 3-ம் படிக்கு சற்கார் சோதனை கொடுத்து யோக்கியதாபத்திரம் பெற்றவர்கள் 87 பெயர். போன வருடம் சோதனைகொடுத்தவர்கள் 18 பெயருக்கு 14 பெயர் முதலாம் வகுப்பில் சோதனை ஒப்பேறி மேற்படி பத்திரம்பெற்றிருக்கிறார்கள்.

மிஷி வகையாய்ப் படித்தத்தேறி உபாத்திச்சிகளானவர்கள் 95 பெயர். இவர்களில் இந்த ஜில்லாவிலும், சென்னைபட்டணம், மதுரை, தஞ்சாவூர், மோரிஸ், இலங்கைமுதலிய இடங்களில் கல்விகற்பிக்கும் அலுவல்செய்கிறவர்கள் ஏறக்குறைய 90 பெயர். மற்றவர்கள் வேதாகமம் போதிக்கிற அலுவலிலும், வைசூரிவைக்கிற வேலையிலும் இருக்கிறார்கள்.

நாங்கள் இந்த இடத்தைவிட்டுச் சுகத்துக்காக சீமைக்குப் போயிருந்த 2 வருடகாலமாய் இந்த வேலையை கனம் கெம்பர் துரை துரை

சானியவர்களும், அப்பால் கனம்பொ. ஹார்க்கோட் ஐயரவர்களும் அம்மாளவர்களும் தங்கள் தங்கள் பாரிவேலையோடு இதையும் மேற்பார்த்துக் கடவுள் சகாயத்தால் இதன் அனுகூலத்துக்கேற்றது செய்துவந்திருக்கிறார்கள்.

உபாத்தியாயரும் உபாத்தியாயிகளும் தங்கள் தங்கள் கடமையை உண்மையாய் நிறைவேற்றி வந்திருக்கிறார்களென்றும் நம்புகிறேன்.

சீமையிலிருந்து நாங்கள் போன மார்ச்சுமீ வந்து அனாகுறையான பல காரியங்களையும் ஒழுங்குப்படுத்தி இதுவரை பிள்ளைகளுக்குத் தேவ இரக்கத்தால் மரணம் வியாதி நோயில்லாமல் தேவன் காப்பாற்றிவந்ததை இந்தப் புது வருடத்தில் நினைத்து நன்றியறிதலான தோத்திரஞ்செய்துவரக் கிருபைசெய்திருக்கிறார்.

இதுவன்றி இந்தப் பாடசாலைத் தலைவர் விசாரணைக்குட்பட்டதும், பெரும்பாலும் இதிலிருந்து படித்துப்போன உபாத்தியாயிமார்களால் போதிக்கப்பட்டுவருகிறவைகளுமான கிராமப்பள்ளிக்கூடங்கள் 40 உண்டு. இவைகளில் 1350 பெண்பிள்ளைகள்வரை வாசிக்கிறார்கள். இந்தப் பள்ளிக்கூடங்களில் படித்துவருகிறவர்களில் அநேகர் உயர்சாதி ஸ்திதிபந்தர் பிள்ளைகளாம்.

இப்படி ரிப்போர்ட்டு வாசித்தபிறகு நீதிவிசாரணை ஈ ஸ்ரீ கார் துரையவர்கள் சபையை நோக்கிப் பின் வருகிறபடி சொன்னார்கள்.

இந்தச் சமயத்தில் நான் கேட்கிறதும் பார்க்கிறதும் எனக்கு அதிக சந்தோஷம் கொடுக்கிறது. இந்த அருமையான கிரியையை நடத்தும்படி சீமைதேசத்தில் ஏற்பட்டிருக்கிறவர்களில் என் பெற்றோரும் ஒருவராயிருப்பது எனக்கு மெத்தப் பிரியம்.

இதில் இத்தியாதி பிள்ளைகள் கல்விகற்று வெளியேறுவதுமாத்திரமல்ல, இவர்களில் அநேகர் போதனாசக்திக்குரிய விதிகற்று தங்கள் தேசத்து ஸ்திரி பிரஜைகளுக்குக் கற்றுக்கொடுக்கிறது மெத்த நல்ல காரியந்தான். ஆனால் ஒருவர் போதிக்கிற விதத்தை வேறு சிலர் பக்கத்திலிருந்து சோதிக்கிறதும் அதற்குத் திருத்தங் கற்பிக்கிறதுமாகியது என் புத்திக்குச் சற்று நூதனமாய்க் காண்கிறது. இப்படி ஒருவர் வேலையை ஒருவர் பார்த்துப் பிழைபிடிக்கத்தேடுவது என்போலியருக்கு விரும்பாத காரியம் என்றாலும் படிப்பிக்குந் திறத்தை பரீட்சிக்கும் விதத்தில் இப்படி ஏற்பட்டிருப்பது அந்த வித்தை பலப்பட ஏதுவாயிருக்கும்.

இந்தப் பாடசாலை முயற்சியாலுண்டாவது இந்த ஜில்லாவிலும் இன்னும் மற்ற இடங்களிலும் வெகு பெயருக்குப் பயன்படுவதாய் கேட்பது மெத்தச் சந்தோஷந்தான் என்றார்.

இதன் பின் கனம்பொருந்திய டாக்ற்றர் சார்ஜென்றையரவர்கள் கூடிவந்திருக்கிற பிள்ளைகளைப் பார்த்து அநேக இனிய தமிழ்மொழிகளைப் புத்திமதியாய்ச் சொன்னார்கள்.

இதன்பின் பாடசாலையில் படித்த மாணாக்கருக்கு அவர்கள் படிப்புத் தேற்சி நன்னடக்கைக்குத்தக்கதாய்ப் புத்தகங்கள்முதலிய வெகுமதி கொடுத்தார்கள். அப்பால் 6½ மணிச் சுமாருக்கு கனம் டாக்ற்றர் சார்ஜென்று ஐயரவர்கள் எழுந்து சபையெல்லாம் நிற்கவே தேவநாமத்தால் ஆசீர்வாதமும் வாழ்த்தலும் சொல்லிக் கூட்டத்தை அனுப்பினார்கள்.

இனாம்பெற்ற பெண்பிள்ளைகள்.

கல்லூர்ச் சேகரம்	ஜேய்ன் பாக்கியம்—மேரிஷெப்பெர்ட்.
பன்றிகுளம்	மேரி லீதியான்.

சிவகாசி	மேரி சாறாள்—சூசன்னாள்.
மெஞ்ஞானபுரம்	மேரி நியூமன்—ஞானம்மை—ஞானபூரணம்.
பாளையங்கோட்டை	மேரி ஜேயின்.
ஷெயூர்	மேரி அன்னாள்.
ஷெயூர்	கேற் மேரி.
ஷெயூர்	மரியம்மாள்.
சுவிசேஷபுரம்	ஞானாகரம்.

அம்மன்கோவில் மீனைத்திருடின மனுஷனுக்கு நேரிட்ட பயங்கரம்.

ஓர் ஊரில் ஒரு நாடான் இருந்தார். அவருடைய தொழில் பனையேறுவது. மார்ச்சு, ஏப்பிரல் மாதங்களில் பனையேற்று கடுமையாயிருந்தது. அவர் ஏறின பனந்தோப்பின் அருகே தான் வணங்கிவந்த அம்மன்கோவிலிருந்தது. அதினருகே ஒரு ஊருணியும் அந்த ஊருணிக் கரையில் சில புளியமரங்களும் நின்றன. ஏப்பிரல்மீ மிகுந்த உஷ்ண காலமானதினால் ஊருணி நிறைந்திருந்த ஜலம் வற்றிக் கொஞ்சமாயிருந்தது. அவர் பனையேறிக்கொண்டு வருகையில் ஷெ ஊருணியை அடிக்கடி ஆசையோடே உற்றுப் பார்ப்பார். அதில் மச்சங்கள் நெழு நெழுவென்று நிற்பதைக் காண்பார்.

சனங்களுக்குள்ளே அம்மன்கோவில் ஊருணியில் மீனைப் பிடித்தால் கண் அவிந்துபோமென்ற பிரஸ்தாபம் இருந்தது. அவரோ தனக்கு மீனின் பேரிலிருந்த அபேக்ஷையினால் ஒருநாள் மீனைப் பிடித்து அவ்வூருணிக் கரையில் நின்ற புளியமரத்தில் ஏறி புளியங்காயையும் பறித்துத் தன் மனைவியினிடத்தில் கொண்டுபோய்க் கொடுத்து, "ஏட்டி நான் மதியப் பனை யேறிவருமுன்னே சாதம் சமைத்து மீனையும் புளியங்காயையும் கறிபண்ணிவை"யென்றும், "மீனுக்கும் புளியங்காய்க்கும் கொண்டாட்டமாயிருக்கும்" என்றும் சொல்லிப்போய்விட்டார்.

அப்பிரகாரம் அவர் மனைவி சாதமும் சமைத்து கறியும் பண்ணி வைத்த பின்பு புருஷன் சொன்னதை நினைத்து மீனுக்கும் புளியங்காய்க்கும் கொண்டாட்டம் என்று சொன்னாரே என்று எண்ணி நான் கொஞ்சம் ருசிபார்ப்பேனென்று சட்டியிலிருக்கிற மீனில் கொஞ்சம் எடுத்துச் சாப்பிட்டாள், வெகு ருசியாயிருந்தது. பின்பு இன்னங் கொஞ்சம் இன்னங் கொஞ்சம் சாப்பிட்டுப் பார்ப்போமென்று சொல்லிக்கொண்டே சட்டியிலுள்ள மீன் முழுவதையும் சாப்பிட்டுப்போட்டாள். புருஷன் வீட்டிற்கு வரும் நேரம் ஆச்சுது, தன் புருஷன் என்ன செய்வாரோ என்று பயந்து வெளியே வந்து பார்த்தாள். உடனே தன் புருஷன் வருகிறதைக் கண்டு விரைவாய் வீட்டுக்குள் அடுப்பங்கரைக்கோடிப்போய்க் குனிந்து அடுப்புச் சாம்பலில் கொஞ்சம் அள்ளி உள்ளங்கையில் வைத்துக்கொண்டு புருஷனுக்கெதிராக வந்து நின்று தலையை ஆட்டி உன்னை வைப்பேனா என்னுடைய ஊருணியில் மீனைப் பிடித்தாயல்லவாவென்று உறுமிச் சத்தமிட்டாள். அவரோ திடுக்கிட்டுப் பயந்து அம்மா அம்மா நான் அதற்கு என்னசெய்யவேண்டுமென்று கேட்டார். அதற்கு அவள் ஒரு பணத்துக்குத் தேங்காய் வாழைப்

பழம் வெற்றிலை பாக்குச் சாம்பிராணி ஓடிப்போய் வாங்கிக்கொண்டு வந்து பட்டை, படை என்று சொல்ல அவரந்தப்படி செய்து மன்னிக்கக் கெஞ்சினார். அவள் மன்னித்தேன் என்று சொல்லி உள்ளங்கையிலிருந்த சாம்பலை உறக்க ஊதிப் பறக்கப்பண்ணி சட்டியைப்பார் சாம்பலைப் பறக்கப்பண்ணினதுபோல சட்டிக்குள்ளிருந்த மீனையும் பறக்கப் பண்ணினேன் என்று கூற அவர் சட்டியைப் பார்த்துப் பிரமித்து ஆச்சரியப்பட்டார். இவ்விதமாய் காரியம் சமையத்துக்கு முடிந்து தீர்ந்தது.

அன்று இரவில் இருவரும் சாப்பிட்டு பேசிக்கொண்டு இருக்கும் வேளையில் பெண்சாதி புன்சிரிப்பாய் நகைத்தாள். புருஷன் ஏதென்று விசாரிக்க முதலில் மறுத்துப் பின்பு நான் சட்டிக்குள்ளிருந்த மீன் முழுவதையும் சாப்பிட்டதற்காகத்தான் இப்படியெல்லாம் செய்தேன் என்று உண்மையைச் சொன்னாள். இதைக் கேட்க புருஷனுக்கு மிகுந்த விசனமுண்டாகிக் கோபதாபமாயிருந்தார். பேய் ஆராதனையல்லவா நமக்கு இவ்வளவு குறைவை உண்டுபண்ணிற்றென்று தனக்குள் வெட்கப்பட்டுக்கொண்டு அதிகாலையில் எழுந்து மண்வெட்டியை கையில் எடுத்துக்கொண்டுபோய் அம்மன்கோவிலை வெட்டி வாங்கிப்போட்டு அவரும் சமுசாரம் பிள்ளைகளும் மெய் வேதத்தைச் சேர்ந்தார்கள். இது மெய்யான சங்கதி. இ. ஆ.

திருநெல்வேலி நாட்டிலுள்ள பட்டணங்களில் நடந்துவரும் சுவிசேஷப் பிரசங்கம்.

கனம் ஹார்க்கோட் ஐயரவர்கள் திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த பெரிய ஊர்களில் வசிக்கும் ஜனங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு ஓர் நூதன முயற்சி செய்துவருகிறார்கள். அதை இதனடியில் விவரிக்கிறோம். கிராமங்களுக்குக் காலையில் போகும்போது வேலையின்பேரில் பல இடங்களுக்குப் போயிருக்கும் ஜனங்களைக் காண ஏதுவில்லாததால் மேற்படி ஐயரவர்கள் சாயநதரம் புறப்பட்டு, பொழுது அஸ்தமிக்குஞ் சமயத்தில் ஓர் ஊரில் வந்து சேருகிறார்கள். அவர்களோடு கூட வீணை வாசிக்கிற ஒருவரும் தமிழ் கீர்த்தனைகளை இன்பமாய்ப் பாடுகிற சில சிறுவரும் போவார்கள். ஐயரவர்களும் ஒரு சிறு கின்னரங்கொண்டுபோய் வாசிப்பார்கள். அவர்கள் தங்கும் இடத்தில் ஒரு மேசை போட்டிருக்கும். யோக்கியர்கள் உளுக்காருவதற்கு பாய்கள் விரித்திருக்கும். யாவருக்கும் நல்ல வெளிச்சமிருக்கத்தக்கதாக விளக்குகளை ஏற்றியிருக்கும். ஜனங்கள் கூடும்படியாக கீதவாத்தியம் நடக்கும். அவர்கள் எல்லாரும் கூடிவந்த பின்பு கனம் ஐயரவர்களும் அவர்களுக்கு உதவியாய்ப்போகும் உபதேசிமார்களும் ஏறக்குறைய ஒன்றரைமணிநேரம் மாற்றிமாற்றிப் பிரசங்கஞ் செய்வார்கள். இதின் மத்தியில் சங்கீதவாத்தியமும் நடக்கும். ஒவ்வொரு இரவிலும் அல்லது சமயத்திலும் ஏறக்குறைய 150 அல்லது 200 சனம் வரையும் பெரிய கூட்டமாக வருவதுமன்றி யாதொரு ஆட்சேபனையும் தர்க்கமுமன்னியில் அமைதலாயும் கேட்கிறார்கள். மேலும் அவர்களுக்குச் சுவிசேஷ சத்தியங்களைத் தெரிவிக்கும்பொருட்டு நடந்துவரும் இந்த நூதன முயற்சியையும் புதுவகையான பிரசங்கக் கூட்டத்தையும் அவர்கள் மதித்து அதினால் உணர்வடைகிறவர்கள் போலவும் காணப்படுகிறார்கள். தயாநிதியாகிய தேவன் இந்த முயற்சி பயன்படும்படி அருள்புரிவாரக.

வி. ஹா.

இலங்கை. மகா கனம்பொருந்திய இலங்கைக் கண்காணியாரவர்கள் கனம் கிளார்க்கையரவர்களிடத்திலிருந்து அதிகாரப்பத்திரத்தை வாங்கிப்போட்டார்களென்று முன் தெரிவித்தோமே. அதினிமித்தமாக மேறபடி ஐயரவர்கள் பதில் இந்திய சிரேஷ்ட குருவாகிய சென்னைக் கண்காணியாரவர்களுக்கு அப்பீல் செய்திருந்தார்கள். ஆனால் அதை ஏற்றுக்கொண்டு விசாரணைசெய்யத் தமக்கு நியாயமான அதிகாரமில்லையென்று சென்னைக் கண்காணியாரவர்கள் தீர்த்திருக்கிறார்கள்.

நற்போதகம் வாசிக்கிறவர்களுக்கு, உலகத்தின் நானாதிசைகளிலுமுள்ள தங்கள் உடன் சகோதரரான கிறிஸ்தவர்களைப்பற்றிக் கேட்பது இனிமையாயிருக்குமாதலால், காலத்துக்குக்காலம் இதைப் பற்றிச் சில சங்கதிகளைத் தெரிவிக்க எண்ணியிருக்கிறோம்.

ஆசியா, துர்க்கியிலுள்ள கிறிஸ்தவர்கள். துர்க்கிய துரைத்தனத்தாருக்குரிய இராட்சியமானது ஆசியா துர்க்கியென்றும் ஐரோப்பா துர்க்கியென்றும், இரண்டு பெரும் பிரிவுகள் சேர்ந்தது. பின்னால் வருகிற காரியத்தை வாசித்துப்பார்த்தால் ஆசியா துர்க்கியிலுள்ள கிறிஸ்தவர்கள் எப்படிப்பட்ட ஸ்திதியிலேயிருக்கிறார்களென்பது தெரியவரும்.

"இங்கே நடந்து வருகிற உபத்திரவங்கள் குறைந்துகொண்டு வருகிறதற்குப் பதிலாக நாளுக்கு நாள் விர்த்தியாகிக்கொண்டேவருகிறது. நாங்கள் கிறிஸ்தவர்களாயிருப்பதே யொரு தப்பிதமாக வந்திருக்கிறது. எங்கள் ஊழியத்தினால் கவர்னமென்றாருக்கு ஏராளமான நன்மைசெய்கிறோமேயல்லாமல் சொற்பத் தொந்தரவாவது செய்கிறதில்லை என்றாலும் நம்முடைய குருமாரும், பெண்பிள்ளைகளும், பிள்ளைகளும், நாங்களும் நாள்தோறும் கனவீனம்பண்ணப்படுகிறோம். இஸ்ரவேலருடைய எகிப்திய அடிமைத்தனமாவது, பல்காரியராலுண்டான உபத்திரவமாவது, அமெரிக்காவில் காப்பிரிகளுக்குண்டான துன்பமாவது ஆனதோலியாவிலிருக்கிற ஆர்மீனியராலுண்டாயிருக்கிற தற்கால இடுக்கணிற்கும் நிறபந்தத்திற்கும் ஒரு நிமிஷநேரமாவது ஒப்பிடப் பாத்திரமானவைகளல்ல.

ஐரோப்பிய துரைத்தனத்தார் ஐரோப்பிய துர்க்கியிலுள்ள சனங்களின் சேமத்தை எப்படி நிலைநிறுத்தலாம் என்று இப்பொழுது யோசிக்கிறார்கள். ஆனால் அவர்கள் பரோபகார கிறிஸ்தவ கடமையின்படி இதை நிறைவேற்ற யோசித்தாலும், ஐரோப்பா துர்க்கியிலுள்ள கிறிஸ்தவர்களின் நிலைமையைமாத்திரம் சீர்ப்படுத்துவது போதாது. ஆசியா, துர்க்கியிலும் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்திருப்பதினால்மாத்திரம், இந்த நாள்களில் உபத்திரவப்படுகிற லட்சாதிலட்சம் ஆர்மீனியர் உண்டு."

பாரசீகத்திலுள்ள கிறிஸ்தவர்கள். பின்னால் வருகிற சங்கதி ஒரு துரைசானி எழுதியது.

"தேவன் தம்முடைய வசனம் இந்த மகம்மதியருக்குள்ளே பரம்பும்படிக்கான பெரிதும் பலமுமான கதவைத் திறந்தருளும்படியாக அவரை நோக்கிச் செபம்பண்ண உங்களெல்லாரையும் மிகுந்த ஆவலோடு கேட்கிறோம். இங்கேயிருக்கிற நம்முடைய மிஷன் மகம்மதியருக்கென்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் இங்கேயிருந்து ஊழியம்பார்க்கிற இந்த நாலு வருஷங்களிலும் மிகுந்த தைரியத்

துக்கேதுவான காரியங்கள் நடந்திருக்கிறதாகக் காணப்படுகிறது. சிலர் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறார்கள். மற்றும் அநேகர் நம்முடைய ஆராதனைக்கு வருகிறார்கள். 30 பையன்கள் நம்முடைய பள்ளிக் கூடத்தில் ஒரு வருஷமாக இருந்திருக்கிறார்கள். கடந்துபோன வருஷத்தில் ரோமான் குருக்களாலும் ஆர்மீனியக் குருக்களாலும் ஏற்பட்ட பலத்த இடையூறினால் அவர்களெல்லாரும் விலகிப்போனார்கள். இப்பொழுது சுவிசேஷ வசனத்தின் கதவு மகம்மதியர்களுக்கு முற்றிலும் அடைக்கப்பட்டிருக்கிறதுபோலவே காணப்படுகிறது.

அவர்களுடைய குருக்கள் இடையூறு செய்துகொண்டேயிருந்தாலும், அந்தச் சமையத்தில்தானே, நாங்கள் ஒரு பெரிய ஆலயங் கட்டத்தக்கதாக, நாங்கள் கூடி ஆராதனை செய்துவந்த அறை பிடிக்காதபடி அவ்வளவு சனங்கள் கூடினார்கள்.

ஒசாகாவிலே கடந்துபோன சூன்மீ 25டல் ஆறு ஜப்பானியர் ஞானஸ்நானம்பெற்றார்கள்.

ஆப்பிரிக்கா கண்டத்தின் ஓர் இரத்தச்சாட்சி.

ஓர் நீக்ரோப்பாலயன் கிறிஸ்து மார்க்கத்தின நிமித்தம் அடைந்த மரணத்தைப் பற்றி தக்கமான சமாசாரம் வந்தது. அதைக் கேட்கிறவர்களுக்கு அதிகத் துயரமாயிருந்தாலும், அவனுடைய பக்திவைராக்கியத்தைப் பார்க்கிறவர்களுக்கு அதிக இன்பமாயும் இருக்கும். அந்த வாலிபன் அடிமையாயிருந்தவன். அவனுக்கு யோசுவா ஹார்ட் என்று பெயர். மேல் கரையிலுள்ள ஒரு பட்டண வாசிகளான தலைவர்கள் கிறிஸ்துமார்க்கம் வெகு விரைவாய்ப் பிரபலமாகி வந்ததையும், கிறிஸ்தவர்களாயிருந்த தங்கள் அடிமைகள் ஓய்வுநாளில் வேலைசெய்ய மாட்டோமென்றும் மறுத்ததையும் கண்டு திகிலடைந்து கிறிஸ்து மார்க்கம் இனி அதிகமாய்ப் பிரபலமாகாதபடி அதைத் தடுக்கவேண்டுமென்று தீர்மானித்தார்கள். தீர்மானித்ததைத் தங்கள் அடிமைகளை ஒரு காட்டிலுள்ள புதர்களில் கட்டி ஒரு நாள் முழுவதும் உக்கிரமான வெயிலில் வேகவும், கொசுக்களினால் உபத்திரவமடையவும் உடலில் உயிர் மாத்திரம் தொடுத்துக்கொண்டிருக்கத்தக்கதாக ஒடுக்க ஆகாரம் புசிக்கவும் விட்டிருந்தார்கள். மேலும் ஒருவரோடொருவர் சம்பாஷித்து உற்சாகப்படுத்திக்கொள்ளாதபடிக்கு ஒவ்வொருவனையும் தனித்தனியாகத் தூரத்தில் கட்டியிருந்தது.

யோசுவா ஹார்ட் என்பவன் மற்றவர்களைவிட அதிக ஸ்திரமும் வைராக்கியமுமுடையவனாயிருந்ததால் அவர்கள் கண்ணெல்லாம் அவன் மேலேயே இருந்தது. தலைவரெல்லாரும் கூடி அவன் கிறிஸ்து மார்க்கத்தின் சத்தியங்களை மறுக்கும்படி மருட்டினார்கள். அவன் மாட்டேனென்று சாதித்தபோது, பலசாலிகளாகிய நாலு பேர் அவனைப் பிடித்து கை கால்களைக் கட்டி செந்தூக்காய் எடுத்துத் தரையிலே வேகமாய் வந்து மோதத்தக்கதாய் மேலே வீசி எறிந்தார்கள். இப்படி ஒரு முறையல்ல பலமுறையுஞ் செய்தார்கள். இது சித்திரவதையேயன்றி மற்றொன்றல்லவே. ஆயினும் அவன் ஒன்றுக்கும் அஞ்சாமல், என்னுடைய எசமான் எதைச் சொன்னாலும் செய்வேன், அவர் இத்தப் பூமியை என் தலைமேல் வைத்துச் சுமக்கச் சொன்னாலும் அப்படிச் செய்யப் பிரயாசப்படுவேன். ஆனால் என் ரட்சகரை மறுப்பதும் ஓய்வுநாளில் வேலை செய்வதும் அசாத்தியமான காரியம். இப்படி அவன் ஒன்றுக்கும் அசையாமல் மகா தைரியமாயிருந்ததை தலைவர் கண்டு அவனைக் கொன்றுவிடும்படி அவனுடைய எஜமானுக்கு ஒப்புவித்தார்கள். எஜமான் அவன் கையையும் காலையுங் கட்டி ஒரு ஆற்றுக்குத் தூக்கிக்கொண்டுபோனான். யோசுவா என்பவனே இயேசுவே! இயேசுவே! என்று சொல்லிக்கொண்டேயிருந்தான். அவனைத் தூக்கி ஆற்றில் எறிந்தார்கள். அவன் கட்டப்பட்டவனாயிருந்தாலும் தண்ணீரில் அமிழ்ந்தாமல் இருந்ததால் அவனை ஈட்டியினால் குத்தி ஆறறில் அமிழ்த்தினார்கள். அவன் இன்னும் இயேசு சுவாமியின் திருநாமத்தைச் சொல்லிக்கொண்டே தண்ணீரில் இறங்கி மறைந்துபோனான்.

இந்தக் காப்பிரிப் பாலயன் தன்னை மீட்ட கர்த்தருக்காக தன் உயிரையும் அருமையென்றெண்ணாமல் முதல் இரத்தச்சாட்சியாகிய ஸ்தேவானைப்போலவே மரித்து பேரின்ப வீட்டில் சேர்ந்தான்.

வி. ஹா.

விளம்பரம்.

திடப்படுத்தலைக்குறித்து திறமையான இசை எழுதுகிற 5 பேருக்கு, டாக்ட்டர் சார்ஜென்றையரவர்கள் அடியிற்கண்ட விபரப்படி பந்தையம் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். திருநெல்வேலி ஜில்லாவில் சர்ச்சு மிஷியோனைச்சேர்ந்த சுதேச பாஸ்டர் மட்டும் இதை எழுதவேண்டியது.

முதலாவது பந்தையம்	30	ரூபாய்
2-வது ,,	25	,,
3-வது ,,	20	,,
4-வது ,,	15	,,
5-வது ,,	10	,,

இசை எழுதவேண்டிய விபரமாவது:

திடப்படுத்தலுக்கு ஆயத்தப்படுகிறவர்களை முன்னுக்குவைத்துக்கொண்டு திடப்படுத்தலின் பொருள் அவர்களுக்கு விளங்கும்படி கேள்வி கேட்டுப் படிப்பிக்கிற வகையாய் எழுதவேண்டும்.

கோவாத்தாள் நீளத்தில் 12 பக்கத்துக்கும், பக்கத்துக்கு 30வரிக்கும் அதிகமாயிருக்கப்படாது.

இசைகளை 1877ஆம சுலாய்மீ 20உக்குள்ளாக பாளையங்கோட்டையில் டாக்ட்டர் சார்ஜென்றையரவர்களுக்கு அனுப்பவேண்டும்.

1877-ஆம பெபுருவரிமீ 16உ.

E. SARGENT, D. D.

மார்ச்சுமீ நாள் 31. மாசிமீ 20உமுதல், பங்கூனிமீ 20உவரை.

வாரம்.	இங்கிலீஷ் தேதி.	தமிழ்த் தேதி.	அன்றுடகத் தியானம்.
வி	1	உ0	என் கற்பனைகளை கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பா
வெ	2	உக	நானே ஜீவ அப்பம். யோ. 6:48. [யிருக்கிறான். யோ. 14:21:
ச	3	உஉ	தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம்பண்ணக்கடவன். 7.
ஞா	4	உக	தேவன் தம்முடைய சனத்தை மீட்டுக்கொண்டார். சங். 43: 1. [87.
தி	5	உச	நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். மத்தேயு 11: 28.
செ	6	உஎ	சீஷர்களெல்லாரும் அவனை விட்டு ஓடிப்போனார்கள். மத். 26: 56.
பு	7	உசு	பூமியிலே சமாதானமும் மனிதர்மேல் பிரியமும் உண்டாவதாக.
வி	8	உஎ	என் ஆடுகளைப் போஷிப்பாயாக. யோ. 21: 16. [லூக்கா 2: 14.
வெ	9	உஅ	என் ஆட்டுக் குட்டிகளைப் போஷிப்பாயாக. யோ. 21: 15.
ச	10	உசு	தாங்கள் குத்தினவனை நோக்கிப் பார்ப்பார்கள். யோ. 19: 37.
ஞா	11	கூ0	உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி. வெளி. 13: 8
தி	12	க	நான் கூப்பிடுகிறதினால் இளைத்தேன். சங்கீதம் 69: 3.
செ	13	உ	முகத்துக்கத்தினாலே இருதயம் சீர்ப்படும். பிரசங்கி 7: 3.
பு	14	ங	எனக்குச் செய்த கிருபையை பெரிதாக விளங்கப்பண்ணினீர்.
வி	15	ச	என் மீட்பர் உயிரோடிருக்கிறார். யோபு 19: 25. [ஆதி. 19: 19.
வெ	16	ஞ	தேவனை நோக்கிக் காத்திரு. சங்கீதம் 42: 5.
ச	17	ஞ	அசதியானவன் பட்டினியாயிருப்பான். நீதி. 19: 15.
ஞா	18	ஙி	கிறிஸ்துவுக் குட்பட்டவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை. கொ. 8:1.
தி	19	ஙி	ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான். நீதி.
செ	20	ங	விழித்திருந்து செபம்பண்ணுங்கள். மாற்கு 13: 33. [19: 27.
பு	21	உ0	உம்முடைய தேவன் உமக்குத்துணைநிற்கிறார். 1 நாளா. 16: 9.
வி	22	கக	இரட்சிப்பு கர்த்தருடையது. யோனா 2: 9.
வெ	23	கஉ	ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள். எபி 3: 13. [49: 18
ச	24	கங	கர்த்தாவே உம்முடைய இரட்சிப்புக்கு காத்திருக்கிறேன். ஆதி.
ஞா	25	கச	அதிகாரிகள் ஏகமாய் ஆலோசனைபண்ணினார்கள். சங். 2: 2.
தி	26	கஎ	அவர் சீஷர்களுடைய கால்களை கழுவத்தொடங்கினார். யோ. 13: 5.
செ	27	கசு	நானே வழியும் சத்தியமும் சீவனுமாயிருக்கிறேன். யோ 14: 6.
பு	28	கஅ	நல்ல மேய்ப்பன் தன் ஆடுகளுக்காக தன் சீவனைக் கொடுக்கிறான்.
வி	29	கஅ	என்னை நினைவுகூரும்படி இதைச்செய்யுங்கள். லூக். 22: 19.
வெ	30	ஙக	அவனைச்சிலுவையிலறையும்படி கொண்டுபோனார்கள். மத் 27: 31.
ச	31	உ0	அதோடே கூடஅடக்கம்பண்ணப்பட்டவர்கள். கொலோ. 2: 12.

விசேஷித்த நாட்கள்.

4. லெந்தென்னும் நாட்களில் மூன்றாம் ஞாயிறு.
11. லெந்தென்னும் நாட்களில் நாலாம் ஞாயிறு.
15. அமாவாசை.
18. லெந்தென்னும் நாட்களில் ஐந்தாம் ஞாயிறு.
25. உயிர்த்தெழுந்த நிருநாளுக்கு முன்வரும் ஞாயிறு.
29. பௌரணமி.
30 பெரிய வெள்ளிக்கிழமை.

நற்போதகம்.

சு. ஏப்பிரல்மீ. ஙஅஎஉ.

கொரிந்தியரின் முதலாம் நிருபம்.

V. அதிகாரம்.

1-ம் வாக். முந்தின அதிகாரத்தின் கடைசி வாக்கியத்தில் "நான் பிரம்போடே உங்களிடத்தில் வரவேண்டுமோ" என்று பவுல் அப். சொல்லுகிறார். இந்த வாக்கியத்தில் அந்தப் பிரம்பு எப்படி ஒருவேளை தேவையாயிருக்குமென்று காட்டுகிறார். ஒருவன் தன் தகப்பன் உயிரோடிருக்கையில், 2 கொரி. 7: 12. அவன் இரண்டாந் தாரத்தைத் தனக்கு மனைவியாகச் சேர்த்துக்கொண்டதாகத் தோன்றுகிறது. வைப்பாட்டியாகவல்ல, மனைவியாக வைத்துக்கொண்டிருக்கிறான் என்பது கிரேக்குப் பாஷையில் எப்போதும் கலியாணத்தைக் குறிக்கும். அச் சபையின் மூப்பர் இப்படிப்பட்ட குற்றவாளி ஒருவனுக்கு இடங்கொடுத்தது ஆச்சரியந்தான். ஆனால் கொரிந்துப் பட்டினத்தார் எவ்வளவு சீர்கெட்ட நிலைமையிலிருந்தார்கள் என்பதை நாம் மறக்கலாகாது.

5-ம் வாக். "அவனைச் சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும்." பாவஞ்செய்தவர்களைத் தண்டிக்கும்படி சரீரத்தில் வியாதியையாவது மரணத்தையாவது வருவிக்கிற சக்தி அப்போஸ்தலருக்கு இருந்தது. அனனியா, சப்பிராள், எலிமாஸ் என்பவர்கள் இவ்விதமாகவே தண்டிக்கப்பட்டார்கள். சரீரத்தை மாத்திரமல்ல ஆத்துமாவையுங்கூட சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கிற "சபைக்குப் புறம்பாக்குதல்" என்னும் உரோமான் சபைச் சட்டத்துடன் அப்போஸ்தலனுடைய தீர்ப்பை ஒப்பிட்டுப்பார்க்கும்போது, இந்தத் தீர்ப்பு எவ்வளவு இலேசு!

7-ம் வாக். "புளித்த மாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள்." புளிப்பில்லா அப்பப்பண்டிகை வருமுன் ஒவ்வொரு யூதக் குடும்பத்தாரும் புளிப்புள்ள யாதொன்றையும் வைக்காதபடிக்கு வெகு திட்டமாய்த் தங்கள் தங்கள் வீடுகளைப் பரிசோதிப்பார்கள்.

9-ம் வா. இங்கே சொல்லியிருக்கிற நிருபம் நமக்கு இல்லை.

10-ம் வா. "நீங்கள் உலகத்தைவிட்டு" கிறிஸ்துவானவர் தமது சீஷர்களுக்காகப் பண்ணின ஜெபமாவது, யோ. 17: 15. "நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல்," சுத்தமும் ஒழுக்கமுமுள்ளவர்களோடு மாத்திரம் நாம் ஐக்கியமாயிருக்கலாமென்பதே இந்த வாக்கியத்தின் கருத்து.

13-ம் வா. பொல்லாதவனைத் தண்டிக்கும்படி அவன் சொல்லாமல், தள்ளவேண்டுமென்று சொல்லுகிறான்.

VI. அதிகாரம்.

"அநீதிக்காரரிடத்தில் போகத் துணிகிறது" வழக்குகளைத் தீர்க்கும்படி அவிசுவாசிகளுக்கு முன்பாகப் போகக்கூடாது என்பது யூதருக்குள்ளுஞ் சட்டமாயிருந்தது. அஞ்ஞானிகளாயிருந்த ரோமருங்கூட வழக்குகளைப் பஞ்சாயத்தார் தீர்க்கலாம் என்றும், அந்தத் தீர்ப்புக்கு கட்சிக்காரர் அடங்கி நடக்கவேண்டுமென்றுஞ் சொன்னார்கள்.

2-ம் வா. "பரிசுத்தவான்கள் நியாயந்தீர்ப்பார்கள்." அவர்கள் கிறிஸ்துவோடுகூட நியாயந்தீர்க்கிறவர்களாய் உட்காருவார்கள். அப்படியே தானியேல் 7: 21. "நியாயவிசாரிப்பு உன்னதமானவருடைய பரிசுத்தவான்களுக்குக் கொடுக்கப்பட்டு" இது விஷயத்தில் தேவ புத்திரர் எவ்வளவு கனம்பெற்றவர்களாயிருக்கிறார்கள். மனுஷர், தேவ—மனுஷனுகிய அவரோடு உட்கார்ந்து சம்மனசுக்களை நியாயந்தீர்ப்பார்கள்.

4-ம் வா. "அற்பாய் எண்ணப்பட்டவர்களை" பரி. பவுல் இப்படிப்பட்ட வழக்குகளை எல்லாம் அற்பமாய் எண்ணி சபையில் அற்பமாய் எண்ணப்பட்டவர்களை அவைகளைத் தீர்க்கும்படி ஏற்படுத்துகிறார். இதைக் கட்டளையாகச் சொல்லாமல் எதிர் நிலைப்பொருளாய்ச் சொல்லுகிறார்.

7-ம் வா. கிறிஸ்துவுக்குள் சகோதரரானவர்களுக்கு வழக்குகள் ஏது!

9-ம் வா. இந்த எச்சரிப்பு கொரிந்துவைப்போன்ற கன்மார்க்கமான இடத்திற்கு வெகு அவசரமாயிருக்கும்.

11-ம் வா. "கழுவப்பட்டீர்கள்" என்பதற்கு மூல பாஷைக் கருத்தின்படி "கழுவிக்கொண்டீர்கள்" என்றர்த்தம்.

"பரிசுத்தமாக்கப்பட்டீர்கள்," நீங்கள் பரிசுத்த ஆவியைப்பெற்றதினுல் தேவனுக்கு சமர்ப்பிக்கப்பட்டுப் பரிசுத்தாளீர்கள்.

"நீதிமான்களாக்கப்பட்டீர்கள்," கிறிஸ்துவைப்பற்றும் உங்கள் விசுவாசத்தினுலே (ரோம. 1: 17 வா-ல் சொல்லப்பட்ட) "தேவ நீதியைப் பெற்றீர்கள்.

"நமது" என்னும் இந்தச் சிறு மொழியினுல் தம்மாலே அதிகமாய்க் கண்டிக்கப்பட்ட கொரிந்தியர் தம்மூடன்கூட சுவிசேஷத்தின் சிறந்த ஆசீர்வாதங்களுக்குப் பங்காளிகளாயிருக்கும் சம்பந்தத்தை அப்போஸ்தலன் காட்டுகிறார்.

12-ம் வா. "எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு." இவை அப்போஸ்தலனுடைய சொந்த வார்த்தைகளாயிருக்கவேண்டும். ஆயினும் இந்த வாக்கியத்தின் கருத்துக்கு ஒரு அளவு அல்லது எல்லையுண்டு என்று காட்டுகிறார். (10—23 வா.) மேலும் இந்த வார்த்தைகளை எப்படி விபரீதமாய் அர்த்தப்படுத்தலாம் என்றும் காட்டுகிறார். "எல்லாவற்றையும்" என்பதில் விபசாரமும் அடங்கியிருக்கிறதா?

"நான் ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன்." அப்போஸ்தலன் இப்படிச் சொல்லியிருக்க அநேகர் குடிவெறிக்கு அடிமைகளாகிறார்கள்.

13, 14. "இதையும் அதையும் ஒழியப்பண்ணுவார்." பரலோகத்தில் பசியுமில்லை தாகமுமில்லை. ஆகையால் வயிறும் போசனமும் அழிவுள்ளது. ஆயினும் சரீரம் அப்படி அழிவுள்ளதல்ல. ஆகையால் நாம் அதை விபசாரத்தினுலே தீட்டுப்படுத்தக்கூடாது. இம்மையிலும் மறுமையிலும் ஆண்டவரைச் சேவிக்கும்படி சரீரம் உண்டாக்கப்பட்டது. ஆண்டவரும் மனிதரை மீட்கிறவிதத்தில் மனிதருக்காக உண்டாக்கப்பட்டார்.

"இருவரும் அழிவில்லாதவர்களே." பரி. பவுல் பல நியாயங்களைக்கொண்டு விபசாரம் கொடிய பாவம் என்று காட்டுகிறார். (1) ஆண்டவர் எப்படி நமது சரீரத்தைக் காப்பாற்றுகிறவரும், ஆதரிக்கிறவருமாயிருக்கிறாரோ அப்படி நமது சரீரமும் அவருடைய ஊழியத்துக்காகச் செய்யப்பட்டதுதான். (2) உயிர்த்தெழுதலின் காலில் நமது சரீரமும் கூட எழுப்பப்படும். (3) நமது சரீரம் கிறிஸ்துவின் அவயவமாயிருக்கிறது. (4) அது விபசாரத்தினுல் விசேஷித்தவகையாய்த் தீட்டுப்பட்டுஞ் சேதப்பட்டும்போகிறது. (5) அது பரிசுத்த ஆவியின் ஆலயமாயிருக்கிறது. (6) ஆத்துமா கிறிஸ்துவின் இரத்தத்தினுலே மீட்கப்பட்டிருக்கிற பிரகாரம் சரீரமும் மீட்கப்பட்டிருக்கிறது.

17-ம் வா. இதில் கிறிஸ்துவுக்கும் மனிதருடைய உள்ளான ஆவிக்கும் இருக்கப்பட்ட நெருங்கின சம்பந்தம் காட்டப்படுகிறது. யோ. 17: 21. 15: 1—7. வெறியும் பெருந்தீனியும் ஒருவகையாய் சரீரத்துக்கு விரோதமான பாவங்கள்தான். என்றாலும் அப்போஸ்தலனுடைய கருத்து இதுவல்ல. வேசியோடு சேரும் மனுஷன் தேவப்பிரமாணத்தின்படி (ஆதி. 2: 24. அவர்கள் ஒரே மாமிசமாயிருப்பார்கள்.) அவளோடே ஒன்றுயிருக்கிறான். அதினுலே அவனுடைய சுய தன்மை அற்று அல்லது கெட்டுப்போகிறது. இப்படி ஒருவன் ஒரு பாவத்தோடு தன்னை ஒன்றுக்கிக்கொள்வதற்கு வகையில்லை.

Communicant's Companion.

நற்கருணை விளக்கம்.

ஐந. அதிகாரம்.

நாம் நற்கருணைப் பந்தியைச் சேர்ந்துவந்ததின் பிறகு நடந்து கொள்ளவேண்டிய நடையுடை பாவனைகளைப்பற்றின சில எச்சரிப்புகள்.

பொழிப்புரை.

(தொடர்ச்சி.)

2. மனச்சாக்ஷிக்கேற்க பிறருக்குரிய விஷயத்தில் நேர் நிதானமாய் நடந்துகொள்ளப் பார்க்கவேணும். கர்த்தருடைய பந்தியை விட்டு வந்ததின்பிறகு பிறருடைய பொருளுக்குரிய விஷயத்திலாவது பெயருக்குரிய விஷயத்திலாவது நஷ்டத்தையுண்டுபண்ணுகிறவர்களாய் காணப்பட்டால் நாம் கொடிய வஞ்சகராய்க் காணப்படுவ

தோடுங்கூட நம்முடைய பரிசுத்த நாமத்துக்கு அவதூறை வருவிக்கிறவர்களாயுமிருப்போம். சாக்கிரமெந்தில் நாம் பண்ணின பொருத்தனையை எப்போதும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு உலகத்தை வெறுப்பேனென்று பிரதிக்கினைபண்ணின நான் அற்ப ஆதாயத்துக்காக என் சகோதரனையே மாற்றும்படி பார்ப்பதால் என் பக்திவிரதத்தைக் கெடுத்து, மனச்சாக்ஷியை அடக்கி, மோக்ஷவாசியாவதற்குப் பதிலாக, நரகவாசியாகப் பார்ப்பதெப்படி? அப்படி ஒருபோதும் ஆகாதிருப்பதாக என்று தீர்மானம்பண்ணிக்கொண்டு எந்தச் சோதனையையும் எதிர்த்து நிற்கவேணும்.

3. கிறிஸ்துவுக்குரிய சாந்தமும் சமாதானமுமுடையவர்களாயிருக்கப் பார்க்கவேணும். நற்கருணைப் பந்தியைவிட்டு வந்தவுடனேமாத்திரம் இப்படிப்பட்ட சிந்தையுடையவர்களாயிருப்பது போதாது. எப்போதும் அந்தச் சிந்தையையணிந்துகொள்ளப் பார்க்கவேணும். ஞானம் ஆயத்தப்படுத்திவைத்த பந்தியை ருசிபார்த்தவர்களாகிய நாம் பரத்திலிருந்துவந்த ஞானத்துக்கொப்பாய் சுத்தமும், சமாதானமும், சாந்தமும், இணக்கமும் உள்ளவர்களாயிருக்கப் பார்க்கவேணும். பூர்வீகத்தில் அடிமைகளையுடையவர்கள் குறித்த காலத்தில் அவர்களை விடுதலைபண்ணவேண்டிய தேவப்பிரமாணமிருந்தது. அந்தப் பிரமாணத்தின்படி தங்கள் அடிமைகளைப் போகவிட்டவர்கள் திரும்பவும் இவர்களைத் தங்களுக்கு அடிமைவேலை செய்யும்படி இழுத்துக்கொள்ளுகிறது சிலருக்கு வழக்கமாயிருந்தது. அப்படிப்பட்டவர்கள்பேரில் தேவன் விசனங்கொண்டார். அப்படிப்போல கர்த்தருடைய பந்தியைச்சேருந்தருணத்தில் வர்மத்தையும் பகையையுஞ் சாதிக்கிறவர்களாயிருந்தால் அப்படிப்பட்டவர்கள்பேரில் தேவனுக்கு எவ்வளவு விசனமிருக்கமாட்டாது.

4. சொஸ்தப் புத்தியும் கற்புக் காக்கும் நிலைமையும் உடையவர்களாயிருக்கிறோமோவென்று பார்க்கவேணும். கிறிஸ்துவோடு ஐக்கியப்பட்டு நித்திய ஜீவனுக்குப் பங்காளரென்று சொல்லிக்கொள்பவர்களுக்குப் பெருந் தீனியும் குடியும் மாம்ச இச்சையும் கொடிய நிந்தையென்பதை மறக்கக்கூடாது. கர்த்தரோடு விருந்துண்டவர்கள் பஞ்சேந்திரியங்களின் இச்சைக்கிடங்கொடுப்பது நன்றல்ல. தேவதூதர்களின் ஆகாரமாகிய மன்னாவைப் பொசித்த இஸ்ரவேலர் இறைச்சியின்பேரில் இச்சையாயிருக்கிறோம் என்றது மதியீனம். அதுபோல ஜீவ அப்பத்தைப் பொசித்து ஜீவ தண்ணீரைப் பானம்பண்ணினவர்களாகிய நாம் கெடுதியை உண்டுபண்ணும் இச்சைக்கிடங்கொடுக்கும் போது நம்மைக்குறித்து என்ன சொல்லப்படும். "அவர்கள் முடிவு அழிவு. அவர்கள் தேவன் வயிறு. அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே. அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள்" என்றே சொல்லவேணும். ஆகையினாலே சகலவிதமான தீமைக்கும், தீமையாய்த் தோன்றுகிறவைகளுக்கும் விலகவேணும். விழித்திருந்து சொஸ்தப்புத்தியுள்ளவர்களாயிருக்கக்கடவோம். ஏனெனில் நம்மிடத்தில் அன்புகூர்ந்து தமது இரக்கத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவினவர் நம்மைத் தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக இராஜாக்களும் ஆசாரியருமாக்கியிருக்கிறார்."

5. நாம் அன்பும் பரோபகாரச் சிந்தையுமுள்ளவர்களாயிருக்கிறோமா என்பதையும் நம்முடைய நடக்கையைக்கொண்டு பரிசோதிக்கவேணும். மற்றவர்களுக்குக் கெடுதிவருவியாமலிருப்பது மாத்திரம் போதுமென்றிருக்கக்கூடாது. நன்மைசெய்கிறவராகச் சுற்றித்திரிந்த

நம்முடைய அருமை ரக்ஷகரைப்போல யாராருக்கு எவ்வகையாய் நன்மை செய்யலாமென்பது நம்முடைய எண்ணமும் விடாமுயற்சியுமாயிருக்கவேணும், கிறிஸ்து பாதகராகிய நமக்காகத் தம்மை வெறுமையாக்கியிருக்க, நாம் தன்னயம்பாராட்டுகிறது நல்லதா? கிறிஸ்து நமக்காகப் படாத பாடுபட்டு பாரச்சுமை சுமந்து மன்னுயிருக்காக தன்னுயிரையும் விட்டிருக்க, பிறருக்கு நன்மை செய்யவேண்டிய விஷயத்தில் நம்முடைய வருத்தத்தை யொரு பொருட்டென்று எண்ணலாமா? கிறிஸ்து, ஏழைகளாகிய நம்மை யீடேற்றும்பொருட்டு, ஏழையிலும் ஏழை ரூபமெடுத்து நம்மைத் தம்முடைய சகோதரனென்றழைக்க வெட்கப்படாமல் நமக்காக இப்பொழுதும் தம்முடைய பிதாவை நோக்கி மன்றாடிக்கொண்டுவர, நாம் ஏழைகளை அற்பமாயெண்ணி அவர்களுக்கு நன்மை செய்வது கனக்குறைச்சலென்றெண்ணலாமா? இவ்வகையாய் அவருக்குப் பிரியமான பிள்ளைகளாய் அவருக்கொப்பாய் நடக்கப் பிரயாசப்படவேணும்.

6. பூமிக்குரியவைகளையல்ல மேலானவைகளைச் சிந்திக்கிறவர்களாயிருக்கிறோமென்பதை நம்முடைய நடையுடை பாவனையைக்கொண்டு சோதிக்கவேணும்.

அப்படியாகிறபோது நாம் மெய்யான கிறிஸ்தவர்களென்பதை யறிந்துகொள்ளலாம். "கண்ணுக்குக் காணப்படுகிறவைகள் அழிந்து போகிறவை. கண்ணுக்குக் காணப்படாதவை நித்தியம்" என்று எக்காலமும் பரத்தை நோக்குகிறவர்களாயிருக்கவேணும். சிலுவையிலறையுண்ட கிறிஸ்துவை நோக்கும்போது உலகத்தை அற்பமாயெண்ணுவோம். உலகம் அவரை அறியாமல் அவரைச் சிலுவையிலறைந்தது. அவரோ உலகத்தைச் செயித்தார். அப்படிப்போல உலகம் நமக்குச் சிலுவையிலறையப்படவும் நாம் உலகத்துக்குச் சிலுவையிலறையப்படவும் ஏதுவாயிருந்தால் நாம் உலகத்தைச் செயிக்கிறவர்களாயிருப்போம். மகிமையாசனத்தில் வீற்றிருக்குங் கிறிஸ்து இயேசுவைத் தியானிப்பதால் கிறிஸ்து பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் மேலானவைகளைத் தேடுகிறதோடுகூட அவர் வருகைக்கு எதிர்பார்த்துக்கொண்டுமிருப்போம்.

௰௪. அதிகாரம்.

பலவித துன்ப துயரங்களால் சங்கடப்பட்டுத் தவித்துக்கொண்டிருக்கும் கிறிஸ்தவர்களுக்கு இந்தப் பரமவிருந்தால் கிடைக்கும் சில ஆறுதலுந் தேறுதலுமான வார்த்தைகள்.

அந்தச் சட்டங்களாவன.

I. முன் செய்த பாவங்கள்.
II. நாடோறும் நம்மில் காணப்படும் குற்றம் குறைவுகள்.
III. நம்மில் மறைந்திருக்கும் உள்ளான பாவக் கேடுகள்.
IV. நம்முடைய ஆத்ம நிலைமையைப்பற்றி நமக்குள் எழும்பும் சந்தேகங்கள்.
V. பூமிக்குரிய இடையூறுகள்.
VI. மரண பயம் ஆகிய இவைகளே.

ஆண்டவர் ஏற்படுத்தின திருவிருந்தானது அவருடைய பிள்ளை

களுக்குத் தற்கால சந்தோஷத்தைமாத்திரமல்ல. எக்காலத்துக்கும் ஆறுதலுக்கொடுக்கத்தக்கதாகவே ஏற்படுத்தப்பட்டது. அது வரண்ட நிலத்தைச் செழிப்பாக்கும் நீரூற்றென்று அறிந்துகொள்ளவேணும். தேவபுத்திரர் எப்போதும் மனச் சந்தோஷமாயிருக்கவேண்டுமென்பதே தேவ சித்தம். பவுல் அப்போஸ்தலனைப்போல தூக்கப்படுகிறவர்களென்றாலும் எப்போதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும், ஒன்றுமில்லாதவர்களானாலும் எல்லாவற்றையுமுடையவர்களாகவுமிருக்கிறது என்பது கர்த்தருடைய பிள்ளைகளுக்கிருக்கும் குறிப்பு. கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷப்படுங்கள் என்பது கிறிஸ்தவர்களின்பேரில் சுமத்தப்பட்ட கடமை. அவபக்தியுடையவர்களுக்கு இந்தச் சிலாக்கியம் கிட்டாது. விலக்கப்பட்ட விருக்ஷத்தின் கனியைப் புசிக்கிறவர்களுக்கு ஜீவ விருக்ஷத்தின் கனியைப் புசிக்க உத்தரவில்லை. தேவன் தம்முடைய பிள்ளைகளின்பேரில் தம்முடைய முகத்தைப் பிரகாசிக்கும்போது அவர்கள் சந்தோஷிக்கக் கேட்பானேன்.

கிறிஸ்து அவர்களிருதயத்தில் சிம்மாசனம்போட்டுக்கொண்டிருக்கும்போது அவர்கள் மகிழ்ச்சிகொண்டாடுவது இயல்புதானே. புதையல் கண்டெடுத்தவன் எப்படி மகிழுவானோ அப்படியே ஆணிமுத்தாகிய சுண்டுமுத்தைக் கண்டெடுத்தவர்களாகிய இவர்கள் எவ்வளவுக்கதிகமாய்ச் சந்தோஷப்படமாட்டார்கள்? ஆகிலும் இந்தச் சந்தோஷம் கலப்பில்லாச் சந்தோஷமல்ல. நாம் இங்கேயிருக்கும்பரியந்தம் அழுகையின்பள்ளத்தாக்கை யுருவடக்கிறவர்களாயிருக்கிறோம். பாவ சாகரத்தைக் கடந்துபோகிறவர்களாயிருக்கிறோம். அலை நம்மேல் மோதாதிருப்பதில்லை. சத்துருவின் பாஷையதினூடே பிரயாணம்பண்ணுகிறோம். அவனின் அக்கினியம்பு நம்மேல் படாமல் போகாது. ஆகையினாலேதான் இந்த இடையூறுகளுக்கு மாற்றுகர்த்தருடைய பந்தியால் நம்மைச் சந்தோஷிப்பித்துப் பெலப்படுத்தத்தக்க வழிவகைகளை ஏற்படுத்தியிருக்கிறார். ஆகையாலிந்தப் பந்தியை ஏற்ற கன பக்தியோடு சேருகிறவர்கள் "தூக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் எப்போதுஞ் சந்தோஷப்படுகிறவர்களாகவும் தரித்திரர் என்னப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறவர்களாகவும் ஒன்றுமில்லாதவர்களென்னப்பட்டாலும் சகலத்தையுமுடையவர்களாகவும் விளங்கப்பண்ணுவார்கள்". ஆகையால் நமக்குச் சங்கடத்தையுண்டுபண்ணுகிற சில காரணங்களைக் கவனிக்கக் கடவோம்.

Life of Arch Bishop Cranmer.

கிரான்மர் சிரேஷ்ட கண்காணியார் சரித்திரம்.

(தொடர்ச்சி.)

இந்தக் காரியத்தை நிறைவேற்றக் குறிக்கப்பட்டவர்கள் ஈலி நகரத்து தரல்பிக் கண்காணியாரும், பொன்னர் என்ற நிஷ்டரனுமே. தரல்பிக் கண்காணியார் சிரேஷ்டகண்காணியாரோடு வெகுகாலம்நிகேகமாயிருந்து அவரிடத்தில் அநேக உபகாரங்களைப் பெற்றவர். சிரேஷ்ட கண்காணியாராக் கண்டபொழுது அவர் விட்ட கண்ணீரும், பெ

ருமூச்சுகளும் அவர் பெற்ற உபகாரத்தை ஒருவாறு நினைத்ததாக வெளிப்படுத்துகின்றன. சிரேஷ்ட கண்காணியாரை எத்தனை வகையாயெல்லாம் ஈங்கிலேஷசெய்யக் கூடுமோ அத்தனை வகைகளையெல்லாம் இவர்கள் கையாடினார்கள். கன்னைகளினாலும், இரட்டினாலும் சிரேஷ்ட கண்காணியார் உடுப்புப்போல் ஒன்றைச் செய்வித்து அதை அவருக்கு உடுத்தி, தலையிலே பரியாசக் குல்லா ஒன்றிட்டு, கையிலே கண்காணியார் கோலுக்கொப்பான ஒரு கோலையுங் கொடுத்து, மேரி கோவிலில் அவனைக் கொண்டுபோய் நிறுத்தி, வேடிக்கை காண்பித்ததன்றி, பொன்னர் என்பவன் அவரைச் சுட்டிக்காட்டி, "பாப்புவானவரை அசட்டைபண்ணினவன் இவன், இப்பொழுது பாப்புவானவரால் நியாயம் விசாரிக்கப்படப்போகிறான். அநேகங் கோவில்களை இடித்துப்போட்டவன் இவன், இப்பொழுது கோவிலிலே நியாயம் விசாரிக்கப்பட வந்திருக்கிறான். பரிசுத்த சாக்கிரமெந்தைக் குற்றப்படுத்தினவன் இவன், இப்பொழுது அந்தச் சாக்கிரமெந்துக்குமுன்பாகவே ஆக்கினைதீர்ப்படைய வந்திருக்கிறான்" என்றிப்படிப் பலவிதமாய்ப் பேசி அவரை நெம்பவும் பரியாசம்பண்ணினான். அப்புறம் அவருடைய வஸ்திரங்களை ஒவ்வொன்றாய்க் கழற்றி, தலைமுடியை வெட்டி, அவர் அபிஷேகம்பண்ணப்பட்டிருந்த விரல் நுனிகளைச் சீவித் துடைத்துவிட்டு ஓர் குடியானவனுடைய பழங்கந்தை வஸ்திரங்களை அவருக்கு உடுத்தி, காவல் வீட்டிக்குத் திரும்பவும் அனுப்பிவிட்டார்கள்.

கிரான்மர் என்பவனாக்குறித்து இப்பொழுது சொல்லப்போகிற சங்கதி மகா விசனகரமானதுதான். என்றாலும் உண்மையைச் சொல்லாதிருக்கக்கூடாது. இதுவரையும் சத்தியத்தை உறுதியாய்ப் பிடித்து நின்று அதற்காகப் பலமாயப் போராடியும் வந்த அவர், இத்தறுவாயில் மெய்விசுவாசத்தை விட்டுத் தவறிவிழுந்தார். சிலர் அவர் பேரிலுள்ள பட்சத்தினாலும், வேறு சிலர் அவருடைய இயல்பான கோழைத்தனத்தையறிந்தும், தம்முடைய கொள்கைகளை மறுக்க நயமும் பயமுமாய் அவரை யேவிவிட்டபடியே, அவரும் அச்சோதனையினால் வெல்லப்பட்டு பாப்புமார்க்கத் தப்பறைகளை ஒப்புக்கொள்ளுகிற பாவனையாக அவைகளிற் சிலதை அடங்கிய ஓர் காகிதத்தில் கையொப்பமிட்டார். இதைக்குறித்து சரித்திரக்காரன் ஒருவன் சொல்லுகிறதென்னவென்றால், "அவர் தவறினது மெய்யே. தேவபக்தியிற் சிறந்தவர்களும் மனுஷ இருதயத்தின் சுபாவ பெலவீனத்தை அனுபத்தினால் அறிந்தவர்களுமான பெரியோர் யாவரும் அவர் சிறுமைப்பட்டதினிமித்தம் பரிதபித்து தவறினதினிமித்தம் தூக்கிக்கிறதோடு, இது எனக்குப் படிப்பினை, பிரகாசமான இந்த ரத்தினமே இவ்வாறு கறைப்பட்டு ஒளி மங்கிக் காணுமானால், தேவனே பாவியாகிய என்மேல் இரக்கமாயிரும் என்று உண்மையோடு சொல்லாதிராக்கள்" என்பதே.

இவ்வளவாய் அவரைக் குறைவுப்படுத்தினது போதுமென்று அவருடைய சத்துராதிகள் திர்பதிகொண்டார்களோ? இல்லை. நிஷ்டூரமானவிதமாய் அவரைத் தகனித்துவிடவேண்டுமென்றே தீர்மானித்திருந்தார்கள். இராணியின் மாதாவைத் தள்ளிப்போட்ட விஷயத்தில் சிரேஷ்ட கண்காணியார் சம்பந்தப்பட்டிருந்ததினிமித்தம் இராணி அவர் பேரில் கொண்டிருந்த கடுங்கோபத்தினாலே இப்படி நடந்ததென்று சிலர் நினைக்கிறதுண்டு. ஆகிலும் கார்டினல்போல் என்பவன்தான் அதற்குக் காரணமாயிருந்தவன். அவன் சாதித்து வந்தது எப்படியென்றால், "தப்பறைக்காரனைப்போல இராசாங்கத்துக்குக் கெடுதிசெய்

யத்தக்க கள்ளருமில்லை, கொலைபாதகருமில்லை. அவர்களுடைய துரோகத்துக்கு நிகரான துரோகமுமில்லை. ஆகையால் நெரிஞ்சில்களைப் போலவும் முட்செடிகளைப்போலவும் வேருடன் பிடுங்கி அக்கினிக்கு இரையாக்கவேண்டும்" என்பதுதான்.

கிரான்மர் என்பவர் வியாகுலத்தினாலே நன்றாய்க் குற்றப்பட்டவராக, தமக்கிருந்த நேரத்தை மனங்கசந்து அழுகிறதிலும், பாவத்தை அறிக்கைபண்ணுவதிலும் பின்னிட்டுக்கொண்டு சிறைச்சாலையிலிருந்தார். அவர் தகனிக்கப்படப்போகிற அன்று காலையில் முதலாய் தம்மைக்குறித்து அவர்கள் பண்ணியிருந்த தீர்மானம் அவருக்குத் தெரியாது. என்றாலும் தமக்கு மரணக்கிரை செய்வார்களென்று உத்தேசித்து, அதற்கு ஆயத்தமாய்க் காத்துக்கொண்டிருந்தார்.

பாப்புமார்க்கத்தார் சிரேஷ்ட கண்காணியாரைத் தகனிக்கிற தற்குக் குறித்திருந்த நாளில் மழை பெய்துகொண்டிருந்தது. அதினாலே வழக்கமாய்க் கொலைக்களத்திற் செய்கிற பிரசங்கத்தை மேரி கோவிலிற் செய்யும்படி தீர்மானித்து, சிரேஷ்ட கண்காணியாரை அன்று காலை ஒன்பது மணிக்குப் போல காவல் வீட்டிலிருந்து மேற்படி ஆலயத்துக்குக் கொண்டுவந்தார்கள். பட்டணத்து அதிகாரிகள் இருவர் முன்னும் அவர் பின்னுமாக நடந்துவந்தார்கள். அவர் வலப்புறத்திலும் இடப்புறத்திலும் இரண்டு சந்நியாசிகள் வழிநெடுகப் பல சங்கீதங்களைப் பாடிக்கொண்டுவந்தார்கள். கோவில் வந்து சேர்ந்தவுடனே சனங்களெல்லாரும் அவரை நன்றாய்ப் பார்க்கத்தக்கதாக பிரசங்கப் பீடத்துக்கு எதிரே உயரமாய்க் கட்டியிருந்த ஒரு பரணின் மேல் அவரைக் கொண்டுபோய் நிறுத்தினார்கள். அதன்பேரில் பாப்புமார்க்கத் தலைவர்களில் ஒருவனான டாக்ற்றர் கோல் என்பவன் பிரசங்கத்தை ஆரம்பித்து, தேவனுடைய இரக்கத்தைப்பற்றிச் சிறிதுநேரம் பேசினபின், தேவ நீதிக்குத் திர்ப்பதியுண்டாகத்தக்கதாக கிரான்மர் என்பவர் உயிரோடே தகனிக்கப்படுவது எவ்வளவோ அவசியமென்று காண்பித்தான். ஒருவர் எழுதியிருக்கிறபடி, அவ்வளவு நேரமும் கிரான்மர் என்பவர் எவ்வளவு மனவேதனையோடு மேற்படி பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டு நின்றாரென்று எவர்களும் விவரித்துச்சொல்லக்கூடியதைப் பார்க்க அவருடைய தேகக்குறிகளே நன்றாய்க் காண்பித்தன. ஒரு நேரம் அவர் தமது கண்களையும் கைகளையும் வானத்துக்கு நேரே உயர்த்துகிறவராயும், மறுநேரம் வெட்கத்தினாலே கீழே விழவிடுகிறவராயும் நின்றார். அவரைப் பார்த்த எவர்களும் அவரைத் துக்கசாகரத்தில் மூழ்கினவரென்று சொல்லத்தக்கதாயிருந்தது. இருபது விசைக்கு அதிகமாய் அவர் கண்களில் தண்ணீர் தாராளாய்த் ததும்பி முகமெல்லாம் தாரைதாரையாக வடிந்தது. அச்சமையத்தில் அங்கே கூடியிருந்தவர்கள், அப்பொழுது அவர் கண்களிலிருந்து புறப்பட்ட கண்ணீரிலும் அதிகக் கண்ணீரை எந்தப் பிள்ளையினிடத்திலும் ஒருக்காலும் கண்டதேயில்லையென்று சாட்சியிடுவார்கள். அவருடைய முகத்தையும் கண்ணீரையும் பார்த்த சகலருடைய இருதயமும் ஈயம்போல உருகி அவருக்காக மிகவும் பரிதபித்தது என்பதுபோல அந்தக் காட்சியைக் கண்ணுரக்கண்ட ஒருவர் அபிப்பிராயமாய்க் குறிப்பித்திருக்கிறார்.

Bible Sketches and their Lessons.

பாலபோதனை.

தானியேலின் பக்தியுள்ள நிர்ணயம்.

தானியேல் 6:-ம் அதிகாரம்.

இரண்டாவது. அவன் தன் தேவபக்தியை மறைக்கப் பிரயாசப்படவில்லை. தானியேலின் சிநேகிதர்களில் பயங்காலியான ஒருவன் அடியில்வருமாறு அவனுக்கு யோசனைசொல்லப் பார்த்தாலும் பார்த்திருக்கலாம்.

"சிநேகனே, இப்பொழுது பிறந்திருக்கிற இந்தச் சட்டம் பயங்கரமானதல்லவா? நீர் என்ன செய்ய நினைக்கிறீர்?"

"நான் வழக்கப்படி பிரார்த்திக்கத்தான் போகிறேன்."

"சரி, நாம் அந்தரங்கத்திலே உள்ளதோடும் செம்பண்ணக் கூடியது எவ்வளவு பாக்கியம். தேவனுக்குமுன்பாக நாம் உச்சரிக்கும் சொற்களே காரியமல்லவே."

"என்ன சொல்லுகிறீர்— நான் பிரார்த்திக்கிறேனென்று ஒருவருக்கும் தெரியாதிருக்கத்தக்கதாக எனக்குள்ளே பிரார்த்தித்துக்கொள்ளப்போகிறேனென்று நினைக்கிறீரோ?"

"அப்படியானால் உம்முடைய அறையின் கதவைப் பூட்டிக்கொண்டு பிரார்த்தித்தாலென்ன"—

"அப்படி ஏன் செய்யவேண்டும். அவர்களுக்கு மனமானால் உள்ளே வந்து நான் பிரார்த்திக்கிறதை அவர்கள் பார்க்கட்டுமேன்."

"நல்லது, அப்படியே ஆகட்டும். ஆனால் பலகணிகள் திறந்திருப்பது அவசியமில்லையென்று நினைக்கிறேன்."

"பாபிலோன் மைதானங்களின் வழியாய் நம்முடைய பரிசுத்த நகரமும் மகிமைபொருந்திய தேவாலயமுமிருந்த திசையாய் நான் பார்க்கிற வழக்கத்தை விட்டுவிடுவேனென்று நினைக்கிறீரோ? அது ஒருக்காலும் கூடாது. பலிப்பீடத்தையும் தேவனின் பிராகாரங்களையும் நோக்காமலும் நினையாமலும் நான் பிரார்த்திக்கக்கூடாது."

"அப்படியானால் நீர் அதிகாலையில் எழுந்திருந்து பிரார்த்திக்கலாம், இரவிலும் நட்சத்திர வெளிச்சத்தின் கீழ் முழங்காலூன்றிச் செபிக்கலாம். மத்தியானத்தில் செபிக்கிறதைமாத்திரம் விட்டுவிட்டாலென்ன?

"விடக்கூடாது, காலையிலும் மாலையிலும் அப்படியே மத்தியானத்திலும் என் தேவனை நோக்கி நான் பிரார்த்திக்கவேண்டும்."

"ஆனால் உம்முடைய ஜீவன் எவ்வளவு அருமையானது, எவ்வளவு விலையேறப்பெற்றது. நாங்களெல்லாரும் உம்மாலேதானே இருக்கிறோம். உம்மையல்லாமல் நாங்கள் என்னமாய்ச் ஜீவிக்கப்போகிறோம். ஒரே ஒரு மாதத்துக்கு நீர் பிரார்த்திக்கிறதை உலகத்துக்குக் காண்பிக்காதிருந்தாலென்ன?

என் சிநேகிதனே, போதும்- அதிகம் பேசவேண்டாம். நான் என் தேவனைக்குறித்து வெட்கப்படுகிறதில்லையென்றும், இராசாவின் கற்பனையைப்பார்க்க தேவனை அதிகமாய்க் கனப்படுத்துகிறேனென்றும், அவசியமானால் சிங்கங்களின் கெபியிலேமுதலாய் அவருக்காக மரிக்கவும் ஆயத்தமாயிருக்கிறேனென்றும், பாபிலோனிலுள்ள சகலருக்

கும் விளங்கப்பண்ணுவது என்னுடைய கடமையாயிருக்கிறது."

தானியேலின் சரித்திர முழுமையையும் எடுத்துச்சொல்வது என் நோக்கமல்ல. தானியேல் தேவனை நோக்கிப் பிரார்த்தித்துக்கொண்டிருக்கையில் பொறாமை நிறைந்த அந்தத் தேசாதிபதிகள் அவனைக் கண்டுபிடித்ததும், அதன்பேரில் சிங்கங்களின் கெபியில் அவனைப் போட்டதும், அங்கே தேவன் தமது தூதனைக்கொண்டு அவனைக் காப்பாற்றினதுமான விவரங்கள் உங்களுக்கு நன்றாய்த் தெரியுமே. பயங்கரமான அவ்விடத்திலே தானியேலுக்கு அறிவிலிருந்த சுகத்துக்கு நிகரான சுகம் எவ்விடத்திலும் உண்டோ! தரியுவோடு இராஜ மஞ்சத்தில் நித்திரை செய்வதிலும் தானியேலோடு கெபியிலிருக்கயாருக்குத்தான் பிரியமிராது? இராசா அதிகாலையில் எழுந்திருந்து, மகத்துவம்பொருந்திய இராஜ அரண்மனையையும் அதைச் சூழ்ந்த அழகிய நந்தவனங்களையும்விட்டு, பூக்கம்பம்போல் சிங்கங்கள் கெர்ச்சிக்கும் கெபிகளுக்கு விரைந்து செல்லுகிறதைப் பாருங்கள். தானியேலோ எவ்வளவேனும் சேதமின்றி சுகபத்திரமாயிருக்கிறான். "அவன் தன் தேவன்பேரில் நம்பிக்கையாயிருந்தபடியால் அவனிடத்தில் ஒரு சேதமுங்காணப்பட்டதில்லை."

இப்பொழுது நமக்கு உண்டாகிற படிப்பினையைப் பாருங்கள். முதலாவது தானியேலிடத்தில் விளங்கிய உற்சாகமாய் நன்மை செய்கிற குணமும், இரண்டாவது அவனிடத்தில் காணப்பட்ட தைரியமும், மூன்றாவது அவனுடைய செபசிந்தையும் நமக்கு நல்ல மாதிரிகளாயிருக்கின்றன. மற்றதெல்லாவற்றையும் நீங்கள் மறந்துபோன போதிலும், தேவனை நோக்கிப் பிரார்த்திப்பதற்கு ஒருபொழுதும் வெட்கப்படலாகாது என்ற படிப்பினையை ஞாபகத்தில்வைத்துக்கொள்ளுங்கள்.

ஒரு சிறுவனைப்பற்றி ஒரு சரித்திரம் வாசித்திருக்கிறேன். அவன் பேர் ஆர்தர் என்பது அவன் முதல்விசையாய்ப் பள்ளிக்கூடத்துக்குப் போனபொழுது, இரவில் ஒரு பெரிய அறையில் படுக்கச்சொன்னார்கள். அந்த அறையில் வேறு அநேக பையன்களும் படுப்பார்கள். இந்தச் சிறுவன் அங்கே வந்தபொழுது மற்றப் பிள்ளைகள் ஒருவரோடொருவர் பேசுகிறதும் சிரிக்கிறதும் விளையாடுகிறதுமாயிருந்தார்கள். ஆர்தர் என்ற பிள்ளையோ படுக்கப்போகுமுன் தன் தாய் தனக்குப் போதித்திருந்தபிரகாரம் முழங்காலூன்றி செபம்பண்ணினான். அதைப்பார்த்து சிலர் பரியாசம்பண்ணினார்கள், மற்றவர்கள் ஒன்றும் பேசாதிருந்தார்கள். வெகுநாளாய் அந்தப் பையன்களில் ஒருவனாவது தன் படுக்கையண்டையில் செபம்பண்ணினதேயில்லை ஆனாலும் இந்தச் சிறுவன்செய்தகாரியத்தைப்பார்த்து அவர்களில் சிலர் பயபக்தியாய் யோசிக்க ஏவப்பட்டார்கள். ஒரு சிறுபையன் தங்களெல்லாருக்குமுன்பாக முழங்காலூன்றிச் செபம்பண்ணுகிறதைப்பார்த்து அவர்கள் வெட்கமடைந்தார்கள். இரண்டொரு நாளுக்குள்ளாக முதலாவது ஒருவன், பிற்பாடு இன்னொருவன் அப்புறம் இன்னொருவன் ஆக அவர்களெல்லாரும் ஆர்தரைப்போல செய்யத் தொடங்கினார்கள். இன்னம் சிரிக்கிறவர்களும் பரியாசம்பண்ணுகிறவர்களுமாயிருந்த மற்றவர்களும் தங்கள் துர்க்குணத்தைக்குறித்து வெட்கப்பட்டார்கள். இவ்வாறு ஆறு மாதத்துக்குள்ளாக அவ்விடத்திலிருந்த எல்லாப் பிள்ளைகளும் ஒவ்வொரு இரவிலும் அந்த அறையில் பிரவேசித்தவுடனே கதவைப் பூட்டிக்கொண்டு அவனவன் தன் படுக்கையண்டையில் அமைதலாய் முழங்காலூன்றிச் செபம்பண்ணினார்களென்று சொல்லியிருக்கிறது. இந்

தச் சொற்களை வாசிக்கும் ஒவ்வொருவரும் எக்காலத்திலும் எவ்விடத்திலும் தேவனுக்கு உண்மையாயிருக்கும்படி அவரே கிறிஸ்துநாதர் நிமித்தம் அனுக்கிரகஞ் செய்வாராக.

Notes on Leviticus.

லேவியராகம வியாக்கியானம்.

௪. அதிகாரம்.

அறியாமல் செய்த பாவத்துக்குப் பலி.

2. "அறியாமையினால்." துணிகரமாய்ச் செய்யும் பாவங்களுக்கு (எண். 15: 22, 23.) அதாவது, செய்யவேண்டுமென்று மனதாரச் செய்யும் பாவங்களுக்கு வித்தியாசமாக அறியாமையினால் செய்த பாவமென்று சொல்லியிருக்கிறது. துணிகரமான பாவங்களுக்கு பாவநிவிர்த்தியிருந்ததில்லை. கவலைத்தாழ்ச்சியினாலும், முழு அறிவீனத்தினாலும், சடுதியாய் வரும சோதனையினாலும் செய்கிற பாவங்கள் அறியாமையினால் செய்த பாவமென்று சொல்லப்படும். பூர்வகாலங்களில், போதிக்கிறவர்களும் புஸ்தகங்களும் அபூர்வமாயிருந்ததினாலே, இவ்வகையான பாவங்கள் அநேகமாய் நடந்தது. குற்றவாளியின் நோக்கத்துக்குத்தக்கதாக அவன் செய்த குற்றம் மதிக்கப்படும்.

மகா ஆசாரியன் அப்படிப் பாவம செய்தால், சபையாரெல்லாரும் கூடிச் செய்த பாவம்போல் பெரிய பாவமாக எண்ணப்பட்டு, சபையார் செலுத்துகிற விலையுயர்ந்த பலியை இவனும் செலுத்தவேண்டும் என்று கட்டளையிடப்பட்டது. மகா ஆசாரியன் புது பிரதிஷ்டை அடையவேண்டியதாய் இருந்தாற்போல் அந்தப் பலியின் இரத்தம் ஏழு தரம் தெளிக்கப்பட்டு, அந்தப் பலி பாளயத்துக்குப் புறம்பே முழுவதுமாய்ச் சுட்டெரிக்கப்படவும் வேண்டும்.

6. "ஏழு தரம்." ஏழு என்பது நிறைவைக் குறிக்கிற தொகையாக எண்ணப்பட்டது. ஆகையால் இந்தச் சடங்கை நிறைவும் பூரணமுமான செய்கையாகக் காட்டும்படி இப்படி வழங்கினது.

"கர்த்தருடைய சந்நிதியில்." குற்றவாளியினுடைய இரத்தத்திற்குப் பதிலாக அவனுடைய பலியின் இரத்தம் தேவனாலே அங்கிகரிக்கப்பட்டது.

28. "பெண்குட்டி." ஒரு பிரபுவின் பாவநிவாரணப் பலியைப் பார்க்கிலும் (23) இது தாழ்வானதாகக் காட்டும்படி.

படிப்பினை.

எப்பேர்ப்பட்ட போதகன்மாருக்கும் தவறாமையில்லை. 3.—மனதறிய துணிகரத்தோடு செய்யும் பாவத்துக்கு ஒரு பலியும் யூதருக்குள் நியமிக்கப்பட்டிருந்ததில்லை என்கிற சத்தியம் நம்முடைய நெஞ்சைப் பிளக்கிறதாயிருக்கவேண்டும். துணிகரமான பாவங்களுக்கு எச்சரிக்கையாயிரு. மனச்சாட்சியைக் கறைப்படுத்தத்தக்கதாய் நடவாதே. "துணிகரமான பாவங்களுக்கு உமது அடியானை விலக்கிக்காரும்" என்று நெஞ்சு. சங். 19.

ரு. அதிகாரம்.

குற்றநிவாரணப் பலிக்குரிய சட்டங்கள்.

1. "தெரிவியாதிருந்து." நியாயாதிபதி ஒரு சாட்சிக்காரனைக் கூப்பிட்டு சத்தியம் சொல்லி சாட்சியம் கேட்கும்போது, இவன் சாட்சி சொல்லத் திறமையுள்ளவனுயிருந்தும் சொல்லமாட்டேன் என்று மறுத்தாலும், அல்லது அசட்டையாயிருந்தாலும் அவன் குற்றவாளியாயிருப்பான்.

4. கவலைத்தாழ்ச்சியாய் அல்லது மேன்பராக்காயிடும் ஆணைகள் இதினுல் விலக்கப்பட்டது. இவ்வித ஆணைகளை மனிதர் லேசாய் மீறுவார்கள், சீக்கிரம் மறந்தும் விடுவார்கள். இப்படியாக அவைகளை நிறைவேற்றத் தவறிப்போவதினுலே சத்தியத்திற்குக் கெடுதி நேரிடும்.

"எப்பா" என்பது பக்காவுக்கு 12½ படிக்குச் சரியான அளவாம். அதில் பத்தில் ஒரு பங்கு 1¼ படியாகும். (யாத்தி. 16: 36). இது மிகவும் சொற்பமான செலவாம். இந்த ஒழுங்கினுல் எந்த ஏழையாவது, என் குற்றம் நிவாரணமாகிறதற்கு என் தரித்திரம் தடையாயிருந்ததி என்று சொல்ல ஏதுவிருந்ததில்லை.

15. "குற்றம்...பாவம்." (4: 2). இரண்டுக்கு வித்தியாசமென்னவென்றுல், குற்றமானது கவலைத்தாழ்ச்சியினுலாவது (15 வா), அறியாமையினுலாவது (17 வா), தேவனுக்குச் செலுத்தவேண்டிய காணிக்கைகளைச் செலுத்தாமல் விட்டுவிட்ட தப்பிதத்தைக் குறிக்கும்; அல்லது அயலானுக்கு மாறுட்டம்பண்ணுகிற குறைத்தைக் குறிக்கும். (6: 1—7).

படிப்பினை.

நாம் சோதனையான நிலைமையிலே வைக்கப்பட்டிருக்கிறோம். காலா திக்கிலுமிருந்து சோதனைகள் வந்து நம்மை நெருக்குகிறது. நாம் நம்முடைய ஐம்பொறிகளைக் காபந்துபண்ணவேண்டும்: 1.—ஆதருக்குக் கொடுக்கப்பட்ட பிரமாணங்களில், கர்த்தர் எளியவர்களுக்குப் போக்குப்பண்ணியிருந்தார். சுவிசேஷ ஏற்பாட்டிலும் எந்த ஏழையும் யாதொரு கைமாறில்லாமல் பாவமன்னிப்படைய வழிபண்ணியிருக்கிறார். ஏசுக்கிறிஸ்துவின் இரத்தம் நம்முடைய பாவங்கள் எல்லாவற்றையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்.

திருவனந்தபுரத்தில் ஒரு வார சஞ்சாரம்.

திருவிதாங்கோடு திருநெல்வேலியிலிருந்து மேல்காத்து மலைகளால்மாத்திரம் பிரிக்கப்பட்டிருந்தும், பல விஷயங்களில் வித்தியாசமான காடாகவேயிருக்கிறது. பிரயாணியொருவன் அதின் பாஷை, காணியம், சனங்களின் நடை உடை பாவனை இவைகளையெல்லாம் கவனிக்கும்போது தானொரு அந்திய தேசத்தில் வந்திருப்பதாய் உடனே அறிந்துகொள்வான். நாங்கள் தெற்கேயிருந்து இராஜதானியாகிய திருவனந்தபுரத்துக்கு இரவில் குளிர்ந்த நிலா வெளிச்சத்தில் பிரயாணஞ்செய்யும்போது பாதையின் இரு பக்கங்களிலும் அழகிய வனங்களும், பசும்புல்லும் நிறைந்த ஏற்றமும் இறக்கமுமான நிலங்களைக் கண்டோம். நாங்கள் போன வழி ஒவ்வொரு நிமிஷமும் வண்டிமாடுகள் கால்தவறிக் கீழே விழுந்துவிடுமென்று எண்ணத்தக்கதாக மேட்டிலிருந்து தலைகீழாக வேகமாய் இறங்குவதும், பள்ளத்திலிருந்து மேட்டுக்கு வெகு கஷ்டத்துடன் மெதுவாய் ஏறுவதுமாயிருந்தது. மலையாள நாடும் அதின் குடிகளும் திருநெல்வேலி காட்டிலும் அதின் ஜனங்களிலும் அதிகச் சிறந்த காட்சியாகக் காணப்பட்டதாய் நினைத்தோம். சில வழிப்போக்கர் தோளில் நீலவர்ணமான நேரியல் அல்லது சால்வை போட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் கட்டியிருந்த வஸ்திரமும் பெரும்பாலும் சுத்தமாயிருந்தது. அவர்கள் பின் குடுமி வைக்காமல் முன் குடுமி வைத்திருப்பதால் இது விஷயத்திலும் அவர்களுக்கும் திருநெல்வேலி காட்டாருக்கும் வித்தியாசமுண்டு. நாங்கள் திருவனந்தபுரத்திற்குச் சமீபிக்குஞ் சமையத்தில் பொழுது விடிந்தது. பெரும்பாதையானது செப்பனிடாததாயிருந்தபோதிலும் அதின் இரு பக்கங்களிலும் கொத்துக்கொத்தாய்த் தொங்குகிற காட்டு மிளகுச் செடிகளும் உயர்ந்த பலாமரங்களும், ஐந்து அடி நீளமும் ஒன்றரை அடி அகலமுமான பெரும் இலைகளுள்ள கூட்டமான வாழை மரங்களும் தென்னை மரங்களும் வரிசை வரிசையாய் நின்று குளிர்ந்த நிழலைத் தரும் காட்சி கண்ணுக்கு இன்பமான நல்ல காட்சிதான். இவ்வித சோலையுள்ள பாதையிலேதான் நாங்கள் இராஜதானிக்குப் பிரயாணஞ்செய்தோம். நாங்கள் அங்கே போன சமையம் நல்ல சமையமாயிருந்தது. எப்படியெனில், இராமவர்மா என்ற நாமதேயமுடைய மகாராஜா வியாதிப்பட்டதினிமித்தம் நமது காருண்ய மஹாராணியவர்கள் இந்ததேசத்து பட்டவர்த்தனி என்ற புதுப்பட்டம் தரிக்கப்போகிறார்களென்று விளம்பரஞ்செய்யும் டில்லிமா நகரில் கூடின பெரிய தர்பாருக்குப் போக ஏதுவில்லாமல் இருந்ததால், திருவனந்தபுரத்தில் தானே ஒரு தர்பார்வைத்துப் பெரிய விருந்து செய்து வாணவேடிக்கை நடத்தி இவ்விதமாய் அந்த நாளைக் கொண்டாடும்படி தீர்மானித்திருந்தது.

எங்களை ஒருவாரம் தன்னிடத்தில் விருந்தாடிவரும்படி திருவனந்தபுரத்திற்கு அழைத்த அருமையுள்ள சிநேகிதியினுடைய தயவினுலே தானும் என் மனைவியும் அந்தப் பெரிய விருந்துக்கு அழைக்கப்பட்டோம். தர்ம பூமி என்னப்பட்ட திருவிதாங்கோடு ஐரோப்பியருக்கு விசேஷித்த வகையாய்ப் பிரீதியுள்ள இடமாயிருக்கிறது. அது இந்த நாடு, அல்லது பிராமண காடாகவேயிருக்கிறது. அதின் இராஜா ஒரு சர்வகலாசாலை ஸ்தாபிக்கவும், பெண்களின் கல்வியை மூட்டிக்கவும், கிறிஸ்தமார்க்கப் பள்ளிக்கூடங்களுக்குப் பொருள் உதவி செய்யவும் சிறந்த (மியூசியம்) சர்வதேச பொருட்சாலை ஒன்று கட்டவுந்தக்கதான முயற்சி கடாதேறும்படிக்கான அவ்வளவு தேர்ச்சியையுடைய தேசமாயிருக்கிறது. அதிலுள்ள சர்க்கார் உத்தியோகஸ்தர் பெரும்பாலும் அங்கிலேயராயிருக்கிறார்கள். அல்லாமலும் அது ஐரோப்பியக் கிறிஸ்தவர்களுக்கு இன்னொரு விஷயத்திலும் விசேஷமாய்ப் பிரீதியுள்ள காடாயிருக்கிறது. எப்படியெனில் அபோஸ்தலருடைய காலமுதல் உண்டானதும் சற்காலத்தில் இரண்டு லக்ஷம் தொகையுள்ளதுமான சூரிய கிறிஸ்தவ சபை அந்தச் சாட்டிலே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. போர்த்துகேசரின் ஆளுகையில் இந்தச் சபையானது அப்போஸ்தலரின் சுத்தசுவிசேஷ உபதேசத்தை விட்டுக் கட்டாயமாய் ரோமான் சபையோடு இசைந்த சீர்கேட்டிற்போயிற்றென்பது சஞ்சலமான காரியந்தான். என்றுலும் அதில் ஒரு பங்கு இப்போது சில வருஷக்காலமாய் சர்ச்சமிஷன் சங்கத்தாரின் அனுசரணைபெற்ற மார்

அதனுலியுஸ் எள்ளும் மெற்றிரன் என்பவருடைய போதனையால் சீர் திருத்தமடைந்து, இவ்விதமாய் இந்தச் சூரிய திறிஸ்தவர்களுடைய உத்தம திருஷ்டர் வெகுகாலமாய்ப் பொறுமையுடன் ஜெபித்தபிரகாரம் இவர்களுக்குள் நீதியின சூரியனுடைய திறிஸ்து இரட்சகரின் அருட்சி ணங்கள் வீசுமபடி ஆரம்பித்திருக்கிறதென்று ஸ்தாமாய் நம்பத்தக் கதாயிருக்கிறது.

மேற்சொல்லிய தர்பார் ஒரு சிங்காரமான மாளிகையில் நடந் தது. அந்த மாளிகைப் பளிங்குக் கல்லினுல் கனவரிசையிடப்பட்ட தாயும், பெரிய சித்திரப் படங்களாலும், அழகிய கினை விளக்குகளா லும் அலங்கரிக்கப்பட்டதாயும் இருந்தது. அதன் மத்தியில் பொன் முலாம் பூசி சூரியகாந்திப் பட்டினுல் செய்யப்பட்ட காற்கலிகள் தர் பாருக்கு யாருமை ஜோப்பியருக்கு ஆசனங்களாக நான்கு வரிசையாய்ப் போடப்பட்டிருந்தன. இராஜ குலத்தைச் சேர்ந்தவர்களேயன்றி மற் றச் சுதேசிகள் எவ்வளவு உயர்ந்த அந்தஸ்துடையவர்களாயிருந்தா லும் இராஜ சபையில் ஒருவரும் உளுக்காரக்கூடாது. அந்தச் சிங்கார மாளிகையின் ஒரு புறத்தில் மகா இராஜாவுக்கும், அங்கிலேய தானு பதியாகிய மகாராக்கு துரைக்கும் இரண்டு சிங்காசனங்கள் போடப்ப ட்டிருந்தன. மகா இராஜாவானவர் ஊதாப்பட்டு வஸ்திரத்தினித்து, "இந்திய நட்சத்திரப் பட்டத்தி"க்குரிய முத்திரையுடன் சிங்காசனத் தில் வீற்றிருந்தனர். அது பெரிய காட்சிதான். விளம்பரம் வாசிக்கப் பட்டவுடனே காது இரண்டும் அடைத்துத்தக்கதாக பீரங்கி, வெடிகள் தீர்ந்தன. அங்கிலேய இராணியவர்கள் வாழ்க என்ற சங்கீதம் வா சிக்கப்பட்டது. இத்தச் சுபதினத்தில் மகா ராஜாவுக்கும், அவரது பிரஜைகளுக்கும் சகலஷ்டியுண்டாகத்தக்கதாக இராஜாவுக்கு இரு ண்டு பீரங்கிகள் கூட்டி இருபத்தொரு பீரங்கிகள் தீர்ந்தன. மகா ராஜாவுடைய சகோதரராகிய இளய இராஜா மூன்வரிசை ஆசன ங்களில் உளுக்காந்திருந்த ஒவ்வொருவரிடத்திற்கும்போய், அத்த னிலுல் அவர்கள் கைகுலுக்குண்டகளைத் தொட்டு தாம்பூலம் கொடுத்தவு டன் சபை கலைந்தது.

வி. ஹா. (தொடர்ச்சியாக வரும்.)

பிரசங்க பலிதம்.

ஒரு பட்டணத்தில் ஒரு போதகர் ஞாயிற்றுக்கிழமையில் 1 கொ. 16: 22. "ஒருவன் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவினிடத்தில் அன்பு கூராமல்போனுல் அவன் சபிக்கப்பட்டவனுயிருக்கக்கடவன்" என்ற வாக்கியத்தினபேரில் ஊக்கத்தோடே எழுப்புதலான பிரசங்கஞ்செய் தார். பாவி திறிஸ்தவரிடத்தில் அன்புகூரவேண்டியதற்குரிய நியா யங்களைப் பலமாய்க் காண்பித்தார். ஆராதனை முடிவில் "எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம்" என்கிற ஆசீர்வாதத்தை வா சிக்குமுன் கொஞ்ச நேரம் சனங்களைப் பார்த்துக்கொண்டே நின்று அப்பால் இந்த ஆசீர்வாதம் இக்கோவிலுக்குள்ளிருக்கிற எல்லாருக் கும் செல்லாது. ஏனெனுல் பிரசங்க வாக்கியத்தில், ஒருவன் கர்த் தராகிய இயேசுக்கிறிஸ்துவினிடத்தில் அன்புகூராமல்போனுல் அவன் சபிக்கப்பட்டவனுயிருக்கக்கடவன் என்று சொல்லியிருக்கிறது என் ன சொன்னதற் தகிர இங்கே இன்னமும் கர்த்தராகிய இயேசுக்

கிறிஸ்துவினிடத்தில் அன்புகூராதவர்கள் இல்லையாவென்று எனக் தியோடே கேட்டு ஆசீர்வாதத்தைக் கூறினர். அக்கே இருந்த பதினு லு வயதுள்ள ஒரு வாலிபனுடைய மனதில் இந்த வார்த்தைகள் கன் ருய்த் தைத்தது. என்றுமில்லாதபடியும் அவன் வெகுகாலமாய்க் குணப் படாமலே இருந்தான். [illegible] ஒரு நாள் தன தோட் டத்தில் வேலைசெய்துகொண்டிருக்கையில் [illegible] சாளி இனைப்பாத ஒரு மரத்தடியில் உட்கார்ந்து தன நீடிய ஆயுளின் மூக்கிய சம்பவங்களை சூரபாகத்திக்கொண்டிருந்தான். இன போ தகர், இன்ன நாளில் இன்ன வார்த்தையால் இன்னவிதமாய்ப் பிரசங்கம் செய்தாரே, ஐயோ! நான் இன்னும் திறிஸ்துவினிடத்தில் அன்புகூராமல் சபிக்கப்பட்டவனுயிருக்கிறேனென்று மனஸ் தாபப்பட்டு [illegible] கிறிஸ்துவினிடத்தில் அன்புகூரவேண்டு மென்ற மனதில் தீர்மானித்துச் சபையிலணைந்து குணமடைந்தான்.

சுவிசேஷப் பிரசங்கிகளே! வாசியுங்கொள்ளுங்கள். சுமார் 84 வருஷத்திற்குப் பிறபாடாகிலும் அதனுடைய பலன் "அவரு மையாய் அவனிடத்திற்குத் தருமபடியால் அவர் விரும்புகிறதைச் செய் து அவர் அதை உறுதியான காரியமாகும்படி வாய்க்கும்" என்று இதினுலே அறியலாம்.

மு. வா.

பேயாடி கூலியாளானது.

சேலப்பேரிக்கு வடகிழக்கில் சலவாப்பேரி என்று ஒரு ஊர் இருக்கிறது. அந்த ஊருக்குச் சற்று தூரத்தில் ரஸ்தா ஓரமாய் அழ கப்பிள்ளை மடமும் அதன் அருகே ஒரு தொப்பக்குளமுமுண்டு. அடி ஊரிலுள்ள அஞ்ஞான ஜனங்கள் தங்கள் பேய்க்கோவிலில் பே யாராதனை செய்யும்போது, பேயாடியானவன் ஊட்டெடுக்குமுன் சாமத்தில் எண்ணெய்யில் தோய்க்கப்பட்ட ஒரு பந்தத்தைத் தன் கையிலே பிடித்துக்கொண்டு ஆடியாடிப்போய்த் தொப்பக்குளத்துக் கரையில் பந்தத்தை வைத்துப்போட்டு தொப்பக்குளத்து ஜலத்தில் விழுந்து மூங்கிமூங்கி யெழும்பிக் கரையில் வரது பந்தத்தை மறு படியும் தன் கையில் பிடித்துக்கொண்டு ஆடிக்கொண்டுவருவது வழக் கம். ஜனங்களோ அவன எப்போது வருவான் என்று ஆவலோடி காத்துக்கொண்டிருபார்கள். அவன் பேய்க் கோவிலுக்கு வந்து சே வே கொட்டுகிறவர்கள் தம்பட்டமுதலானவைகளை முழக்கப் பேயா டியானவன் குதித்துக்குதித்து ஆடிவர ஜனங்கள் அவனைச் சூழ்ந்து வாக்குக் கேட்பதுமுண்டு. இதுபோல ஒருதரம் பேய்க்கொடை நடந்த போது ஜனங்கள் ஊட்டெடாமல் காத்துக்கொண்டிருக்கப் பேயாடி யானவன் வழக்கம்போல பந்தத்தையும் கையிலே பிடித்துக்கொண்டு ஆடியாடிப்போய்த் தொப்பக்குளத்தின் கரையில் எரிகிற பந்தத்தை வைத்துப்போட்டு ஜலத்தில் முங்கி யெழும்புகையில், லாந்தர் அவனுக் தபோக வெளிச்சமும் வேலைக்காரரும் இல்லாமல் வழிதவறி அலைக் தநிரித்த ஓர் துரை தற்செயலாய் அவ்வழிபாய் வந்த பேயாடி யின் வெளிச்சத்தைக் கண்டு சந்தோஷித்து ஓ! இப்போது ஒரு வழி காட்டி எனக்குக்கிடைத்தான் என்று சொல்லி அங்கே சென்று ஜலத் தில் நிற்கிற மனிதனைக் கண்டார். ஓய் யாரங்கே நிற்கிறது, வா,

என்று கூப்பிட அவன் கை ஏறிவந்தான். துரையானவர் "நீ எனக்குத் தென்பட்டது நல்ல சமயம், உன் பந்தத்தை எடுத்துக்கொண்டு ஓரே ஒட்டமாய் எனக்கு முன் பாளயங்கோட்டைக்கு ஓடி வழிகாட்டு" என்று சொல்ல, பேயாடி கும்பிடுபோட்டு ஐயையா துரைகளே நான் பேயாடி என்மேல் அருள் வந்திருக்கிறது; சனங்கள் படையெடுக்காமல் காத்துக்கொண்டிருக்கிறார்கள், தயவுசெய்து என்னை விட்டுவிடவேண்டுமென்று கெஞ்ச துரை கோபிக்கிற பாவனை காட்டி உரத்த சத்தமாய் "இல்லை எனக்கு முன்னே போ" என்று சொன்னார். பேயாடி விடியுமட்டும் முன்னே ஓடினான். அவன் ஜீவலப்பேரி வந்தசேர பொழுது இளம்பிற்று. ஜனங்கள் இதுவரையும் இவ்வளவு தாமதம் ஏது என்று கேட்டார்கள். பேயாடியானவனே நான் பட்ட பாடு ரொம்பரொம்ப. ஒரு துரை என்னைக் கண்டுபிடித்து வழிகாட்டச் சொன்னார். அதன்பேரில் நான் போகமேரிட்டதினால் தாமதம் ஆகிவிட்டதென்று ஆயாசத்தோடே சொன்னான். இதனால் பேயாட்டத்தின் தன்மை எப்பேர்ப்பட்டதென்று நாம் அறியலாம்.

இ. ஆ.

கனம் மேடோவ்ஸ் ஐயரவர்கள் திருநெல்வேலியை விட்டுவிடுதல்.

கனம் மேடோஸ் ஐயரவர்களும், அம்மாளவர்களும் இங்கிலாந்துக்குப் போகப் புறப்பட்டதினால் திருநெல்வேலி மிஷனானது ஒரு பெரிய நஷ்டத்திற்குள்ளாயிருக்கிறதென்று அறிகிறோம். ஏறக்குறைய 17 வருஷக்காலமாய் அவர்கள் தேவ ஊழியம்பார்த்துவந்த வடதிருநெல்வேலியிலுள்ளவர்கள் அவர்களை இழந்துவிடுவதினால் வெகுவாய் அனுதாபப்படுகிறார்கள். அவர்கள் புறப்பட்ட தினம் பெப்ருவரி 14ஆ அன்று காலை. கனம் மேடோஸ் ஐயரவர்களும் அம்மாளவர்களும் தங்களுடைய பட்சத்தினாலும் அனுபவ சதாபத்தினாலும் விசேஷித்தவிதமாய் சனங்கள் தங்கள்பேரில் அன்பாயிருக்கச்செய்து கொண்டார்கள். சனங்கள் தங்கள் பட்சத்துக்கும் அன்புக்கும் குறிப்பாகக் கனம் ஐயரவர்களுக்கும், அம்மாளவர்களுக்கும் நினைவுகூருதலான சில அடையாளங்களைக் கொடுக்கும்படியாக அவர்கள் புறப்படுகிறதற்கு முந்தின வாரத்தில் கோவிலிலே ஒரு சந்திப்புக் கூட்டம் நடந்தது. அது மிகவும் விசனமான சமையமாயிருந்தது. சேகரத்திலுள்ள பற்பல இடங்களிலுமிருந்து வந்த மிஷன் உத்தியோகஸ்தராலும், கிறிஸ்தவர்களாலும் சாட்சியாபுரம் நிறைந்திருந்தது. ஒரு ஞானப்பாட்டுப்பாடி செபம்பண்ணக் கூடடம் தொடங்க, பின்பு இங்கிலீஷிலும் தமிழிலுமாக அடியில் காட்டப்பட்டிருக்கிற பயணோபசாரப்பத்திரம் வாசிக்கப்பட்டது. அந்தச் சமையத்தில் பயணோபசாரப் பத்திரத்தோடேகூட இரண்டு வெள்ளிப் பாத்திரங்களும், ஒரு தையல்பெட்டியும், ஞானப்பாட்டின் சுர்த்தனியும் அடங்கிய ஒரு புத்தகமும், தங்கள் பெற்றோர் வடதிருநெல்வேலியில் ஊழியம்பார்த்துவந்த காலத்தில் தாங்கள் பிறந்ததை நினைவுகூரும்படியாக ஐயரவர்களுடைய இரண்டு பிள்ளைகளுக்கும் இரண்டு வேதாகமங்களும் கொடுக்கப்பட்டன. அதன்மேல் கனம் மேடோஸ் ஐயரவர்கள் எழுந்திருந்து கூடினவர்கள் காண்பித்த பட்சத்திற்காக நன்றியறிதல் சொல்லித்

தங்கள் பிள்ளைகளுக்கென்று கொடுக்கப்பட்ட இரண்டு இல்லிலீஷ் வேதாகமங்களையும் பற்றி புகழ்ந்துபேசி, அந்தப் புஸ்தகங்கள் பிள்ளைகளுக்கும் வடதிருநெல்வேலிக்கும் இடையில் பசிகத்த சங்கிலிபோல் எப்பொழுதும் உபயோகப்படுமென்று நம்புகிறேன் என்றும் குறித்தார்கள். கடையாக அன்பு, சகதாபம், பிரதான மேய்ப்பர் என்னும் மூன்று வார்த்தைகளையும் நினைத்துக்கொள்ளச்சொல்லி ஒவ்வொன்றையும் பற்றிச் சற்று விஸ்தரித்துப் பேசி முடித்தார்கள். கனம்பெருந்திய ஐயரவர்கள் சொல்லிய கடையான வார்த்தைகளைக் கூடிவந்திருந்தவர்கள் வெகுகாலத்திற்கு நினைவுகூர்வார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

இரக்கம் நிறைந்த தேவன் தம்முடைய ஊழியக்காரரை இந்த நெடும்பிரயாணத்தில் காப்பாற்றி இவ்விடத்தில் அவர்களை ஆசீர்வதித்ததுபோலவே அவர்கள் சொந்த தேசமிலும் ஆசீர்வதிப்பாராக.

வாழ்த்தல்.

சங்கைபொருந்திய எங்கள் அருமை ஐயாவே!

தங்கள் பட்சமுள்ள விசாரணைக்குட்பட்டவர்களாகிய நாங்கள் எல்லாரும் தங்களையும் அருமை அம்மாளவர்களையும் இந்தச் சமையத்தில் கண்டு வழி அனுப்பிக்கொள்ளும்படியாய்க் கூடிவந்திருக்கிறோம். தாங்கள் 23 வருஷக்காலமாய் தன்னயநாட்டமின்றி நீடிய பொறுமையோடும், விடாமுயற்சியோடும் சேகரத்தின் நன்மைக்கென்று தங்கள் காலத்தைப் பின்னிட்டு, கனம் அம்மாளவர்களின் சுகவீனத்தினிமித்தம் எங்களைவிட்டுப் புறப்படும் இந்தச் சமையத்தில் தங்கள் பிரயாசத்தின் பலனைப் பூரணமாய் அனுபவித்து மூன்னுக்கு வந்திருக்கும் நாங்கள் அதை இந்தச் சமையத்தில் வெளியிட்டு அறிக்கையிடுவது எங்கள் பேரில் விழுந்த முக்கிய கடமையாகப் பாவித்து இங்கே வந்து நிற்கிறோம். இப்படித் தாங்கள் எங்களைவிட்டு தங்கள் சுயதேசத்திற்குப் போவது எங்களால் தாங்கக்கூடாத விசாரம் என்பதை இங்கே விஸ்தரித்துச்சொல்லவேண்டிய அவசியம் இல்லை. தாங்கள் எங்களைவிட்டுப் பிரிந்துபோனபோதிலும் தாங்கள் எங்கள் நடுவிலிருந்து பட்ட பிரயாசத்தின் பலன் எங்களைவிட்டுப் பிரிந்துபோகமாட்டாதென்பது நிச்சயம். தாங்கள் கனம் இராக்கிலாண்டு ஐயரவர்களோடும், கனம் பென் ஐயரவர்களோடும் முதல் முதல் இத்திசைக்கு வந்தபோது, வடதிருநெல்வேலி ஞான ஒளி அற்ற பாவ அந்தகாரத்தால் நிறைந்த வனாந்தரமாய் இருந்ததென்பது யாவருக்குந் தெரிந்த காரியம். அப்ப சொற்ப பேர்க் கிறிஸ்தவர்கள்மாத்திரம் அக்குமிங்குமாய்ச் சிதறியிருந்தார்கள். இப்போதோ தேவாநுக்கிரகத்தால் 154 ஊர்களிலுள்ள காணுவகைச் சனங்களிலுமிருந்து 4000 பேர்வரையும் கிறிஸ்துமார்க்கத்தமைந்து தேவனைத் தொழுதுகொண்டுவருகிறார்கள். இதைத் தாங்கள் கவனிக்கும்போது எவ்வளவோ சந்தோஷத்தால் பூரித்து ஸ்தோத்திரப்பாட்டைப் பாடி உங்கள் ஜனனதேசத்திற்குத் திரும்பிப்போக ஏது இருக்கிறது. இத்தத் திசைக்குத் தங்களைக் கருவியாகவைத்து இந்தப் பெரிய கன்மையை வருவித்த தேவனுக்கே எல்லாக் கனமும் மகிமையுமுண்டாவதாக.

அன்றியும் தேவன் நிரக்கமாய்த் தங்களுக்கு அருளி இருக்கிற தமிழ்ப்பாஷையின் அறிவைக்கொண்டு வாய்மொழியாய்ச் சேகரத்துக்கு நன்மைசெய்ததோடுகூட திருநெல்வேலி ஜில்லா சுதேச கிறிஸ்தவர்கள் யாவருடைய பொது நன்மைக்காக ஏழுத்துமூலமாகவும் நன்மை

செய்து வந்திருக்கிறீர்கள். ஸ்திரீகளுடைய பக்திவிர்த்திக்கும், நாகரீக தேர்ச்சிக்கும் ஏதுவாக பல சற்போதனைகள் எழுதிப் பிரசித்தப் படுத்தி நற்போதகத்தைப் புதுப்பித்து, கோவில்களில் பாடுங் கீர்த்தனைகளையும், பிரார்த்தனைகளையும் திருத்தி நூதனமும் எழுப்புதலுமான ஞானப்பாட்டுகளை எடுத்துக் கட்டி, இந்த விஷயங்களிலும் நிலையான நன்மையை உண்டுபண்ணிப்போகிறதும் கவனிக்கத்தக்கது.

இன்னொரு காரியமும் மறக்கத்தக்கதல்ல. அதாவது, உத்தம போதகனுக்கிருக்கவேண்டிய குறிப்புகள் எல்லாவற்றையும் தங்கள் போதனையாலும் சாதனையாலும் கற்றறிந்துகொண்டோம். அதின் விபரத்தை இங்கே கூறுவது தங்கள் அடக்க ஒடுக்கத்திற்கு அடாததாய்க் காணப்பட்டபோதிலும், அதை விட்டுவிடுவது எங்கள் நன்றிக்குக் குன்றுதலாய் இருப்பதால் மன உற்சாகத்தோடு வெளியிடுகிறோம். தங்களுக்குள்ளிருந்த பிரகாசிக்கும் பரோபகார சிந்தை, தன்னயவெறுப்பு, பிதாவடைவான பராமரிப்பு, சாந்தமும் தயவுமான நடத்தல் அதோடு கலந்த கண்டிப்பு, கடைப்பிடியான நீர்மானம், மூகதாக்ஷண்யமின்மை, விடாமுயற்சி முதலான அரிய குணங்கள், மனுப்பிரகாரமாய் இப்போது தனிமையாய் விடப்பட்டிருக்கும் எங்களுக்கு தாங்கள் வைத்துவிட்டுப்போகும் நிலையான ஸ்திரீதன சாதனம்போல இருக்கின்றன. இதுகளை நாங்கள் படம்போல மூன்வைத்துக்கொண்டு நடந்துவர இரக்கம் நிறைந்த தேவன் அநுக்கிரகஞ்செய்வாராக.

மேலும் காடுமேடாய்க் கிடந்த வடதிருநெல்வேலிக் காட்டை வெட்டித் திருத்தி செய்கால்படுத்தி, தேவவசனமாகிய ஜீவ விதையை விதைத்துவந்த தேவனுடைய பண்ணையாட்களாகிய மூன்று ஐரோப்பிய போதகர்களில் தாங்கள் வெகுகாலமாய் இவ்விடத்தில் தனிமையாய் விடப்பட்டு பகலின் கஷ்டத்தையும், வெயிலின் உஷ்ணத்தையும் சுமந்து தங்கள் ஆயுள்காலில் பாதியை சேகரத்தின் பக்திவிர்த்திக்கென்று தத்தம்பண்ணி இவ்வகையாய் சேகரம் முன்னுக்கு வரும் இந்தச் சமையத்தில் தாங்களும் கனம் அம்மாளவர்களும் எங்களை விட்டுப் பிரிந்துபோகிறது தங்களுக்கும் எங்களுக்கும் ஆறுதலையரத்தை உண்டுபண்ணுகிறதாயிருக்கிறது. ஆகிலும் தற்கால மேய்ப்பர்களாகிய போதகன்மார்கள் இப்படியே ஒருவர் பின் ஒருவர் பிரிந்துபோனாலும், பிரதான மேய்ப்பராகிய இயேசு கர்த்தர் எங்களோடிருக்கிறார் என்கிற நிச்சயத்தைவைத்து தைரியங்கொள்ளுகிறோம்.

... ...

தவிரவும் தங்களைப்போலவே கனம் அம்மாளவர்களும் சேகரத்தின் லாப நஷ்டத்தைத் தனதாகப் பாவித்து, சந்தோஷப்படுகிறவர்களோடு சந்தோஷப்பட்டு, அழுகிறவர்களோடு அழுது, இகத்துக்கும் பரத்துக்கும் உரிய ஏதேது நன்மைகள் செய்யவேண்டுமோ அதுகளையெல்லாம் தங்களால் இயன்றமட்டும் செய்து இப்படி கிறிஸ்தவப் பெண்கள் கண்டு பின்பற்றும்படியான மாதிரியைக் காண்பித்து பெற்ற தாயிலும் உற்ற தாயாய் இருந்ததை நாங்கள் லேசில் மறக்கத்தக்கதல்ல.

... ...

கடைசியாக இரக்கத்தில் ஐசுவரியமுள்ள ஆண்டவர் தங்களையும் கனம் அம்மாளவர்களையும் அருமைப் பிள்ளைகளையும் சுகத்தோடு தங்கள் ஜனன தேசத்திற்குக் கொண்டுபோய்ச்சேர்த்து, அங்குள்ள தங்கள் மூத்த குமாரனையும் மற்றும் தங்கள் இனத்தவர்களையும் ஜனத்தவர்களையுங் கண்டு சந்தோஷப்படவும், தாங்கள் எங்களுக்கு ஆசீர்வாதமாக இருந்ததுபோல உங்கள் தேசத்தவர்களுக்கும் ஆசீர்வாதமாக இருக்கும்படியாகவும், சகல ஆசீர்வாதங்களாலும் உங்களை ஆசீர்வதிப்பாராக.

திருநெல்வேலிக் கண்காணிமார்.

கனம்பொருந்திய டாக்டர் சார்ஜென்ற் ஐயாவர்களுக்கும், கனம்பொருந்திய டாக்டர் கால்டுவெல் ஐயரவர்களுக்கும் கல்ருத்தாவில் பட்டாபிஷேகம் போன மாதம் 11உ நடந்தபோதிலும் மின்தந்தியினால் அன்றுள்ள செய்தியை யறிவிக்கிற பத்திரிகைக் காகிதங்களிலடங்கிய சில விசேஷங்களை யறிய நற்போதகத்தை வாசிப்போர்கள் யாவரும் அபேக்ஷிப்பார்கள்.

அபிஷேகமுறை நடத்தினவர்கள் புதிதாய் வந்த மெற்றிராப் போலிற்றன் அல்லது இந்தியாவின் தலைமைக் கண்காணியாரவர்களும் சென்னை, பம்பாய், கொழும்பு அத்தியட்சரவர்களுமாம். அத்தறுவாவில் அப்பட்டணத்தின் அத்தியட்சர் ஆலயம் ஜனங்களால் நிரம்பிப்போனதுமன்றி நூற்றுக்கணக்கானவர்கள் உட்கார இடமில்லாமல் நிற்கும்படி நேரிட்டது.

இந்தியாவின் தலைமைக் கண்காணியாரவர்களும், கண்காணிமார்களும், குருமார்களும் உடுப்பு அறையிலிருந்து ஒரு பாட்டுப் பாடிக்கொண்டே வரிசையாய் ஆலயத்துக்குள் சென்றபின் அபிஷேகமுறையின் ஆராதனை நடத்தப்பட்டது. மகா கனம் ஜெல் கண்காணியாரவர்கள் எபேசியர் 2 அதிகாரம் 21 வசனத்தின்மேல் பிரசங்கித்தார்கள். "அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது".

அவர்களுடைய பிரசங்கம் கிறிஸ்துமார்க்கம் அதிகமாய் முன்னுக்குவந்திருக்கிறதும் தற்காலத்தில் குருமார்களும் கிறிஸ்தவர்களும் தொகையில் அதிகரித்திருக்கிறதுமான தென் இந்தியாவைச் சுட்டினதாயிருந்தது.

சர்ச்சு ஆவ் இங்கிலாண்டு என்னப்பட்ட சமையிலுள்ள முக்கிய சபை தென் இந்தியாவிலுள்ள கிறிஸ்தமான வேலையை நடப்பிக்கிறதற்கு இரண்டு சோசைஸற்றி ஏற்படுத்தினதுபோல இரண்டு கண்காணிமார்களை நியமிக்கிறது அவசியமாயிருக்கிறதென்றும் இரண்டையும் தாங்குகிறது ஏற்குமென்றுஞ் சொன்னார்கள். புதுக் கண்காணிமாருடைய கடமை யாதெனில் குருமாரையும் மற்றக் கிறிஸ்தவர்களையும் சரியான பாதையில் காத்துக்கொள்வதும் அவர்கள் அந்நியருடைய உதவியைச் சாராமல் தங்கள் சொந்தச் சபையை. ஆதரித்து வருவதாகிய தங்கள் கடமைகளை அறியும்படி அவர்களுக்குப் போதிப்பதுமேயாம். கடைசியாகத் தங்களுக்கு உதவியாக ஏற்படுத்தப்பட்ட இருவரும் கையிட்டுச் செய்யும் வேலைகளுக்குப் பரம ஆசீர்வாதம் கிடைக்கும்படி செபஞ்செய்து முடித்தார்கள்.

இன்னொரு கீதம் பாடின பிறகு இராப்போசனமேசையருகில் நின்ற சிரேஷ்ட கண்காணியாரவர்களுக்கு முன், சென்னை அத்தியக்ஷரவர்கள் கனம் கால்டுவெல் ஐயரவர்களையும் பம்பாய் அத்தியக்ஷரவர்கள் கனம் சார்ஜென்றையரவர்களையும் கூட்டிக்கொண்டு நிறுத்தினார்கள்.

பிற்பாடு ரெஜிஸ்ற்றரார் என்னப்பட்டவர் இராணியம்மாளவர்களின் கட்டளையையும் கந்தர்புரி சிரேஷ்ட அத்தியக்ஷரவர்களின் கம்மிஷன் அல்லது உத்தரவு வாசித்துப் பிரமாணம் வாங்கினார்கள்.

பின்பு புதுக் கண்காணிமார் போய் தங்கள் பட்டத்துக்குரிய சகல உடைகளையும் போர்த்துக்கொண்டவர்களாய்ச் சிரேஷ்ட கண்காணியாரவர்கள் முன் வந்து அவர்களால் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டார்கள்.

கடைசியாக தென் இந்தியாவின் மிஷன் வேலைக்காக பெரிய தொகையுள்ள ஒரு விசேஷக் காணிக்கை சேர்க்கப்பட்டது.

நமது அத்தியட்சர்.

சில தினங்களுக்குமுன் கனம்பொருந்திய டாக்ற்றர் சார்சென்றையரவர்கள், திருநெல்வேலி ஜில்லாவில் பல இடங்களிலுமிருந்து தங்களை வழியனுப்பிக்கொள்ளும்படி திரளாய் வந்திருந்த சுதேச குருமார், உபதேசிமார், உபாத்திமார், சபை மூப்பர் முதலியவர்களோடு முருகன்குறிச்சித் தேவாலயத்திலே பரிசுத்த இராப்போசனத்தில் கிறிஸ்து இரட்சகருடைய அன்பைக் கொண்டாடி மேற்படியார்களுடைய செபங்களோடும் நல் விருப்பங்களோடும் பிரயாணப்பட்டது ஞாபகமிருக்குமே. அவ்வாறு அவர்கள் பயணம்பண்ணி சென்னை மார்க்கமாய் இவ்விந்தியாவின் இராஜதானியாகிய கல்கத்தா நகரம்போய்ச் சேர்ந்து, மார்ச்சு மாதம் பதினோராம் தேதியில் சென்னை அத்தியக்ஷருக்கு உதவி அத்தியக்ஷராக, கனம் டாக்ற்றர் கால்வேல் ஐயரவர்களோடு பட்டாபிஷேகம் பெற்றுக்கொண்டு தேவானுக்கிரகத்தினாலே, 23உ வெள்ளிக்கிழமையில் சுகமே நம்மிடம் வந்து சேர்ந்தார்கள். அந்தச் சமையத்திற் கண்ட மனோகரமான காட்சியை ஒருநாளும் மறக்க ஒண்ணாதென்று நினைக்கிறோம். மகாகனம்பொருந்திய சார்ஜென்று அத்தியக்ஷரவர்கள் திரும்பும்பொழுது அவர்களை வாழ்த்தி உபசரிக்கவேண்டுமென்று, திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள சமஸ்தமான கிறிஸ்தவர்களுக்குள்ளும் இருந்த அபேட்சைக்கு மட்டில்லை. அதினாலே அவர்கள் வெள்ளிக்கிழமை வருகிறார்கள் என்ற செய்தி வந்து எட்டியதோடு, அவர்களை மிகுந்த அன்பாயும் கணிசமாயும் உபசரிக்கும் நோக்கமாய் பாளையங்கோட்டையில் பல எத்தனங்கள் நடந்தன. சனங்கள் எத்திக்கிலுமிருந்து வியாழக்கிழமையே வரத்தொடங்கினார்கள். சுதேச குருமார், உபதேசிமார், உபாத்திமார்முதலிய மிஷன் உத்தியோகஸ்தர்கள் அனைவரும் ஏகத்துக்கு வந்ததல்லாமலும், சபையிலுள்ள முக்கியமான கிறிஸ்தவர்களிலும் திரள்பேர் வந்திருந்தார்கள். ரைல்வே ஸ்ற்றேஷனிலும் முருகன்குறிச்சி மிஷன் பங்களா வெளி வாசலிலும் பங்களா மூன்னும் அலங்காரமான பந்தல்கள் போட்டும், அத்தியக்ஷரவர்கள் வீடுமுதல் ரைல்வே வரை ஒரு மைலுக்கு அதிகமான தூரமும் இரஸ்தா நெடுக பூமாலைகள் தோரணங்கள் கட்டியும் வெகுவாய்ச் சிறப்பித்திருந்தது. மேலும் அத்தியக்ஷரவர்கள் விசாரணைக்குள்ளிருக்கும் ஒவ்வொரு சேகரத்துக்கு ஒவ்வொன்றாக பல கமான்கள் எடுப்பிக்கப்பட்டு, ஒன்றில் "பாளையங்கோட்டைச் சபையார் தம் அத்தியக்ஷரை வாழ்த்துகிறார்கள்" என்றும், ஒன்றில் "நல்லூச் சேகரத்தார் தம் அத்தியக்ஷரை வாழ்த்துகிறார்கள்"

என்றும், ஒன்றில் "டோனாவூர்ச் சேகரத்தார் தம் அத்தியக்ஷரை வாழ்த்துகிறார்கள்" என்றும், அவ்வாறு எல்லாச் சேகரங்களையும் அதுகளில் அலங்கிருதமான சிவப்பு எழுத்துக்களில் தீட்டியிருந்தது.

வெள்ளிக்கிழமைக் காலையில் கனம். ஹார்க்கோட்டு ஐயரவர்களும், கனம். பிளாக்மோர் ஐயரவர்களும் அத்தியக்ஷருக்கு எதிர்கொண்டுபோய் மணியாட்சியில் அவர்களைச் சந்தித்துக் கூட்டிக்கொண்டு வரும்படி புறப்பட்டார்கள். அப்பால் பன்னிரண்டு மணி தொடங்கி இரண்டு மணி வரையில், முருகன்குறிச்சியிலிருந்து ரைல்வே ஸ்ற்றேஷனுக்கு சனங்கள் சரிந்தவண்ணமாயிருந்தது. அத்தியக்ஷரவர்களைத் தரிசிக்கும்பொருட்டுபோனவர்களில் அஞ்ஞானிகளும் அநேகர். ஐரோப்பிய துரைமக்கள் சிலரும் அவர்களை வாழ்த்தும்படி அங்ஙனம் வந்து காத்திருந்தார்கள். ஸ்ற்றேஷனிற் போட்டிருந்த அலங்காரப் பந்தலுக்குள் சுதேச குருமார்களில் இருபத்துநாலு பேர் அங்கி தரித்தவர்களாயும், பங்களாப் போர்டிங் ஆண்பிள்ளைகள் கைகளிற் ஜெண்டாக்கள் பிடித்தவர்களாயும் அணிவகுத்து நின்றார்கள். வண்டித் தொடர் வருகிறதென்று பேச்சு உண்டாகவே, சகலமான பேர்களும் மிகுந்த ஆவலுடன் வடக்கே பார்த்த கண்ணாய் நிற்க, அத்தியக்ஷரவர்கள் இருந்த வண்டி க்ஷணத்தில் வந்துசேர்ந்தது. உடனே நமது பக்ஷமுள்ள அத்தியக்ஷரவர்கள் வண்டியை விட்டிறங்க, அங்கு நின்ற ஐரோப்பிய துரைமார் சுதேச குருமார் முதலியவர்கள் அவர்களை வாழ்த்தி உபசரித்தபின் சுதேச குருமார் வந்தனப்பத்திரம் ஒன்று சமர்ப்பித்தார்கள். அத்தியக்ஷரவர்கள் அதை அங்கிகரித்துக்கொண்டு, பங்களாவிற்போய்ச் சாவகாசமாய்ப் பேசிக்கொள்ளலாம் என்று சொல்லி அவர்களை அனுப்பிவிட்டார்கள். அதன்பேரில் போர்டிங் பிள்ளைகள் "துதிதங்கிய பரமண்டல சுவிசேடக நாமம" என்று தொடங்கிய ஞானகீர்த்தனையை இனிமையாய்ப் பாடினார்கள்.

கீர்த்தனை முடிந்து அத்தியக்ஷரவர்கள் ஸ்ற்றேஷனுக்கு வெளியே வரவே, அவ்விடத்தில் ஏராளமாய்க் கூடிநின்ற சனங்கள் அத்தியக்ஷர் வாழ்க என்று சொல்லி ஏகோபித்து ஆர்ப்பரித்தார்கள். ஆர்ப்பரிப்பு முடிகிறதற்குள்ளாக, ஜில்லா ஜட்ஜி துரையவர்கள் தற்சமையத்துக்கு அத்தியக்ஷரவர்கள் உபயோகத்துக்காக விட்டிருந்த மகத்தான வாகனத்தில் கனம். ஹார்க்கோட்டு ஐயரவர்கள் சகிதம் ஏறிக்கொண்டு முருகன்குறிச்சி மிஷன் பங்களாவுக்குப் போகப் புறப்பட்டார்கள். இரஸ்தா நெடுக வெகுதூரத்துக்கு சுத்த வெண் வஸ்திரம் தரித்த சனங்களால் நிறைந்திருந்தது. இவர்களும் ரைல்வே ஸ்ற்றேஷனிற் கூடி நின்ற சர்வ சனங்களும் வண்டில்களிலும் கால்நடையாயும் அத்தியக்ஷரவர்கள் இரதத்தோடு போய்ச் சேரும்படி ஓரே ஓட்டமாய் ஓடினார்கள். அத்தியக்ஷரவர்கள் முகத்தைப் பார்க்கவும் அவர்கள் சப்தத்தைக் கேட்கவும் அவ்வேளையில் சனங்களிடத்தில் மிகுந்த வாஞ்சை விளங்கினபடியால், அச்சமையத்துக் காக்ஷி மகா சந்தோஷகரமானதாயிருந்ததென்றும், நம் மனதைவிட்டு ஒருநாளும் போகமாட்டாதென்றும் எண்ணுகிறோம். பக்ஷமுள்ள நமது அத்தியக்ஷரவர்களை, மேளதாளங்களோடும், கீதவாத்தியங்களோடும் ஆடம்பரமாய்க் கூட்டிக்கொண்டுவரவில்லையே என்று சிலர் நினைத்தாலும் நினைத்திருப்பார்கள். என்றாலும் நம்மனைவருடைய உள்ளத்தையும் நிரப்பியிருந்த சந்தோஷமாகிய கீதத்துக்கும், நம்மிருதயததில் பூரித்துக்கொண்டிருந்த மகிழ்ச்சியாகிய இனிய ராகத்துக்கும் அதுகளெல்லாம் நிகரோ? அப்பால் அத்தியக்ஷரவர்கள் நேர்த்தியாய்ச் சோடிக்கப்பட்டி

ருந்த பங்களாவின் வெளி வாசலில் வந்தவுடனே இரதத்தை விட்டிறங்கி, அங்ஙனம் நின்று தங்களே சங்கைபண்ணி உபசரித்த சுதேச குருமார்களோடு பங்களாவிற்போய்ச் சேர்ந்தார்கள். சேர்ந்து உட்கார்ந்தவுடனே, ஸால்வே ஸ்ற்றேஷனில் சமர்ப்பித்த வர்தனப்பத்திரம் சுதேச குரு ஒருவரால் வாசிக்கப்பட்டது. மேற்படி வர்தனப்பத்திரம் அடியில் வருமாறு முடிகிறது.

"தங்களுக்கும் சங்கிக்கப்படத்தக்க அம்மாளவர்களுக்கும் தீர்க்காயுளைக் கொடுத்து உங்கள் முயற்சிகள் சித்திக்கும்படி ஆசீர்வதித்து, கிறிஸ்தவர்களும் அவர்கள் போதகர்களும் இப்போது இருப்பதிலும் ஆயிரமடங்காய்ப் பலுகிப் பெருகுவதை உங்கள் கண்களினால் காணும்படி கிருபைசெய்வதோடு, நாங்களும் தாங்கள் செய்யும் எந்த ஏற்பாட்டிலும் திட்டத்திலும் இசைந்த மனதுள்ளவர்களாய்த் தங்களுடன் ஒன்றித்து எங்கள் கடமைகளை நிறைவேற்றவும், இவ்விதமாய் தேவனால் தாங்கள் பிரதான போதக ஊழியத்திற்கென்று ஏற்பட்டிருக்கிற இந்தத் திருநெல்வேலிச் சுதேச சபையானது ஆதரிப்பிலும், நடத்துதலிலும், பரிபாலனத்திலும் ஸ்வயங்கிருதம் அடையச் செய்யவும் எல்லாரும் ஏகோபித்துப் பிரயாசப்படத் திரியேக தேவன் திருவருள் புரிவாராக."

இந்த முடிவுரை வாக்கியத்தை அத்தியகூரவர்கள் விசேஷமாய்ப் பிடித்து அதன்பேரில் சில புத்திமதிகள் சொன்னபிறகு, முதலாவதாக அவர்களோடு சேர்ந்து பரிசுத்தமாய் தேவனை ஸ்தோத்திரிக்க விரும்புகிறதாக அறிவித்து தேவாலயத்துக்குப் புறப்பட்டார்கள். அதற்குமுன்னமேயே ஏராளமான சனங்கள் கோவிலில் கூடிவந்திருந்தபடியால், இப்பொழுதுபோன எல்லாருக்கும் இடங்கிடையாமல் அநேகர் வெளியே நிறகும்படி நேரிட்டது.

இந்தச் சமயத்தில் தேவாலயத்தில் 48 சுதேசக் குருமார்களும் 1500 சனங்களும் கூடிவந்திருந்தார்கள். வெளியே நின்றவர்கள் தொகையும் உதாசீனம் அவ்வளவிருக்கும். அவர்களுக்குள் அஞ்ஞானிகளும் அநேகர் நின்றார்கள். அத்தியகூரவர்கள் தேவாலயத்துக்குள் வந்தவுடனே, கனம் ஏசுதாசன் யோவான் ஐயர் லித்தானியா என்னும் பிரார்த்தனையையும் சமயத்துக்கேற்ற வேறு சில செபங்களையும் வாசித்து ஆராதனை நடப்பித்தார். ஆராதனை முடிந்தவுடனே, இராப்போசனக் கிராதியின் தென் கடைசியில் முழங்காலூன்றியிருந்த அத்தியகூரவர்கள் முழங்காலிலிருந்து எழுந்து, கிராதியின் மத்தியிற்போய் படியில் நின்றுகொண்டு கூடிவந்திருந்த சனங்களுக்கு அடியில் வருமாறு பிரசங்கித்தார்கள். "தேவனுடைய கரம் என்மேலிருந்ததினாலே, நான் உங்கள் நடுவில் சுகமே வந்து சேர்ந்திருக்கிறேன்." போன மாதம் உங்கள் செபங்களோடும் நல் விருப்பங்களோடும் இவ்விடத்திலிருந்து என்னை வழிவிட்டனுப்பினீர்களே, இதோ திரும்பவும் உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறேன். "கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் பரிபூரணமான ஆசீர்வாதத்தோடு" உங்களிடத்தில் வந்திருக்கிறேனென்று நம்புகிறேன். அந்த ஆசீர்வாதமில்லாதபட்சத்தில் எந்த நல் முயற்சியும் சித்திபெறமாட்டாதே. இந்த ஆலயத்தில் அநேகம் பெயர் பட்டம்பெற்றதைக் கண்டிருக்கிறீர்கள். உதவிக் குருக்கள்மாரும், குருக்கள்மாரும் பண்ணின கன பக்தியான பிரதிக்ஞைகளையும் கேட்டிருக்கிறீர்கள். இப்பொழுது உங்கள் சகதாபமும் உங்கள் செபமும் உங்கள் உதவியும் எனக்குக் கிடைக்கத்தக்கதாக, இந்த அத்தியகூர் பட்டம் எனக்கு அளிக்கப்பட்டபொழுது சிரேஷ்ட அத்தியகூர

வர்கள் தேவ நாமத்தில் என்னிடத்திற் கேட்டுக்கொண்ட பிரதிக்ஞைகளையும் வாக்குத்தத்தங்களையும் உங்களுக்கு அறிவிக்கிறேன்" என்று சொல்லி, பட்டாபிஷேக முறையில் வருகிற கேள்விகளையும் உத்தரவுகளையும் தெளிவாய் விவரித்து விளக்கிக்காண்பித்தபின்பு, உத்தரவாதமும் பாரமுமான இந்தக் கடமைகளைத் தேவனுக்குப் பின்பு உங்களுடைய உண்மையான செபங்களினாலும் அன்பான உதவியினாலும் அனுகூலமாய் நிறைவேற்றக்கூடுமேயல்லாமல் மற்றப்படியல்ல என்றார்கள். அப்புறம் அன்று தங்களுக்குப் பாராட்டின மிகுந்த அன்புக்காகவும் விசேஷமாக தேவனுடைய தயவைச் சுதோஷமாய்க்கொண்டாடும்பொழுது அது ஏழைகளுக்கும் செல்லவேண்டுமென்று தாங்கள் விரும்பின பிரகாரம் அன்று சாயங்காலியில் அநேக ஏழைகளுக்குப் போசனங்கொடுக்கப்படப்போகிறதற்காகவும் சனங்களுக்கு வர்தனம் சொன்னார்கள். கடைசியாக இந்த நாட்டில் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவுக்குச் சீஷர்களென்று அறிக்கையிடுகிறவர்களுக்குள் அன்பும் ஐக்கியமும் தேவபக்தியும் பெருகும் என நம்புகிறேனென்று சொல்லி, அத்தியகூரவர்கள் சனங்களை ஆசீர்வதித்துவிட்டுப் பங்களாவுக்குப் போனார்கள். சனங்களும் தாங்கள் கண்டதும் கேட்டதுமான சகலத்தினாலும் சந்தோஷபூரிப்படைந்தவர்களாய் தங்கள் தங்கள் ஸ்தானங்களுக்குத் திரும்பினார்கள். அன்று சாயந்தரம் நானூறுபேருக்கு மார்க்கத்தாருமான ஆயிரத்துக்கதிகம் ஏழைகளுக்கு சத்திரத்துக்கடித்த வண்டிப்பேட்டையில் பாளையங்கோட்டை சுதேசக் கிறிஸ்தவர்களால் தயார்செய்யப்பட்டிருந்த போசனம் பரிமாறப்பட்டது. இந்தச் சுபதினத்தை இவ்வாறு சந்தோஷமாய்க்கொண்டாடின நாம், தேவவசனம் ஓடி மகிமைப்படவும், இந்த நாட்டில் திருச்சபையானது தேவாசீர்வாதத்தால் மெய்யுபதேசத்தின்பேரில் கட்டப்படத் தேவனுக்குப் புகழும் மகிமையுமுண்டாகவும் கனிகொடுக்கவும், நமது அத்தியகூரவர்களுக்கு அதிக வைராக்கியத்தையும் திருபையையும் தேவன் அனுக்கிரகிக்கவேண்டுமென்று இடைவிடாமல் பிரார்த்திப்பது நமது கடமையென்று உணர்ந்துகொள்ளவேண்டும்.

இந்த நாட்டில் உண்டாயிருக்கிற பஞ்சத்தினாலும் கொள்ளைநோயினாலும் இப்பொழுது துன்பகாலத்தான். என்றாலும் நமக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிற வேலையை உண்மையாய் நிறைவேற்றப் பிரயாசப்படுவோமாக. தேவனை நம்பித் தைரியங்கொள்வோமாக.

ஏப்பிரல்மீ நாள் 30. பங்கூனிமீ 21உமுதல், சித்திரைமீ 19உவரை

வாரம்.	இங்கிலீஷ் தேய்தி.	தமிழ்த் தேய்தி.	அன்றாடகத் தியானம்.
ஞா	1	உக	அவர் மரித்தோரிலிருந்து எழுந்தார். மத். 28: 7.
தி	2	உஉ	ஸ்திரியே ஏன் அழுகிறாய். யோ. 20: 13.
செ	3	உங	நானே திராட்சச் செடி நீங்கள் கொடிகள். யோ. 15: 5.
பு	4	உச	உங்களுக்குச் சமாதானம் என்றார். லூக். 24: 36.
வி	5	உரு	உங்கள் இருதயங்களில் சந்தேகங்கள் எழும்புகிறதென்ன. 24: 38.
வெ	6	உசு	சீவ அப்பம் நானே. யோ. 6: 35.
ச	7	உஎ	நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள். 24: 48.
ஞா	8	உஅ	நம்முடைய விசுவாசமே உலகத்தைச் செயிக்கிற செயம். 1 யோ. [5: 4.
தி	9	உசு	தேவன் நமக்கு நித்தியசீவனைத் தந்திருக்கிறார். 5: 11.
செ	10	௩0	குமாரனையுடையவன் சீவனையுடையவன். 5: 12.
பு	11	௩௧	கர்த்தரைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள். யோ. 20: 20.
வி	12	க	பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள். 20: 22.
வெ	13	உ	கர்த்தர் சமீபமாயிருக்கிறார். பிலி. 4: 5.
ச	14	௩	என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். மத்தேயு 11: 29.
ஞா	15	ச	உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். 1 பேது. 3: 21.
தி	16	ரு	நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாதேயுங்கள். பிலி. 4: 6.
செ	17	சு	அவருடைய தழும்புகளால் குணமானீர்கள். 3: 24.
பு	18	எ	நானே நல்ல மேய்ப்பன். யோ. 10: 11.
வி	19	அ	ஆடுகளுக்காக என் சீவனையும் கொடுக்கிறேன். 10: 15.
வெ	20	கூ	வேறே ஆடுகளும் எனக்குண்டு. 10: 16.
ச	21	க0	என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன். [யோ. 14: 27.
ஞா	22	கக	தேவனை நோக்கிக் காத்திரு. சங். 42: 5.
தி	23	கஉ	நான் மறுபடியும் உங்களைக் காண்பேன். 16: 22.
செ	24	கங	அவைகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கும். யோ. 10: 16.
பு	25	கச	நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள். மத். 5: 13.
வி	26	கரு	நம்மை சத்திய வசனத்தினாலே செனிப்பித்தார். இயாக். 1: 18.
வெ	27	கசு	அமர்ந்த தண்ணீர்களண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகி [றார். சங். 23: 2.
ச	28	கஎ	அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார். 96: 13.
ஞா	29	கஅ	நானே உலகத்தைச் செயித்தேன். 16: 33.
தி	30	ககூ	மேலானவைகளைத் தேடுங்கள். கொலோ. 3: 1.

விசேஷித்த நாட்கள்.

1. ஈஸ்தர் பண்டிகை.
8. உயிர்த்தெழுந்த திருநாளுக்குப்பின்வரும் முதலாம் ஞாயிறு.
13. அமாவாசை.
15. உயிர்த்தெழுந்த திருநாளுக்குப்பின்வரும் இரண்டாம் ஞாயிறு.
22. உயிர்த்தெழுந்த திருநாளுக்குப்பின்வரும் மூன்றாம் ஞாயிறு.
27. பௌரணமி.
29. உயிர்த்தெழுந்த திருநாளுக்குப்பின்வரும் நாலாம் ஞாயிறு.

நற்போதகம்.

ரு. மேமீ. ௲௮௭௭௵.

கொரிந்தியரின் முதலாம் நிருபம்.

VII. அதிகாரம்.

நாம் இந்த அதிகாரத்தை வாசிக்கிறதில் எவ்வித சம்பந்தமாய் அது எழுதப்பட்டதென்று கவனிப்பது அவசரம். (a) துன்பங்களும் சோதனைகளும் அவ்விடத்தில் நாட்டப்பட்டிருந்த கிறிஸ்து சபைக்கு நேரிடுகிற சமயமாயிருந்தது. (b) கர்த்தர் இரண்டாம் விசை பிரசன்னமாகும் காலம் சமீபமாயிற்று என்ற எண்ணமும் உண்டாயிருந்தது. (c) கொரிந்தியர் விவாக முறைமையைப்பற்றிக் குறைவாய் எண்ணி அப்போஸ்தலனிடத்தில் சில கேள்விகளைக் கேட்கிறதற்கு அவரிடத்தில் எழுதியிருந்தார்கள். அவர் அவைகளைப்பற்றிய உத்தரவைச் சொல்லுகிறதில் (க) விவாகம், (உ) விரதம், (ங) விக்கிரகங்களுக்குப் படைத்தவைகள், (ச) ஆவிக்குரிய அல்லது ஞான வரங்கள் ஆகிய நாலு விஷயங்களைப்பற்றிப் பேசுகிறார்.

12-ம் வா. அஞ்ஞான ஸ்திரி புருஷர் இருவரில் ஒருவர் கிறிஸ்து மார்க்கத்தை அனுசரித்தால் அப்படி கிறிஸ்துமார்க்கத்தில் அமைந்த ஸ்திரியாவது புருஷனாவது விவாக சம்பந்தத்தை விட்டுப் பிரிந்து போகவேண்டுமோ இல்லையோ என்று கொரிந்தியர் கேட்டிருந்தார்கள். அதற்கு பரி. பவுல்—நமது ஆண்டவர் உலகத்தில் சஞ்சரிக்கையில் விபசாரஞ்செய்ததற்காக தள்ளுதலின் சீட்டைக்குறித்துச் சொல்லியிருந்தாலும் (மாற்கு 10: 12.) இந்த விஷயத்தைக்குறித்து ஒன்றுஞ் சொல்லவில்லை. ஆகையால் அவர்கள் பிரிந்துபோகவேண்டிய அவசியமில்லை என்பதே என்னுடைய தீர்ப்பு என்கிறார்.

14-ம் வா.—"இல்லாவிட்டால் உங்கள் பிள்ளைகள் அசுத்தமாயிருக்குமே."—மாதா பிதா அஞ்ஞானத்திலிருந்து பெற்ற பிள்ளைகளுக்கும், அவர்களில் ஒருவர் கிறிஸ்துமார்க்கத்திலிருந்து பெற்ற பிள்ளைகளுக்கும் தேவனது திருப்பார்வையில் வித்தியாசமுண்டு. அவர்களில் ஒருவர் கிறிஸ்துமார்க்கத்திலிருக்கும் முகாந்தரத்தினாலே பிள்ளைகளும் தேவ பக்தரின் கூட்டத்தைச் சேர்ந்தவர்களாயிருப்பார்கள்.

15-ம் வா.—"சகோதரனுவது சகோதரியாவது அடிமைப்பட்டவர்களல்ல."—அஞ்ஞானியாயிருக்கப்பட்ட புருஷன் அல்லது மனைவி பிரிந்துபோகத் தீர்மானித்தால் அப்படியே பிரிந்துபோகட்டும். இந்த விஷயத்தில் கிறிஸ்தவனனவன் அடிமைப்பட்டவனல்ல, என்றும் சமாதானத்தையும் ஐக்கியத்தையும் நாடி நடப்பதற்கு அவன் கடன் பட்டவன்தான்.

புருஷன் அல்லது ஸ்திரீ பிரிந்துபோகட்டும் என்று சொல்லியிருப்பதில் அப்படிப் பிரிந்திருக்கும் கிறிஸ்தமான புருஷன் அல்லது மனைவி விவாகஞ்செய்துகொள்ளலாமென்ற கருத்தாயல்ல, அஞ்ஞான புருஷன் அல்லது மனைவி உயிரோடிருக்கும் பரியந்தம் கிறிஸ்தமான மனைவி அல்லது புருஷன் விவாகஞ்செய்யலாகாதென்ற கருத்தாகவே சொல்லியிருக்கிறது. இது பிரிதலேயன்றி தள்ளுதல் அல்ல.

18-ம் வா.—"விருத்தசேதனமில்லாதவனுயிருக்க"—கிறிஸ்துமார்க்கத்தில் அமைந்த சில யூதர்கள் அஞ்ஞானிகளைப்போல் காணப்படும்பொருட்டு இந்த வழக்கத்தை அனுசரிப்பார்கள். ஒரு ரணவைத்தியனுடைய கையினுல் செய்யப்பட்டது.

21-ம் வா.—"நீ சுயாதீனனுகக் கூடுமானுல் அதை நலமென்று அனுசரித்துக்கொள்."—அதாவது—நீ கிறிஸ்தவனுயிருந்து அடிமை நிலைமையிலிருப்பாயாகில் உன் நிலைமையைப்பற்றி சஞ்சலப்படாதே. நீ சுயாதீனமாகக்கூடுமாகில், அல்லது உன் எஜமான் உன்னே சுயாதீனனுக்க இஷ்டப்படுவானுகில், கீழான அடிமையும் தேவனது திருப்பார்வையில் மேலான சுயாதீனனுயிருப்பதால் அடிமை நிலைமையையே தெரிந்துகொள். மேலான சுயாதீனனும் பரம நாயகராகிய கிறிஸ்து நாதருக்கு அடிமையே.

23-ம் வா.—"மனுஷருக்கு அடிமைகளாகாதிருங்கள்."—இந்த வார்த்தைகளே ஞானப்பிரகாரமாய் அர்த்தப்படுத்தவேண்டுமே. அப்போஸ்தலன் சொல்லுகிறார்—நீங்கள் கிறிஸ்துவின் திரு இரத்தமாகிய கிரயத்தினுலே கொள்ளப்பட்டவர்களானதால், நீங்கள் அவருக்கே சொந்தமானவர்களென்று எண்ணிக்கொள்ளுங்கள். மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்து அவர்களுக்கு அடிமைகளாகாதபடிக்கு கிறிஸ்துவுக்காகவே எல்லாவற்றையுஞ் செய்கிறவர்களாயிருங்கள். அவரே உங்களே அடிமை நிலையில் வைத்தவர், ஆகையால் உலக எஜமானே விட்டு பரம எஜமானே நோக்குங்கள். கொலோ. 3: 23, 24.

25-ம் வா.—"கன்னிகைகளைக்குறித்து"—கலியாணம் பண்ணுதாண் அல்லது பெண்பிள்ளே குறிக்கப்பட்டிருக்கிறது.—"கர்த்தரால் எனக்குக் கட்டளையில்லே"—இயேசு கர்த்தர் இதைப்பற்றி யாதொரு கட்டளையும் கொடுக்கவில்லே. ஆயினும் அவரது திருவுள ஆலோசனேகளே அறிந்து உத்தமமாய் வெளிப்படுத்தத்தக்க சக்தியைப் பெற்றவனுக இது விஷயத்தில் யோசனே சொல்லுகிறேன்.

29—31. ஜீவன் நீர்மேல் குமிழிபோல நிலையற்றதாயும் சுருக்கமாயும் இருப்பதால், பிரபஞ்சத்தின் சுகதுக்கங்கள் வேலேகள் இவைகளில் மனதை அதிகமாய்ச் செலுத்தக்கூடாது.

39-ம் வா.—"கருத்தருக்குள்"—இப்பொழுது கிறிஸ்தவளாயிருக்கிற அவள் ஒரு கிறிஸ்தமான புருஷனுக்கே வாழ்க்கைப்படும்படி கவலேயாயிருக்கவேண்டும்.

VIII. அதிகாரம்.

தம்மிடத்தில் அவர்கள் எழுதிக் கேட்ட மூன்றும் விஷயத்தைப் பற்றிப் பேசுகிறார்.

—"விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளே"—என்பது, பலியாகச் செலுத்தப்பட்ட மிருகங்களின் பாகத்தைக் குறிக்கும். அவைகள் பலிபீடத்தின் மேல் வைக்கப்படாத வைகள். அவைகளில் பாதி ஆசாரியர்களேயும் பாதி பலிசெலுத்தினவர்களேயும் சேரும். அதில் மீதியானவைகளே ஆலயங்களிலாவது (10 வா.) வீடுகளிலாவது வைக்கப்பட்ட விருந்துகளில் புசிப்பார்கள். சில சமயங்களில் அவைகள் ஆசாரியர்களாலாவது, ஏழைச் சனங்களாலாவது, லோபிகளாலாவது சந்தைகளில் விற்கப்படும். இந்த விஷயத்தைக்குறித்து இதற்குமுன் பேசி தீர்ப்புண்டாயிருந்தது. என்றாலும் பரி. பவுல் அந்தத் தீர்ப்பைப்பற்றி ஒன்றுஞ் சொல்லுகிறதில்லே. தேவனுடைய பரிசுத்த ஆவியைப் பெற்ற சுயாதீனமுள்ள அப்போஸ்தலனுகவே இந்த விஷயத்தைக்குறித்துப் பேசுகிறார். அப்படிப்பட்ட தீர்ப்புகள் எவ்விடங்களிலும் எக்காலங்களிலும் செல்லாதவைகள்போல் தோன்றுகிறது.

விக்கிரகமானது வெறும் கல்லேயன்றி வேறொன்றுமல்லவென்று சொல்லி கொரிந்து கிறிஸ்தவர்களில் சிலர் தங்கள் சுயாதீனத்தைக்குறித்துப் பெருமைபாராட்டி விக்கிரகக் கோவில்களில் புசித்து வந்தார்கள். ஆனுல், தங்கள் பழைய அஞ்ஞான முறைகளே விட்டு மூற்றும் நீங்காத வேறே சில பலவீனமுள்ள சகோதரரோ தங்கள் மனச்சாட்சியில் சந்தேகம் கொண்டவர்களாய் அப்படிப்பட்ட காரியங்களேச் செய்யத் துண்டிவிடப்பட்டார்கள். அவர்களுக்கு இது பாவம். அதினுல் பரி. பவுல் அவர்கள் இது விஷயத்தில் நெறிதப்பி நடக்கும்படி செய்தவர்களேக் கடிந்துகொள்ளுகிறார்.

5-ம் வா.—"வானத்திலேயும் பூமியிலேயும் தேவர்கள் என்னப்படுகிறவர்கள் உண்டு."—பரலோகத்தின் அதரும் பூலோகத்தின் பிரபுக்களும் தங்கள் ஊழியத்திலும் அதிகாரத்திலும் ஒரு வாறு தேவனுக்கு ஒப்பிடப்படலாம். (சங்கீதம் 136: 2, 3—பரி. யோவான் 10: 35.)

மகிமையுள்ள திரித்துவத்தின் மூன்று இரண்டு ஆட்களுக்குரிய லக்ஷணங்கள் இதில காட்டப்பட்டிருக்கின்றன. பிதாவானவர் சகல ஜீவ கோடிகளுக்கெல்லாம் ஊற்றும் காரணருமாயிருக்கிறவர். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று. குமாரன் தாமும் பிதாவினுலே ஜெனிப்பிக்கப்பட்டவர். குமாரனுனவர் சருவலோகத்தையும் சிருஷ்டித்த ஆதி காரணக் கடவுளாயிருக்கிறார். நீசேயா (Nicene) விசுவாசப்பிரமாணத்தில் "வானத்தையும் பூமியையும் படைத்தவரை" "அவராலே சகலமும் உண்டாயிற்று" என்று சொல்லியிருக்கிறது.

13-ம் வா.—"என் சகோதரனுக்கு இடறலுண்டாக்காதபடிக்

கு"—கிறிஸ்துவின் தாசராகிய சகோதரர் மனச்சாட்சியின்படி கொண்டிருக்கும் சந்தேகங்களை அற்பமாய் எண்ணாமல் அவைகளினிமித்தம் அவர்களை பக்ஷமாய் நடத்தவேண்டுமென்பதே நாம் இந்த அதிகாரத்தில் படிக்கவேண்டிய முக்கிய பாடமாயிருக்கிறது. கிறிஸ்த பக்தன் ஒரு பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவனாயும் அதில் ஒரு அவையவமாயுமிருப்பதால் சத்திய கடவுளின் நித்திய பிரமாணங்களுக்குப் பழுதுண்டுபண்ணாத எல்லாக் காரியங்களிலும் அவன் தன் சுயாதீனத்தைப் பாராட்டாமல் மற்றச் சகோதரருடைய அபிப்பிராயங்களையும், விருப்பங்களையும், பலவீனங்களையும் கூடக் கவனித்து நடக்கவேண்டும்.

IX. அதிகாரம்.

கடைசி அதிகாரத்தின் கடைசி வாக்கியத்தில் பவுல் அப்போஸ்தலன் இடறுதலுக்கேதுவாயிருந்தால் பலவீன சகோதரனினிமித்தம் மாமிசம் தொடாமலிருப்பேனென்று சொல்லியிருந்தார். இந்த அதிகாரத்தில் மற்ற அப்போஸ்தலருக்குப் பயந்து அல்லது தம்மைக் குறைவுள்ளவனென்று எண்ணி தாம் இப்படிச் செய்கிறதில்லையென்றுசொல்லிக்கொண்டுபோகிறார்.

1-ம் வா. "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நான் தரிசிக்கவில்லையா"—தமஸ்குப் பட்டணத்துக்குப்போகையில் திவ்விய சந்நிதியின் மகிமை தம்முடைய கண்களில் பிரகாசித்தபொழுது தாம் கண்ட அந்தப் பரம தரிசனத்தை பவுல் ஒருபொழுதும் மறக்கத்தக்கதல்ல. (அப். 26: 16. 1 கொ. 15: 8.) அவரது கூட்டாளிகள் ஒரு சத்தத்தைமாத்திரம் கேட்டார்கள். அவரோ கிறிஸ்துவின் திரு முகத்தைத் தரிசிக்கவும் அவரது அமிர்த வசனங்களைக் கேட்கவும் இடம் பெற்றார்.

3-ம் வா. "என்னை நியாயம்விசாரிக்கிறவர்களுக்கு நான் சொல்லுகிற மாறுத்தரமாவது"—மூலபதத்தைப் பார்த்தால் "என்னை நியாயம்விசாரிக்கிறவர்களுக்கு இதுவே நான் சொல்லுகிற மாறுத்தரம்" எனற கருத்தாக இருக்கிறது. அதாவது முந்தினவாக்கியங்களில் அப்போஸ்தலனுக்குரிய தம்முடைய அதிகாரத்தைப்பற்றி தாம் சொன்ன உத்தரம்தான். 4ம் வா-ல் பவுல் அப். இன்னுஞ் சில கேள்விகளைக் கேட்கப்போகிறார்.

4-ம் வா. "புசிக்கவும் குடிக்கவும் எங்களுக்கு அதிகாரமில்லையா"—எங்கள் பிரசங்கத்தைக்கேட்கிறவர்களாலே போஷிப்பிக்கப்படும்படி எங்களுக்கு அதிகாரமில்லையா.

5-ம் வா. கர்த்தருடைய சகோதரரும் இவர்கள் யோசேப்பு மரியாள் என்பவர்களுடைய மக்கள். கன்னிமரியாளின் பிள்ளைகளும், கர்த்தராகிய இயேசுநாதருடைய உடன்சகோதரருமாயிருந்தவர்கள்.—இவர்களில் பேர்போனவர் எருசலேம் சபையின் கண்காணியாராகிய யாக்கோபு (அப். 12. 17.)—15. 13.—21. 8. மற்றவர்களாகிய யோசே (அல்லது யோசேப்பு) சீமோன், யூதாஸ் என்பவர்களே. இவர்களைப்பற்றி அவர்களுடைய நாமதேயங்களைத் தவிர வேறொன்றும் நமக்குத் தெரியாது. (கலா. 1. 19.)

II. 9, 1.

6-ம் வா. பவுல் அப்போஸ்தலனுடைய அன்பான சிநேகிதனாகிய பர்னபா என்பவன் சபையில் சம்பளமில்லாமல் ஊழியஞ்செய்தவிஷயத்தில் ஒருவேளை பவுலினுடைய மாதிரியைப் பின்பற்றியிருப்பான்.

9-ம் வா. "போரடிக்கிற மாட்டை வாய் கட்டாயாக."—பவுலப் போஸ்தலன் இந்த வாக்கியத்தைக்கொண்டு ஸ்தாபிக்கிற உபதேசத்தை நாம் பார்க்கும்பொழுது சதாரண புஸ்தகங்களை நாம் வாசிக்குமாப்போல வேத புஸ்தகத்தையும் வாசிக்ககூடாது என்று அறிந்து கொள்ளலாம். வேத புஸ்தகமானது எங்கும் ஆழ்ந்த சத்தியங்கள் நிறைந்ததாயிருக்கிறது. இந்த சத்தியங்கள் பூமியின் மேல்புறத்தில் ஒன்றுந் தோன்றாமல் அதற்குள் மறைந்திருக்கின்ற பொற்கேணிகள் போல இருக்கின்றன. அப்படியே 2 கொரி 8: 14. மிகுதியாய்ச் சேர்த்தவனுக்கு அதிகமானதுமில்லை. கொஞ்சமாய்ச்சேர்த்தவனுக்குக் குறைவானதுமில்லை.)" மேலும் கலாத். 4: 31. (நாம் அடிமையானவளுக்குப் பிள்ளைகளாயிராமல் சுயாதீனமுள்ளவளுக்கே பிள்ளைகளாயிருக்கிறோம்."—இவைகள் எல்லாம் உள்ளான உபதேசங்கள் அடங்கினவைகளாயிருக்கின்றன.

10-ம் வா. "தேவன் மாடுகளுக்காகவே கவலையாயிருக்கிறாரோ" நம்முடைய சீவசெந்துகளுக்காக நாம் யாதொரு கவலைகொள்ளக் கூடாதென்பது இதன் கருத்தல்ல. நீதிமொ. 12: 10. (நீதிமான் தன் மிருக சீவனைக் காப்பாற்றுகிறான்.) சங். 145: 9. ஆதியாக. 9: 10. இன்னும அநேக வாக்கியங்களைப் பார்க்க. மனுஷன் தன் மாட்டுக்கு இரக்கமாயிருக்கவேண்டும் என்று தேவன் கட்டளையிட்டதில் மாட்டுக்கு உண்டாகும் அநுகூலத்தைப் பார்க்கிலும் மனிதருடைய அழியாத ஆத்துமத்துக்கு அதிக அநுகூலங்கிடைக்கவேண்டும் என்று தேவன் கருதியிருந்தார். "தயையுள்ள மனுஷன் தன் ஆத்துமாவுக்கு நன்மை செய்துகொள்ளுகிறான். கரேனோ தன் உடலை அலைக்கழிக்கிறான்." மனுஷன் இரக்கங்காட்டுகிறதினால் தன்னை உயர்ந்த சிருஷ்டியென்று விளங்கப்பண்ணி, அதிக சந்தோஷத்தை அனுபவிப்பதற்குத் தகுதியுள்ளவனாகிறான்.

16-ம் வா. "அது என்மேல் விழுந்த கடமை." என்னத்தினாலெனில் யேசுவானவர் எருசலேமிலே பவுல் அப்போஸ்தலனுக்குத் தரிசனமாகி புறத்தேசத்தாரிடத்தில் போகும்படி கட்டளையிட்டார். ஆகையால் நான் இந்த ஊழியத்தை நிறைவேற்றுகிறதையிட்டு மேன்மை பாராட்ட ஏதுவில்லை. தேவகட்டளையை நிறைவேற்றுகிறேனேயன்றி வேறில்லை. ஆயினும் இந்த ஊழியத்தை நிறைவேற்றுவதில் மற்ற அப்போஸ்தலர் வாங்குவதுபோல நான் சம்பளம் வாங்காமல் பகலிலே பிரசங்கித்தும் இரவில் கையினாலே வேலை செய்தும் வருவதால் இது விஷயத்தில் நான் மேன்மைபாராட்ட இடமிருக்கிறது என்கிறார்.

20-ம் வாக்கியத்தோடே அப். 16: 3. அப். 18: 18. அப். 21: 23. வாக்கியங்களை ஒத்துப்பார்க்க.

மற்றவர்களை ஆதாயப்படுத்தும்படி பிரயாசப்படுகிறதில் வேதப் பிரமாணத்துக்குள்ளாகக் கூடியமட்டும் மற்றவர்களோடே இசைந்து நடக்க நாம் கடன்பட்டவர்களானபோதிலும் இந்த அபேட்சையினால் நாம் நெறியைவிட்டு ஒன்றுஞ்செய்யாதபடிக்கு கவலையுள்ளவர்களா

161293

யுமிருக்கவேண்டும். இதை மனதில்வைத்து அப்போஸ்தலன் "அப்படியிருந்தும் நான் தேவனுக்கு முன்பாக நியாயப்பிரமாணமில்லாதவனாயிராமல் கிறிஸ்துவின் பிரமாணத்துக்குள்ளானவனாயிருக்கிறேன்" என்கிறார். ஒருவன், நான் சாதிபேதத்தைக் கைக்கொண்டால் உயர்ந்த சாதிகளிடத்தில் தடையில்லாமல் பேசலாம் என்று சொன்னால் அதைச் சரியென்று ஒப்பக்கூடாது. ஒரு சகோதரனைத் தீட்டுள்ளவன் என்று சொல்லுதல் தேவனுடைய அன்பின் பிரமாணத்துக்கு விரோதமாயிருக்கிறது.

7-ம் வா. போர்ச்சேவகர், சமுசாரி, மேய்ப்பன், ஆசாரி இவர்களுடைய திருஷ்டாந்தரங்களினாலே போதகர் தங்கள் ஜனங்களாலே போஷிப்பிக்கப்படவேண்டுமென்கிற நியாயத்தை ஸ்தாபித்து ஸ்திரப்படுத்துகிறார்.

அப்போஸ்தலன் கிறிஸ்தவர்களுடைய ஞான போராட்டத்தை அல்லது ஓட்டத்தை கொரிந்தியருக்கு நன்றாய்த் தெரிந்திருந்த இஸ்திமியன் விளையாட்டுகளுக்கு உவமானித்துக் காட்டுகிறார். அந்த விளையாட்டில் ஜெயமடைந்தவர்களுக்கு வாடிப்போகும் இலைகளால் செய்யப்பட்ட முடிகிடைத்தது. இதைப் பெறுவது சந்தேகமாயினும் அதைப் பெறுதற்கு அவர்கள் அதிகக் கடுமையாய்ப் போராடவேண்டியிருந்ததுமல்லாமல் அதற்கு முன்பே அவர்கள் தங்கள் தேகத்தை ஒடுக்கி தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ளவேண்டியதாயுமிருந்தது. புனியன் என்பவர் செய்த "மோட்சபிரயாணம்" என்னும் சிறந்த நூலில் கிறிஸ்தவர்களின் ஓட்டத்தை மகா சிறப்பாயும் விபரமாயும் விளக்கிக் காட்டியிருக்கிறது. இதை மோட்சபட்டினத்திற்குப் பிரயாணஞ்செய்யும் கிறிஸ்தவர்கள் யாவரும் அடிக்கடி வாசித்தால் அதிகப் பிரயோஜனமாயிருக்கும்.

X. அதிகாரம்.

பழைய ஏற்பாட்டில் நம்முடைய இரட்சகருக்கு முன்னடையாளங்கள் இருந்தவிதமாகவே கிறிஸ்தமான சாக்கிரமெந்துக்களுக்கும் அதில் அடையாளங்களிருந்தன. இது ஞானஸ்நான முறைமையில்க் காட்டியிருக்கிறது. "நோவாவும் அவனுடைய குடும்பமும் பேழையில்.....இஸ்ரவேல் புத்திரரை சிவந்த சமுத்திரத்தின் நடுவாகச் சேதமின்றி நடத்தி, அதினால் உம்முடைய பரிசுத்த ஞானஸ்நானத்தை அடையாளமாகக் காட்டி,"

1-ம் வா. "மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள்." சங். 105. 39. (அவர் மேகத்தை மறைவுக்காக விரித்து-) "விரித்து" என்கிற வார்த்தையைக் கவனிக்க.

1—4-ம் வா. பவுல் அப்போஸ்தலனுடைய வார்த்தைகளை நாம் கவனிக்கும்பொழுது அவிசுவாசத்தோடே சாக்கிரமெந்துக்களை அனுபவித்தல் ஆக்கினையை அதிகரிக்கிறதற்கேயொழிய மற்றொன்றுக்கும் பலிதமாகாது. இதுவுமன்றி சாக்கிரமெந்துக்கள் அடையாளமும் ஞாபகக்குறிப்புகளுமேயன்றி வேறல்ல என்போர்கள் இதைப்பற்றிக் குறைவாய் எண்ணுகிறார்களென்றும் சொல்லவேண்டுமே. ஞானஸ்நானம் இராப்போசனம் என்கிற சாக்கிரமெந்துக்கள் கிறிஸ்துவோடு நம்மை

ஐக்கியப்பப்படுத்துவதற்கும் மோக்ஷபாதையில் நம்மைப் போஷிப்பித்து பெலப்படுத்துவதற்கும் அவசியமாயிருக்கின்றன.

"ஞானபானத்தைக் குடித்தார்கள்" இந்த வாக்கியத்தைப் பலரும் பலவகையாய் வியாக்கியானஞ்செய்கிறார்கள். யூத சாஸ்திரிகள், மோசே கோல்கொண்டு அடித்த கன்மலை இஸ்ரவேல் சனங்களைத் தொடர்ந்துவந்ததாகவும், அவர்களுக்கு வேண்டிய ஜலத்தைத் தந்ததாகவும் பரம்பரியமாய்ச் சொல்லுகிறார்கள். இது அல்பர்ட்டு (Alford) என்னும் வேத சாஸ்திரியாருடைய அபிப்பிராயமாயும் இருக்கிறது. வேறு சிலர் கற்பாறையல்ல, கற்பாறையிலிருந்து சுரந்துவந்த தண்ணீரே அவர்களைத் தொடர்ந்துவந்தது என்கிறார்கள். மற்றும் சிலர், கிறிஸ்து நாதர் ஞானக்கருத்தாய்க் கற்பாறையாயிருக்கிறாரென்றும் தற்சொரூபமாயல்ல, ஆவியின்வண்ணமாய் அவர்களோடு கூடவே சென்று அவர்கள் போகிற வழிகழிலெல்லாம் கற்பாறை நிலத்திலிருந்து தேவையான தண்ணீரைக் கொடுத்துவந்தார் என்றும் சொல்லுகிறார்கள். "அந்தக் கன்மலை கிறிஸ்துவே" உபா. 32: 4. "அவர் கன்மலை"—15 வா. "இரட்சிப்பின் கன்மலையை" 1 சாமு. 2 அதி. 2 வா. "எங்கள் தேவனைப்போல ஒரு கன்மலையுமில்லை." II சாமு. 22. 2. இன்னும் சில வாக்கியங்களைப் பார்க்க.

7-ம் வா. இது இந்த நிருபத்தின் 8 ம் அதி. 10. வாக்கியத்தில்ச் சொல்லியிருக்கிற பாவச் சேர்க்கையாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது

8-ம் வா. 23000. தொகை 24000 பேர்தான். எண்ணாகமம் 25. 9 பார்க்க. பவுலப்போஸ்தலன் கணக்கின்படியல்ல ஞாபகத்திலிருந்தபடி சொன்னார்.

9-ம் வா, "சிலர் கிறிஸ்துவைப் பரீட்சை பார்த்து" இஸ்ரவேலருடைய பிரயாணங்களில் கிறிஸ்துவானவர் அவர்களோடுகூடச் சென்றார். எபி. 12: 26. ஆகாய். 2. 6.

10-ம் வா. எண்ணாகமம் 16: 41.

16-ம் வா. "நாம் ஆசீர்வதிக்கிற...பாத்திரம், நாம் பிட்கிற அப்பம்" நாம் என்பது சபையார் எல்லாரையும் குறிக்கும். போதகனானவன் அவர்களாலே தெரிந்துகொள்ளப்பட்ட காரியஸ்தனாகவும் அவர்களிலொருவனாகவும் அதைச் செய்கிறான். (Alford)

17-ம் வா. "அநேகரான நாம்... ஒரே சரீரமாயிருக்கிறோம்". பரிசுத்த நற்கருணையானது எல்லாக் கிறிஸ்தவர்களுக்குள்ளும் ஐக்கியக் கட்டாயிருக்கிறது. அந்த ஐக்கியத்தில் அவர்கள் எந்தத் தேசத்தாரானாலுஞ்சரி, எந்தப் பாஷைக்காரரானாலுஞ்சரி, எந்த நிறமுடையோரானாலுஞ்சரி, எந்தக் காலத்தாரானாலுஞ்சரி, உயிருள்ளோரானாலுஞ்சரி, மரித்தோரானாலுஞ்சரி, கிறிஸ்தவர்களெல்லாரும் சகோதரராகவேயிருக்கிறார்கள்.

29-ம் வா. "மற்றொருவனுடைய மனச்சாட்சியைக் குறித்தே". பரிசுத்த பவுலுடைய கருத்தைப் பின்வருமாறு திருஷ்டாந்தப்படுத்தலாம்.

திருவிழாக்களென்னப்பட்ட அஞ்ஞானிகளின் திருநாட்களில் தங்கள் சுவாமியைக் கும்பிடும்படிவந்திருக்கிற இந்துக்களும், விற்ப

னை கொள்வினைக்காக வந்திருக்கும் மகம்மதியருமான திரள் சனங்கள் கூடுகிறதுண்டே. புதிதாய்க் கிறிஸ்துமார்க்கத்தமைந்த ஒரு மனுஷன், கிறிஸ்தவனாகவே பிறந்திருக்கிற என்னிடத்தில் வந்து "ஐயா, நீர் திருவிழாவுக்குப் போகிறீரா? அது பாவமில்லையா!" என்று கேட்கிறாரென்று பாவித்துக்கொள்வோம். அது விஷயத்தில் நான் போகிறது சரியல்லவே, என மாதிரியைப் பார்த்து அவனுங் கூடப்போய் தேர் ஓடும்பொழுது திரள்திரளானகூட்டம் ஆவலாய் அதைக் கும்பிடுகிறதைப்பார்த்து இவனுந் தன் கையை ஏறெடுத்து அதைக் கும்பிட ஏவிவிடப்படலாம். இவ்விதமாய் விக்கிரகம் ஒன்றுமில்லையென்று அறிகிற என் அறிவு அந்தப் பெலவீன சகோதரன் பாவத்தில் விழ ஏதுவாயிருக்கும்.

Communicant's Companion.

நற்கருணை விளக்கம்.

௰௪. அதிகாரம்.

பலவித துன்ப துயரங்களால் சங்கடப்பட்டுத் தவித்துக்கொண்டிருக்கும் கிறிஸ்தவர்களுக்கு இந்தப் பரமவிருந்தால் கிடைக்கும் சில ஆறுதலுந் தேறுதலுமான வார்த்தைகள். அந்தச் சட்டங்களாவன.

(தொடர்ச்சி.)

I. நாம் முன் நடந்துவந்த தப்பான வழிகளால் மனங்கலங்கித் துயரப்படுகிறவர்களானால் அதற்கேற்ற அவிழ்தம் இந்தப் பந்தியிலுண்டு. நான் இன்னின்ன விஷயத்தில் கொடிய ரண்டகம்பண்ணினவனாச்சுதே: மனதார இந்த அந்தப் பாவத்தைச் செய்து படுகுழியில் விழுந்தவனாச்சுதே: தேவவசனத்துக்கும் போதகன்மாருடைய எச்சரிப்புக்கும் மனச்சாக்ஷியின் போதனைக்கும், பரிசுத்தாவியின் ஏவுதலுக்கும் விரோதமாய் நடந்தவனாச்சுதே எனக்கு எப்படி மன்னிப்புக் கிடைக்கும்? என்னை எப்படி ஏற்றுக்கொள்ளுவார்? ஆகையால் துக்கத்தோடு குழியிலிறங்கவேண்டியதாயிருக்குமேயென்று வியாகுலப்படுகிறவர்களுக்கு மகனே! மகனே! உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்கிற இனிய வார்த்தைகள் படுகாயங்களையாற்றுகிற நல்ல தைலம்போலிருக்கிறது என்றறிவோம். கிறிஸ்துவின் பிராயச்சித்தத்தில் பங்குபெற்றவர்கள் அவருக்குள் களிகூர்ந்து மகிழவேண்டியது அவர்கள்பேரில்விழுந்த கடமை. கிறிஸ்துவின் ரத்தமேதவிர நம்முடைய கண்ணீர் நம்மைப் பரிசுத்தராக்குகிறதில்லை.

II. நாடோறும் நம்மையலைக்கழிக்கும் பாவங்கள் நம்மை வருத்தப்படுத்துகிறதுண்டானால் இதை நீக்கத்தக்க மாற்றும் இந்தத் திருவிருந்திலளிக்கப்பட்டிருக்கிறது. நான் அநேகவிஷயத்தில் நாடோறும் குற்றஞ்செய்துவருகிறேன். இது எனக்கும் இருதயங்களை ஆராய்ந்தறிந்திருக்கும் என் தேவனுக்குந் தெரிந்தகாரியம். என் மனம் வாக்குக் காயமுதலியற்றால் தினந்தோறுஞ் செய்யும் பாவங்களுக்குக்

கணக்கில்லையே என்று அழுகிறவர்களுக்கு இந்தப் பரிசுத்த பந்தியை அடிக்கடி சேர்வதினால் ஆறுதலுண்டு. இந்தப் பந்தியைச் சேரும்போதெல்லாம் கிறிஸ்து பலியாக அடைந்த மரணத்தை நினைக்கவும் அதினாலுண்டாகும் புண்ணிய பலன், தான் நாடோறுஞ்செய்யும் பாவங்களையகற்றத்தக்கது. கிறிஸ்துவின்மூலமாய்ப் பிதாவைச் சேருபவர்களை அவர் முற்றும் ரக்ஷிக்க வல்லவராயிருந்து தனக்கு நாடோறும் பிதாவின் வலபாகத்திலிருந்து மன்றாடிக்கொண்டுவருகிறாரென்று நம்புவார்கள்.

அடிக்கப்பட்ட கன்மலையினின்று ஓடின தண்ணீர் இஸ்ரவேலர் போகுமிடமெல்லாம் பின்சென்று நாடோறுமுள்ள அவர்கள் தாகத்தைத் தீர்த்ததுபோல கிறிஸ்துவின் ரத்தமாகிய தீர்த்தத்தால் ஒருதரம் ஸ்நானஞ்செய்துகொண்டவர்களை நாடோறும் அவர்களிலொட்டும் தூசியாகிய பாவ அழுக்கையும் போக்கத்தக்கதுதான். "ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுக்கிறிஸ்து பிதாவினிடத்திலிருந்து பரிந்துபேசுகிறவராயிருக்கிறார். மேலும் தேவன் நம்மோடுபண்ணியிருக்கும் உடன்படிக்கை ஆதாமோடு பண்ணின உடன்படிக்கையைப்போலொத்ததல்ல. அது கிரியையின் உடன்படிக்கை. நம்மோடுபண்ணின உடன்படிக்கையோ கிருபையின் உடன்படிக்கை. நாம் கிருபையும் இரக்கமுமுடையவர் பாவங்களையும் அக்கிரமங்களையும் பரிகரிக்கிறவர் என்று நமக்குக் கூறியிருக்கிறார். அன்றன்றுள்ள ஆகாரத்துக்காகப் பிரார்த்திப்பதுபோல அன்றன்றுள்ள மன்னிப்புக்காகவும் பிரார்த்திக்க இடம்பெற்றிருக்கிறோம்.

III. நமக்குள்ளொட்டியிருக்கும் பாவக் கறையினால் நம்முடைய மனதுக்கு அமைதலில்லையென்று கண்டோமானால் இந்த வியாகுலத்தைப் போக்கவும் இந்தப் பந்தியிலிடமுண்டு. தேவாலியினால் போதிக்கப்பட்ட யாவரும் தங்கள் ஜென்ம பாவத்தைக்குறித்துப் புலம்புவதோடுகூட தங்கள் செய்கைப் பாவத்தையிட்டு முறையிடுகிறார்கள். தாங்கள் செய்யவேண்டியதைச் செய்யாமல் செய்யத்தகாததைச் செய்துவருகிறதாக அறிந்துகொள்ளுகிறார்கள். "நன்மைசெய்ய விரும்புகிற என்னிடத்திலே தீமையுண்டென்கிற பிரமாணத்தைக் காண்கிறேன். நிற்பந்த மனுஷன் நான் இந்த மரண சரீரத்தினின்று யாரென்னை விடுதலையாக்குவார்" என்று முறையிடுகிறான். இப்பேர்ப்பட்ட பாவக் கறையால் எப்பேர்ப்பட்ட பக்திமானும் தாழ்ச்சியடைய ஏதுவுள்ளவனாயிருக்கிறான். இந்தக் கானானியன் மெய்யான இஸ்ரவேலன். ஒவ்வொருவனுடைய கண்ணுக்குமுன்னும் முதுகுக்குச் சவுக்காயுமிருக்கிறது உள்ளதுதான். ஆகிலும் என்னாத்துமாவே! ஏன் கலங்குகிறாய்? ஏன் முறிந்துகொண்டிருக்கிறாய்? எனது கிருபை உனக்குப் போதும் என்று பவுலை ஆற்றின கர்த்தர் உன்னையும் பார்த்துப் பயப்படாதே நாம் உனனோடிருக்கிறோம் என்கிறார். விருந்துண்டிருக்கும் போதே ஆமானைத் தூக்கும்படி உத்தரவு பிறக்கவில்லையா? நீ கர்த்தருடைய விருந்துண்டிருக்கும்போதே உன்னாத்ம சத்துருவாகிய ஆமானைத் தூக்கிப்போட அவர் உத்தரவருளுவார். ஆகையால் நாம் விசுவாசமாகிய கேடகத்தைப் பிடித்துக்கொண்டு ஆவியின் கட்கத்தையுருவி நம்முடைய சத்துருவுக்கு எதிர்கொண்டுபோகக்கடவோம். மனதைக் கறையாக்கும் முதற் தோற்றத்தையடக்கி ஆவியின்படி நடந்து ஆத்தும சத்துருவாகிய கானானியனை நராத்துமபுரியைவிட்டு எடுபடுத்தி, சாவுக்கேதுவான சரீர இச்சையையழித்து, இப்படியே சவுலிலுள்ள வீடாகிய நம்முடைய ஆத்தும எதிராளி அதிகமதிகமாய்ப் பெலவீ

னப்பட்ட தாவீதின்மீது அதிகமதிகமாய்ப் பெலப்பட்டுக்கொண்டுபோகப் பார்ப்போமாக.

நம்முடைய தளகர்த்தனுகிய கிறிஸ்து உன்னைப் பெலப்படுத்தி வருகிறதுமாத்திரமல்ல, யோசுவா ஆமலேக்கியரோடு யுத்தம்பண்ணும்போது மோசே மலையின்மேலிருந்து ஜெபம்பண்ணிக்கொண்டிருந்ததுபோல அவர் உனக்காகப் பரிந்துபேசிக்கொண்டிருக்கிறார்.

IV. உன்னுத்தம நிலைமையையிட்டு உனக்குள்ளே பயமும் சந்தேகமும் எழும்புகிறதுண்டானால் அதையும் இந்தப் பந்தியைச்சேர்வதினால் நீக்கிக்கொள்ளலாம். பக்திமான்களிலநேகருக்குள்ளே சாத்தானிப்போப்பட்ட தப்பெண்ணங்களைக் கொண்டுவந்து விடுகிறதுண்டு. அந்தச் சமையத்தில் அவர்கள் எகிப்துதேசத்திலிருந்து மீட்கப்பட்டுவந்த இஸ்ரவேலர் வழியில் அவிசுவாசத்துக்கிடங்கொடுத்து காணுனுக்குத் தாங்கள் போய்ச்சேர்வது அசாத்தியமென்றெண்ணிக்கொண்டு, மோசேயைத் தள்ளி வேறொரு தளகர்த்தனை ஏற்படுத்தி, எகிப்துக்குத் திரும்பிப்போக எத்தனப்பட்டதுபோலவே, பரம காணுனுக்கு முன்னிட்டுப்போவதை விட்டுப் பின்வாங்குகிறார்கள். இப்படிப்பட்டவர்களைப் பார்த்து ஆண்டவர் ஐ! அற்பவிசுவாசியே ஏன் சந்தேகித்தாய் என்கிறார். "யாக்கோபே, இஸ்ரவேலே, என் வழி கர்த்தருக்கு மறைவாயிற்றென்றும் என் நியாயம் என்தேவனிடத்தில் எட்டாமற் போகிறது என்றும் நீ சொல்வானேன். "பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அணுதி தேவன் சோர்ந்துபோவதுமில்லை; இளைப்படைவதுமில்லை; நீ இதை அறியாயோ இதை நீ கேட்டதில்லையோ" என் எலும்புகள் உலர்ந்துபோயிற்று என் நம்பிக்கை அற்றுப்போயிற்று என்கிறாய். அருமை ரக்ஷகரின் இனிமையான வாக்கை மறந்தாயோ! நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை உன்னைக் கைவிடுவதுமில்லைஎன்று அவர் சொல்லியிருக்கிறாரே. நீ அவனாவிட்டுப் பிரியாதபடி தம்முடைய பயத்தை உனக்குள் வைப்பேன் என்று அவர் வாக்களுளவில்லையோ! உன்னை அழைத்தவர் உண்மையுள்ளவரல்லவோ. "எப்போதாவது சாத்தான் என்னை மேற்கொள்வது நிச்சயம். நான் பெலனற்றவன் அவனுடைதிர்க்க நானெம்மாத்திரம்" என்று தவிக்கிறாயோ! "உன் நாளிருக்குமட்டும் உன் பெலனுமிருக்கும்" என்றுரைத்தவாக்கு மலைபோலிருக்க, உனக்கென்ன பயம். ஆகையினாலே அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு.

V. இவ்வுலகத்தால் வரும் சகலவித இக்கட்டுகளாலும் சங்கடங்களாலும் நெருக்கப்படுகிறதுண்டானால் இந்த நற்கருணைப் பந்தியினால் நாம் ஆறுதலடையத்தக்க அநேக குறிப்புகளுண்டு. நம்முடைய பரம எஜமானும் தான் காட்டிக்கொடுக்கப்படப்போகிற இரவில் தான் இந்தப் பந்தியை ஏற்படுத்தினார். அப்புறம் இனி நான் உலகத்திலிரேன் என்று வெகு சந்தோஷத்தோடு சொன்னார். அவரித்த உலகத்திலிருந்த நாட்களையெல்லாம் தன்பத்தின்வழியாய்ப் பின்னிட்டார். நம்மை நித்திய வாழ்வுக்குக் கொண்டுபோகும்பொருட்டு, இம்மையில் தன்பபாரத்தைச் சுமந்தார். நாம் எவ்வளவுக்கதிக உச்சாயத்தோடு தன்பத்தைச் சகிக்கவேண்டும். மேலும் கிறிஸ்து இயேசுவுக்குள் பக்தியாய் ஜீவிக்க விரும்புகிறவர்கள் தன்பப்படவேண்டும். நாம் பிள்ளைகளானால் தகப்பனால் தண்டிக்கப்படவேண்டும். தகப்பனால் தண்டிக்கப்படாத பிள்ளை இல்லை.

ஆனால் இப்படிச் சொன்னபோதிலும் வருத்தத்தையுணராத மரக்கட்டைகளைப் போலிருக்கவேண்டும் என்ற நோக்கமாய் இப்படிச்

சொல்லுகிறதில்லை. எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணுமல் துக்கமாய்க் காணும். ஆகிலும் எந்தப் பரிசுத்தவானும் தன்னனபபாரத்தால் வருத்தப்பட்டுக் கதறுவதுயதார்த்தந்தான். ஆனால் தன்பம் தன்னை மேற்கொள்ள இடங்கொடுப்பது பாவம். தன்பம் நம்முடைய மனச் சமாதானத்துக்கு இடையூறுயிருந்து, தேவனுக்குள் சந்தோஷமாயிருப்பதைக் கெடித்து, நம்முடைய இஷ்டமோடும் இனஜனத்தோடும் அன்னியோன்யஐக்கியமாயிருப்பதைத் தடுக்கிறதாயிருந்தால், அதைச் சத்துருவாகப் பாவித்து அதோடி சமர்பொருந்தி, அதை ஜெயிக்கப்பார்ப்பது நம்முடைய கடமை. மேலும் இந்தச் சத்துருவை ஜெயிப்பதற்கு கர்த்தருடைய நற்கருணைப் பந்தியைக் கொண்டு அநேக நியாயங்களைக் கற்றுக்கொள்ளலாம். கர்த்தருடைய நற்கருணையானது கர்த்தருடைய பரிசுத்தங்களையும் அகோர வேதனைகளையும்காட்டுகிற கண்ணாடியேயொழிய வேறென்ன? அவர் வடித்த கண்ணீரையும் விட்ட இரத்த வேர்வையையும் பட்ட காயங்களையும் அவர் சகித்த வேதனையையும் வெட்கத்தையும் நாம் அந்தப் பந்தியில் பார்க்கிறதில்லையா? ஊழியக்காரன் எஜமானையும், சீஷன் போதகனையும்விடப் பெரியவனு? கிறிஸ்துவானவர் சிலுவையின்வழியாய்க் கிரீடத்தைப் பெற்றால் நீ வேறுவழியாய்க் கிரீடத்தையடைய விரும்புவதெப்படி? நாம் கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாவது இதுவும் ஒருவழியென்று உனக்குத் தெரியாதோ! "இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். ஏனெனில் கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்" நீ வியாதியினால் வருத்தப்பட்டு மெலிந்து பெலன்குறைந்துபோனாயோ! அப்படியானால் நீ கர்த்தருடைய பந்தியில் உன்னையாற்றித்தேற்றத்தக்க நியாயங்களில்லையா? அவர்தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்பதை அந்தப் பந்தியில் நீ பார்க்கிறதில்லையா? உன் பாவங்களெல்லாவற்றையும் உன் முதுகின்பின் எறிந்துபோட்டதையும் அந்தப் பந்தியில் நீ பார்க்கிறதில்லையா? உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்க உன் வியாதி எம்மாத்திரம்! நம்முடைய சரீரம் கர்த்தருக்குரியது என்றும், கர்த்தரும் நம்முடைய சரீரத்துக்குரியவரென்றும் சொல்லியிருக்கிறதே. அப்படியானால் வியாதிப்படும் சரீரத்துக்கு அவர் பெலனையளிப்பாரா!

Life of Arch Bishop Cranmer.

கிரான்மர் கிரேஷ்ட கண்காணியார் சரித்திரம்.

(தொடர்ச்சி.)

பிரசங்கம் முடியவே, மரிக்கப்போகிறவருக்காக கூடிவந்திருந்தவர்களெல்லாரும் பிரார்த்திக்கவேண்டுமென்று பிரசங்கியானவன் கேட்டுக்கொண்டான். அப்படியே சனங்கள் முழங்காலில் நிற்க, கிரான்மர் என்பவரும் அவர்களோடு முழங்காலூன்றி மகா ஆவலோடு தமக்காகச் செபம்பண்ணினார். அப்புறம் கோல் என்பவன் அவரைப் பார்த்து, மனுஷர் உன்னைக்குறித்துக் கொஞ்சமென்னிலும் சந்தேகங்

கொள்வதற்கு இடமில்லாதிருக்கவும், நீ மெய்யாய்க் கத்தோலிக்க கிறிஸ்தவனென்று சமஸ்தமான பெயர்களும் அறிந்துகொள்ளத்தக்கதாகவும் உன் எதார்த்தமான விசுவாசத்தைப் பகிரங்கமாய் அறிக்கையிடு என்றான். உடனே அவர் முழங்காலிலிருந்து எழுந்து நின்றுகொண்டு, கூடிவந்திருந்த சனங்களைப் பார்த்து உங்கள் மனதை உலகத்தின்பேரில் வைக்கவேண்டாமென்றும், இராசாவுக்கும் இராசாத்திக்கும் கீழ்ப்படியவேண்டுமென்றும், ஒருவரையொருவர் சிநேகிக்கவேண்டுமென்றும், எல்லா மனுஷரோடும் அன்பாயிருக்கவேண்டுமென்றும் புத்திசொன்ன பிறகு, விசுவாசப்பிரமாணத்தைத் தொடங்கித் தம்முடைய விசுவாசத்தை அறிக்கையிட்டு அடியில் வரும் வார்த்தைகளோடு முடித்தார். "இதோ நித்தியம் எனக்குமுன்பாக இருக்கிறது. மோட்சம் என்னை யேற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறதோ, நரகம் என்னை விழுங்க ஆயத்தமாயிருக்கிறதோ என்று சீக்கிரம் நான் கண்டுகொள்வேன். நான் என் சீவகாலத்தில் பேசினதும் நடப்பித்ததுமான எந்தக் காரியத்தையும் பார்க்க என் மனச்சாட்சியை அதிகமாய் வேதனைப்படுத்துகிற பெரிய காரியத்துக்கு வந்திருக்கிறேன். அதென்னவென்றால், சத்தியத்துக்கு விரோதமான காரியங்களை எழுதினதுதான். அவைகள் மரணத்துக்குப் பயந்தும் என் சீவனைத் தப்புவித்துக்கொள்ளவும் எழுதினவைகள். அவைகளை இப்பொழுது தவறு என்று மறுத்து வெறுத்துத் தள்ளுகிறேன். என் கை என் உள்ளத்துக்கு விரோதமாயெழுதக் குற்றஞ்செய்தது. ஆதலால் என் கை முதலாவது தண்டிக்கப்படவேண்டியது. நான் அக்கினிக்கு இரையாகிறதானால் என் கை முதலாவது எரிந்து நீறாக்கப்படவேண்டும். பாப்புவை அந்திக்கிறிஸ்து என்று தள்ளுகிறேன். சாக்கிரமெந்தைக் குறித்தோ, வின்செஸ்ற்றர் நகரத்துக் கண்காணியாருக்கு விரோதமாய் நான் எழுதியிருக்கிற நூலிற் போதித்திருக்கிறபடிக்கே விசுவாசிக்கிறேன். மேற்படி நூல் சாக்கிரமெந்தைக் குறித்த மெய்யுபதேசத்தைப் போதிக்கிறபடியால் அது கடைசிநாளில் தேவனுடைய நியாயாசனத்துக்குமுன்பாக நிற்கும். அதற்கு விரோதமான பாப்புமார்க்க உபதேசமோ தன் முகத்தைக் காண்பிக்க வெட்கப்பட்டு" என்று சொல்லி முடித்தார். இவ்வாறு அவர் பேசிமுடித்ததற்குள்ளாக, பாப்புமார்க்கத்தார் தாங்கள் நினைத்தருந்த காரியம் தவறிப்போனது கண்டு மூர்க்கவெறியாகி அவரைப் பரணிலிருந்து கீழே இழுத்து, இரண்டொரு தினத்துக்கு முன் ரிட்லி, லத்திமர் என்ற கண்காணிமார் தகனிக்கப்பட்ட கொலைக்களத்துக்குக் கொண்டுபோனார்கள். அவ்விடம் வந்து சேர்ந்தவுடனே அவர் தமது விசுவாசத்தை மறுதலிக்கும்படி வெகு பலமாய் ஏவினார்கள். அதற்கு அவர், நான் மறுதலித்ததை மறுதலிக்கிறேன் என்று பிரதியுத்தரஞ் சொன்னார். அப்பால் அவரை ஒரு சங்கிலியினாலே அவ்விடத்தில் நட்டிருந்த ஓர் மரத்திற் சேர்த்துக்கட்டி தீக்கொளுத்திவிட்டார்கள். அவர் முன் சொல்லியிருந்தபிரகாரம் எரிகிற தீயில் தம்முடைய கையை நீட்டிக்கொண்டேயிருந்தார். ஒரே ஒரு விசை அவர் முகத்தைத் துடைக்கும்படி கையை எடுத்ததேதவிர, மற்றப்படி அது எரிந்து நீறாகிறவரையில் நீட்டினவண்ணமாகவேயிருந்தது. கர்த்தராகிய இயேசுவே என் ஆவியை ஏற்றுக்கொள்ளும் என்று முதலாம் இரத்தச்சாட்சியாகிய ஸ்தேவானைப்போல அவரும் சொன்னதேயன்றி வேறொரு சத்தமும் அவர் வாயிலிருந்து பிறக்கவில்லை. அக்கினி தன் கிரியையைச் சீக்கிரம் முடித்துவிட்டது. அவருடைய இரத்தாசயம் வெந்து நீறாகாமல் சாம்பலிலே முழுமையாய்க் கிடந்

து அகப்பட்டதாம். இவ்விதமாய் கீர்த்திப்பிரஸ்தாபரான கிரான்மர் என்ற சிரேஷ்ட கண்காணியார் தமது அறுபத்தேழாம் வயசில் இம்மையின் ஓட்டத்தை முடித்து இரத்தச்சாக்ஷியின் கிரீடத்தைப் பெற்றுக்கொண்டார். இந்த உருக்கமான சரித்திரத்தை டாக்ற்றர் சவுசி என்னப்பட்ட ஒருவர் எழுதிய இரண்டொரு வசனங்களோடு முடிப்போம்.

"இந்தப் பெரிய துன்பகாலத்தில் சத்தியத்தினிமித்தம் இரத்தச்சாக்ஷிகளாய்த் தகனிக்கப்பட்ட சகலருக்குள்ளும், கிரான்மர் என்பவருடைய மரணந்தான் பாப்புமார்க்கத்துக்கு அளவில்லாத கெடுதியை உண்டுபண்ணினது. அவர் உயர்ந்த அந்தஸ்தை அடைந்தவராயிருந்தும் அதினால் எவ்வளவேனும் அகந்தைக்கு இடங்கொடாமல் ஆச்சரியமான தாழ்மையாய் நடந்துகொண்டார். அப்பேர்ப்பட்டவருக்கு அவர்கள் இவ்வளவான நிஷ்ரேமெல்லாம் செய்து மரணாக்கினையையுஞ்செலுத்தினது அவர்களுடைய கொடிய பொறாமையையும் பகையையும் நன்றாய் வெளிப்படுத்துகிறது. மேலும் புறோட்டெஸ்தாந்தமார்க்கத்தினிமித்தம் இரத்தச்சாக்ஷிகளாய் மரித்தவர்கள் கடைசிவரையும் உறுதியாய் நின்றது. அவர்கள் கொண்டிருந்த விசுவாசத்தின் நிச்சயத்தினாலும் அதினால் கிடைத்த பலத்தினாலும் உண்டாகாமல், வீண்பெருமையினாலும் போதித்தபடி நடக்கவேண்டுமென்ற கர்வத்தினாலும் அவ்வளவு காலம் அவர்கள் அறிக்கையிட்டுவந்த விசுவாசத்தை மறுக்க வெட்கப்பட்டதினாலுமே உண்டானதென்று ரோமானித்தார் நியாயம்பேசிப் பிதற்றிக்கொள்ளுகிறது வழக்கம். அந்த நியாயத்தையும் பிதற்றுதலையுமெல்லாம் இவருடைய மரணம் பலமாய் நிராகரித்துவிட்டது. இவ்வாறு கள்ளத்தனமாய் நியாயம்பேசுவது இவர் விஷயத்தில் செல்லவேமாட்டாது. ஏன்? கிரான்மர் என்பவர் மரணத்துக்குப் பயந்து விசுவாசத்தை மறுத்தாரே. அந்தப் பாவத்தினிமித்தம் அவர் உண்மையாய் மனஸ்தாபப்பட்டதை யாராவது மறக்கக்கூடுமோ? எவர்களாவது மறைக்கக்கூடுமோ? அவர் பட்ட பச்சாதாபத்தின் வேதனையை ஆயிரக்கணக்கானவர்கள் பார்த்திருக்கிறார்களே. அந்த வேதனை நீங்கினபின் சுவாலிக்கிற அக்கினியின் நடுவில் அவர் எவ்வளவேனும் அசையாமல் அமரிக்கையாய் நின்றதை லட்சாதி லட்சப்பேர் கண்டிருக்கிறார்களே. ஆம், அவர் பொறுமையாயும் மனோற்சாகமாயும் சர்வாங்கத்தகனமானார். தம்மைத் துன்பப்படுத்தினவர்கள்பேரில் மாத்திரமல்ல தம்பேரிலும் வெற்றிசிறந்தவரானார். மனதையும் தேகத்தையும் மேற்கொண்டார். பயத்தையும் பலவீனத்தையும் மரணத்தையுஞ் செயித்துக் கெம்பீரமடைந்தார்."

Bible Sketches and their Lessons.

பாலபோதனை.

சுதேசத்துக்குத் திரும்புதல்.

எஸ்றாவின் ஆகமம், 1 ம், 3 ம் அதிகாரங்கள்.

கர்த்தருடைய சனங்கள் தங்கள் பாவங்களினிமித்தம் தூரமானதேசத்திற் சிறைப்பட்டிருந்தார்களே, அவர்களுக்குத் தேவன் பா

ராட்டின தயவை இப்பொழுது விவரிக்கப்போகிறேன். அவர்கள் சிறைகளாயிருந்த காலத்தில் தங்கள் பாவங்களைக்குறித்து மிகுதியும் பிலாபித்துப் புலம்பினார்கள், தேவனோக்கிப் பிரார்த்தித்தார்கள், அஞ்ஞானிகள் அவர்களைப் பரிகாசமும்பண்ணினார்கள். "எங்களைச் சிறைபிடித்தவர்கள் எங்கள் பாடல்களையும் எங்களைப் பாழாக்கினவர்கள் எங்கள் சந்தையும் விரும்பி சீயோனின் பாட்டுகளில் சிலதை எங்களுக்குப் பாடுங்களென்று சொன்னார்கள்." ஆனாலும் "கர்த்தரின் பாட்டை அந்திய தேசத்திலே பாட" அவர்களால் கூடவில்லை.

அவர்களுடைய சொந்தத்தேசத்தின் காரியமெப்படி? அவர்கள் எடுபட்டுப்போனதமுசல் அந்தத் தேசம் பாழானதுபோலிருந்தது. அதின் அழகான கிராமங்கள் அழிந்துபோயின. பயிர் நிலங்களும் திராட்சத்தோட்டங்களும் புல்பூண்டுமுதலிய களையினால் மூடிப்போயின. கனிமரத் தோட்டங்களையும் விருட்சவனங்களையும் நரிகளும் காட்டுப் பன்றிகளும் பட்டிமேய்ந்து, அவற்றின் அடைப்புகளைத் தகர்த்து மிதித்துப்போட்டன. அதேதவிர, எருசலேம் நகரம் பாழாயும், மகத்துவமும் பரிசுத்தமுமான தேவாலயம் மண்மேடாயுமிருந்தன. எரேமியாவின் தீர்க்கத்தரிசனத்தில் ஒரு சோர்த்தியான வசனமிருக்கிறது (எரேமி. 31: 15-17). அதில் வெகுகாலத்துக்குமுன்னே மரித்து அடக்கம்பண்ணப்பட்டிருந்த ஒரு எபிரேயத் தாயானவள் கல்லறையிலும் தன் பிள்ளைகளுக்காகப் பிரலாபித்து அழுகிற பாவனைகாட்டியிருக்கிறது. அவர்தாமும் பாழுமான அவ்விடத்தில், தீர்க்கத்தரிசிக்குத் தக்கதாமான ஒரு சத்தம் கேட்கிறதுபோலிருக்கிறது. அது என்ன சத்தம்? என் குமாரனுடைய பெண்மணி எங்கே? அவன் சகோதரனான யூதா எங்கே? என்று அழுகிற இராகேலின் ஆவியே அது. இராகேலை ஆறுதல்படுத்துகிற வேறொரு சத்தமும் கேட்கிறது. "நீ அழாதபடிக்கு உன் சத்தத்தையடக்கி, நீ கண்ணீர்விடாதபடிக்கு உன் கண்களைக் காத்துக்கொள். அவர்கள் சத்துருவின் தேசத்திலிருந்து திரும்பிவருவார்கள். உன் பிள்ளைகள் தங்கள் தேசத்துக்குத் திரும்பிவருவார்கள்."

அருமையான இந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றவேண்டிய காலம் இப்பொழுது வந்துவிட்டது. யூதர்கள் தங்கள் சொந்தத்தேசத்துக்குத் திரும்பிப்போகலாம் என்ற நற்செய்தி பாபிலோன்நகரத்திலும் அதைச்சூழ்ந்த சீமையெங்கும் தொனித்தது.

இந்த நற்செய்தி உண்டான விதத்தைப்பற்றி வாசித்தீர்களே. தேவனுடைய தீர்மானங்களும் வாக்குத்தத்தங்களும் எவ்வளவு நிச்சயமானவைகளென்பது இதற்கு முன்னமேயே உங்கள் மனதில் பட்டிருக்கும். தம்முடைய சனங்கள் தங்கள் சொந்தத் தேசத்துக்குத் திரும்புவார்கள் என்று தேவன் சொல்லியிருந்தார். இன்னகாலத்தில் அப்படி நடக்குமென்று தம்முடைய மனதில் தீர்மானித்துமிருந்தார். அவர் தீர்மானித்திருந்த அந்தக்காலம் வந்தபொழுது, விக்கிரகாராதனைக்காரர் எவர்களாலும் அதைத் தடுக்கக்கூடவில்லை. விக்கிரகாராதனைக்காரர் தடுக்கவா? இல்லை, இல்லை. விக்கிரகாராதனைக்காரர்தான் இந்தக் காரியம் நடந்தேறும்படி அனுகூலம்பண்ணினார்கள். கோரேஸ் இராசாவும் விக்கிரகங்களை வணங்கினவன்தான். என்றாலும் அவன் உன்னத தேவனுடைய மகத்துவத்தையும் வல்லமையையும் உணர்ந்துகொண்டு அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு மனோற்சாகமாய் ஆயத்தமாயிருந்தான்.

இந்தச் சரித்திரத்தினால் நாம் கற்றுக்கொள்ளத்தக்க இரண்டாவது படிப்பினையென்னவென்றால், தேவன் மகா இரக்கமுள்ளவராயும் மன்னிக்கிறதற்குத் தயை மிகுத்தவராயுமிருக்கிறார் என்பதுதான். அவருடைய சனங்கள் மகா பொல்லாதவர்களாயும் தாரோகப்புத்தியுள்ளவர்களாயுமிருந்தார்களே. அவர்கள் இன்னம் ஒருவிசை பாலும் தேனும் ஓடுகிற அந்தச் சிறந்த தேசத்தைப்பெற்று அனுபவிக்க யோக்கியர்களாயிருந்தார்களோ? அவர்கள் முற்பிதாக்கள் அந்தத் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுமுன்னமேயே, வனாந்தரத்தில் மேலுமேலும் தேவனுக்கு விரோதமாகக் கலகம்பண்ணிப் பாவஞ்செய்து, கானான்தேசத்துக்குரிய பாத்தியதையெல்லாம் இழந்துபோனார்களே? அப்புறம் தலைமுறை தலைமுறையாக எவ்வளவோ கொடிய அக்கிரமங்களையெல்லாம் நடப்பித்துவந்தார்கள். அவர்கள்பேரில் இப்பொழுது வந்திருந்த தண்டனை நியாயமானதல்லவென்று யார்தான் சொல்லக்கூடும். தேவனுடைய வாக்குத்தத்தமிருந்தும், அவர் தங்களுக்கு இரக்கங் காண்பிப்பாரென்று நினைத்ததாக விளங்கவுமில்லை. நூற்று இருபத்தாறும் சங்கீதத்தில் எப்படிச் சொல்லியிருக்கிறதென்றால், "சீயோனின் சிறையிருப்பைக் கர்த்தர் திருப்பும்போது சொப்பனங்காண்கிறவர்கள்போல இருந்தோம்" என்றிருக்கிறது. அது எதார்த்தமென்று நினைக்கக் கூடாததுபோலிருந்தது. விருந்தைசாப்பிடுகிறதுபோல சொப்பனங்கண்ட ஒரு குழந்தை, "அது பொய்யென்று விளங்காதபடி விழித்து எழும்பப் பயப்படுகிறேன்" என்றுசொன்னது எனக்கு ஞாபகமிருக்கிறது. யூதர்களோ தங்களுக்குக் கிடைத்தபாக்கியம் எதார்த்தமானதென்று கண்டுகொண்டார்கள். மேற்காட்டிய சங்கீதத்தில் இன்னமும் எப்படிச் சொல்லியிருக்கிறதென்றால், "அப்பொழுது நம் முடையவாய் நகைப்பினாலும் நம்முடைய நாவு ஆனந்தசத்தத்தினாலும் நிறைந்திருந்தது. அப்பொழுது கர்த்தர் இவர்களுக்குப் பெரியகாரியங்களைச் செய்தாரென்று புறச்சாதிகளுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள். ஆம், கர்த்தர் நமக்குப் பெரியகாரியங்களைச்செய்தார், இதினிமித்தம் நாம் மகிழ்ந்திருக்கிறோம்" என்று யூதர்களும், நன்றியறிதலனதோடு ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

அதுபோலவே உங்களுக்கும் பெரியகாரியங்களைச்செய்யத் தேவன் பிரியசித்தமுள்ளவராயிருக்கிறாரென்று நீங்களும் கண்டுகொள்ளலாம். உங்களைப் பாவத்தினின்று இரட்சித்து மோட்சத்தில் உங்களுக்கு வாசஸ்தலமும் தந்தருள சித்தமாயிருக்கிறாரே. ஆகையால் அவருடைய இரக்கத்தைத் தேடிக்கொள்ளுங்கள். நம்மில் எவர்களும் அதற்குப்பாத்திரரல்ல, என்றாலும் அவர் எப்பொழுதும் மன்னிக்கிறவராயும் இரக்க முருக்கமுள்ளவராயுமிருக்கிறார். "அவர் எப்பொழுதும் கடிந்துகொள்ளார், என்றைக்கும் கோபங்கொண்டிரார்."

மூன்றாவதாக, பாவம் மன்னிக்கப்பட்டுப்போனபோதிலும் அதினாலுண்டாகும் கெடுதி நீங்குகிறதில்லையென்பதை நினைத்துக்கொள்வோமாக. ஒருவிசை ஒரு பையன் எனக்குத்தென்பட்டான். அவனுடைய நெற்றியிலுங்கன்னத்திலும் அவலட்சணமான ஓர் தழும்பு இருந்தது. அதைப்பார்த்து, அப்பா அந்தத்தழும்பு உனக்கு நோகிறதா என்று கேட்டேன். அதற்கு அவன், இல்லை, இல்லை அது நன்றாய் ஆறிப்போச்சுதென்றான். அது வெகுகாலத்துக்குமுன்னே தீப்பட்டு உண்டானபடி காயம். அதினாலுண்டான இந்தத் தழும்பு அவன் உயிரோடிருக்குமளவும் மூகத்தைவிட்டுப் போகாது. நல்லது, தேவன் தமது சனத்தின் பாவத்தை மன்னித்துப்போட்டாரென்று சொன்னேன். தண்டனை சுமந்துத் தீர்ந்தது. அவர்கள் தம் சுதேசத்துக்குத் திரும்பிப்போக

இடங்கிடைத்தது. ஆனால் அந்தத் தேசம் எவ்வளவாய் மாறிப்போயிருந்தது. அவர்களில் சிலர் தங்கள் பிதாக்களின் தேசத்தை ஐம்பது அறுபது வருஷமாய்ப் பார்த்தவர்களல்ல. எருசலேம் தேவாலயமும் ஐம்பது வருஷத்துக்கு முன்னே அழிந்துபோயின. அவர்கள் அப்பொழுது பெலனும் புஷ்டியுமுள்ள வாலிபர்களாய், தங்கள் வீடுகளைக் கொள்ளையிட்டு நாசம்பண்ணுகிறதையும் சாலொமோன் கட்டின மகத்துவமான தேவாலயம் அக்கினிக்கு இரையாகிறதையும் கண்ணீரோடு பார்த்துக்கொண்டு நின்றிருக்கலாம். அல்லது ஒருவேளை குழந்தைகளாயிருந்து, தங்கள் தாய் தந்தைகள் துக்கிக்கிறதைப் பார்த்து ஆச்சரியப்படுகிறவர்களாயும், பாபிலோனுக்கு வெகுநாளாய்ப் பிரயாணம் பண்ணுகிறதினால் சந்தோஷப்படுகிறவர்களாயுமிருந்திருக்கலாம். இப்பொழுதோ அவர்களுடைய தாய்தந்தைகள் இறந்துபோய்விட்டார்கள். அவர்களும் நரைத்துப் பலட்சயப்பட்டுப்போனார்கள். முற்காலத்தில் எவ்வளவோ சிறப்பும் செல்வமும்பொருந்தியதாயிருந்த அந்தத் தேசத்தில் இப்பொழுது சிறப்போ செல்வமோ எவ்வளவேனுமிராதென்றும் அறிந்தார்கள். அவர்கள் வருத்தத்தோடு திரும்பிப்போய்ச் சாகத்தான்வேண்டியிருந்தது. அப்படியே தேவாலயத்துக்கு அஸ்திபாரம்போடுகிற சமையத்தில், முந்தின ஆலயத்தைப் பார்த்திராத வாலிபர் கெம்பீரித்து ஆரவாரித்தபொழுது, இவர்கள் கூக்குரலிட்டு அழுது புலம்பினதாக வாசிக்கிறோமே. நம்முடைய பாவங்களும் நம்முடைய பிதாக்களின் பாவங்களும் மன்னிக்கப்பட்டன. தேவன் மகா இரக்கமும் தயவுமுடையவர். ஆனாலும் பாவத்தினால் நம்முடைய வீடும் தேசமும் பாழாய்போயிற்றே என்று நினைத்துத்தான் பிரலாயித்திருப்பார்கள்.

Notes on Leviticus.

லேவியராகம வியாக்கியானம்.

சு. அதிகாரம்.

பலிகளைக்குறித்து ஆசாரியருக்குக் கற்பிக்கப்பட்ட பிரமாணங்கள்.

2. "ஒப்புவிக்கப்பட்ட." இவ்வகைக் குற்றங்கள் ருசுப்பட்டால், (யாத்தி. 22: 7, 15 ப்படி தண்டனை விதிக்கப்படும்.

"தன் வசத்தில் ஒப்புவிக்கப்பட்ட." ஏதாவதொன்றை கடன் வாங்கி அதை மறுபடி செலுத்தத் தவறிப்போவதும், இன்னொருவனுடைய பொருளை வாங்கிக்கொண்டு பிற்பாடு நான் வாங்கவில்லை என்று சொல்லுகிற கள்ளத்தனமும், இன்னொருவரால் தன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட பொருளை தன் காரியத்துக்கு உபயோகித்துக்கொள்வதும், இந்த வார்த்தையில் அடங்கிய குற்றமாம்.

8. மேலே சொல்லிய பலிகளுக்கடுத்ததாக ஆசாரியருடைய கடமைகளையும் பாத்தியங்களையும் குறித்த கட்டளைகள் இதுமுதல் சொல்லப்படுகிறது.

9. சாயுங்கால சர்வாங்கத்தகனப்பலி, இராமுழுவதும் தகன

பலிபீடத்திலிருக்கவேண்டும். அக்கினியும் அணைந்துபோகாமல் எரிந்துகொண்டே இருக்கவும் வேண்டும்.

12. "அக்கினி." வானத்திலிருந்து இறங்கின அக்கினி என்று நினைக்கப்படுகிறது. (9: 24).

14. "போசன பலியின் பிரமாணம்." இது 2: 1, 2-ல் சொல்லியதைக் குறிக்கமாட்டாது. நாள்தோறும் படைக்கப்படுகிற மெல்லிய மாவைக் குறிக்கும்.

16. "குமாரரும்." இந்தக் காணிக்கையிலும் இன்னும் மற்றக் காணிக்கைகளிலும் ஒரு பாகம் ஆசரிப்புக்கூடாரத்தில் முறையாய் வேலைசெய்கிற ஆசாரியருக்குப் பாத்தியப்பட்டது. ஆசாரியர் திவ்விய பணிவிடைசெய்யாமலிருக்கும் காலங்களில், தங்கள் சொந்தப் பட்டணங்களின் வருமானத்தினாலே பிழைத்துவந்தார்கள்.

"அப்பத்துடன்." இந்த வார்த்தைகள் எபிரேயு பாஷையில் இல்லை. ஆகையால் "புளிப்பில்லாமையாய்ப் புசிக்கப்படக்கடவது" என்று திருப்பப்பட்டால் நலமாயிருக்கும்.

18. "பரிசுத்தமாயிருப்பான்." இந்த ஆசாரியன் ஆரோன் வம்சத்தைச் சேர்ந்தவனாயிருக்கவேண்டியதல்லாமலும், சடங்குப்பிரமாண அசுசிகளுக்கு நீங்கினவனாயும் இருக்கவேண்டும்.

20. "நாளில்." அரபிப் பாஷைத் திருத்தலில், "நாளிலிருந்து" என்றிருக்கிறது. இதுதான் வாக்கியத்தின் மற்றப் பாகத்துக்கு இசைவாயுமிருக்கிறது. அப்படியே யூதர்கள், இது மகா ஆசாரியன் நாள்தோறும் செலுத்தும் காணிக்கையைக் குறிக்கும் என்று அர்த்தம்பண்ணுகிறார்கள்.

28. "மண்பாண்டம்." இது அணு நெருக்கமில்லாத பதார்த்தமானதினாலே, செப்புப் பாணையைப்போல் விளக்கப் பெலக்கமாட்டாது.

படிப்பினை:

மனுஷருடைய இருதயத்தின் பல வகையான கேடுகளை அறிந்து, தேவன் சட்டங்கட்டியிருக்கிறார். 1—7. போதகன்மாருக்கு பக்திவைராக்கியமாகிய வானத்திலிருந்து இறங்கின அக்கினி வேண்டும். கிறிஸ்துவைப்பற்றும் விசுவாச பக்தியாகிய அக்கினி இல்லாமல் போதகன்மார் கிறிஸ்துவுக்கு உண்மையுள்ள ஊழியக்காரராயிருக்கக்கூடாது. 8—13.

எ. அதிகாரம்.

மேற்சொல்லிய பலிகளைக்குறித்து ஆசாரியருக்குக் கற்பிக்கப்பட்ட பிரமாணங்கள்.

13. "புளித்தமாவினால் செய்த அப்பம்." அதாவது வழக்கமான அப்பமாம். சிநேகிதர் விருந்துகொண்டாடும்போது சாப்பிடுகிற அப்பம் இதுதான். (3: 1 வியா.)

15. "அன்றைத்தினமே." உபசரிக்கிற குணத்தையும் எளியவர்களுக்கு உதாரமாய் தருமஞ்செய்யும் சிந்தையையும் எழுப்பிவிடுகிற நோக்கமுள்ளது. மேலும் தெய்வத்துக்குப் படைக்கப்பட்ட அப்பத்

தை வீண்பக்திக்குரிய வகையாய் விசேஷியாதபடி தடுக்கவும் நோக்க முள்ளதாயிருந்தது. அஞ்ஞானிகளுக்குள் விக்கிரகங்களுக்குப் படைக் கப்பட்ட போசனத்தை மார்க்கிரிகமுதலான விசேஷங்களுக்கு உதவு மென்று பத்திரம்பண்ணிவைப்பார்கள்.

படிப்பினை.

சுத்தமாயிருக்கும்படி தேவனே கற்பித்திருக்கிறார். நீ உன்னை உள்ளும் புறம்புமாய் சுத்திகரித்துக்கொள். நீ எளியவர்களுக்கு உள் ளமனதோடி தர்மம்செய்யும்போது தேவனும் உன் விருந்தாளியாவார் என்றறிவை. நீ தேவனோடும் மனுஷரோடும் சமாதானமாக, "சமா தானபிரபு" சமாதான பலியானார்.

அ. அதிகாரம்.

ஆரோனும் அவன்குமாரரும் அபிஷேகம் பண்ணப்பட்டது.

3. "சபையையெல்லாம்." ஆசாரிய ஊழியத்துக்கு ஆரோன் தானுய் ஏற்படவில்லையென்று எல்லாரும் அறியும்படி. எபி. 5: 5.

33. "கூடார" பிரகாரத்தைகுறிக்கும். பரிசுத்தஸ்தலத்துக்குள் வாசம்பண்ண ஒருவருக்கும் உத்திரவில்லை.

35. "காவலை." உங்கள் அபிஷேகத்தைக்குறித்து கர்த்தர் கட் டளையிட்ட கற்பனைகளை என்றர்த்தம்.
"இரவும் பகலும்." முறைவைத்துக் காத்திருப்பார்கள்.

படிப்பினை.

இந்த அதிகாரத்திலடங்கிய சடங்குகள் மகா பிரதானஆசாரிய ராகிய கிறிஸ்துவின் தொழிலையும், அவருடைய ஆவியின் சுத்திகரிப் பையும் முன்குறித்தது.

திருவனந்தபுரத்தில் ஒரு வார சஞ்சாரம்

(தொடர்ச்சி.)

மறுநாளில் ஐரோப்பியருக்கு இராஜ விருந்து நடந்தது. அதில் இளைய இராஜா பக்கத்தில் உட்காரத்தக்க அதிஷ்டம் எனக்குக் கிடைத் தது. மூன்று பெரிய மேசைகள் போடப்பட்டிருந்தன. அவைகளில் வைத்திருந்த போஜன வகைகளைக் கவனித்தபோது எல்லாம் அங்கி லேய பாக சாஸ்திரப்படி அமைந்ததாய்க் காணப்பட்டன. அருகவை யுள்ள சகல போஜனவர்க்கங்களும் விஸ்தரித்திருந்தன. கோமாம் சமும் இருந்ததாக என் கண்ணுக்குத் தோன்றிற்று. ஒரு பாத்திரத் தில் மாட்டு நாக்குப்போல் ஒன்றை வைத்திருந்தது. இளைய இராஜா அது என்னவென்று என்னை விளவ நான் என்னுடைய அபிப்பிராயத் தைத் தெரிவிக்க, ஒன்றும் பேசாதிருந்தார். இளைய இராஜா இங்கி லீஷ் பாஷையில் நன்றாய்த் தேர்ந்தவனென்றும், அங்கிலேயருக்குரிய விஷயங்களையெல்லாம் நன்றாய்க் கற்றுத் தெளிந்த அறிவாளியென்

றும் கேள்விப்பட்டிருந்தேன். நான் அவரைக் கண்டபோது அவரைப் பற்றியுள்ள பிரஸ்தாபம் எல்லாம் நிசந்தான் என்று அறிந்துகொண் டேன். பரதேசிவாசிகளுக்குமாத்திரம் நன்றாய்த் தெரிந்திருக்கும் அநேக விஷயங்களைக்குறித்து சம்பாஷித்தோம். ஒரு சுதேச இராஜ பிரபுவுக்கு இவைகளெல்லாம் தெரிந்திருந்தது ஆச்சரியந்தான். திரு ஷ்டாத்தமாக ஐர்லாந்து தேசத்தைக்குறித்து சம்பாஷித்தபோது அதில் பல காலங்களில் தோன்றின பிரதான மனுஷர்களைச் சொன்னார். பால்மர்ஸ்டன் பிரபு முதலிய பலருடைய நாம தேயங்களையும் சொன் னார். மகா இராஜாவும் இளைய இராஜாவும் இந்துக்களானதால் தான் கள் மற்றவர்களுக்குக் கொடுத்த விருந்தில் ஒன்றையும் தொடவில்லை. விருந்து இரண்டு மணி நேரம் நடந்ததால் அவ்வளவு நேரம் அதைப் பார்த்துக்கொண்டிருந்த அவர்களுக்கு மனச் சோர்வையுண்டாக்கியி ருக்கும். நான் இளைய இராஜாவைப் பார்த்து இவ்வளவு நேரம் உம் மிடத்தில் பொறுமை விளங்கினதால் அது ஒரு புண்ய செய்கைதான் என்றேன். இதைக் கேட்டது அவருக்கு ஒரு வகையில் சந்தோஷம் போல காணப்பட்டது.

நான் கண்ட பல காட்சிகளை விட்டுவிட்டு தேவதாசனுடைய என க்கு அதிகப் பிரீதியாயிருந்த ஒரு காட்சியைப்பற்றி இரண்டொரு வார்த்தை சொல்லுவேன். அது எங்களுடைய அருமைச் சிநேகிதி யின் விசாரணைக்குட்பட்ட உயர்குலப் பெண்களின் பாடசாலைதான். கோட்டைக்குள் தாழ்குலத்தவர்கள்கால்படாத அக்கிரகாரத்தின் வழி யாக நாங்கள் சவாரிசெய்து ஒரு மேல்மெத்தை வீட்டிற்குச் சென் றோம், இது ஒரு உயர்ந்த உத்தியோகஸ்தனுடைய வீடு. அது பழைய வீடாயும், மரச் சித்திரவேலை தீர்ந்த வீடாயும் இருந்தது. அதற்குமுன் ஒரே ஒரு மரம் நின்றது. அது அந்த வீட்டுக்கு அலங்காரமாயிருந்தது.

அந்த வீடுதான் பாடசாலையாயிருந்தது. அதில் பல வர்ணத்தா ராயும், வயதுடையவர்களாயும், நிறமுடையவர்களாயும் இருந்த அறு பது பெண்கள் வாசித்துவந்தார்கள். சில பிராமணப் பெண்கள் ஏறக் குறைய ஐரோப்பியரைப்போல இலட்சணமுடையவர்களாயிருந்த னர். எங்கள் வருகைக்கு எல்லாரும் காத்துக்கொண்டிருந்தார்கள். சிரசுமுதல் பாதம்வரையிலும் சகலவித ஆபரணலங்காரம் உடையவர் களாயிருந்தனர். எங்களுடைய சிநேகிதியாகிய அம்மாள் அந்தப் பெண்களை நேசித்து அவர்கள் கல்வியிலும் சன்மார்க்கத்திலும் விர்த் தியடையும்படி பிரயாசப்படுவது ஆச்சரியமல்ல. அவர்கள் இலட்சண முடையவர்கள். விஞ்ஞுடையவர்களாயும் இருந்தார்கள். அவர்கள்வேத வாக்கியங்களை மனப்பாடம் செய்து, பள்ளிப்பிள்ளைகள் காவேரி, சாவேரி என்று சாரமற்றவிதமாய் இழுத்துச் சொல்வதுபோல் சொல் லாமல், உணர்வோடு சொன்னதைக் கவனித்தபோது, "பிள்ளைகள் என்னிடத்தில் வருவதற்குத்தடைபண்ணாமல் இடங்கொடுங்கள்" என் று திருவாய்மலர்ந்த அருள்நாதன் அவர்களைத் தம்மிடத்தில் சேர்க்கி றதுபோல காணப்பட்டது. பெரிய பெண்களில் சிலருடைய சித்தி ரவேலை, தையல் வேலையைப் பார்க்கிறவர்கள் அவர்கள் நன்றாய்த் தேர்ந்தவர்களென்றே சொல்லுவார்கள். இந்த முக்கியமான காட்டில் இந்துப் பெண் கல்விவிர்த்தி சங்கத்தாரால் நடந்துவரும் பெரும் முய ற்சிகளில் இது ஒன்று. இராஜ அரமனையில் இராணிமாரும் கல்விகற்று வருகிறார்கள். அவர்களைப் பார்க்கிற அதிர்ஷ்டம் எனக்குக் கிடையா விடினும், என் மனைவிக்குக் கிடைத்தது. இந்த நாட்டைவிட்டு நாங்கள் புறப்பட்ட சமையத்தில் எங்கள் மனதில் ஒரு எண்ணம் உண்டாயிற்று.

ஹிந்துமார்க்கத்திற்கு மூக்கிய உறைவிடமாகிய இந்த இராச்சியத்திலும் தேவசத்தியமாகிய ஜீவ விதை விதைக்கப்படுகிறதென்றும், நன்மைசெய்வதில் இளைப்படையாமல் ஜெபத்தில் தரித்திருந்தால், ஏற்ற காலத்தில் பூரண பலன் உண்டாகும் என்றும் நம்பிமாத்திரமல்ல சந்தோஷப்படுகிறவர்களாயுமிருந்தோம்.

அறிவிப்பு.

கிறிஸ்துமார்க்கப் பள்ளிக்கூடங்களில் கல்விகற்கின்ற பிள்ளைகளின் வேத தேர்ச்சிக்காக, அதிற்சொல்லிய சில ஆள் பெயர் இடப் பெயராக்கொண்டு அடியில் வருவதை அகரவரிப்படி "கொன்றை வேந்தன்" சாடையாய் நாவுக்கினைய பாவாய்ச் சமைத்தனன்.

உபாத்தியார் இதை ஏட்டிலெழுதி பிள்ளைகளுக்கு ஞாபகப்படுத்தவுதடன் வேதவாக்கியத்தின் அந்தந்த இடத்தையுங்கண்டு, ஒவ்வொரு சங்கதியையுந் தெளிவுறச் சுருக்கி கருத்தைத் துலக்கும்படிக்கு கோருகிறேன்.

{1877. ஏப்பிரில்.
{நா. ஆ.

கடவுள் வாழ்த்து.

திரிபொருளான ஒருகடவுளை
இருதயபணிவாய் நிரமதிலுன்றி
பரகதியடைய உரையதபகரும்
அருள்மறையதனில் வருபெயர்கவனி.

வேதசிற்றகராதி.

1 அல்பாஒமேகா கல்பரஞ்மே. வெளி. 1: 8, 11.
2 ஆதாம் ஏவாள் ஏதேன் மனுஷர். ஆதி. 2: 8.
3 இக்கப் போத்தில் மூக்கிய கடலே. 1 சாமு. 4: 19, 22.
4 ஈயேல் குமாரர் *வீளரிகோவால். 1 இராசா 16: 34.
5 உரியாமனையால் அறியாமரணம். 2 சாமு. 11: 14, 17.
6 ஊசாதொட்டு லேசாய் மாண்டான். 2 சாமு. 6: 6, 7.
7 எலியாசால்வை சலம் கீக்கினதே. 2 இராசா 2: 8.
8 ஏறுக்கழியா வாறுக்கினனே. ஆதி. 5: 24.
9 ஐத்திக்கிறந்து உய்த்தான்†பவுலால். அப். 20: 8, 10.
10 ஒபதியா உணவால் கெபியிலே நூறுள். 1 இராசா 18: 13.
11 ஓதனியேல்முன் னீதரில்முதல்வன். நியா. 3: 9.
12 கற்பியின்மகனே வற்மமாய்க்கொன்றார். யோசு. 7: 24.
13 காத்தூர்கோலி யாத்தியர்மனுஷன். 1 சாமு. 17: 4.
14 கிறிஸ்தாகாதர் மரித்தயிழுந்தார். சோம. 1: 5.
15 கீதெயோன்தந்தை மீதியானிற்பார். நியா. 1: 19, 20.
16 குவர்த்து சோமை சபைவாழ்த்தினவன். சோம. 16: 23.
17 கூசாயோவனுள் சூசனுள் சீஷிகள். லூக். 8: 3.
18 கெதலியாமரணம் நெதனியாமகனுல். 2 இராசா 25: 25.

* வீ=மரணம். † உய்த்தான்=பிழைத்தான்.

19 கேயாசேய்த்து கோயால்மாய்ந்தான். 2 இராசா 5: 20, 27.
20 கைமையில் அன்னுள் தெய்வாலயமே. லூக். 2: 36, 38.
21 கொருநேலியைபோல் தருமமிகசெய். அப். 10: 4.
22 கோருதாத்தான் ஆரோன் எதிரிகள். எண். 16: 1—3.
23 சமூகார் அறுநூறமரர்‡வென்ரோன். நியா. 3: 31.
24 சாலமோன்தேவ ஆலயஞ்செய்தோன். 1 இரா. 6: 1.
25 சிமிரிஎழுநாள் உமிரிமுன் ஆண்டோன். 1 இராசா 16: 16.
26 சீமெயோன்மேசி யாமகிழ்விண்டோன். லூக். 2: 29.
27 சுத்தியல் சிசேரா நெற்றியில் யாகேல். நியா. 4: 21.
28 சூனெமூக்கெலிசா போனதிற் புகழே. 2 இராசா 4: 8—32.
29 செங்கடல் பார்வோன் சங்கடம் பெரிதே. யாத். 14: 23.
30 சேங்காம் யாப்பேத் தோங்கலி*ல் முதல்வர். ஆதி. 8: 15—19.
31 சைகையாற்சீமோன் செய்திகேட்டானே. யோவா. 13: 24.
32 சொஸ்தெனேயும் கஸ்தியுற்றுனே. அப். 18: 17.
33 சோதோங்கொமொறுப் பாதகர் வெந்தார். ஆதி. 19: 25.
34 சௌரியன்யோசேப் பவர்வெகுஞானி. ஆதி. 41: 1—50.
35 தபித்தாள் செத்தாள் செபித்தாழெழுந்தாள். அப். 9: 40.
36 தானியேல் கெபியுள் போனதிற்புகழே. தானி. 6: 16.
37 திமிஞத்தூராள் சிமுசோன் கிடாரி. நியா. 14: 1, 18.
38 தீஞள் சீகேம் போனது மோசம். ஆதி. 34: 1, 2.
39 தூருசிலாள்புருஷன் பெருலஞ்சத்தான். அப். 24: 26.
40 தூருசிலேயால் பேறுளோர்மூவர். தானி. 3: 30.
41 தெர்த்துலுவாயன் மெத்தவுங்கோளன். அப். 24: 1.
42 தேமேத்திரியு ஏமாத்தினவன். அப். 19: 21—27.
43 தையலற்றங்கி மெய்கிறிஸ்சணிதல். யோவா. 19: 23.
44 தொபியாயூத சபையின்விரோதி. கொகே. 2: 10, 19. 6: 17.
45 தோவேக்குரையால் சாவெண்பதைக்தே. 1 சாமு. 22: 19.
46 நகாமிகுறைவை அகாரிதீர்த்தார். ரூத். 1—4 அதி.
47 நாகமான்முழுக நோகமாறினதே. 2 இராசா 5: 14.
48 நினிவேநகரின் மனம்ஒன்றுச்சே. யோனு 3: 5—10.
49 நீக்கோதேமு ராக்காலத்தான். யோவா. 3: 1.
50 நுரையேதவிது விரலேகீறல். 1 சாமு. 21: 13.
51 நூன்மகனுலே வான்மதிநிலையே. யோசு. 10: 13.
52 நெற்றியிற்குஷ்டம் பற்றினதகியா. 2 நாளா. 26: 19.
53 நேபுகாதரசன் ஆவுபோல் மேய்ந்தான். தானி. 4: 33.
54 நைலகதியின் செய்திசொல் மோசே. யாத். 2: 5, 7.
55 நொண்டிக்கிஸ்தோல் என்றோர் பேரே. ஆதி. 32: 24.
56 நோவாகாலம் பூ†வொருமுடிவே. ஆதி. 7: 2—24.
57 நௌதலிஈராம் ஒவ்விய கன்னுன். 1 இராசா 7: 13. 2 நா. 2, 14.
58 பருஷிலாதாவீ தரசனி னேசன். 1 இராசா 2: 7.
59 பாபேல்என்றோர் கோபுரமுயர்வே. ஆதி. 11: 4.
60 பினேகாஸ் ஓபினி அநியாயத்தார். 1 சாமு. 2: 12—17.
61 பீலெயாம் மனது கூலியை நோக்கல். எண். 22: 6. யூ. 11.
62 புபிலியுசரிதை சவுலிடங்கேளே. அப். 28: 7—9.
63 பூகாள் சிபாரான் யோகசாலிகளே. யாத். 1: 15—21.
64 பெந்தேகோஸ்தில் வந்தது ஆவி. அப். 2: 1—4.
65 பேதுருமீன்வாய் சொதிவெள்ளிக்காஸ். மத். 17: 27.

‡ அமரர்=பகைவர். * ஓங்கல்=கப்பல். † பூ=உலகம்.

66 பைத்தியன்காபால் உய்த்ததபெண்ணுல். 1 சாமு. 25: 23.
67 பொந்தியுபிலாத்து தந்திரமுடையோன். மாற். 15: 15.
68 போத்திப்பார்பெண் சாற்றினள்பொய்யை. ஆதி. 39: 17.
69 மகுதலமரியாள் புகழுடையாளே. மத். 27: 6. 28: 9.
70 மாருஸ்மேடையில் பேதொழுதாகிலே. அப். 17: 23.
71 மிகாயாசொல்லிற் தகாததில்லே. 1 இரா. 22: 14—35.
72 மீரியாம்மெத்தக் காரியக்காரி. யாத். 2: 4—8.
73 மெத்துசலாகே முதினவயதன். ஆதி. 5: 27.
74 மேரிபாதண்ணீர் மாரிபோலோட்டம். யாத். 17: 1—7.
75 மையால் எழுதேன் மெய்யே காயு. 3 யோவான் 13-வ.
76 மொற்தகாய்துக்கில் செத்தது ஆமான். எஸ்தர் 7: 9, 10.
77 மோரியாமலையில் கூறிய ஈசாக். ஆதி. 22: 13.
78 யன்னேயம்பிரே பின்னெதிர்நில்லோர். யாத். 8: 18.
79 யாக்கோப்பேத்தேல் நோக்கையில் ஏணி. ஆதி. 28: 10.
80 யுமனேயும் பிலேத்தும் சமயவிரோதர். 2 தீமோ. 2: 7, 8.
81 யூதாஸ்முத்தி சூதாயினலே. மத். 26: 49, 50.
82 யெகுஅரசனுல் மிகுகொலையாச்சே. 2 இரா. 10: 6.
83 யேசபேல்தேகம் காசமாகினவே. 2 இரா. 9: 30—37. [23: 16.
84 யொசியாஎன்பை வசையாய்ச்சுட்டான். 1 இரா. 13: 2. 2 இரா.
85 யோனு மீனுள் போனுன்வந்தான். யோனு 2 அதி.
86 ரப்சாக்கின்சொல் செப்படிவித்தை. 2இரா. 18: 28. ஏசா. 36: 13.
87 ராகேல்வழிபா டேகல்லாபார். ஆதி. 31: 34—35.
88 ரிம்மோன் பணியேன் சும்மாபோவேன். 2 இரா. 5: 18.
89 ரீசரஇஸ்ரேல் வாசஞ்செய்தகம். எண். 33: 21.
90 ருசியாயேசு ரசமேசெய்தார். யோவா. 2: 1—10.
91 ரூத்தயூதாக் கோத்திரமானுள். ரூத். 4: 18—22.
92 ரொபெயாங்காலம் யுகமரசாச்சே. 1 இரா. 12: 1—2.
93 ரோகுவேல் வீடி ஏகினுன் மோசே. யாத். 2: 17, 18.
94 ரோதை ஓடிப் பேதுரு என்றுள். அப். 12: 13, 14.
95 லௌதிம்போராண் டவரின்வலுவே. யாத். 17: 8.
96 லபிதோத்தின்பெண் தொபோருள்வல்லி. நியா. 4: 4.
97 லாமேக்கிருபெண் ணேமித்தான்முதல். ஆதி. 4: 19.
98 லித்தாவூர் சங்கித்தை நேயா. அப். 9: 32, 33.
99 லீதியாள்கவனம் போதகர்மொழியில். அப். 16: 14.
100 லூக்காமுன்தொழில் சீக்கு நீக்குதல். கொலோ. 4: 14.
101 லேயாள்மணமே ஏயாசேய்த்தல். ஆதி. 29: 21—27.
102 லொருகாமாவென் றெருதீர்க்கன்சேய். ஒபி. 1: 6.
103 லோத்துமனைவி வேற்றுருவானுள். ஆதி. 19: 26.
104 வஸ்திஎயத்தள்ளி எஸ்தரைக்கொண்டான். எஸ். 2: 16, 17.
105 வாதமைப்பழமரம் சோதியாரோன்கோல். எண். 17: 8.
106 வில்லில்நிமிரோத் தல்லிபமுடையோன். ஆதி. 10: 9.
107 வீவுசோவிலும் யோபு பத்தனே. யோபு 1, 2 அதி.
108 வெண்குஷ்டத்தில் பெண்மிரியாமேழ். எண். 12: 15.
109 வேசிராகாப் யோசுவையுடையாள். யோசு. 2: 4—12.
110 வைத்தியனேசு செயித்தனர்பேயை. மத். 9: 12. 4: 9, 10.
111 வொய்பேயாளின் கையிலோர் நிருபம். ரோம. 16: 1.
112 வௌவாலடையும் பொய்விக்கிரகம். ஏசா. 2: 21.

தொகையடக்கம்.

அகரமுதலே வகர மீறுய்
நூற்றுப்பனிரண் டேற்றிய எழுத்தால்
காவுக்கிசையப் பாவாய்ச் செய்தேன்
ஆசீர்வாதம் ஏசருள் செய்வீர்.

மேற்காட்டிய பாட்டுவாக்கியங்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் சபையாரில் சற்று தேறினவர்கள் ஒருவருக்கொருவர் பிரியமாய்க் கேட்க வேண்டிய கேள்விகளுக்கு உதவத்தக்கவைகளாயிருக்கின்றனவென்று எண்ணுகிறோம்.

திருஷ்டாந்தம். 89-ம் பாட்டில் "ரீசர இஸ்ரவேல் வாசஞ்செய் தகம்" என்றதின் கருத்தென்னவென்று ஒருவனெருவனைக் கேட்பான். உத்தரவு சொல்லாத விஷயத்தில் வாக்கியத்தைப் பார்க்கவேண்டிய தாயிருக்கும்.

வி. ஹா.

துருக்கி. ருஷியா என்ற இராச்சியங்களைப்பற்றி இப்போது வந்த செய்தி மிகவும் விசேஷமுள்ளது. துருக்கியானது மற்ற ஐரோப்பிய ஆளுகையார் யோசனைகளுக்கு விரோதமாய் நடந்தமல்லாமல் அதன் கிறிஸ்தமான பிரஜைகள் பட்சமாய் ருஷியர் கேட்டுக்கொண்ட அனுகூலங்களுக்கு உட்படத்தான் சம்மதப்படுகிறதில்லையென்று தள்ளிப்போட்டது. இருவருடைய சேனைகளும் யுத்தத்துக்கு முன் செல்ல ஆரம்பிக்கிறார்கள்.

பஞ்சம்.—சென்னபட்டண ராஜதானியில் பஞ்சகாலப் பிழைப்புக்காக (ஐந்தாம் தேதி முடிகிற வாரத்தில் கணக்கிட்டதில்) சற்கார்வேலை செய்கிறவர்களின் தொகை 6,93,761 பேர். முக்கியமாய் கர்நூல், பெல்லாரி, வட ஆற்காடு முதலிய இடங்களிலுள்ளவர்களால் 30000 சனம் முன்னுக்கு இப்போது அதிகப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் விஷபேதிக்குப் பயந்து அப்போது வேலையைவிட்டுப்போய்த் திரும்பினவர்கள்.

தருமவகையாய்ப் போஷிக்கப்படுகிறவர்கள் 1,14,800 பேர். இது முன்னிலும் 16000 பேர் அதிகங்கொண்ட தொகை.

ஆடுமாடுகள் இன்னமும் பெல்லாரியிலும் வட ஆற்காட்டிலும் பஞ்சினுல் மடிந்துகொண்டே வருகின்றன.

மைசூர் நாட்டில் பிழைப்புக்காக வேலைசெய்கிறவர்கள் 75000 பேர். தருமமாய்ப் போஷிக்கப்படுகிறவர்கள் 52000 பேர் அவ்விடத்துப் பஞ்சம் சற்று இலகுவாகிறது.

முத்திரை லக்கோடா. இந்தத் தேசத்தில் நாம் வழங்கி வருகிற அரை அணு முத்திரை லக்கோடாக்கள் மனிதர் கையினுல் செய்யப்படாமல் இரும்புவிரலுள்ள ஒரு சூத்திரத்தினுல் செய்யப்படுகிறது ஆச்சரியமான காரியம். அமெரிக்காவில் நடந்த கடைசி அரசு தேற்றத்தில் ஒரு சூத்திரம் ஒருநாளில் 20,000 லக்கோடாக்களே மடித்து அறுத்து முத்திரைசெய்து பிரினிட்டி எண்ணிக் கட்டுகளாக வைத்தது.

மேமீ நாள் 31. சித்திரைமீ 20உமுதல், வைகாசிமீ 20உவரை.

வாரம்.	இங்கிலிஷ் தேய்தி.	தமிழ்த் தேய்தி.	அன்றாடகத் தியானம்.
செ	1	உ௰	பிலிப்புவே நீ என்னை அறியவில்லையா. யோ. 14: 9.
பு	2	உக	எதைச் செய்தாலும் கர்த்தருக்கென்று செய்யுங்கள். கொ. 3: 24.
வி	3	உஉ	கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள். சங். 34: 8.
வெ	4	உ௩	உன் விதையை விதை. பிர. 11: 6.
ச	5	உ௪	கர்த்தாவே நீரோ என்பங்கு. சங். 119: 57.
ஞா	6	உ௫	திருவசனத்தின்படி செய்கிறவர்களாயுமிருங்கள். இயா. 1: 22.
தி	7	உ௬	நீ நடக்கவேண்டியவழியை உனக்குக் காட்டுவேன். சங். 32: 8.
செ	8	உ௭	என்னையல்லாமல் உங்களால் ஒன்றுஞ்செய்யக்கூடாது. யோ. 15: [5.
பு	9	உ௮	எச்சரிக்கையாயிரு. யாத். 34: 12.
வி	10	உ௯	அவர் சிரசில் பொற் கிரீடம் தரிப்பிக்கிறீர். சங். 21: 8.
வெ	11	௩0	அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர். கொ. 1: 17.
ச	12	க	இயேசுவை நோக்கி ஓடக்கடவோம். எபி. 12: 2.
ஞா	13	உ	கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறார். எபே. 5: 23. [10.
தி	14	௩	உம்முடைய கிரியைகளெல்லாம். உம்மைத்துதிக்கும். சங். 145:
செ	15	௪	இயேசுக்கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள். ரோ. 13: 14. [7.
பு	16	௫	இயேசுக்கிறிஸ்து வெளிப்படுவதற்குக் காத்திருக்கிறீர்கள். 1கொ. 1:
வி	17	௬	நம்மிடத்தில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பு. எபே. 2: 4.
வெ	18	௭	இந்தப் பிரபஞ்சத்திற்கொத்த வேஷந்தரியாமல். ரோ. 12: 2.
ச	19	௮	கர்த்தரோ உங்களை ஆளுவாராக. நியா. 8: 23.
ஞா	20	௯	பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள். யொ. 20: 22.
தி	21	க0	நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன். யோ. 14: 18.
செ	22	கக	நீங்கள் பெலனடைவீர்கள். அப். 1: 8.
பு	23	கஉ	ஆண்டவரோ உம்மைப் பின்பற்றி வருவேன். லூக். 9: 57.
வி	24	க௩	உம்முடைய ஆலோசனையின்படி நடத்தும். சங். 73: 24.
வெ	25	க௪	அவர்துதியையெல்லாம் பிரஸ்தாபப்படுத்தத்தக்கவன் யார்? 106: 2.
ச	26	க௫	பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன். ரோ. 6: 22.
ஞா	27	க௬	ஒரே கர்த்தரும் ஒரே விசுவாசமுமுண்டு. எபே. 4: 5. [105: 3.
தி	28	க௭	அவர் பரிசுத்தநாமத்தைக்குறித்து மேன்மைபாராட்டுங்கள். சங்.
செ	29	க௮	அனாதிதேவனே உனக்கு அடைக்கலம். உபா. 33. 27.
பு	30	க௯	தேவன் நமக்கு நித்தியசீவனைத் தந்திருக்கிறார். 1யோ. 5: 11.
வி	31	உ௰	உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள். ரோ. 12: 16.

விசேஷித்த நாட்கள்.

6. ஈஸ்தர் பண்டிகைக்குப் பின்வரும் ஐந்தாம் ஞாயிறு.
10. கிறிஸ்து பரத்துக்கேறின திருநாள்.
13. பரத்துக்கேறின திருநாளுக்குப் பின்வரும் ஞாயிறு.
13. அமாவாசை.
20. பரிசுத்த ஆவியின் திருநாள்.
27. திரித்துவ திருநாள்.
27. பௌரணமி.

நற்போதகம்.

சா. சூன்மீ. சூஅஎஎஆ.

கொரிந்தியரின் முதலாம் நிருபம்.

XI. அதிகாரம்.

1-ம் வா.—முதலாம் வாக்கியம் முந்தின அதிகாரத்தோடு சம்பந்தப்பட்டிருக்கிறதைக் காண்க.

3-ம் வா.—பவுலப்போஸ்தலன், அவர்கள் தமது ஏற்பாடுகளில் விட்டுவிட்டிருந்த சில விசேஷங்களைச் சுட்டிக்காட்டப்போகிறார்.

கொரிந்துசபையைச் சேர்ந்த கிறிஸ்த ஸ்திரீகள் கிறிஸ்துவில் ஆணும் பெண்ணும் என்கிற வித்தியாசமில்லை என்று சொல்லி (கலா. 3: 28.) தங்கள் சுயாதீனத்தைப் பாராட்டி முக்காடுபோடாமல் சபையில் தீர்க்கத்தரிசனம் சொல்லவும் செபம்பண்ணவும் ஆரம்பித்ததாக தோன்றுகிறது. சிருஷ்டிப்பின் முறையில், ஆண் பெண் உண்டாக்கப்பட்ட விதம் எதுவென்று அப்போஸ்தலன் காட்டுகிறார்.

தலை என்பதற்கு அடுத்த மேலானவன் என்று அர்த்தமாம்.

4-ம் வா.—"தன் தலையைக் கனவீனப்படுத்துகிறான்." தலையில் முக்காடிடுதல் நாணத்துக்கும் கீழ்ப்படிதலுக்கும் குறிப்பு. அப்படியே தேவசந்நிதியிலே தூதர்கள் தங்கள் முகங்களை மூடினார்கள் என்று சொல்லியிருக்கிறது. ஏசா. 6. புருஷனானவன் சபையிலே தன் தலையை மூடி இவ்விதமாய்த் தாழ்த்துவது கிறிஸ்துவானவர் ஏற்படுத்தின ஒழுங்குக்கு விரோதமாயிருக்கும். இப்படித் தன் தலையைக் கனவீனப்படுத்துகிறான்.

5-ம் வா.—"தன் தலையைக் கனவீனப்படுத்துகிறாள்." அதாவது மனுஷனைக் கனவீனப்படுத்துகிறாள்.

6-ம் வா.—ஸ்திரீயானவளுக்கு அவளுடைய தலைமயிர் தான், வஸ்திரமாகிய முக்காடு தனக்கு வேண்டியதில்லை என்றால் தன் தலை முடியையும் தள்ளிவிடலாமே. விபசாரிகளுக்கு வெட்கமுண்டாக தலைமயிர் சிரைக்கப்படுகிறது அக்காலத்திலுள்ள வழக்கம்.

7-ம்வா.—"புருஷனுனவன் தேவனுடைய சாயலும் மகிமையு மாயிருக்கிறபடியால்" மனுஷன் தேவனுலே பூமியிலிருந்து முதல் முதல் உண்டாக்கப்பட்டு எல்லாச் சிருஷ்டிகளையும் ஆளத்தக்க அதிகாரத்தைப் பெற்றான். இவ்விதமாய் அவன் தேவனுக்காகவே சிருஷ்டிக்கப்பட்டான். ஸ்திரீயோ புருஷனிலிருந்தும் புருஷனுக்காகவும் சிருஷ்டிக்கப்பட்டாள்.

புருஷனும் ஸ்திரீயும் உண்டாக்கப்பட்ட அதிசய முறையைப்பற்றி அப்போஸ்தலன் சொல்லிய நியாயத்தில் ஸ்திரீயானவள் சபையில் தரிக்கவேண்டிய உடையைக்குறித்துள்ள சொற்ப விஷயத்தையும் சம்மந்தப்படுத்தி காட்டியிருக்கிறார். இந்த நியாயத்தோடு அவர் 1 தீமோ. 2: 13, 14 ல் இதற்கிசைவாய்ச் சொல்லிய நியாயத்தையும் ஒத்துப்பார்க்கலாம்.

10-ம் வா.—"ஆகையால் தூதர்களினிமித்தம். கிறிஸ்தவர்களின் ஆராதனைவேளைகளில் அவர்களுக்குள் காணப்படும் ஒழுக்க வணக்கங்களை தேவதூதர்களும் கூடவிருந்து கவனிக்கிறார்கள் என்பதை அப்போஸ்தலன் அறிந்து இப்படிச் சொல்லியிருக்கிறார் என்று நிதானிக்கலாம்.

16-ம் வா.—"தேவனுடைய சபைகளுக்கும் அப்படிப்பட்ட வழக்கங்களில்லை." தூதனமான வழக்கங்கள் சபைகளில் உண்டாகாதபடிக்கு தேவனுடைய பூர்வீக சபைகளிலுள்ள வழக்கங்களே போதுமான சட்டமாயிருக்கிறதென்று அப்போஸ்தலன் இதனால் காண்பித்திருக்கிறார்.

17-ம் வா.—கர்த்தருடைய இராப்போசனத்தை ஆசரித்ததில் கொரிந்துசபையில் நடந்துவந்த விபரீதங்களை பவுல் அப்போஸ்தலன் எடுத்துக் காண்பிக்கப்போகிறார்.

18-ம் வா.—"முதலாவது" இரண்டாவது குறைவு ஆலிக்குரிய வரங்களைப்பற்றினதாம். 12 அதி. 1 வா.

20-ம் வா.—கர்த்தருடைய இராப்போசனம் பரிமாறப்படும்போதாவது அதற்குப்பின்பாவது பூர்வ கிறிஸ்தவர்கள் அன்பின் விருந்து என்று சொல்லப்பட்ட ஒரு ஐக்கிய விருந்தை நடப்பித்து வந்தார்கள். இந்தப் பொது விருந்துக்கு ஐசுவரியவான்களும் ஏழைகளும் அவரவரே வேண்டிய பதார்த்தங்களைக்கொண்டு வருவது வழக்கம். ஏழைக் கிறிஸ்தவர்களும் அடிமைகளும் ஒன்றும் கொண்டுவராமலிருப்பதுமுண்டு. ஐசுவரியவான்களோ தங்கள் சகோதரரான ஏழைக்கிறிஸ்தவர்களுக்குத் தாங்கள் கொண்டுவந்ததைப் பகிர்ந்துகொடாமல் தாங்களே அதிகமாய்ச் சாப்பிட்டுங் குடித்தும் வந்ததினுலே ஏழைக்கிறிஸ்தவர்களை வெட்கப்படுத்தினார்கள். அப்போஸ்தலனிதைக் கண்டிக்கிறார்.

23-ம் வா.—"கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்." அதைக் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுல் நேரான தரிசனத்தின் மூலமாய்ப் பெற்றார். (கலா. 1: 12.) அவருடன் வேலையாளாகிய லூக்கா அவர் மூலமாய் அதைக் கேள்விப்பட்டு சுவிசேஷத்தில் எழுதியிருக்கலாம்.

27-ம் வா.—மூலபாஷையில் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து அல்லது பாத்திரத்தில் பானம்பண்ணுகிறபோது என்று சொல்லப்பட்டிருக்கிறது. "அல்லது" என்ற வார்த்தையைக் கவனிக்க.—

XII. அதிகாரம்.

1-ம் வா.—"ஆவிக்குரிய வரங்களைக்குறித்து" தேவன் பூர்வ சபையின் மத்தியில் பிரசன்னராயிருந்ததற்கு அத்தாட்சியாக மறு பாஷைகளில் பேசுதல் அற்புதங்கள்செய்தல் ஆவிகளை வகையறுத்தல் ஆகிய பரிசுத்தஆவியின் விசேஷ வரங்களைக் கடாட்சித்து வந்தார். இந்த வரங்கள் பிற்காலத்தில் நின்றுபோயின. கொரிந்துசபையார் இந்த வரங்களினுல் பொறுமையும் பலையுமுடையவர்களாய் நடந்தார்கள். ஆச்சரியத்தை உண்டாக்கத்தக்க வரத்தைப் பெற்றவன் சபைக்கு அதிகப் பிரயோசனமுள்ளதாயினும் அவ்வளவு ஆச்சரியத்தை உண்டாக்காத வரத்தையுடையவனைக் குறைவாய் எண்ணினுன். பவுலப்போஸ்தலன் இந்த வரங்கள் பெருமை பிரியினைக்காகவல்ல, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் ஒருமைக் கட்டுப்பாட்டுக்காகவும் விர்த்திக்காகவும் கொடுக்கப்பட்டனவென்று காட்டுகிறார்.

3-ம் வா.—பரிசுத்தஆவியின் வசனங்கள் எவைகளென்றும்,

3. அசுத்த ஆவியின் வசனங்கள் எவையென்றும் பகுத்தறியத்தக்க அடையாளம் இங்கே காட்டப்பட்டிருக்கிறது. அப். நடபடிகள் 16: 17—19வரை அடங்கிய வசனங்களிலும் வேறு சில வாக்கியங்களிலும் அசுத்தஆவிகளும் கெட்ட மனிதரும் (திருஷ்டாந்தமாக பிலேயாம்) கிறிஸ்துவைப்பற்றிச் சாட்சியிட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

9-ம் வா.—இந்த விசுவாசம், ரட்சிப்புக்காக எல்லாரிடத்திலும் இருக்கவேண்டிய விசுவாசமாயிராமல், அற்புதங்களைச் செய்வதற்கான விசேஷித்த விசுவாசமே. மத். 17: 20. 1 கொரி. 13: 2.

10-ம் வா.—"பற்பல பாஷைகளைப் பேசுதலும்" பேசினவர்களே அறியக்கூடாத அன்னிய பாஷைகளைப் பேசினார்கள். இத்தத் தீர்க்கதரிசனத்தை அல்லது மொழிகளை வியாக்கியானஞ்செய்வதற்கு இன்னொருவனுக்கு வரம் அளிக்கப்பட்டிருந்தது.

12-ம் வா.—"ஒரே சரீரமுண்டு" ஆத்துமா சரீரத்திலே வாசஞ் செய்வதினுலே அதன் அவயவங்கள் பலவகையாயும் வெவ்வேறு சக்தியுடையவைகளாயுமிருந்தாலும் மனுஷன் ஒன்றுதான். அதுபோல கிறிஸ்துவின் சபை எங்கே பரம்பியிருந்தாலும் சபையார் எப்பேர்ப்பட்ட வரங்களை உடையவர்களாயினும் பரிசுத்தஆவியினுலே ஒரே சரீரமாயிருக்கிறார்கள். இந்த வாக்கியத்தினுலே கிறிஸ்துவானவருடைய திருவுள நிர்ணயப்படி சபையிலிருக்கவேண்டிய ஒருமை இன்னதென்று நாம் அறிகிறோம். பிரிவினைகள் இருக்குமாகில் இந்த நிர்ணயம் எவ்வளவாய்க் குலைந்துபோகிறது.

சரீர அவயவங்களுக்குள்ளிருக்கும் சம்பந்தமும் சகதாபமும் விளங்குவதற்கு ஒருவர் சொல்லுகிற திருஷ்டாந்தம் என்னவென்றால்,— காலில் ஒரு முள் தைக்கவே அதை பிடுங்குகிறதற்குக் கை முயற்சிக்கி

றது, முதுகு வளைகிறது, வயிறு சுருங்குகிறது, கண்கள் ஆராய்கிறது, தலை முன்னுக்கு வருகிறது, வாய் வலிய திறக்கிறது என்பதாம் பரலோகத்தில் நமக்கு அளிக்கப்படும் பலன் பூமியில் செய்துவந்த ஊழியத்தின் மேன்மைக்குத்தக்கதாயல்ல, அந்த ஊழியத்தைச் செய்துவந்த உண்மை அல்லது உண்மைத்தப்புக்குத்தக்கதாயிருக்கும்.

XIII. அதிகாரம்.

இதற்கு முந்தின அதிகாரத்திலும் பிந்தின அதிகாரத்திலும் சபையில் வாக்குவாதமும் அமளியும் நடந்ததாகக் காட்டியிருக்கின்றது. இந்த அதிகாரத்திலோ எல்லாம் அமைதலாயும் அன்பாயும் காணப்படுகின்றன. திவ்விய சற்குணத்தைப்பற்றிய இந்தச் சிறந்த தரிசனத்தை அப்போஸ்தலன் கண்டபோது அவருடைய முகம் தேவதூதனுடைய முகம்போல் ஜொலித்ததையும், அவர் தமது வாசக நடையை அதற்கேற்றவிதமாய் மாற்றினதையும் அவர் சொல்ல எழுதினவன் கண்டு வியப்புற்றிருப்பான் என்பதற்குச் சந்தேகமில்லை.

"அன்பு" என்பது தேவனிடத்திலும் மனுஷனிடத்திலும் வைக்க வேண்டிய அன்பைக் குறிக்கும்.

3-ம் வா.—"என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும்" தானதர்மஞ்செய்தல் வீண்புகழ்ச்சியை நாடும் குணத்தினாலாவது, டம்பமாய்ச் செலவுசெய்யவேண்டுமென்கிற எண்ணத்தினாலாவது, மற்றவர்கள் படும்துயரத்தைப் பார்க்க இஷ்டமில்லாமையினாலாவது உண்டாகலாம். இரத்தச்சாட்சியாய் மரிக்குதல் கல்விப் பெருமையினாலாவது, துன்பத்தை அலட்சியஞ்செய்யும் எண்ணத்தினாலாவது உண்டாகலாம். பீலேயாம், யூதாஸ்காரியோத் என்பவர்களைப்போல தேவபக்தியில்லாதவர்களும் ஞானவரங்கள் அல்லது அற்புத வரங்களைப் பெற்றவர்களாயிருக்கலாம். அதனாலே பவுல் அப்போஸ்தலன் அன்போடு கூடியிராத இவ்வித வரங்களெல்லாம் வீண் என்று சொல்லுகிறார்.

6-ம் வா.—"அநியாயத்தில் சந்தோஷப்படாமல்" முத. அன்பற்ற உலகம் மற்றவர்கள் செய்யும் அநியாயத்தில் அல்லது பாவத்தில் சந்தோஷப்படுவதுபோல அன்பு அதில் சந்தோஷப்படமாட்டாது. "சத்தியத்தில் சந்தோஷப்படும்" என்பதற்குச் சத்தியத்தோடே சந்தோஷப்படும் என்றர்த்தம். சத்தியத்தை உயர்திணைப்பாலில் உவமாமானித்துக் காட்டியிருக்கிறது.

11-ம்வா.—"நான் புருஷனானபோதோ குழந்தைக்கேற்றவைகளை ஒழித்துவிட்டேன்." நாம் நினைக்கிறதிலும் அதிகமாக இம்மைக்கும் மறுமைக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. மறுமையானது இம்மையின் தொடர்ச்சியாயிருக்கிறது. மரணமானது இந்த இரண்டு ஜீவன்களுக்கு மத்தியிலுள்ள நித்திரைபோலிருக்கிறது.

12-ம் வா.—"இப்பொழுது கண்ணாடியில் நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம்." இயல்வேதத்தினாலே மாத்திரமல்ல, அருள்வேதத்தினாலும் இப்போது நமக்கு தேவனைப்பற்றி உண்டாகும் அறிவு, இனி அவரை முகமுகமாய்த் தரிசிக்கும்காலத்தில் உண்டாகும் பூரண அறிவுடன் ஒப்

பிட்டுப் பார்க்குமளவில் குறைவுள்ளதாகவேயிருக்கும். பூர்வீகத்தார் வழங்கின கண்ணாடிகள் மெதுவிட்ட வெண்கலத்தால் செய்யப்பட்டிருந்ததால் பொருட்களை மறைவாகக் காட்டுமேயன்றி நாம் வழங்கும் கண்ணாடிகள்போல அவ்வளவு துலக்கமாய்க் காட்டமாட்டாது.

13-ம் வா.—விசுவாசம், நம்பிக்கை அன்பு இம்மூன்றும் எப்போதும் நிலைத்திருக்கும். விசுவாசம் என்பது பரிசுத்தமாறுதலைக் குறிக்கும். இந்தக் குணம் தேவனைத் தரிசித்தபின்பும் விளங்குகிறதாயிருக்கும். பெற்றாருடைய மடியிலிருக்கும் பிள்ளைக்குள்ளிருக்கும் பற்றுதலைப்போல கர்த்தருடைய பிள்ளைகளுடைய விசுவாசமும் இருக்கும். மோட்சத்தில் நம்பிக்கையுண்டா என்று சிலர் கேட்பார்கள். ஆம் மோட்சத்திலும் நம்பிக்கையுண்டு. அதற்குண்டாகும் ஞான ஆகாரத்தினால் அது வளருகிறதாயும் இருக்கும். நூதன அறிவும் நூதன சந்தோஷமும் நூதன நம்பிக்கையைப் பிறப்பிக்கும். விசுவாசமும் நம்பிக்கையும் அற்ற ஜீவன் பரமஜீவன் என்று சொல்லக்கூடாது. விசுவாசம் நம்பிக்கை அன்பு இம்மூன்றிலும் அன்பே முந்தினதும் முக்கியமானதுமாயிருக்கிறது.

XIV. அதிகாரம்.

2-ம் வா.—"அந்நிய பாஷைகளைப் பேசுகிறவன் மனுஷரிடத்தில் பேசாமல்" இந்த வரமானது அவிசுவாசிகளுக்கு ஒரு அடையாளமாயிருந்ததேயொழிய விசுவாசிகளை ஸ்திரப்படுத்துவதற்கேற்ற ஒரு எத்தனமல்ல.

13-ம் வா.—"அந்நிய பாஷையில் பேசுகிறவன்—விண்ணப்பம் பண்ணக்கடவன்." ஆவியின் விசேஷித்த அற்புத வரங்களும் பத்தர்கள் செய்த விண்ணப்பத்தைக் கர்த்தர் அங்கிகரித்ததற்கு அடையாளம் அருளப்பட்டனவென்று இதனால் அறியலாம்.

14-ம் வா.—"நான் அந்நிய பாஷையில் விண்ணப்பம்பண்ணினால்" மனுஷனின் சிறந்த பாகமாகிய ஆவியானது பரிசுத்தாவியினால் நிறைந்து பரிசுத்த விருப்பங்களாகிய அனல் மூண்டு ஜெபவாஞ்சையால் நிறைந்திருக்குமாயினும் மனமானது விர்த்தியடைகிறதுமில்லை. மற்றவர்களுக்குப் பிரயோசனப்படுகிறதுமில்லை.

21—25-ம் வா.—பிள்ளைகளிடத்தில் பேசினதுபோல கற்பனையின் மேல் கற்பனையும் பிரமாணத்தின்மேல் பிரமாணமுமாகக் கொடுக்கப்பட்ட தேவகட்டளையை எருசலேமிலுள்ள பரியாசக்காரர் அசட்டை செய்தார்கள். ஏசாயா 28: 9—14. இஸ்ரவேலர் அந்த லேசான கட்டளைகளுக்குச் செவிகொடாததினால் அவர்களைச் சிறையாகக் கொண்டு போகப்போகிற வேறே பாஷைக்காரராகிய சூரியர்கள்மூலமாய் அவர்களோடு பேசுவோமென்று எகோவா சொல்லி எச்சரித்தார். எரே. 5: 15. ஒத்துப்பார்க்க.

32-ம் வா.—"தீர்க்கத்தரிசிகளுடைய ஆவிகள் தீர்க்கத்தரிசிகளுக்கு அடங்கியிருக்கிறதே."

பொய்மதங்களின் கொள்கைகளைச் சார்ந்த தீர்க்கதரிசிகள் தாங்கள் பெற்ற அருளினாலே தங்களை அடக்கிக்கொள்ளக் கூடாமல் சுயாதீனத்தை இழந்துபோனதைமென்று சொல்லுகிறார்கள். ஆனால் ஒரு மனுஷன் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் நடக்கும்படி அவனைச் சக்தியற்றவனாக்கத்தக்கதாய் பரிசுத்தஆவியானவர் ஒருபோதும் ஒரு வனுடைய சுயாதீனத்தை எடுத்தப்போடுகிறதில்லையென்று பவுல் அப் போஸ்தலன் சொல்லுகிறார்.

36-ம் வா.—"தேவவசனம உங்களிடத்திலிருந்தா புறப்பட்டது." மேற்சொல்லப்பட்ட சட்டங்களை வியர்த்தமாக்கும்படி கொரிந்தவி லுள்ள வழக்கங்களை எடுத்துக்காட்டுவது ஒவ்வாதவென்று அப்போஸ் தலன் சொல்லுகிறார். சுவிசேஷமானது கொரிந்துவிலிருந்து புறப்ப டாமல் அதற்கே கொண்டுவரப்பட்டது.

40-ம் வா.—"சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய் யப்படக்கடவது." கோவிலுக்குப் பிரதிவருவதும், கோவில் சுவர்களில் சாய்கிறதும், எழுந்து நிற்கும்படி ஜெபபுத்தகத்தில் கண்டிருக்க அவ் வேளைகளில் உருக்காந்திருக்கிறதும் அழுக்குப்பாய்கள் இங்கும் அங் கும் சிதறுண்டு கிடக்கிறதும், அழுக்கு வஸ்திரங்களை வைத்துக்கொள் ளுகிறதும் இந்த வாக்கியத்திலுள்ள பவுல் அப்போஸ்தலன் சட்டத் துக்கு விரோதமானவைகள்.

XV. அதிகாரம்

கிறிஸ்தமார்க்க முழுமையும் மனுஷருடைய அபிப்பிராயத்தின் மேலல்ல, சரித்திரத்தின்மேல் ஸ்தாபகமாயிருக்கிறதுபோல எல்லா மாமிசத்தினுடைய உயிர்த்தெழுதலின் நிச்சயமும் கிறிஸ்துவானவரின் உயிர்த்தெழுதலாகிய சரித்திரத்தின்மேல் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் பவுல் அப்போஸ்தலன் கிறிஸ்துவானவரது உயிர்த்தெழுத லின் நிச்சயத்தைக் காட்டத்தக்க சாட்சிகளைக்கொண்டு முதலாவது சங்கதியைப் பேசத்தொடங்குகிறார். "நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் தெரிவிக்கிறேன் உங்களுக்குத் தெரியப்படுத்த அவசியம் சேரிட்டது" என்கிறதுபோல சொல்லுகிறார். இவைகள் கண் டிப்பும் ஆச்சரியமும் கலந்த வார்த்தைகள்.

3-ம் வா.—"வேதவாக்கியங்களின்படி." சங். 16: 10. ஓசெயா 6: 2 ஒத்துப்பார்க்க. மேலும் யோனாவின் சரித்திரத்தையும் நமது இரட் சகர் அதைத் தம்முடைய உயிர்த்தெழுதலுக்கு ஆதாரமாகச் சுட்டிக் காட்டியிருக்கிறதையும் பார். மத். 12: 10

5, 6, 7-ம் வா.—சுவிசேஷங்களில் சண்டிராத இரண்டு மூன்று தரிசனங்கள் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. அவையாவன. "கே பா" "500 சகோதரர்" "இயாக்கோபு." "ஒலிவேலையில் 500 சகோத ரர்." இது மத். 28: 17 ல் சொல்லியிருக்கிறதைக் குறிக்குமென்று நினைப் பது சரியல்ல. கலிலேயாவில் 500 விசுவாசிகள் ஒருமிக்கக் கூடிவந்தி ருக்கமாட்டார்கள். இங்கே சொல்லப்பட்டிருக்கிற சாட்சி அட்டவணை யில் 500 பேர் வருகிற இடத்தைக் கவனிக்கும்போது அல்வர்ட் என்ப வர் சொல்லுகிறபடி பஸ்காப்பண்டிகையை ஆசரிக்கும்பொருட்டு எரு

சலேமுக்குக் கூடிவந்த திரள் சனங்கள் அதைவிட்டுப் புறப்படுமுன் இந்த தரிசனம் எருசலேமில் நடந்திருக்குமென்று உத்தேசிக்கிறோம். ஏனெனில் அப். 1: 15 ல் சொல்லப்பட்டிருக்கிறபடி எருசலேம் சபை யில் 120 பேர் மாத்திரம் இருந்ததாகத் தெரியவருகிறது. "இயாக்கோ பு." இவன் நமது ஆண்டவரின் சகோதரனுயிருக்கலாம். (கலா. 1: 19.)

"அப்போஸ்தலர் எல்லாருக்கும்" 12 பேரைத் தவிர மற்ற சில ரும் அப்போஸ்தலர் என்னப்பட்டார்கள். கிறிசொஸ்தம் என்பவர் லூக்கா 10 ல் காட்டியிருக்கிற 70 பேரையும் அப்போஸ்தலரென்றே அழைக்கிறார்.

10-ம் வா.—"ஆகிலும் நான் இருக்கிறது தேவகிருபையினாலே இருக்கிறேன்." செபபுத்தக முறையில் வருகிற திரித்துவ திருநாளுக் குப் பின்வரும் 11 ம் ஞாயிறு நிருப, சுவிசேஷ வாக்கியங்களில் அப் போஸ்தலனுடைய இந்தச் சொற்களும் லூக்கா 18: 11 ல் வருகிற அகங் தையுள்ள பரிசேயனுடைய வார்த்தைகளும் எதிரிடையாக அடங்கி யிருக்கிறது.

12-ம் வா.—"மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லையென்று உங் களில் சிலர் எப்படிச் சொல்லலாம்." கிரேக்தில் பக்திமான்கள் விசே ஷமாய்த் தங்கள் புத்திக்கு விளங்காததும் எட்டாததுமான சத்தியத் தை ஏற்றுக்கொள்வது அவர்களுக்கு வருத்தமாயிருந்தது.

17-ம் வா.—"கிறிஸ்து எழுந்திராவிட்டால் உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்." கிறிஸ்துவானவரின் உயிர்த்தெழுதலானது கிறிஸ்து வின் போதனை சத்தியம் என்பதற்கு பிதாவானவர் போட்ட முத்திரை யாயிருந்தது. "பரிசுத்தஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித் தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்டார்." ரோமர் 1: 5. இந்தச் சத்தியத்தையே அப்போஸ்தலர் வற்புறுத்திப் பேசினார்கள். அப். 1: 22. 2: 32. 3: 15. 4: 10. 17: 18.

20-ம் வா.—"நித்திரையடைந்தவர்களில் முதற்பலனுனார்." கிறி ஸ்துவானவர் உயிர்த்தெழுந்த அந்தநாளிலே தானே லேவி. 23: 10, 11 ல் சொல்லியபடி ஆசாரியன் முதற்பலனுகிய ஒரு கதிர்க்கட்டைப் பின்வரும் அறுப்புக்கு முதற்பலனுகவும் ஈடாகவும் கர்த்தருடைய சன்னிதியில் அசைவாட்டவேண்டியதிருந்தது. அப்படியே கிறிஸ்துவா னவரின் உயிர்த்தெழுதலும் எல்லா மாமிசத்தின் உயிர்த்தெழுதலுக்கு மாதிரியாகவும் அச்சாரமாகவுமிருந்தது.

22-ம் வா.—முதல் மனுஷனுகிய ஆதாம் தவறிப்போனன். ஆகை யால் தேவன் அவனைத் தள்ளிவிட்டு பாவத்தில் விழுந்துபோன மானிட சாதிக்குத் தகுமையாக இயேசுகிறிஸ்துவானவரை இரண்டாம் ஆதா மாக ஏற்படுத்தியிருக்கிறார். விசுவாசத்தின் பொற்சங்கிலியால் அவ ரோடு தங்களை இணைத்துக் கட்டிக்கொள்ள விரும்புவோரெல்லாரும் அவரில் பிழைத்திருப்பார்கள்.

23-ம் வா.—"அவனவன் தன் தன் வரிசையிலே" 1 தெச. 4: 15 ஒத்துப்பார்க்க. உயிர்த்தெழுதல் முறையில் மூன்று படியுண்டு. (1) கிறி ஸ்துவின் உயிர்த்தெழுதல். (2) கிறிஸ்துவுக்குள் மரித்த விசுவாசிகள் எழுந்திருக்குதல். (3) மரித்தோர் எல்லாரும் உயிரோடெழும்புதல்.

24-ம் வா.—இந்த உலகத்தில் கிறிஸ்துவின் இராச்சியமானது உற்பத்தியிலும், அபிவிர்த்தியிலும், அந்தத்திலும், பிதாவானவர் குமாரனுலே மகிமைப்படவேண்டும் என்ற ஒரு சிறந்த நோக்கத்தையுடைத்தானதாயிருக்கிறது. ஆகையால் எல்லாச் சத்துருக்களும் மடங்கவும், சகலமும் அவருக்குக் கீழடங்கவும்தக்கதாக அந்த இராச்சியம் வளர்ந்து பூரணப்படும்போது, அவரே அதற்கு இராஜாவாயிருந்து அரசாட்சி செய்யாமல் பிதாவானவருக்கு அதை ஒப்புக்கொடுப்பார்.

நமது மனுஷீகத்தின்படி கிறிஸ்து உயிர்த்தெழுதலுக்கு முதற்பலனாயிருக்கிறதினுலே நம்முடைய சரீரம் எப்போதைக்கும் இருப்பதுபோலவே அவருடைய சரீரமும் எப்போதைக்குமிருக்கும். மேலும் கிறிஸ்துவின் மனுஷீகத்தினுலே மாத்திரம் நாம் மோட்சம் சேருகிற மார்க்கம் அடைந்துகொள்வதால் அவருடைய மனுஷீகம் நித்தியகாலமாயிருக்கும் என்று நம்பத்தக்கதாயிருக்கிறது.

28-ம் வா.—"குமாரன் தாமும்...கீழ்ப்பட்டிருப்பார்." அநேகர் இந்த வார்த்தைகளின் நேரான அர்த்தத்தை மாற்றும்படி பிரயாசப்பட்டதுண்டு. என்றாலும் அவைகள் வெகு தெளிவாயிருக்கின்றன. அதாவது அல்போட் (Alford) சொல்லுகிறபடி பரிசுத்த திரித்துவத்தின் இரண்டாம் ஆளாகிய குமாரன் தாமே பிதாவுக்குக் கீழ்ப்பட்டிருப்பார். அப்பொழுது தேவன் மாத்திரம் எல்லாவற்றிலும் எல்லாமுமாயிருப்பார்.

29-ம் வா.—"மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம்பெறுகிறவர்கள்." இது ஒரு கருகலான வாக்கியம். இதை விஸ்தரிக்குமிடத்தில் பரிசுத்த கிறிசொஸ்தம் என்பவர் "மரித்தோர் உயிர்த்தெழுதலுண்டென்று விசுவாசிக்கிறேன் என்று விசுவாசப்பிரமாணத்தில் வருகிறதை அறிக்கையிட்டு நாம் ஞானஸ்நானம்பெறுகிறோம் என்கிறார். உயிர்த்தெழுதலில்லையென்றால் மரித்தோர் உயிர்த்தெழும்புவார்களென்று அறிக்கையிட்டு நீ ஏன் ஞானஸ்நானம்பெறுகிறாய். அதாவது மரித்தோருக்காக நீ ஏன் ஞானஸ்நானம்பெறுகிறாய். மேலும் உன் ஞானஸ்நானம் இச்சீவியத்தையும் உயிருள்ளோரையும் முக்கியமாய்ச் சாராமல் மரணத்தையும் மரித்தோரோடு உனக்குக்குக் கிடைக்கும் பங்கையும் சாருகிறதாயிருக்கிறது.

32-ம் வா.—எபேசில் நடந்ததாக அப். 19: 29 ல் சொல்லப்பட்டிருக்கிற நிகழ்ச்சிபோலொத்த ஒரு பெரிய மோசத்தை பவுல் அப்போஸ்தலன் இங்கே சுட்டிக் காட்டுகிறார். "புசிப்போம், குடிப்போம், நாளைக்குச் சாவோம்." "தகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கத்தைக் கெடுக்கும்." மேற்காட்டிய இரண்டு வசனங்களும் அஞ்ஞானிகள் எழுதிய நூல்களில் உள்ளவை. "தகாத சம்பாஷணைகள்" என்பது முதலாவது எடுத்துக் காட்டப்பட்ட வாக்கியத்தைக்கொத்த விதிகளைக் குறிக்கலாம்.

35-ம் வா.—"எப்படிப்பட்ட சரீரத்தோடே வருவார்கள்." விதைக்கப்பட்ட தானியமும் அது செத்து அதிலிருந்து முளைக்கும் தானியமும் ஒன்றுதான். கம்பம்புல்லிலிருந்து எள் உண்டாகமாட்டாது. விளையொன்றுபோட சுரை ஒன்று முளைக்கமாட்டாது. அதுபோல மகிமையுள்ள சரீரமாயிருந்தாலும் மானிடதேகம் மானிடதேகமாகவே எழுந்திருக்கும்.

மத்தேயு 17: 2 ல் மூன்று சீஷருக்கு கிறிஸ்துவானவர் மறுரூபமாகி மகிமைப்பிரகாசமாய் விளங்கினதுபோல நம்முடைய அற்பமான சரீரங்களும் மாறிப்போகுமென்று நாம் நினைக்கிறது எத்தனை ஆச்சரியம். பிலி. 3: 21 பார்க்க. "நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்." இனிமேல் நடக்கப்போகிற இந்தச் சிறந்த மாறுதலை உணர்ந்தால் நாம் உலகத்தில் பரமவாசிகளாய் நடப்போமல்லவா?

51-ம் வா.—"நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை." 1 தெச. 4: 14. 5: 10. இவைபோலொத்த அநேகவிடங்களில் வருகிற நித்திரை என்ற வார்த்தையையும் கவனிக்க. "மரணத்தைப் பரிகரித்து சீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினுலே வெளியரங்கமாக்கினார்." 2 தீமோ. 1: 10.

55-ம் வா,—இனிவரும் மகிமையான காலத்தை நிச்சயமாய் எதிர்பார்த்த ஒசியா தீர்க்கதரிசியின் வார்த்தைகளைச் சற்றே மாற்றி அப்போஸ்தலன் இங்கே ஜெய சங்கீதமொழிகளைக் கூறுகிறார்.

57-ம் வா.—"நமக்குக் கொடுக்கிற" ஜெயம் இடைப்படுதற்காலத்துக்குரியதாயும் நிச்சயமாயுமிருக்கிறதினுலே பவுல் அப்போஸ்தலன் நிழலச்சத்தைப் பிரயோகித்து தேவனை ஸ்தோத்தரிக்கிறார்.

58-ம் வா.—"கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்றறிந்து." உயிர்த்தெழுதல் இல்லாமற்போனுல் அது விருதாவாகவேயிருக்கும்.

XVI. அதிகாரம்.

1—4. தங்கள் ராச்சியம் முடிகிற சமயமாகிய இந்தக் காலத்தில் யூத ஜனங்களுக்கு நேரிட்ட ஓயாத துன்பங்களினுலே எருசலேமிலுள்ள கிறிஸ்தசபை தரித்திரப்பட்டுப்போயிற்று. பவுல் அப்போஸ்தலன்தானே யூத சமயத்தாலுயிருந்து கிறிஸ்த சபையைத் துன்பப்படுத்தினபொழுது அநேகர் விதவைகளாகவும், தாய் தகப்பனையற்றவர்களாகவும் ஆனார்கள். அப்படி 26: 10.

2-ம் வா.—தானிக்கை சேர்க்கும் விஷயத்தில் பரி. பவுல் அப்போஸ்தலன் தலையிட்டுக்கொள்ள மனமேயில்லை. அவர்களைச் சந்தித்தபொழுது எல்லாம் அவர்களைப் போதிக்கிறதிலேயே தம்முடைய காலத்தைப் பின்னிட விரும்பினார்.

எல்லாரும் அவரவர் வருமானத்துக்குத்தக்கதாக வாரந்தோறும் காணிக்கை சேர்க்கும்படி இதிலே விதிக்கப்பட்டிருக்கிறது.

4-ம் வா.—"நானும் போகத்தக்கதாலுல்" என்பது சேர்க்கப்பட்டபணம் போதுமான தொகையுள்ளதாயிருந்தால் என்று அர்த்தம் கொள்ளும்.

பவுல் அப். இரண்டு வழியாய் கொரிந்து சபையைச் சந்திக்கிறதற்கு யோசித்திருந்தார். எபேசுவிலிருந்து கொரிந்துக்கும், அங்கிருந்து வடக்காயும் போய், மறுபடியும் கொரிந்துக்கும் திரும்புவது ஒரு வழி. இது அவர் செய்த முதல் யோசனை. அதை அவர் விட்டு விட்டார். அவர் செய்த இரண்டாம் யோசனை மக்கேதோனியாவிலிருந்து புறப்பட்டுப்போய் அவர்களைச் சந்திப்பதே. இந்த யோசனையே அவருக்குக் கைகூடிற்று. 2 கொரி. 1: 23, 2: 1. அவர் செய்த முதல் யோசனை மாறிப்போனதற்கு நியாயம் காணலாம். அ.ப.வி. 20: 1-ல் சொல்லியபடி அவருடைய பிரயாணத்தைத் துவக்கினார். அவர் நிறைவேற்றமல் விட்டுவிட்ட யோசனையைப்பற்றி 2 கொரி. 1: 15, 16-ல் சொல்லியிருக்கிறது.

6-ம் வா.—பவுல் அப்போஸ்தலன் இந்த நோக்கத்தை நிறைவேற்றினார்.

10-ம் வா.—தீமோத்தேயு இளைஞனும் ஒருவேளை இயற்கையாய்க் கோழையாயுமிருந்திருக்கலாம். 2 தீமோ. 1: 7, 8 பார்க்க.

12-ம் வா.—பவுல் அப்போஸ்தலனுக்குள்ளும் அப்பொல்லோவுக்குள்ளும் பூரண ஐக்கியமிருந்ததேயொழிய யாதொரு பொறாமையுமில்லை. கொரிந்துவிலுள்ள ஒரு கட்சிக்காரர் அவனைத் தங்களுக்குத் தலைமையாகவைத்துக்கொண்டதினாலேயே அப்பொல்லோ அங்கே போகப் பிரியப்படவில்லை. 3 அதி. 4 வா பார்க்க.

19-ம் வா.—ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அ.ப.வி. 18: 1, 26 ல் சொல்லியபடி கொரிந்துவிலிருந்து எபேசுக்குப் போயிருந்தார்கள். அவர்கள் பிற்காலத்தில் ரோமாபுரியில் செய்ததுபோல எபேசிலும் தங்கள் வீட்டில் பக்தர் சபை கூடிவரும்படி இடம்பண்ணினார்கள்.

21-ம் வா.—பவுல் கொலோ. 4: 18 லும் எபேசி. 6: 24 லும் எழுதியிருக்கிறதுபோல இந்த நிருபத்தின் கடைசியிலும் ஒரு விசேஷித்த வாக்கியத்தைத் தமது சொந்தக் கையால் எழுதி முடிக்கிறார்.

22-ம் வா.—அநேக கண்டிப்புகளும் எச்சரிப்புகளும் அடங்கிய இந்த நிருபத்தை அப்போஸ்தலன் அன்பான சில வார்த்தைகளோடுகொண்டு முடிக்கிறார்.

ஒரு சிநேகிதர் இந்த நிருபத்தின்பேரில் அனுப்பிய சில மாதிரிக் கேள்விகளுக்காக நன்றி செலுத்துகிறோம். இந்நிருபப் பரீட்சைக்குப் போகிறவர்கள் அவைகளைக் கவனிப்பது நலமாயிருக்கும்.

வி. ஹா.

I. கொரிந்தியர்.

12. மாதிரிக் கேள்விகள்.

1. கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபம் பரிசுத்த பவுலால் எழுதப்பட்டதென்றும், இங்கிலிஷ் பைபிளில் இந்நிருபத்தின்

அடியிற் கண்டிருக்கிறபடி அது பிலிப்புப் பட்டணத்திலிருந்து எழுதப்படவில்லை என்றும் காட்டுக.

2. கொரிந்துப் பட்டணத்தைப்பற்றிய சரித்திர விசேஷத்தையும் இங்கே சுவிசேஷம் பிரபலமான விருத்தாந்தத்தையும் எழுதும்.

3. இந்த நிருபத்தின் பிரதான 2 பிரிவுகளை அதினதின் உட்பிரிவுகளுடன் காரியம் காரியமாய்க் காட்டவேண்டும்.

4. அப்போஸ்தலன் இந்நிருபத்தைத் தொடங்கும் வகை, இவருடைய சில நிருபங்களின் முகவுரைக்கும், அ.ப.வி. ஆகமத்திற் கண்டிருக்கிறபடி அவர் பிரசங்கத்தைத் துவக்குகிற சாடைக்கும் சம்பந்தமிருக்கிறதென்று காட்டவும்.

5. "ஞானமுள்ள" பரி. பவுல் கிறிஸ்துமார்க்கத்தின் எந்தப் பிரதான உபதேசத்தை இதில் விவரித்துக் காட்டுகிறார்?

a அதற்கு முகாந்தரம் என்ன?

b மேற்படி உபதேசத்தை ரூபிக்க அவர் காட்டும் நியாயங்களை ஒழுங்காய் எழுதவும்.

c அந்தக் காரிய சம்பந்தமாய் பழைய ஏற்பாட்டிலிருந்து எடுத்துக் காட்டப்படுகிற வாக்கியங்கள் எவை.

6. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிற காரியத்தில் பவுலப்போஸ்தலனுடைய முறையென்ன?
கிறிஸ்துமார்க்கப் போதகர் இந்தப் புராணங்களை அறிந்திருப்பது அவசியமா? இல்லையா? இவைகளுக்கு இந்நிருபத்திலிருந்தே உதாரணம் எழுதும்.

7. திருச்சபையின் எந்த ஆசாரங்களை இந்த நிருபத்தால் அறிந்துகொள்ளுகிறோம்? நமது செபபுத்தகத்தில் கண்டிருக்கிறபடி இந்த நிருபத்திலிருந்து எடுக்கப்பட்டிருக்கிற வைகள் எவை?

8. ஞானம், மாம்சம், தூதர், ஆவி இவை இந்த நிருபத்தில் என்னென்ன கருத்தாய் வழங்கப்படுகிறது? நீர் சொல்பவைகளை வாக்கியங்களோடுகொண்டு ரூபித்துக் காட்டவேண்டும்.

9. அப்பொல்லோ, கேபாவேயாள், அகாயிக்கு, யாக்கோபு, காயு ஆகிய இவர்கள் இன்னொன்றும், அவர்களைக் குறித்து இந்த நிருபத்தில் சம்பந்தமாய் வருவினைகளை மாத்திரம் எழுதவும்.

10. பரிசுத்த ஆவியானவரின் வரங்கள் எத்தனை வகைப்படும்? இதைப்பற்றி விபரமாய்க் காட்டுக.

11. a பின்வரும் வாக்கியங்கள் என்னென்ன சம்பந்தத்தில் வருகிறது?
ச. 15; சு. 13, 19; அ. 6; கூ. 1; வி. 26.

b இந்த வாக்கியங்களை விஸ்தரிக்கவும்:
க. 25; உ. 9; கூ. 15; எ. 12; கூ. 20; வி. 2; வெ. 10, 19, 26; வெ. 21; வெ. 22, 29.

12. அன்பின் தன்மையைப்பற்றி அப்போஸ்தலன் சொல்லுகிறதை மனப்பாடமாய் எழுதவும்.

அன்பைக் குறித்து விபரமாய் எழுதுகிறது.
"கொரிந்து பட்டணத்திலுள்ள தேவனுடைய சபைக்கும்"
"இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்ளுகிற அனைவருக்கும்" எழுதுகிறது அவசியமென்று காட்டவேண்டும்.—

11-ம் கேள்வி சற்று வருத்தமானது. அதின் அர்த்தம் நன்றாய் விளங்கவில்லை.

"ஞானமுள்ள" என்பதற்குப் பதிலாக "ஞான" என்கிற வார்த்தை இருந்தால் தெளிவாய் இருக்கும்.

Communicant's Companion.

நற்கருணை விளக்கம்.

௰௪. அதிகாரம்.

பலவித துன்ப துயரங்களால் சங்கடப்பட்டுத் தவித்துக்கொண்டிருக்கும் கிறிஸ்தவர்களுக்கு இந்தப் பரமவிருந்தால் கிடைக்கும் சில ஆறுதலுந் தேறுதலுமான வார்த்தைகள். அந்தச் சட்டங்களாவன.

(தொடர்ச்சி.)

அல்லது நீ வறுமைப்பட்டு, நினைத்த காரியங் கைகூடாமலும், நீ பண்ணும் தீர்மானங்கள் கவைக்குதவாமலும், நீ நினையாத ஆபத்து நேரிடுங்காலத்திலும், கர்த்தருடைய பந்தியில் உனக்கு அளித்திருக்கும் பரம சிரவியத்தை நீ கவனிப்பதால் உன் தற்கால வறுமை பறந்தோடவேணுமே. ஆகையால் "நீ கர்த்தரை நம்பி நன்மைசெய் கேசத்தில் குடியிருந்து சத்தியத்தை மேய்ந்துகொள்." கர்த்தர் நல்லவரென்று ருசிபார்ப்பதே உன் ஞானாகாரம். நீ கர்த்தருடைய திவவிய வசனத்தைத் தியானிப்பதே உன் ஆத்துமாவைப் போஷிப்பிக்கும், உன் ஆத்துமா திர்ப்திகரப்படுவதால் உன் சரீரகவலை பறந்தோடிப்போகும். "விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்." "அத்திமரம் துளிர்விடாமற்போனாலும், திராட்சச்செடிகளில் பழங்கள் உண்டாகாமல் போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனாலும் வயல்கள் தானியத்தை விளைவியாமல் போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப் போனாலும், தொழுவத்தில் மாடற்றுப்போனாலும்." மெய்யான திராட்சச்செடியைப் புசித்து கர்த்தருக்குள் சந்தோஷித்து உன் ரக்ஷிப்பின் தேவனுக்குள் மனமகிழ்ச்சியாயிருப்பதே நன்றென்று கண்டுபிடிப்பாய்.

இதுவுந்தவிர உன் உற்றார் பெற்றார் உனக்குத் துன்பமாயிருந்து உன் மனைவி யுனக்கிசைந்துவராமலும், நீ பெற்ற பிள்ளை உனக்கு ரண்டகம்பண்ணியும், உன் பெற்றார் உன்னைக் கைவிட்டும், உன் சினேகிதர் உனக்குத் துரோகம் நினைத்தும், உன் அயலார் உன்னை யேமாத்தியும் இவ்வகையான அநீதி உனக்கு நேரிடுகிறதாயிருந்தபோதிலும், உன்

தேவன் இவர்களெல்லாரிலும் உனக்குக் கிட்டின இனபந்தாயிருப்பதே போதும். அவர்களால் வரும் நஷ்டம் யாவையும் அவருடைய மட்டற்ற அன்பு மறைத்துவிடும் உலக ஊற்றுக் கலங்கிப் பானம்பண்ண உதவாதபோதிலும் ஜீவதண்ணீர் எப்போதும் தெளிவாய் ஓடிக்கொண்டிருக்கிறது போதும்.

உனக்கு உயிருக்குயிராயுள்ளவர்கள் உன்னைவிட்டுப் பிரிந்து மறுமைக்குட்பட்டுப்போய்விட்டார்களா? விதைத்ததுக்குத் தண்ணீர் பாய்ச்சவேண்டியதுதானே. ஆகிலும் நற்கருணைப் பந்தியிற் பங்குபெறுகிறவர்கள் நம்பிக்கையற்றவர்களைப்போல துக்கப்பட ஏதுவில்லை. மரணத்தின்மூலமாய், அவர்களால் வரும் சகாயத்துக்கு அன்னியராகப்போனபோதிலும் தேவன் நமக்கு 10 பிள்ளைகளைவிட அதிகம் அல்லவா? அது மாத்திரமல்ல. 1000 அல்லது 10000 இனபந்துக்களைவிட அவரதிகமென்பதற்குச் சந்தேகமா! மேலும் நாம் அவர்களை இழந்துபோகவில்லையே. நாமெல்லாரும் நோக்கிச்செல்லும் பரமவாசஸ்தலத்துக்கு முந்திப்போயிருக்கிறார்கள். நமக்குக் குறித்த காலம் வந்து அவ்விடம்போகும்போது அவர்களைக் கண்டு ஒருபோதும் பிரியாவண்ணம் ஒன்றாயிருக்கலாம்

VI. மரணத்தைப்பற்றின பயமும் திகிலும் நம்மைப் பிடிக்கிறதுண்டானால், கர்த்தருடைய பந்தியைச் சேருகிறவர்களாகிய நாம் அந்தப் பந்தியின் தன்மையை அறிந்திருப்பதால் அந்தப் பயத்தை லேசில் அகற்றிப்போடலாம்.

கர்த்தரின் பந்தியில் குறித்திருக்கும் மனோவாக்குக்கெட்டாத நன்மைகளை அநுபவிப்பதால் ருசிபார்த்தவர்களுக்கு மரணம் பயங்கரமாய்க் காணப்படவேமாட்டாது. ஏனெனில் கர்த்தரின் பந்தியில் கிறிஸ்துவின் மரணத்தைப் பார்க்கிறோம். அந்த ஜன கூட்டங்கள் பார்த்திருக்க, பிரபுக்களும் அதிகாரிகளும் சூழ, பேராச்சேவகர்களால் கொலைகளத்துக்கு நடத்தப்பட்டு மரண மடைந்தார்கள் அகோரவேதனையோடு மரித்தார் தேவகுமாரனாவர். சகலத்துக்கு ஞ்சுதந்தரவாளியானவர் மரணமாகிய இருண்ட பள்ளத்தாக்கினூடே வெட்கத்துக்கும், துக்கத்துக்கும் உடன்பட்டவராய் கொல்கதாவுக்கு நடந்து போனார். ஆகையால் அவருடைய மரண காரியம் இப்படியிருக்குமாகில் நாம் மரணத்தைப்பற்றி கலங்கவேண்டியதென்ன? நாம் இன்னாரை விசுவாசித்திருக்கிறோமென்றறிந்திருக்கிறபடியால் வெட்கப்படவேண்டுவதில்லையே. "நான் மரணநிழலின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன. தேவரீர் என்னோடுகூடவிருக்கிறீர். உம்முடைய கோலும், உம்முடைய தடியும் என்னைத் தேற்றுகிறதென்று சொல்லுகிறவர்களாயிருக்கவேணும். மேலும் கிறிஸ்துவின் மரணம் மரணத்தின் கூரையொடித்துப் போட்டதினாலே, அது கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாது. "மரணமே உன் கூர்மை எங்கே பாதாளமே உன் ஜெயம் எங்கே" என்று மரணத்தை ஜெயங்கொள்ளலாம். மேலும் இந்தச் சத்துரு கிறிஸ்துவினால் ஜெயிக்கப்பட்டதினால் "பால்குடிக்குங் குழந்தை விரியன்பாம்பு வளையின்மேல் விளையாடும். பால்மறந்த பிள்ளை கட்டுவிரியன் புற்றிலே தன் கையை வைக்கும்." மரணமானது பரிசுத்த பருவதமெங்கும் தீமைசெய்வதுமில்லை, கேடுசெய்வதுமில்லை. கிறிஸ்துவின் மரணம் மரணத்துக்குரிய இயற்கையை மாற்றிப்போட்டது. அது நமக்குச் சத்துருவாயிருப்பதற்குப் பதிலாக மித்துருவாகிவிட்டது. கர்த்தருடைய பந்தியில் தேவானுக்கிரகத்தால் நமக்கு முத்திரையிட்டிருக்குங் கிருபையின் உடம்படிக்

கையால் நமக்குச் சத்துருவாயிருந்த மரணமும் மித்துருவாகும்படி கடாக்ஷித்த தேவனுக்கு ஸ்தோத்திரம். "எல்லாம் உங்களுடையதே" அதில் மரணம் ஒன்று. நம்முடைய பரம பாக்கியத்தைச் சம்பாதித்த து கிறிஸ்துவின் மரணம். ஆகையால் நம்முடைய மரணம் அந்தப் பரம வாழ்வுக்கு நடத்தும் வழியேயொழிய மற்றொன்றல்ல. அது நம்மை சிறைச்சாலையினின்று மீட்டு நம்முடைய பிதாவினுடைய வாசஸ்தலமா கிய அரமனைக்குக் கொண்டுபோகும் தூதன்.

அப்புறம் நீ உன் ஆத்துமாவைவிட்டுப் பிரிய யோசிக்கிறாயோ? இதற்கு முந்தியே அது சுத்திகரிக்கப்பட்டு அவருக்கு ஒப்புக்கொடுக் கப்பட்டதுதானே. இனிமேல் பயமென்ன? அதை முற்றும் ரக்ஷிக்க வல்லவர் ஒருவரிருக்கிறாரே. பயமின்றி அவர் கையில் ஒப்புக்கொடு. கிறிஸ்துவும் தன் ஆத்துமாவை பிதாவினிடத்தில் ஒப்புவித்ததை அறி வாயே. எக்காலத்திலுமுள்ள பரிசுத்தவான்கள் அவர் மாதிரியைப் பின் பற்றிப்போயிருக்கிறதையும் அறிவாயே. நீயும் அப்படிச்செய்வதினால் லாபமேயொழிய நஷ்டமில்லை.

இதன்னியில் உன் சரீரத்தைவிட்டுப் பிரியப் பயப்படுகிறாயோ? மண் மண்ணுக்குத் திரும்பவேண்டியதுதானே. "அழிவுள்ளதாய் வி தைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும். கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும் மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும். பலவீனமுள்ள தாய் விதைக்கப்படும் பலமுள்ளதாய் எழுந்திருக்கும்,"

சிலுவைக்குப் பகைஞர் மரிக்கப் பயப்படட்டும். மாயக்காரருக் கு மரணம் திகிலைக் கொடுக்கட்டும். அவர்கள் தங்கள் ஜீவகாலமெல் லாம் தங்கள் வயிற்றை தேவனுகப் பாவித்து அவர்கள் இலட்சையில் மேண்மைபாராட்டி பூமிக்குரியவைகளைச் சிந்தித்துவந்தபடியால் கிறி ஸ்துவின் வருகையில் "பருவதங்களையுங் கன்மலைகளையும் நோக்கி, நீங்கள் எங்கள்மேல் விழுந்து மறைத்துக்கொள்ளுங்கள்" என்று கூப் பாடு போடுவார்கள். ஆகையினால் என் ஆத்துமாவே! கர்த்தர் உனக் குச் செய்த நன்மையை நினைத்து மரணத்தையும் பாதாளத்தையுஞ் ஜெயித்து "மரணமே உன் கூர் எங்கே, பாதாளமே உன் ஜெயமெங் கே" என்று சொல்லத்தக்கதாய் ஆயத்தமாயிரு. உன் பொக்கிஷமெங் கேயோ அங்கே உன் இருதயமிருக்குமே. உன் பரம பொக்கிஷத்தின் பேரில் அபேட்க்ஷைகொள். நீ சீக்கிரம் பூமிக்குரிய கூடாரம்போன்ற இந்த வீடைவிட்டுப் பிரிந்து தேவனுற கட்டப்பட்ட கைவேலையல் லாத நித்திய வீட்டுக்குப்போக அழைக்கப்படுவாய். ஆகையால் நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்திற் சேர்த்துக்கொள்ளுவேன் என்ற அருமை ரக்ஷ கர் வருகைக்கு வாஞ்சையோடு காத்திருந்து சிசேராவின் தாய் சன்ன லில் நின்று பலகணிவழியாய்ப் பார்த்துக்கொண்டிருந்தி, அவனுடைய ரதம் வராமல் பிந்திப்போனதென்ன? அவனுடைய ரதங்களின் ஓட்டம் தாமதித்ததென்ன என்று புலம்பிக்கொண்டிருந்ததுபோல நா மும் அவருடைய வருகையை அபேக்ஷித்து, வாரும் கர்த்தராகிய இயே சுவே வாரும் என்று சொல்லிகொண்டிருக்கக் கடவோம்.

Life of Bishop Latimer.

இலத்திமர் கண்காணியார் சரித்திரம்.

இலத்திமர் என்பவர் கி. பி. 1470 ம் ஜூலே செஸ்ற்றர் மாகா ணத்திலுள்ள தர்க்கேஸ்றன் என்னும் ஊரில் பிறந்தவர். அவர் தந்தை கன்னியமுள்ள திருஷிகன். அவருக்கு ஒரே மகனை இந்த லத்திமர் காலுவயசாயிருக்கும்பொழுதே, தீவிர திறமையும் புத்திக்கூர்மையு முள்ள பிள்ளையென்று தகப்பனார் கண்டு, அவனைத் தேறின வித்வா னுக்கவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டார். அவ்வாறே லத்திமர் அந்நாட்டிலுள்ள சாதாரண கிராமப்பள்ளிக்கூடங்களில் கல்வி அப்பி யாசஞ்செய்து தேறினபின், பதினாறு வயதில் கேம்பிரிஜ் சர்வகலாசா லைக்கு அனுப்பப்பட்டு அதின் ஓர் அவயவமானார். அவ்விடத்தில் அவர் சர்வகலாசாலைக்குரிய கல்வித்துறைகளை அப்பியாசித்து வந்ததோடு, அக்காலத்தில் மிகுதியும் மதிக்கப்பட்ட வேத தர்க்கசாஸ்திரத்தையும் ஊக்கத்தோடு கற்றுக்கொண்டுவந்தார்.

இக்காலத்தில் லத்திமர் என்பவர் பாப்புமார்க்கத்தில் மகா வை ராக்கியமும் குருட்டுப்பக்தியுமுள்ளவராயிருந்தார். அம்மார்க்கத்துக் குரிய புறம்பான நியமநிஷ்டைகளைக் கைக்கொள்வது மிகுந்த புண் ணியம் என்று நம்பியிருந்தபடியால், சன்னியாசி வேஷமாத்திரம் தரித் துக்கொண்டால் நித்திய இரட்சிப்பு எப்படியும் கிடைக்குமென்று அவர் வெகுகாலம் நினைத்திருந்ததாக பிற்காலத்தில் அறிக்கையிட்டிருக்கி ரார். மேலும் நற்கருணைப் பூசைசெய்வதில், நிராட்சரசத்தைத் தண் ணீரோடு சரியானபடி கலக்காதிருக்குமோவென்று வெகுவாய்ப் பயந் துகொண்டிருப்பாராம். அதினிமித்தம் அவர் சுத்த மனவேதனையும் மிகுதியாம். அவர் வேதசாஸ்திரப் பண்டிதன் என்னும் பட்டம்பெறு தற்கிருந்த சமயத்தில் அவர் பண்ணின பிரசங்கத்தில், பிலிப்புமெ லங்தன் என்பவருடைய கொள்கைகளே தேவதூஷணமான நூதனக் கொள்கைகளென்று வசைசொல்லிக் கண்டித்து நிராகரிக்கப் பார்த் தார். அவர் இவ்வாறு ரோமன்மார்க்கத்தில் மகா உண்மையும் அபி மானமும் உடையவராய் விளங்கினபடியால், சர்வகலாசாலையின் சிலு லைக்கொடி பிடிக்கிற கனிசமுள்ள அலுவல் அவருக்குக் கிடைத்தது. அதுமுதல் மாணாக்கரில் யாராவது வேதாகமம் வாசிக்கிறதாக அறிந் தால், அவர்களைப்போய்க் கண்டுபேசி, அவர் சொல்லுகிற வழக்கப் படி அந்த வேடிக்கையை விட்டுவிடவும், வேத தர்க்கசாஸ்திரத்தை அப்பியாசிக்கவும் அவர்களை யேவிவிட தம்மாலானமட்டும் பிரயாசப் படுவார்.

கடைசியிலே இந்தக் கொடிய சத்திய விரோதியை தமக்குத் தெ ரிந்துகொண்ட பாத்திரமாய்ப் பிரித்தெடுக்கவும், பவுல் அப்போஸ்தல னைப்போல அவர் முன் அழிக்கத் தேடின விசுவாசத்தைப் பிரசங்கிக் கப்பண்ணவும் தேவன் சித்தங்கொண்டார். இந்த அதிசய மாறுதல் அவருக்குள் உண்டாவதற்கு விசேஷக் கருவியாயிருந்தவர் சிறிதுகா லத்துக்குப்பின் கோர்ச்சு நகரத்தில் இரத்தச்சாக்ஷியான கீர்த்திபெற்ற பில்னி என்பவர்தான். இதைக்குறித்து லத்திமர் தாமே தமது பிரசங் கம் ஒன்றில் சொல்லியிருப்பது எப்படியென்றால், "தேவவசனத்தின் நிமித்தம் மரணத்தைச் சகித்த பரிசுத்தவானை பில்னி என்பவனைக்

கருவியாகக்கொண்டு, தேவன் தம்மை அறிகிற அறிவுக்கு என்னை அழைத்தருளினார். தேவவசனத்தின்பேரில் எனக்குண்டாயிருக்கிற அறிவுக்காக, தேவனுக்குப்பிறகு அவனுக்கு நான் நன்றிசெலுத்தவேண்டியது. எப்படியென்றால் இங்கிலாந்திலுள்ள எந்தப் பாப்புமார்க்கத்தானையும் பார்க்க நான் பிடிவாதமும் குருட்டுவைராக்கியமுமுள்ளவனாயிருந்தேன். என் வைராக்கியம் அறிவுக்கேற்ற வைராக்கியமல்லவென்று பில்னி என்பவன் கண்டு, ஒருநாள் என் அறையில் வந்து, தேவன் நிமித்தம் என் விசுவாச அறிக்கையை நீர் கேட்கவேண்டும் என்றான். அப்படியே அவன் தன் விசுவாசத்தை அறிக்கையிடக் கேட்டேன். நான் அநேக வருஷமாய்க் கற்றுக்கொண்டதிலும் அந்த அறிக்கையினாலே அதிகமாய்க் கற்றுக்கொண்டேன். அதுமுதல் நான் தேவவசனத்தின்பேரில் பிரியங்கொள்ளத் தொடங்கி வேததர்க்கசாஸ்திரமுதலிய மதிகேடுகளையெல்லாம் மறந்துவிட்டேன்" என்பதே.

அப்புறம் இலத்திமர் என்பவர் முன் வேதசத்தியத்துக்கு விரோதமாய் எவ்வளவு வைராக்கியம் பாராட்டி வந்தாரோ, இப்பொழுது அச்சத்தியத்துக்காக அவ்வளவு வைராக்கியம் பாராட்டுகிறவராஞர். தமது சொந்த இராட்சிப்புக்குரிய விஷயத்தில் அது இவ்விய பலமுள்ளதென்று அனுபவத்தினால் கண்டுகொண்டாரே. ஆதலால் முன் தப்பறையைப் பிரசித்தப்படுத்தின இடத்தில் இப்பொழுது சத்தியத்தைக் குறித்துச் சாட்சி பகர ஆவலுள்ளவராஞர். கேம்பிரிஜ் சர்வகலாசாலையில் அவருடைய பிரசங்கத்தினாலுண்டான எழுப்புதல் கொஞ்சமல்ல. அக்காலத்திலிருந்த ஒருவர் அவரது பிரசங்க சாதுரியத்தைக் குறித்து அடியில் வருமாறு சாட்சியிட்டிருக்கிறார். "இங்கிலாந்திலாகிலும் உலகத்திலுள்ள வேறெந்தத் தேசத்திலாகிலும், லத்திமர் என்பவரைப் பார்க்க அதிக உண்மையாயும் சுத்தமாயும் தெளிவாயும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்கள் எவர்களாவது உண்டோ? அவர் பிரசங்கிக்கிற தாடை எப்படியென்றால், மோசேயின் நியாயப்பிரமாணத்தை அதின் எல்லாப் பயங்கரங்களோடும் சனங்களுக்கு முன்பாக நிறுத்தி, அதைக்கொண்டு அவர்கள் பாவத்துக்கு அஞ்சவும் தம் சுய புண்ணியத்தில் நம்பிக்கை வைக்காமலும் பண்ணி, அவ்வாறு கிறிஸ்துநாதரிடத்துக்கு நடத்தி மெய்விசுவாசத்தினாலே அவரைத் தழுவிக்கொள்ளும்படி செய்வார். மேலும் கிறிஸ்துநாதர் இரட்சிப்பின் அதிபதியென்றும், தாம் ஒரே விசை செலுத்தின பிராயச்சித்தத்தினாலே தம்மை விசுவாசிக்கிற சகலரையும் பரிசுத்தமாக்குகிறாரென்றும், தாவீதின் திறவுகோல் அவருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் அவர் ஒருவரும் அடைக்கக்கூடாதபடி திறக்கிறவராயும் ஒருவரும் திறக்கக் கூடாதபடி அடைக்கிறவராயும் இருக்கிறாரென்றும் போதிப்பார். தேவன் தமது ஏகசுதனிடத்தில் விசுவாசமாகிற யாவரும் கெட்டுப்போகாமல் நித்தியசீவனை அடையும்பொருட்டு மரணத்துக்கு அவரை ஒப்புக்கொடுத்து இவ்வளவாய் உலகத்தாரிடத்தில் அன்புகூர்ந்தாரென்றும், அவரே நம்முடைய பாவத்தை நிவிர்த்திசெய்கிற திருபாதாரப் பலியென்றும், ஆகையால் அவர்பேரிலேயே நமது நம்பிக்கையையெல்லாம் வைக்கவேண்டுமென்றும், அவரால் நீதிமான்களாக்கப்படுகிற பாவிகள் ஒருபொழுதும் கெட்டுப்போகமாட்டார்களென்றும் அவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவர்கள் வெட்கப்படமாட்டார்களென்றும் காண்பிப்பார். அவருடைய பிரசங்கங்கள் இப்பேர்ப்பட்ட ஆவிக்குரிய மேலான சத்தியங்கள் அடங்கியவைகள். இக்காலத்து விரத்தர் சன்னியாசிகள் குருக்கள்மார் முதலியவர்கள் பண்ணுகிற சாரமும் பிரயோச

னமுமற்ற பிரசங்கங்களுக்கு இவைகள் எவ்வளவோ வித்தியாசமானவைகள்" என்று குறிப்பித்திருக்கிறார்.

இவ்வாறு இலத்திமர் மூன்று வருஷக்காலமாய் கேம்பிரிஜ் சர்வகலாசாலையில் பிரசங்கித்துக்கொண்டு வந்தார். சத்தியத்துக்காக இவ்வளவு வைராக்கியம் பாராட்டின அவர் அந்நாட்களில் தன்பத்துக்குத் தப்புவானென்று நினைக்க இடமுண்டோ? அப்படியே அநேகர் அவருக்கு விரோதிகளாய் எழும்பினதாகக் காண்கிறோம். கி. பி. 1529 ம் இந்த கடைசியில் அக்காலத்து வழக்கப்படி சிட்டுவினையாவெதைப்பற்றி அவர் ஒரு பிரசங்கஞ்செய்து, அதிற் பிரயோகிக்கிற சொற்களைக்கொண்டு, தேவனே மனுஷருடைய பாரம்பரைகளினாலுஞ் சடங்காசாரங்களினாலுமல்ல, இருதய உண்மையினாலே தொழுதுகொள்ளவேண்டுமென்று காண்பித்தாராம். அதன்பேரில் டாக்ற்றர் பக்கிங்கம் என்ற ஒருவன் மிகுதியும் விசனங்கொண்டு, பிரசங்கப்பீடத்திலிருந்தே மேற்படி பிரசங்கத்தை நிராகரிக்கிறதற்கு ஏற்பட்டான். அவனும் சில வினையாட்டுகளில் வழங்கிய சொற்களைக்கொண்டு, வேதாகமத்தை இங்கிலிஷ்ப் பாஷையில் திருப்புவதினாலுண்டாகும் கெடுதிகளைக் காண்பிக்க விரும்பி, படியாதவர்கள் புதியஏற்பாட்டை எழுத்துப்படி வியார்த்திபண்ணப் பார்த்து "உன் கண் உன்னைக் கெடுக்க வதுவாயிருந்தால் அதைப் பிடுங்கி எறிந்துபோடு" என்னும் வசனத்தைக் கேட்கையில் தங்களைக் குருடாக்கிக்கொண்டு உலகத்தை அந்தகர்களால் நிரப்பிவிடுவார்களே என்று நியாயம்பேசினான். இலத்திமர் இதைக் கண்டியாமல் விடவில்லை. எப்படியென்றால் சர்வகலாசாலை மாணாக்கர்களும் நகரவாசிகளும் கோவில் நிறையக் கூடிவந்திருந்த சமையத்தில் அவர் பிரசங்கப் பீடத்தில் நின்றுகொண்டு, பக்கிங்கம் காட்டின நியாயங்களை ஒவ்வொன்றாய் எடுத்தச்சொல்லி, அவைகள் எவ்வளவு மதியீனமான வைகளென்று மகா சாமர்த்தியமாய்க் காண்பித்தார். உபமானப்பேச்சு எல்லாத் தேசத்தாருக்கும் நன்றாய்த் தெரியும் என்று சொல்லி, சன்னியாசி உபோபோடி தமக்கு எதிரே உட்கார்ந்திருந்த பக்கிங்கம் என்பவனைக் கூர்மையாய்ப் பார்த்து, சன்னியாசி வேஷம் பூண்டு பிரசங்கம் பண்ணின சமயப்பற்றிப் பேசினால் பிரசங்கம்பண்ணினது நிதானென்று ஒருவரும் நினையார்களே, சன்னியாசி வேஷந் தரித்தவர்களைக் குடிகொண்டிருக்கும் மாய்மாலம் வஞ்சகம் தந்திரமுதலியவைகளைக் காண்பித்து அவைகளுக்கு நாம் எச்சரிக்கையாயிருக்கும்படி புத்தி சொல்லுகிற மேலையென்று எல்லாரும் உணர்ந்துகொள்வார்களே என்றார். அதுமுதல் மேற்படி பக்கிங்கம் என்பவன் அவருக்கு விரோதமாய்ப் பிரசங்கிக்கத் துணியவேயில்லை.

மகா கனம்பொருந்திய கால்டுவல் கன்காணியாரவர்கள் தூதனமாய் ஏற்றுக்கொண்ட தேசாந்திர பிரசங்க வேலையைப்பற்றி சென்ற பெபுருவரி மாசத்தில் எழுதிய ஜர்னலில் தம்மை ஆழ்வார் திருநெல்வேலியில் அல்லது அவர்கள் சொல்லியிருக்கிறபடி, ஆழ்வார் திருநகரியில் ஜனங்கள் ஏற்றுக்கொண்ட வகையைப்பற்றிச் சொல்லியது மிகவும் சந்தோஷிக்கப்படத்தக்க விஷயமாயிருக்கிறது.

பட்டணத்திலுள்ள கனவான்களெல்லாரும் ஆசையோடு கூடி தங்கள் கோவிலிலுள்ள யாதே மேளவாத்தியம் எடுபிடி, சண்டா சருட்டிமுதலிய விருதுக்கொடிகளோடு கன்காணியாரவர்களைச் சந்திக்க எதிர்கொண்டுவந்தார்கள். பின்பு அவர்கள் தங்கள் பெரிய கோ

வில் கிறிஸ்தமார்க்கப் போதகத்தைக் கேட்க ஆவலோடு கூடினார்கள். கூடினவர்களின் தொகை 500க்குமேல் 600 வரையும் இருந்ததாம். கடைசியாய் அவர்கள் அவ்விடத்தில் பிரசங்கம்பண்ணின காளில் கணம்பொருந்திய ரிவிங்ற்றன் ஐயரவர்கள் (Rev. Rivington) இங்கிலிஷில் பிரசங்கம்பண்ணினார்கள். அது ஞானமுத்து ஐயரவர்களால் தமிழ் திருப்பிச் சொல்லப்பட்டது. அப்போது கூடியிருந்த பிராமணர் மற்ற மேல்குலத்தோர் தொகை 1000க்கு அதிகமாம். கிறிஸ்தவர்களும் 200 பேர்வரையும் இருந்தார்களாம்.

மகா கணம்பொருந்திய கண்காணியாரவர்கள் அப்பேர்ப்பட்ட மாட்சிமையான காட்சியை இதுவரையும் பார்த்திருப்பதில்லையென்றும் ஒருவேளை இந்தியாவிலேயே இப்பேர்ப்பட்ட காட்சி உண்டாயிருந்திருக்கமாட்டாதென்றும் சொல்லுகிறார்கள். எல்லாரும் மிகுந்த ஆவலாய்க் கருத்தோடு கேட்டார்கள்.

கண்காணியாரவர்களே முதல்முதல் பட்டினத்திற்குள் வரும்படி அழைத்த 10 அல்லது 13 வாலிப வெள்ளாளப் பிள்ளைமார் தாங்கள் பூசிவந்த விபூதியை அழித்துவிட்டதன்றி கிறிஸ்துமார்க்கத்தில் சேர ஆவல்கொண்டவர்களைபோலும் காணப்பட்டார்கள்.

P. S.

உருஷியாவுக்கும் துர்க்கைக்கும் யுத்தம் ஆரம்பித்துவிட்டதென்று மனஸ்தாபத்தோடு சொல்லுகிறோம். நாம் இதை எழுதுங்காலத்தில் கார்ஸ்பட்டணத்திற்கு முன்பாகச் சண்டை நடக்கிறது. கருங்கடலின் தென்மேற்கில் கொனஸ்தந்தினோபுரியும் தென்கிழக்கில் கார்ஸ்பட்டணமுமிருக்கின்றன. உருஷியருடைய சேனைகள் சற்றேறக்குறைய 5 லக்ஷமாம். சென்னைபட்டணத்திலிருக்குந் துர்க்கிய குருக்கள் தங்கள் சுல்த்தானுக்குப் பொருளுதவிசெய்யும்படியாகத் துர்க்கியருடைய வீடுவீடாகப் போய் யாசகங் கேட்பதன்றி, சென்னபட்டணத்திலுள்ள துர்க்கியர் ஏழைகளாயிருப்பதாகச் சொல்லித் தங்கள் நோக்கத்திற்குதவிசெய்யும்படியாகக் கவர்னர் தனையவர்களையும் மற்ற ஐரோப்பிய தனமானையுங் கேட்கிறார்கள்.

உவல்ற்றன், ஓலியரி என்ற இருவருடைய நடைப்பந்தையத்தைப்பற்றிய சமாசாரமொன்று சீமையிலிருந்து வந்தது. அதில் யாவரும் அதிசயிக்கும்படி ஓலியரி 6 நாளைக்குள் 520 மயில் அல்லது நாளொன்றுக்கு 86 மயிலுக்கு அதிகமாய் 6 நாள் நடந்து ஜெயித்துக்கொண்டார்.

தென் இந்தியாவின் மேல்காத் மலைகளுக்கு மேற்கிலிருக்கிற திருவனந்தபுரம், கொச்சி, என்ற நாடுகளில் இந்தியாவின் மற்ற எப்பகுதிகளிலுமிருக்கிற கிறிஸ்தவர்களைவிட அதிகமான பேர் இருக்கிறார்கள்.

எப்படியெனில்,

சீரிய கிறிஸ்தவர்களின் தொகை	3 லக்ஷம்.
ரோமானித்தர்	1 லக்ஷம்.
புரோட்டெஸ்டாண்டு கிறிஸ்தவர்கள்	50ஆ.

CORRESPONDENCE.

நிருபங்கள்.

சுவிசேஷத்தினிமித்தம் தனக்குண்டான சோதனைகளைப்பற்றி, மூன் சுடலைமாடனென்னும் பேயாடியாயிருந்த, வில்லூனி காடானென்கிற ஒருவரைமுழுக்கிய சங்கதியானது, மற்றவர்களையும் இது விஷயத்தில் உறுதியாயிருக்கும்படி எழுப்பிவிடக்கூடியதாயிருக்குமென்றெண்ணி அதை இங்ஙனம் பிரசுரப்படுத்துகிறோம். அவர் எழுதினபடியே அச்சடித்திருக்கிறோம்.

"நான் என் சிறு பிராயமுதல் கிறிஸ்தமார்க்கப் பள்ளிக்கூடத்தில் படித்து கிறிஸ்தமார்க்க அறிவைக் கொஞ்சம் அறிந்தவனுயிருந்ததினால் பல அஞ்ஞானப் புராணங்களையும் மற்ற மார்க்கங்களையும் நான் கூடியவரையில் ஆராய்ந்துபார்த்த வந்ததின்பேரில் இவைகளில் ஆத்தும இரட்சிப்புக்கு ஏற்ற யாதொரு அனுகூலங்களுமில்லையென்று கண்டு கிறிஸ்தமார்க்கமே இரட்சிப்பின் மார்க்கமென்று அறிந்து என் ஆத்தமதாதரிடத்தில் வரவேண்டுமென்றிருக்கிறபோது நான் வேம்பாடம்பொடி வியாபாரமாய் திருநெல்வேலியில் வந்திருக்கிறபோது, 1877ஆம் மார்ச்சுமீ 29உ கணம்பொருந்திய ஆசீர்வாதம் ஐயரவர்களால் எனக்காக வைத்த முதற் செபக்கூட்டத்தில் நான் சேர்ந்து கிறிஸ்துவின் பிள்ளையானேன். நான் கிறிஸ்தமார்க்கத்திற்கு வந்தேனென்று என்னைப் பெற்று வளர்த்த மாதாபிதாக்களும், சகோதரர்களும், மற்றும் என் இன்பெந்துக்களும், என் சிநேகிதர்களும் அதுமுதல் என்னைப் பழைய அஞ்ஞானத்தில் தங்களுடன் எந்தவிதமும் இழுத்துக்கொள்ளவேண்டுமென்று நயமும் பயமுமான தங்களாலான பிரயத்தனங்கள் செய்துவருகிறார்கள். இப்படியிருந்தும் நான் தெய்வத்தை மறக்கவில்லை. நாளது ஏப்பிரில்மீ 22உ இரவில் 19 வயதுள்ள என் சகோதரன் விஷபேதியெடுத்து 23உ பகல் 12 மணி முதல் மரணமடைகிறஇரண்டு மணிவரையிலும் அவன் பட்ட அவதியோடு அவன் சொன்னசொற்களாவது.

"என்னுடைய தமயனார் கிறிஸ்தமார்க்கத்துக்குப் போனதால் நான் சாகிறேன் என்றும், அவர் தம்முடைய கையினுலே தம்முடைய குலதெய்வமாகிய சுடலைமாடனுக்குப் பிராத்தனைசெய்து விபூதி எனக்குப் பூசினுல் எனக்குச் சொந்தமாகுமென்றும், அவன் தன்கைகுவித்துக் கும்பிட்டுச் சொல்லுகிற சமயத்தில் என் இனபெந்துக்களும் இவ் ஊரிலுள்ள பாரிக்குடித்தனக்காரர்களும் என் மாதாபிதாக்களும் அவன் சொற்படி விபூதி போடுமென்று சாம்பலைக்கொண்டுவந்து என்னைக் கைபிடித்து நலவு சொன்னார்கள். அப்போது மரண அவஸ்தைப்படுகிறமேற்படி என் சகோதரன் சொன்ன பரதாபம், ஐயோ! நான் என்னசெய்வேன். பிசாசுக்கள் வந்து என் நெஞ்சிற் குத்துகிறதே, என் குறுக்கைக் கண்ட கோடரியால் தறிக்கிறதே, தாங்கக்கூடுதில்லையே. இப்போது என் தமயனார் விபூதிபோட்டால் பிசாசுக்கள் போய்விடும் நான் பிழைத்துக்கொள்வேனென்று சொன்னான். உடனே என் மாதாவும் பார்க்கவந்திருந்த சிலரும் இப்போதாகிலும் விபூதி போடு, போடென்று கொஞ்சம்போடு சொல்லி வற்புறுத்தினார்கள். நான் கிறிஸ்தமார்க்கத்துக்குப் போனதினுல் இவனுக்கு இவ்வாபத்து வந்தது

கச் சொல்லுகிறீர்களே, அப்படியானால் அப்பசாசு என்னை அல்லோ கொல்லவேண்டும். இவனுக்கு இப்படி வரவேண்டியதென்ன, நீங்கள் பலவகையாய் இப்போது அப்பசாசுக்களுக்கு பிரார்த்தனைசெய்திருக்கிறீர்களே உங்களுக்கு அப்பசாசு சகாயம் செய்யமாட்டாதா. ஆகையால் பசாசுக்களால் கொல்லவும் வெல்லவுங் கூடாது, பசாசுக்கள் தன்னைத் தன்பப்படுத்துகிறதாகச் சொல்லுகிறானே, நீங்கள் சற்றே அமைதலாயிருங்கள் நான் செபத்தால் பசாசுக்களைத் துரத்துகிறேன் என்றேன். ஆனால் அவர்கள் அமரவில்லை. இப்படிச் சம்பாஷணை நடக்கிற வேளை தெய்தி பகல் 2 மணியில் மரணமடைந்தான்.

... ...

இதை வாசிக்கிற எவர்களும் எனக்காக கர்த்தரைநோக்கி செபஞ்செய்ய அன்பாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"சரிகைத் தலைப்பாகை."

தேவநாயகம் என்பவன் ஒரு கிறிஸ்தவ முனிஷியாயிருந்தான். முதலில் அவன் அஞ்ஞானியாயிருந்து முனிஷிவேலை செய்துவந்தான். ஆனால் அவன் படிப்பித்து வந்த துரையானவர் அவனுக்கு ஒரு வேத புஸ்தகத்தைக் கொடுத்து அதை வாசிக்கும்படி கேட்டுக்கொண்டார். அப்படியே அவன் அதை வாசிக்க வாசிக்க அவன் மனதில் தெளிவுண்டாயிற்று. அவன் மெய்யான தேவனை விசுவாசித்தான். கடைசியாக அவன் தன் விசுவாசத்தை அடக்கிக்கொள்ளக்கூடாமல் தான் கிறிஸ்தவன் என்று அறிக்கையிட்டு ஞானஸ்நானம் பெற்றான். பெரு மழைபோன்ற பலத்த சோதனைகள் அவனுக்கு நேரிட்டன. அவன் பிள்ளைகள் தண்ணீர் மொண்டுகொள்ளும்படி ஊர்க்கிணற்றுக்குப் போகும்பொழுது அவர்கள் நான ஜாதி என்று அவர்களைத் தொடமாட்டார்கள். அவனுடைய பழைய சிநேகிதர்கள் அவன் வீட்டுக்கு வரமாட்டோம் என்றார்கள். பிராமணர் அவனைச் சினத்தோடே பார்த்தார்கள், என்றாலும் தேவநாயகம், சிப்பியானது கற்பாறையோடு எப்படி ஒட்டிக்கொள்ளுகிறதோ அப்படி அவன் தன் ரட்சகரைப் பற்றிக்கொண்டான். தன்பமான அலைகள் அவனை அசைக்கக்கூடாமல் இருந்தன. இதெல்லாம் நடந்து ஒரு வருஷத்துக்கதிகமாயிற்று. கார்மேகம் நீங்க நீல ஆகாயம் தோன்றி சூரியன் பிரகாசிக்கும் வண்ணம், அந்தக் கிறிஸ்தவ முனிஷியுடைய காரியமும் இருந்தது. அவனை விரோதித்த மனிதர்கள் அவனுடைய மனைவிடத்தை அசைக்கக்கூடாதென்று கண்டார்கள். அவன் பணத்தினிமித்தம் அல்லது அதிகாரிகளின் தயவைப் பெற்றுக்கொள்ளுதலினிமித்தமல்ல, சத்திய மார்க்கத்தினிமித்தமே எல்லாவற்றையும் வெறுத்துத் தள்ளிவிட்டான் என்று அவர்கள் கண்டு அவனை உதாசினமாய்ப் பேசுவதை நிறுத்திவிட்டதுமன்றி அவனை மதிக்கும்படியாகவும் தொடங்கினார்கள். தேவநாயகத்திற்குப் பூரண

சந்தோஷத்தையுண்டாக்கத்தக்க வேறொரு காரியம் நேரிட்டது. அதென்னவெனில் தன் மகளுக்கு அப்பாவு என்ற நாமதேயமுடைய ஒரு கிறிஸ்தவ மாப்பிள்ளையைக் கண்டுபிடித்தான். தன் மகள் கலியாணம் முடியுமட்டும் கிறிஸ்து ரட்சகரை அறிக்கைபண்ணுமல் இருக்கலாமே என்பதைப்பற்றி அவனுக்கு சோதனை நேரிட்டது. ஆயினும் அவன் தன் காரியங்களை எல்லாம் பக்திவிசுவாசத்துடன் தேவனுடைய கையிலே ஒப்புவித்து அவரை அறிக்கைபண்ணவேண்டியது அவசியம் என்று சொல்லுகிற தேவகற்பனைக்குக் கீழடங்கினான். அதினாலே தேவன் அவனுக்குப் பலனளித்தார். அவன் மனதின்படியே அவன் மகளுக்குத் தகுந்த மாப்பிள்ளை வந்தான். அவன் கோர்ட்டு துபாஷியாயும், தேவபக்தியுள்ளவனுயும், தனவந்தனுயும் இருந்தான். கலியாணத்தைக்குறித்த காரியங்களையெல்லாம் பேசி ஒரு நாளைக் குறித்துக்கொண்டார்கள். இதினாலே தேவநாயகத்தினுடைய மனதிலும் வீட்டிலும் பெருஞ் சந்தோஷம் உண்டாயிருந்தது. அவன் ஒரு சமயத்தில் தன் மனைவியைப் பார்த்து, "மரியாளே! என் பிராண நாயகியே! கலியாணத்தைச் சிறப்பாய் நடத்தவேண்டுமே" என்றான். அதற்கு அவள், "ஆம், ஆம், நம்முடைய மகள் தன் கணவனுக்கு ஏற்ற மனைவியாயிருக்கவேண்டும். அவளை சிறந்த பட்டு வஸ்திரங்களாலும் நம்முடைய அயலகத்தார் அதேகநாளாய்ப் பார்த்திராத முத்துமாலை நவரத்தினமிழைத்த மணிகள் முதலிய ஆபரணங்களாலும் அலங்கரிக்கவேண்டும். பின்பு அவன் தன் இளைய மகனை அழைத்து அவனை முத்தியிட்டு, அப்பா, என் அருமை மகனே உனக்கு என்ன வேண்டும் என்றான். அதற்கு அவன் எனக்கு ஒரு சரிகைத் தலைப்பாகையும் சிவப்புச்சோடும் வேண்டும், அதை வாங்கித்தரவேண்டும் அய்யா என்றான். நல்லது என்று தகப்பன் சொல்ல யோசேப்பு சந்தோஷம் பொறுக்கக்கூடாமல் கைகொட்டினான். மகன் இப்படிச் சந்தோஷங் கொண்டாடினபோது தகப்பன் சிறிது நேரம் துக்கமும் கவலையும் உள்ளவனுய்க் காணப்பட்டான். அப்போது அவன் மனைவியாகிய மரியாள் அவன் மனதில் உண்டான யோசனையை யறிந்து சொல்லுகிறாள்,—ஆம் பணம் இருந்தால் எல்லாம் வாங்கலாம். "வெறுங் கை முழமிடுமா." நான் கடன் வாங்கவேண்டும், வேறே கெதி இல்லையே, என்றாலும் ஒரு வருஷ சம்பளம் குறையாமல் கடன்படவேண்டுமென்று யோசித்து தேவநாயகம் விசாரமுற்றிருந்தான். விசாரமுற்று நான் எங்கேபோய் கேட்கலாம் என: இராமசுவாமி செட்டியாரிடத்தில் போகலாம் என்று மனைவி சொன்னாள். இல்லை, இல்லை. அவன் கல்லிலிருந்து சாரம் எடுக்கிறவன், அதியாய வட்டி வாங்குவான் என்றான். அப்போ முத்தைய பிள்ளையிடத்தில் போகலாம் என்றாள். அவரிடத்தில் நான் பத்து ரூபாய் கடன்பட்டாச்சுது, ஆகையால் மறுபடியும் அவரிடத்திற்குப் போகக்கூடாது. என் எஜமான் ஒரு தர்மதுரை, அவ

ருக்கு என்பேரில் அதிகப் பிரீதி, அவர் கலக்ட்டர் உத்தியோகஞ்செய்த மாசம் ஒன்றுக்கு 800 ரூபாய் சம்பளம் வாங்குகிறார். எனக்கு 300 ரூபாய் கடன்கொடுப்பது அவருக்குப் பெரிய காரியமல்லவே, உடனே, இன்று காலையில் தானே அவரிடத்திற்குப் போவேன் என்றான். நீர் போய்விட்டு வரும்போது எனக்குச் சரிகைத் தலைப்பாகையைக் கொண்டுவருவீரா என்று யோசேப்பு என்ற சிறுவன் சத்தமிட்டுச் சொன்னான். நல்லது பிள்ளையே என்று தேவநாயகம் சிரித்த முகமாய்ச் சொல்லி தன் தலைப்பாகையைப் போட்டுக்கொண்டு யோசேப்பை முத்தியிட்டு சிரித்த முகத்துடன் தன் மனைவியைப் பார்த்து செலவு பெற்றுப்போனான். அவன் தன் வழியே போகும்போது தான் பார்க்கவேண்டுமென்றிருந்த தலையைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டுபோனான். அவரைப் பற்றிய ஒரு காரியம் மாத்திரம் எப்போதும் அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது. அவர் கலக்ட்டர் உத்தியோகம் செய்கிறவராயிருந்தும் மற்ற கலக்ட்டர் தோரணைப்போல அவர் இருக்கவில்லை. அவருக்கொரு குதிரையிருந்தது மெய்தான், ஆனால் அந்த ஒரு குதிரைக்குமேல் வேறொன்றுமில்லை. அதுவும் அவ்வளவு சேர்த்தியானதல்ல, அதிகக் கேவலமானதுதான். பிராந்தாக்களுக்குப் புல் தட்டிகளாவது சன்னல்களுக்கு வாசனையுள்ள வெட்டிவேர்த் தட்டிகள், அவைகளுக்கு இரவும் பகலும் தண்ணீர் தெளிக்கக் கூலியாளாவது, பளபளப்பான பில்லிகளைப் போட்டுக்கொண்டு சேர்த்தியான வஸ்திரம் தரித்துக்கொண்டு வாசலில் காத்திருக்கும் சேவகர்களாவது இல்லை. அவருக்கு சர்க்கார் கொடுத்திருந்த சேவகர்களைத் தவிர வேறொருவருமில்லை. அவர்களும் பழைய வஸ்திரம் தரித்து அலக்ஷணமாய்க் காணப்பட்டார்கள். அந்தப் பங்களாவில் இழுத்த பாய்களேயன்றி நல்ல பாய்கள் இடையாது. போதுமான மேஜைகளும் நாற்காலிகளுமில்லை. கம்முடைய தாயின் காரியம், இவ்வளவு கேவலத்திலிருப்பானேன் என்று தேவநாயகம் தனக்குள்ளே சொல்லிக்கொண்டான். "பூமியிலே உங்களுக்காகப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம்" என்று சத்தியவேதத்தில் சொல்லியிருக்க இதற்கு மாறுக நமது நல்ல தாயாகன் பணத்தைச் சேர்த்துவைக்கிறாரே, இது ஆச்சரியம் என்று தனக்குள் இப்படி அவன் யோசித்துக்கொண்டே பங்களாவுக்கு வந்த தாயிருந்த ஆபீசுக்குள் சென்று அவருக்கெதிரில் நின்றான்.

(இன்னும் வரும்.)

Notes on Leviticus.

லேவியராகம வியாக்கியானம்.

கூ. அதிகாரம்.

ஆரோன் செலுத்தின பலிகள்.

திரு அக்கினி.

1. "எட்டாம்நாளிலே" ஆரோனும் அவன் குமாரரும் ஆசாரியராய் அபிஷேகம்பெற ஆரம்பித்ததுமுதல் எட்டாம் நாள்.

2—4. குற்றநிவாரணபலி ஒன்று தவிர மற்றப் பலிகளாகிய பாவநிவாரணபலி, சர்வாங்கதகன பலி, சமாதான பலி, போசன பலி ஆகிய இவைகள் எல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. குற்றநிவாரண பலி இந்தச் சமயத்துக்கு வேண்டியதாயிருந்ததில்லை.

15. "பின்பு அவன்". இப்பொழுது ஆரோன் சனங்களுக்கு ஆசாரிய ஊழியஞ்செய்யும்படி தகுதியுள்ளவனாக எண்ணப்பட்டான்.

"பாவநிவாரண பலியாக்கி." அதாவது பாவத்தை அதின்மேல் சாட்டிவிட்டு அல்லது பாவத்தை அதின்மேல் சுமத்திப்போட்டு என்றர்த்தம். இதிலிருந்துதான் "அவரை நமக்காகப் பாவமாக்கினார்" என்ற வாசகம் வந்தது. 2 கொ. 5: 21.

23. "இறங்கினான்." பலிபீடம் மேடான இடத்திலிருந்ததென்று தோன்றும்.

"மகிமை" இப்பொழுது நடந்த ஊழியத்தை எகோவா அங்கிகரித்ததற்கு அடையாளமாக மேகஸ்தம்பத்திலிருந்து தமது மகிமையை ஜோதியாய் விளங்கச்செய்தார்.

24. மேற்காட்டியபடி ஆசரிப்புக்கூடாரத்திலும் பலிபீடத்திலும் செலுத்தப்பட்ட ஆராதனைகளை எகோவா அங்கிகரித்ததற்கு அத்தாட்சியாக இது நடந்தது. பிற்காலத்தில் மாளிகை தேவாலயம் கட்டப்பட்டு பிரதிஷ்டையானபோது இந்தக் காட்சியே மறுபடியும் புதுப்பிக்கப்பட்டது. 2 காளா. 7: 1. இப்படி எகோவாவின் சன்னிதியிலிருந்து புறப்பட்ட அக்கினியை ஒருக்காலும் அவியாதபடிக்கும், (6: 12.) இதை அல்லாமல் வழக்கமான வேறே அக்கினியினாலே பலியையாவது தூபவர்க்கத்தையாவது தகனியாதபடிக்கும் ஆசாரியர் கண்டிப்பாய்க் கட்டளையிடப்பட்டார்கள். (10: 1.)

படிப்பினை.

மற்றவர்களுக்குத் தெய்வ பணிவிடைசெய்ய ஏற்படுகிறவர்கள், முதலாவது தங்கள் சொந்த ஆத்துமாக்களைக்குறித்துக் கவலைப்படவேண்டும். மற்றவர்களுக்குச் செய்கிற பணிவிடை தங்கள் சொந்த ஆத்துமாக்களுக்குச் செய்கிற பணிவிடைக்கு இடையூறுயிராதபடிக்கும் கவலையாய்ப் பார்த்துக்கொள்ளவும் வேண்டும். 2, 7. தேவனுக்கு நாம் செலுத்தும் சிரேஷ்டமான எந்த ஆராதனையும்கூட கிறிஸ்துவின் இரத்தத்தால் சுத்திகரிக்கப்படவேண்டும். கிறிஸ்து தமது சனங்களை ஆசீர்வதிக்கிறார். ஆனால் நாம் உலகத்திலிருக்குமட்டும் அவருடைய ஆசீர்வாதம் நமது ஆத்துமத்திலும் இன்மேற்பட வெளிப்படையாய் சரீரத்திலுங்கூட விளங்கும். 22.—ஆரோன் எத்தனையோ பலிகளைச் செலுத்தினான். கிறிஸ்து தமது ஒரே பலியினாலே பூரணப்படுத்தியிருக்கிறார். நாம் இந்தப் பலியின் மாட்சிமையை உற்றுக் கவனிக்கவேண்டும். நாம் தேவனுக்குச் சுகந்தவாசனையான பலியாகவேண்டுமானால், தேவஆவியாகிய திருஅக்கினியால் நமது கெட்ட ஆசாபாசங்கள் தகனமாகவேண்டும், 24.

ஜூன்மீ நாள் 30. வைகாசிமீ 21டமுதல், ஆனிமீ 18டவரை.

வாரம்.	இங்கிலீஷ் தேதி.	தமிழ்த் தேதி.	அன்றுடகத் தியானம்.
செ	1	உக	கர்த்தரை நம்புகிறவன் பாக்கியவான். நீதி. 16: 20.
பு	2	உஉ	சகோதர சிநேகம் நிலைத்திருக்கக் கடவது. எபி. 13: 1.
வி	3	உசு	உன் கிரியைகளை நான் அறிந்திருக்கிறேன். வெளி. 2: 2.
வெ	4	உச	நாளேத்தினத்தைக் குறித்துப் பெருமைபாராட்டாதே. நீதி. 27: 1.
ச	5	உடு	கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக் கடவர்கள். யாக். 1: 19.
ஞா	6	உசு	மனுஷரின் நிந்தனைக்குப் பயப்படாதிருங்கள். ஏசா. 51: 7.
தி	7	ஊ	இருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்.
செ	8	ஊஅ	எனக்கு முன்பாக உம்முடைய வழியைச் செவ்வைப்படுத்தும்.
பு	9	ஊசு	இறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார். மத். 23: 8.
வி	10	ரூ0	கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம். 1யோ
வெ	11	ரூக	நான் உங்களைத் தெரிந்துகொண்டேன். யோ. 15: 16. [8: 18.
ச	12	ரூஉ	தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்யக்கூடாது.
ஞா	13	க	ஐசுவரியமும் கனமும் உம்மாலே வருகிறது. 1 நா. 29: 12.
தி	14	உ	கர்த்தர் உங்களில் அன்புகூர்ந்தார். உபா. 7: 8.
செ	15	ங	தொழுசத்தில் உண்மையுள்ளவனாயிருந்தாய். லூக். 19: 17.
பு	16	ச	அவருடைய அதிசயங்களையெல்லாம் தியானித்துப் பேசுங்கள்.
வி	17	ஞ	பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார். 1பே. 5: 5.
வெ	18	ட	உன் தேவனுடைய கர்த்தர் உன்னோடே இருக்கிறார். உபா. 20: 1.
ச	19	ண	என் ஆடுகள் ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை. யோ. 10: 23.
ஞா	20	த	உங்கள் இருதயங்களில் பொல்லாதவைகளைச் சிந்திக்கிறதென்ன.
தி	21	ந	விசுவாசத்தினாலே வராதயாவும் பாவம். ரோ. 14: 23. [மத். 9: 4.
செ	22	ந0	கர்த்தரை உங்கள் முழு இருதயத்தோடும் சேவியுங்கள். 1சா. 12: 20.
பு	23	நக	ஒருவரையொருவர் கவனிக்கக் கடவோம். எபி. 10: 24.
வி	24	நஉ	சுடர்களைப்போலப் பிரகாசியுங்கள். பிலி. 2: 14. [பா. 1: 81.
வெ	25	நங	உங்கள் தேவனுடைய கர்த்தர் உங்களைச் சுமந்துகொண்டார். உ
ச	26	நச	அன்பை நாடுங்கள். 1 கொரி. 14: 1.
ஞா	27	நடு	கர்த்தருடைய வசனம் புடமிடப்பட்டது. 2 சா. 22: 31.
தி	28	நசு	உன் தேவனுடைய கர்த்தரிடத்தில் திரும்பு. ஓசியா. 14: 1.
செ	29	ஙவ	நீ என்னிடத்தில் அம்பாயிருக்கிறாயா. யோ. 21: 15.
பு	30	ஙஅ	கர்த்தாவே நீரோ என் தேவன். ஏசா. 25: 1.

விசேஷித்த நாட்கள்.

8. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும், முதலாம் ஞாயிறு.
10. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும், இரண்டாம் ஞாயிறு.
11. அமாவாசை.
17. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும், மூன்றாம் ஞாயிறு.
24. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும், நாலாம் ஞாயிறு.
25. பௌர்ணமி.

நற்போதகம்.

எ. சூலிமீ. தூஅஎஎவு.

கொரிந்தியரின் இரண்டாம் நிருபம்.

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்தியருக்கெழுதின இரண்டாம் நிருபத்தில் ஒவ்வொரு அதிகாரத்தின் பேரிலும் நாம் செய்கிற வியாக்கியானத்தில் நிருபத்திலடங்கிய மொத்த விஷயங்களையும் அதாவது, அது எழுதப்பட்ட சம்பந்தம், இடம், காலம், அதின் பிரிவுகள், அதிலிருந்து ஆதி திருச்சபைப் பிதாக்கள் எடுத்துச்சொல்லுகிறவை முதலியவைகளை மாசந்தோறும் ஒவ்வொரு பங்காகச் சொல்வது உத்தமமென்று நினைக்கிறோம். அப்படியே இந்த மாசத்தில் இந்த நிருபம் எழுதப்பட்ட சம்பந்தங்களைப் பார்ப்போமாக.

இந்த நிருபத்தை பவுல் அப்போஸ்தலன் எழுதுங்காலத்துக்குச் சற்றுமுன்னதாக அவர் சின்ன ஆசியாவைவிட்டுப் புறப்பட்டு (2 கொரி. 1: 8.) வருகிறமார்க்கத்தில் தரோவாஸ்பட்டணத்துக்கு வந்து (2-ம் அதி. 12.) அதிலிருந்து கப்பல் யாத்திரையாய் மக்கேதோனியாவுக்குப் போய் (2-ம் அதி. 13 உடன் அப்போஸ்தலர் நடபடி 20: 1, 2 ஐ ஒத்துப் பார்க்க.) அங்கேதானேயிருந்து இதை எழுதினார். (1-ம் அதி. 1; 9-ம் அதி. 2. இந்த வாக்கியம் நிட்டமாய் மொழிபேர்க்கப்பட்டால் "சொல்லி உங்களைப் புகழ்ந்துவருகிறேன்" என்று நிகழ்காலமாய் இருக்கும்.) ஆசியாவிலே சகிக்கக்கூடாத மனவருத்தத்தோடே கூடிய ஏதோ ஓர் வியாதியினால் அவருக்கு ஓர் பெரிய ஆபத்து வந்திருக்கலாம். (2 கொரி. 1: 8, 9.) கொரிந்தியருக்கு அவர் எழுதின முதலாம் நிருபத்தினாலுண்டான பலனைப்பற்றிய செய்தியை தீத்து கொண்டுவருவானென்று அவனை தரோவாஸ்பட்டணத்தில் எதிர்பார்த்திருந்தார். ஆனால் அது தவறிப்போய்விட்டது. (2-ம் அதி. 13.) மக்கேதோனியாவிலே அவர் தீத்துவைச் சந்தித்து தாம் அபேட்சித்தவைகளை அறிந்துகொண்டார். அவைகள் பெரும்பாலும் அநுகூலமானவைகள்தான். ஆனால் முற்றிலுமல்ல. நற்சிந்தையுடையவர்களெல்லாரும் அவருடைய கண்டிப்

பினலே சோடைந்து கீழ்ப்படிந்தார்கள். எதிரிகளோ இன்னும் பகை சாதித்தார்கள்.

I. அதிகாரம்.

1-ம் வா.—தீமோத்தேயு ஒருவேளை கொரிந்துவுக்குப் போய்த் திரும்பிவந்திருக்கலாம். (1 கொரி. 4: 17.)

3-வா.—பவுல் அப்போஸ்தலன் சந்தோஷத்தோடே திருபத்தைத் தொடங்குவதற்கு முகாந்தரத்தை இதில் பார்க்கலாம். 2-ம் அதி. 4 ல் சொல்லியபடி மிகவும் துக்கமாயிருந்த அவர் அவர்களுடைய மனந்திரும்புதலைக் கேட்டு ஆனந்தசந்தோஷமுடையவரானார். (2-ம் அதி. 14.)

5-ம் வா.—நாம் கிறிஸ்துவின் அவயவமாயிருப்பதால் பாடனுபவிக்கிறோம். அவர் நமக்குத் தலையாயிருப்பதால் ஆறுதலடைகிறோம்.

8-ம் வா.—இது எபேசுப்பட்டணத்திலுண்டான அமளியைக் குறியாமல் ஒரு கொடிய வியாதியைக் குறிக்கலாம். அந்த அமளியிலிருந்து அவர் காக்கப்பட்டார்.

11-ம் வா.—ஒருவருக்காக ஒருவர் செய்யும் செபத்தை அப்போஸ்தலன் எவ்வளவாய் மதிக்கிறானென்பதைக் கவனிக்கவும்.

13-ம் வா.—"ஏனென்றால் வேறொன்றையும் நாங்கள் உங்களுக்கெழுதவில்லை." அப்போஸ்தலன் திடச்சித்தம் இல்லாதவனென்றும், உறுதியற்றவனென்றும் பொய்யாகச் சொல்ல விரும்பினவர்கள் அவருடைய வெளியரங்க ஆலோசனைகள் இரகசிய ஆலோசனைகளோடு ஒற்றுமையில்லாமல் விகற்பப்பட்டிருந்ததென்று சொல்லியிருக்கலாம். அதினுல்தான் அவரிடத்திலிருந்து வந்ததாக அவர்கள் ஏற்றுக்கொண்டு வெளியரங்கமாய் வாசித்தவைகளைத்தவிர வேறொன்றும் தாம் எழுதவில்லையென்று சொல்லுகிறார். பவுல் அப்போஸ்தலனுடைய நிருபங்களைப் பொதுவாக வாசித்ததைப்பற்றி 1 தெச. 5: 27 ஐ பார்க்கவும்.

15—24. இந்த வாக்கியங்களில் பவுல் அப்போஸ்தலன் சொல்லியபிரகாரம் அவர்களிடத்திற்கு வராததற்காகத் திடச்சித்தமில்லாதவனென்று தம்பேரில் சாற்றப்பட்ட குற்றத்திற்குக் காட்டிய நியாயங்கள் அடங்கியிருக்கின்றன.

"உங்களுக்கு இரண்டாந்தரமும் பிரயோசனமுண்டாகும்படி". முன் காட்டியிருக்கிறபடிக்கு முதலாவது எபேசிலிருந்து நேராய் கொரிந்துப்பட்டணத்து வழியாய் மக்கேதோனியாவுக்குப் போய் கொரிந்துவுக்குத் திரும்பிவருவது அவர் முதல் யோசனையாயிருந்தது. காற்றினல் அடிக்கப்படுகிற ராணுவப்போல தம்முடைய சொந்த விருப்பத்தின்படி அந்த யோஜனையை மாற்றுமல் கர்த்தருடைய நடத்துதலின்படி நடந்துவந்ததாகச் சொல்லுகிறார். மேலும் அவருடைய நடக்கை எவ்வளவு உறுதியுள்ளதோ அவருடைய உபதேசமும் அவ்வளவு உறுதியுள்ளதாயிருந்ததென்று பின்வருகிற வாக்கியங்களில் சாதிக்கிறார்.

19-ம் வா.—"உங்களுக்குள்ளே பிரசங்கிக்கப்பட்ட தேவகுமாரனுகிய இயேசுக்கிறிஸ்து". பவுல் கிறிஸ்துமார்க்கச் சட்டங்களை முக்கியமாய் எடுத்துக் காட்டாமல் ஏசுக்கிறிஸ்துவையே பிரசங்கிக்கிறார். அவர் தாமே கிறிஸ்துமார்க்கப் பிரசங்கம் முழுவதின் மத்தியும் பொருளுமாயிருக்கிறார். 1 கொரி. 1: 23 ஐயும் 2: 2 ஐயும் பார்க்க. அவர் ஒன்றையும், அவர் கூட்டாளிகள் வேறொன்றையும் பிரசங்கியாததால் அப்போஸ்தலன் அவர்கள் பெயரை எடுத்துக்காட்டுகிறார்.

22-ம் வா.—"கம்மை முத்திரித்து". அப்போஸ்தலனுடைய அற்புதங்களும் அவருடைய பிரயாசத்துக்கு வாய்த்த பலனுமே அந்த முத்திரையாயிருந்தது.

24-ம் வா.—"உங்கள் விசுவாசத்திற்கு நாங்கள் அதிகாரிகளாயிராமல்". அவர்களுடைய சிட்சை கண்டிதம் என்பவைகளின்மேல் மாத்திரம் அப்போஸ்தலனுக்கு அதிகாரமிருந்ததேயொழிய அவர்களுடைய விசுவாசத்துக்கடுத்தவைகளின்மேல் அதிகாரமேயில்லை. விசுவாசத்துக்குரியவைகளில் அப்போஸ்தலனுக்கு முதலாய் அதிகாரம் இல்லை.

Life of Bishop Latimer.

இலத்திமர் கண்காணியார் சரித்திரம்.

(தொடர்ச்சி.)

இலத்திமர் என்பவருக்கு மேற்சொல்லிய பக்கிங்கமேயன்றி மற்றநேகரும் சத்துராதிகளாயெழும்பி, அவரைக் குறித்து வெகுவாய் முறையிட்டு வந்தார்கள். இவர்கள் சொன்ன முறைப்பாடுகள் கடைசியில் ஈலிநகரத்துக் கண்காணியாருக்குப் போயெட்டவே, மேற்படி கண்காணியார் தாமேபோய் அவருடைய பிரசங்கத்தைக் கேட்க வேண்டுமென்று தீர்மானித்து, ஒருநாள் சர்வ கலாசாலையைச் சேர்ந்த ஆலயத்தில் லத்திமர் பிரசங்கம்பண்ணிக்கொண்டு நிற்கையில், ஒருவருக்கும் தெரியாதவிதமாய்த் தம் பரிவாரத்துடன் வந்து சேர்ந்தார். அதன்பேரில் கண்காணியாரும் பரிவாரத்தாரும் உட்காரும்வரையில் இலத்திமர் தம் பிரசங்கத்தை நிறுத்தி, அப்பால் சபையாரைநோக்கி புதிய சபைக்குப் புதிய விஷயம் வேண்டுமாதலால் கண்காணியினுடைய மேலான உத்தியோகத்தை குறித்துப் பேசப்போகிறேனென்று சொல்லி "கிறிஸ்துவானர் வரப்போகிற நன்மைகளுக்குக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டார்" என்ற வாக்கியத்தை யெடுத்துக்கொண்டு, கிறிஸ்துநாதரே கண்காணிமார் யாவருக்கும் சிறந்த மாதிரியென்று தெளிவாய் விளக்கிக்காண்பித்தார். பிரசங்கமுடிந்தவுடனே கண்காணியார் இலத்திமரை அழைப்பித்து, "நீர் பண்ணின சேர்த்தியான பிரசங்கத்துக்காக மிகவும் வந்தனஞ் செய்கிறேன், நான் கேட்கப்போகிற ஒரு காரியமாத்திரம் செய்வீராகில் உம்முடைய பிரசங்கத்தில் நான் கேட்ட அருமையான புத்திமதிகளுக்காக நான் முழங்கா

லில் நின்று உம்முடைய பாதத்தை முத்தஞ் செய்வேன்" என்றார். அதன்பேரில், "நான் செய்யவேண்டுமென்று நீர் விரும்புகிற காரியமென்ன" என்று இலத்திமர் கேட்க, "மார்ட்டின் லூத்தருக்கு விரோதமாகவும் அவனுடைய உபதேசத்துக்கு விரோதமாகவும் நீர் இவ்விடத்தில் எனக்கு முன்பாக பிரசங்கிக்கவேண்டுமென்பதுதான் என் கோரிக்கை" என்றார். அதற்கு இலத்திமர் பிரதியுத்தரமாக, "ஐயா, லூத்தருடைய உபதேசத்தை நான் அறியவுமாட்டேன், அவனுடைய நூல்களை வாசிக்க இங்கே எங்களுக்கு இடமுமில்லை. ஆகையால் அவன் எழுதியிருப்பது இன்னது, அவனுடைய அபிப்பிராயம் இன்னது என்று நான் அறியாதிருக்க அவனுடைய உபதேசத்தைக் கண்டிக்க எத்தனிப்பது வியர்த்தமாயிருக்குமே. இன்று உமக்கு முன்பாக வேதத்திலடங்கிய தேவனுடைய உபதேசத்தைப் பிரசங்கித்தேனேயன்றி எந்த மனுஷனுடைய உபதேசத்தையும் நான் பிரசங்கிக்கவில்லையென்பது நிச்சயம். நான் செய்கிறதுபோலவே லூத்தரும் செய்வானால் அவனைக் கண்டிக்கவேண்டியதில்லையே. ஆனால் அவன் வேதத்துக்கு விரோதமாய்ப் போகிறானென்று தெரியவருமானால், என்னாற் கூடியளவு என்முழு இருதயத்தோடும் அவனுடைய உபதேசத்தைக் கண்டித்து நிராகரிக்க ஆயத்தமாயிருப்பேன்" என்றார். அப்பொழுது கண்காணியார் இலத்திமரைப் பார்த்து, "உம்மிடத்தில் அந்த வாசனை கொஞ்சம் வெளிப்படுகிறது, இதைக் குறித்துத் தக்கப்படும் நாள் வரும்" என்று சொல்லிவிட்டு, அதுமுதல் அவரை விரோதிக்கத் தொடங்கி, சிறிது காலைக்குப் பின் பார்ண்வெல் ஆபேய் என்ற இடத்தில் அவருக்கு விரோதமாய்ப் பிரசங்கித்து, சர்வகலாசாலையைச் சேர்ந்த எந்த ஆலயத்திலும் அவர் பிரசங்கிக்கக்கூடாதென்று கற்பித்தார். ஆகிலும் கிறிஸ்தாதர் கமது சனத்துக்கு முன்பாக திறந்த வாசலைவைக்கும்பொழுது அதைப் பூட்டியாராலேதான் ஆகும். அப்படியே பிற்காலத்தில் இரத்தச் சாக்ஷியாய் மரித்தடாக்டர் பார்ணஸ் என்ற மடாதிபதி கண்காணிமார் அதிகாரத்துக்கு நீங்கலாயிருந்தபடியால், தம்முடைய ஆலயத்தில் பிரசங்கிக்கும்படிக்கு இலத்திமருக்கு அதிகாரப் பத்திரங்கொடுத்தார். அவருடைய சத்துராதிகளும் சும்மாயிருக்கவில்லை. அவர் கள்ளப்போதனைகளைப் போதித்த கேம்பிரிஜி சர்வகலாசாலையிலுள்ள வாலிபர்களை லூத்தருடைய கொள்கைகளைக்கொண்டு கறைப்படுத்துகிறானென்பதுபோல் கார்டினல் உல்சி யென்பவனிடத்தில் அவர்பேரில் குற்றம்பாரித்தார்கள். உல்சியின் கட்டளைப்படி அவர் வந்தபொழுது, உல்சி அவரைநோக்கி, "நீ குழந்தையல்லவே, நல்ல பிராயமுள்ள மனிதனுயிருக்கிறாயே, லூத்தருடைய அனர்த்தமான உபதேசத்தை நீ அனுசரித்திருக்கிறாயென்றும் வாலிபரைக் கறைப்படுத்திக்கொண்டு வருகிறாயென்றும் உன்னைக்குறித்துச் சொல்லப்படுகிறது எப்படி" என்றான். அதற்கு இலத்திமர் பிரதியுத்தரமாக, "உமக்கு அறிவித்தவர்கள் காரியத்தை மாறுபாடாய்ச் சொல்லியிருக்கிறார்கள். ஆதிச்சபையிலுள்ள வேதசாஸ்திரிகளின் நூல்களையும் மத்தியகாலத்து வேதசாஸ்திரிகளின் சித்தாந்தங்களையும் நான் கற்றுத்தெளிந்தவன், அப்படியிருக்க என்னைக்குறித்து இவ்வளவு லேசாய்ச் சொல்லுகிறது சரியோ" என்றார். அதன்பேரில் உல்சி என்பவன் பக்கத்தில் நின்றவர்களைக்கொண்டு வேததர்க்க சாஸ்திரத்தில் அவரிடத்தில் கேள்வி கேட்க, அவர் அதற்கு வெகு திட்டமாய் உத்தரஞ் சொன்னதைக் கண்டு, இப்பேர்ப்பட்டவனைக்குறித்தா எனினிடத்திற் குற்றஞ் சாட்டினீர்கள், வேததர்க்கசாஸ்திரம் முதலியது கற்காத

எவனை மூடனுக்கும் என்று நினைத்திருந்தேன் என்பதுபோல் சொல்லி அவர்களை விசனித்துக்கொண்டு, அப்பால் இலத்திமரைநோக்கி, "ஈலிகரத்துக் கண்காணியாரும் மற்றவர்களும் உன் பிரசங்கங்களை விரோதிக்கிற முகாந்தரமென்ன, உண்மையைச் சொல்லுவாயாகில் சீர்ப்பதுதலின்பேரில் உனக்கு மன்னித்துவிடுவேன்" என்றான். அதற்கு இலத்திமர், "ஈலிகரத்துக் கண்காணியார் என்னை விரோதிக்கிற முகாந்தரம் என்னவெனில், சில நாட்களுக்குமுன் கேம்பிரிஜி சர்வகலாசாலையில் அவருக்குமுன்பாகப் பிரசங்கித்தேன், மேற்படி பிரசங்கத்தில் நான் எடுத்துக்கொண்ட வேதவாக்கியத்துக்கு இசைய கண்காணி உத்தியோகத்தின் தன்மையை என்னாற் கூடிய அளவு திட்டமாய் விளக்கிக்காண்பித்தேன், அதுமுதல் அவர் என்னை விரோதிக்கத்தொடங்கி தம்முடைய கண்காணி ஆட்சிக்குள் மாத்திரமல்ல சர்வகலாசாலையிலும் நான் பிரசங்கிக்கப்படாதென்று கற்பித்திருக்கிறார்" என்றார். உல்சி என்பவன், "அவருக்கு முன்பாக நீ பிரசங்கித்தது இன்னதென்றுசொல்" என்றுகேட்க, இலத்திமர் சமஸ்த இருதயங்களையும் நடத்தி ஆளும் தேவனிடமாய்த் தன்னிருதயத்தை உயர்த்தி, தன்பிரசங்கத்தின் சாரத்தை தெளிவாயெடுத்துச் சொன்னார். அப்பொழுது கார்டினல், "நீ இப்பொழுது விவரித்த உபதேசமேதவிர வேறு உபதேசத்தைப் பிரசங்கிக்கவில்லையா" என்று கேட்டதற்கு, இலத்திமர் "இல்லவே இல்லை" என்றார். அப்பால் இன்னம் இரண்டொரு கேள்விகள் கேட்டதின் பின் கார்டினல், "நீ இப்பொழுது விவரித்த உபதேசதை ஈலிகரத்துக் கண்காணியார் சகிக்கக் கூடாதிருந்தால் நான் உனக்கு அதிகாரப்பத்திரம் தருகிறேன். அவருக்கு வெட்கமுண்டாகப் பிரசங்கிக்கலாம், அவர் என்னசொன்னாலும் சொல்லட்டும்" என்றுசொல்லி, இங்கிலாந்துதேசம் எங்கும் பிரசங்கிக்கிறதற்கு அவருக்குப் பூரண அதிகாரப்பத்திரங்கொடுத்து அவரை அனுப்பிவிட்டான். இலத்திமர் என்பவர் இப்பேர்ப்பட்ட அதிகாரப்பத்திரமும் பெற்றுக்கொண்டு க்ஷேமமாய்த் திரும்பிவந்ததைக் குறித்து சர்வகலாசாலையில் மிகுந்த ஆச்சரியமுண்டாயிற்று. அதற்குச் சிறிதுகாலைக்குள்ளாக கார்டினல் உல்சி என்பவன் தன் அதிகாரத்தையெல்லாம் இழந்துபோனபோதிலும், மேற்படி பத்திரம் வியர்த்தமாகவில்லையாம்.

இராணியைத் தள்ளிவிட்டவிஷயத்தில் இலத்திமரும் இராசாவுக்கு அனுசரணையாயிருந்ததினால் இராச சமுகத்தாரிற் சிலர் இவனைக் கவனிக்கிறதற்கு ஏதுவாயிற்று. தேவனுடைய பிரமாணத்தைத் தள்ளிப்போடுகிறதற்கு பாப்புவுக்கும் அதிகாரமில்லையென்று சாதித்தவர்களில் இவரும் ஒருவர். அதினாலே இராசா தம் சகோதரனுடைய விதவையை விவாகம்செய்தது வேதவிரோதம் என்று கேம்பிரிஜி சர்வகலாசாலைக்காரருடைய தீர்ப்புப்பெறுவதற்கு இவர் செய்த முயற்சி கொஞ்சமல்ல. இந்த விதமாய் இராச சமுகத்திற் சேர்வதற்கு அவருக்கு அவகாசம் உண்டாயிற்று. இவ்வாறு கிடைத்த அனுகூலத்தை மனச்சாக்ஷிக்கேற்க நன்மைக்கேதுவாக உபயோகப்படுத்தினானென்று தோன்றுகிறது.

கி. பி. 1530 ம்ஞூக் கடைசியில், வேதாகமத்தை இங்கிலிஷ்ப் பாஷையில் மொழிபெயர்த்து அச்சிடுவதைக் குறித்து இந்த உத்தமன் இராசாவினிடத்தில் மனுச்செய்கிறதைக் காண்கிறோம். அதற்குக் கொஞ்சகாலத்துக்கு முன் வேதாகமத்தைச் சுதேசபாஷையில் பிரசுரம் செய்வது அவசியமல்ல வென்பதாய் ஒரு விளம்பரஞ் செய்யப்பட்

டது. இந்தத் தீர்மானம் சரியானதல்லவென்று இலத்திமர் என்பவர் உணர்ந்து இராசாவுக்கு அதைக்குறித்து ஒரு விண்ணப்பம் எழுதி, வேதாகமத்தை வாசிக்கிறதற்கு சமஸ்தமான பேர்களுக்கும் பூரண சுயாதீனம் அளிக்கவேண்டுமென்று பிராத்தித்தார். சுவிசேஷத்தின் அருமையையெடுத்துச் சொல்லி, சுவிசேஷமில்லாதவர்கள் உண்மையுள்ள உத்தமகுடிகளாயிருப்பது அபூர்வம் என்று காண்பித்து, அதைப்பிரசுரஞ்செய்வதற்கு உத்தரவு கொடுப்பேனென்று இராசா பண்ணியிருந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுதபடி தாலோசனை சொல்லுகிறவர்களைக் குறித்து அவனை யெச்சரித்ததின்பின் அடியில்வருமாறு விண்ணப்பத்தை முடித்திருக்கிறார். "கிருபையுள்ள இராசாவே உமது ஆத்துமத்தின்பேரில் இரக்கமாயிரும். நீர் உமது உத்தியோகத்தைக் குறித்தும் உமது பட்டையத்தினுல் சிந்தின இரத்தத்தைக் குறித்தும் உத்தரவாதம் செய்யவேண்டிய நாள் சமீபமாயிருக்கிறதென்று நினைத்துக்கொள்ளும். அந்த நாளில் நீர் வெட்கப்படாமல் உறுதியாய் நின்று நல்ல கணக்குக்கொடுக்கவும் கிறிஸ்து இரட்சகருடைய இரத்தத்தின் மூலமாய் உமக்குப் பாவமன்னிப்புக்கிடைக்கவும் வேண்டுமென்று நம்முடைய பாவங்களுக்காக மரித்தவரும் நமக்கு கிருபைபுரியும்படி இடைவிடாமல் பிதாவினிடத்திற் பரிந்து பேசுகிறவருமான அவரை நோக்கி நடோறும் பிராத்தித்துவருகிறேன். அவருக்குச் சகல கனமும் மகிமையும் என்றென்றைக்கும் உண்டாவதாக ஆமென். தேவாவியானவர் உம்மைக் காப்பாற்றுவாராக" என்பதே.

Bible Sketches and their Lessons.

பாலபோதனை.

சுதேசத்துக்குத் திரும்புதல்.

எஸ்றாவின் ஆகமம், 1-ம், 3-ம் அதிகாரங்கள்.

கர்த்தருடைய சனங்கள் தங்கள் பாவங்களினிமித்தம் தூரமான தேசத்திற் சிறைப்பட்டிருந்தார்களே, அவர்களுக்குத் தேவன் பாராட்டின தயவை இப்பொழுது விவரிக்கப்போகிறேன். அவர்கள் சிறைகளாயிருந்தகாலத்தில் தங்கள் பாவங்களைக்குறித்து மிகுதியும் பிரலாபித்துப் புலம்பினார்கள், தேவனைநோக்கிப் பிராத்தித்தார்கள், அஞ்ஞானிகள் அவர்களைப் பரிகாசமும்பண்ணினார்கள். "எங்களைச் சிறைபிடித்தவர்கள் எங்கள் பாடல்களையும் எங்களைப் பாழாக்கினவர்கள் எங்கள் கீதத்தையும் விரும்பி சீயோனின் பாட்டுகளில் சிலதை எங்களுக்குப் பாடுங்களென்று சொன்னார்கள்." ஆனாலும் "கர்த்தரின் பாட்டை அந்திய தேசத்திலே பாட" அவர்களால் கூடவில்லை.

அவர்களுடைய சொந்தத்தேசத்தின் காரியமெப்படி? அவர்கள் எடுபட்டுப்போனதுமுதல் அந்தத் தேசம் பாழானதுபோலிருந்தது. அதின் அழகான கிராமங்கள் அழிந்துபோயின. பயிர் நிலங்களும் திராட்சத்தோட்டங்களும் புல்பூண்டுமுதலிய களையினுல் மூடிப்போயின. கனிமரத் தோட்டங்களையும் விருட்ச வனங்களையும் நரிகளும் காட்டுப் பன்றிகளும் பட்டிமேய்ந்து, அவற்றின் அடைப்புகளைத் தகர்த்

துபிதித்துப்போட்டன. அதேதவிர, எருசலேம் நகரம் பாழாயும், மகத்துவமும் பரிசுத்தமுமான தேவாலயம் மண்மேடாயுமிருந்தன. எரேமியாவின் தீர்க்கத்தரிசனத்தில் ஒரு நேர்த்தியான வசனமிருக்கிறது (எரேமி. 31: 15—17). அதில் வெகுகாலத்துக்குமுன்னே மரித்து அடக்கம்பண்ணப்பட்டிருந்த ஒரு எபிரேயத் தாயானவள் கல்லறையிலும் தன் பிள்ளைகளுக்காகப் பிரலாபித்து அழுகிற பாவனை காட்டியிருக்கிறது. அவாந்தரமும் பாழுமான அவ்விடத்தில், தீர்க்கத்தரிசிக்குத் தக்கமான ஒரு சத்தம் கேட்கிறுப்போலிருக்கிறது. அது என்ன சத்தம்? என் குமாரனுகிய பென்யமீன் எங்கே? அவன் சகோதரனுன யூதா எங்கே? என்று அழுகிற ராகேலின் ஆவியே அது. ராகேலே ஆறுதல்படுத்துகிற வேறொரு சத்தமும் கேட்கிறது. "நீ அழாதபடிக்கு உன் சத்தத்தையடக்கி, நீ கண்ணீரவிடாதபடிக்கு உன் கண்களைக் காத்துக்கொள். அவர்கள் சத்துருவின் தேசத்திலிருந்து திரும்பி வருவார்கள். உன் பிள்ளைகள் தங்கள் தேசத்துக்குத் திரும்பிவருவார்கள்."

அருமையான இந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றவேண்டிய காலம் இப்பொழுது வந்துவிட்டது. யூதர்கள் தங்கள் சொந்ததேசத்துக்குத் திரும்பிப்போகலாம் என்ற நற்செய்தி பாபிலோன் நகரத்திலும் அதைச் சூழ்ந்த சீமையெங்கும் தொனித்தது.

இந்த நற்செய்தி உண்டான விதத்தைப்பற்றி வாசித்தீர்களே. தேவனுடைய தீர்மானங்களும் வாக்குத்தத்தங்களும் எவ்வளவு நிச்சயமானவைகளென்பது இதற்கு முன்னேயே உங்கள் மனதில் பட்டிருக்கும். தம்முடைய சனங்கள் தங்கள் சொந்தத் தேசத்துக்குத் திரும்புவார்கள் என்று தேவன் சொல்லியிருந்தார். இன்ன காலத்தில் திரும்புவார்கள் என்று தம்முடைய மனதில் தீர்மானித்துமிருந்தார். அப்படி நடக்குமென்று தம்முடைய மனதில் தீர்மானித்துமிருந்தார். அவர் தீர்மானித்திருந்த அந்தக் காலம் வந்தபொழுது, விக்கிரகாராதனைக்காரர் எவர்களாலும் அதைத் தடுக்கக்கூடவில்லை. விக்கிரகாராதனைக்காரர் தடுக்கவா! இல்லை, இல்லை. விக்கிரகாராதனைக்காரர்தான் ஷேகாரியம் நடந்தேறும்படி அனுகூலம்பண்ணினார்கள். கோரேஸ் இராசாவும் விக்கிரகங்களை வணங்கினவன்தான். என்றாலும் அவன் உன்னத தேவனுடைய மகத்துவத்தையும் வல்லமையையும் உணர்ந்துகொண்டு அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு மனோற்சாகமாய் ஆயத்தமாயிருந்தான்.

இந்தச் சரித்திரத்தினுல் நாம் கற்றுக்கொள்ளத்தக்க இரண்டாவது படிப்பினையென்னவென்றால், தேவன் மகா இரக்கமுள்ளவராயும் மன்னிக்கிறதற்குத் தயை மிகுத்தவராயுமிருக்கிறார் என்பதுதான். அவருடைய சனங்கள் மகா பொல்லாதவர்களாயும் தரோகப்புத்தியுள்ளவர்களாயுமிருந்தார்களே. அவர்கள் இன்னம் ஒருவிசை பாலும் தேனும் ஓடுகிற அந்தச் சிறந்த தேசத்தைப்பெற்று அனுபவிக்கயோக்கியர்களாயிருந்தார்களோ? அவர்கள் மூற்பிதாக்கள் அந்தத் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுமுன்னமேயே, வனாந்தரத்தில் மேலுமேலும் தேவனுக்கு விரோதமாகக் கலகம்பண்ணிப் பாவஞ்செய்து, கானுன்தேசத்துக்குரிய பாத்தியத்தையெல்லாம் இழந்துபோனார்களே? அப்புறம் தலைமுறை தலைமுறையாக எவ்வளவோ கொடிய அக்கிரமங்களையெல்லாம் நடப்பித்துவந்தார்கள். அவர்கள்பேரில் இப்பொழுது வந்திருந்த தண்டனை நியாயமானதல்லவென்று யார்தான் சொல்லக்கூடும். தேவனுடைய வாக்குத்தத்தமிருந்தும், அவர் தங்களுக்கு இரக்கங்காண்பிப்பாரென்று அவர்கள் நினைத்ததாக விளங்கவுமில்லை. நூற்று இருபத்தாரும் சங்கீதத்தில் எப்படிச் சொல்லியிருக்கிறதென்றால், "சீயோ

னின் சிறையிருப்பைக் கர்த்தர் திருப்பும்போது சொப்பனங்காண்கிற வர்கள்போல இருந்தோம்" என்றிருக்கிறது. அது எதார்த்தமென்று நினைக்கக்கூடாததுபோலிருந்தது. விருந்து சாப்பிடுகிறதுபோல சொப் பனங்கண்ட ஒரு குழந்தை, "அது பொய்யென்று விளங்காதபடி விழித்து எழும்பப் பயப்படுகிறேன்" என்று சொன்னது எனக்கு ஞாப கமிருக்கிறது. யூதர்களோ தங்களுக்குக் கிடைத்த பாக்கியம் எதார்த் தமானதென்று கண்டுகொண்டார்கள். மேற்காட்டிய சங்கீதத்தில் இன்னமும் எப்படிச் சொல்லியிருக்கிறதென்றால், "அப்பொழுது நம் முடைய வாய் நகைப்பினாலும் நம்முடைய நாவு ஆனந்தசத்தத்தினா லும் நிறைந்திருந்தது. அப்பொழுது கர்த்தர் இவர்களுக்குப் பெரிய காரியங்களைச் செய்தாரென்று புறச்சாதிகளுக்குள்ளே சொல்லிக்கொ ண்டார்கள். ஆம், கர்த்தர் நமக்குப் பெரிய காரியங்களைச செய்தார். இதினிமித்தம் நாம் மகிழ்ந்திருக்கிறோம்" என்று யூதர்களும், நன்றி யறிந்த மனதோடு ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

அதுபோலவே உங்களுக்கும் பெரிய காரியங்களைச் செய்யத் தேவன் பிரியசித்தமுள்ளவராயிருக்கிறாரென்று நீங்களும் கண்டுகொ ள்ளலாம். உங்களைப் பாவத்தினின்று இரட்சித்து மோட்சத்தில் உங் களுக்கு வாசஸ்தலமும் தந்தருள சித்தமாயிருக்கிறார். ஆகையால் அவருடைய இரக்கத்தைத் தேடிக்கொள்ளுங்கள். நம்மில் எவர்க ளும் அதற்குப் பாத்திரரல்ல, என்றாலும் அவர் எப்பொழுதும் மன் னிக்கிறவராயும் இரக்க உருக்கமுள்ளவராயுமிருக்கிறார். "அவர் எப் பொழுதும் கடிந்துகொள்ளார், என்றைக்கும் கோபங்கொண்டிரார்".

மூன்றாவதாக, பாவம் மன்னிக்கப்பட்டிப்போனபோதிலும் அதி னால்உண்டாகும் கெடுதி நீங்குகிறதில்லையென்பதை நினைத்துக்கொள் வோமாக. ஒருவிசை ஒரு பையன் எனக்குத் தென்பட்டான். அவ னுடைய நெற்றியிலும் கன்னத்திலும் அவலட்சணமான ஓர் தழும்பு இருந்தது. அதைப் பார்த்து, அப்பா அந்தத் தழும்பு உனக்கு நோகி றதா என்று கேட்டேன். அதற்கு அவன், இல்லை, இல்லை அது நன் றாய் ஆறிப்போச்சுது என்றான். அது வெகுகாலத்துக்குமுன்னே தீப் பட்டு உண்டான படுகாயம். அதினாலுண்டான இந்தத் தழும்பு அவன் உயிரோடிருக்குமளவும் முகத்தை விட்டுப்போகாது. நல்லது, தேவன் தமது சனத்தின் பாவத்தை மன்னித்துப்போட்டாரென்று சொன் னேனே. தண்டனை சகித்துத் தீர்ந்தது, அவர்கள் தம் சுதேசத்துக்குத் திரும்பிப்போக இடமுங்கிடைத்தது. ஆனால் அந்தத் தேசம் எவ் வளவாய் மாறிப்போயிருந்தது. அவர்களிற் சிலர் தங்கள் பிதாக்களின் தேசத்தை ஐம்பது அறுபது வருஷமாய்ப் பார்த்தவர்களல்ல. எரு சலேமும் தேவாலயமும் ஐம்பது வருஷத்துக்கு முன்னே அழிந்து போயின. அவர்கள் அப்பொழுது பெலனும் புஷ்டியுமுள்ள வாலி பர்களாய், தங்கள் வீடுகளைக் கொள்ளையிட்டு நாசம்பண்ணுகிறதை யும் சாலொமோன் கட்டின மகத்துவமான தேவாலயம் அக்கினிக்கு இரையாகிறதையும் கண்ணீரோடு பார்த்துக்கொண்டு நின்றிருக்க லாம். அல்லது ஒருவேளை குழந்தைகளாயிருந்து, தங்கள் தாய்தந் தைகள் துக்கிக்கிறதைப் பார்த்து ஆச்சரியப்படுகிறவர்களாயும், பாபி லோனுக்கு வெகுதூரமாய்ப் பிரயாணம்பண்ணுகிறதினால் சந்தோஷப் படுகிறவர்களாயுமிருந்திருக்கலாம். இப்பொழுதோ அவர்களுடைய தாய் தந்தைகள் இறந்துபோய்விட்டார்கள். அவர்களும் நாசத்துப் பலட்சயப்பட்டுப் போனார்கள். முற்காலத்தில் எவ்வளவோ சிறப்பும் செல்வமும் பொருந்தியதாயிருந்த அந்தத் தேசத்தில் இப்பொழுது

சிறப்போ செல்வமோ எவ்வளவேனுமிராதென்றும் அறிந்தார்கள். அவர்கள் வருத்தத்தோடு திரும்பிப்போய்ச் சாகத்தான்வேண்டியி ருந்தது. அப்படியே தேவாலயத்துக்கு அஸ்திபாரம்போடுகிற சமை யத்தில், முந்தின ஆலயத்தைப் பார்த்திராத வாலிபர் கெம்பீரித்து ஆரவாரித்த பொழுது, இவர்கள் கூக்குரலிட்டு அழுது புலம்பினதாக வாசிக்கிறோமே. நம்முடைய பாவங்களும் நம்முடைய பிதாக்களின் பாவங்களும் மன்னிக்கப்பட்டன. தேவன் மகா இரக்கமும் தயவுமு டையவர். ஆனாலும் பாவத்தினால் நம்முடைய வீடும் தேசமும் பா ழாய்ப் போயிற்றே என்று நினைத்துத்தான் பிரலாபித்திருப்பார்கள்.

Notes on Leviticus.

லேவியராகம வியாக்கியானம்.

ம. அதிகாரம்.

நாதாபும் அபியூவும் மாண்டது.

1. "அக்கினி" பலிபீடத்திலுள்ள திருஅக்கினியல்ல, வழக்கமான அக்கினியாம்.

2. "பட்சித்தது" கொன்றுபோட்டது என்றர்த்தமாம். அவர் கள் தேகமும், சட்டைகளும் தகனமாகவில்லையே!

3. "என்னிடத்தில் சேருகிறவர்களால்" முக்கியமாய் ஆசாரி யனைக்குறிக்கும்.

"ஆரோன் பேசாதிருந்தான்" கிழ் தேசங்களில் மரித்தவர்க ளுக்காகச் சத்தமிட்டு அழுகிறது வழக்கம். இவனுடைய மூத்த குமாரர்! இப்போதான் மிகவும் கண்யமான வேலைக்கு அபிஷேகம்பெற்றவர்கள், சடிதியாய் திடீரென்று தேவகோபாக்கினியினாலே மாண்டிருக்க இவன் பேசாதிருந்தது என்ன பொறுமை! தேவனுக்குத் தன்னை முழுவது மாய் ஒப்புக்கொடுத்துவிட்டான்.

4. இந்த இரண்டுபேரும் லேவியராயிருந்தார்கள். நாதாபும், அபி யூவும் கூடாரவாசலிலேயே அழிக்கப்பட்டதாய்த் தோன்றும். இவர் களைப்பாளையத்துக்குப்புறம்பே கொண்டுபோகிறபோது பார்த்தவர்க ளுக்கு என்னமாயிருக்கும்! நாஸ்திகர் வந்து இந்தக்காட்சியைச்சற்று பார்க்கட்டும்.

5. "சட்டைகளோடும்" இவைகள் தீட்டாய்ப்போனதே. இரு தயத்தில் உண்மையில்லாவிட்டால் நீண்ட அங்கிகளும், நடுக்கட்டும் இடைக்கட்டும் தலைக்கட்டும் குறுக்கே வந்து நில்லாது.

6, 7. துக்கத்துக்கு அடையாளமாக வஸ்திரங்களைக் கிழிக்கிறதும் தலைப்பாகையை எடுத்துப்போடுகிறதும் வழக்கம். பின்னும் 21: 1-5 வாசிக்கவும். ஆசாரியர்கள் தேவனைச்சேர்ந்தவர்களென்று வெளியரங் கமாய்ப் பாராட்டுகிறவர்களாயிருக்கிறார்கள்.

தேவனுக்காக அவருடைய பலிபீடத்தில் வேலைசெய்கிற இவர் கள் அவருடையபட்சமாயிருந்து அவருடைய நியாயத்தீர்ப்புகள் நீதி யானவைகளென்று சாட்சியிடுவதில் முதன்மையானவர்களாயிருக்க

வேண்டுமே. இந்த மூகாந்தரத்தினுலே ஆரோனும், அவன் இளைய குமாரரும் தக்கம் கொண்டாடாதபடி விலக்கப்பட்டதாகத்தோன்றும்.

9. இதினுலே நாதாபும் அபியூவும் குடித்து வெறித்திருந்ததாகத் தோன்றும். தேவஸந்நிதியமானது கறையும் குன்றுதலுமுள்ள மனதோடல்ல, பூர்த்தியான மனதோடும் ஆசையோடும் நிறைவேற்றப் படவேண்டியதே.

குடித்து வெறித்திருக்கிற ஆசாரியன் ஆசரிப்புக்கூடாரத்தில் எந்த வேலையைத்தான் செய்யக்கூடும். "தேவன் தம்மைப் பரியாசம் பண்ண ஒட்டார்."

12—15. ஆரோனும் மற்ற ஆசாரியரும் போசனபலியைப் பரிசுத்த ஸ்தலத்திலே அதாவது பிராகாரத்திலே புசிக்கவேண்டும். சமாதான பலியின் பாகத்தையோ அவர்களும் அவர்கள் குடும்பத்தாரும் சேர்ந்து சுத்தமான எந்த இடத்திலும் புசிக்கலாம்.

16—18. "வெள்ளாட்டுக்கடா" சனங்களுக்காகச் செலுத்தப் பட்ட பாவநிவாரணப்பலியாம். (9. 15.) மோசே இதைமட்டும் தேடிப் பார்க்கவேண்டியதென்ன! இந்தப்பலியைக்குறித்த சட்டத்தில் சற்று மலிவிருக்கிறதாகத்தோன்றும். எப்படியென்றால்,

4: 21-ல் அதைப்பாளயத்துக்குப்புறம்பே "சுட்டெரிக்கக்கட வன்" என்றும், 6: 26 ல் "புசிக்கக்கடவன்" என்றும் சொல்லியிருக் கிறது. இதற்குச் சமாதானம் என்னவென்றால், இந்தப்பலி, இளங்கா ளையானல் அதின் இரத்தத்தைப் பரிசுத்தஸ்தலத்துக்குள்ளே கொண்டு போய் திரைக்கு எதிரே தெளித்து, அதின் மாம்சத்தைப் பாளயத்துக் குப் புறம்பே சுட்டெரிக்கவேண்டும் (4: 21). அது வெள்ளாட்டுக்கடா வானல், அதின் இரத்தத்தை பரிசுத்தஸ்தலத்துக்குள்ளே கொண்டு போகவும்கூடாது, தகனபலிபீடத்திலாவது, பாளயத்துக்குப்புறம்பே யாவது சுட்டெரிக்கவும்கூடாது. ஆனல் "பிராகாரமென்ற பரிசுத்தஸ் தலத்திலே அது புசிக்கப்படவேண்டும்." அப்படியே இத்தச்சமயத் தில் செலுத்தப்பட்டபலி, 9: 15ல் சொல்லிய வெள்ளாட்டுக்கடாவான தினுலே அதற்கு என்னநடந்திருக்கிறதென்றறியும்படி மோசே தேடிப் பார்த்தான். ஆனல் கவலைத்தாழ்ச்சியினுலேயோ எப்படியோ "அது தகனிக்கப்பட்டிருந்தது." இப்போது ஆரோன் குடும்பத்தில் நேரிட்ட விசேஷமான தின்பம் இத்தத்தவறுதலுக்கு மூகாந்தரமாக ஒப்புக் கொள்ளப்பட்டது. மேலும் இப்போ நடந்த எச்சரிப்பு தேவகட்ட னைக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியது எவ்வளவோ அவசியமென்று ஆசாரியருக்கும் சனங்களுக்கும் நன்றாய்ப் போதிக்கிறதாயுமிருந்தது.

"சபையின் அக்கிரமத்தைச் சுமந்துதீர்ப்பதற்கும்". சனங் களின் பாவநிவாரணப்பலியை ஆசாரியர் புசிப்பது சனங்களின் அக்கிர மத்தைச்சுமந்து தீர்க்கிறதாகச் சொல்லப்படுகிறது. எப்படி? நீதி மொழி 1: 31ல், பாவிகள் தண்டிக்கப்படுவது, "அவர்கள் தங்கள் வழி யின்பலனைப்புசிக்கிற"தாகச்சொல்லப்படுகிறது எப்படியோ அப்படி யே சனங்களின் பாவநிவாரணப்பலியை ஆசாரியர் சாப்பிடுவது, அவர் கள் பாவத்தை அவர்களுக்குப்பதிலாகச் சுமப்பதற்குச் சரியாய்ச்சொல் லப்படுகிறது. இப்படி இந்தப்பலியைச் சாப்பிடுகிறஆசாரியர் சனங் களுடைய பாவத்தை ஏற்றுக்கொண்டதாக எண்ணப்படுகிறவிஷயத்தில் கிறிஸ்துநாதருக்கு விசேஷித்த முன்னடையாளமாயிருந்தார்கள்.

18. "பரிசுத்தஸ்தலத்தில்" பிராகாரத்தில். 6: 26.

19. நேரிட்ட தக்கத்தை ஆரோன் மூகாந்தரமாகச்சொன்னது ஒப்புக்கொள்ளப்பட்டது. தினுகரமாய்ச் செய்யும்பாவத்தை தேவன்

கவனித்துத் தண்டித்தாலும், தெரியாமையாய் நடக்கும் தப்பிதத்தை மன்னிக்கிறார் என்று விளங்குகிறது.

படிப்பினை

தேவன் போதகன்மாரிடத்தில் அதிகக்கண்டிப்பாயிருக்கிறார். 2.—உயர்ந்த உத்தியோகஸ்தருக்கு உயர்ந்த உத்தரவாதமும் உண்டு. —நாஸ்திகர் நாதாப் அபியூவைக் கண்டு பேசட்டும். —கிறிஸ்துநாதர் நமக்குண்டுபண்ணின சுயாதீன நிலைமையைக் கவனிக்கக்கடவோம். —நமக்குத்தின்பம் நேரிடும்போது ஆரோனைப்போல் பொறுமையாயிருக் கக்கற்றுக்கொள்ளவேண்டும். ஏனென்றால் தின்பத்தை அனுப்பினவர் எகோவா. "அவர் கர்த்தர்; அவர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக" என்று சொல்லவேண்டும். 1சாமு.3: 18. கிறிஸ்து நமது பாவநிவாரணப்பலி-"நமது பாவங்களை நிவர்த்திசெய்கிறபலி அவரே".

(MISCELLANEOUS.)

சென்ற வருஷத்தின் பற்பல சங்கத்தாருடைய

வருமானத்தை இதனடியில் காண்பிக்கிறோம்.

வேதாகம சங்கத்தின் வருமானம். (British Foreign Bible Society.)	பவுண்	207000	அல்லது
	ரூ	20,70,000	
சர்ச்சுமிஷியோன் சங்கம். ... Church Missionary Society.	பவுண்	190693	அல்லது
	ரூ	19,06,930	
சுவிசேஷபிரபல்லிய சங்கம். ... Society for the Propagation of the Gospel.	பவுண்	136906	அல்லது
	ரூ	13,69,060	
இந்த வருஷத்தில் இந்தச் சங்கத்தின் வருமானம் அதிகரித்திருக்கிறதென்று கவனிக்கலாம்.	ரூ	116000	
இலண்டன் மிஷியோன் சங்கம். ... London City Mission.	பவுண்	45450	அல்லது
	ரூ	4,54,500	
சர்ச்சு அசோஷியேஷன் சங்கம். Church Association.	பவுண்	6843	அல்லது
	ரூ	68,430	
ஐர்லாந்துதேசத்திலிருக்கிற பாப்புமார்க்கத்தாருக்கு போதிக்கும்படி ஏற்படுத்தப்பட்ட சங்கம். ... ... Irish church Missions to Roman Catholics.	பவுண்	22839	அல்லது
	ரூ	228390	

"சரிகைத் தலைப்பாகை."

(தொடர்ச்சி.)

கலியாண சங்கதியைப்பற்றி துரை கேட்ட மாத்திரத்தில் அவர் முகத்தில் சந்தோஷம் விளங்கிறது. அவர் இப்படி புன்னகைகொண்டிருக்கும்போதே, தேவநாயகம் என்பவன் துரையைப் பார்த்து, ஐயா! அடியேன் ஒரு விண்ணப்பஞ் செய்யப்போகிறேன். அது என் குடும்பசேமத்தைப் பற்றினதாய் இருக்கிறது. அதற்குத் தாங்கள் தடையொன்றுஞ் சொல்லக் கூடாது என்றான். அப்போது துரை நம்முடைய முனிஷி கலியாணத்திற்கென்று ஒரு வாரம் அல்லது இரண்டு வாரம் ரஜா கேட்கப்போகிறான்போல் இருக்கிறது. அதைக் கொடுக்கத்தான் வேண்டுமென்று நினைத்துக் கொண்டார். ஆனால் அவன் அதைக் கேளாமல் தனக்கு 150 ரூபாய் கடன் கொடுக்க வேண்டுமென்று கேட்டபோது உடனே அவருடைய முகம் வேறுபட்டு மனஸ்தாபமுடையவராய்க் காணப்பட்டார் அவர் சற்றுநேரம் மௌனமாய் இருந்து அவனுக்குச் சொல்ல வேண்டிய மாறுத்தரத்தைக் குறித்து யோசித்து கடைசியில் சொல்லுகிறார். தேவநாயகம் நான் உமக்கு ஒத்தாசை செய்கிறது கூடாதகாரியம். அப்படி நான் செய்யாமல் போகிறதற்கு இரண்டு முகாந்தரங்கள் உண்டு. ஒன்று எனக்குப் பணமில்லை இன்னொன்று பணமிருந்தாலும் அதை உமக்குக் கடன் கொடுக்கிறது என் மனச்சாட்சிக்கு விரோதமாயிருக்கிறது என்றார். என் அபிப்பிராயத்தைத் தாராளமாய் உமக்கு வெளியிடுவேன். என்னுடைய சொந்த காரியங்களை யாவருக்கும் வெளியிடுவது என்னுடைய வழக்கமல்ல, ஆயினும் உமக்காக என் வழக்கத்தைப்பாராமல் பேசுகிறேன். என் வரவு செலவு கணக்கைப் பாரும். இதினால் நான் பிசினீத்தனக்காரனை பணத்தை வைத்துக்கொண்டு கடன் கொடுக்க ஏதுவில்லையென்று பொய்சொல்லுகிறவனல்லவென்று அறிந்துகொள்ளலாம். இது விசனமானகாரியம்தான் என்றிந்தப்படி அந்தத் துரைமகன் தன் நிலைமையை அறிக்கையிட்டபோது அவர் முகம் சிவந்து மாறுபட்டதால் அது அவருக்கே வெட்கமாகக்காணப்பட்டது. ஆயினும் அவர் தமது சரித்திரத்தை நிறுத்தாமல் சொல்லிக்கொண்டேபோனார். எனக்கு இந்தக் கடன் வந்த காரணத்தைச் சொல்லுகிறேன். நான் ஒரு ஐசுவரியமுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவன். எங்களுக்கு பெரிய பங்களாவும் சேர்த்தியான வண்டியுமிருந்தன. நான் இங்கியாவுக்கு வந்து குராச்சியில் ஸ்தாபகமானவுடனே என் தகப்பனார் பணம் வைத்திருந்த "பேங்க்" அல்லது பணச் சாலை அடியோடு முழுகிப் போயிற்றென்று துக்கசமாசாரம் எனக்கு வந்தெட்டிற்று. இந்தத் துக்கத்தை என் தகப்பனார் பொறுக்கமாட்டாமல் வியாதிப்பட்டதால் அதைப்பற்றி என்னுடைய தாயாரே எனக்கு எழுதும்படி நேரிட்டது. அதற்கு சிலகாலத்திற்குப் பின்பு அவர் மரித்து பரகதி அடைந்தார் என்றார். இதை அவர் சொல்லும்போதே அவர் கண்கள் கண்ணீரால் நிறைந்திருந்தது. உடனே என் சனன தேசமாகிய இங்கிலாந்துக்குப் போகவேண்டுமென்று என் மனதில் எண்ணமுண்டாயிற்று. ஆனால் நான் தேவனை நோக்கி செபம்பண்ணி யோசித்ததின்பேரில் இந்தியாவில்தானே நிலையாயிருந்து உத்தியோகம் செய்து வருவதே என் குடும்ப சமரக்ஷணைக்கு அதிக அனுகூலமாயிருக்கும் என்று காணப்பட்டது. பின்பு ஒரு காரியஞ் செய்தேன். அதை என் தகப்பனாராவது நானாவது

அதற்கு முன் செய்திருப்பதேயில்லை. அதென்னவெனில் எனக்கு இந்த உத்தியோகஞ் செய்துவைத்த தனவந்தராகிய ஒரு நீதியதிபர் பஞ்சாப் நாட்டிலிருக்கிறார். அந்த சினேகிதருக்கு என் வருத்தங்களையெல்லாம் சொல்லி என் குடும்ப அவசரத்துக்குத் தேவையான 5000 ரூபாய் கடன் கொடுத்து உதவவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன் என்றார். அப்போது தேவநாயகம் என்பவன், அவர் நீர் கேட்டுக் கொண்டபடி உடனே கடன் கொடுத்திருப்பாரோ என்றான். அதற்குத் துரைமகன் அவர் இந்தப் பணத்தை நான் கேட்டபடி கடனுகவல்ல நான் கேட்காதபிரகாரம் இனமாகவும் கொடுப்பதாகச் சொன்னார். ஆனால் அப்படி இனமாக வாங்குவது எனக்குப் பிரியமில்லை. நான் பலசாலியாயும் கிரமமான வருமானமுள்ளவனுயுமிருந்ததால், சீராய்ச் செலவு செய்து சம்பளத்தில் பணத்தை மீத்து 5 வருஷத்தில் கடனையுந்தீர்த்து வீட்டுக்கும் கொஞ்சம் அனுப்பலாம் என்றும் நினைத்தேன் என்றார். அதுமுதல் நான் அந்தக் கடனுகிய விலங்கைத் தரித்து எறிந்துவிடும்படி மிகவும் பிரயாசப்பட்டு வருகிறேன். ஆரம்பமுதல் நான் அந்த ஸ்திதியிலிருக்கிற மற்ற அங்கிலேயர் துரைமார் செய்யாத வண்ணம் நான் என் வருமானத்தில் பாதியைக் கொண்டு என் காலத்தைக் கழிக்கிறேன். என் சம்பளம் உயர்ந்தபோது என் செலவுகளை நான் அதிகப்படுத்தவில்லை. மற்றவர்களை உபசரிக்கும்படி தாராளமாய்ச் செலவிடாமலிருப்பது இத்தேசத்தில் பெரிய நிந்தையாயிருந்தபோதிலும் நான் அவ்வித எண்ணத்திற்கு இடம் கொடாமல் மற்றவர்கள் என்னை லோபியென்று பழித்தாலும் பழிக்கட்டுமென்று மட்டாய்ச் செலவழித்து வருகிறேன். நான் மற்றவர்களுக்கு இனும் முதலியவைகளைக்கொடுக்க ஏதுவில்லை. என் பணம் எனக்குச் சொந்தமல்ல, ஆகையால் மற்றவர்களுடைய பொருள்களைக் கொண்டு விருந்து முதலான பெருஞ்செலவுகளைச் செய்வது சரியல்ல, தேவனுடைய பார்வையில் அயோக்கியன் என்று காணப்படுவதிலும் மனுஷருடைய பார்வையில் இழிவானவன்போல் தோன்றுவது உத்தமந்தான் என்றார். தேவநாயகத்துக்கு துரை இப்படிச் சொல்லக் கேட்டது ஆச்சரியமாயிருந்தது. ஆகையால் அவன் அவரைப் பார்த்து தேவனுடைய பார்வையில் அயோக்கியனுயிருப்பேனென்று சொன்னீரோ, அது எப்படியென்று வியப்போடே கேட்டான். அதற்குத் துரை ஆம் அது அயோக்கியமான காரியந்தான். நான் கடனுக வாங்கின பணம் கடன் கொடுத்தவனுக்குச் சொந்தமேயன்றி எனக்குச் சொந்தமல்லவென்றார். அப்போது தேவநாயகம், ஆகிலும் கடன் கொடுத்தவன் இஷ்டப்பட்டுத்தானே பணம் கொடுத்தான் என்றான். அதற்குத் துரை அவன் இஷ்டப்பட்டுக் கொடுத்தது நிஜமே, ஆகிலும் அவனுக்குத் திரும்பச் செலுத்தாவிடில் அவனுக்கு இஷ்டமாய் இருக்குமா? அவன் தன் சொந்த பணத்தினால் ஒரு பெரிய விருந்து செய்தால் அதன் சந்தோஷத்தை அவன் அனுபவிக்கவேண்டுமல்லவா? அவன் தன் பொருள்களைக் கொண்டு ஏழைகளுக்கு தான தருமஞ் செய்தால் அதனால் வரும் கீர்த்தி அவனுக்கே செல்லவேண்டுமல்லவா? என்றார்.

ஆயினும் தேவநாயகத்துக்கு இதெல்லாம் உண்மையாகத் தோன்றவில்லை. தனவந்தனிடத்தில் கடன் வாங்குவதில் யாதொரு பாதகமில்லையென்றே நினைத்தான்.

அப்போது துரை தன் மேசைக்குப்போய் மேலிருந்த வேதாகமத்தையெடுத்து அதைத் திறந்து "ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல் மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன் படாதிருங்

கள்" என்கிறவாக்கியத்தை அவனுக்குக் காட்டினார். ரோமர். 13 : 8.

அப்போது வேதநாயம் முனிஷி இந்தக் கற்பனை வேதத்திலிருப்பது எனக்குத் தெரியாதிருந்தது ஆயினும் தூரை இந்தக் கற்பனையை மீறினதுண்டே என்றார். அதற்குத் தூரை நான் கடன் பட்டதற்காக என் மனச்சாட்சி வாதிக்கிறதில்லை. ஆனல் நான்பட்ட கடனை இறுக்க என்னல் இயன்றமட்டும் பிரயாசப்படாமல் இருப்பேனுகில் என் மனச்சாட்சி வாதித்துக் கொண்டேயிருக்கும். வருகிற திங்கட்கிழமை என்னுடைய சம்பளம் வரும்போது என் கடனை முற்றிலும் இறுத்துவிடுவேன். கடனில்லாதிருந்தால் அந்த நாளே எனக்குச் சொல்லமுடியாத சந்தோஷத்தைக் கொடுக்கும் நாளாயிருக்குமென்றார். அப்படியானல் அடியானுக்கு எஜமான் கடன்கொடுக்கக்கூடுமே என் மகளுடைய கலியாணத்தைச் சற்று பிற்பிவைத்துக்கொள்ளுகிறேனென்று சந்தோஷத்தோடே சொன்னன்.

அதை அந்தத் தூரை கேட்டு விசனமுற்று நான் இதுவரைக்கும் சொன்னது முனிஷியுடைய மனதில் பயன்படவில்லையே என்று சொல்லி வேதப்புஸ்தகத்தை மூடிவிட்டு முன்னிருந்த இடத்தில் வந்து உளுக்காந்து அவனைப் பார்த்து, முனுஷி, நான் அவசரத்தையிட்டு கடன் வாங்கினேன், நீ அவசரமில்லாமல் கடன்படலாமாவென்றார்.

அவன் இதைக் கேட்டு மறுபடியும் ஆச்சரியப்பட்டு நான் இதற்குமுன் எஜமானுக்கு அறிவித்தேனே. என் மகளுடைய கலியாணத்திற்காகவே எனக்குப் பணம் வேண்டுமென்று சொன்னேனே என்றான். அதற்குத் தூரை அந்தக் கலியாணத்தை நீ கடன்பட்டு பெரும் செலவுசெய்து நடத்தவேண்டுமென்று சாஸ்திரமா. நீ பெருமையான எண்ணத்தை விட்டு டம்பமாய்ச் செலவுசெய்யாமல் ஒலி சிநேகிதரை மாத்திரம் அழைத்து அவர்களுக்கொருவேளை சாப்பாடுசெய்து மட்டாய் அந்தக் கலியாணத்தை நடத்துவாயாகில் உன் சம்பளமே அதற்குப் போதுமானது. உன் மகள் தன் கலியாணத்திற்காகத் தன் தகப்பன் கிறிஸ்தவர்களுக்கேலாத பிரகாரம் கடன்பட்டு அதனல்வரும் தன்பத்தை அனுபவிக்கிறுனென்று நினைப்பதினுல் அவளுக்கு என்ன சந்தோஷம்வரப்போகிறது. தேவ கற்பனையை மீறிநடத்தும் விவாகத்தில் தேவனுடைய ஆசீர்வாதம் எப்படியிருக்கும். பெருஞ்செலவிட்டு கலியாணவிருந்து செய்வதினுல் என்ன பிரயோசனம் என்றார். அதற்கு வேதநாயகம் இதுதான் எங்கள் வழக்கம், ஜாதி ஆசாரமென்றான். இப்படிச் சொன்னல் வேறு ஆட்சேபனைக்கிடமிருக்கமாட்டாதென்று நினைத்தான்போலும். அப்போது தூரை அவனைப்பார்த்துச் சொல்லுகிறார், சிநேகிதனே நீ விக்கிரக ஆராதனையைத் தப்பிதமென்று தள்ளிவிட்டாயே, இப்போது நீ வழக்கத்தை ஒரு விக்கிரகமாக்கிக்கொள்ளலாமா? சிலகாலத்துக்குமுன் இங்கிலாந்துதேசத்தில் ஒரு வழக்கமிருந்தது.

எந்த விஷயத்திலாவது இருவருக்கு மனஸ்தாபம் நேரிட்டால், அவர்கள் தனித்த ஓர் இடத்துக்குப்போய் பிஸ்தோலைக்கொண்டு ஒருவரை ஒருவர் சுடுகிறது. சொற்பக் குற்றமாயிருந்தாலும் அதை இரத்தத்தினுல் தீர்க்கவேண்டுமென்பது அவர்களுடைய சித்தாந்தம் என்று சொன்னர்.

வேதநாயகம் என்பவனிதைக் கேட்டு அது மகா பொல்லாத வழக்கமென்றான்.

அதற்கு தூரை ஆம் அது பொல்லாத வழக்கந்தான், ஆயினும் அக்காலத்திலிருந்தவர்கள் அவ்வழக்கத்திற்கு விரோதமாய் நடப்பது பெ

ரிய நிந்தையென்று நினைத்தார்கள். பிற்காலத்தில் தேவபக்தியுள்ளவர்கள் கிறிஸ்து ரக்ஷகர் நிமித்தமும் அவரது மார்க்கத்தினிமித்தமும் அந்தக் கொடிய வழக்கத்தைக் கட்டோடே ஒழித்துவிட்டார்கள். அப்படியே இக்காலத்தில் மகம்மதியர் தங்கள் தீர்க்கதரிசியாகிய மகமதுவின் நாமத்தைப் பாடுவதும், இந்துக்களாகிய பிராமணர் பூணூலைத் தரித்துக்கொள்வதும் வழக்கமாயிருக்கிறது. ஆனல் நீ இந்த வழக்கங்களையெல்லாம் தகாதவையென்று தள்ளிவிட்டாயே, உன்னைப்போல் கிறிஸ்தமார்க்கத்தை அநுசரித்திருக்கிற பிராமணர் தங்களுக்கொருகாலத்தில் அதிகப் பெருமையாயிருந்த பூணூலை அறுத்து எறிந்துவிட்டார்களே, அப்படியிருக்க, சிநேகிதனே! நீ தேவனுடைய திருச்சித்தத்திற்கு விரோதமாயிருக்கும் வழக்கத்தை வைத்திருக்கலாமா? நீ உன் பரம ராஜாவாகிய கர்த்தரைநோக்கி, சுவாமி! உமதடியான் உமக்காக இவ்வுலகத்திலெனக்கதிக அருமையாயிருந்த பெற்றூர், உற்றூர், உறவினர், இஷ்டர் யாவரையும் வெறுத்துவிட்டேன், ஆனல் என்னுடைய மகள் கலியாணத்திற்குக் கடன் உடன்பட்டு பெரிய விருந்துசெய்யும் ஒரு வழக்கத்தை மாத்திரம் தள்ளிவிட எனக்குப் பிரியமில்லை, அது உம்முடைய சித்தத்திற்கும் கற்பனைக்கும் விரோதமாயிருந்தாலும் அதை விட்டுவிட எனக்கிஷ்டமில்லை, நான் ஞானஸ்நானம் பெற்றபோது பிசாசையும், உலகத்தையும், மாம்சத்தையும் வெறுத்துவிடுவேனென்று சொன்னது யதார்த்தந்தான். ஆயினும் உலகத்தைச் சேர்ந்ததாகிய இந்த ஒரு வழக்கத்தைமாத்திரம் வெறுத்துவிடமாட்டேனென்று சொல்லுவாயா என்றார்.

இதையெல்லாம் கேட்கவே, வேதநாயகத்தினுடைய முகம் வேறுபட்டது. அவன் இதற்குமுன் பாவமென்றும், வெட்கமென்றும், அயோக்கியமானதென்றும் நினையாத காரியம் இப்போது தூரையினுடைய வாக்கால் அப்படிப்பட்டவைகளென்றே காணப்பட்டது. அவன் பெருமூச்செறிந்து சொல்லுகிறான்: என் மட்டுக்கும் யாதொரு கவலையும்படவில்லை, என் கவலையெல்லாம் என் வீட்டாருக்காகவே. இந்த நல்ல சுப காலத்தில் மற்றவர்களைப்போல் என் வீட்டார் செய்யாவிடில் எவ்வளவு இழிவாயிருக்கும் என்றான். அச்சமையத்தில் அவனுடைய மனைவியாகிய மரியாளும், குமாரத்தியாகிய மாக்கியமும், செல்வ புத்திரனுகிய யோசேப்பும் தற்சொரூபமாய்த் தனக்கெதிரில் வந்து நின்றதுபோற்காணப்பட்டது. அதினுல் அவன் மிகவும் சித்தாக்கினாந்தனுய் ஐயோ! இவர்களையெல்லாம் எவ்விதமாய்ப் பார்க்கப்போகிறேன், அயலார் பழிக்கும்படியாகவல்லோ காரியம் சேரிட்டிருக்கிறதென்று தனக்குள் நினைத்துக்கொண்டான்.

அப்போது தூரை அவனைப் பார்த்துச் சொல்லுகிறார், நீ உன் வீட்டிற்குப் போய் உன் மனைவிமக்களுடனே நான் உன்னிடத்தில் சொன்னவைகளையெல்லாம் சொல்லிப்பார், அவர்களெல்லாரும் உத்தமகிறிஸ்தவர்களென்று நம்புகிறேன். பாவத்துக்கேதுவானவகையாய்க் கடன்படும்படி ஏதுகிற ஜீவனத்தின் பெருமையானது பின்வரும் வேதவாக்கியத்திற்கு விரோதமாயிருக்கிறதில்லையாவென்று கேள். "மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினுலுண்டானவைகளல்ல. அவைகள் உலகத்தினுலுண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம், தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனே என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்." 1 யோ. 2: 16, 17. மறு உலகத்தில், அல்லது ஒரு வருஷத்திற்குப் பிந்தி, மனச்சாக்ஷியினிமித்தம் ஒரு

கெட்ட வழக்கத்தை விட்டுவிட்டோமென்று நினைப்பதா கடன்பட்டுக் கலியாணவிருந்தை அதிக ஜம்பமாய் நடத்தினோமென்று நினைப்பதா இவ்விரண்டில் எது மனதுக்கு அதிகப் பிரியமாயிருக்கும்? உலகத்தில் மனுஷருடைய புகழ்ச்சியானது மினுக்கான காகிதத்தால் செய்யப்பட்டு இரவில் சற்று நேரமாத்திரம் பிரகாசிக்கும் விளக்குப்போலிருக்கிறது. தேவனுடைய புகழ்ச்சியோ அநந்த வருஷம் ஆகாயத்தில் பிரகாசிக்கும் நட்சத்திரங்கள்போலிருக்கின்றது என்றார்.

இதெல்லாவற்றையும் கேட்டு வேதநாயகம் எழுந்து தாசைக்கு சலாம் செய்து அவரிடத்தில் செலவுபெற்றுக்கொண்டு வீட்டிற்குத் திரும்பினான். தாசை சொன்ன நல்ல ஆலோசனையைக் கேட்டு, அதெல்லாம் சரிதான் என்று மனதிலுணர்ந்து, மட்டாய்ச் செலவிட்டுக் கலியாணத்தை நடத்துவதே யுக்தியென்று ஒத்துக்கொண்டான். ஆயினும் தன் வீட்டாரைக்குறித்து நினைத்தபோது மாத்திரம் அவனுடைய தீர்மானம் ஸ்திரமாயிருக்கவில்லை.

நான் கடைவழியாய்ப் போகக்கூடாது. போவேனேயாகில் என் அருமைப் பிள்ளைக்கு சரிகைத் தலைப்பாகை வாங்கும்படி நேரிட்டாலும் நேரிடுமென்று தக்கத்தோடே சொல்லிக்கொண்டு வேறு வழியாய்ப் போனான்.

அவன் தன் வீட்டு வாசலுக்குள் நுழைவதற்குள்ளாக அவனுடைய குமாரனாகிய யோசேப்பென்பவன் ஓட்டமாயோடிவந்து தகப்பனைக் கட்டிக்கொண்டான். கட்டிக்கொண்டு கையிலே ஏதாவது இருக்கிறதோவென்று பார்த்தபோது வெறுங்கையாய் இருக்கிறதைக் கண்டு வெட்கி தகப்பனைப் பார்த்து: தகப்பனே! நான் சொன்னபடி சரிகைத் தலைப்பாகை வாங்கிவர மறந்துபோனீரோவென்று கேட்டான்.

அதற்கு வேதநாயகம் வீட்டுக்குள் வந்து ஒரு சமுக்காளத்தின் மேலுலுக்காந்துகொண்டு மகனே நான் அதை மறக்கவேயில்லை என்றான்.

அப்போது அவனுடைய மனைவியாகிய மரியாளென்பவள் தன் புருஷனைப்பார்த்துக் கலியாண நாள் சமீபமாயிருக்கிறதே அதற்கு வேண்டியவைகளையெல்லாம் வாங்கியிருக்கிறதா என்றாள். அவனுடைய குமாரத்தியாகிய பாக்கியம் என்பவள் தனக்கு வேண்டிய கம்மல், காப்பு முதலிய நகைகளைக்குறித்தே யோசனையாயிருந்தாள். ஆயினும் வெட்கத்திற்கஞ்சி ஒன்றும் கேட்கவில்லை.

வேதநாயகம் என்பவன் நான் கலியாணத்திற்கு ஒரு ஆபத்தமும் செய்யவில்லையென்று தக்கத்தோடே சொன்னான்.

தன்னுடைய புருஷன் மனம் பல நினைவால் கலங்குகிறதை மரியாள் கண்டு தாசை ஒன்றும் கொடுக்கவில்லையோவென்று கேட்டாள்.

அதற்கு வேதநாயகம் சொல்லுகிறான்: தாசை அநேக நல்லாலோசனைகளைச் சொன்னார். அவைகளின்படி செய்வது நமக்கு வருத்தமாயிருக்கும். ஆயினும் நீங்களெல்லாரும் வந்து உலுக்காந்து கேட்பீர்களாகில், டம்பமான கலியாண வேடிக்கைகளைப் பற்றியும் அதற்காக நம்முடைய தேசத்தார் படும் கடன்களைப்பற்றியும் தாசை சொன்னதையெல்லாம் உங்களுக்கு விபரமாய்ச் சொல்லுவேனென்றான்.

மரியாளும் அவளுடைய குமாரத்தியாகிய பாக்கியமும் வேதநாயகம் என்பவர் இன்னும் என்ன சொல்லப் போகிறாரோவென்று நிகைத்து தாயில் உலுக்காந்து அவர் முகத்தைநோக்கிப் பார்த்துக் கொண்டேயிருந்தார்கள். யோசேப்பென்பவன் தன் தகப்பன் பாதத்தண்டை உலுக்காந்து தன்னிருகரங்களினாலும் அவனுடைய கையைப்

பிடித்து ஆட்டிக்கொண்டிருந்தான். அப்போது வேதநாயகம் என்பவன் தனக்கும் தனக்கும் நடந்த சம்பாஷணையை ஒன்றையும் விடாமல் விபரமாய் எடுத்துரைத்தான். மரியாளென்பவள் ஒவ்வொரு சமயத்தில் தனக்குண்டாயிருந்த ஆச்சரியத்தையும் கோபத்தையும் வெளிப்படுத்தினாள். பாக்கியமென்பவளோ ஒன்றும் பேசாமல் தகப்பனைப்பார்த்தவண்ணமாகவேயிருந்தாள். யோசேப்பென்பவன் தன் தகப்பன் சொன்ன ஒவ்வொரு வார்த்தையையும் காதினால் கேட்டு மனதினால் உணருகிறவனைப்போல் அவன் முகத்தைப்பார்த்தவண்ணமாகவேயிருந்தான். தகப்பன் சொன்னதெல்லாம் அவனுக்கு விளங்காவிடினும் அவைகளில் அநேகத்தை அறிந்துகொண்டான்.

வேதநாயகம் பேசி முடித்தபின்பு அந்த அறையிலிருந்த ஒருவரும் பேசாமல் சற்றுநேரம் மௌனமாயிருந்தார்கள். மரியாள் என்பவள் கோபமுகமாய்க் காணப்பட்டாள். பாக்கியம என்பவளின் கண்களில் தண்ணீர் தளும்பிற்று. தேச வழக்கத்தை மீறிக் கலியாணத்தை அடக்கமாய் நடத்துவது இந்த ஸ்திரீகளுக்கு மகா வருத்தமாய்க் காணப்பட்டது.

வேதநாயகமென்பவன் இந்த முக்கியமான விஷயத்தில் தன்னுடைய தீர்மானத்தைச் சொல்ல இஷ்டமில்லாமல் அவர்களைப் பார்த்துச் சொல்லுகிறான்: நீங்களெல்லாரும் இந்தக் காரியத்தை யோசித்துத் தீர்மானிக்கவேண்டியது. நான் கடன்வாங்கித் தேச வழக்கத்தின்படி, கலியாணத்தை நடத்துகிறதா? கர்த்தருக்குக் கோபம் வராதபடிக்கு வீண்செலவுகளுக்கிடமில்லாமலும் கடனபடாமலும் இருப்பதா? எது உங்களுக்கிஷ்டமென்று கேட்டான்.

மறுபடியும் அவர்களெல்லாரும் சற்றுநேரம் மௌனமாயிருந்தார்கள். பின்பு யோசேப்பென்பவன் தன் தகப்பனுடைய காதுக்குள் மற்றவர்கள் கேட்கத்தக்கதாக நான் கர்த்தராகிய இயேசுநாதருக்குப் பிரியம்வரத்தக்கதாக சரிகைத் தலைப்பாகையைப் பணம் போட்டு வாங்கமாட்டேனென்று மெதுவாய்ச் சொன்னான்.

அந்தச் சிறுவன் சொன்ன இந்தச் சொற்ப வார்த்தைகள் பெரிய சாஸ்திரிகளுடைய வாக்கியங்களைப்பார்க்கிலும் அதிகப் பலமுள்ளவைகளாய்க் காணப்பட்டன. கோபமாயிருந்த மரியாளுடைய முகத்தில் புன்சிரிப்பு காணப்பட்டது. பாக்கியமென்பவளின் கண்களிலிருந்து கண்ணீர் பெருந்துளிகளாய்க் கீழே விழுந்தபோதிலும் அவளும் முகமலர்ச்சியுடன் நான் விக்டோரியா ராணியார் பூண்டிருக்கும் விலைமதிக்கப்படாத பெரும் வயிரக்கல்லை அணிவதைப்பார்க்கிலும் இயேசுசுவாமிக்குப் பிரியமாய் நடப்பதையே அதிகமாய் விரும்புகிறேன் என்றாள்.

இதற்குச் சில வாரங்களுக்குப் பின்பு கலியாணம் நடந்தது. வேதநாயகம் அதற்குச் செய்த மட்டான செலவுகளை அயலார் எல்லாரும்பார்த்து ஆச்சரியப்பட்டார்கள். பெண்ணுக்கு இட்டிருந்த முக்கிய ஆபரணம் புஷ்பம்தான். கலியாணவிருந்தில் பிரதானமாய்ப் பழவர்க்கங்களேயிருந்தன. ஆயினும் மனுஷன் செய்யும் ஆபரணங்களைப்பார்க்கிலும் தேவனால் செய்யப்பட்ட மேற்சொல்லிய வஸ்துக்களே முக்கிய ஆபரணங்களாம். பாக்கியமென்பவள் அந்த நாளில் ஆனந்த சந்தோஷமுடையவளாயிருந்தாள். இப்போது கலியாணத்திலிருக்கும் வஸ்துக்களெல்லாம் என் அருமைப் பிதா தன் சொந்தப் பணத்திலே வாங்கினவைகள். கடன்பட்டு ஒன்றையும் வாங்கவில்லை. காலூர்க் கலியாணத்திற்குச் சென்று அதைத் தமது பிரசங்கத்தினா

லும் ஆசீர்வாதத்தினாலும் சிறப்பித்த இயேசுகர்த்தர் இவ்வித கலியாணத்திற்கே வந்து இதை மகிமைப்படுத்துவார் என்று தன் மனதில் சிந்தித்தக்கொண்டாள். அப்படியே யோசேப்பென்பவனும் அந்தச் சுபதினத்தில் சரிகைத் தலைப்பாகையையல்ல ஒரு சாதா வெள்ளைப் பாகையை அணிந்துகொண்டு ஆனந்த பரவசமுடையவனாய் விளங்கினான். அந்த வீடு உள்ளபடி கலியாண வீடுபோலவேயிருந்தது. கர்த்தருடைய ஆசீர்வாதம் அந்த மணமக்கள் பேரில் பூரணமாயிருந்தது. இது கடன்பட்டுக் கலியாணங்களை நடத்தும் நம்முடைய தேசத்துக் கிறிஸ்தவர்களுக்கு எவ்வளவு சிறந்த மாதிரியாயிருக்கிறது!

ருசியருக்கும் துர்க்கியருக்கும் நடந்துவருகிற யுத்தத்திலிருந்து பிறந்திருக்கிற செய்திகள் ஒன்றுக்கொன்று விகற்பமாயிருக்கின்றன. ருஷியரும், துர்க்கரும் தங்கள் தங்களுக்கே ஜெயமென்று சில சண்டைகளில் சொல்லிக்கொண்டார்கள். என்றாலும், ஒன்று நிச்சயமாயிருக்கிறது. அதாவது, நாம் எதிர்பார்த்திராதவண்ணமாய்த் துருக்கர் தங்கள் சத்துருக்களை வெகு பலமாய் எதிர்க்கிறார்கள். இந்த யுத்தத்தில் தங்கள் இராட்சியம் பெலப்படும் அல்லது அற்றுப்போகுமென்பது அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது. கடைசியாக ருஷியருடைய காரியம் செயமாய்ப் போகுமென்பதற்குச் சந்தேகமில்லாத போதிலும் தாங்கள் நினைத்தபடி துர்க்கரைக் கீழ்ப்படுத்துகிறது அவ்வளவு லேசான காரியமல்ல. முந்நூறுபேரை யேற்றிய ஒரு துர்க்கியப் போர்க்கப்பல் ருஷியரின் போர்ஸ்தானம் ஒன்றுக்கெதிரில் வருகையில் வெடித்துச் சேதப்பட்டது. கருங்கடலின் தென் கீழ் மூலையிலிருக்கிற பத்தாயம் என்னும் பட்டணத்தைப் பிடித்தக்கொள்ளும்படி ருஷியர் பிரயாசப்பட்டும் கைகூடவில்லை. துர்க்கியர், சர்க்காஷியர் என்னும் சாதியாரையும் ருஷியருக்கு விரோதமாய் எழுப்பிவிடப் பார்க்கிறார்கள். ஐரோப்பிய ஐக்கிய அரசரில் வேறு ஒருவரும் இந்த யுத்தத்தில் தலையிடவில்லை.

விக்கிரகத் தொழும்பரின் மதியீனம். (அல்லது)

புளியங்காய் களவுசெய்யப்போனவன் மரத்திலிருந்து விழுந்தது.

இடையன்குடியிலிருந்து ¾-மயில் தூரத்தில் ஆனைகுடி என்ற ஒரு ஊர் இருக்கிறது. இதில் ஒரு கிறிஸ்தமான சபையுண்டு. இவ்வூரில் உள்ள ( ) என்ற ஒரு சபையாளுக்கு ஊருக்குச் சமீபத்திலுள்ள புளியங்காடு என்றவிடையில் ஒரு புளியமரம் இருக்கிறது. கடந்த மார்ச்சு மாசம் துவக்கத்தில் (1877) புளியமரம் காய் காய்த்திருந்தகாலத்தில், அவ்வூரில் சில நாட்களுக்குமுன் விவாகம் முடிந்திருந்த ஒரு அஞ்ஞான வாலிபன் ஆளரவம் இல்லாத சமையங்களிலும், விசேஷமாய் சூரியன் அஸ்தமித்த மாலை இருட்டாகிற சமையங்களிலும் பல நாட்களாய்ப் புளியங்காய்களை பறித்துக்கொண்டு போவது வழக்கமாயிருந்தது. இது சங்கதி புளியமரக் காரருக்கு சிலரால் அறிவிக்கப்பட்டிருந்தாலும், அப்படியா என்று கேட்டு, துக்கப்பட்டு, அம்மட்டில் விட்டு விட்டாரேயன்றி, அவனைக் கையும் களவுமாய்க் கண்டுபிடித்து, சிட்சிக்கவேண்டுமென்று கவலைப்பட்டாரில்லை. ஒரு நாள் மத்தியானம் சூரியன் அஸ்தமனமான சமையத்தில் பெண்சாதியுடைய கேட்டுக்கொள்ளுதலின்பேரில் அன்று சாயந்தரக் கறிக்குப் புளியங்

காய் பறிக்க மரத்தில் ஏறினான். உயர்ந்த கொப்பில் ஏறி, மடிநிறையக் காய் பறித்து, இறங்கலாமென்றிருந்த சமையத்தில் கால் வழுவி பொத்தென்று கீழே விழுந்தான். இவனுடைய வீடு புளியமரத்திற்குச் சமீபத்திலிருந்தபடியினாலே கெடு நேரமாய் புருஷன் வராதது கண்டு பெண்சாதி புளியமரத்தினிடத்திற்கு வந்தாள். வரவே புருஷன் மரத்திலிருந்து விழுந்து நடக்கக்கூடாமல் மரத்தடியில் கிடந்து கொந்துலம்புகிறதைக் கண்டு தானுயத்தூக்கித் தோளில்போட்டு வீட்டுக்குக் கொண்டுபோகப் பிரயாசப்பட்டும் கூடாததால் அழுது கொண்டு வீட்டிற்கு ஓடி, தன் இனமுறையாரிடத்தில் அறிவித்தாள். உடனே அவர்கள் ஓடிவந்து அவனைத்தூக்கி வீடுகொண்டு சேர்த்தார்கள். வீட்டில் சேர்ந்தவுடனே புளியமரத்திலிருந்து விழுந்த வேதனையினாலும், அத்தால் மிகுந்த பயமும், அதிர்ச்சியும், அவனைப்பிடித்திருந்ததினாலும், அவனுடைய கையும், காலும், ஆட்டம் கொடுத்தது. இதைக்கண்ட அவனுடைய மாமனும் மற்றவர்களும் புளியமரத்தில் வாசம்பண்ணின "பேய் அவனைப்பிடித்து இப்படி ஆடச்செய்தது" என்று சொல்லி விளக்குமாற்றைக்கொண்டு அடித்தால் பேய் போய்விடும் என்று நினைத்து, ஏழைமனிதனை அடித்து வேதனையோடு வேதனையைக் கூட்டினார்கள். இப்படி அடித்தும் அவன் தேக ஆட்டம் நில்லாததினாலே, சில மருந்துகளைக்கொடுத்து தண்ணீர் ஒற்றிடம் முதலிய பல பிரயோகங்களையும் செய்தார்கள். சில நாட்களாய்ப் படுக்கையிலிருந்து சங்கடப்பட்டு சௌக்கியமானபின் வெளியே நடமாடி, இப்போது தன் வேலையைச் செய்துவருகிறான்.

ஐயோ! அந்தகார லோகாதிபதியாகிய பசாசு மனுமக்களை எவ்வளவாய்க் கெடுத்து, எவ்வளவாய் அவர்கள் கண்களைக்குருடாக்கியிருக்கிறான். "மாடு தன் எசமானையும் கழுதை தன் ஆண்டவனின் முன்னணையையும் அறியும், இஸ்ரவேல் அறிவில்லாமலும், என் ஜனம் உணர்வில்லாமலும் இருக்கிறது." (ஏசா. 1: 3) என்று சொல்லியபடி அவர்கள் உணர்வும், பகுத்தறிவும் இல்லாதவர்களுமாயிருக்கிறார்கள்.

இது சங்கதி உய்த்துணர்வுள்ள யாவருக்கும் பேயாராதனையின் மதியீனத்தை கன்றாய் காட்டுகிறது. தேவன் "பாவத்தில் கோபம் வைத்து பாவியில் கோபம் வையாமல்" "அவனைத் தண்டித்தும் சாவுக்கொப்புக்கொடார்." (சங். 118: 18) என்பதைக் காட்டுகிறது. இது அக்கிரமக்காரர் தேவதண்டனைக்குத் தப்பிப்போவது அரிது என்பதைக் காட்டுகிறது.

"உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிக்கும் என்று நிச்சயமாய் அறியுங்கள்." (எண். 32: 23.)

D. J.

கிறிஸ்துவைப் பிரசங்கித்தல்.

திருநெல்வேலி நாட்டின் புறமதஸ்தர் சுவிசேஷ செய்தியை ஏற்றுக்கொள்ளுகிறதில் முன்னைவிட நாளதில் மாறுதலாயிருக்கிறார்கள் என்று நாம் கவனிக்கிறோம்.

இக்காலத்தில் அவர்கள் வேதமார்க்கம் அசத்தியமானதென்றுவது, இப்போதுதோன்றிய நூதனந்தானே என்றுவது, நமக்கடுத்தல்ல என்றுவது கிறிஸ்துவேத நீதிநெறிகள் குற்றமுள்ளதென்றுவது அவ்வ

ளவாய்ச் சொல்லுகிறதில்லை. வேதவிஷயத்தில் சில பாகங்களை ஒரு வாறு பொதுவாய் அறிந்துமிருக்கிறார்கள். ஆகிலும் கிறிஸ்தரட்சகரின் விசேஷ வர்த்தாந்தங்களை எல்லாரும் அறிந்துகொண்டார்களென்று சொல்லுவதற்கிடமில்லை. அவருடைய உன்னத உயர்வு, மனுஷ அவதாரத்தில் தாழ்மையாய்ப்பிறந்த அவரின் பிறப்பு, அதின் காரணம் நோக்கம், அவரின் குணசீல சித்தை, பூமியிலும் அவரிடத்தில் தோன்றிய மகிமை, அவர் அருளிய மன்னிப்பு, அவருடைய உருக்க இரக்கம், அதினால் அவரிடத்தில் விளங்கிய அற்புத வல்லமை, அவருடைய ஆச்சரிய ஞான உபதேசம், மறுமொழி, அவருடைய அருள் வாக்கு, அழைப்பு, சத்துரு மித்துருக்கள் அவரைப்பற்றிச் சொல்லிய உண்மையான சாக்ஷி, அவர் தாமாய்த் தம்மை பாவநிவாரணப் பலியாக ஒப்புக்கொடுத்தவிபரம், உயிர்த்தெழுதல், பரத்துக்கேறுதல், திரும்பவருதல், அவைகளின் முகாந்திரங்கள், இவற்றைப்பற்றி விசேஷமாய்த் தெரிவிக்க வேண்டியதாயிருக்கிறது. சனங்கள் பிரியமாய் கேட்பார்களோ இல்லையோவென்று சந்தேகித்து புறமதஸ்தருக்குள் சென்று போதிக்கிற சிலர், காரியமான அவ்விசேஷங்களைப்பற்றி முக்கியமாய்ப் பிரபல்லியப்படுத்தாமல் விக்கிரக வணக்கத்தைப்பற்றியும், வீண்தேவர்களைப்பற்றியும், அதிகமாய்ப்பேசி இரட்சண்ணிய கர்த்தராகிய கிறிஸ்து ஏசுவை கொஞ்சமாய் அறிவித்துக்கொள்ளுகிறது பூரணமல்ல. இருளையகற்ற வேறு பிரயெத்தனங்கள் செய்யாமல் தீபம் ஒன்றையே இருண்ட இடத்திற்குக் கொண்டுவர வேண்டியது போல அக்கியானம், அறிவீனம், பாவமுடைய அந்தகார இருதயத்திற்கு திவ்விய ஒளியாகிய இரட்சகரையே பிரதானமாகக் காட்ட வேண்டியது அவசியம். அவரின் மேன்மையான விசேஷம் இருதயத்தைத் திறக்கும் திறவுகோலுக்கும், அதை இளக்கும் சூட்டுக்கும், சமானமாகவும் இருக்கின்றது. அதுவே மிஞ்சின வல்லமையுள்ளது. ஆகையால் அந்த முறையை எவரும் விசேஷமாய்க் கையாடிவருவது நலம். பள்ளிப்பிள்ளைகள் பாடம் ஒப்புவிக்கிறது போல கிறிஸ்துவின் பிறப்பு முதல் பரத்துக்கேறியது வரையுமுள்ள நடபடிகளைச் சாதாரண முறையாகச் சொல்லிப்போகாமல் கேட்கிறவர்களுக்கு இனிமையும், கருத்துங்கொள்ளத்தக்கதாகத் தம் தம் அனுபவத்தின்படி இனிமையும், கருத்துமாய், உணர்ச்சியோடும், ஊக்கத்தோடும், எண்ணிக்கையுமாய்ச் சொல்லவேண்டியது. இரட்சகரைப்பற்றிச் சொல்லுமுன் முகவுரைபோல் வேறுவகை கொஞ்சம் சொல்லிக்கொண்டாலென்ன? என்று சிலர் நினைப்பார்கள். இரட்சண்ணிய விஷயத்திற்கு இசைவான அல்லது அதற்கு ஏதுகிற சில வார்த்தைகளை முகவுரைபோல மூச்சிச்சொல்லிக் கொள்ளவேண்டாமென்று அறிவிக்கிறதில்லை. சம்பாஷணைச் சாடையாய்ப் போதிக்க நேரிட்டால் விசனத்திற்கு இடமின்றி புறமார்க்க வழுக்களையும் எடுத்துப் பேசிக்கொள்ளலாம். ஆனால் பிரசங்கமுறையாய் பெரிய கூட்டத்திற்குமுன்னே போதிக்கும் போது அப்படிப்போகாமல் விசேஷமாய் இரட்சகரின் இரட்சண்ணிய விஷயத்தைப்பற்றியே குறிப்பிக்க வேண்டுமென்று கவனிக்கவேண்டியது. சிலவேளை சில இடத்தில் கிறிஸ்துவையும், மற்றவர்களையும், அன்டி. கிறிஸ்தரட்சகர் மேலானவர் என்று அறிவிக்கலாம். காந்த ஊசியானது எப்போதும் வடமுனையை நோக்குவதுபோல நமது பிரசங்கங்களெல்லாம் இரட்சகரையே நோக்கவேண்டியது.

கனம். v. w. ஆர்க்கோட்டையரவர்கள் தங்கள் தேசாந்திரப் பிரசங்கத்தில் இரட்சகரின் அருமை, மேன்மை, அன்பு, முதலிய உருக்க

மான விசேஷங்களையே முக்கியமாய்ப் பயிற்றுவிக்கிறார்கள். சனங்களும் ஆவலாய்க்கேட்கிறார்கள். அப்படிச்சொல்லி போதிக்கவேமற்றவர்களையும் விரும்பி ஏவுகிறார்கள். சில வருஷங்களுக்குமுன் பட்டம்பெற்றுவந்த ஒரு சுதேச ஐயரவர்கள் கனம்பொருந்திய ஒரு அம்மாளவர்களைக்கண்டு சந்தித்த இடத்தில் கல்லதாய் சொல்லும் ஆலோசனைபோல் அந்த அம்மாள் "நீர் உமது பிரசங்காலமெல்லாம் இரட்சகரைப்பற்றியே பிரசங்கிப்பீராக" என்று சொன்னார்களாம். இரட்சகரைப்பற்றி ஏற்ற அளவாய் மற்றவர்களுக்குப் பிரசங்கிக்க பரிசுத்த ஆவியானவரின் சகாயத்தை ஏற்கனவே தேடிக்கொள்ள வேண்டியதுஅகத்தியம்.

மேலும் போன வருஷம் ஏப்பிரல், மெய்ஞ் நற்போதகத்தில் விபரம் காட்டிக்கேட்டுக்கொண்டபடி புறமதஸ்தரிடத்தில் விதைக்கப்பட்டிருக்கிற தேவவசனம் எழும்பிப் பலனுக்குவர தேவாவியின் அருள்மாரிக்காக கிறிஸ்தமான ஒவ்வொரு சகோதரரும் இரட்சிப்பின் தேவனை மன்றாடிப் பணிந்து வரவேண்டுமென்று திரும்பவும் இப்போது இதினால் அன்போடு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

"நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை" தேவாவியின் அருள்மாரி நமதுமேலும் நமக்கடுத்த மற்றெல்லார்மேலும் சம்பூரணமாய் ஊற்றப்படத் தேடிக்கொள்வோமாகில் மழைமாரியும் தாரளமாய்ப் பெய்யுமே.

ஞா. ச.

திடப்படுத்தல் ஒழுங்கைக்குறித்துக் கேட்கவேண்டிய கேள்விக் குறிப்புகள்.

இந்தக் கேள்விகளையும் உத்தரவுகளையும் மனப்பாடமாய்ப் படிப்பியாமல், அவைகளின் கருத்தை மாத்திரம் போதிக்கவேண்டும்.

விஞ. திடப்படுத்தல் என்றால் என்ன?

உறுதிப்படுத்தல்.

விஞ. அந்த முறைமை என்னத்தை உறுதிப்படுத்தும்?

ஞானஸ்நான உடன்படிக்கையை நிறைவேற்றவேண்டுமென்கிற கருத்தையும், மரணபரியந்தம் தேவனுடைய பிள்ளையாயிருக்கவேண்டுமென்கிற ஆசையையும் எனக்குள்ளே உறுதிப்படுத்தும்.

விஞ. நீ ஞானஸ்நானம் பெற்றபோது உன் ஞானத்தாய் தகப்பன்மார் உனக்காக உடன்படிக்கை பண்ணினார்களே. அல்லது நீ வயசுள்ளவனாய்ப் பெற்றிருந்தால் நீயே உடன்படிக்கை பண்ணினாயே. அந்த ஞானஸ்நான உடன்படிக்கையின்படி என்னென்ன காரியங்களைச் செய்யவேண்டியதுண்டு?

வெறுக்கவேண்டியதும் உண்டு. விசுவாசிக்கவேண்டியதும் உண்டு. கைக்கொள்ளவேண்டியதும் உண்டு.

விஞ. ஞானஸ்நான உடன்படிக்கையின்படி நீ வெறுத்துவிடவேண்டியதென்ன?

பசாசையும், உலகத்தையும், மாமிசத்தையும்.

விஞ. அந்த உடன்படிக்கையின்படி நீ விசுவாசிக்கவேண்டியதென்ன?

கிறிஸ்துமார்க்கப் பிரமாணங்களை.

வினா. கிறிஸ்துமார்க்கப் பிரமாணங்களின்படி நீ விசேஷமாய் யார் யாரை விசுவாசிக்கவேண்டியது?

தேவனாகிய பிதாவையும், தேவனாகிய குமாரனையும் தேவனாகிய பரிசுத்தஆவியையும்.

வினா. பிதாவைக்குறித்து நீ விசுவாசிக்கவேண்டியதென்ன?

அவர் என்னையும் உலகமனைத்தையும் படைத்தாரென்று.

வினா. குமாரனைக்குறித்து நீ விசுவாசிக்கவேண்டியதென்ன?

அவர் என்னையும், மற்றெல்லா மனிதரையும் மீட்டுக்கொண்டாரென்று.

வினா. பரிசுத்தாவியைக்குறித்து நீ விசுவாசிக்கவேண்டியதென்ன?

அவர் என்னையும், தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் பரிசுத்தஞ் செய்கிறாரென்று.

வினா. ஞானஸ்நான உடன்படிக்கையின்படி நீ எவைகளைக் கைக்கொள்ளவேண்டும்? எப்படி நடக்கவேண்டும்?

கர்த்தருடைய பரிசுத்த கற்பனைகளைக் கைக்கொண்டு, என் வாழ்நாளெல்லாம் அவைகளின்படியே நடக்கவேண்டும்.

வினா. கர்த்தருடைய பரிசுத்த கற்பனைகளெவை?

பத்துக்கற்பனைகளே.

வினா. அவைகளின் மொத்தத்தை இரண்டு கற்பனைகளாகச் சொல்லு?

உன் முழு இருதயத்தோடே உன் தேவனில் அன்புகூர்வாயாக. உன்னைப்போல பிறனில் அன்புகூர்வாயாக.

வினா. ஞானஸ்நானம் பெற்றபோது நீ பண்ணின உடன்படிக்கையின்படி அல்லது உன் ஞானத்தாய் தகப்பன்மார் உனக்காகப் பண்ணின உடன்படிக்கையின்படி நடக்க நீ கடமைப்பட்டவனென்று எண்ணுகிறதில்லையா?

கடமைப்பட்டவன்தானென்று எண்ணுகிறேன்.

வினா. திடப்படுத்தல் பெறும்போது நீ அந்த உடன்படிக்கையை என்னசெய்கிறாய்?

அதை உறுதிப்படுத்துகிறேன்.

வினா. அதை உறுதிப்படுத்துகிறதெப்படி?

அதை என்பேரில் ஏற்றுக்கொண்டு வெளியரங்கமாய் ஒப்புக்கொள்ளுகிறதினாலே உறுதிப்படுத்துகிறேன்.

வினா. அதுமுதல் அந்த உடன்படிக்கையைப் பற்றிப் பொறுப்புள்ளவன் யார்?

நானே பொறுப்புள்ளவனாயிருக்கிறேன்.

வினா. யார் முன்புக்கு அந்த உடன்படிக்கையை உன்பேரில் ஏற்றுக்கொள்வாய்?

கண்காணியாரவர்கள் முன்பாகவும், சபையார் முன்பாகவும்.

வினா. அவர்களுக்கு முன்பாக அதை ஒப்புக்கொள்ளுகிறதினாலே என்ன நன்மையுண்டாகும்?

அந்த உடன்படிக்கையை நிறைவேற்றுகிறதற்கு ஏவுதலும் அதை மீறக்கூடாதென்கிற பயபத்தியுமுண்டாகும்.

வினா. அந்த உடன்படிக்கையை உன்பேரில் ஏற்றுக்கொள்ளுகிறது பயங்கரமான காரியமல்லவா?

அது பயங்கரமான காரியந்தான்.

வினா. அதை நிறைவேற்றுகிறதற்கு உனக்குத்தானே பெலனுண்டா?

பெலனில்லை.

வினா. அப்படியானால் உனக்கு என்ன வேண்டும்?

பரிசுத்தாவியின் பெலன் வேண்டும்.

வினா. திடப்படுத்தலைப் பெறும்போது உனக்குப்பெலன் கிடைக்கும்படி கண்காணியாரவர்கள் உனக்காக என்ன செய்வார்கள்?

பரிசுத்தாவியின் வரங்கள் கிடைக்கும்படி செபம்பண்ணுவார்கள்.

வினா அந்த வரங்களென்ன?

ஞானமும், ஆத்தும பெலனும், மெய்த்தேவபத்தியுமே.

வினா. இன்னொரு விசேஷித்த வரமென்ன?

தேவனுடைய பரிசுத்த பயபத்தியாகிய வரமே.

வினா. கண்காணியாரவர்கள் செபம்பண்ணுகிறதுமல்லாமல், நீயும் என்ன செய்யவேண்டும்?

நானும் பரிசுத்தாவியின்வரங்களுக்காகச் செபம்பண்ணவேண்டும்.

வினா. நீ செபம்பண்ணவேண்டிய வகையென்ன?

"கர்த்தாவே! உம்முடைய பிள்ளையாகிய நான் என்றைக்கும் உம்முடையவனா(ளா)யிருக்கவும், உமது நித்திய இராச்சியத்தில்சேருமளவும் நாடோறும் மேன்மேலும் உம்முடைய பரிசுத்தாவியை அடைந்து தேறவும், உமது பரம கிருபையால் என்னை இரட்சித்தருளும்" என்னும் வார்த்தைகளை இருதயத்துக்குள்ளே சொல்லிக்கொண்டு செபம்பண்ணவேண்டும்.

வினா. பரிசுத்த ஆவியின் வரங்கள் உனக்குக் கிடைப்பதினாலே உனக்கு என்ன நன்மை கிடைக்கும்?

ஞானஸ்நான உடன்படிக்கையை நிறைவேற்றுகிறதற்கும் நான் என்றைக்கும் தேவனுடைய பிள்ளையாயிருக்கிறதற்கும் எனக்குப் பெலனுண்டாகும்.

வினா. திடப்படுத்தலைப்பெறும்போது மாத்திரமா? பரிசுத்த ஆவியின் வரங்களைத் தேடவேண்டும்?

இல்லை. நாடோறும் மேன்மேலும் அந்த வரங்களை யடைந்து தேறவேண்டும்?

வினா. நீ எந்தக்காலமளவும் அந்த வரங்களையடைந்து தேறவேண்டும்.

தேவனுடைய நித்திய இராச்சியத்தில் சேருமளவும்.

வினா. கண்காணியாரவர்கள் உனக்காகச் செபம்பண்ணும்பொழுது ஏன் உன் தலையின்மேல் கை வைத்துச் செபம்பண்ணுவார்கள்?

என்னை ஆசீர்வதிக்க.

வினா. அவர்கள் உன்னை ஆசீர்வதிக்கிறதெப்படி?

தேவனுடைய ஆசீர்வாதம் எனக்குக் கிடைக்கும்படி வேண்டுதல் செய்வதினாலே ஆசீர்வதிக்கிறார்கள்.

வினா. இதுவுமல்லாமல் அவர்கள் கைகளை வைப்பது எதற்கு அடையாளம்?

தேவனுடைய அன்பு எனக்குக் கிடைத்திருக்கிறதை நிச்சயப்படுத்துவதற்கு அது அடையாளமாயிருக்கிறது.

வினா. தேவனுடைய அன்பு உனக்கு எப்போது கிடைத்தது?

கிறிஸ்துநாதர் என்னையும் மற்றெல்லா மனிதரையும் மீட்டுக்கொண்டாரென்கிறதை நான் விசுவாசித்து, அந்த விசுவாசத்தினாலே ஞானஸ்நானம்பெற்றபோது கிடைத்தது.

வினா. உன்பேரில் கண்காணியாரவர்களுடைய கை வைக்கப்படுகிறதும், நீ அவர்களுடைய ஆசீர்வாதம்பெறுகிறதும் உனக்குப்போதுமா?

போதாது. தேவனுடைய கையும் எப்போதும் என்மேல் வைத்திருக்கவேண்டுமென்றும், தேவனுடைய ஆசீர்வாதமும் எப்போதும் என்னிடத்தில் இருக்கவேண்டுமென்றும் நான் விரும்பிக் கேட்கவேண்டும்.

ஜூலைமீ நாள் 31. ஆனிமீ 19உமுதல், ஆடிமீ 18உவரை.

வாரம்.	இங்கிலீஷ் தெய்தி.	தமிழ்த் தெய்தி.	அன்றாடகத் தியானம்.
ஞா	1	௰௬	கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார். 1 சாமு. 16: 7. [ன்.
தி	2	உ0	ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக்கொள்ளுகிறவன் ஞானமுள்ளவ
செ	3	உக	ஒருவருக்கொருவர் விரோதமாய் பேசாதிருங்கள். யாக். 4: 11.
பு	4	உஉ	என் கிருபை உன்னை விட்டு விலகாது. ஏசாயா. 54: 10. [அப். 15:8.
வி	5	உ௩	தேவனுக்குத் தம்முடைய கிரியைகளெல்லாம் தெரிந்திருக்கிறது.
வெ	6	உச	துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமாயிருங்கள். பிலி. 1: 10.
ச	7	உ௫	நீங்கள் ஏன் சாகவேண்டும். எசேக். 33: 11.
ஞா	8	உ௬	இயேசு தாமே சேர்ந்தார். லூக். 24: 15. [25.
தி	9	உஎ	மனுஷனுக்குப் பயப்படும் பயம் கண்ணியை வருவிக்கும். நீதி. 29:
செ	10	உஅ	தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது.
பு	11	உ௬	எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளது. எரே. 17:9.
வி	12	௩0	கர்த்தருடைய நாள் வருகிறது. சகரி. 14: 1. [பிலி. 4: 13.
வெ	13	௩௧	கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும்செய்ய எனக்குப் பெலனுண்டு.
ச	14	௧	தேவனுடைய வழி உத்தமமானது. 2 சாமு. 22: 31.
ஞா	15	உ	சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா. யோவான். 5: 6.
தி	16	௩	தேவனிடத்தில் சேருங்கள். யாக்கோபு. 4: 8.
செ	17	௪	வழக்காடப் பதற்றமாய்ப் போகாதே. நீதி. 25: 8. [லோ. 2: 10.
பு	18	௫	அவருக்குள் நீங்கள் சம்பூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள். கொ
வி	19	௬	விசுவாசத்தினாலுண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும். ரோ.
வெ	20	௭	நீ ஜாக்கிரதையாயிரு. வெளி. 3: 19. [15:18.
ச	21	௮	உங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்புங்கள். எசே. 33: 11.
ஞா	22	௯	உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும். சங்.
தி	23	க0	என் வார்த்தையை உன் வாயிலே அருளினேன். ஏசா. 51: 16.
செ	24	கக	கர்த்தரில் அன்புகூருகிறவர்களே தீமையை வெறுத்துவிடுங்கள்.
பு	25	கஉ	என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள். மத்தேயு. 20: 23.
வி	26	க௩	நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள். அப். 3: 20.
வெ	27	கச	நம்முடைய தேவன் நமக்காக யுத்தம்பண்ணுவார். நெகே. 4: 20.
ச	28	க௫	மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்ல. எரேமி. 10: 23.
ஞா	29	க௬	ஜனங்களுக்காகப் பரிதபிக்கிறேன். மத். 15: 32. [2: 6.
தி	30	கஎ	தம்முடைய கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியம். எபே.
செ	31	கஅ	நீங்கள் நன்மை செய்வதிலே சோர்ந்துபோகாமலிருங்கள்.

விசேஷித்த நாட்கள்.

1. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும், ஐந்தாம் ஞாயிறு.
8. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும், ஆறாம் ஞாயிறு.
11. அமாவாசை.
15. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும், ஏழாம் ஞாயிறு.
22. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும், எட்டாம் ஞாயிறு.
25. பௌரணமி.
29. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும், ஒன்பதாம் ஞாயிறு.

நற்போதகம்.

அ. ஆகஸ்துமீ. ௬அஎஎ௵.

கொரிந்தியரின் இரண்டாம் நிருபம்.

II. அதிகாரம்.

நிருபம் எழுதப்பட்ட இடம்.

இது எழுதப்பட்ட இடத்தைப்பற்றி ஒரு இடத்திலாவது தெளிவாய்க் காட்டப்படவில்லை. இது பிலிப்பிப்பட்டணத்திலிருந்து எழுதப்பட்டதாக முன்னுள்ள ஒரு எண்ணமிருந்தாலும் அப்படி நினைக்கிறதற்கு யாதொரு ஆதாரமில்லை. (இங்கிலீஷ் பைபிளில் இந்த நிருபத்தின் கடைசியிலிருக்கிற கையொப்பத்தைப்பார்.) மக்கேதோனியா நாட்டுச் சபைகள் தரும விஷயத்தில் உதாரமாய்க் கொடுக்கும்படி தேவனால் ஏவிவிடப்பட்டதைப்பற்றி அப்போஸ்தலன் 8-ம் அதிகாரம் 1-ம் வாக்கியத்தில் சொல்லுகிறார். அதாவது, "மக்கேதோனியா நாட்டுச் சபைகளுக்குத் தேவன் அளித்த கிருபையை உங்களுக்கு அறிவிக்கிறோம்" அந்த நாட்டில் அவர் முதலாவது சந்தித்த இடமாகிய பிலிப்புப்பட்டணத்துக்குப்போய் இதை எழுதியிருந்தாரானால் மக்கேதோனியா நாட்டு எல்லாச் சபைகளையும்பற்றி சொல்லியிருக்கமாட்டாரே. அவர் இருந்த இடத்துக்கும் கொரிந்துவுக்கும் ஊடே தெசலோனிக்கை, பெரேயா என்ற இரண்டு இடங்களும் மக்கேதோனியா நாட்டிலிருந்தது.

1 தெசலோனிக்கா. 11 அதி. 17. 18. ஐப் பார்க்கும்போது தெசலோனிக்கைச் சபையை மறுபடியும் பார்க்கும்படி அப்போஸ்தலனுக்கு அதிக ஆவலிருந்ததாக அறிகிறோம்.

நடபடி புத்தகத்தில் இந்தப் பிரயாணத்தைப்பற்றி வெகு சொற்பமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. (20 அதி. 1. 2. வா.)

ஆகையால் அப்போஸ்தலன் தெசலோனிக்கையில் சில காலமி

ருந்தாரென்றும் அந்தக் காலத்தில் அவ்விடத்திலேயே கொரிந்தியருக்கு இரண்டாம் நிருபத்தை எழுதினாரென்றும் நாம் நன்றாய் அனுமானிக்கலாம். ஆகிலும் முன் சொன்னபடி, மக்கேதோனியா நாட்டிலுள்ள அந்த மூன்று இடங்களில் எந்த இடத்திலிருந்து இந்த நிருபம் எழுதப்பட்டதென்று சொல்வது கூடாது.

1-ம் "வா.—எனக்குள்ளே தீர்மானித்துக் கொண்டேன்."

சரியானபடி இதை "என்னிமித்தமாக" என்று திருப்பவேண்டியது.

"மறுபடியும் வராதபடிக்கு."

துக்கத்துடனே தாம் முன்னொருதரம் அவர்களிடத்தில் வந்ததைக்குறித்துப் பேசுகிறார். இது அப்போஸ். 18·1ல் சொல்லிய சந்திப்பல்ல. அப்போஸ்தலர் நடபடியில் இது சொல்லப்படவில்லை.

5-ம் வா.—தனக்கு துக்கமுண்டாக்கினவன் பேரை வெளியிடாததில் பரி. பவுலிடத்தில் விளங்குகிற தயாளத்தை நாம் கவனிக்கவேண்டும்.

11-ம் வா.—மன்னிப்படைவதைககுறித்து நம்பிக்கையற்றுப்போன குற்றவாளியானவன் சாத்தானுக்கு இரையாய்ப்போவான். சாத்தான் ஓர் ஆள் என்பதும், அவன் கிரியைகளையுடையவன் என்பதும் இதில் தெளிவாய்க் காட்டப்பட்டிருக்கிறது.

12-ம் வா.—அப். XX. 1, 2. 1கொரி. 16. 5-9.

இவர் முன்னும் துரோவாவுக்குப் போயிருந்தார். ஆனால் மக்கேதோனியன் ஒருவன் தனக்கு உதவி செய்ய வரவேண்டுமென்று வேண்டிக்கொண்டதாக அவர் அங்கே தரிசனம் கண்டதினால் அங்கே தாமதியாமல் திரும்பிவிட்டார். ஆகையால் இப்போது அங்கே போகவும் பிரசங்கிக்கவும் தீர்மானிக்கிறார். ஆசியாவுக்கு திரும்புகையில் ஏழுநாள் அவ்விடத்தில் தங்கினார்.

13-ம் வா—பரிசுத்தவான்களுக்காக தர்மப்பணம் சேர்க்கவும் விசேஷமாய் அவ்விடத்து சபைக்கு தாம் எழுதிய முதல் நிருபத்தினாலுண்டான பலன்களைத் தெரிந்துவரவும், பவுல் அப்போஸ்தலன் தீத்துவை கொரிந்துப் பட்டணத்துக்கு அனுப்பினார்.

14-ம் வா.—ஜெயகோலபவனியில், செய்ங்கொண்டவர்களும் செயிக்கப்பட்டவர்களுமாக இருவகைக்காரர் போவார்கள். செயிக்கப்பட்டவர்களைப்பற்றித்தான் கொலோசர் நிருபத்தில் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறது. இவ்விடத்திலும் அப்போஸ்தலன்மேல் தேவன் கொண்ட வெற்றியைக்குறிக்கிறதாக டீன் ஆல்பர்ட் என்பவர் உத்தேசித்து, "நமதுமேல் வெற்றிகொண்ட" என்று திருப்பியிருக்கிறார்.

(கிரேக்கை பார்க்க.) ஜெயகோலபவனியில் யாவருமறியத்தக்கதாக தெருக்களில் வாசனைச் சரக்குகளைத் தூவுகிறதும் நெருப்பில் கொளுத்துகிறதும் வழக்கமாயிருந்தது.

Life of Bishop Latimer.

இலத்திமர் கண்காணியார் சரித்திரம்.

(தொடர்ச்சி.)

இராஜ சமுகத்தாரான பலருடைய அறிமுகமும் சிநேகமும் அவருக்குக் கிடைத்திருந்ததென்று மேலே குறிப்பித்தோமே. அதன்மூலமாய் சபையிலே அவருக்கு உயர்ந்த உத்தியோகம் கிடைக்கவும் ஏதுவுண்டாயிருந்தது. ஆகிலும் இராஜ சமுகத்தாருடைய நடபடிக்கைகள் அவருக்குப் பொருந்தாதபடியினாலும், இக்காலத்தில் அவர் அதிகப் பிராயமுள்ளவராயிருந்ததினாலும், தூரமான இடத்தில் தனிமையாயிருந்து வைராக்கியத்தோடு உழைக்கத்தக்கதான ஓர் அலுவலை விரும்பினார். அந்தப் பிரகாரம் வில்ற்றுஷியர் மாகாணத்தில் திவ்விய ஊழியம் நடப்பிக்க அவரை நியமித்தபொழுது, அவர் அதைச் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொண்டு, கூடிய சீக்கிரத்தில் அங்கே சேர்ந்து, வேறெங்கும் போகாமல் தமது அலுவலை ஊக்கத்தோடு நடப்பித்துக் கொண்டு வந்தார்.

இங்கும் அவர் தொல்லையில்லாமலிருக்கக் கூடவில்லை. அவர் மகா சாக்கிரதையாய் உழைத்ததினாலும், சனங்களுடைய உள்ளத்தில் தைக்கத்தக்க விதமாய்ப் பிரசங்கித்ததினாலும், அயல் சேகரங்களிலுள்ள சில குருமார்கள் சீக்கிரம் அவர்பேரில் வெறுப்படைந்து பகை சாதிக்கத் தொடங்கினார்கள். இவர்கள் 1531 ம் ௵த் துவக்கத்தில் அவர்பேரில் பிரியாது செய்ததின்பேரில், கந்தர்புரி சிரேஷ்டகண்காணியார் லண்டன்நகரத்துக் கண்காணியார் முதலிய கண்காணிமார்களுக்கு முன்பாக குற்ற விசாரணைக்கு வரவேண்டியதாயிற்று. இந்த விசாரணையைக் குறித்து அவர் தாமே எழுதியிருக்கிறதாவது; "ஐந்தாறு கண்காணிமார்களுக்கு முன்பாக விசாரிக்கப்பட்டேன். வாரத்தில் மூன்றுவிசை விசாரணைக்கு வந்தேன், என்னிடத்தில் ஏதாகிலும் குற்றங்கண்டுபிடிக்கும்படி அவர்கள் வைத்திருந்த கண்ணிகளும் பொறிகளும் அனந்தம். தேசப் பிரமாணத்தைப் பற்றி எனக்கு ஒன்றுந் தெரியாது, என்றாலும் நான் பேசவேண்டியது இன்னதென்றுணர்த்தப் போதுமான ஞானத்தைத் தேவன் அனுக்கிரகித்தார். தேவன் எனக்குச் சகாயம் செய்யாதிருப்பாராகில் நான் அவர்கள் கைக்குத் தப்பியிருக்கவே மாட்டேன். கடைசிநாளில் நான் விசாரணைக்கு வந்தபொழுது, நான் இதுவரையும் விசாரணைசெய்யப்பட்டுவந்த அந்த அறையில் பல மாறுதல்கள் நடந்திருந்ததாகக் கண்டேன். ஷை அறையின் ஒரு புறத்தில் ஒரு திரையும்; திரைக்கு அப்பால் ஒரு மேசையும் போட்டிருந்தது. என்னை விசாரணைசெய்த கண்காணிமார்களுக்குள் எனக்கு அதிகப் பழக்கமும் நான் எனக்கு உத்தம சிநேகிதனென்று

நினைத்திருந்தவனுமான விருத்தாப்பியன் ஒருவன் மேசையோரமாய் உட்கார்ந்திருந்தான். அவன் என்னிடத்திற்கேட்ட அநேக கேள்விகளில் ஒன்று மகா தந்திரமானதாயும் அபாயம் வருவிக்குமென்று நினைக்க இடமில்லாததுபோலுமிருந்தது. நான் அதற்கு உத்தரம்சொல்லத் தொடங்கவே, அவன் என்னை நோக்கி; என் காது மந்தமாயிருப்பதினாலும் அநேகர் தூரத்தில் உட்கார்ந்திருப்பதாலும் சற்று உரத்துப் பேசவேண்டும் என்றான். இப்படி உரத்துப் பேசச்சொன்னது எனக்கு ஆச்சரியமாயிருந்தபடியால், நான் சமுசயங்கொண்டு மேசையிருந்த பக்கமாய்ச் செவியைச் சாய்த்துக் கவனிக்க, திரைக்கு அப்புறத்தில் இறகு எழுதுகிற சத்தங்கேட்டது. நான் எதையாவது மறுக்கவும் தப்பிக்கொள்ளவும் இடமில்லாதபடிக்கு நான் சொல்லும் உத்தரவுகளையெல்லாம் எழுதும்படி ஒருவனை நியமித்திருந்தார்கள். என்றாலும் இருபதினாறைத்த என் தேவன் விவேகமாய்ப் பேசத்தக்க ஞானத்தைத் தந்தருளினார். மற்றப்படி நான் ஒருக்காலும் தப்பிக்கொள்ள இடமிருந்திராது" என்பதே. விசாரணை முடிவில், உத்தரிக்கும் ஸ்தலம் உபவாசத்தின் புண்ணியம் பரிசுத்தவான்களின் மத்தியஸ்தம் கோவில்களில் சொரூபங்களை வைத்துக்கொள்ளுதல் இவை முதலிய பல உபதேசங்களை ஒப்புக்கொண்டு கையொப்பம் வைக்கும்படியாகக் கேட்டார்களாம். இலத்திமர் என்பவர் இதுகளையெல்லாம் ஒப்புக் கொண்டாரோ இல்லையோ என்று திட்டமாய்ச் சொல்ல இடமில்லை. பொதுப்பட ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கேட்டிருப்பாரென்று நினைக்கத்தக்கது. ஒருவாறு இராசாவின் தயவினாலே இந்தவிதமாய்த் தப்பிக் கொண்டார். சீர்திருத்தத்துக்குக் கருவிகளாயிருந்தவர்கள் இக்காலத்தில் பாப்புமார்க்கத் தப்பறைகள் யாவுக்கும் மூற்றும் நீங்கலாயிருந்தார்களென்று நினைக்க இடமில்லை. அவர்கள் அடைந்த தெளிவு படிப்படியாய்க் கொஞ்சங் கொஞ்சமாய் வந்ததேயல்லாமல் மற்றப்படியல்ல. அவர்கள் முதலாவது ஒரு தப்பறையும் அப்புறம் வேறொரு தப்பறையும் அதற்குப்பின் இன்னொரு தப்பறையுமாக ஒவ்வொன்றாய் வெறுத்துத் தள்ளினவர்களேயன்றி எல்லாவற்றையும் ஒருமிக்கத் தப்பறையென்று உணர்ந்துவிட்டவர்களல்ல. ஆதலால் அவர்கள் போதிக்க ஏற்பட்ட உபதேசங்கள் போதுமான ஆராய்ச்சியும் நிச்சய அறிவுமில்லாமல் படபடப்பாய் ஏனோதானோவென்று அநுசரித்துக்கொண்ட அபிப்பிராயங்களென்று சொல்ல எவ்வளவேனும் இடமில்லை. என்றாலும் லத்திமருடைய இந்த நடபடிக்கையினாலே, சோதனை காலில் ஆவியானது உற்சாகமுள்ளதெனினும் மாமிஷமோ பெலவீனமுள்ளது என்பதைத் திருஷ்டாந்தமாய்க் காண்கிறோம். இவருடைய பிந்திய சரித்திரத்தில் இறிஸ்துநாதர் அருளும் இருபையின் வல்லமை அவருடைய சனங்களின் பலவீனத்தில் நிறைவாகிறதென்பதற்கு திராளான அத்தாட்சி விளங்குகின்றது.

கி. பி. 1533 ம் ஜூலித்தில் பிரிஸ்தல் நகரத்தில் அவர் அநுகூலமாய்ப் பிரசங்கம்பண்ணிக்கொண்டு வந்த முகாந்தரமாய் அவருக்குத் திரும்பவும் தொல்லை நேரிட்டது. இப்பொழுது அவருக்கு விரோதிகளாயெழும்பினவர்கள் அவரை வெகுவாய் ஈக்கிஷை செய்யப் பார்த்தார்கள். அவர்பேரிலே பரிகாசமான பாடல்களையும் உண்டுபண்ணிப் பாடிவந்தார்கள். மேற்படி பாடல்களில் ஒன்று நானதுவரையுமிருக்கிறது. அதன் பொருள் "அவனைத் தப்பறைக்காரனாக அக்கினியில் தகனிக்கிறது நியாயம்" என்பது. அவரைக் கெடுக்கும்படி பாப்புமார்க்கத்தார் கையாடின அதர்மமான வழிவகைகளுக்கும் அவர்களை யே

வின நிஷ்டூர குணத்துக்கும் மட்டில்லை. மேலும் இராஜ சமுகத்தில் அவரைக் கல்வியில்லாத மூடனென்பதுபோல பிதற்றி, அவர்பேரில் இராசாவுக்கிருந்த அபிமானத்தைக் குறைக்கவும் வகைபார்த்தார்கள். அதன்பேரில் தமக்குப் படிப்பும் பிரசங்கத் திறமையும் இல்லையென்று தம்மைக்குறித்து சத்துராதிகள் சொன்னது மெய்யோ பொய்யோ என்று இராசா கண்டுகொள்ளத்தக்கதாக, ஒரு வருஷத்துக்கு ஒய்வு நாடோறும் இராசாவுக்கு முன்பாகப் பிரசங்கிக்கும்படி உத்தரவு கேட்டாராம்.

இவ்வாறு அபத்தமாய் அவர்கள் சாட்டின குற்றத்தினாலே அவர் இராஜதயவை இழந்துபோனதாகத் தோன்றவில்லை. எப்படியென்றால் இதற்குக் கொஞ்சகாலைக்குள்ளாக, கிராம்வேல் பிரபுவின் சிபார்சினால் இராஜாவின் சாப்பிளன் குருக்களில் ஒருவராக நியமகம்பெற்றார். அப்பால் இராஜ சமுகத்திற் பிரசங்கிக்கிறதற்கு அவருக்கு அடிக்கடி சமயம் கிடைத்தது. இந்த வருத்தமான சடைமையை அவர் சாமர்த்தியமாயும் தைரியமாயும் நிறைவேற்றிவந்தார். ஒரு திருஷ்டாந்தம் மாத்திரம் இங்ஙனம் எடுத்துச் சொல்லுகிறோம். ஒரு விசை பிரசங்கிக்கும் பொழுது, ஒரு விஷயத்தில் தம்முடைய அபிப்பிராயத்தை உள்ளபடி தெளிவாய்ச் சொல்லிக் காண்பித்தார். அவருடைய சத்துராதிகளிற் சிலர் இதைக்கொண்டு அவரைக் கெடுக்கும்படி தீர்மானித்து ஆயத்தமாயிருந்தார்கள். அப்படியிருக்கையில் ஒருகாள், சில காரியங்களைக் குறித்து யோசித்துக் கொள்ளும்படி இராஜா அவரையும் வேறு சிலரையும் அழைப்பித்தபொழுது, ஒருவன் இராஜாவுக்கு முன் முழங்காலில் நின்றுகொண்டு, இலத்திமர் அனர்த்தமான உபதேசத்தைப் பிரசங்கித்ததாக அவர்பேரில் குற்றம்பாரித்தான். அதன்பேரில் இராஜா இலத்திமரைநோக்கி "அதற்கு என்னசொல்லுகிறாய்" என்று கேட்க; இலத்திமரும் முழங்காலில் நின்றுகொண்டு மூலாவது தம்பேரில் குற்றஞ்சாட்டினவனை நோக்கி, "இராஜாவுக்கு முன்பாக என்ன பொருளைப்பற்றிப் பிரசங்கிக்கவேண்டுமென்றுசொல்லுகிறாய்! இராஜாவுக்கு முன்பாகப் பிரசங்கிப்பதில் இராஜாவைப் பற்றி ஒன்றுஞ் சொல்லப்படாதென்று விரும்புகிறாயோ? நான் பிரசங்கிக்கவேண்டியது இன்னதென்று ஏற்படுத்துகிறதற்கு அதிகாரம்பெற்றிருக்கிறாயா?" என்று கேட்டுவிட்டு அப்புறம் இராஜாவைப பார்த்து, "நான் தங்களுக்கு முன்பாகப் பிரசங்கிக்கிறதற்கு யோக்கியனென்று ஒருபொழுதும் நினைத்தவனுமல்ல அதை அபேக்ஷித்தவனுமல்ல, என்றாலும் அப்படிச்செய்ய நியமிக்கப்பட்டிருக்கிறேன், நான் பிரசங்கிக்கிறது தங்களுக்குப் பிரியமில்லாத பக்ஷத்தில் என்னைப்பார்க்க நன்றாய்ப் பிரசங்கிக்கத் தக்கவர்களைத் தெரிந்துகொள்வது எனக்குச்சம்மதந்தான், என்றாலும் நான் பிரசங்கிக்கிறது தங்களுக்குச் சித்தமானால் மனச்சாக்ஷிக்கேற்க என் கடமையை நிறைவேற்றும் பொருட்டு கேட்கிறவர்களுடைய ஸ்திதிக்குத்தக்கதாகப் பிரசங்கிக்கும்படி எனக்குத்தரவு அருளவேண்டும், தங்களுக்கு முன்பாகப் பிரசங்கிக்கிறபோல சாதாரண சனங்களுக்குப் பிரசங்கித்தால் மகா மூட்டாளத்தனமாயிருக்குமே" என்றார். அவர் இப்படிக் கபடமில்லாமல் பேசினது இராஜாவுக்குச் சந்தோஷமாயிருந்தது. அப்புறம் மேற்படி குற்றத்தைக் குறித்த பேச்சே இல்லை.

இதுவாயும் அவருக்குத் துணைநின்று இராணியின் தயவும் அவருக்குக் கிடைக்கும்படிசெய்த கிராம்வேல் பிரபுவும் படஸ் என்றவைத்தியரும் அவருக்கு இன்னம் மேலான உத்தியோகமும் அந்தஸ்

தும் கிடைக்கும்படி வகைபண்ணினார்கள். எப்படியென்றால் வொர்ஸ்ற்ர் நகரத்துக்கு ஒரு கண்காணியார் வேண்டியிருந்த பொழுது, இவரை அதற்குச் சிபார்ஸ் செய்தார்கள். இதைப் புதிய உத்தியோகத்தை அவர் மகா ஊக்கத்தோடும் வைராக்கியத்தோடும் நிறைவேற்றிக் கொண்டு வந்தார். அவர் தமக்கிருந்த திறமைக்குத் தக்கதாகவும் கிடைத்த அவகாசத்துக்குத் தக்கதாகவும் தமது அதிகாரத்துக் குட்பட்ட குருமார்களுக்கும் சபையார்களுக்கும் பிரசங்கிக்கிறதிலும் போதிக்கிறதிலும் புத்திசொல்லுகிறதிலும் கடிந்துகொண்டு சீர்ப்படுத்துகிறதிலும் அரிய சாமர்த்தியமும் தளரா முயற்சியுங் காண்பித்தார். என்றாலும் அந்தக் காலத்தில் எல்லாம் குழப்பமும் தாறுமாறுமாயிருந்தபடியால், அவர் விரும்பின சகலத்தையும் செய்ய அவராற் கூடவில்லை. பழய தப்பறையையும் அவ பக்தியையும் எடுபடுத்த அவரால் கூடாதபொழுதில் அவைகளால் தெடுதி நேரிடாதபடி விவேகத்தோடு பிரயாசப்பட்டார். இராசாங்கத்துக்குரிய விஷயங்களில் கையிட்டுக் கொள்வதைப்பார்க்க தமது சேகரத்துக்குரிய கடமைகளே அனுகூலமாய் நிறைவேற்றுவதே அவருக்குக்கரிசனை. ஆகிலும் பார்லியமெந்துச் சங்கத்திலும் கண்காணிமாருடைய ஆலோசனைச் சபையிலும் இராண்மர் சிரேஷ்ட கண்காணியாருக்கு அணுகூலமபண்ணிவந்தார். கி. பி. 1536ம் ஞூ த்தில் கூடிவந்த கண்காணிமார் சபையில் பிரசங்கம்பண்ணினார். அதன்றியும், இராசா திருச்சபைக்குத் தலைமையல்ல வென்று சாதித்த பாஸ்ற்று என்ற ஒருவன் தகனிக்கப்பட்ட சமையத்தில் இலத்திமர் என்பவரையே பிரசங்கிக்கும்படி நியமித்திருந்தது. இந்தத் தக்கரமான காரியத்திலும் அவர் வழக்கப்படி தன்மைசெய்ய முயன்று அந்த மனுஷன் தன் தப்பிதத்தைக் கண்டு உணர்ந்துகொள்ளும்படி தம்மாலியன்றமட்டும் அதியாசையோடு பிரயாசப்பட்டார். என்றாலும் இலத்திமருடைய பிரயாசம் பலிதமாகாமல், அவன்தன் தப்பெண்ணத்தோடேயே மரித்தானும். இந்த மனுஷனுடைய மரணத்தைக்குறித்து என்னென்ன அபிப்பிராயமிருந்தபோதிலும், இலத்திமர் என்பவர் அவனுடைய இரத்தத்தைப்பற்றிக் குற்றமில்லாதவர் என்பது நிச்சயம்.

Bible Sketches and their Lessons.

பாலபோதனை.

சுதேசத்துக்குத் திரும்புதல்.

எஸ்றுவின் ஆகமம், 1-ம், 3-ம் அதிகாரங்கள்.

(தொடர்ச்சி.)

பிரியமானவர்களே, நீங்கள் உயிரோடிருக்குமளவும் இந்தக் காரியத்தைக் கனபத்தியாய் நினைக்கவேண்டுமென்று விரும்புகிறேன். நீங்கள் செய்கிற ஒவ்வொரு பாவமும் தேவகிருபையினாலே மன்னிக்கப்பட்டுப்போனபோதிலும், அதினால் உங்களுக்கோ பிறருக்கோ நேரிடுகிற கெடுதி வெகுகாலத்துக்கு இருக்கும். புண் ஆறிப்போனாலும் தழும்பு இருக்குமே. கடினமான சொல், கோபமான வார்த்தை, வீணை எண்ணம், பொல்லாதநினைவு, கேடானபழக்கம், சோம்பலாய்த்திரிதல், கெட்டபுத்தகங்களை வாசித்தல், பின்னும் பாலியர் தண்டிவிடப்படும் மற்றநேக பாவங்களும், நீங்கள் அதனளுக்கு இடங்கொடுக்கிற பட்சத்தில், உங்கள் சீவகாலமெல்லாம் உங்களுக்குக் கெடுதியையுண்டாக்கும். உலகத்தில் தோன்றின உத்தமரிலும் சிலர், தங்கள் பாலிய நாட்களில் செய்த பாவங்களால் தங்கள் சீவகாலமெல்லாம் பிரலாபித்துக் கொண்டிருந்ததுண்டு. நீங்கள் விழிப்புள்ளவர்களாய் நடக்கவேண்டுமென்றுதான் இதைச் சொல்லுகிறேன். பிரியமானவர்களே, தேவனோக்கி, "கர்த்தாவே என் ஆத்துமாவை உம்மிடம் திருப்பிக்கொள்ளும்" என்று இப்போழுதே ஒவ்வொருவரும் பிரார்த்தியுங்கள்.

சிறையிருப்பிலிருந்து சுதேசத்துக்குத் திரும்பிவந்த இந்த யூதர்கள் மாறிமாறிச் சந்தோஷப்படுகிறதும் துக்கிக்கிறதும், வேலைசெய்கிறதும் பிரார்த்திக்கிறதுமாய் விளங்குகிறார்களே. இவர்களிடத்தில் இன்னம் ஒரு காரியமும் கவனிக்கலாம். மேலே றூற்றிருபத்தாறும் சங்கீதத்திலிருந்து சில வார்த்தைகள் எடுத்துச்சொன்னேனே. அந்த வசனங்களுக்குப்பிறகு, "கர்த்தாவே தெற்கத்தில் வெள்ளங்களைப்போல எங்கள் சிறையிருப்பைத் திருப்பும்" என்று ஒரு பிரார்த்தனை வருகிறதல்லவா. காணுன்தேசத்துப் படத்தைப்பார்த்தால், தேசத்தின் தென்பாரிசத்தில் யோர்தான்நதிக்கும் கடலுக்கும் ஊடே, ஆறுகளோ நீர்க்கால்களோ அவ்வளவாயில்லை. வேனிற்காலமெல்லாம் அந்தச்சீமை காய்ந்து வரண்டுபோய்ப் பாழாய்விளங்கும். ஆனாலும் அந்தமலைச் சரிவுகளிலே, வரண்டுபோன நீரோடைகளிருக்கிறதையும் அவற்றின் ஓரங்களில் வாடிவதங்கிப்போன புல்லும் செடிகளும் நிற்கிறதையும் காணலாம். மாரிகாலத்தில் மேகம்திரண்டு மழை வருஷிக்கிறதோடு, இந்த மலைச்சரிவுகளில் றூற்றுக்கணக்கான நீர்க்கால்கள் பாய்ந்தோடும். வாடிப்போயிருந்த புல்லும் செடியும் மறுபடியும் பச்சையாகி, சிறிது காலம் வனாந்தரம் மகிழுகிறதென்று சொல்லத்தக்கதாகும்.

வரண்டுபோன அந்த நீரோட்டங்கள் மறுபடியும் தோன்றிப், பாழாய்க்கிடந்த தென்சீமையைச் சிறப்பித்துச் செழிப்பிக்கிற வண்ணம் நெடுங்காலம் சிறைப்பட்டுச் சொல்லமுடியாத ஈங்கடமெல்லாம் அனுபவித்து நொந்துபோயிருக்கிற தங்கள்பேரில் தேவன் தமது ஆசீர்வாதத்தைப் பொழிந்துத் தங்களைச் சந்தோஷிப்பிக்க வேண்டுமென்று யூதர்கள் பிரார்த்தித்தார்கள். அந்தப்பிரார்த்தனையைக் கேட்டு தேவன் மாறுத்தாரும் அருளினார். அதினால் யூதர்களுடைய பின்னிலைமை அவர்களுடைய முன்னிலைமையிலும் செம்மையாயிருந்தது. ஒருகாரியத்தில் மூற்றும் சீர்ப்பட்டுப்போனார்கள். அப்புறம் அவர்கள் ஒருபொழுதும் விக்கிரகாராதனையில் விழவேயில்லை. எந்த அஞ்ஞானத் தேவர்களையும் அவர்கள் கும்பிட்டவர்களாலை. ஒரோர்வேளை அவர்கள் தேவனை மறந்துபோனதுமுண்டு, தன்மார்க்கமாய் நடந்ததுமுண்டு. விக்கிரகங்களையோ அவர்கள் ஒருக்காலும் பணியவில்லை. அவர்களுக்கு நேரிட்ட தண்டத்தினால் மெய்த்தேவனை அறிந்து கனப்படுத்தக் கற்றுக்கொண்டார்கள். இதினால் தண்டனையின்பலன் இன்னதென்று அறிந்துகொள்ளலாமே. யூதசனங்கள் விக்கிரகாராதனையை மூற்றும் வெறுத்துவிடத்தக்கதாக அவர்கள் அவ்வளவுகாலம் பாபிலோனில் சிறைப்பட்டிருப்பது அவசியம்போல தோன்றிற்று. மேலும் அந்தத் தண்டத்தின்

மூலமாய் அவர்கள் வேறொரு பெரிய நன்மைக்கும் ஆயத்தம்பண்ணப் பட்டார்கள்.

அந்தத் தேவாலயத்துக்குள் இனி ஒருகாலத்தில் நிற்கப்போகிற மகாத்துமாவை அவர்களில் எவனுகிலும் அறிந்திருப்பானுகில், அந்த முதியோர்களே அழாதிருக்கும்படி சற்பித்திருப்பானென்பதற்குச் சந்தேகமில்லை. "மூந்தின ஆலயத்தின் மகிமையைப் பார்க்கிலும் இந்தப் பிந்தின ஆலயத்தின் மகிமை பெரிதாயிருக்கும்." அவன் என்னமாய்ப் பேசி அவர்களைத் தேற்றியிருப்பானென்றால், இதைப்பார்த்து ஏன் இவ்வளவாய் விசனப்படுகிறீர்கள்? மூந்தின ஆலயத்தைப்போல இது சிறப்பானதுமல்ல, மகிமையானதுமல்ல என்பது மெய்தான். சாலொமோனைப்போல நாம் ஐசுவரியவான்களல்லவே. இதில் தேவசமுகத்தப்பமுமில்லை, உடன்படிக்கைப் பெட்டியுமில்லை. பொன் வெள்ளிப் பாத்திரங்கள் வாங்கிவைக்கவும் நம்மால் ஏலாது. ஆனாலும் ஒருநாள் வருகிறது, அந்த நாளில் இந்தப் பிராகாரங்களுக்குள் ஒரு குழந்தையைக் கொண்டுவருவார்கள். அந்தக் குழந்தையின் பெயர் இயேசு என்பது. உலக இரட்சகர் அவரே. பாவிகளை இரட்சிக்க அவர் உலகத்தில் தோன்றுவார். அவரே உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கப்போகிற தேவஆட்டுக்குட்டி என்பதுபோலபேசியிருப்பானென்று நினைக்கத்தக்கது.

இவ்வாறு பாவத்தினால் நமக்குநேரிடும் எல்லாத்துக்கங்களும் தேவ இரக்கத்தினால் நமக்குக் கிடைக்கும் எல்லாச் சந்தோஷங்களும் பெரிய நன்மைக்கும், மேலான பாக்கியத்துக்கும் நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கவேண்டுமென்பதே கர்த்தருடைய நோக்கம். தண்டனையுங்கூட ஆசீர்வாதந்தான். இருபாகரரான நமது பரமபிதா, பலமுறை தன்பத்தின் மூலமாகிலும் எப்பொழுதும் உத்தம வழியில் தமது பிள்ளைகளை நடத்தி, அவர்கள் தமது திருக்குமாரனைப் பற்றிய விசுவாசத்தினாலே இம்மையில்வேண்டிய இளைப்பாறுதலை அடையவும், அப்பால் மோட்சவீட்டில் நித்திய இளைப்பாறுதலைப் பெற்றுக்கொள்ளவும் அனுக்கிரகஞ்செய்கிறார்.

நெகேமியாவின் சரித்திரம்.

நெகேமியா. 1-ம், 2-ம் அதிகாரங்கள்.

இப்பொழுது ஒரு இராசாவின் அரண்மனையில் நடந்த ஓர் சங்கதியைக் கவனிக்கப்போகிறோம். அந்த இராசாவிலும் அதிக பலசாலி பூமியெங்குமிருந்திலில்லை. அவனுடைய அனுமதியின்றி எவனுகிலும் அவனுடைய சமுகத்திற் போய்விட்டால் தப்பாமல் சிரசாக்கினை யடைவானும். அவனுடைய சமுகத்தில் துக்கமுகமாய்க் காணப்படுவதும் மகாபெரிய குற்றமாக எண்ணப்படுமாம். இவ்வளவாய் சர்வ ஜனங்களும் அவனுக்குப் பயந்திருந்தார்கள். மேற்படி இராசாவின் பெயர் அர்தசஷ்டா என்பது. பூலோகமெங்கும் அவன் "மகராசன்" என்று கொண்டாடப்பட்டுவந்தான்.

அந்த அரசன் ஒரு நாள் சூசான் நகரிலுள்ள அரண்மனையின் அலங்காரமான ஓர் கொலுமண்டபத்தில் மகத்துவம் பொருந்திய ஆசனத்தின்மீது இராணி சகிதமாய் வீற்றிருந்தான். அப்படி வீற்றிருக்கும் சமையத்தில் பிரபுக்களில் ஒருவன் தன் கடைமைப்படி திராட்சரசமிருந்த பாத்திரத்தை யெடுத்து இராசாவின் கையிற் கொடுக்

கும் பொருட்டு இராஜசமுகத்தில் வந்தான். மேற்படி பிரபு, தூரமான ஓர் தேசத்திலிருந்து அத்தினபுரிக்கு வெகுநாள் சிறைப்பட்டிருந்து அப்பால் விடுதலையடைந்து மனமானுல் தம் சுதேசத்துக்குத் திரும்பிப்போக இடம் பெற்றுக்கொண்ட ஒரு சாதியாரைச் சேர்ந்தவன். அந்தச் சலாக்கியம் கிடைத்து இப்பொழுது தொண்ணூறு வருஷமாகிவிட்டது. அநேகர் அந்தப்பிரகாரம் தங்கள் சுதேசத்துக்குப் போய்விட்டார்கள். மற்றவர்கள் தங்கள் பிதாக்கள் சிறைப்பட்டிருந்த தேசத்திலேயே யிருந்துகொண்டார்கள். சிலரோ போகமனமாயிருந்தும் இராசாவின் கட்டளையினால் போகக் கூடாதவர்களாயிருந்தார்கள். இராசாவின் பானபாத்திரக்காரனுயிருந்த மேற்படி பிரபுவும் கடைசியிற் சொன்ன வகுப்பாரைச் சேர்ந்தவனென்று நினைக்கத்தக்கது.

அவன் எடுத்துக்கொடுத்த திராட்சரசமிருந்த பாத்திரத்தை இராசாதன் கையை நீட்டி வாங்கினான். வாங்குகிறதற்குள்ளாக, அவன் முகம் வேறுபட்டுக் கோபப்பிராந்தனுனான். ஏனென்று கேட்கிறீர்களோ? அந்தப் பிரபுவினுடைய முகம் மிகவும் துக்கமாயிருந்ததினாலே தான். அவனிருதயம் மிகுதியும் சஞ்சலப்பட்டிருந்ததினாலே இராசாவின் சமுகத்தில் முதலாய் சந்தோஷமாய்க் காணப்படக்கூடவில்லை. நாலுமாதக்காலமாய் கசப்பான ஒருநினைவு அவனை ஓயாமல் வாதித்துக் கொண்டேயிருந்தது. எப்படியும் இராசாவின் சட்டத்தை மீறிப்போட்டானே. ஆகையினாலே இராசா கடகடப்போடி, ஏன் துக்கமாயிருக்கிறுயென்று கேட்க, பானபாத்திரக்காரன் மிகுதியும் திடுக்கிட்டுப் பயந்துபோய், என் பிதாக்களின் தேசத்திலிருந்து துக்கமான் செய்தி வந்ததினாலே அப்படியிருக்கிறேன் என்றான். அதன்பேரில் நீ கேள்விப்பட்ட செய்தியென்னவென்று இராசா கேட்க, நான் ஒருக்காலும் காணவிட்டாலும் எனக்கு மிகவும் அருமையானபட்டணம் இன்னங் கட்டப்படாமல் அழிவாயே கிடக்கிறதென்று கேள்விப்பட்டேன் என்றான், உடனே இராசாவின் கோபமாறிப்போய் அவன் பேரில் இரக்கமும் தயவுமுள்ளவனுனான். ஒருவேளை அந்த இராசாத்தி அவன்பேரில் மனதருகி அவனுக்காக இராசாவினிடத்தில் பரிந்து பேசியிருக்கலாம். அப்பொழுது அர்தசஷ்டா, நீ கேட்கிற காரியம் என்ன என்க; துக்கத்தில் மூழ்கியிருந்த அந்தப்பிரபு, நான் அந்த நகரத்துக்குப் பிரயாணமாய்ப்போய் என் சனத்தாருக்கு உதவி செய்து அதைத் திரும்பக்கட்டும்படி உத்தரவாக வேண்டுமென்று கேட்டான். இராசா அதைக்கேட்டு, நல்லது போய் வா என்று உத்தரவு செய்தான்.

இவ்வாறு நெகேமியா என்ற அந்தப் பானபாத்திரக்காரன் உத்தரவு பெற்றுக்கொண்டு பயணம் புறப்பட்டான். இராசா அவனை எருசலேம் நகரத்துக்குத் தேசாதிபதியாகவும் ஏற்படுத்தினான். சிறிது நாளைக்குள் அவன் பட்டணம் போய்ச் சேர்ந்தான். முதலில் அவன் தான் அவ்விடத்துக்குப் போயிருந்ததும், செய்யப்போகிறதுமான காரியம் இன்னதென்று ஒருவருக்கும் சொல்லவில்லை. சனங்கள் ஒருவேளை அவன் மகாராசாவினிடத்திலிருந்து ஏதோ இரகசிய காரியமாய் வந்திருக்கிறுனென்று நினைத்திருப்பார்கள். நெகேமியாவின் உள்ளத்தை ஆண்டுகொண்டிருந்த சஞ்சலத்தையாவது அபிமானத்தையாவது அவர்கள் கொஞ்சமென்கிலும் உணரவேயில்லை.

நெகேமியா பட்டணம் வந்து சேர்ந்த இரண்டொரு தினத்துக்குப்பின் ஒருராத்திரியில் சகலமும் அமரிக்கையாயிருக்கிறவேளையில்

இடிந்து பாழாய்க்கிடந்த அலங்கங்களுக்குள்ளே ஒருமிருகம் நடந்து போகிற அரவம் கேட்கிறது. சில மனுஷர் அவனோடுகூட நடந்து போகிறார்கள். இவர் இந்த அர்த்தராத்திரியிலே சவாரிபோகிறாரே, இந்தக் கற்குவியல்களையும் குப்பை மேடுகளையும் பார்க்கிறதில் அவருக்கு என்ன சந்தோஷந்தானிருக்குமோவென்று அவர்கள் ஆச்சரியப்பட்டு ஒருவரோடொருவர் பேசியிருப்பார்கள். ஆகிலும் அவன் தன் மனதிலிருந்ததொன்றையும் வெளியிடாமல் மௌனமாயிருந்து சகலத்தையும் பார்வையிட்டான். நிலவு வெளிச்சமிருந்த அன்றிரவு அவன் போன ஒவ்வொரு இடத்தையும், கண்ட ஒவ்வொரு காட்சியையும் வெகு திட்டமாய் ஞாபகத்தில் வைத்துக் கொண்டதினாலே, அவன் இன்னின்ன வாசல்கள் வழியாய்ப் புறப்பட்டுப் போனானென்றும், தூர்ந்துபோன இன்னின்ன துரவுகளைக் கடந்து போனானென்றும், தான் ஏறியிருந்த மிருகம் நடந்து போகிறதற்கு வழியில்லாமல் இன்னின்ன இடங்கள் குப்பைமேடுகளால் அடைபட்டுப் போயிருந்தனவென்றும் வேதாகமத்தில் தெளிவாய்க் குறிப்பித்திருக்கிறது. மறுநாள் காலையில் எருசலேமிற் குடியேறியிருந்த சனங்களை அவன் வரவழைத்து, தான் கண்டதையும் அவ்விடத்துக்கு வந்திருக்கிற நோக்கத்தையும் அவர்கள் இப்பொழுது செய்யவேண்டியது இன்னதென்பதையும் அவர்களுக்கு அறிவித்தான். உடனே அவர்கள் "எழுந்து கட்டுவோம் வாருங்கள்" என்று சொன்னார்கள்.

இந்த நல்லவேலை எவ்வாறு நடந்தேறினது என்று நெகேமியாவின் ஆகமத்தில் விவரித்திருக்கிறதே. பழைய ஏற்பாடு முழுமையிலும் எனக்குத் தோன்றுகிறபடி இந்த ஆகமத்தைப்பார்க்க அதிக இனிமையானது வேறொன்றில்லை. அப்படியே உலகசரித்திரம் முழுமையிலும் நெகேமியாவைப்பார்க்க அதிக விவேகமும் உத்தமமுமான தேசாதிபதியைக் காண்பதும் அரிது. இந்த ஆகமம் முழுமையையும் இப்பொழுது வாசிக்காமல், அதிலடங்கிய சில போதனைகளைமாத்திரம் கவனித்துக் கொள்ளுவோம். சரித்திர வரலாறுகளை நீங்களே சாவகாசத்தில் வாசித்துக் கொள்ளுங்கள்.

இதில் முதலாவது தேசாபிமானத்துக்கு நல்ல திருஷ்டாந்தம் காண்கிறோம். நெகேமியாவுக்கு யூதேயா சொந்தத் தேசமாயிருந்தது. எருசலேம் நகரம் நெபுகாத்நேச்சாரால் அழிக்கப்பட்டுப்போய் இப்பொழுது நூற்றைம்பது வருஷத்துக்கு அதிகமாகிவிட்டது. இராசாவின் பானபாத்திரக்காரனுக்கு அந்த அஞ்ஞான தேசத்தில் செல்வமும் கனமும் சுகமும் போதுமான அளவிருந்தது. என்றாலும் அவைகளெல்லாவற்றையும் பார்க்க அவன் எருசலேமை அதிகமாய் நேசித்தான். அது ஏனென்று கேட்கிறீர்களோ? அவன் பிதாக்களின் கல்லறைகள் அங்கேயிருந்தன. தேவனுடைய வாக்குத்தத்தம் அங்கேயிருந்தது. வரப்போகிற மேசியாவைப்பற்றிய நம்பிக்கையும் அங்கேயிருந்தது. ஆகையால் அவன் "அதின் கற்களின்மேல் ஆசைவைத்து" சீயோனின் மண்ணின்பேரிலும் பிரியங்கொண்டிருந்தான்.

பிரியமானவர்களே, மெய்மார்க்கம் நம்முடைய சொந்தத்தேசத்தை நேசிக்கவே போதிக்கிறது. நெகேமியாவுக்கிருந்த முகாந்தரங்கள நமக்கில்லையென்றாலும் நமக்கும் முகாந்தரங்களில்லையோ? நமக்கிருக்கிற முகாந்தரங்களும் அவைகளைப்போல பலமானவைகள் தான். இந்து தேசம் நம்முடைய சொந்தத்தேசம். இங்கேயே நம்முடைய பிதாக்களும் முற்பிதாக்களும் வாசம்பண்ணினது. அவர்கள் அஞ்ஞானத்திலும் அறிவீனத்திலும் மூழ்கியிருந்தார்கள். நமக்கோ

மெய்வேதமும் மெய்மார்க்கமுங் கிடைத்திருக்கிறது. மெய்த்தேவனை ஆராதிக்கிற ஆலயங்களும், நல்லொழுக்கமும், தேவபக்தியும் புகட்டப்படுகிற ஓய்வுநாள் பள்ளிக்கூடங்களும் இப்பொழுது இங்கே உண்டு என்றாலும் நம்முடைய தேசத்தாரில் எண்ணிறந்தபேர்கள் மெய்த்தேவனையும் அவர் அனுப்பின கிறிஸ்து இரட்சகரையும் அறிந்து பற்றிக்கொள்ள மனமில்லாமல் கல்லையும் மண்ணையுங் கும்பிடுகிறவர்களாயிருக்கிறார்களே. ஆகையால் நாம் நம்முடைய தேசத்தையும் தேசஸ்தர்களையும் நேசித்து நமக்குக் கிடைத்திருக்கிற நன்மைகள் அவர்களுக்குங் கிடைக்கும்படி பிரயாசப்படவேண்டும்.

இரண்டாவது. விவேகியும் உத்தமனுமான இந்தத்தேசாதிபதி விசேஷமாய்ச் செபசிந்தையுள்ளவனாயிருந்ததாகக் கவனிக்கிறோம். நெகேமியாவின் ஆகமத்தில் அநேக செபங்களைக் காணலாம். முதலாம் அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள். அது கொஞ்சங்குறைய முழுமையும் தேவனை நோக்கி ஆவலோடு பண்ணின ஒரு செபந்தான். அவன் அர்தசஷ்டாவின் சமுகத்தில் நிற்கையிலும் இராசா நீ கேட்கிற காரியமென்னவென்று விசாரித்தபொழுது அவனுக்குப்பதில் உத்தரம் சொல்லுமுன் "பரலோகத்தின் தேவனை நோக்கிப் பிரார்த்தித்தேன்" என்று சொல்லுகிறானே. இது வாயினாலே உச்சரித்த செபமல்ல. க்ஷணத்தில் மனதிலே எழும்பின செபமென்றற்குச் சந்தேகமில்லை. தேவன்பேரிலுள்ள நம்பிக்கையும் அன்பும் அவன் உள்ளத்திலிருந்து எழும்பி தேவதூதனைப்போல் தேவனுக்குச் செய்திகொண்டு போயிற்று என்று சொல்லலாம். அவன் வேலை நடத்தும்பொழுது சத்துருக்கள் வந்து பரியாசம்பண்ணி அலங்கத்தைக் கட்டிமுடிக்கவே மாட்டார்களென்று சொன்னபொழுதும் நெகேமியா செபம்பண்ணுகிறதைப் பார்க்கிறோம். அவன் தனக்குநேரிட்ட இடையூறுகளையுந் தொல்லைகளையும் விவரித்துக்கொண்டு வருகையிலும் இடைக்கிடையே தேவனை நோக்கிப் பிரார்த்திக்கிறான். வேலை முடிந்தபிறகும் சனங்களெல்லாரும் ஒன்றாய்க் கூடிவரச்செய்து கனபத்தியாய் தேவனை ஸ்துதித்து, தங்கள் பாவங்களையறிக்கையிட்டு இரக்கத்துக்காக அவரைக் கெஞ்சும்படி செய்கிறான். இந்த ஆகமத்தின் கடைசிவார்த்தைகள் முதலாய் தாழ்மையும் வணக்கமுமான செபமாயிருக்கிறது. "என் தேவனே எனக்கு நன்மையுண்டாக என்னை நினைத்தருளும்" என்று பிரார்த்தித்து ஆகமத்தை முடிக்கிறான்.

Notes on Leviticus.

லேவியராகம வியாக்கியானம்.

௰௧: அதிகாரம்.

புசிக்கத் தக்கவைகளும் புசிக்கத் தகாதவைகளுமான பிராணிகள்.

3. இந்த வேற்றுமையானது, தேவனுடைய எந்தச் சிருட்டியையாவதுபிழை கூறும்படி சொல்லப்பட்டிருக்கிறதாக எண்ணக்கூடாது. (ஆதி. 1. 31) ஆனால் இந்த வேற்றுமை: இஸ்ரவேலர் மற்றச்சாதியா

ரோடு கலந்துபோகாதபடி அவர்களை விலக்கவும், விசேஷமாய் அவர்கள் விக்கிரகாராதனை விருந்துகளுக்குப் போகாதபடி இவர்களுக்கு அருவருப்புண்டாக்கவும் கோக்கமாய்க் கற்பிக்கப்பட்டது. மேலும் இந்த வேற்றுமை சுகத்துக்கும் சுத்தத்துக்கும் ஏற்றது. புசிக்கும்படி கட்டளையிடப்பட்ட மிருகங்கள், சகல தேசத்தாரும் சுகத்துக்கேதுவாய் தேகத்தை வளர்க்கத்தக்க இறைச்சியுள்ள மிருகங்களென்று ஒப்புக்கொள்ளப் பட்டனவைகளாம்.

சுத்தமானமிருகம் என்னப்பட்டதற்கு இந்த வாக்கியத்திற்காட்டிய அடையாளங்களெல்லாம் இருக்கவேண்டும். விரிகுளம்பு இரண்டுக்கு அதிகமாய்ப் பிரிந்திருக்கக்கூடாது; ஒட்டகத்துக்குப்போல் அரைகுறையாயிருக்கவும்கூடாது.

4. அரபர் ஒட்டகத்தின் இறைச்சியைத் தின்பார்கள்; பாலையும் குடிப்பார்கள்.

7. கிழ் தேசத்தார் வழக்கமாய் பன்றி மாம்சம் புசிக்கிறதில்லை. எகிப்தியர், விக்கிரகாராதனை விருந்துகளில்மட்டும் சாப்பிடுவார்கள். பன்றி மாம்சம் சாப்பிடுவது தோல் வியாதி உண்டாக்கும் என்று கிழ் தேசத்தார் சொல்வார்கள்.

9. சிறகும் சிதலுமுள்ள மீன்கள் சுகத்துக்கும் தேகத்தை வளர்க்கிறதற்குமேற்றவைகளாம்.

13. இதைக்குறித்தும் பொதுவிதி சொல்லப்படாமல், அசுத்தமானது இன்னின்னதென்று பேர் கூறப்பட்டிருக்கிறது. இதில் ஒவ்வொன்றும் அதினதின் சாதியையும் குறிக்கிறதென்று தோன்றும்.

22. சில தேசங்களிலுள்ள எளியவர்கள் வெட்டுக்கிளிகளைச் சாப்பிடுவார்கள்.

42. "ஊர்வன" மயிர்க்குட்டி, புழு, பூரான், விசேஷமாய் பாம்புகள் ஆகிய இவற்றைக்குறிக்கும்.

45. இந்தச் சடங்காசாரத்துக்கடுத்த பரிசுத்தமானது, தேவன் தமதுசனங்களிடத்தில் இருக்கும்படி விரும்புகிற சுத்தமான குணநடத்தைகளைக் காட்டுகிறதாயிருக்கிறது. (1பேதுரு 1: 16.) இந்தக்கட்டளைகளைக் கவனமாய்க் கைக்கொள்வதால், தாழ்மையானஆவி முயற்சியடைந்து பலப்படும். இது மெய்யான பரிசுத்தத்தை உண்டாக்க வழியாகும். இந்த ஆசாரங்களானது இஸ்ரவேலர் சூழ இருக்கிற விக்கிரகாராதனைக்காரரோடு கலந்துபோகாதபடி அவர்களைக் கட்டுகிறதாயிருந்தது.

படிப்பினை.

நாம் இந்த உலகத்தைவிட்டுப் பிரிந்தவர்களாய் அதாவது இவ்வுலகத்தின் ஆசை இச்சைகளில் சிக்கிக்கொள்ளாமல் நமது மனதைப் பரவசப்படுத்தி நடக்கவேண்டும். நமது கால்கள் பொல்லாப்புக்குப் பிரிந்து நடக்கவேண்டும். 3. நமது தேகத்தின் ஆசை இச்சைகளுக்கு மட்டுக்கட்டவேண்டும். நமது தேகம் ஒரு மிருகத்துக்குச் சமானம். அதை மிஞ்சவிடாதபடி நமது ஆத்துமாவின் சத்துவங்களைக்கொண்டு அதை அடக்கி ஆளவேண்டும். கிறிஸ்துநாதருடைய பரிசுத்தமான சரீரத்துக் கொப்பாகப் பரிசுத்தமாய்க் காத்துக்கொள்ளவேண்டும்.

௴. அதிகாரம்.

பிள்ளைப்பெற்றவள் தீட்டுக்கழித்தல்.

5. ஸ்திரீயானவள் முதலாவது வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்குட்பட்டபடியினாலே இரட்டிப்பானகாலம் விதிக்கப்பட்டதென்று சில வியாக்கியானிகள் நினைக்கிறார்கள்.

8. நமது கர்த்தருடைய தாயார் ஏழைச்சனங்களைச் சேர்ந்தவளாயிருக்கவேண்டும். லூக். 2: 24.

படிப்பினை.

மனுஷரெல்லாரும் அசுத்தமான பாவிகள். இந்தப்பாடத்தை தேவன் பலவகையாய் மனுஷருக்குப் படிப்பிக்கிறார். இந்தப்பாடத்தைப் படிக்க மனுஷருக்குப் பிரியமுமில்லை, லேசாய் வருகிறதுமில்லை. ஆகையால் இந்தப்பாடம் எப்போதும் மனுஷர் கண்களுக்கு முன்னிருக்கும்படியாக இவ்வகை முறைமைகளை ஏற்படுத்தினார். கிறிஸ்துவுக்குள் ஆணென்றுமில்லை; பெண்ணென்றுமில்லை. எல்லாருக்கும் ஒன்றுபோல் சுத்திகரிப்பு வேண்டும்.

௵. அதிகாரம்.

குஷ்டரோகியின் ஏற்பாடு.

2. "குஷ்டரோகம்." இது தேகத்தின் தோலின்மேலுண்டாகிற அவலட்சணமான ஒரு கொடியவியாதி. இது எகிப்திலும் ஆசியாவிலும் அதிகமாயுண்டு. சிலவேளை இது பாவத்தினிமித்தம் விசேஷித்த கோபாக்கினையாகச் செலுத்தப்பட்டது. அதினாலே இது வாதை அல்லது அடியென்று சொல்லப்பட்டது. எண். 12: 10. 2இரா. 5: 27. 2நாளா. 26: 20. குஷ்டரோகமானது பாவத்துக்கும் அதின் பலனுக்கும் ஏற்ற உபமானமாம். குஷ்டரோகி சுத்திகரிப்பின் முறைமையில் இதற்கேற்ற அநேக நல்ல ஒப்புமைகள் உண்டு. 14ம் 15ம்அதி. காண்க.

5. மூன்றுவகைக் குஷ்டரோகம் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் இரண்டுவகை கொடூரமானது. இந்த இரண்டுவகையில் ஒன்று உடனே கண்ணுக்குத் தெரிகிறதில்லை. பார்வைக்கு அதிக சேஷ்டைசெய்யாத தடிப்பு தடிப்புப்போல் தானிருக்கும். பிற்பாடுதான் தன் குணத்தைக் காண்பிக்கும். ஆகையால் மறுபடி மறுபடி சோதிக்கப்படவேண்டியதாயிருந்தது.

18. "புண்." சிலவேளை இடவிசேஷத்தால் வேக்காடுண்டாகி புண்போலுண்டாகும். இது குஷ்டரோகத்துக்கு வழியுண்டாக்கும். இந்தவகைக் குஷ்டரோகம் இங்கே சொல்லப்படுவதாகத் தோன்றும்.

24. இந்தவகையும் முன்னது போல்தான். நெருப்புப்பட்டபுண், உள்ளுக்கு மறைந்திருந்த வியாதியை வெளிக்குக்காட்டுகிறதாக நினைக்கப்படுகிறது.

45. இவைகள் தூக்கத்துக்கும் சிறுமைக்கும் அடையாளங்கள். குஷ்டரோகமானது தெய்வதண்டனையாக எண்ணப்பட்டது.

46. இது ஒட்டுவாரொட்டி வியாதியானதால் இது மற்றவர்களையும் தொற்றிக்கொள்ளாதபடி கீழ் தேசங்களின் சில இடங்களிலே குஷ்டரோகிகளுக்கென்று கட்டப்பட்ட பிரத்தியேகமான வீடுகளும் ஊர்களும்கூட இன்னமிருக்கிறது. இதிற்காட்டிய சட்டம் பட்சபாதமில்லாமல் வெகுகண்டிப்பாய்ச் செலுத்தப்பட்டு வந்தது. மோசேயின் சகோதரி மிரியாம்கூட இச்சட்டத்துக்கு நீங்கலாயிருக்கவில்லை. எண். 12: 15. பிற்காலத்தில் உசியா ராசா. 2ராளா. 26: 19-21. 2இரா. 7: 3. லூக். 17: 12.

47. வஸ்திரத்திலும் வீடுகளிலும் தோன்றும் குஷ்டரோகத்தின் தன்மையைக்குறித்து தீர்மானிப்பது வருத்தமானகாரியம். 14: 33-53. ஆகையால் அது இஸ்ரவேலருக்கு மட்டுமுரியதென்று சிலபேர் நினைத்திருக்கிறார்கள். என்றாலும் இது தேவனுலே வந்ததென்று தீர்மானமாய்ச் சொல்லப்படவில்லை.

படிப்பினை.

நாமெல்லாரும் சுபாவப்படி பாவக் குஷ்டரோகிகளாயிருக்கிறோம். கிறிஸ்து ராட்சசரிடத்திற்போய், "ஆண்டவரே! உமக்குச்சித்தமானுல என்னைச் சுத்தமாக்க உம்மாலேயாகும்" என்று கெஞ்சுவோமாக. அப்போது "யேசு தமது கையை நீட்டி, எனக்குச் சித்தமுண்டு சுத்தமாகு" என்பார்.

௰சு. அதிகாரம்.

குஷ்டரோகியின் சுத்திகரிப்பு.

---

2. குஷ்டரோகமானது பாவத்துக்குத் திட்டமான அடையாளமுள்ளது. ஆகையால் தேவஇரக்கத்தை நன்றியறிதலோடேபாராட்டி, சுத்திகரிக்கிற சடங்காசாரங்களோடும், பலிகளோடும், பாவஅறிக்கையோடும், குஷ்டரோகம் நீக்கப்படவேண்டும்.

4. "கேதுரு." இது ஞெய்மலையிலுள்ள ஓர் மரம். லீபனோன் மலையிலுள்ள கேதுருவனந்தரத்திலிருந்தஇஸ்ரவேலருக்குத்தெரியாது.

"ஈசோப்." இது எகிப்திலுள்ள ஓர் செடி. சிறுய்வனந்தரத்திலும், பலஸ்தீனுவிலும் உண்டு. இதின்மூடி 3 அல்லது 4அடி நீளத்தில் இருக்கும். இதச்செடியில் குணமாக்கும் தன்மை இருந்ததென்று ஒருவர் சொல்லுகிறார்.

7. உயிருள்ள குருவியை வெளியேவிட்டுவிடுவது, வெள்ளாட்டுக்கடாவை வெளியே விட்டுவிடுகிற பாவனையாய் இருந்தது. 16: 10, 22.

14. இத்தச்செய்கை, மனுஷன் முழுவதுமாய்ச்சுத்திகரிக்கப்பட்டதற்குக்குறிப்பாம். எப்படித் தெரியுமென்றால், இப்படிச் செய்வது, வாக். 17, 18. ஞல் தோன்றுகிறபடி, அந்த மனுஷன் தன் இரட்சகராகிய தேவனுக்குத் தன்னை முழுவதுமாய் ஒப்புக்கொடுத்ததைக் காட்டுகிறது. 13-18வரையுள்ள வாக்கியங்களில் சொல்லுகிற சடங்காசாரங்களெல்லாங்கூடி, நமக்கு ஓர் காரியத்தை ஞாபகப்படுத்துகிறது. அதாவது பாவி நீதிமானுக்கப் படுவதற்குக் கிறிஸ்துவின் இரத்தம் ஆதாரமாய்ச் சொல்லப்படும்பொழுது, பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகமானது பாவி பரிசுத்தவானுக்கப் படுவதற்காகச் சொல்லப்பட்டிருக்கிறது என்று நாம் எண்ணிக்கொள்ளவேண்டும். இந்த இரண்டு

காரியங்களும் ஒருபோதும் பிரிக்கப்படாதவைகள். இவ்விரண்டும் நாம் தேவனுலே அங்கிகரிக்கப்படுவதற்கு அவசியமானவைகளாம். எபி. 10: 22. 1யோவா. 2: 20.

படிப்பினை.

பாவத்தையும் அழுக்கையும் நீக்கத் திறக்கப்பட்ட ஊற்றண்டையிருக்கிறது. நாம் அதில் மூழ்கி நம்முடைய பாவத்தையும் தீட்டையும் நீக்குவோமாக.

௰ரு. அதிகாரம்.

இந்த அதிகாரத்திலடங்கிய சட்டங்கள் அவனவன் தன் தனக்குத்தத்தாக சுகத்தைக் காத்துக்கொள்ள வேண்டுமென்ற நோக்கமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. நாம் பரிசுத்த தாவீதைப்போல், "தன் பிழைகளை உணருகிறவன் யார்! மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும்" என்று கர்த்தரை நோக்கிச்செபிக்கவேண்டும்.

௰சு. அதிகாரம்.

பாவநிவர்த்தியின் வருஷாந்த உபவாசநாள்.

---

3. யூதருக்குள் பாவநிவர்த்தியின் வருஷாந்த உபவாசநாளானது மகா முக்கியமான ஏற்பாடாயிருந்தது. இந்த நாளில் மகா ஆசாரியன் மகா முக்கியமான ஏற்பாடாயிருந்தது. இந்த நாளில் மகா ஆசாரியன் தன் உத்தியோகத்துக்குரிய அலங்காரமான வஸ்திரங்களைக் களைந்துவிட்டு, ஆசாரியர் வழக்கமாய் உடுத்திக்கொள்ளுகிற வெள்ளை வஸ்திரத்தைத் தரித்துக்கொண்டு, "முன்பு சொந்தப் பாவங்களுக்காகவும், பின்பு ஜனங்களுடைய பாவங்களுக்காகவும்" பலிகளைச்செலுத்தினுன் (எபி. 7: 27.) இத்தச்செய்கை, நமக்கு நித்தியமீட்பைச் சம்பாதிக்கும்படித் "தம்மைத்தாமே வெறுமையாக்கித்" "தம்மைத்தாமே பலியிட்ட மகாபிரதான ஆசாரியரை" முன்குறித்தது. கொல்லப்படாமல் அக்கிரமங்களை எல்லாம் தன்மேல் சுமந்துகொண்டு "அதற்கான ஆள்வசமாய் வனந்தரத்துக்கு அனுப்பிவிடப்பட்ட" இரண்டாம் பலியானது(21), அறிக்கையிடப்பட்டு நிவாரணமான பாவங்களை தேவாட்டுக்குட்டியாகிய "அவர்மேல் விழப்பண்ணி" (ஏசா. 53: 6.), இப்படியாகப் பாவத்தை ஜனங்களை "விட்டு விலக்கி" (சங். 103: 12), என்றைக்கும் "நீக்கிப்போடுவதை" முன்குறிக்கிறதாயிருந்தது. (எபி 9: 26.)

ஆசாரியனும், பலியும், பிராயச்சித்தநாளில் நடந்த சம்பவங்களுமெல்லாம்கூடி, "தம்மைத்தாமே பலியிடுகிறதினுலே பாவங்களை நீக்கும்பொருட்டாக இந்தக்கடைசிக்காலத்திலே (எல்லாருக்காகவும்) ஒரேதரம் வெளிப்பட்டன" மீட்பர் செய்த பிராயச்சித்தத்துக்கு ஒரு முக்கியமான முன்னடையாளமாயிருந்ததென்று, எபி.9ம் அதிகாரத்தில் விபரமாய்ச் சொல்லியிருக்கிறது.

5. பிராயச்சித்தத்தையும் மன்னிப்பையும் காட்டும்படி இரண்டு வெள்ளாட்டுக் கடாக்கள் அவசியமாயிருந்தது. இரத்தம் சிந்துவதால் பிராயச்சித்தத்தையும், பாவத்தைச் சுமந்து நீக்கிப்போடுவதால் மன்னிப்பையும். 15, 21.

13. மகா ஆசாரியன் வருஷத்துக்கு ஒருமுறை மகா பரிசுத்தஸ்லத்திற்குட் பிரவேசித்து நிரைக்குட்புறமாக தூப மேகம் சூழ்ந்த வனுயிருப்பதும், பலியின் இரத்தத்தைக் கையில்கொண்டுபோவதும், மீட்பர் பரலோகத்துக்குப்போய் தமது பிதாவுக்கு முன்பாக தமது பிராயச்சித்த இரத்தத்தைக்காட்டி நமக்காகப் பரிந்துபேசுவதைக் காட்டும் முன்னடையாளமாயிருந்தது. மகா ஆசாரியன் அந்த நாளுக்குரிய வேலைகளை முடிக்கும்படியாக பரிசுத்தஸ்தலத்திலிருந்து வரு முன் தன் அலங்காரவஸ்திரங்களை மறுபடியும் தரித்துக்கொண்டது, (24 வாசி), இரட்சகர் கொஞ்சக்காலம் தாழ்வானநிலைமை அடைந்திருப்பதையும் அவர் இரண்டாந்தரம் தரிசனமாகும்படி இப்பொழுது அடைந்திருக்கும் மகிமையையும் திட்டமாய்க் காண்பித்தது. (எபி. 9: 28).

"தான் சாகாதபடிக்கு." தான் சாகாதபடிக்குள்ள நம்பிக்கை மகா பெரிய பிராயச்சித்தத்தின்மூலமாய் தேவன் வெளிப்படுத்தின இரக்கத்திலிருக்கிறது என்பதைக் காட்டுகிறது.

14. "கீழ்ப்புறமாக." அதாவது சிருபாசனத்துக்குக் கீழ்ப்புறமாக அதற்கு எதிரே மேல்திசையைநோக்கி நின்று என்று அர்த்தமாம். 15ஞல், அவன் சிருபாசனத்தின் மேலும் சிருபாசனத்துக்கு முன்னிருக்கும் தரையிலும் தெளிக்கவேண்டும் என்று விளங்குகிறது.

17. "ஒருவரும்." வழக்கமாய் பரிசுத்தஸ்தலத்துக்குள் போய் வேலை செய்து வந்த ஆசாரியர் முதலாய் இருக்கலாகாது. இந்தக்கட்டளை முன்னடையாளத்தை அதிகத்தெளிவாக்குகிறது. எப்படியென்றுல் மகா ஆசாரியன் இந்தநாளில் ஒன்றியாய் பிராயச்சித்தம் செய்தது அவனுலே முன்குறிக்கப்பட்டவர் ஒன்றியாய்த் தாமாகவே பிராயச்சித்த கிரியையை முடிப்பதற்கு அடையாளமாயிருந்தது. மத்தே. 27: 56. யோவா. 18: 8. ஏசா. 63: 3.

18. இது பிரகாரத்திலிருந்த பலிபீடம் என்பதற்குச் சந்தேகமில்லை. பரிசுத்தஸ்தலத்திலிருந்த தூபபீடத்தைக் குறிக்கமாட்டாது. ஏனென்றுல் பரிசுத்தஸ்தலமும் மகா பரிசுத்தஸ்தல்மும் இதற்கு முன்னே சுத்திகரிக்கப்பட்டாயிற்று.

26. பாவத்தைச் சுமந்தபோன போக்காட்டைத் தொட்டவர்கள் அசுத்தமானுர்கள். (24 வாசி).

29. "தாழ்மைப்படுத்து" உபவாசத்தினுலும் பாவஅறிக்கையினுலும் தாழ்மைப்படுத்தவேண்டும். ஜனங்களுடைய இருதயத்தில் பாவத்தைக்குறித்த உணர்வு புறக்காரணங்களினுலே ஆழமாய் உண்டாகி வெளியரங்கமான தக்கத்துக்கேதுவாகும்படி செய்யவேண்டியதாயிருந்தது.

படிப்பினை.

"பழையஏற்பாடு முக்காடிடப்பட்ட புதியஏற்பாடு. புதியஏற்பாடு மூக்காடெடுபட்ட பழையஏற்பாடு" என்று ஒரு சாஸ்திரியார் சொல்லுவது வாஸ்தவமே. இந்த அதிகாரம் அதற்கு ஒரு நல்ல திருஷ்டாந்தமாம். பாவநிவாரணத்துக்கு காளை, வெள்ளாட்டுக்கடா இவற்றின் இரத்தத்தைப்பார்க்கிலும் மேலான இரத்தம் சிந்தப்படவேண்டும் என்று விளங்குகிறது. கிறிஸ்துநாதர் நம்முடைய மகா பிரதான ஆசாரியராகவும், நம்முடைய பலியாகவும், நம்முடைய காரியக்கர்த்தாகவும், நம்மைப் பாவத்தினின்று விடுதலையாக்குகிற இரட்சகராக

வும் இந்த அதிகாரத்தில் முன்குறிக்கப்பட்டிருக்கிறார். ஆகையால் தன்மனச்சாட்சி நீங்கத்தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயிருப்போமாக.

ஏ. அதிகாரம்.

ஆசரிப்புக்கூடாரத்தில் மட்டும் பலிசெலுத்துவது.

3. இங்கே சொல்லிய கட்டளை பலிக்காகக் கொல்லப்பட்ட மிருகங்களையோ, புசிக்கும்படி கொல்லப்பட்ட மிருகங்களையோ எதைக்குறித்துச் சொல்லப்பட்டதென்று தெளிவாகவில்லை. உபா. 12: 13-15 வாசி. இஸ்ரவேலர் புசிக்கும்படி கொல்லுகிற ஒவ்வொரு மிருகத்தையும் ஆசரிப்புக் கூடாரவாசலுக்குக் கொண்டுவர வேண்டுமென்ற சட்டமிருந்தால், அந்தச்சட்டம் அவர்கள் வனந்தரத்திலிருந்த காலத்துக்குமட்டும் கொடுக்கப் பட்டதாயிருக்க வேண்டும். அவர்கள் கானான் தேசத்தில் பிரவேசித்த பின்னும் இப்படிச்செய்ய வேண்டுமென்று குறிக்கமாட்டாது. இந்தச்சட்டம் எந்தக்கருத்துள்ளதாயிருந்தாலும், விக்கிரகாராதனைக்கு வழியுண்டுபண்ணுகிற வீண் சடங்காசாரங்களைத் தடுக்கும் நோக்கமாய்க் கொடுக்கப்பட்டதென்று விளங்குகிறது. கீழ் தேசத்தாருக்குள் சாதாரணமான சமயங்களில் அவ்வளவாய் மாம்சம் சாப்பிடுகிறதில்லை. முக்கியமாய் பண்டிகை நாட்களில்தான் மிருகங்களைக்கொன்று சமைப்பார்கள். ஆகையால் இந்தக்கட்டளைகள் அவர்களுக்குப் பாரமாயிருக்கமாட்டாது.

7. "பேய்கள்" என்று திருப்பப்பட்டிருக்கிற எபிரேயு வார்த்தைக்கு 'சடையுள்ளவைகள், என்றர்த்தம். இது வெள்ளாட்டுக் கடாக்களைக் குறிக்கும். அஞ்ஞானத் தெய்வங்கள் பெரும்பாலும் இந்த வடிவத்தால் காட்டப்படும்.

"சோர மார்க்கம்" என்பது இஸ்ரவேலின் தேவனுகிய யெகோவாவுக்கு விசுவாசத் துரோகமாய் நடப்பது சோரமார்க்கமாம். யாத்தி. 34: 12-26. இஸ்ரவேலர் எகிப்திலிருக்கும்போது அடிக்கடி விக்கிரகங்களைப் பின்பற்றினுர்கள். அதைச்சுட்டிக் காட்டுகிற வகையாய் இந்த வார்த்தை பேசப்படுகிறது. யாத்தி. 34: 15. அவர்கள் அப்போது மாத்திரமல்ல இப்போதும் அந்தப்பாவத்துக்குச் சாயும் குணத்தைக் காட்டினுர்கள். 20: 5. உபா. 31: 16. 32: 16. சங். 106: 37. எசே. 20. 7. 23: 8. ஆமோஸ். 5: 25.

11. "மாம்சத்தின்உயிர் இரத்தத்திலிருக்கிறது." 14வா. (ஆதி. 9: 4.) பலியின் தன்மையையும் நோக்கத்தையும் விஸ்தரித்திருக்கிறது. இரத்தம் சிந்துவது உயிரை வாங்கிப்போடுவதாம். இரத்தத்தைத் தேவனுக்குப் படைப்பது, உயிரைப் படைப்பதற்குச்சமம். பாவத்தினிமித்தம் உயிர் வாங்கப்படவேண்டும். ஏனென்றுல் பாவம் தேவனுடைய சிம்மாசனத்தை அதாவது அவரையே தாக்குகிறது. இது தேவதுரோகம். இதற்காகப் பழிவாங்கும்படி தேவன் பாவியையேகொல்லுகிறார். பாவி பிழைக்கவேண்டுமானுல் பாவம் நிவாரணமாகவேண்டும். ஆகையால் பாவநிவாரணமாகும்படி இரத்தம் (உயிர்) வாங்கப்படவேண்டும். மனுஷருடைய பாவத்துக்காக, பலியிடப்பட்ட மிருகங்களின் உயிர்வாங்கப்பட்டது, பாவிகளுக்குப்பதிலாக மகா ரேபலியாகிய கிறிஸ்துவின் உயிர்

வாங்கப்படும் என்பதற்குச் சிறந்த முன்னடையாளமாயிருந்தது. "ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான், உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது." "அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணாமலிருந்தால் உங்களுக்குள்ளே சீவனில்லை."

"பாவநிவிர்த்தி." 16:14-19 மத். 26: 28. மாற். 14: 24. ரோ. 3: 25. 5: 9. எபே. 1: 7. கொலோ. 1: 14, 20. எபி. 9: 22. 13: 12. 1பேது.1: 2. 1யோ. 1: 7. வெளி. 1: 5.

படிப்பினை.

கிறிஸ்து நமக்குண்டுபண்ணின சுயாதீன நிலைமையைக் கவனிக்கக்கடவோம்.—பாவம் எப்பேர்பட்ட பொல்லாப்புள்ளது. இரத்தம் சிந்துதலில்லாமல் மன்னிப்பில்லை.—மன்னுயிர்க்காகத் தன்னுயிர்விட்ட ரட்சகரை உற்றுப்பார்க்கக்கடவோம்.

௰அ. அதிகாரம்.

முறைகெட்ட விவாகம்.

25. "கக்கிப்போடும்." இப்படிப்பட்ட கொடிய அக்கிரமங்களையிட்டு தேவன் நியாயத்தீர்ப்புச்செய்கிறார். யுத்தத்தினாலும் கொள்ளை நோயினாலும் மனுஷர் ஏராளமாய் மடிவதால் தேசம் தன் குடிகளைக் கக்கிப்போடுகிறது. விசேஷமாய் இப்படிப்பட்ட கொடிய அக்கிரமங்கள் இயல்பாகவே சனங்கள் பெருகாதபடி தடைசெய்கின்றது. தீராநோய்க்கிடம்பண்ணி மனுஷரைக் கொல்லுகிறது.

30. "அருவருப்பான." இப்படிப்பட்ட அக்கிரமங்களை மனுஷர் இயல்பாகவே அருவருக்கிறார்கள். சுபாவமுறைப்படி அருவருப்பான இந்த அக்கிரமங்களைச் செய்யாதபடி தேவனும் சட்டம் கட்டியிருக்கிறார். இதைப்பார்க்கும்போது, எழுதப்பட்ட வேதாகமங்களில் தேவன் வெளிப்படுத்தியிருக்கிற அவருடைய சித்தத்துக்கும் இயல்வேதத்தில் அதாவது சுபாவ முறைமையில் விளங்குகிற அவருடைய சித்தத்துக்கும் ஒப்புமை யிருக்கிறதென்று பார்க்கிறோமே. ஆகையால் உலகத்தைப்படைத்து ஆண்டு நடத்தி வருகிற சாக்ஷாத்க்கடவுளே, எழுதப்பட்ட வேதாகமங்களையும் அருளிச்செய்தவரென்று ருசுவாகிறது.

படிப்பினை.

தேவனுடைய கற்பனைகள் மனுஷனுடைய சுகவாழ்வுக்கேற்றவைகளாம். அவைகள் மனுஷனுடைய மகிமைக்கும் சமாதானத்துக்கும் ஆறுதலுக்கும் ஏற்றதாயிருக்கிறது. அவருடைய கற்பனைகளை மீறிநடப்பது அவனை மிகவும் இழிவுப்படுத்தி மிருகத்தைப்பார்க்கிலும் தாழ்வாக்கிப்போடுகிறது. யோக்கியமாய் நடக்கிறவன் உலக முறைப்படியும் கனமடைகிறான். —தேசம் தன் குடிகளைக்கக்கிப் போடத்தக்கதாக அத்தனை அக்கிரமம் இருக்கிறதே! நம்மைக்குறித்து எச்சரிக்கையாயிருக்கவேண்டும். எல்லாக்காவலைப் பார்க்கிலும் உன் இருதயத்தைக்கா. ஏனென்றால் அதுதான் அக்கிரமங்களுக்கெல்லாம் உறைவிடமென்று நமது கர்த்தர் திருவுளம்பற்றியிருக்கிறார்.

போதகர் பத்திரிகையிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட

The Clergyman's Magazine.

பிரசங்கக் குறிப்புகள். (மாசம்தோறும் வரும்)

ஜூன்மீ 1877. By The Very Rev. W. P. Walsh.

---

1 நாளாகமம் 29. 15.

"உமக்கு முன்பாக நாங்கள் அரதேசிகளும் பரதேசிகளுமாயிருக்கிறோம்."

தாவீது இராஜா இந்த வார்த்தைகளை இரண்டு விசை வழங்குகிறார். ஒரு தடவை அவருக்கு மிகுந்த மகிமையும் வாழ்வுமுண்டாயிருந்த சமயத்திலும். வா. 20. 2, 22. இன்னொரு தடவை அவருக்கு துக்கமும், சிறுமையுமுண்டாயிருந்த சமயத்திலும். சங். 39. 12.

(அடக்கம் பண்ணுமுறையில் வாசிக்கக் குறிக்கப்பட்டிருக்கிற சங்கீதங்களில் இது முதலாவதானது.)

நாம் அரதேசிகளும் பரதேசிகளுமாயிருக்கிறோமென்கிற எண்ணம் இன்பகாலத்துக்கும் துன்பகாலத்துக்கும் ஏற்றதாயிருக்கிறது.

I. இன்பகாலத்துக்கு ஏற்றது.

இன்பகாலத்தில் நமக்குச் செல்வமும் பெலனும் கனமும் உண்டாயிருக்கும்போது நாம் உலகத்தை நேசித்து தேவனை மறந்து போக ஏதுவானவர்களாயிருக்கிற காலத்தில் நாம் பரதேசிகள் என்கிற எண்ணம் நம்முடைய ஆசைகள் பெருமை சுயதிர்ப்திகரம் இவைகளைத் தணிக்கும். அது, நாம் எப்படிப்பட்டவர்கள்? நம்முடைய ஊழியம் எப்படிப்பட்டது? இவ்விடத்திலுள்ள சகல பொருளும் எப்படிப்பட்டவை? எவ்வளவு சுருக்கமும் அற்பமுமானவை? என்று கேட்கும்படி நமக்குப் போதிக்கிறது.

தாவீது இராஜா 'நான் எம்மாத்திரம்' என்கிறதையும் 14. வா. கர்த்தாவே மாட்சிமையும் உம்முடையை தென்றும் அறிக்கையிடுகிறதையும் 11 வா. உம்முடைய கரத்தில் வாங்கிக்கொடுத்தோமென்று ஒப்புக் கொள்ளுகிறதையும் 14 வா. பாருங்கள்.

II. துன்பகாலத்தில், நாம் பரதேசிகள் என்கிற நினைவு நமக்கு ஆறுதலாயிருக்கும். அப்படிப்பட்ட சமயங்களில் நமக்குள் அவநம்பிக்கையும் அவிசுவாசமும் எழும்புகிறது. அந்தச் சோதனைகள் கொஞ்சக் காலத்துக்கு மாத்திரம் இருக்குமென்று எண்ணிக்கொள்வோமாக. அவைகள் நமது பிரயாணத்தோடு முடிவடைந்து அவைகள் நிலைத்திருக்கையிலே பரிசுத்தமாக்கப்படுகிறோம்.

பவுல் அப்போஸ்தலனும் துக்கங்களை இத்தப் பிரகாரமாகவே நோக்கினார். 2 கொரி. 4. 17. றோமர். 8. 18. முற்பிதாக்கள் தாங்கள் பரதேசிகளென்று அறிக்கையிட்டார்கள். எபிரேயர். 11. 13.

படிப்பினை.

1. நாம் பரதேசிகளா? நாம் இந்தப் பிரயாணத்தைத் துவக்கிறோமா? கிறிஸ்துதான் இந்தப் பிரயாணத்தின் துவக்கமும்' வழியும் இலக்குமாயிருக்கிறார்.

2. நம்முடைய குடியிருப்பு பரலோகத்திருலிக்கிறதா? பிலி. 3. 20. உலகம் நமக்குக் கொஞ்சமும் பரலோகம் அதிகமுமாகிவருகிறதா?

பத்திராதிபரால்.

கிறிஸ்து ஒரு பரதேசியாயிருந்தார். "தலை சாய்க்க இடமில்லை." பரதேசிகளுக்கும் நகரவாசிகளுக்கும் பேச்சிலும் ஒழுக்க வழக்கங்களிலும் வித்தியாசமுண்டு. பனியன் என்பவரால் எழுதப்பட்ட பரதேசியின் மோட்ச பிரயாணத்தில் மாய்கையின் சந்தை வழியாய்ப் போகிற பரதேசிகளின் வரலாற்றைப்பார்.

வி. ஹா.

அந்தப் பலகை தாங்கும்.

ஒரு கடல்துறைப்பட்டணத்திற்குச் சமீபமாய் ஒரு காலத்தில் கப்பற்சேதம் நேரிட்டது. கப்பலாட்களும், யாத்திரைக் காரருமாகமிகுதியானபேர் மிதக்கத்தக்கதுண்டுப் பலகைகளின் ஏதுவால் நீந்திக்கரை சேர்ந்தார்கள். இந்தச் சம்பவத்தைப்பற்றி பட்டணமெல்லாம் வெகு பிரஸ்தாபமுண்டாயிருந்தது. பெரியோரும் சிறியோரும் கூடியிருக்கும் இடங்களில் சிலநாளாய் இதுவே பேச்சு. கப்பற்சேதத்தை அடுத்து வந்த ஓய்வு நாளில் பட்டணத்தின் பிரதான குருபிரசங்கஞ் செய்தபோதும் இதைப்பற்றிப்பேசி தூண்டி பலகைகளின் ஏதுவால் உயிர்ச்சேதமின்றி கரை சேர்ந்த மனிதருடைய திருஷ்டாந்தத்தைக்கொண்டு இவ்வுலகமாயிய தக்கசாகரத்தைக் கடந்து நித்திய ஜீவகரை சேர்வதற்கு இயேசு இரட்சகர் பாவிகளுக்கு மிதப்புப் பலகைபோலிருக்கிறார் என்று ரூபித்து, "அந்தப் பலகை தாங்கும், அந்தப் பலகை தாங்கும் என்று இயேசுநாதரைக்குறித்து அழுத்தச் சொன்னார். போதகர் தம்முடைய ஆவலான பிரசங்கம் பயன்பட வேண்டுமென்று வாஞ்சித்திருந்தும் வெகு காலமாய் அதைப்பற்றி யாதொன்றும் கேள்விப்படவில்லை. இப்படியிருக்கையில் ஒரு நாள் அவருக்கு தபாலில் ஓர் கடிதம் வந்தது. அதை உடைத்து வாசித்த போது "நான் மரணத்தறுவாயிலிருக்கிறேன். தாங்கள் உடனே புறப்பட்டு வரவேண்டுமென்று எழுதியிருக்கக் கண்டு, போதகர் தாமதம் இன்றி கடிதத்தில் காட்டிய இடத்திற்குப் போய் வியாதியஸ்தனைக் கண்டு அவனுக்கு ஆறுதலான புத்திமதிகளைச் சொன்னார். அவனுக்கோ பேச சக்தி இல்லை. இரட்சிப்பைப்பற்றிய உன் நம்பிக்கையைக் குறித்து சைகைகளினாலாவது நீ எங்களுக்குக் காட்டுவாயானால் நல்லதே என்று போதகர் சொல்ல அவன் பெலனைக்கூட்டி உன்னிக்கொண்டு, மெதுவாய் போகர் காதில் "அந்தப் பலகை தாங்கும்" என்று மாத்திரம் சொல்லி மரணமடைந்தான்.

ஆ! பாவிகளெல்லாரும் இந்த விதமாய் இயேசு இரட்சகரைப் பற்றிக்கொண்டால் எத்தனை நலம். அந்தப் பலகை தாங்கும்:

முத்து நல்லதம்பி.

மகமது ஜீவிய விருத்தாந்தம்.

உலகத்தின் மற்ற இடங்களிலும், முக்கியமாய் இந்தியாவிலுமுள்ள விசேஷித்த மார்க்கங்களில் ஒன்று மகமதுமார்க்கம். அதற்குரிய பெரிய வித்தியா சாலைகளும், பண்டிதர்களும், கலைக்கியானங்களுமுண்டு. கோரானையும் அந்த மார்க்கப் பிரியுகளையும், தீரப் படிப்பது நம்மால் கூடாத காரியமாயிருந்தபோதிலும், அதின் முக்கியமான கொள்கைகள் இன்னதென்றறிவதும், அதிலுள்ள உண்மை இவ்வளவு, பொய் இவ்வளவு என்று கண்டுபிடிப்பதும் நல்லது. மகமதுவின் சரித்திரத்தை அறிவதும் அவசியமானது. இது முகாந்தரமாக அவனுடைய ஜீவிய சரித்திரத்தையும், அவன் உற்பத்திசெய்த மார்க்கத்தின் ஏற்பாடுகளையும் குறித்து சுருக்கமாய் நற்போதகத்தில் மூன்று நாலு புஸ்தகங்களில் அச்சிட யோசித்திருக்கிறோம்.

முதலாவதாக மகமது எழும்பின காலத்தைப் பற்றியும், அவனுடைய சந்ததியாரைப் பற்றியும் சொல்லுவோம். அவன் கி. பி. 1571 ம் வரு போல் பிறந்தான். அவன் தோன்றினபோது அராபியர் ஒரு குருவுக்காக அங்கலாய்த்துக் கொண்டிருந்தார்கள். சனங்களில் அநேகர் தங்களுடைய வீண் கோட்பாடுகளைக் குறித்து இளைப்படைந்திருந்தார்கள்.

மக்கத்திலிருந்த காபா என்னப்பட்ட அவர்களுடைய பிரதான ஆலயத்தில் குறைந்தது 360 விக்கிரகங்களிருந்தது. அதில் ஒரு கருங்கல்லுமிருந்தது. அதை அஞ்ஞானிகளான அராபியர் தங்கள் பாவநிவாரணத்துக்காக முத்திசெய்துவந்தார்கள். அது ஒருகாலத்தில் வெண்மையாயிருந்ததாகவும், மனுஷருடைய பாவங்களை அது நித்தியம் உட்கொள்வதால் கறுத்துப்போனதாகவும் சொல்லுகிறார்கள். எழுலும் அவர்களுக்குள்ளிருந்த இருளைத் தெளிவாய்க் காண்பிக்கத்தக்கதாக, அவர்களுக்குளே போதுமான ஒளியிருந்தது. அந்தஒளி அவர்களுக்கு: ஆபிரகாம், யோபு, மோசே, எத்திரோ முதலானவர்களிடத்திலிருந்து பாரம்பரையாய் இறங்கிவந்தது. இஸ்மவேல் அராபியரின் முற்பிதா. யோபு தன் புஸ்தகத்தை அராபியாவிலே எழுதினானென்று நம்பப்படுகிறது. மோசேயும் 40 வருஷமாய் அராபியாவிலே வாசம்பண்ணினான். இஸ்ரவேலரும் பகலில் மேகஸ்தம்பத்தினாலும் இரவில் அக்கினிஸ்தம்பத்தினாலும் நடத்தப்பட்டும், ஆசரிப்புக் கூடாரத்தை ஸ்தாபித்தும் 40 வரு அராபியரோடு சம்பந்தப்பட்டவர்களாய் வனாந்தரத்திலே வாசம்பண்ணினார்கள். இப்படியாக வெளிச்சம் இருந்தேவந்தது. மகமதுவும், அராபியரும் தங்களுடைய சனங்களின் சீர்கேட்டைப் பற்றிப் புலம்பினார்கள். கிறிஸ்தவர்களிலும் யூதர்களிலும் ஏராளமானவர்கள் அந்தத் தேசத்திலெங்கும் சிதறியிருந்தார்கள்: இவர்கள் பூர்வீகமுதல் மார்க்கவிஷயமாய் அத்தேசத்திலுண்டாயிருந்த நற்காரியங்களை ஸ்திரப்படுத்தி, அத்தேசத்து விக்கிரக ஆராதனையைக் கண்டித்துவந்தார்கள். மகமது எழும்பினபோது அந்தச்சாதியாரின் நிலைமையைக்காட்டவும், அவனே அந்தக்காலத்திலுள்ள கொள்கைகளை விளங்கச்செய்தவனென்று காட்டவும் ஒரு மெய்ச்சரித்திரம் சொல்லப்போகிறோம். ஒரு பானை உஷ்ணமாயிருக்கும்போது அதில் நீராவியை உண்டாக்கும். ஆனால் தண்ணீரை உஷ்ணமாக்குவது நீராவியல்ல. அதுபோல மகமது அக்காலத்திலிருந்த மார்க்கக் கொள்கையை விளங்

கப்பண்ணினுனேயல்லாது அவன் அதை உற்பத்திசெய்தவனல்ல. என் முலும் பிற்காலத்திலே அந்தக் கொள்கைகளே முன்னுக்குக் கொண்டு வந்து அதற்கு அதரசரணியாயிருந்தான். மகமது எழும்புகிறதற்குக் கொஞ்சக் காலத்திற்கு முன்னே, அவனுடைய கோத்திரத்தாரான கோரிசியர் ஓர் பெரிய சங்கம் கூடினார்கள். அந்தச் சங்கத்தில் மார்க்க அபேட்சையுள்ள அநேகர் கூடிவந்திருந்தார்கள். அவர்களில் நாலு பேர்கூடி இரகசிய ஆலோசனே செய்ததில், நாலுபேரும் ஒன்றுபோல நினைத்ததாகவும் அவர்கள் மனதில் ஒன்றுபோல பட்டதாகவும் கண் டார்கள். அவர்கள், "நம்மூடைய சுதேசத்தார் தப்பிதமானவகை யாய் நடக்கிறார்கள், ஆபிரகாமுடைய மார்கத்திலிருந்து வெகுதூரம் விலகியிருக்கிறார்கள், இவர்கள் பலியிடுகிறதும் வெகு பயபக்தியாய் ஊர்க்கோலங்கொண்டு சுற்றிவருவதுமான இந்தக் கள்ளத் தெய்வம் யாது? ஊமையும், உணர்ச்சியற்றதும் நன்மை தீமை அறியக்கூடா ததுமான கல்துண்டல்லவோ. இதெல்லாம் தப்பிதம். நம்மூடைய பிதாவாகிய ஆபிரகாமின் சுத்தாங்கமான மார்க்கத்தைத் தேடுகிறோமா? அது அவசியமானால் அதைக்கண்டுபிடிக்க நமது தேசத்தை விட்டுவிட்டு அந்திய தேசங்களைக் கடந்துபோகவேண்டும்" என்று சொல்லிக் கொண்டார்கள். அப்படியே அவர்களில் மூன்றுபேர் சத்தியத்தைத் தேடி பிரயாணப்பட்டார்கள். அவர்கள் கடைசியாக கிறிஸ்தசபையி லே ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். அவர்களில் நாலாவதான செயிட் (Zeid) என்பவர் தமது இனத்தாராலும், சிநேகிதராலும் தடுக்கப்பட் டார். அவர் இப்படித்தமது ஜாதியாருடைய மார்க்கத்தைப்பற்றி திர்ப் தியற்றிருப்பது அவர்களுக்கு மிகவும் வருத்தமாயிருந்தது. இவ்வித மாய் செயிட் தடுக்கப்பட்டார். ஆனால் அவருடைய ஆவிக்கு இளை ப்பாறுதலில்லை. அவர் நாள்தோறும் காபா ஆலயத்தைச் சந்தித்து, நா யகனைப் பார்த்து கண் தெளிவிக்கப்படும்படி வேண்டிக்கொண்டார். அங்கே அவர் எப்போதும் ஆலயத்தின் சுவரிலே சாய்ந்துகொண்டு, "நாயகனே நீர் எப்படி வணங்கப்படவேண்டுமென்றும், சேவிக்கப்பட வேண்டுமென்றும் எனக்குத் தெரியுமானால் நான் உமது சித்தத்துக்கு கிழ்ப்படிவேனே. இப்போது அது எனக்குத் தெரியவில்லையே என்கிற விண்ணப்பத்தைத் திரும்பத் திரும்ப உச்சரித்தார். தமது சனங்களின் தப்பிதமின்னதென்று அவர் அறிந்ததையும், பெண் குழந்தைகளே அழித்துப்போடும் குரூரமான வழக்கத்தையும், விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட மாம்சத்தைப் புசிக்கிறதையும், வெகுவாய்க்கடிந்து கொண்டார். இதினால் இவருடைய சிற்றப்பன் இவரை ஓர் சிறையில் அடைத்துவைத்தான். இவரோ அதிலிருந்து தப்பிக்கொண்டு ஆறுத லற்றவராய் அங்குமிங்கும் அலைந்துதிரிந்தார். இப்படி அலைந்துதிரியுங் காலத்தில் ஒரு அராபியத் தீர்க்கதரிசி பக்கத்தில் ஆபிரகாமுடைய சுத்தாங்கமான கொள்கைகளே பிரசங்கிக்கிறானென்கிற சங்கதி அவர் காதிலெட்டியது. இத்தத் தீர்க்கதரிசிதான் மகமது. இவன் தனிவாசத் தைவிட்டு வெளிப்பட்டு, தான் தேவனால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசி யென்று பிரசித்தம் பண்ணிக்கொண்டு திரிந்தான். அவனைப்பார்க்கும் படி செயிட்டென்பவர் பரிசுத்த நகரமாகிய மக்கத்துக்குப் போக யோ சித்துப் புறப்பட்டார்.

ஆனால் அவர் அந்த இடம் சேராமல் கள்ளரால்ப் பிடிபட்டு பாதை யிலேயே கொலையுண்டு செத்தார்.

MISCELLANEOUS.

அகவிலை. பஞ்சத்தின் அகோரம் இன்னந் தணியவில்லை. எங்கும் அகவிலை நாளுக்கு நாள் ஏறிக்கொண்டு வருகிறது. தூற்றுக் குடித் தூறைமுகத்தில் இலட்சத்து ஐம்பதினாயிரம் சாக்கு அரிசி இறக் குமதியாகி யிருந்தும், அதை உள் நாட்டுக்குக் கொண்டுபோகிறதற் குப் போதுமான புகைவண்டிகள் இல்லாமையால், இருப்பிலேயே இருக்கிறது. (சூலை. 17ஆ)

ருஷிய-துர்க்கியயுத்தம். சூலைமீ- 13ஆ 90,000. சன முள்ள ருசியதளம் ஒன்று சிஸ்றோவா என்ற இடத்தில் தானியூப் நதியைத் தாண்டிவிட்டது. ஆசியாத்துர்க்கியிலோ, ருஷியர் தோல்வி யடைந்து, கார்ஸ் கோட்டையையும் கைவசஞ்செய்து, அர்மினியாவின் எல்லையைத் திரும்பவும் கடந்து பின்வாங்கிப் போகிறார்கள். இதினி டையில் நடந்த சில சண்டைகளில் இருபட்சத்தாரும் அதி மூர்க்க மாயும் தைரியமாயும் போர்செய்தபடியால், ஏராளமான உயிர்ச்சே தம் நேரிட்டது. மேலும் ருஷியர் ஒரு நாளிரவில், சுலுவில் தங்கத் தக்க பதார்த்தங்கள் நிறைந்த ஓர் கலத்தை துர்க்கியர் போர்க்கப் பல் ஒன்றினடியில் தண்ணீருக்குள் செலுத்தி, தூரத்திலிருந்து மின் கம்பி வழியாய் அதற்கு நெருப்பிட்டதினால் கப்பல் வெடித்து ஆகா யத்தில் பறக்கும்படிசெய்து, அதிலிருந்த சகலரையுங் கொன்றுபோ ட்டார்கள். ருசியர் எதிர்பாராத பிரகாரம் சாவதானமாய் அரும் போர்செய்ய நேரிட்டிருகிறது. துருக்கர் நம்பிக்கையற்றவர்கள் போல மூர்க்கவெறியாய்ச் சண்டைசெய்கிறார்கள். அதினாலே யார் பக்கம் சித்தியாகுமோவென்று அதிகமதிகமாய்ச் சந்தேகிக்க இடமா கிறது. எப்படியும் மற்றும் ஐரோப்பிய இராசாங்கத்தார் இதுகா ரியத்தில் தலையிடாத பக்ஷத்தில் ருஷியர் தம்மேலான சாமர்த்திய த்தினாலும் பெருந்திராளான தளங்களினாலும் கடைசியில் துருக்க ரை மேற்கொண்டு சமாதானத்துக்காகக் கெஞ்சும்படி செய்வார்க ளென்றே நினைக்கத்தக்கது. இங்கிலிஷ்த் தூதாத்தனத்தார் மெத்தித் ராணியாக் கடலுக்கு ஒரு கப்பல்த் தளம் அனுப்பியிருக்கிறார்கள்.

பாம்புகடி. இந்தியாவிலுள்ள இருபத்தைந்து கோடியே பத்து லட்சம் குடி சனத்தில், வருஷாந்தரம் பாம்பு கடித்துச் சாகி றவர்கள் சுமார் இருபதினாயிரம் பெயர்.

ஆகஸ்துமீ நாள் 31. ஆடிமீ 19டமுதல், ஆவணிமீ 17டவரை.

வாரம்.	இங்கிலீஷ் தேதி.	தமிழ்த் தேதி.	அன்றுடகத் தியானம்.
பு	1	யசு	நீ எழுந்திருந்து உன் தேவனுடைய கர்த்தரைஸ்தோத்திரி. நெ. 9:5.
வி	2	உ0	மூடர் பாவத்தைக்குறித்துப் பரியாசம் பண்ணுகிறார்கள். நீதி. 14:9.
வெ	3	உக	கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குகிறவர். 2 சாமு. 22: 29.
சு	4	உஉ	ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள். 1 பே.
ஞா	5	உசு	நீர் எங்களுடனே தங்கியிரும். லூக். 24: 29.
தி	6	உச	சீவ வார்த்தைகளெல்லாவற்றையும் சொல்லுங்கள். அப். 5: 20.
செ	7	உடு	பாவத்துக்கு மரித்தவர்களாக எண்ணிக்கொள்ளுங்கள். ரோ. 6: 11.
பு	8	உசு	கர்த்தரை மறவாதபடிக்கு எச்சரிக்கையாயிரு. உபா. 6: 12.
வி	9	உஎ	நீர் அவனைநோக்கி விண்ணப்பம்பண்ணும். யோபு. 22: 27.
வெ	10	உஅ	உன் செய்கைகளைக் கர்த்தருக்கு ஒப்புவி. நீதி. 16: 3.
சு	11	உசு	நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகி. பிலி. 1: 11.
ஞா	12	சு0	நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள். கொலோ. 3: 15.
தி	13	சக	தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள். நீதி. 30: 5.
செ	14	சஉ	நீய நோக்கம் பாவமாம். நீதி. 24: 9. [94: 22.
பு	15	க	என் தேவன் நான் நம்பியிருக்கிற கன்மலையுமாயிருக்கிறார். சங்.
வி	16	உ	கர்த்தர் இரக்கமும் இருபையுமுள்ள தேவன். யாத். 34: 6.
வெ	17	ங	அவனை நீங்கள் காணுமலிருந்தும் அவரில் அன்புகூருகிறீர்கள்.
சு	18	ச	நான் உன்மேல் அன்பாயிருக்கிறதை அறிந்துகொள். வெளி. 3: 9.
ஞா	19	டு	என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது. சங். 31: 15.
தி	20	ண	தேவனுடைய குமாரன் வந்தாரென்று அறிவோம். 1 யோ. 5: 20.
செ	21	எ	களங்கமில்லாத பாலின்மேல் ஆசைகொள்ளுங்கள். 1 பே. 2: 2.
பு	22	அ	அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல. 1 யோ. 5: 3.
வி	23	ஙு	கர்த்தரோ இருதயங்களை நிறுத்துப் பார்க்கிறார். நீதி. 21: 2.
வெ	24	க0	நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து பிரிந்து போங்கள். 2 கொரி. 6: 17.
சு	25	கக	வீலையின்றி விற்கப்பட்டீர்கள். ஏசாயா. 52: 3.
ஞா	26	கஉ	ஆவிக்கேற்றபடி நடக்கக்கடவோம். கலா. 5: 25.
தி	27	கசு	பொல்லாப்பு உனக்கு நேரிடாது. சங். 91: 10.
செ	28	கச	நீதிமான்களே கர்த்தருக்குள் மகிழுங்கள். சங். 97: 12.
பு	29	கடு	நீயும்போய் அந்தப்படியே செய். லூக்கா. 10: 37. [6: 34.
வி	30	கசு	இந்த அப்பத்தை எப்பொழுதும் எங்களுக்குத் தாவேண்டும். யோ.
வெ	31	கஎ	சோடை காலத்தையும் மாரிகாலத்தையும் உண்டாக்கினீர்.

விசேஷித்த நாட்கள்.

5. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும், பத்தாம் ஞாயிறு.
9. அமாவாசை.
12. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும், பதினொராம் ஞாயிறு.
19. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும், பன்னிரண்டாம் ஞாயிறு.
23. பௌர்ணமி. (பூரண சந்திர கிரகணம்.)
26. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும், பதின்மூன்றும் ஞாயிறு.

நற்போதகம்.

கூ. செப்தேம்பர்மீ. ஆஅஎஎவு.

கொரிந்தியரின் இரண்டாம் நிருபம்.

நிருபம் எழுதப்பட்ட காலம்.

பவுல் அப்போஸ்தலன் பெந்தேகோஸ்துப் பண்டிகைவரைக்கும் (கி. பி. 57) எபேசுப்பட்டணத்தில் தரித்திருந்தார். 1 கொரி. 16: 8. பார்க்க.

இவ்விடத்திலேயே அவர் (கலாத்தியர் நிருபத்தையும்?) புறப்படுகிறதற்குச் சற்று முன்னடி கொரிந்தியர் முதலாம் நிருபத்தையும் எழுதியிருக்கிறார்.

இக்காலத்தில் நடபடிகளில் சொல்லப்பட்டிராத ஒரு பிரயாணம் கொரிந்துவுக்குப் பண்ணினார்.

நடபடி 19: 23—41 ல் அடங்கிய அமளிக்குப் பிற்பாடி ஏறக்குறைய பெந்தேகோஸ்தின் காலத்தில் மக்கேதோனியாவுக்குப் போகப் புறப்படுகிறார். நடபடி 21. 2 கொரி. 2: 12, 13. இங்கே தாமதித்தக் காணிக்கை சேர்க்கிறார்.

இச்சமயத்தில்தானே கொரிந்தியருக்குத் தமது இரண்டாம் நிருபத்தை எழுதுகிறார்.

இதற்குப் பிற்பாடி (நடபடி 20: 2 ல் சொல்லியபடி) கிரேக்கைக்கு (கொரிந்து) வந்து மூன்று மாதம் தங்கினார். பிறகு நடபடி 20: 6 ல் அடங்கிய பிரகாரம் கி. பி. 58 ல் மக்கேதோனியா வழியாய்த் திரும்பிப்போய் ஈஸ்தர் பண்டிகையில் பிலிப்புப் பட்டணத்தில் காணப்படுகிறார்.

ஆகையால் இந்த நிருபம் கி. பி. 57 ம் வருஷத்தின் பிற்பாதிப் பாகத்தில் எழுதப்பட்டது.

III. அதிகாரம்.

1-ம் வா.—"மறுபடியும் மெச்சிக்கொள்ள." பவுல் அப்போஸ்தலன் முன்னை நிருபத்தில் தன்னை மெச்சிக்கொள்ளுகிறவனுக்குச் சொல்லக்கூடியதாயிருந்தது. 1 கொரி. 14: 18. 15: 9. பரிசுத்த பவுலுக்கு எதிரிகளாயிருந்தவர்கள் உபசார நிருபங்களைக் கொரிந்து சபைக்குக்

கொண்வெந்திருக்கலாம். அவர்களை விட்டுப் போகும்போதும் அப்படிப்பட்ட நிருபங்களைக் கேட்டிருக்கலாம்.

2, 3.-ம் வா.—கிறிஸ்துவானவர் தமது ஆவியானவரால் கொரிந்தியருடைய இருதயத்தில் எழுதினதுதான், ஒரு நிருபம்போலிருந்தது. அதைப் பரிசுத்த பவுல் தமது கையிலே வைக்காமல் தமது இருதயத்தில் வைத்துக்கொண்டுவந்தார்.

4—6.ம் வா.—பவுல் அப்போஸ்தலன் இப்படிச் சொல்லுகிறதில் தமக்குப் புகழ்ச்சியாக இதைச் சொல்லுகிறதில்லை. அப்போஸ்தலருடைய தகுதி தேவனாலேயே உண்டாயிருந்தது.

6—11.ம். வா.—அவர்கள் ஊழியமும் பழைய உடன்படிக்கைக்குரிய ஊழியத்திலும் மேன்மையுள்ளதாயிருந்தது. எப்படியெனில்,

6. (1) மோசேயின் ஊழியம் சட்டங்களைப் போதிப்பித்தல். பவுலுடைய ஊழியம் சுவிசேஷத்தைப் போதிப்பித்தல். இதிலே தேவ ஆவியானவர் மனிதர் இருதயத்தில் கிரியைசெய்கிறவர்.

(2) நியாயப்பிரமாணமானது கொல்லுகிறது (ரோமர் 7) சுவிசேஷத்தில் கிரியைசெய்கிற ஆவியானவரோ மனுஷருக்குப் புது உயிரைக் கொடுக்கிறவர். (ரோமர் 6: 4, 11. 8: 2, 10.)

(3) ஆக்கினைக்கு ஏதுவாயிருந்த ஊழியத்தில் மோசேயினுடைய முகம் மகிமையாய்ப் பிரகாசித்தது. ஆவியின் ஊழியமோ அதனிலும் எத்தனை அதிகமான மகிமையுள்ளதென்று சொல்லலாம்.

மோசே சனங்களோடே பேசிக்கொண்டிருக்கையில் அவர் முக்காடுபோடவில்லை. சோதிமுகமாய் அவர்களுக்குக் காணப்பட்டார். பேசிமுடித்தபொழுது இஸ்ரவேலர் அந்தப் பிரகாசத்தின் முடிவைப் பாராதபடிக்கு அவர் முக்காடிட்டார். மோசே தேவனுடைய நாமத்தினாலே அவருடைய வசனத்தை உரைக்குமட்டும் தேவன் அந்த வார்த்தைக்கு இப்படிச் சாட்சியிட்டார். இவ்விதமாய் அந்த முக்காடு மறைவுக்கும், மாறுதலுக்கும் அடையாளமாயிருந்தது.

பழைய ஏற்பாட்டில் யாத்திராகமம் 34-ம் அதி. 33-ம் வாக்கியம் தமிழ்ப் பதத்துக்கும் மூல எபிரேயப் பாஷைக்கும் LXX க்கும் கவனிக்கத்தக்க ஓர் வித்தியாசமுண்டு. தமிழிலே "மோசே அவர்களோடே பேசி முடியுமளவும் தன் முகத்தின்மேல் முக்காடுபோட்டிருந்தான்" என்றும், மூல பாஷையிலோ "மோசே அவர்களோடே பேசிமுடியும் பொழுது" என்றுமிருக்கிறது.

14—18. வா.—பரிசுத்த பவுல் யூதர்களுடைய நிலைமையையும் கிறிஸ்தவர்களுடைய நிலைமையையும் ஒத்துப்பார்க்கிறார்.

16-ம் வா.—"அவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்பும்போது"

Alford சான்றியார் தகுந்த நியாயங்களோடே இதைப்பற்றி அபிப்பிராயப்படுகிறதெப்படியெனில், "இஸ்ரவேலருடைய இருதயங்கள் கர்த்தரோடே பேசும்படிக்குத் திரும்பும்போதெல்லாம்" (யாத். 34: 31.) அதாவது, நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளை மாத்திரம் பாராமல், பழைய உடன்படிக்கையின் ஆவியானவராகிய கிறிஸ்துவோடே பேசும்படிக்குத் 'திரும்பும்போதெல்லாம்' என்றிருக்கிறது.

17-ம் வா.—"கர்த்தரோ ஆவியானவர்". 16-ம் வாக்கியத்தில் சொல்லப்பட்டிருக்கிற கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து பழைய ஏற்பாட்டில் பேசின ஆவியானவராய் இருந்தார்.

18-ம் வா.—சுவிசேஷமானது கண்ணாடியாயிருக்கிறது. கலாத். 4: 19. பூமியிலே ஆவியின் பிரகாரமாய் மறுரூபப்படுகிறோம். பரலோகத்திலே "நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்."

Life of Bishop Latimer.

இலத்திமர் கண்காணியார் சரித்திரம்.

(தொடர்ச்சி.)

இராஜா இலத்திமர் என்பவரை வொர்ஸ்ற்றர் நகரத்துக் கண்காணியாராக நியமித்தானென்று முன்னே லக்கத்தில் குறிப்பித்தோமே. இராஜா செய்த இந்த நன்றியை அவர் நன்குணர்ந்து நிறைவேற்றினவராக நடந்தபோதிலும், அதினால் அவரது உண்மையும் தைரியமும் குன்றிப்போகவில்லை. எப்படியென்றால், புது வருஷப்பிறப்புதோறும் கண்காணிமார் ஒவ்வொருவரும் விலைபெற்ற ஓர்ர் பொருளை இராஜாவுக்கு வெகுமதிகொடுக்கிறது அக்காலத்து வழக்கம். அப்படிப்பட்ட ஒரு சமையத்தில், ஒரு புதிய ஏற்பாட்டில் "வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயம் விசாரிப்பார்" என்ற வேதவாக்கியத்தை எழுதி, மேற்படி புஸ்தகத்தை இராஜாவுக்குக் காணிக்கையாகக் கொடுத்தாரென்று சொல்லியிருக்கிறது. இராஜாவினிடத்தில் இவ்வளவு தைரியங் காண்பித்தவர் தம் சேகரத்திலும் அப்படியே நடந்திருப்பாரென்று நினைக்கத்தக்கதுதானே. அதற்கும் ஒரு உதாரணம் சொல்லுகிறோம். நியாயாதிபதி ஒருவன் ஒரு சேத்திரம் கிரயத்துக்கு வாங்கினதில் ஒரு ஏழை மனிதனுக்கு அநியாயம் செய்திருந்தான். இவன் அந்த அநியாயத்தைக்குறித்து கண்காணியாரிடத்தில் முறைப்பாடு செய்தான். கண்காணியார் அதைக் கேட்டு, அநியாயத்தை நிவர்த்திசெய்து நஷ்டத்துக்கு ஈடுசெலுத்தும்படி மேற்படி நியாயாதிபதிக்கு எழுதிப் புத்திசொன்னார். நியாயாதிபதி அதன்பேரில் கோபப்பிரான்தனாகி, இங்கிலாந்தின் சிரேஷ்ட கண்காணியார் இவ்வாறு செய்தாலும் சகிக்கமாட்டேனென்று பயமுறுத்தின வக்கணையாய் பதிலனுப்பினான். ஆனால் இலத்திமர் என்பவர் அவனுடைய பயமுறுத்தல்களுக்கு பயப்படத்தக்கவரோ? அல்ல. அவர் திரும்பவும் நியாயாதிபதிக்கு எழுதி, இது காரியத்தில் தாம் செய்தது நியாயமென்று காண்பித்து, அநியாயம் அடைந்தவனுக்கு அவன் உடனே ஈடுசெலுத்தாத பட்சத்தில், இந்தச் சங்கதியை ஆதியோடந்தமாய் இராஜாவினிடத்தில் தெரியப்படுத்தலாகும் என்பதாய்த் தீர்க்கமான மாறுத்தரம் அனுப்பினார். இவ்வாறு இடுக்கண் அடைந்தவனுக்காக அவர் பட்ட பிரயாசம் வீணாய்ப்போகவில்லையாம். மேற்படி நியாயாதிபதியும் மரிக்கிறதற்குமுன் உத்தம பக்திமானானென்றும் சொல்லியிருக்கிறது.

புராட்டெஸ்தாந்து கிறிஸ்தவர்களைத் தண்டப்படுத்தும் நோக்

கமாய், 1539-ம் ஆண்டுத்தில் ஆறு பிரமாணங்கள் என்னப்பட்ட சட்டம் பிறப்பிக்கப்பட்டதின்பேரில், இலத்திமர் என்பவர் தமது கண்காணியாட்சியை இராசிநாமாக் கொடுத்துவிட்டார். பாப்புமார்க்க உபதேசங்களை ஒப்புக்கொள்ள அவருக்கு மனமில்லை. அவைகளுக்கு விரோதமாய்ப் பேசுகிறதும் மேற்படி சட்டப்படி மரணாக்கினைக்கு ஏதுவாகும். ஆகையால் உத்தியோகத்தை விட்டுவிட்டுத் தனிவாசம் செய்வதே தகுதியென்று அவருக்குக் காணப்பட்டது. உத்தியோகம் போய் விட்டதினிமித்தம் அவர் சந்தோஷப்பட்டாரேயன்றி, எவ்வளவேனும் விசாரப்படவில்லை. அவர் தம் உத்தியோகத்தை இராஜிநாமாக்கொடுத்துவிட்டு வீட்டுக்குத் திரும்பினவுடனே, அங்கியைக் கழற்றிப்போட்டு, இந்த வருத்தமான பாரத்தை இறக்கிவிட்டதினாலே எவ்வளவோ லேசாயிருக்கிறதென்று சொல்லிக்கொண்டு சந்தோஷத்தினாலே குதித்தாரென்று குறிப்பித்திருக்கிறது. சத்துராதிகள் அவரைச் சுகமே தனிவாசம்பண்ணிக்கொண்டிருக்கவும் விடவில்லை. எப்படியெனில், சிறிதுநாளுக்குப்பின் ஒரு மரஞ் சாய்ந்ததில் அவர் தேகத்தில் கொஞ்சம் நோவுண்டாயிருந்ததினிமித்தம் வைத்தியர்களிடத்தில் யோசனை கேட்கும்பொருட்டு லண்டன் நகரிக்குப் போயிருந்தார். அங்கே போயிருக்கும்பொழுது கண்காணிமார் அவரை அலட்டித் தொல்லைபண்ண ஆரம்பித்தார்கள். மேற்படி கண்காணிமார்களில் ஒருவரோடு அவர் பண்ணின சம்பாஷணையை அவர் தாமே எழுதியிருக்கிறார். இவர் பெயர் சொல்லப்படாவிட்டாலும், வின்செஸ்ற்றர் நகரத்து கார்டினர் என்ற கண்காணியாரென்று நினைக்கத்தக்கது. அவர் சொல்வது; "அவர் என்னை வரவழைத்து அக்காலத்தில் நடப்பாயிருந்த பாரம்பரைகளை ஏன் ஒப்புக்கொள்ளக்கூடாதென்று சொல்லி ஆச்சரியப்பட்டார். அதற்கு நான் தேவனுடைய வேதமே என் நடக்கைக்குச் சட்டம், அதற்கு விரோதமான எதையாவது ஒப்புக்கொள்ளுகிறதிலும் துஷ்டமிருகங்களுக்கு இரையாகிறதையே விரும்புகிறேன் என்றேன். மேலும் நாங்கள் பேசிக்கொண்டிருக்கையில், கர்த்தருடைய இராப்போசனம் என்று நான் சொன்னதை கண்காணியார் பிடித்துக்கொண்டு, சீச்சீ கர்த்தருடைய இராப்போசனம் என்று சொல்லுகிறீரே அதென்ன, இது என்ன நூதனப்பேராயிருக்கிறது என்றார். அப்பொழுது பக்கத்தில் நின்ற டாக்ற்றர் டப்பர் என்பவர், இந்தப் பெயர் வேதசாஸ்திரிகள் எழுதிய நூல்களில் வரக்காணோமே என்க, நான் மாறுத்தரமாக, பவுல் அப்போஸ்தலன் வழங்கியிருக்கிற பேர்களை நான் வழங்குவேனேயன்றி, நூதனமாய் உற்பத்திசெய்திருக்கிற பெயர்களை வழங்கப்போகிறதேயில்லை என்றேன். அப்பொழுது கண்காணியார், வேதாகமத்தைக் கொண்டேயல்லாமல் மற்றப்படி சனங்களை ஒன்றும்செய்யக் கற்பிக்கக் கூடாதோ? வேதாகமம் அருளப்படுமுன் எப்படி நடந்தார்கள் என்றார். அதற்கு நான் வேதாகமம் அருளப்படுமுன் நடந்தது இருக்கட்டும், இப்பொழுது வேதாகமமிருக்கிறதே, இருந்தும் சனங்களை வஞ்சிக்கிறீர்களே, அது இல்லாவிட்டால் இப்பொழுது நம்முடைய சீர் எப்படியிருக்கும். தேவன் வேதாகமத்தை அற்புதமானவகையாய்க் காப்பாற்றிக் கொண்டுவந்திருக்கிறதற்காக அவருடைய திருநாமத்துக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக என்றேன்." என்பதே. இந்தச் சம்பாஷணை நடந்ததின் பின் அவரைச் சிறைச்சாலையில் ஒப்புவித்தார்கள். எட்டாம் ஹென்ரி அரசன் மரித்ததுவரையில் அவர் சிறைச்சாலையிலேயே இருந்தார்.

கி. பி. 1547-ம் ஆண்டு ஜனுவரி மாதத்தில் ஆறாம் எட்வார்ட் அரசன் சிம்மாசனமேறினபொழுது, இந்த உத்தமன் காவலிலிருந்து விடுதலை

யடைந்தார். அவருக்கு மனமானால் தம்முடைய பழைய உத்தியோகத்தைப் பெற்றுக்கொள்ளவும் இடமிருந்தது. ஆனாலும் இக்காலத்தில் அவர் எழுபத்தாறு வயசாயிருந்ததன்றியும், பழய தேகப் பலவீனம் இன்னம் தீராதிருந்தபடியால் அவர் அதை வேண்டாமென்று மறுத்துவிட்டார். என்றாலும் சோம்பலாய்த் தம்முடைய காலத்தைக் கழிக்க நினைத்தவரல்ல. அவர் பெரும்பாலும் கந்தர்புரி சிரேஷ்ட கண்காணியாரோடு சகவாசஞ்செய்து ஓமிலியென்னும் பிரசங்கங்களை எழுதிப் பிரசித்தஞ்செய்வதில் அவருக்கு உதவிசெய்துகொண்டிருந்தார். மேலும் லண்டன் நகரத்திலும் அதைச் சுற்றிலுமிருந்த நாட்டிலுமுள்ள ஆலயங்களில் ஓய்வுநாடோறும் இரண்டுவிசை தளரா முயற்சியோடு பிரசங்கம்பண்ணிக்கொண்டுவந்தார். அதன்றியும் ஏழைகளுடைய காரியாதிகளை எப்பொழுதும் அவர் மேற்போட்டுக்கொண்டு, அவர்களுக்கு நியாயங்கிடைக்கும்படி வகைபண்ணிக்கொண்டும், அதிகாரிகள் தங்கள் கடமைகளை அனுகூலமாய் நிறைவேற்றும்படி உண்மையோடும் வைராக்கியத்தோடும் யோசனையும் புத்தியும் சொல்லிக்கொண்டும்வந்தார். இப்படியெல்லாம் உழைத்தும், அவர் தமது சொந்தத் தேர்ச்சியை அசட்டைசெய்யவில்லை. அவர் விருத்தாப்பியனாயிருந்தபோதிலும், கோடைகாலத்திலும் மாரிகாலத்திலும் இரண்டு மணிக்கு எழுந்திருந்து கல்வி அப்பியாசஞ்செய்வது வழக்கமாம். இலத்திமர் கண்காணியாருடைய பிரசங்கங்களும் மற்றுமுயற்சிகளும் அக்காலத்தில் மெய்மார்க்கம் நிலைபெறுவதற்கு மிகவும் அனுகூலமாயிருந்தன என்பதற்குச் சந்தேகமேயில்லை. அப்போஸ்தலருக்கிருந்த ஊக்கமும் வைராக்கியமும் இவருக்குமிருந்தது. அவர் உயிர்ப்போடும் சாதுரியமாயும் பிரசங்கித்ததினாலே யாருங் கவனமாய்க் கேட்டார்கள். அவர் பிரயோகித்த திருஷ்டாந்தங்கள் எவர்களுக்கும் எளிதில் விளங்கத்தக்கவைகளாயும் வழக்கமானவைகளாயுமிருந்தபடியால், அவர் போதித்த சத்தியங்கள் கேட்டவர்கள் மனதில் நன்றாய்ப் பதிந்துபோம். நாளதுவரையுமிருக்கிற அவருடைய பிரசங்கங்கள் அக்காலத்தவர்களால் நமக்குக் கிடைத்திருக்கிற விலையேறப்பெற்ற பொக்கிஷங்களில் ஒன்று எனத்தகும்.

பாப்புமார்க்கம் இழந்துபோன ஆதிக்கத்தைத் திரும்பவும் பெறுமாயின், அக்கக்ஷிக்காரர் முதலிலேயே தம்மைப் பட்சிக்கப்பார்ப்பார்களென்று அவருக்கு நன்றாய்த் தெரிந்திருந்தது. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறதினிமித்தம் தமது உயிரைவிடவேண்டியதுவருமென்று பகிரங்கமாய் அறிவித்துமிருந்தார். அந்தப்படியே 1553-ம் ஆண்டுத்தில் மேரி ராணி பட்டத்துக்கு வந்தவுடனே, சங்கத்தாருக்குமுன்வந்து ஆஜராகும்படி நாட்டிலிருந்த அவருக்குத் தாக்கீது அனுப்பப்பட்டது. அதற்கு நாலைந்து மணி நேரத்துக்கு முன்னமேயே மேற்படி தாக்கீது வருகிற செய்தி அவருக்குத் தெரிந்திருந்தும், தப்பியோடிப்போகப் பாராமல், தாக்கீது கொண்டுவருஞ் சேவகனோடு கூடப்போகும்படி ஆயத்தம்பண்ணிக்கொண்டிருந்தார். சேவகன் வந்துசேரவே, அவர் அவனை நோக்கி, "சிநேகிதனே நீ எனக்குச் சந்தோஷச்செய்திகொண்டுவந்தவன்; நான் பிரசங்கிக்கிற உபதேசத்தைக்குறித்து என் இராணிக்குமுன்பாக கணக்கு ஒப்புக்கொடுக்கும்படி நான் இப்பொழுது லண்டன் நகரத்துக்கு மனப்பூர்வமாய்ப் போகிறேனென்று உனக்கும் சர்வலோகத்தாருக்கும் தெரிந்திருப்பதாக; இரண்டு உத்தம அரசர்களுக்குமுன்பாக தேவன் தமது சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி தமது கிருபையைக்கொண்டு என்னைப் பலப்படுத்தினாரே; அதுபோல

இந்த இராணிக்குமுன்பாகவும், அவளுடைய நித்திய நன்மைக்கோ நித்திய கேட்டுக்கோ ஏதுவாக, அதைக்குறித்துச் சாக்ஷிபகரவும் அவர் என்னைப் பலப்படுத்துவார்" என்றார். அந்தச் சேவகனோ, தாக்கீதைக் கொடுத்து, அவரைப் பிடித்துக்கொண்டுபோக தனக்கு உத்தரவில்லை யென்று சொல்லிப் போய்விட்டான். சர்வசனங்களும் லத்திமர்பேரில் பிரியமும் அபிமானமுமுடையவர்களாயிருக்கிறார்களென்று பாப்பு மார்க்கத்தார் அறிந்திருந்ததினாலே, அவர் இராச்சியத்தைவிட்டு ஓடிப் போகும்படிசெய்யவேண்டுமென்று முதலில் எண்ணங்கொண்டிருந்த தாக இதினாலே தெரியவருகிறது. என்றாலும் இந்தப் பரிசுத்தவான், கர்த்தருக்குச் சித்தமானால் தாம் பகர்ந்துவந்த சாக்ஷியை தமது இரத்தத்தினாலே முத்திரைப்படுத்தத் தீர்மானித்திருந்தார். அதினாலே அவர் உடனே லண்டன் நகரத்துக்குப் புறப்பட்டுப்போனார். போகும் வழியில், ஸ்மித்ஃபீல்ட் என்னும் இடத்தைக் கடந்துபோகையில், அந்த இடம் தமக்காக வெகு காளாய்ப் பெருமூச்சுவிட்டுக்கொண்டிருக்கிறதென்று அலர்ந்த முகமாய்ச் சொன்னாராம். அப்பால் சங்கத்தாருக்குமுன் ஆஜ ரானதின்பேரில் அவர்கள் சொன்ன பரிகாசவார்த்தைகளையெல்லாம் பொறுமையாய்ச் சகித்துக்கொண்டு, செப்தெம்பர் 14வ-ல் திரும்ப வும் காவலிலடைபட்டார்.

அவர் காவலிலிருக்கையில் மகா கடினமாய் நடத்தப்பட்டதா கத் தோன்றுகிறது. அதையும் அவர் சந்தோஷமாய்ச் சகித்துக்கொ ண்டார். ஒருவிசை மாரிகாலத்தில் குளிர்காய்கிறதற்கு அவருக்கு நெருப்புக்கொடுக்க வில்லை. அப்பொழுது அவர் சிறைச்சாலைக்காரனு டைய வேலைக்காரனை யழைத்து உன் எசமானிடத்திற்போய் என்னைச் செம்மையாய் விசாரிக்காதபக்ஷத்தில் அவனை யேய்த்துப்போடுவே னென்று சொல்லு என்றார். சிறைச்சாலைக்காரன் அதைக் கேட்ட மாத்திரத்தில் பயத்தோடு ஓடிவந்து, நீர் இப்படிச் சொலியனுப்பி னதுண்டா, சொன்னதின்பொருளென்ன என்று விசாரிக்க; அவர் பிரதியுத்தரமாக, "நான் அப்படிச் சொல்லியனுப்பினது மெய்தான், நான் தனிக்கப்படவேண்டுமென்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறீர் களே, எனக்குக் குளிர்காய்கிறதற்கு நெருப்புத் தந்தாலேயல்லாமல் நீங்கள் விரும்புகிற காரியம் தவறிப்போகும், என்னத்தினாலென்றால் நான் குளிரினாலே செத்துப்போகிறதாயிருக்கும்" என்றார்.

காவலிலடைபட்டிருந்த காலத்தில் இலத்திமர் என்பவர் மகா ஆவலோடும் ஊக்கத்தோடும் பிராத்தித்துவந்ததாகச் சொல்லியிருக் கிறது. பலமுறையும் அவர் வெகு நேரம் முழங்காலிலே நின்றதினால் கடைசியில் பிறர் உதவியில்லாமல் எழுந்திருக்கமாட்டாமலிருப்பா ராம். மூன்று காரியங்களுக்காக மிகுந்த அனலோடு அவர் விசேஷ மாய்ப் பிரார்த்தித்துவந்தார். அவை யெவையெனில்; முதலாவது தேவன் தமது வசனத்தைப் போதிக்கிறதற்கு அவரை நியமித்திரு க்கிறதுபோல, மரணபரியந்தம் அவருடைய உபதேசத்தைப் பிடித் துநிற்கவும் அதின்பொருட்டு தமது இரத்தத்தைக்கொடுக்கவும் தம க்குக் கிருபையருளவேண்டுமென்றும்; இரண்டாவது தேவன் இரக் கமாய் இங்கிலாந்துக்கு இன்னம் ஒருவிசை தமது சுவிசேஷத்தை அனுக்கிரகிக்கவேண்டுமென்றும்; (இன்னம் ஒருவிசை என்ற சொற் களை, தேவன் தமக்கு முன்னிற்கக்கண்டு அவரோடு முகாமுகமாய்ப் பேசுகிறதுபோல, ஆவலாயும் விடாமுயற்சியாயும் உச்சரிப்பாராம்); மூன்றாவது பிற்பாடு இராணியான எலிசபேத்து என்னும் இராஜ கன்னிகையின் பெயரைச் சொல்லி, தேவன் அவளைப் பாதுகாத்து

ஆதரவற்ற இங்கிலாந்து இராச்சியத்துக்கு அவளை ஆதரவாகக் கட்டளையிடவேண்டுமென்றும் கண்ணீரோடு பிரார்த்தித்து வந்தார்.

இச்சிறைச்சாலையில் கொஞ்சக்காலம், இலத்திமர் கண்காணியார் ஜான்மர் சிரேஷ்ட கண்காணியார் ரிட்லி கண்காணியார் ஜான் பிராட்போட் என்ற குரு இம்மூன்று பெயரையும் ஒரே அறையில் அடை த்து வைத்திருந்தார்கள். சத்துராதிகள் கணிசக்குறைவாய் இப்படிச் செய்தபோதிலும் இவர்களுக்கு மிகுந்த ஆறுதலுக்கேதுவாயிருந்தது. அதற்குப் பின் 1554-ம்ஞூபித்தில் கண்காணிமார் மூவரையும் பகிரங்க மாய்த் தர்க்கம்பண்ணும்படி ஒக்ஸ்போர்ட் நகரத்துக்குக் கொண்டு போனார்கள். என்பது தொண்ணூறு வயசான இலத்திமரைப்போன்ற ஒரு மனுஷனைத் தர்க்கமாடும்படி பலாத்காரஞ்செய்கிறது கொடிய நிஷ்டூரமென்று சொல்லவும் வேண்டுமோ? ஒக்ஸ்போர்ட் நகரத்தில் மேற்படி கைதிகள் இதற்கென்று சூறிக்கப்பட்டிருந்த கம்பிஷனர்க ளுக்கு முன்பாக நிறுத்தப்பட்டார்கள். அதன்பேரில் சாக்கிரமெந்தைக் குறித்த பாப்புமார்க்க உபதேசத்தைச்சாதிக்கும்மூன்று பிரமாணங்கள் அவர்களுக்குச் சொல்லப்பட்டது. இலத்திமர்தான் கடைசியாய் வந் தார். அவர் மேற்படி பிரமாணங்களை ஒப்புக்கொள்ளுகிறதில்லையென்று மறுத்தபொழுது அடுத்த புதன்கிழமையில் அவர் தர்க்கிக்கிறதென்று நியமித்தார்கள். இலத்திமர் தமது விருத்தாப்பியம் சுகவீனம் வழக்க மில்லாமை புஸ்தகங்களில்லாமை முதலிய முகாந்தரங்களைப் பாராட் டித் தருக்கிக்க மறுத்தும், எழுத்திலாவது வாய்வசனமாயாவது தம து அபிப்பிராயத்தைத் தெரிவிக்கத் தடையில்லை என்றார். மேலும் தமக்கு அவர்கள் இறகு மை கொடாமலும் புதிய ஏற்பாடு ஒன்றுதவிர வேறு புஸ்தகங்கள் கொடாமலுமிருந்ததையிட்டு முறைப்பாடு செய்த தின்பின் அவர்சொன்னது; "புதிய ஏற்பாட்டை ஏழுவிசை திரும்பத்தி ரும்ப சாவதானமாய் வாசித்தேன், அதில் பாப்புமார்க்கப் பூசையை யுங் காணேம், தசையும் மூளையெலும்புங் காணேம்" என்றார். கம்பிஷ னர்கள் இந்த வார்த்தைகளைக் கேட்டமாத்திரத்தில் கோபப்பிராந்தர் களானார்கள். அவர்களிலொருவனுடைய டாக்ற்றர் வெஸ்ற்றன் என்ப வன், "புதிய ஏற்பாட்டில் பூசையிருக்கிறதென்றும் அதற்கு தசையும் மூளையெலும்பும் உண்டென்றும் ஒத்துக்கொள்ளப்பண்ணுவேன்" என் றான். அதற்கு இலத்திமர் மாறுத்தரமாக, "டாக்ற்றர், அப்படிச்செய்ய ஒருக்காலும் உம்மாலாகாது" என்று சொல்லுகிறதற்குள்ளாக அவரை இழுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

Bible Sketches and their Lessons.

பாலபோதனை.

நெகேமியாவின் சரித்திரம்.

நெகேமியா. 1-ம், 2-ம் அதிகாரங்கள்.

(தொடர்ச்சி.)

நம்முடைய சகல காரியாதிகளையும் இன்னவிதமாய்த் தொடங்கி நடப்பிக்கவேண்டுமென்று இதினாலே நன்றாய்க் கற்றுக்கொள்ளலாம். நாம் செய்யப்போகிற காரியங்கள் வருத்தமானவைகளா? தேவன்

நமக்குப் பலத்த சகாயராயிருக்கிறார். அவைகள் அக்க காரமானவை களா? அவர் நம்மை ஆறுதற்படுத்த வல்லவர். சத்துராதிகளின் பொறுமையும் பகையும் நமக்கு விரோதமாக மும்மூரமாயிருக்கின் றனவா? அவர் நம்மைத் தாங்குவார். நாம் கையிட்டுக்கொண்ட காரி யம் கைகூடிவந்து, நாம் நம்பியிருந்த காரியம் சித்தியடைந்தது மூலே நெகேமியாவைப் போல நாமும் சந்தோஷப்படுகிறோமா? "தேவனே என்னை நினைத்தருளும்" என்று அவன் செபித்ததுபோ லவே நாமும் செபிக்கவேண்டும். நாம் நடப்பித்த அல்லது நடப்பிக் கக்கூடிய இன்னின்ன காரியங்களினிமித்தமல்ல, உமது மகிமையான நாமத்தினிமித்தமும், உமது இரக்கங்களினிமித்தமும், உமது திருக்கு மாரனினிமித்தமுமே என்னை நினைத்தருளும், அவரே சகல ஸ்துதியை யும் கனத்தையும ஏற்கப் பாத்திரர். அவருடைய புண்ணியங்களினி மித்தமே நாங்கள் தேவரீருக்கு முன்பாக அங்கிகரிக்கப்படவேண்டு மென்றி மற்றப்படியல்ல என்று சொல்வோமாக.

மூன்றாவது எவ்வளவு ஆவலோடும், ஊக்கத்தோடும் அவன் காரியத்தைத் தொடங்கி நடப்பிக்கிறானென்று பாருங்கள். அன்றி ரவில் நெகேமியா கண்டகாட்சிகளை மற்ற யாராவது பார்த்திருப் பார்களாகில் மனந்தளர்ந்து பின்வாங்கிப் போகாதிருப்பார்களென்று நினைக்கிறீர்களா? யூதாமனிதர் என்ன சொல்லுகிறார்கள்? "மண் மேடு மிச்சமாயிருக்கிறது நாங்கள் அலங்கத்தைக் கட்டக்கூடாது" என்கிறார்களே. அவர்கள் அப்படிச் சொன்னது ஆச்சரியமல்ல. எருச லேமின் அழிவைப் பார்த்த யாரும் அப்படிச் சொல்லத்தக்கதுதான் அந்த மண் மேடுகளும் கற் குவியல்களும் தலைமுறை தலைமுறையாய் அங்கே கிடந்தனவே. புல்லும், செடியும் வளர்ந்து அவைகளை மூடிக் கொண்டன. வெகு காலத்துக்கு முன்னமேயே பாபிலோனிலிருந்து திரும்பிவந்திருந்த யூதர்கள் நகரத்துக்குள்ளே வீடுகள் கட்டிக் குடி யிருந்தார்கள். தேவாலயத்தைக் கட்டுகிறதே அவர்களுக்கு மிஞ்சின காரியமாயிருந்தது. பட்டணத்தின் அலங்கத்தைக் கட்ட அவர்களா லாகுமோ? எருசலேம் இன்னம் திறப்பாய்க் கிடந்தபடியால் சத்து ருக்கள் இஷ்டமானவேளையில் பட்டணத்துக்குள் நுழைந்து கல்லல் பண்ணத்தக்கதாயிருந்தது. அதினாலே அங்கே குடியிருந்த யூதர்கள் கஸ்தியும் நிந்தையுமான நிலைமையிலேயே தவித்துக்கொண்டிரு ந்தார்கள். அப்படியிருக்கும் காலத்தில், உத்தமனும் தைரிய நெஞ்சனு மான இந்த மனுஷன் பட்டணத்தைக்கட்டி முடிக்கவேண்டுமென்ற தீர் மானத்தோடி வந்துசேர்ந்தான். அப்பால் தானும் வருத்தத்தைப் பாரா மல் உழைத்தான். மற்றவர்களையும் ஏவினான். இவ்வாறு அவனுடைய ஏவுதலினாலும் மாதிரியினாலும் வேலை வெகு ஊக்கமாய் நடந்தேறின படியால், அலங்கமெல்லாம் ஐம்பத்திரண்டு நாளில் கட்டித்தீர்ந்தது.

இதைப் பார்த்துச் சுற்றிலுமிருந்த அஞ்ஞானிகள் மிகுதியும் ஆச்சரியப்பட்டார்கள். ஏழு வாரத்துக்கு முன்னே இதைக் குறித்து அவர்கள் எவ்வளவோ பரிகாசம் பண்ணினார்கள். அந்த அற்பமான யூதர் செய்கிறதென்ன; அவர்களுக்கு இடங் கொடுக்கப்படுமோ, பலியிடுவார்களோ, ஒரு நாளிலே மூடித்தப்போடுவார்களோ, சுட் டெரித்துப் போடப்பட்டு மண் மேடுகளான கற்களுக்கு உயிர்கொ டுப்பார்களோ என்றும், அவர்கள் கட்டினதுமென்ன, ஒரு நரி ஏறிப்போனால் அவர்கள் கல் மதில் இடிந்துபோகும் என்றும் இகழ் ந்து சக்கந்தம் பண்ணினார்களே. இப்பொழுது காரியமெப்படியிரு க்கின்றது? பட்டணத்தைச் சுற்றிலும் கோபுரங்களும் கொத்தளங்களு

மூள்ள அரணை மதில் எடுப்பிக்கப்பட்டிருந்ததே. இருண்ணூறு வரு ஷமாய் மூடியாமற் கிடந்த காரியம் ஐம்பத்திரண்டு நாளில் முடி ந்து தீர்ந்தது. ஆகையால் "எங்கள் பகைஞரெல்லாரும் அதைக் கேட்டபோதும், எங்கள் சுற்றுப்புறத்தாராகிய புறச்சாதியான அனை வரும் கண்டபோதும், மிகவும் மூனையற்றுப்போய், இந்தக் கிரியை எங்கள் தேவனால் கைகூடிவந்ததென்று அறிந்தார்கள்" என்று சொல்லியிருப்பது ஆச்சரியமேயல்ல.

இதினாலே நாம் கற்றுக்கொள்ளத்தக்க படிப்பினை இன்ன தென்று அறிகிறது வருத்தமா? ஏதாயினும் ஒரு காரியம் செய்யப் படவேண்டியது என்று அறிவோமாகில், அதைச் செய்வோமாக. அது ஒரு வேளை வருத்தமான காரியமாயிருக்கலாம், என்றாலும் பிரயாசப்படுங்கள். முடிகிறதற்கு வெகு காலம்பிடித்தாலும் மனஞ் சோர்ந்து கை தெறிழாதிருங்கள். நம்மைச் சுற்றிலும் பண்ணுகிற சத்துராதிகளுமிருக்கலாம். ஆனாலும் தேவனிடத்தில் நம்பிக்கையா யிருப்போமாக.

அப்புறம் இந்த வேலையில் நெகேமியாவுக்கு உதவிசெய்தவர்க ளைக்கொண்டும் ஒரு படிப்பினையைக் கற்றுக்கொள்ளலாம். அந்த வேலைமுழுமையையும் ஒன்றியாய்ச் செய்து முடிக்க அவனாலாகாதே. மற்றச் சனங்களை வேலைக்கு ஏவிநடத்தின வகையில் அவனுடைய அதி விவேகத்துக்கும் ஆவலுக்கும் நல்ல அத்தாக்ஷி காண்கிறோம். அவன் தான் சவுக்கியமாய் உட்கார்ந்திருந்துகொண்டு சனங்களை நோக்கி, வேலைக்குப் போங்கள் என்று சொல்லாமல், வாருங்கள் என்று சொல்லி முந்தி நடந்து போனான். மேலும் வருத்தமான வேலையையெல்லாம் சனங்கள் செய்யவிட்டுவிட்டு, அதிகாரியைப் போல தனக்கு கனமும், அதிகாரமும், பணமும், மேன்மையும் வேண்டுமென்று தேடினவனுமல்ல. அவன் தேசாதிபதியாயிருந்தும் தேசாதிபதிக்குரிய வருமானத்தைக் கேட்கவுமில்லை, தனக்கு ஏற்ப ட்டிருந்த படியை வாங்கவுமில்லை. சனங்கள் தங்கள் சம்பாத்தி யத்தை வைத்துக்கொள்ளும்படி விட்டு, அவர்களில் நூற்றைம்பது பேருக்கு அதிகமானவர்களுக்கு நாடோறும் விருந்து செய்துகொ ண்டுவந்தான். இவ்வாறு அவர்கள் உதார குணமுள்ளவர்களாயி ருக்க கூடியவகையிலெல்லாம் அவர்களுக்கு நன் மாதிரி காண்பித் துக்கொண்டுவந்தான்.

அது நிற்க, அவர்களை அவன் எவ்வளவு விவேகமாய் வேலை வாங்குகிறானென்றும் பாருங்கள். மேற்படி வேலைக்கு வேண்டிய கற்களையும் மரங்களையும் சவதரித்துச் சேர்த்துக்கொண்டவுடனே, அவன் சனங்களை நோக்கி, அவனவன் குடியிருக்கிற வீட்டுக்கு எதி ரே இடிந்து கிடக்கிற அலங்கத்தை தன் தன் வேலைப் பங்காக எடுத் துக்கொண்டு அதைப் பழுதுபார்த்துக் கட்டுங்கள் என்று சொல்லு கிறது போலிருக்கிறது. மூன்றும் அதிகாரத்தை வாசிக்கையில் வேலை எவ்வளவு சுறு சுறுப்பாய் நடக்கிறதுபோல் காணப்படுகிறது. சுத்தியலின் சத்தமும் மண்வெட்டியின் ஓசையும் நம்முடைய காது களில் தொனிக்கிறது போலுமிருக்கிறதில்லையா?

எல்லாருக்கும் அவரவர் பழுது பார்த்துக் கட்டவேண்டிய இடம் குறிக்கப்பட்டிருந்தது. "ஒவ்வொருவனும் தன் தன் வீட்டுக்கு எதிரேயிருந்த சுவரைப் பழுது பார்த்துக் கட்டினான்" என்று மாத் திரம் சொல்லப்பட்டிருக்கிறது. எத்தனையோ ஏராளமான பேர்கள் இந்த அதிகாரத்தில் வருகின்றனர். எல்லாரும் தங்கள் அந்தஸ்தை

யோ கனத்தையோ எண்ணுமல், மனப்பூர்வமாய் இந்த வேலையை நடப்பித்ததாகத் தோன்றுகிறது. தெக்கோவா ஊரிலுள்ள பிரபுக்களைக் குறித்து மாத்திரம், "அவர்கள் கர்த்தருடைய வேலைக்குத் தங்கள் கழுத்தைக்கொடுக்கவில்லை" என்று வாசிக்கிறோம். அதினால் அவர்களுக்கு வெட்கமேயல்லாமல் வேறல்ல. எப்படியும் அவர்கள் உதவிசெய்யாவிட்டாலும் வேலை தடைப்படவில்லை. ஒரு பெரிய மனுஷனின் குமாரத்திகளும் இந்த நல்ல காரியத்தில் வைராக்கியமாய் உழைக்கிறதைக் காண்கிறோம். அவர்கள் தகப்பன் எருசலேமிலுள்ள பிரபுக்களில் ஒருவனுயிருந்தபோதிலும் இத்தப் பெண்கள் வெட்கப்படாமல் தகப்பனுக்கு உதவிசெய்தார்கள்.

இதனைக்கொண்டு நாம் கற்றுக்கொள்ளத்தக்க நல்ல படிப்பினை உண்டு. நாம் உலகத்துக்கு அனுகூலமாய் நன்மை செய்யத்தக்க உத்தம வழி இன்னதென்று நன்றாய்க் காண்பிக்கின்றன. ஒவ்வொருவரும் தன் தனக்குச் சமீபமாயிருக்கிறதைச் செய்யப்பிரயாசப்பட்டால் காரியம் நிறைவேறிப்போகும். ஒவ்வொருவரும் தன் தன் வீட்டு முன்னே பெருக்கிச் சுத்தஞ் செய்துவிட்டால் தெருவெல்லாம் சுத்தமாகிப்போமே. "ஒவ்வொன்றைச் செவ்வைபண்ணுங்கள், அப்பொழுது எல்லாம் செவ்வையாகிப்போம்" என்று இங்கிலிஷில் ஒரு நல்ல பழமொழி இருக்கிறது. பிரியமானவர்களே, தேவனுடைய மெய்யான எருசலேமின் மதில்கள் கட்டப்படவேண்டுமென்று உங்களிற் சிலர் கவலையுள்ளவர்களாயிருக்கிறீர்களே. சர்வலோகமும் தேவனுடைய ஈகரமாகும். அந்தமகிமையான காலம் எப்பொழுது வருமென்று ஆவலாய்க் காத்திருக்கிறீர்களே. நல்லது முதலாவது உங்கள் சொந்த இருதயங்கள் தேவனுக்கு முன்பாகச் செவ்வையாயிருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள். எருசலேமைச் சுற்றிலும் மதில் கட்டப்பட்டிருந்தும், என் வீட்டுக்கு எதிரே திறப்பாயிருந்தால் எனக்குப் பிரயோசனமென்ன என்று யாராவது கேட்கிறீர்களோ? நல்லது, அப்படியானால், நீ நன்மைசெய்யப் பார்ப்பதில் உன் அண்டையிலிருந்து தொடங்கு. உன் பெற்றுக்கள் இனசனங்கள் சிநேகிதர்களானவர்களுடைய இகபர நன்மையை முதலாவது தேடி. உன் தோழருக்கும் அயலகத்தாருக்கும் கிறிஸ்து இரட்சகருடைய அன்பைச் சொல்லு. உன் வீட்டில் தொடங்கி காரியத்தை நடப்பி. அப்பொழுது உலகத்துக்கும் உன்னால் நன்மை உண்டாகும்.

தேவனுடைய நியாயப்பிரமாணத்தைக் குறித்தும் விசேஷமாய் ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்கவேண்டியதைக் குறித்தும் நெகேமியா காண்பித்த வைராக்கியத்தைப்பற்றி இன்னம் விவரிக்கலாம். ஆனாலும் அவனிடத்தில் விளங்கிய நன்மாதிரியைக்கொண்டு மேலே எடுத்துச் சொல்லியிருக்கிற படிப்பினைகளே தற்சமையத்துக்குப் போதும். அவன் நடப்பிக்க ஏற்பட்ட கிரியை மகா மகத்துவமானதாகும். ஆகையால் இவ்வளவு மகிமையான வகையாய் தேவனுக்கு ஊழியஞ்செய்யவும் தன் இனசனத்தாருக்கு நன்மைசெய்யவுமாக அஞ்ஞானிகள் நடுவில் தனக்கிருந்த சுகத்தையும் மேன்மையையும் அவன்விட்டுவிட்டது ஆச்சரியமல்ல. அவன் கையிட்டுக்கொண்ட வேலைமுடிய அர்தசஷ்டா ராசா நினைத்ததிலும் அவன் தான் எண்ணினதிலும் அதிகக் காலம் பிடித்தது. அவன் ஒரு விசை பார்சுத்தேசத்துக்குப்போய், மறுபடி தன் பிதாக்களின் தேசத்துக்குத் திரும்பிவிட்டான். முன்னும் பின்னும் முப்பது வருஷத்துக்கு அதிமாய்த் தேசாதிபதியாயிருந்தானென்று தோன்றுகிறது. அவ்வளவு காலமும் அவன் தன்னுற் கூடியவகையிலெல்லாம் தேவனுடைய சனங்களுக்கு நன்மைசெய்ய முயன்றான். பழயஏற்பாட்டில் அடங்கியிருக்கிற சரித்திரங்களில் இவனுடைய சரித்திரந்தான் கடைசியானது. இவனுடைய காலத்திலித் தான் தீர்க்கதரிசிகளில் கடைசியான மல்கித்தீர்க்கதரிசியும் எழும்பித் தேவனுடைய சித்தத்தை வெளிப்படுத்தினது. மல்கி என்பதற்கு "என்தூதன்" என்று பொருள். இந்தத் தீர்க்கதரிசி, நெகேமியா கட்டின அலங்கங்களுக்குள்ளும் எஸ்ரு எடுப்பித்திருந்த தேவாலயத்தின் பிராகாரங்களிலும் நின்று சர்வலோக இரட்சகராகிய மெசியாவின் மகத்துவமான வருகையை முன்னறிவித்தான். "நீங்கள் தேடுகிற ஆண்டவரும் நீங்கள் விரும்புகிற உடன்படிக்கையின் தூதனுமானவர் தம்முடைய ஆலயத்துக்குத் தீவிரமாய் வருவார்" என்று கூறினான்.

Notes on Leviticus.

லேவியராகம வியாக்கியானம்.

ஙக. அதிகாரம்.

பற்பல கட்டளைகள்.

3. "ஓய்வுநாட்களை." 30. வா. யாத்தி. 16: 23-30. 31: 13, 14. லேவி. 26: 2. உபா. 5: 12. எசே. 20: 12. லூக். 13: 14.

14. அவர்கள் காரியத்தை தேவன் விசாரிப்பார் என்றர்த்தம்.

16. "பிறனுடைய இரத்தப்பழிக்கு உட்படவேண்டாம்." அதிகாரிகள் நியாயாதிபதிகளுக்கு முன்பாக ஒருவன்மேல் அநியாயமாய்க் குற்றம் சாட்டாதே, கள்ளச்சாட்சிசொல்லவும் ஏற்படாதே என்றர்த்தம்.

17. "கடிந்துகொள்ளவேண்டும்." பிறன் பாவஞ்செய்யச் சம்மதிக்கிறவன் அந்தப்பாவத்துக்கு உடன்தையாகிறான். அதினால் தன் சகோதரன் பாவஞ்செய்யக் கைகொடுக்கிறவன்போல் அவனுக்கு அபகாரம் செய்கிறான்.

18. மத். 22: 38. தேவன் சர்வ லோகத்தாருக்கும் கொடுத்திருக்கிற இரண்டாவது பெரிய கற்பனை இதுவே.

19. இந்த அதிகாரத்திலுள்ள பற்பல கட்டளைகள் விக்கிரகாராதனைப் பழக்கங்களுக்கும் சடங்காசாரங்களுக்கும் அடித்தாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேலர் அவைகளுக்கு விலகிப் பிரத்தியேகமான சனங்களாயிருக்கும்படி நோக்கமாய்க் கற்பிக்கப்பட்டது.

23. "விருத்தசேதனமில்லாதவைகள்." அசுத்தமானவைகள் என்றர்த்தம். தனித்தோலைப்போல் அதின் பழங்களைத் தூர எறிந்து போடவேண்டும். இதற்குக் கட்டளை, மனுஷர் தங்கள் இச்சைக்கு மட்டுக் கட்டும்படி போதிக்கிறது. மேலும் முதற்பலன் தேவனுக்குரியது.

28. அரபியருக்குள்ளும், இந்துக்களுக்குள்ளும் பச்சை குத்துவது வழக்கந்தானே.

படிப்பினை.

தேவன் எத்தனை பரிசுத்தர் என்று இவ்வதிகாரத்தில் விளங்குகிறது. தேவன் உனக்குக் ஆஸ்தியைக் கொடுத்தாராஞல் அது உனக்குத்தான் என்று நினையாதே. நீ எளியவர்களுக்கும் கொடுக்கும்படி உன்னை உக்கிராணக்காரனுய் வைத்திருக்கிறார். நீ வாரத்துக்குப் பயிரிடுகிறவன்போலிருக்கிறாய். மேல்வாரம் எகோவாவுக்குச் செல்லவேண்டும். 9, 10.

தேவன் எத்தனை நட்பமாய் மனுஷரை விசாரிக்கிறார். எத்தனை நன்மையுபகாரி! 35, 36.

உ0. அதிகாரம்.

பற்பல கட்டளைகள்.

---

2. மோளேகுக்கு சிலவேளை நரபலியிடுவது வழக்கம். இந்த விக்கிரகம் அக்கினிக்கு அறிகுறியாக வணங்கப்பட்டது. இது அம்மோனியர் தெய்வம்.

14. அவர்களைக் கல்லெறிந்து கொன்ற பிற்பாடு சுட்டெரிக்கவேண்டுமென்று தோன்றுகிறது. 21: 9. யோசுவா. 7: 25.

படிப்பினை.

இந்த அதிகாரத்திற் காட்டிய பயங்கரமான அக்கிரமங்களை நாம் செய்யாவிட்டாலும் அவைகளைச் செய்யத்தக்க கெட்ட இருதயம் நம்மிடத்திலுண்டு. ஆகையால் நாம் அற்பமாய்த் தோன்றுகிற பாவத்துக்கு முதலாய் நமது இருதயத்தைச் சாயவிடக்கூடாது; கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனுயிருப்பான்.

Blunt's undesigned Coincidences.

புதிய ஏற்பாட்டுச் சரித்திரப்புத்தகங்களின் உண்மையை விளக்கும்படி அவற்றிலிருந்து பளன்ட் ஐயர் எடுத்துக்காட்டுகிற கருதாத சம்பந்தங்கள்.

சுவிசேஷங்கள் 4 பேரால் எழுதப்பட்டாலும், ஒன்றுக்கொன்று மிகவும் சம்பந்தமுள்ளவை. அந்தச் சம்பந்தங்கள் தற்செயலாகவே வந்திருக்கிறது.

1. இப்படிப்பட்ட சம்பந்தங்கள், இவ்வாகமங்கள் உண்மையுள்ளதென்று காட்டும்படி நமக்கு உதவுகிறது.

பவுல் அப்போஸ்தலன் எழுதின நிருபங்கள் ஒன்றுக்கொன்றும், நடபடியாகமத்தோடும் கருதாத சம்பந்தமுள்ளதாயிருப்பதை பேலி ஐயர் எடுத்துக்காட்டுவதில் அவற்றின் உண்மையை ரூபிக்கிறதற்கு உதவுவதுபோல இதுவுமிருக்கிறது.

2. சுவிசேஷகர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து அல்லது கலந்து பேசிக்கொண்டு எழுதவில்லை என்று இந்தச் சம்பந்தங்களினுல் விளங்கும்.

3. இப்படிப்பட்ட கருதாத சம்பந்தத்தோடு சம்பந்தப்பட்டிருக்கிற அற்புதத்தின் உண்மையை திருஷ்டாந்தப்படுத்தவும் உதவுகிறதாயிருக்கிறது. அந்தச் சம்பந்தங்களாவன;

தேவவசனத்தைக் கையில் பிடித்துக்கொண்டு இதை வாசிக்கவும்.

I. மத். 4: 18—22 வாசி. "தங்கள் வலைகளைப் பழுதுபார்த்துக் கொண்டிருக்கிறபோது." இதை லூக்கா 5: 1—11 வாசித்து ஒத்துப்பார். மத்தேயு எழுதிய சங்கதிக்கு லூக்கா எழுதிய சங்கதி தொடர்ச்சியென்றே சொல்லலாம். ஏனென்றுல் இரண்டும் ஒரே காரியத்தைச் சொல்லியது. இரண்டிலும் 4 சீஷர் அழைக்கப்பட்ட சம்பந்தம் காட்டியிருக்கிறது; இரண்டிலும் அழைக்கப்பட்ட வகை ஒன்று போலிருக்கிறது; இரண்டிலும் சீஷர் இருந்த இடமும், அவர்களுடைய சேர்க்கையும், அவர்களுடைய கீழ்ப்படிதலும் இசைவாயிருக்கிறது. இரண்டு சுவிசேஷங்களையும் ஒத்துப்பார்த்து சரித்திரத்தைப் பின்வருகிறபடி கோர்வைசெய்யலாம். ஜன நெருக்கத்தினிமித்தம் இறிஸ்து பேதுருவின் படவிலிருந்து பிரசங்கித்தார். பிரசங்கிக்கையில், செபெதேயுவின் வகையறுப்படவானது, பக்கமாய்க் கடற்கரையோரத்தில் நின்றது. பிரசங்கம் முடிந்தவுடனே பேதுருவின் படவை ஆழத்திலே விடச்சொல்லி அற்புதமாய் மீன் அகப்படச்செய்தார். பேதுருவின் படவு மீன்களைக் கொள்ளாதிருந்தபடியால் அடுத்த படவிலிருந்த செபெதேயு வகையருவைச் சைகைகாட்டினுர்கள். இரண்டு படவுகளும் மீன்களால் நிறைந்து கரைக்கு இழுக்கப்பட்டது. இப்பொழுது ஏசு தமது போதகத்தினுலும் அற்புதத்தினுலும் பேதுருவையும் அந்திரேயாவையும் உணர்த்தி அவர்களை அழைத்தார். இவர்களை அழைத்தபின் செபெதேயுவும் அவன் மக்களும், தங்கள் படவையும் கரைக்கு இழுத்துக்கொண்டுபோய் தங்கள் வலைகளைப் பழுதுபார்த்துக்கொண்டிருக்கும்போது அவர்களையும் அழைத்தார். இப்போ கவனிக்கவேண்டியதென்னவென்றுல், அற்புதத்தைக்குறித்து மத்தேயு ஒரு வார்த்தையும் பேசவில்லை என்றுலும், அவர்கள் அழைக்கப்பட்டபோது தங்கள் வலைகளைப் பழுதுபார்த்துக்கொண்டிருந்தார்கள் என்று மாத்திரஞ் சொல்லுகிறார். வலை ஏன் கிழிந்தது என்பதை அவர் அவசியம் சொல்லவேண்டுமென்று நினைக்கவுமில்லை, சொல்ல வேண்டிய அவசியமுமில்லை. ஆனுல் ஏராளமான மீன்கள் அகப்பட்டதினுலே வலை கிழிந்தது என்று லூக்கா சொல்வதற்கு மத்தேயு சொல்வது கருதாத வகையாய் இசைகிறதல்லவா? இது அற்பம்போல் காணப்பட்டாலும், மத்தேயு: வலைகளைப் பழுதுபார்த்துக்கொண்டிருந்தார்கள் என்று சொல்வது, லூக்கா "வலை கிழிந்துபோகத்தக்கதாக" என்று சொல்வதைத் தகுவகாரியம் ஆக்குகிறது. வலை கிழிந்தது என்பது, மிகுதியான மீன்கள் அகப்பட்டதைத் தகுவகாரியமாக்குகிறது. மிகுதியான மீன்கள் அகப்பட்டது, அற்புதத்தைத் தகுவகாரியமாக்குகிறது. இப்படியாக ஒன்றுக்கொன்று பூண்கட்டினதுபோலிருக்கிறது. லூக்கா சொல்வதை நிசமென்று ரூபிக்க மத்தேயு மனதறியாய் மாலமாய் இப்படி எழுதினுன் என்று யார் சொல்லக்கூடும்? மேலும்

மத்தேயு அற்புதமாய் மீன்கள் அகப்பட்டதைச் சொல்லாவிட்டாலும், "உடனே பின்சென்றார்கள்," "உடனே பின்சென்றார்கள்" என்று சொல்லும்போது மேற்காட்டியதுபோல இதுவும் அற்புத சங்கதிக்கு இசைவாயிருக்கிறதல்லவா?

மத்தேயும் லூக்காவும் சொல்லியது வெவ்வேறான சம்பவமென்று ஆட்சேபிக்கப்படுவதுண்டு. அதற்குச் சொல்லப்படும் நியாயங்களும் உத்தரவுகளுமாவது:—

1. மத்தேயுவில், "ஏசு நடந்துபோகையில்" என்றும்; லூக்காவில், "நின்றபோது" என்றும் சொல்லியிருக்கிறது.

நின்றும் நடந்தும் போதித்திருக்கலாமே.

2. மத்தேயுவில், சீமோனையும் அந்திரேயாவையும் அழைத்தார்; லூக்காவில் சீமோன் பேர்மட்டுஞ் சொல்லியிருக்கிறது.

லூக்கா பிரதானமானவனைச் சொல்லுகிறார். இவன் படவில் வேறே பேர் இருந்ததாக லூக்காவிலுலேயே தெரியவருகிறது. "அவர்கள் செய்து;" "சைகைகாட்டினார்கள்;" "பின்சென்றார்கள்." 6: 7, 11. இப்படிப் பன்மையாய்ச் சொல்லியிருப்பதில் அந்திரேயாவும் ஒருவனாயிருந்திருக்கவேண்டும்.

மத்தேயுவில், சீமோன் அந்திரேயா இவர்களும்; யாக்கோபு யோவான் இவர்களும் வெவ்வேறாய் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். லூக்காவில், எல்லாரும் ஒருமிக்க அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அநேக சங்கதிகளை எழுதுவதில் ஒரு சுவிசேஷகன் இப்படிச் சேர்த்து எழுதுவது விகற்பமல்ல.

4. மத்தேயுவில், யாக்கோபும் யோவானும் சாவகாசமாய்த் தங்கள் வலைகளைப் பழுதுபார்த்துக்கொண்டிருக்கிறார்கள். லூக்காவில், சீமோனுக்கு உதவிசெய்வதில் அங்குமிங்கும் ஓடித்திரிகிறார்கள்.

வலைகளைப் பழுதுபார்த்ததும் சீமோனுக்கு உதவிசெய்ததும் ஒரே நிமிஷத்தில் நடந்ததாகச் சொல்லப்படவில்லை.

5. மத்தேயுவில், வலைகளைப் பழுதுபார்த்தது, லூக்காவில் அற்புதமாய் மீன் அகப்பட்டு வலை கிழிந்ததற்குப்பின்னான செய்கை என்றால், சீமோனும் பேதுருவும் வலைபோட்டதும் அதற்குப் பின்னான செய்கையாய்த்தானிருக்கவேண்டும். ஏனென்றால் மத். 4: 18, 21 வாக்கியங்கள் ஒரே சமயத்தில் நடந்த சங்கதியைக் காட்டியது.

அப்படியிருக்கலாம். மத். 4: 18-ல் வலை போட்டது மீன் பிடிக்க அல்ல, மீன் பிடித்தபின் வலைகளை அலசும்படியாக இருக்கலாம். மீன் பிடிக்கக் கடலுக்குள்ளேயல்லவா அங்குமிங்கும் போகவேண்டும். மீன் பிடிக்கும்படி கர்த்தர் சொன்னபோது "ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய்" என்றாரே.

6. லூக்கா சொல்லுகிறபடி சீமோனுடைய வலைதான் கிழிந்தது. அப்படியானால் சீமோனும் அவன் கூட்டாளியுமல்லவா வலையைப் பழுதுபார்க்கவேண்டும்? மத்தேயு: செபெதேயுவும் அவன் குமாரரும் வலையைப் பழுதுபார்த்ததாகச் சொல்லுகிறாரே.

இவர்கள் கூட்டாளிகளானதினாலே ஒருவர் வலையை ஒருவர் பழுதுபார்க்கலாமே. மேலும் செபெதேயுவுக்குக் கூலியாட்களிருந்ததினாலே, அவர்கள் பழுதுபார்ப்பது இயல்புதான். மாற்கு 1: 20.

7. மாற்கு 1: 23—39 ஐ லூக்கா 4: 31—44 ஓடு ஒத்துப்பார்க்கும்போது மாற்கும் (மத்தேயும்) சொல்லிய அழைப்பு, லூக்கா சொல்லியதற்கு முன்னதாயிருக்கவேண்டுமே.

லூக்கா சற்றென்னிலும் காலவரிசை தப்பாமல் எழுதினானென்றால் அப்படித்தானிருக்கவேண்டும். ஆனால் லூக். 4: 31—44 சொல்லிய சங்கதியானது 5: 1—11 சொல்லிய சங்கதிக்கு முந்தி நடந்ததென்று நம்பப் போதுமான நியாயமில்லை.

ஆகையால் மேலே முதலில் சொல்லியதே சரியாய்க் காணப்படுகிறது. அதாவது மத்தேயும் லூக்காவும் ஒரே சங்கதியைக்குறித்தே எழுதியிருக்கிறார்கள் என்று சொல்லவேண்டும்.

II. மத். 4: 21. "...தங்கள் தகப்பன் செபெதேயுவுடனே....."
8: 21. "...சீஷர்களில்...என் தகப்பனை அடக்கம்பண்ண....."
20: 20. "...செபெதேயுவின் குமாரருடைய தாய்....."
27: 56. "...செபெதேயுவின் குமாரருடைய தாய்....."

முதல் வாக்கியத்தினால், யாக்கோபும் யோவானும் அழைக்கப்படும்போது அவர்கள் தகப்பன் உயிரோடிருக்கிறதாகத் தெரியும். கடைசி 3 வாக்கியங்களினால் செபெதேயு பின்னான காலத்தில் மரித்துப்போயிருக்கவேண்டும் என்று தோன்றும். ஏனென்றால் "செபெதேயுவின் குமாரருடைய தாய்" என்று சொல்லும்போது அவள் கைம்பெண் என்ற அர்த்தமாய் வருகிறது.

2-ம் வாக்கியத்தில் செபதேயுவின் மரணம் குறிக்கப்படுகிறதென்று உத்தேசிக்கப்படுகிறது. அக்காலத்தில் "சீஷர்" என்ற வார்த்தையால் குறிக்கப்பட்டவர்கள் மிகவும் சிலர். 8: 23. 9: 37. இச்சிலரில் செபதேயுவின் குமாரரும் சேர்ந்திருந்தார்கள் என்பது பிரத்தியட்சமே.

III. மத்தேயு 8: 14. "...மாமி..."

சரித்திரக்காரன் ஒரு அற்புதத்தை எழுதுவதில் இவளே பேதுருவுக்கு மாமி என்று தற்செயலாய்ச் சொல்லுகிறான். பேதுரு கலியாணம்பண்ணினவன் என்று காட்ட நோக்கமாய் எழுதவே இல்லை. என்றாலும் இவ்விடத்தில் சொல்லியிருப்பது பவுலினால் தெளிவாகிறது. 1 கொரிந்தர் 9: 5. மத்தேயு, பேதுரு என்றும்; பவுல், கேபா என்றும் பேர் வித்தியாசமாய் எழுதியிருப்பதைக் கவனித்தாலும்; இருவரும் வெவ்வேறான சம்பந்தத்தில் சொல்வதைக் கவனித்தாலும் இது நோக்கமில்லா ஒற்றுமை என்றே விளங்கும். இது சம்பந்தமாய் இருவர் எழுதியதும் யதார்த்த சங்கதியாயிருக்கவேண்டுமல்லவா?

IV. மத். 8: 16. "அஸ்தமனமானபோது"

வியாதிக்காரரை சூரியன் அஸ்தமிக்கிறவரையும் காத்திருக்கிறதற்கு இங்கே முகாந்தரஞ்சொல்லப்படவில்லை. இந்த ஒரு சுவிசேஷமட்டும் நமக்கு இருக்குமானால், இந்த வார்த்தைகளின் அருமை நமக்கு ஒருகாலும் தெரியாமலேபோகும். ஆனால் மாற்கு 1: 21 ஐயும் லூக். 4: 31 ஐயும் வாசிப்பதினால் இந்த நாள் ஓய்வுநாள் என்று தெரியவருகிறது. மத். 12: 10 ஆல் ஓய்வுநாளில் குணமாக்குகிறது நியாயமல்லவென்று யூதருக்குள் தப்பெண்ணமிருந்ததாகவும் தெரியவருகிறது. ஆகையால் அந்த நாள் சாயங்காலத்தோடு யூதருடைய ஓய்வுநாள் முடிந்துபோகுமாகையால் "அஸ்தமனமானபோது" என்று சொல்லியிருக்கிறது சரியே.

V. மத். 9: 10. "...வீட்டிலே..."

யாருடைய வீட்டிலே? மாற்கு 2: 15. லூக். 5: 29 வாசி. மேலும் "அநேகம் ஆக்காரரும்" பந்தியிருந்ததாகச் சொல்லியிருக்கிறது. மத்தேயுவின் தொழிலையும் அவன் இருந்த இடத்தையும் கவனித்தால், இப்படிப்பட்டவர்கள் அங்கே இருக்கிறதும் தங்கள் சரதிக்காரன் வீட்டில் கூடுகிறதும் இயல்புதானே.

இதைச் சேர்ந்த இன்னொரு காரியமுண்டு. ஆயக்காரருக்குத் தலைவனான சகேயு எரிகோவிலிருந்ததாக வருவதும் சரியே. லூக். 19: 2. எரிகோவானது தயில வியாபாரத்திற் பேர்போனது. அது தயிலத்திற்கு உற்பத்தி ஸ்தானம், தயிலஞ்செய்கிற இடம், தயிலம் ஏற்றுமதியாகிற இடம். இப்படிப்பட்ட இடத்தில் ஆயக்காரர் கூட்டமாயிருப்பது இயல்புதானே. இது இரட்சகர் எரிகோவில் பிரவேசித்த போது சகேயு அவரைப் பார்க்க வகைதேடின சங்கதியை நோக்கமில்லாமல் மெய்ப்படுத்துகிறதல்லவா?

VI. மத். 10: 3. "...தோமா, ஆயக்காரனுகிய மத்தேயு..."

மாற்கு 3: 18. லூக். 6: 15. இவற்றில் மத்தேயுவை தோமாவுக்கு முந்திச் சொல்லியிருக்கிறது, ஆயக்காரன் என்ற இழிவான பேரைச் சொல்லவில்லை. மத்தேயு எழுதின அட்டவணையில் தன்னைத் தாழ்மையாய் ஆயக்காரன் என்றும், தன் கூட்டாளியான தோமாவுக்குப் பிற்தியும் சொல்வது கவனிக்கப்படத்தக்கது.

VII. மத். 12: 46. "...அவரிடத்தில் பேசவேண்டுமென்று.."

மத். 13: 54-ல் நோக்கமில்லாமல் "தாம் வளர்ந்த ஊரிலே வந்து" என்று சொல்வதினாலே, சொந்த ஊரில் இவர்கள் இப்படிப் பேச வருவது இயல்புதானே.

VIII. மத். 12: 46. மாற்கு 6: 3. லூக். 8: 19. யோவா. 2: 12. இந்த வாக்கியங்களைப் பார்ப்பதால் கிறிஸ்துநாதர் உலகத்திலிருக்கும்போதே யோசேப்பு மரித்துப்போயிருக்கவேண்டுமென்று தோன்றும். காணூர் கலியாணத்திலாவது, இரட்சகர் சிலுவையிலறையப்பட்ட போதாவது யோசேப்பைக்குறித்த பேச்சைக் காணோம். இரட்சகர் தமது தாயாரை யோவானிடத்தில் ஒப்புவித்தார். அவன் "அவளைத் தன்னிடமாய்ச் சேர்த்துக்கொண்டான்."

IX. மத். 14: 1. "...தன் ஊழியக்காரரை நோக்கி"

மற்றவர்களிடத்திலல்ல, தன் வேலைக்காரரிடத்தில் தன் அபிப்பிராயத்தைச் சொல்லவேண்டியதென்ன? மாற்காவது லூக்காவாவது இந்தச் சரித்திர சம்பந்தத்தில் முகாந்தரம் சொல்லவில்லை. ஆனால் வேறுர் சம்பந்தத்தில் தெளிவாகிறது. லூக். 8: 3. நடபடி 13: 1. வரசி. கிறிஸ்துநாதரைப் பின்பற்றினவர்களில் இவன் வேலைக்காரருமிருந்தபடியினாலே அவர்களுக்கு இதுகாரியம் தெரிந்திருக்குமென்று அவர்களிடத்தில் பேசுவது இயல்புதானே.

X. மத். 16: 6. "...சதுசேயர்..." மாற்கு 8: 15...."ஏரோதின்..."

ஏரோது சதுசேயனென்று இவ்வாக்கியங்களினால் வருவிக்கலாம். இதற்கிசைவாக லூக்கா 9: 7—9-ல் சொல்லியிருக்கிறது.—"...கலக்கமடைந்து, யோவானே நான் சிரச்சேதம்பண்ணினேன்..." யோவான் இல்லாமற்போனானே, இவன் யாரோ என்பதுபோல சொல்லுகிறான். மேலும் இதைக்குறித்து "கலக்கம்" அடையவேண்டியதென்ன? நல்லோருடைய ஆத்துமா கூடவிட்டு கூடபோயும் என்று பரிசேயர் நம்பி வந்தார்கள். ஆகையால் அவர்கள் கலக்கமடையமாட்டார்கள். ஒருவன் மரணத்தோடு மூற்றும் அற்றுப்போகிறான் என்று விசுவாசித்து வந்த சதுசேயன்தான் கலக்கம் அடைவது நியாயம். இவன் மனச்சாட்சியில் குத்திண்டி தன் கொள்கையைக்குறித்துச் சந்தேகித்தவனாய், மத். 14: 1-ல் சொல்லுவது நாம் பேசிவருவதற்கு விகற்பமாகமாட்டாது.

XI. மத். 17: 21. ..."உபவாசம்..."

இரட்சகருடைய வார்த்தைகளினால் சிஷர் உபவாசித்ததாகத்

தோன்றுது. அப்படியே, 9: 14 வரசி. இதினால் "சிஷர் உபவாசிக்கவில்லை" என்றும், ரட்சகர் உபவாசித்தார் என்றும் தோன்றும், ஏனென்றால் இதில் நீரும் என்று சொல்லவில்லையே.

XII. மத். 26: 67, 68. "...உம்மை அடித்தவன் யார்? அதை ஞானதிருஷ்டியினால் எங்களுக்குச் சொல்லும்."

அடித்தவன் கண்ணுக்குமுன்னிற்க ஏன் ஞானதிருஷ்டியினால் சொல்லவேண்டும்? இந்தச் சுவிசேஷமட்டுமிருக்குமானால் இதற்குப் பொருள் விளங்காது. ஆனால் லூக். 22: 64 வரசி. "... அவருடைய கண்களைக் கட்டி". மத்தேயு இந்த வார்த்தைகளை விட்டுவிட்டதினாலே, அதைச் சரிப்படுத்தவேண்டுமென்று லூக்கா எழுதினான்? அல்லது லூக்கா சரிப்படுத்தவேண்டுமென்று மத்தேயு விட்டுவிட்டான்? சரித்திரம் எவ்வளவு உண்மையுள்ளதென்று பாருங்கள்!

XIII. மத். 26: 65..."தேவதூஷணம்..." லூக். 23: 2 வரசி.

அந்தந்த நியாயாதிபதியின் தன்மைக்கும் கொள்கைக்கும் ஏற்றபடி குற்றஞ்சாட்டினதாக விளங்கும். பிரதான ஆசாரியனுக்குமுன் தேவதூஷணக் குற்றஞ்சாட்டினது பொதுவான சனங்களுக்குக் கிறிஸ்துநாதரைக்குறித்து வெறுப்புண்டாக்கவே. கிறிஸ்துநாதர் தம்மை தேவகுமாரன் என்று சொல்வது சனங்களுக்குப் பொறுக்கக்கூடாத காரியம் என்று விரோதிகள் அறிவார்கள். ஆகையால் சனங்களை வசப்படுத்திக்கொள்ளும்படி இந்த உபாயஞ்செய்தார்கள். இது காரியம் மற்ற வேதவாக்கியங்களோடு ஒத்துப்பார்த்தால் விளங்கும். யோவான் 10: 22—39. 6: 15, 41, 42, 66. 5: 18. 8: 51—59 கவனமாய் வரசி. அப்படியே இயேசு இரட்சகர் கடைசிவிசையாய் எருசலேமுக்குப்போனபோது, சனங்கள் "எல்லாரும் அவர் பட்சமாயிருந்ததினாலே பிரதான ஆசாரியனும் பரிசேயரும் அவர்களுக்குப் பயந்திருந்தார்கள்" என்று சொல்லியிருக்கிறது. அப்படிப் பயப்பட்ட சனங்கள் கொஞ்சக்காலத்துக்குப்பின், இவனையல்ல பரபாசை விடுதலையாக்கவேண்டும் என்று சத்தமிட்டார்கள். ஆகையால் இரட்சகருடைய விரோதிகள் சனங்களுடைய மனதைக் கவர்ந்துகொள்ள, தேவதூஷணக் குற்றஞ்சாட்டினது இயல்போ அல்லவோ என்று யோசித்துப்பாருங்கள். இதினால் மேற்காட்டிய வாக்கியங்களின் உண்மை விளங்குகிறதல்லவா?

ரோமத் துரைகள் எந்த மார்க்கத்தைக்குறித்தும் கவலைப்படுகிறதில்லை. திருஷ். கல்லியோ அப்படியே, நடபடி 23: 29.

XIV. மத். 26: 71. "...வாசல் மண்டபத்திற்கு.."

பேதுரு இவனுக்கு அந்நியன்; பெரிய கலகமும் கூட்டமுமானவேளை; ஆட்கள் திடுதிடெனறு போகிறதும் வருகிறதுமாயிருந்தது; ஜாத்தினி நேரம். இப்படியெல்லாமிருக்க இவன் வாசல் மண்டபத்திற்குப் போனபோது இவள் இவனைமட்டும் குறிப்பிட்டுப் பார்த்துப் பேசவேண்டியதென்ன? யோவான் சுவிசேஷம் இல்லாவிட்டால் நமக்கு முகாந்தரம் விளங்காது. யோவான் 18: 16, 17 வரசி.

XV. மாற்கு 6: 31. "...சற்றே இளைப்பாறும்படி...வருகிறவர்களும் போகிறவர்களும்..."

இந்தச் சமயத்தில் கப்பர்நகூமில், இப்படி வருகிறவர்களும் போகிறவர்களும் மிகுதியாயிருக்கவேண்டியதென்ன? சற்றே இளைப்பாறுவதினால் சனசந்தடிக்கு எப்படித் தப்பிக்கொள்ளக்கூடும்? இதின் முகாந்தரத்தைக்குறித்து மாற்கு யாதொரு வார்த்தை சொல்லவில்லை. யோவான் 6: 4 வரசி. "சற்றே" என்பதை யோவான் சொல்லவில்லை. என்றாலும் இரண்டிக்கும் முகாந்தரம் தெரியவருகிறது. அதாவது,

பஸ்காப்பண்டிகைக்காலத்தில் சனங்கள் வெகு திரள் திரளாய்க் கூடிவருவார்கள். பண்டிகை முடிந்தவுடனே பழயபடி இருக்கும். இதைக்குறித்து ஜோசிபஸ் சொல்லுகிறதாவது.—ஒரு சமயத்தில் நேரோ ராயனுக்குத் திர்ப்தியுண்டாகும்படி அவனுடைய ஆபிசர்களில் ஒருவனை செஸ்ற்றியஸ் என்பவன், எருசலேமில் பஸ்காப்பண்டிகைக்கு வருகிற சனங்களை எண்ணத்துணிந்தானும். அங்கே பலியடிக்கப் படுகிற மிருகங்களின் தொகையை எண்ணி, ஒவ்வொரு பலிக்கு 10 பேர் கணக்கிட்டுப் பார்த்ததில், (அசுசிமுதலான முகாந்தரங்களால் தாமதப்பட்டவர்கள் தவிர), 26 லட்சம் சனங்கள் அதில் கூடினார்களாம். இது நம்முடைய திருநெல்வேலி ஜில்லாவெங்குமுள்ள சனத் தொகைக்கு ஒன்றரைப்பங்குக்கும் அதிகமாச்சுதே. அப்படியிருக்க இயல்புக்கு மிஞ்சி வருகிறவர்களும் போகிறவர்களுமிருந்தது ஆச்சரியமா? மேலும் வடக்கேயிருந்து எருசலேமுக்குப் போகிற பெரும்பாதை, கப்பர்கூம் வழியாய்ப் போனதினாலே, ஜனநெருக்கம் அதிகமாயிருப்பதும், அதினால் ரட்சகர் கப்பர்கூமுக்கு அப்பால் இளைப்பாறப்போவதும், பண்டிகைக்குவரும் சனங்கள் அவரை சாவகாசமாய்க் காணக்கிடையாமல் தாமதித்து பசியும் பட்டினியுமாய் அவரைத் தேடிப்போவதும் இயல்புதானே.

இன்னொரு ஒற்றுமையும் கவனிக்கத்தக்கது. ஐட்சகர் "பிலிப் புவைநோக்கி" கேட்கவேண்டியதென்ன? லூக்காவையும் யோவானையும் சேர்த்துப் பார்ப்பதில் முகாந்தரந்தோன்றும். லூக். 9: 10 ஸ்ல் அற்புதம் நடந்த இடம், "பெத்சாயிதா என்னும் பட்டணத்தைச் சேர்ந்த வனாந்தரமான ஓரிடம்" என்று தோன்றும். யோ. 1: 44 ஸ்ல் "பிலிப்பு பெத்சாயிதாப் பட்டணத்தான்" என்று தெரியும். ஆகையால் அவனைப் பார்த்துக் கேட்பது இயல்பாகவேயிருக்கிறது. இப்படியாக இவ்விரு ஒற்றுமைகளினால் அற்புதசங்கதி மெய்ப்பிக்கப்படுகிறதல்லவா?

மகமது ஜீவிய விருத்தாந்தம்.

(தொடர்ச்சி.)

(கவனிப்பு. போன ஆகஸ்து மாசத்தின் நற்போதகத்தில் 189-ம் பக்கத்தில் 18வது வரியில் 1571க்குப் பதிலாக 571 என்று வாசிக்கவும்.)

மூன்றிய பத்திரிகையில் மகமதுவின் காலத்தில் (கி. பி. 571) அரபியர் விக்கிரக பக்திக்காரராயும் பெண்சிசுக்களைக் கொலைசெய்கிற கெட்ட வழக்கத்தை யுடையவர்களாயு மிருந்தார்களென்றும் ஆனால் சிலர் இந்த வழக்கங்களை ஆட்சேபித்து ஒரு சீர் திருத்தமுண்டாக்க ஆசையாயிருந்தார்களென்றுஞ் சொன்னோம்.

இப்போது மகமது வென்கிற அக்காலத்துப் பெரியப் பத்தனைப் பற்றிப் பேசப் போகிறோம்.

இவர் வட அரபியாவில் மெக்காவென்னும் விசேஷித்த நகரத்தில் பிறந்தார். இவர் பிறப்பின்படி, அரபியர் வணங்கி வந்த காபவென்கிற பெரிய பூசை ஸ்தலத்தைப் பார்த்துக் கொண்டுவந்த கொரிஷ் வம்சத்தைச் சேர்ந்தவர். இவர் அதிபாலியராயிருக்கும்போதே இவருடைய பிதா இறந்துபோனார். அவருக்குண்டான ஆஸ்தி யெல்

லாங்கூடி 5 ஒட்டகங்களும், கொஞ்சம் ஆடுகளும், ஒரு பெண்ணடிமையுந்தான். அவர் 7 வயசாயிருக்கும்போதே அவருடைய தாயும் இறந்துபோகவே இவரைச் சுவரட்சணை பண்ணும் பொறுப்பு விருத்தாப்பியமூள்ள இவருடைய பாட்டனைச் சேர்ந்தது. அவனும் 2 வருஷத்திற்குப் பின்பு தான் மரணத் தறுவாயிலிருக்கும்போது தன் பொறுப்பைத் தன் மூத்தமகனுடைய அபு தாலிப்புக்கு கரிசனையாய ஒப்புவித்தான்.

12 வயசாயிருக்கும்போதே மகமது என்பவர் தமது பெரிய தகப்பனுரோடு சீரியாத் தேசத்திற்குப் போகிற வியாபாரக் கூட்டத்தைச் சேர்ந்துகொண்டார். இவர் மிகவும் புத்திசாலியான பையனிருந்ததினாலே இடைவிடாமல் வியாபாரத்திற்குப் போய் வருகிற மார்க்கங்களில் தென்படுகிற கிறிஸ்தவர்கள் யூதர்கள் முதலிய எந்த மார்க்கத்தாரோடுஞ் சம்பாஷித்து மார்க்கக் கோட்பாடுகளுக்குரிய அறிவை அதிகமா யடைந்திருப்பான். சீரியாத் தேசத்தின் எல்லையில் நெஸ்தோரிய கிறிஸ்தவர்களுடைய பட்டணமொன்று இருந்தது. அதிலிருந்த சன்னியாசி மடத்தில் இவரும் இவருடைய பெரிய தகப்பனுரும் தங்கள் பிரயாணத்தில் போய்த் தங்கி அங்குள்ள சன்னியாசிகளா லுபசரிக்கப்பட்டு வந்தார்கள். இந்த ஏதுவால் நெஸ்தோரிய கிறிஸ்தவர்களுக்கு விக்கிரக வணக்கத்தின் பேரிலுண்டாயிருந்த பலத்த வெறுப்பு, பாலியத்திலேயே மகமதுவின் மனதிலும் பதிந்ததினால் அவருடைய புது மார்க்கத்தில் அந்த வெறுப்பை அதிகமாய்க் காட்டுகிறார். கிறிஸ்தவர்களோடு அவர் அதிகமாய்ப் பழகிவந்ததினாலே கோரானில் கண்டிருக்கிறபடி கிறிஸ்துமார்க்க அறிவை அதிகமாய்ப் பெற்றுக் கொண்டானென்று சொல்லலாம்.

அவர் 25 பருவமுடையவராயிருக்கும்போது காடிஜா வென்பவளை மணபுரிந்து கொண்டார். எப்படியெனில் சிலகாலமாய் ஐசுவரியமுள்ள ஒரு விதவையினுடைய வியாபாரத்தை இவர் ஏஜண்டாயிருந்து நடத்தும்போது அதிக ஊக்கம், சாமர்த்தியம், நம்பிக்கையோடு தமது கடமையை நிறைவேற்றி அவளுக்கு அதிகத் திரவிய விருத்தியுண்டு பண்ணினதுமல்லாமல் அவளே தன்னை விவாகம் பண்ணிக்கொள்ள விரும்பும்படியாகவும் சேரிட்டது.

காடிஜா என்பவளை அந்த விதவையாம். இவள் நாற்பது வயசுள்ளவள், மகமது என்பவருக்கு இருபத்தைந்து வயசு. இவர் தானுகை அவ்விவாகத்தைக் கோரிக்கொள்ளா விட்டாலும் அவளது விருப்பத்தை மற்றொருவனுலே மகமதுக்கு தெரியப்படுத்தினபோது இவர் உடனே அதற்குச் சம்மதித்ததின் பேரில் பந்துக்களெல்லாருங்கூடி வந்து விருந்துண்டு மகிழ்ச்சியோடு கலியாணத்தை முடித்தார்கள். இப்போது மகமது தமது சொந்த ஊரிலே ஒரு பெரிய தனவானும் அந்தஸ்துடையவருமானார். மேலும் அவர் அக்காலத்தோர் அபிப்பிராயப்படி வைதிகனுகவும், சன்மார்க்கனுகவும் எண்ணப்பட்டவர்.

மகமது சிறு பிள்ளையாயிருக்கும்போதே அவருக்குக் காக்கை வலிப்புப் போன்ற ஒரு விசேஷித்த வியாதியுண்டாயிருந்தது. இந்த வியாதி மூளையின் கொதிப்பினுலுண்டாகி சமீபியில் வலிப்பை உண்டாக்கும். இந்த வியாதி இருக்கச்சே தேவன் தமக்குப் பரம தரிசனைகளையும், வெளிப்படுத்தல்களையும் தெரிவிக்கிறதாக மகமது எண்ணங்கொண்டிருந்தார். இவருடைய தாயாகிய எமினு இவர் பாலனுயிருக்கும்போது இவருக்குப் பால் கொடுக்கும்படி எய்லாமா என்ற ஒரு பெண் பிள்ளையிடத்தில் இவரைக் கொடுத்திருந்தாள். இவருக்கு

2 வயசு கழிந்து 2 மாசமாயிருக்குங் காலத்தில் எல்லாமா இந்தக் குழந்தைக்குப் பேய் பிடித்திருக்கிறதினாலே பால் கொடுக்க மாட்டேனென்று சொல்லிக் குழந்தையை அதின் தாயிடங் கொடுத்து விட்டாள். ஆனால் அது முன் சொன்ன வியாதியென்று அவளுக்குத் தெரியாமற் போயிற்று. இவருக்கு ஞானவிப் பிரவேசம் அல்லது பரம வெளிப்படுத்தலென்று எண்ணியிருந்த மேலே காட்டிய வியாதி உண்டாயிருக்கும்போது அந்த நோய்க்குரிய இலட்சணங்களின்படி, கீழே விழுந்துதைந்து வாய் வழியாய் நுரைதள்ளி ஒரு ஒட்டகக் குட்டியைப்போல் கதறுவானென்று பார்த்தவர்கள் சொன்னார்கள். அக்காலத்தோர் மாத்திரமல்ல, இக்காலத்து இந்துக்களுங் கொண்டிருக்கிற வீணெண்ணத்தின்படி மேற்படி செய்கையெல்லாந் தனக்குப் பேயாலுண்டாயிருக்கிறதென்று மகமது நம்பி, ஒரு பேயோட்டியின் மூலமாய்ச் சாந்தி கழித்துப் பரிகாரம் பண்ணிக்கொள்ள எத்தனப்பட்டபோது அவர் பெண்சாதியாகிய காடிஜாவின் மைத்துனனாகிய உவார்க்கா என்ற ஒரு கிறிஸ்தவக் குரு அவனைத் தடுத்து, தனித்த குகைகளிலுண்டாகிற இவ்விதத் தரிசனை தெய்வத்தாலுண்டாகிற தென்று மனதில்படச்செய்தார்.

மகமதுவுக்கு அவருடைய கலியாணத்திற்குப் பின்பு அதிகப் பொருள் நஷ்டங்களுண்டாகி ஏழையாய்ப் போனார். இதற்குப் பின்பு இவருடைய 40 ம் வயசுவரையும் அவரைப்பற்றி அதிகமாய்ச் சொல்லப்படவில்லை. ஆகிலும் இதில் கடைசியான 5 வருஷக் காலங்களில் இவர் சிலவேளைகளில் தனிமையாயும் சிலவேளைகளில் தன் ஸ்திரீ காடிஜாவோடும் அடிக்கடி ஜராமலைக்குப்போய் ஏகாந்தமாய் வாசம் பண்ணிவந்தார்.

நாம் முன் சொல்லிய 4 அரபியனைப்போலவே இவருஞ் சத்தியத்தை அறிய உண்மையாக ஆசைப்பட்டவனென்பதற்குச் சந்தேகமில்லை. இவர் ஒரு தீர்க்கதரிசியாக வேலை செய்த ஆரம்பத்திலேயே சனங்களை வஞ்சிக்கும்படி எண்ணங்கொண்டிருந்தானென்று நாம் நினைப்பது பிசகு. இக்காலத்து அவர் போதனைக்கும் பிற்காலத்தில் வைராக்கியமுள்ள சேனைகள் அவருக்குச் சூழ நிற்கையில் அவர் போதித்த போதனைக்கும் அதிக வித்தியாசமிருந்தது. ஆனால் பிற்பாடு அவருடைய ஜெயத்தைப் பற்றிப் பேசும்போது இதை விவரமாய்க் காட்ட ஏதுவாயிருக்கும், காட்டவும் போகிறோம்.

மகமதுவுக்கு 40 வயசாயிருக்கும்போது நோவா, ஆபிரகாம், மோசே என்பவர்களும் நமதிரட்சகரும் முன் போதித்த உபதேசங்களை அவைகளின் பூர்வீக சுத்தத்திலே திரும்பக் கூறும்படி தேவன் தம்மை நியமித்த அனுப்பினதொன்று முதல் முதல் தமது மனைவியிடத்தில் வெளியிட்டார். அந்த உபதேசமாவது, ஒரே மெய்த் தேவனை வணங்குவதென்றும், அந்தச் சத்தியத்தை விட்டு தன் கூட்டத்தார் வெகுவாய் விலகியிருக்கிறார்களென்றும் சொன்னார். அவருக்குண்டாயிருந்த வியாதியைக்குறித்து முன் சொல்லியிருக்கிறோமே. அந்த நோயும், அவர் ஜராக் குகையில் ஏகாந்தமாயிருந்து உபவாசித்ததும், அவர் தமக்குத் தேவ தரிசனை யென்று எண்ணியிருந்த ஆச்சரியமான காட்சி எப்பேர்ப்பட்ட தென்று நமக்கு ஒருவாறு தெரியப்படுத்துகிறது. காபிரியேல் தேவ தூதன் அவருக்குக் காணப்பட்டிருந்தாராம்.

(இன்னும் வரும்.)

யாக்கோபின் தரிசனம்.

By the Rev. John F. T. Srampton, Rector of Aughrim, Rurul Dean &c.

ஆதி. 28: 12.

"அவன் ஒரு சொப்பனம் கண்டான். இதோ ஒரு ஏணி பூமியில் வைக்கப்பட்டிருந்தது."

யாக்கோபு தந்திரத்தினாலே ஏசாவை மேற்கொண்டான். அதற்காக ஏசா அவனிடத்தில் பழிவாங்கும்படி யோசித்தான். யாக்கோபு ஒன்றியாய் ஒளித்து ஓடினான்.

பேர்சேபாவிலிருந்து ஆரானுக்குப் போகிற அந்தத் தூரமான பிரயாணம் யாக்கோபுக்கு எவ்வளவோ சிந்தை, மனச்சாட்சியில் குத்துதல், மனந்திரும்புதல் உண்டாகிறதற்கேற்ற சமயம்.

அவனுடைய பிரயாணத்தின் முதல் இராத்திரியில் லூசுக்கு வந்து தன் பெற்றோரையும், விட்டுவந்த தன் வீட்டுச் சலாக்கியங்களையும் நினைத்துப் பெருமூச்சோடே நித்திரைசெய்யக் கண்மூடுகிறான்.

இதோ! ஆச்சரியமும் ஆறுதலுமான ஒரு காட்சி காணப்படுகிறது. அதென்னவென்றால் ஓர் ஏணி! ஓர் சத்தம்!

ஏணியானது, யாக்கோபுக்கு மன்னிப்பையும், தேவ ஐக்கியத்தையுங் குறிப்பிட்டது.

சத்தமானது, (1) தேவன் உடன்படிக்கையின் தேவன் என்பதையும், (2) அந்தப் பூமி யாக்கோபுடையதாகுமென்பதையும், (3) அவனுக்குத் திரளான சந்ததி உண்டாகுமென்பதையும், (4) அவனிலிருந்து மேசியா தோன்றுவானென்பதையும், (5) தேவ சமுகம் அவனோடு இருக்குமென்பதையும் தெரிவிக்கிறதாயிருந்தது.

யாக்கோபு பயத்தோடும் ஆச்சரியத்தோடும் என்னெய் வார்க்கிறான். அந்த இடத்துக்கு 'பேத்தேல்' என்றும் புதுப்பேரைத் தரிக்கிறான். தசமபாகஞ் செலுத்தப் பிரதிக்ஞை பண்ணி உற்சாகத்தோடு புறப்படுகிறான்.

இந்தத் தரிசனத்தின் அர்த்தம் கிறிஸ்துவினால் யோவான் 1: 51-ல் விளக்கிக்காட்டப்பட்டிருக்கிறது. ஏணியின் அடி பூமியையும் அதின் நுனி வானத்தையும் எட்டியிருந்ததே. அந்த ஏணி கிறிஸ்து. அவர் மனிதனன்மையும் தேவதன்மையுமுடையவராயிருந்தார். தேவனுக்கும் மனிதனுக்கும் ஊடே ஒரு வழியுண்டாக்கியிருக்கிறார். அவருடைய மனிதனுக்கும் பிராயச்சித்தமும் பாவக்குற்றத்தை நிவர்த்தியாக்குகிறது. நீதியும் தேவனுடனதாலே அவர் சிந்தின இரத்தப்பலி விலையுயர்ந்தது. அவர் தேவனுடனதாலே நம்மை அறிந்து நமக்காகப் பரிதபிக்கிறார். (1 தீமோத். 2: 5, 6.)

பிதாவிடத்தில் சேருகிறதற்கு அவரே வழி. (யோ. 14: 6.)

நீ அதில் ஏறவேண்டுமானால்.—

(1) அவரையே நம்பு. (யோ. 3: 16.)

(2) உன் பாவப் பாரத்தை ஏணியின் அடிவாரத்தில் வைத்துப் போடு. (ரோ. 3: 24, 25.)

(3) பாவமான யாவற்றையுந் தள்ளிப்போடு. (எபி. 12: 1.)

படிப்பினை.

ஏணியானது அகலமானதும், பெலனுள்ளதும் அசைவற்றதுமாயிருக்கிறது.

The Famine Meeting in Palamcottah.

திருநெல்வேலி ஜில்லாவில் கரிப்பினால் வருத்தப்படுகிறவர்களுக்காக என்னென்ன உதவி எத்தனங்கள் செய்யலாமென்பதைப்பற்றி ஆலோசிக்க ஆகஸ்துமீ 22உயில் திருநெல்வேலியிலிருக்கிற இந்து பாடசாலையில் 200 க்கு அதிகமான சுதேச கனவான்கள் கூடினார்கள். அகங்கூட்டத்திற்கு ஜில்லா நீதியதிபராகிய கார் துரையவர்கள் முதலாளியாயிருந்தார்கள். அவர்கள் பஞ்ச நிவர்த்திக்காக கவர்ண்மெண்டார் தெடுத்துக்கொள்கிற மிகுந்த பிரயாசையைப்பற்றியும், இப்படி வருத்தப்படுகிறவர்களுக்காக இங்கிலாந்திலும், பங்காளத்திலும் காண்பிக்கப்படுகிற மிகுந்த அனுதாபத்தைப்பற்றியும், முதலில் வியாக்கியானமன்றி, மகா ராணியவர்கள் பார்லமெண்டு சபைமுன்பில் இக்காரியத்தைப்பற்றி அதிக விசேஷித்தபிரகாரமாய்ப் பேசி, ஷை வருத்தத்தை நீக்குவதற்கு ரூ 10000 பணங்கொடையாய் ஈந்து, இவ்விதமாய் அவர்களது அனுதாபத்தை வெளியிட்டார்களென்றும், லண்டன் மாநகரிலும் மற்றுமிடங்களிலும் இது விஷயத்திற்காக கையொப்பம் தொடங்கியிருக்கிறதென்றும், யாவரும் இது காரியத்திற்காக ஊக்கத்தோடு உதவிசெய்ய ஒப்புக்கொண்டிருக்கிறார்களென்றும் இங்கிலீஷ் தாமக்களனைவரும், பெருத்தகைமையோடு இவ்வருத்தத்தை நீக்க முயலுகிறார்களென்றும், கார்த்புருக் என்னும் பிரபு 5000 ரூபாயும், ராத்சயில்ட், பெரீங்கு என்னும் பிரபுக்கள் ஒவ்வொருவரும் ரூ 10000 கொடுத்திருக்கிறார்களென்றும் சொல்லிமுடித்தார்கள்.

பின்பு மகாகனம்பொருந்திய சார்ஜென்று அத்தியட்சரவர்கள் எழுந்து அச்சமயத்தில் கூடியிருந்தவர்களும், இந்த ஜில்லாவிலுள்ள மற்றும் யாவரும், தற்காலத்தில் நேரிட்டிருக்கிற இக்கொடிய துன்பத்தை நீக்க உதவிசெய்வது அவர்களது விசேஷித்த கடமையென்று தமிழில் வற்புறுத்திப் பேசினார்கள்.

பின்பு ஜில்லாக் கலெக்ட்டர் பெனிங்ட்டன் துரையவர்கள் எழுந்து, இவ்விஷயத்தில் உதவிசெய்கிறதற்கேற்ற வழி, வகை இன்னதென்று சொல்லிக்காட்டினார்கள். அங்கிருந்த மற்றுமனேக சுதேச கனவான்களும் எழுந்து பேசினார்கள். அக்கூட்டத்தில் ஐரோப்பியரும், சுதேசிகளுமான சிலர் தங்களுடைய கையெத்தினாலொப்புவிக்கப்பட்டிருக்கிற தொகையை இச்சில்லாவில் எந்தெந்த இடங்களில் அதிக வருத்தமிருக்கிறதோ, அவ்விடங்களுக்கு ஷை வருத்தம் நீங்குவதற்கேற்ற வகையாயனுப்பி, மேல்நடத்திவரும்படி ஏற்படுத்தப்பட்டார்கள். பின்பு ஒவ்வொருவரும் தாங்கள் கொடுக்கும் தொகைக்கு கையொப்பம் வைத்தார்கள். அச்சமயத்தில் ஷை யார்களால் ஏறக்குறைய 1600 ரூ வரையும் கையொப்பமிடப்பட்டதுமல்லால், பஞ்சம் நிலைத்திருக்கும்வரையும் மாசமொன்றுக்கு ரூ 110 சேகரம்பண்ணிவருவதற்குமேற்ற ஒழுங்குகள் ஏற்படுத்தப்பட்டது.

இது நல்ல ஆரம்பந்தான். திரவிய சம்பன்னரான யாவரும், தற்காலத்திலெங்கும் வியாபித்திருக்கிற இக்கொடிய பஞ்சத்தை நிவர்த்திசெய்ய முன்னின்று தங்களால் கூடிய உதவிசெய்யும்படி நாம் கேட்டுக்கொள்ளுமும்.

Socity for Preventing Cruelty to Animals.—குதிரைமுதலிய மிருகங்களை இத்தப் பட்டணத்தில் அநேகர் குரூரமாய் நடத்திவருவதைக் கண்டு, அதைத் தடை செய்யும்படியாய், அநேக பிரபுக்களும், துரைமார்களும் சேர்ந்து ஒரு சங்கம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். கூலிக்கு வண்டி விடும் ஜற்காக்காரர்தான் முக்கியமாய், பணம் அதிகமாய் சம்பாதிப்பதற்காக, இரக்கம் பாராதபடி, தங்கள் குதிரைகளை நாள் முழுவதும் வண்டியில் கட்டியடித்து அதிகமாய் அவைகளை வருத்தி வருகிறார்கள். அப்படியே கோழி, வாத்து முதலியவைகளை விற்கக் கொண்டு வருகிறவர்கள் அவைகளைச் சரியானபடி தூக்கிக்கொண்டு வராமல், காலில் பிடித்துத் தலை கீழாய்த் தூக்கிக்கொண்டு வருகிறார்கள். இந்தக் கொடிய பாதகர்களைக் கண்டு எச்சரிக்கும்படிக்கும், எச்சரிப்பைக் கவனியாதபட்சத்தில், கோர்ட்டார் மூலமாய் அவர்களைத் தண்டிக்கும்படிக்கும், இரண்டு முகாமைக்காரரை இதற்குச் சங்கத்தார் இப்பொழுது நியமித்திருக்கிறார்கள். இதினால் ஏழை மிருகங்களுக்கு நல்ல காலம் பிறந்திருக்கிறதென்று நம்புகிறோம்.

துர்க்கிய யுத்தம்.

இந்த பயங்கரமான யுத்தம் கடந்த மாதத்தில் இருந்த வண்ணமாகவே நடந்துகொண்டிருக்கிறது. ருஷியரைப்பார்க்கிலும் தர்க்கியரே தற்காலத்தில் ஜெயம் அடைந்திருக்கிறார்கள். ருஷிய சக்கரவர்த்தி (இம்பீரியல்காட்) என்னப்பட்ட முக்கிய சேனையைக்கொண்டு யுத்தத்தை நடத்தியும் இவர்கள் பக்கம் வெற்றிக்கிடமில்லாமலிருக்கிறது. தர்க்கியர் தங்கள் அலங்கத்திற்குப் பின்பக்கத்தில் விளாவாயடிக்கிற தூரதன துபாக்கிகளையுடைய ஆயுதச் சேனைகளை ருஷியர் நேருக்கு நேராய் எதிர்த்தத் தாக்க இடமில்லாதிருக்கிறதே இதற்கு முக்கிய காரணமாம். (பிளெவ்னா) என்னும் இடத்தில் நடந்த சண்டையில் ருஷிய ருடைய சேனையில் (8000) பேர் கொல்லப்பட்டார்களென்றும், (24000) பேர் காயப்பட்டார்களென்றும், இப்படி மிஞ்சின தொகையாய் கொல்லப்பட்டதென்றும் (ஓஸ்மன்பஷா) என்பவரால் நடத்தப்பட்ட தர்க்கி சேனையில் ருஷியர் அதிகத் தோல்வியடைந்தார்களென்பதற்குச் சந்தேகமில்லை. இச்செயம் தர்க்கியருக்கு அதிக உற்சாகத்தைக் கொடுத்திருக்கிறது. இரு கட்சிக்காரரும், சிறைகளுக்கும் காவற்சிலாத கிராமங்களிலுள்ள ஸ்திரீ குழந்தைகளுக்கும் செய்யப்படுகிற பயங்கரமான கொடூரங்களைப்பற்றி மூறையிடுகிறார்கள். திருஷ்டாந்தமாக,—ஒரு ஸ்திரீ பலமுறையும உபத்திரவப்படுத்தப்பட்ட பின்பு, அவளுடைய கால்களும் கைகளும் வெட்டப்பட்டன. ஒரு மனுஷன அவளுடைய தேகத்தின் தோல் வாரினால் தன் இரு கைகளும் கட்டப்பட்டவனாகக் காணப்பட்டான். நிர் ஆயுதபாணிகளான ஆயிரமாயிரமான சனங்கள் துப்பாக்கிகளாலும் பீரங்கிகளாலும் சுடப்பட்டிருக்கிறார்கள்.

செப்தெம்பர்மீ நாள் 30. ஆவணிமீ 18உமுதல், புரட்டாசிமீ 16உவரை.

வாரம்.	இங்கிலீஷ் தெய்தி.	தமிழ்த் தெய்தி.	அன்றாடகத் தியானம்.
ச	1	கஅ	பொல்லாதவர்களைக்குறித்து எரிச்சலாகாதே. நீதி. 24: 19.
ஞா	2	௰௯	தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள். 1பேது. 5: 8. (யாக். 5: 9.
தி	3	உ0	ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடாதிருங்கள். (பிலி. 2: 13.
செ	4	உக	தேவனே விருப்பத்தையுஞ் செய்கையையும் உண்டாக்குகிறவர்.
பு	5	உஉ	நீ சொஸ்தமானாய் இனி பாவஞ்செய்யாதே. யோ. 5: 14.
வி	6	உ௩	அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார். சங். 91: 4.
வெ	7	உச	அவர் உங்களை விசாரிக்கிறார். 1பேது. 5: 7.
ச	8	உ௫	அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன். ஏசா. 65: 24.
ஞா	9	உ௬	உன்னோடே சொல்லுவேன். யாத். 25: 22.
தி	10	உஎ	நீதிமான்களோ தைரியமாயிருக்கிறார்கள். நீதி. 28: 1.
செ	11	உஅ	நானோ தேவனுக்குப்பயந்ததினால் இப்படிச்செய்யவில்லை. நெ. 5:
பு	12	உ௬	அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது. 1கொ. 13: 4.
வி	13	௩0	கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன். 1சா. 3: 9.
வெ	14	௩௧	நான் கர்த்தர், நான் மாறாதவர். மல்கி. 3: 6.
ச	15	க	அவருடைய காருணியம் எத்தனை பெரியது. சகரி. 9: 17.
ஞா	16	உ	கர்த்தருக்குப் பரிசுத்தம். சகரி. 14: 20.
தி	17	௩	உன் சத்துரு விழும்போது சந்தோஷப்படாதே. நீதி. 24: 17.
செ	18	ச	கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ளவர். யா. 5: 11.
பு	19	௫	தீங்குக்கு என்னை விலக்கிக்காத்தருளும். 1நாளா. 4: 10.
வி	20	௬	அவருடைய நித்திய புயங்கள் உனக்கு ஆதாரம். உபா. 33: 27.
வெ	21	௭	எனக்குப்பின் சென்றுவா. மத். 9: 9.
ச	22	அ	கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறது. யாக். 5: 8.
ஞா	23	௯	உங்கள் இருதத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள். சங். 95. 8.
தி	24	க0	கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராது.
செ	25	கக	அவர் தம்முடைய சீவனை நமக்காகக் கொடுத்தார். 1யோ. 3: 19:
பு	26	கஉ	என்னைக் கனம்பண்ணுகிறவர்களை நானும் கனம் பண்ணுவேன்.
வி	27	க௩	உன் ஆத்துமாவைச் சாக்கிறதையாய்க் காத்துக்கொள். உபா. 4:
வெ	28	கச	நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள். யோ. 13: 34.
ச	29	க௫	இது தேவனுடைய சேனை. ஆதி. 32: 2.
ஞா	30	க௬	உமது கற்பனைகளெல்லாம் உண்மை. சங். 119: 151.

விசேஷித்த நாட்கள்.

2. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும், பதினாலாம் ஞாயிறு.
7. அமாவாசை.
9. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும், பதினைந்தாம் ஞாயிறு.
16. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும், பதினாறாம் ஞாயிறு.
22. பௌரணமி.
23. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும், பதினேழாம் ஞாயிறு.
30. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும், பதினெட்டாம் ஞாயிறு.

நற்போதகம்.

௰. அக்டோபர்மீ. ௲௮௭௭௵.

கொரிந்தியரின் இரண்டாம் நிருபம்.

நிருபம் எழுதப்பட்ட காலம்.

IV. அதிகாரம்.

2-ம் வா.—"அந்தரங்க காரியங்களை."

இது கெட்ட கிரியைகளைக் குறிக்காமல், கபடமாயாவது, சுய பிரயோசனத்தை நாடியாவது போதித்தலைக் குறிக்கும்.

வேதத்தில் காட்டிய தேவனுடைய முழுச் சித்தத்தையும் போதித்து மனுஷர்களைச் சத்தியத்திற்குத் திருப்பும்படி நாம் பிரயாசப்படவேண்டுமேயல்லாமல் அவர்களுக்குச் சார்பாய்ப் பேசி நடப்பிக்கிற வேலை நிலைநிற்காது.

3-ம் வா.—தேவனே இருதயத்தைப் பிரகாசிப்பிக்கிறவர். வெகு நாளாய் சத்தியத்தை எதிர்த்தவர்களை சிலவேளை பிசாசின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கிறார். பிசாசானவன் அவர்களுடைய ஞானக் கண்களைக் குருடாக்குகிறான்.

4-ம் வா.—சுவிசேஷமானது ஒரு கண்ணாடிக்கொப்பாயிருக்கிறது. அதிலே கிறிஸ்துவின் சாயல் வெளிப்படுகிறது. கிறிஸ்துவும் தேவனுடைய சாயலாயிருக்கிறார். 3-ம் அதி. 18 வா. பார்க்க.

5-ம் வா.—"இயேசுவின் நிமித்தமாக உங்கள் ஊழியக்காரர்."

கண்காணிமார், போதகர், உபதேசிமார் இவர்கள் எல்லாரும் சபைக்கு அதிகாரிகளல்ல. ஆனால் ஊழியக்காரர். ஆறாம் வாக்கியத்தில் அப்போஸ்தலர் எப்படிக் கிறிஸ்துவின் ஊழியக்காரராயிருக்கிறார்களென்று காட்டுகிறார். கிறிஸ்துவின் மூலமாய்த் தமது மகிமையைக் காண்பிக்கும்பொருட்டு தேவன் அப்போஸ்தலருடைய இருதயத்தில் பிரகாசிக்கிறார்.

7-9-ம் வா.—அடிக்கடி நெருக்கப்பட்டும், கலக்கமடைந்தும்,

தண்டிப்பட்டும், கீழே தள்ளப்பட்டுமிருக்கிற தேவ ஊழியக்காரன் சோர்ந்துபோகாமலிருப்பது அவனைத் தாங்குகிற கிறிஸ்துவின் உயிரையும் பெலனையும் விளங்கப்பண்ணுகிறது. அதுபோல மதகஸ்கார் தீவார், தங்களுக்குள் இரத்தச்சாட்சிகளாய் மரித்தவர்களுடைய பொறுமையையும் ஊக்கத்தையும் கண்டபோது இதுதான் மெய்மார்க்கமாயிருக்கவேண்டுமென்றும் இவர்களுடைய தேவன்தான் மெய்த் தேவனென்றும் அறிக்கையிட்டார்கள்.

12-ம் வா.—"மரணமானது எங்களிடத்திலும் சீவனானது உங்களிடத்திலும் பெலன்செய்கிறது." விசுவாசமானது செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும். தேவனுடைய ஊழியக்காரர் பலன் கொடுக்கவேண்டுமானால் அவர்கள் தங்களைத் தாழ்த்தி, தங்கள் ஆண்டவரும் அவரது அப்போஸ்தலன்மாரும் நடந்த பாதையிலே நடக்கவேண்டியதாயிருக்கிறது.

17-ம் வா.—காலதில் நடந்துவருகிற யுத்தத்தில் போர்ச்செய்கிற போர்வீரன் என்ன வருத்தம் சோரிட்டாலும் பாராதபடிக்குத் தனது தேசத்துக்காகவும், தனது இராஜாவுக்காகவும் மனப்பூர்வமாய் யுத்தஞ்செய்கிறானே. அப்படியானால் கிறிஸ்தவனான போர்வீரன் தனது ஆண்டவருக்காகவும் அவரது இராச்சியத்துக்காகவும் எவ்வளவு ஊக்கமாய்ப் போர்செய்யவேண்டும். அவனுக்குக் கிடைக்கும் பலன் எவ்வளவு நிச்சயமாயிருக்கிறது.

இவ்விடத்தில் சொல்லியிருக்கிற உபமானங்கள் எத்தனை சோத்தியானவை. உபத்திரவத்தின் இலகுவை என்றென்றைக்கும் நிலைத்திருக்கிற கன மகிமையோடு ஒப்பிட்டுப்பார்! பத்தன் சிந்துகிற ஒவ்வொரு துளிக் கண்ணீருக்கும், அவன் விடுகிற ஒவ்வொரு பெருமூச்சுக்கும், அவன் படுகிற ஒவ்வொரு துன்பத்துக்கும் ஆச்சரியமான பலன் இனிமேல் கிடைக்கும். லூக். 6: 2, 3.

V. அதிகாரம்.

1-ம் வா.—அப்போஸ்தலன் தமது பூத சரீரத்தை காற்றினால் மோதப்பட்டு அடிக்கடி கீழே விழக்கூடியதாயும் லேசாய்ப் பேர்க்கத்தக்கதாயும் கயிற்றினாலும் தணிகளினாலும் செய்யப்பட்டதாயுமிருக்கிற ஒரு கூடாரத்துக்கு ஒப்பிடுகிறார். இனி நாம் அடையப்போகிற சரீரமோ கல்லினால் செய்யப்பட்ட ஒரு வீட்டுக்குச் சமானமென்று சொல்லுகிறார்.

"தவித்து"

தான் மரணமடையுமுன்னமே கிறிஸ்துவானவர் இரண்டாந்தரம் வந்தால் தமது பரம சரீரத்தைத் தரித்துக்கொள்ள அதிக ஆசையுள்ளவராயிருந்தார்.

3-ம் வா.—மூல பாஷையில் இந்த வாக்கியம்—"ஏனென்றால் நாம் நிர்வாணிகளாயிராமல் மெய்யாய்த் தரித்துக்கொண்டவர்களாயிருப்போம்" என்கிற அர்த்தம் கொள்ளும். அதாவது, சரீரத்தோடே எழுந்திருப்போம் என்று அப்போஸ்தலன் மறுபடியும் சாதிக்கிறார். 1 கொ. 15: 35 பார்க்க.

5-ம் வா.—"இதற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறவர்."

நாலாம் வாக்கியத்திலடங்கிய விருப்பம் தேவனுண்டானதென்றும் அந்தப்படியே செய்வாரென்பதற்கும் குறிப்பாக அச்சாரமாகிய தமது பரிசுத்த ஆவியானவரைக் கொடுத்திருக்கிறாரென்றும் அப்போஸ்தலன் சொல்லியிருக்கிறார்.

6-9.—இதினிமித்தம் பவுல் அப். சாவுக்கும் கூட முழுத் தைரியத்தோடே எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்.

தாம் உலகத்திலிருக்குமட்டும் தேவனைத் தரிசிக்காமல் நடக்கவேண்டியதிருப்பதால் சாவினால் இந்தத் தேகத்தைவிட்டுப் பிரிந்து போய்த் தேவனைத் தரிசிப்பது பவுல் அப்போஸ்தலனுக்கு நன்மையாம்.

9-ம் வா.—கிறிஸ்துவானவருடைய இரண்டாம் வருகையிலே நாம் தேகத்தைவிட்டுப் பிரிந்தபோனவர்களானாலும் சரி நாம் சாகாமல் புதுத் தேகத்தைத் தரித்தவர்களானாலும் சரி அவருக்கு முன்பாக பிரியமுள்ளவர்களாய் நிற்கும்படி நாடுகிறோம்.

13-ம் வா.—"பவுலே நீ பிதற்றுகிறாய்" என்பது பெஸ்துவின் பேச்சு. கொரிந்தியருக்குள்ளும் பவுலின் எதிராளிகள் பவுல் சொரூபத்புத்தியுள்ளவனல்லவென்று அவரைப்பற்றிக் குறைவாய்ச் சொல்லியிருப்பார்கள்.

14-ம் வா.—தமது மரணத்தால் விளங்கிய கிறிஸ்துவின் அதிசயமான அன்புதான்.

"எல்லாரும் மரித்தார்கள்." நமது இரட்சகர் தமது பூமியிலுள்ள மனுஷீக நடக்கையிலே மனிதர்களுக்குத் தலைவராகவே தமது எல்லாக் கிரியைகளையுஞ் செய்தார். அவர் மரிக்கும்போது தமது ஜனங்கள் எல்லாரும் அவருக்குள் மரித்தார்கள்.

16-ம் வா.—"இனி ஒரு பொழுதும் அவரை மாம்சத்தின்படி அறியோம்." குணப்படுமுன்னே பவுல் அப். இரட்சகரை நசரேயனுகிய இயேசுவாக மாத்திரம் அறிந்தார். வானத்திலே அவரைத் தரிசித்த பிற்பாடு உலகத்துக்குரிய அவருடைய சரித்திர வரலாறுகளை அதிகமாய் யோசிக்காமல் அவரை "பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனாக" முக்கியமானவரென்று அறிந்தார்.

17-ம் வா.—"பழையவைகள் ஒழிந்துபோயின." அம்மனுஷனுடைய பழைய பகைகள், சண்டைகள், ஆசை இச்சைகள் இவை எல்லாம் ஒழிந்துபோயின.

21-ம் வா.—"பாவமாக்கினார்." இந்த வார்த்தையைக் கவனிக்கவும் "பாவ பலியாக்கினரென்று சொல்லியிருக்கிறதில்லை. இஸ்ரவேலர் வனாந்தரத்தில் பாவஞ்செய்யும்பொழுது தங்களைக்கடித்த அந்த சர்ப்பங்கள் ஒன்றின் ரூபம் செய்யப்பட்டுக் கம்பத்தின்மேல் உயர்த்தப்பட்டதுபோல் உலக இரட்சகரும் உயர்த்தப்பட்டார்.

Life of Bishop Latimer.

இலத்திமர் கண்காணியார் சரித்திரம்.

(தொடர்ச்சி.)

குறித்த தினத்தில் இலத்திமர் கண்காணியார் கம்மிஷனர்களுக்குமுன்பாகக் கொண்டுவந்து நிறுத்தப்பட, அவர் தம் சுகவீனத்தையும் பலட்சயத்தையும் பாராட்டி தம்மை அதிக நேரம் தாமதித்து வைக்கப்படாதென்று கேட்டுக்கொண்டதின்பிறகு, விவாத அம்சங்களைத் தாம் எதிர்மறுத்து எழுதியிருந்த பத்திரிகையைக் காண்பித்து அதில் ஒரு பாகத்தை அவர்களுக்குமுன்பாக வாசித்தார். அவர் எழுதியிருந்த மேற்படி எதிருரைப் பத்திரிகை மகா அருமையானது. அவரது வேதசாஸ்திரத் தெளிவுக்கும் தாளாண்மைக்கும் இது உசிதமான அத்தாட்சியாயிருக்கிறதுமன்றி, விருத்தாப்பியத்திலும் அவருக்கிருந்த நுண்ணிய புத்தியும் இதினாலே நன்றாய்த் தெரியவருகின்றது. வயோதிபனான அத்தேவ பக்தன் எவர்களுடைய நெஞ்சும் இளகத்தக்கவிதமாய் தமக்கு அவர்கள் செய்வித்த நிஷ்டூரங்களையெல்லாம் விவரித்தபின், அடியில் வருமாறு பத்திரிகையை முடித்திருக்கிறார். "இந்த விதமாய் உங்களுடைய தீர்மானங்களுக்கு நான் எதிருரை சொல்லியிருக்கிறேன். அக்கினிக்கு இரையானாலும் தேவனுடைய சகாயத்தினாலே அதையே பிடித்து நிற்பேன். சத்தியத்துக்காக என் சீவனை விடப்போகிறேனென்று இப்பொழுது தேவனுடைய சந்நிதானத்துக்குமுன் நான் சொல்லக்கூடும். இராணியின் நடபடிக்கைகளுக்குச் சம்மதித்துக்கொண்டு தேவ வசனத்தின்படி நடக்கக்கூடுமாகில், சாகாமல் உயிரோடிருக்கவே விரும்புவேன். ஆனால் இராணியின் நடபடிக்கைகள் தேவ வசனத்துக்கு நேர்விரோதமாயிருப்பதினாலே, என்ன வந்தாலும் மனிதனுக்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்க தேவனுக்கே நான் கீழ்ப்படியவேண்டும்" என்பதே. அப்பால் அவர்கள் எதிர்வாதம் என்பது ஆரம்பித்தது. இலத்திமர் என்பவர் தமது லத்தீன் எல்லாம் கிட்டத்தட்ட மறந்துபோயிற்று என்றும் காவலிலடைபட்டிருந்ததால் தம் ஞாபக சக்தியுங் குன்றிப்போயிற்று என்றுஞ் சொல்லி இங்கிலிஷில் பேச உத்தரவுகேட்டுக்கொண்டார். என்றாலும் அவரது புத்தியிலும் சாமர்த்தியத்திலும் குறைவு காணவில்லை. அவருடைய எதிரிகள், பூர்வ வேத சாஸ்திரிகள் இயற்றிய நூல்களிலிருந்து சில மேற்கோள்களையெடுத்துக்கொண்டு அதுகளுக்கு எதிர் நியாயஞ்சொல்ல அவரைப் பலவந்தம்பண்ணினபொழுது, "வேத சாஸ்திரிகளும் எல்லா விஷயங்களிலும் வஞ்சிக்கப்படாவிட்டாலும், சில விஷயங்களிலாவது வஞ்சிக்கப்பட்டிருக்கலாம்; அவர்கள் சரியாய்ச் சொல்லும்பொழுது அவர்கள் சொல்லுகிறதை நம்புகிறேன்" என்றார். அதன்பேரில் பாப்பு மார்க்கத்தான் ஒருவன் அவரைப்பார்த்து, "கிழவன் பொய்சொல்லுகிறது வெட்கமில்லையா? பூர்வ வேத சாஸ்திரிகள் சரியாய்ச் சொல்லும்பொழுது அவர்கள் கொள்கையை ஒப்புக்கொள்ளுகிறேனென்று சொல்லுகிறாய், என்றாலும் நீ அவர்கள் கொள்கையை ஒப்புக்கொள்ளுகிறதில்லையே" என்று சொல்லி அவரைப் பரியாசம்பண்ணினான். அதற்கு அவர், "ஆம், அவர்கள் சரியாய்ச் சொல்லும்பொழுது, நான்

அவர்கள் கொள்கையுடையவன்தான். இது விஷயத்தில் என் அபிப்பிராயம் கந்தர்புரி சிரேஷ்ட கண்காணியார் எழுதிய நூலிற் காட்டியிருக்கிற பிரகாரந்தான்" என்றார். "அப்படியானால் நீ கிறுசொஸ்தம் என்பவருடைய கொள்கையுடையவனுமில்லையா? அகுஸ்தின் என்பவருடைய கொள்கையுடையவனுமில்லையா?" என்க, "அவர்கள் சரியாய்ச் சொல்லும்பொழுதும், அவர்கள் வேதவாக்கியங்களைக்கொண்டு திருஷ்டாந்தப்படுத்தும்பொழுதும் நான் அவர்களுடைய கொள்கையுடையவன்தான். மேலும் அகுஸ்தின் சொல்வதை விசுவாசிக்க நாம் கடமைப்பட்டவர்களுமல்ல" என்று பிரதியுத்தரம் சொன்னார். அப்பால் அவரை நியாயத்தில் தோல்வியடைந்துபோனதாகப் பிதற்றி அனுப்பிவிட்டார்கள். இரண்டு நாளைக்குப்பிறகு கிரானமர், ரிட்லி என்பவர்களோடு அவரையும் திரும்பக் கொண்டுவந்தார்கள். அம்மூவரும் தாங்கள் சொன்னதையே விடாது சாதித்து நின்றபடியால் அவர்கள் உயிரோடு தகனிக்கப்படத் தீர்ப்புக்கூறினார்கள். அதைக் கேட்டதோடு இலத்திமர் கண்காணியார், "இந்த வகையான மரணத்தினாலே தேவனை மகிமைப்படுத்தும்பொருட்டு என் சீவனை அவர் இம்மட்டும் நீடித்திருக்கச்செய்ததற்காக அவருடைய திருநாமத்துக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக" என்றார். பக்கத்தில் நின்ற டாக்ற்றர் வெஸ்ற்றன் என்பவன் அவரை நோக்கி, "நீ இந்த விசுவாசத்தோடு மோட்சத்துக்குப் போகிறதுண்டானால் நான் ஒருபொழுதும் அவ்விடத்துக்கு வரவேமாட்டேன்" என்றான். மறுநாளிலே விசேஷித்த நற்கருணைப் பூசையும் மகா உற்சவமும் கொண்டாடப்பட்டது. அதைப் பார்க்கும் பொருட்டு மேற்படி கைதிகள் கொண்டுவரப்பட்டார்கள். இலத்திமர் என்பவர் கொலைக்களத்துக்குக் கொண்டுபோகப்படுகிறதாக நினைத்து, நெருப்பு நன்றாயெரியட்டும் என்று சொல்லி நடந்துபோனார். வழியில் தாம் கொண்டுபோகப்படுகிற நோக்கத்தையறிந்து, அந்த அருவருப்பை தம் கண்ணினால் முதலாய்ப் பார்க்க மனமில்லாமல் பக்கத்திலிருந்த ஒரு கடைக்குள் ஒடி நுழைந்துகொண்டார். அப்பால் அவர் காவல் வீட்டுக்குக் கொண்டுபோகப்பட்டு மறுவருஷம்வரையும் அங்கேயேயிருந்தார்.

கி. பி. 1555-ம்-௵ செப்ற்றெம்பர்மீ 30௳ யிலும் அக்ற்றோபர்மீ 1௳-லும் பாப்புமார்க்கத்தாரால் இரண்டுமுறை பரிசோதிக்கப்பட்டார். இந்தச் சோதனைகளிலும் முந்திய தடவையிற் போலவே சகலமும் அநியாயமாயும் கபடாயும் நடந்ததேயல்லாமல் நேர் நடத்தையோ நியாயமோ சற்றென்கிலுமில்லை. விசாரணைச் சபையிற் கூடியிருந்தவர்கள் இரண்டொரு தடவை உருக்கமோ இரக்கமோ எவ்வளவேனுமின்றி அவர் பேசினதைப்பார்த்துச் சிரித்துப் பரியாசம்பண்ண, அவர் கோபத்தோடு அவர்களை நோக்கி, "இது சிரிக்கத்தக்க காரியமா? என் பிராணனைக் கையிலேந்திக்கொண்டல்லவா மறுமொழி சொல்லுகிறேன்" என்றார். அவர் தம் விசுவாசத்தை மறுக்கும்படிசெய்ய அவர்கள் எவ்வளவோ நயமும் பயமுமாயேவியும் அவர்கள் பிரயாசம் ஒன்றும் பயன்படவில்லை. என் எசமானாகிய கிறிஸ்துவையும் அவரது சத்தியத்தையும் மறுக்கவுங்கூடாது, மறுக்கவுமாட்டேனென்று ஒரே சாதனையாய்ச் சாதித்துவிட்டார். அதன்பேரில் அவரை லௌகீக அதிகாரிகளுக்கு ஒப்புக்கொடுத்துவிட்டார்கள்.

கி. பி. 1555-ம்-௵ அக்றோபர்மீ 16௳, இங்கிலாந்து தேசத்துச் சனங்கள் என்றும் நினைவுகூரவேண்டிய அன்றைத் தினத்தில் இலத்திமர், ரிட்லிக் கண்காணிமார்களிருவரும் தகனமாகக் கொண்டுவரப்

பட்டார்கள். பேலியல் காலேஜ் என்ற கலாசாலைக்கு எதிரேயிருந்த மைதானத்தில் கொலைக்களம் குறிக்கப்பட்டிருந்தது. ரிட்லிக் கண் காணியார் முன்னும் இலத்திமர் கண்காணியார் பின்னுமாக நடந்து போனார்கள். சிரேஷ்ட கண்காணியார் அடைபட்டிருந்த பொக்கார் டோ என்ற காவற்சாலைக்குச் சமீபத்தில் வந்தபொழுது அவனைக் கண்டுகொள்ளவேண்டுமென்ற நோக்கமாய் பலகணிக்கு நேரே எட் டிப்பார்த்தார்கள். அவர் அச்சமையத்தில் சில சந்நியாசிகளோடு தர்க் கம்பண்ணிக்கொண்டிருந்தபடியால் அவனைக் காணக்கிடைக்கவில்லை. அப்பால் நடந்துபோகையில் ரிட்லி என்பவர் பின்னிட்டுப் பார்த்து இலத்திமரை நோக்கி, "நீர் வருகிறீரா" என்க, "ஆம், என்னுற் கூடிய தீவிரமாய் உமக்குப் பின்னே வருகிறேன்" என்றார். கொலைக்களத்திற் சேர்ந்தபொழுது, அவர்கள் ஒருவரையொருவர் தழுவித் தைரியஞ் சொல்லிக்கொண்டு, பின்பு முழங்காலூன்றி தேவனை நோக்கி தம் தம் மட்டில் பிரார்த்தித்தார்கள்.

டாக்ற்றர் ஸ்மித் என்ற ஒருவர் வழக்கப்படி அச்சமையத்திற் பிரசங்கித்தார். இலத்திமர், ரிட்லி என்பவர்களிருவரும் உத்தரவுகொ டுக்கிறதாயின் மேற்படி பிரசங்கத்துக்கு எதிர் நியாயங் காண்பிக்க ஆயத்தமாயிருக்கிறோமென்று கேட்டும் உத்தரவு கொடுக்கப்படவில்லை. அதன்பேரில் இலத்திமர் தமது வழக்கப்படி "வெளிக்கு வராத அந்தரங் கமில்லை" என்றார். உடனே தயாராக உத்தரவு பிறந்தது. இலத்திமரு டைய மேல் வஸ்திரங்களைக் கழற்றிவிடவே, தம் வஸ்திரத்தோடிருக் கையில் வலித்துப்போன கூன்கிழவனைத் தோன்றின அவர் இப்பொ ழுது அழகிய புருஷோத்தமனைப் நிமிர்ந்து நின்றதாகக் குறிப்பித்தி ருக்கிறது. பயங்கரப்படத்தக்க அவ்வேளையில் மலர்ந்த முகத்தோடு அவர் தம் கண்களை வானத்துக்கு நேராக உயர்த்தி, "தேவன் உண்மை யுள்ளவராயிருக்கிறார்; நம்முடைய நிராணிக்கு மேலாக நாம் சோ திக்கப்படுவதற்கு அவர் இடங்கொடார்" என்றார். அப்புறம் இரத்தச் சாக்ஷிகளிருவரையும் சங்கிலிகளினூலே மரத்தோடு சேர்த்துக் கட்டி, நெருப்புக் கொளுத்தினார்கள். அப்பொழுதுதான் இலத்திமர் கண்கா ணியார் ரிட்லிக் கண்காணியாரைப்பார்த்து, "ரிட்லியென்பவரே திட மனதாயிரும், தைரியமாய் நடந்துகொள்ளும். தேவகிருபையினூலே நாம் இன்று இங்கிலாந்திலே ஏற்றப்போகிற தீபம் ஒருநாளும் அணைந் துபோகாதென்று நம்புகிறேன்" என்று தீர்க்கத்தரிசனம்போல உரை த்தார். இவைகள் எக்காலமும் நினைக்கத்தக்க சொற்கள் என்பதற் குச் சந்தேகமில்லை.

நெருப்பு சுவாலித்து எரியத்தொடங்கவே; இலத்திமர் என்பவர், "பரமபிதாவே என் ஆத்துமாவை ஏற்றுக்கொள்ளும்" என்று உரத்த சத்தமாய்க் கூப்பிட்டு, அக்கினியை இரு கையாலும் தழுவிக்கொள்ளு கிறதுபோல் காணப்பட்டார். அப்புறம் கொஞ்சநேரத்துக்குள்ளாக எவ்வளவேனும் நோவின்றி ஆவியை விட்டார். சுவிசேஷத்தினிமித்தம் தமது இரத்தத்தைச் சிந்தவேண்டுமென்று அவர் பிரார்த்தித்துவந்த தாக மேலே ஓரிடத்திற் குறிப்பித்திருக்கிறதே. அந்த அவருடைய பிரார்த்தனை மெய்யாய்ப் பலிதமாயிற்று. எப்படியென்றால் அக்கினி யின் அகோரத்தினூல் அவருடைய தேகம் பிளவுண்டுபோனபொழுது, இரத்தாசயத்திலிருந்து சூழ நின்றவர்கள் ஆச்சரியப்படத்தக்கவித மாய் இரத்தம் அமோகமாய்ப் பாய்ந்தோடிற்று. இங்கிலாந்துதேசத் தின் மெய்யான அப்போஸ்தலன் இவ்வாறு மகத்துவமாய் மகிமைக் குட்பட்டார். தேவ புத்திரனின் சாயலுக்கொப்பான ஒருவர் அக்கி

னிச்சுவாலையின் நடுவில் அவரோடு இருந்தார். ஆகையால் அவருக்கு ஒரு சேதமுமில்லை.

Notes on Leviticus.

லேவியராகம வியாக்கியானம்.

உக. அதிகாரம்.

ஆசாரியனையும் பலிகளையும் குறித்த சட்டங்கள்.

5. எகிப்திய பூசாசாரிகள் இப்படிச் செய்வார்கள்.
8. "அவன்" அதாவது ஒவ்வொரு ஆசாரியனும்.
15. "வித்தை" 14ம் வாக்கியத்தில் சொல்லியபடி விலக்கப்ப பட்ட இஸ்திரீகளோடு சேர்ந்த பிள்ளைகளைப் பெற்றால் அத்தப் பிள்ளை கள் ஆசாரிய உத்தியோகத்துக்கு உதவாதே.
17. "அங்கஹீனமுள்ளவன்." ஆசாரியன் கிறிஸ்துவுக்கு முன் னடையாளமாயிருந்ததால், அவன் பழுதற்றவனையிருக்கவேண்டியத அவசியக்தான். மேலும் சில அஞ்ஞான பூசாசாரிகள் அங்கஹீனமாய்க் கூத்தாடுகிற தர்வழக்கத்துக்கு விரோதமாய் இது கற்பிக்கப்பட்டது.
25. "திரை" யாத்திரை. 26: 36.
"பலிபீடம்" தகன பலிபீடம்.

படிப்பினை.

ஆசாரியருக்கு விதிக்கப்பட்ட இந்தக் கண்டிப்பான ஏற்பாடுகள் கிறிஸ்துவானவருடைய மாசற்ற தன்மையை மூன் குறிக்கிறதாயிரு ந்தது.

உஉ. அதிகாரம்.

ஆசாரியனையும் பலிகளையும் குறித்த சட்டங்கள்.

1. ஆசாரியர் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ளும்படி அவர் களுக்குக் கொடுக்கப்பட்ட ஏராளமான சட்டதிட்டங்கள், அவர்கள் தேவனுடைய பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ளுவதில் எந்நாளும் ஒடி க்க வணக்கமுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்பதை அவர்களுக்குப் போதிக்கிறதாயிருந்தது.
10. "அந்நியன்" ஆசாரிய வம்சத்தான் அல்லாதவன். 12 வாக்.
11. இந்தச் சட்டமானது ஒருவீட்டாருக்குள் இருக்கவேண்டிய ஒழுக்கியத்தை நன்றாய்க் காட்டுகிறது. வீட்டுப் பிள்ளைகளைப்போலவே வேலைக்காரரும் நடத்தப்படவேண்டும்.
22. இப்படிப் பட்டதைச் செலுத்துவானுனல் அவன் தேவனுக் குச் செய்யும் ஆராதனை அவமதிக்கப்படுமே. மேலும் மகா முக்கிய பொருளை மூன் குறிக்கும்படி இவைகள் நியமிக்கப்பட்டதால், பழுது ள்ளவைகள் அந்தப் பொருளைச் சரியாய்க் காட்டாதே.

25. இஸ்ரவேலனுக்கும் அந்நியனுக்கும் இதைக் குறித்து ஒரே பிரமாணமே.

27. பட்சத்தையும் தயவையும் விர்த்தியாக்கும் நோக்கமாய் இந்தச் சட்டம் ஏற்படுத்தப்பட்டது. 27, 28.

படிப்பினை.

நாம் தேவனோடு ஒப்புரவாகிறதற்கு நம்முடைய நற்கிரியையைச் சார்வது குருடும் செவிசலும் முடமும் களலியும் புண்ணும் பிடித்த பலியைச் செலுத்துவதுபோலிருக்கிறது. இது தேவனுக்கு மகா அருவருப்பு "கிறிஸ்துநாதருடைய நீதியே பழுதற்றது.

உந. அதிகாரம்.

பரிசுத்த பண்டிகைகள்.

இஸ்ரவேலர் ராஜாங்கத்தின்படியும் திருச்சபை ஒழுங்கின்படியும் ஐக்கியக் கட்டுப்பாடையவர்களாய் இருக்கவும், ஒரு கூட்டமாய் யெகோவாவை வழிபட்டு, ஒருவருக்கொருவர் அன்பும் பட்சமுமாய் நடக்கவும்வேண்டுமென்ற நோக்கமாய் இந்தப் பண்டிகைகள் ஏற்படுத்தப்பட்டது.

11. "கதிர்க்கட்டு." வாற்கோதுமைக் கதிர்க்கட்டாம். மூன்றி அறுப்பாகிற தானியம் இதுவே. முதற் பலனைக் கர்த்தருடைய சன்னிதியில் அசைவாட்டுவது, முழு விளைச்சலும் தேவனுக்குப் பிரதிஷ்டையானதுக்குச் சரி. நோமர். 11: 26. பஸ்கா ஒய்வுநாளுக்குப் பின்னுள காலையில் முதற் பலன் அசைவாட்டப்பட்டது. இந்தக் காலையில்தான் திருச்சபையின் தலைவராகிய கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்து நித்திரை அடைந்தவர்களில் முதற் பலனுனர். 1 கொரி. 15: 20.

15. "ஐம்பதாம்" இந்த வார்த்தைக்கு கிரேக்பாஷையில் பெந்தெகொஸ்தே என்று பேர். இதினாலே இந்த பண்டிகைக்கும் இந்தப் பேர் வந்தது. இதற்கு வாரங்களின் பண்டிகை என்றும் பேர். யாத். 23: 16ல் "அறுப்புக்காலப் பண்டிகை" என்றும் "முதற் பலனைச் செலுத்தும் பண்டிகை" என்றும் சொல்லப்படுகிறது. எண். 28: 26. உபா. 26ம் அதி. ஏனென்றால் இந்தக் காலத்தில் கோதுமை விளைச்சலின் முதற் பலன் தேவனுக்குச் செலுத்தப்பட்டது. உபா. 26ம் அதி. சொல்லிய தோத்திரமும் அறிக்கையும் இந்தச் சமயங்களில் பெரும்பாலும் வழங்கப்பட்டது. எகிப்திலிருந்து புறப்பட்ட (7) வாரத்துக்குப் பின் சீனாய் மலையில் பண்ணப்பட்ட உடன்படிக்கையை நினைவுகூரும்படி இது கொண்டாடப்பட்டதாக யூதர்கள் சொல்லுகிறார்கள். அதினாலேதான் அவர்கள் இந்தப் பண்டிகைக்கு "நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்ட நாள்" என்று பேரிட்டிருக்கிறார்கள். நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்ட 50 நாளைக்குப் பின் பரிசுத்த ஆவி அற்புதமாய் இறங்கினதை இந்தப் பண்டிகை முன் குறிக்கிறதென்று கிறிஸ்தவர்களாலே பொதுவாய் ஒப்புக்கொள்ளப்பட்டு வருகிறது. பிற்காலங்களில் யூதர்கள் இந்தப் பண்டிகைக்கு ஏராளமாய் வந்து கூடுவார்கள். நடபடி. 2: 1, 9—11.

16. "புதிய" அதாவது இப்போ புதிதாய் அறுத்த கோதுமை மாவினால் செய்யப்பட்ட என்று அர்த்தமாம்.

17. "புளிப்பாக" ஜனங்களின் வழக்கமான சாப்பாடு என்று காட்டுகிறது.

வைதிக வருடத்தின் (7)ம் மாதத்தில் கொண்டாடப்பட்ட எக்காளப்பண்டிகையானது, அவர்களுடைய பழய வருடத்தின் துவக்கமாயிருந்தது. இந்தப் பழய கணக்கின்படிதான் அவர்களுடைய தேசாசார நடபடிகளும், ஒத்தி, கட்டுக் குத்தகைகளும் ஒழுங்குபடுத்தப்படும். இந்தப் பழய வருடத்தின் ஆரம்பம் உலகம் சிருஷ்டிக்கப்பட்ட காலத்தின் ஆரம்பந்தான் என்றும், உலகம் சிருஷ்டிக்கப்பட்டதை நினைவுகூரும்படி இந்தப் பண்டிகை கொண்டாடப்பட்டதென்றும் அநேகர் நினைத்திருக்கிறார்கள்.

27. 16ம் அதி. வியாக்கியானம் காண்க.

34. வனாந்தரத்தில் இஸ்ரவேல் புத்திரர் கூடாரத்தில் வாசம் பண்ணினதினாலே இதற்கு "கூடாரப்பண்டிகை" யென்று பேர் வந்தது. வாக். 40—43. இது சேர்ப்புக் காலப்பண்டிகை என்றும் அழைக்கப்பட்டது. யாத். 23: 16. 34: 22. உபா. 16: 13. ஏனென்றால் அறுப்பும், தராட்சப்பழப்போகமும், கனிகாலமும் முடிந்த பின்பு கொண்டாடப்பட்டது. இந்தப் பண்டிகையில் அவர்கள் வழக்கமாய் மிகுதியும் சந்தோஷங் கொண்டாடுவார்கள். இது மிகுதியான ஆசீர்வாதங்களை முன்குறித்த பாவ நிவிர்த்தியின் சிறந்த நாளை அநுசரித்து வந்தினாலும், இஸ்ரவேலர் வனாந்தரத்திலிருந்ததையும் பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்தில் பிரவேசித்து அதின் செழிப்பை அனுபவித்ததையும் நினைவுகூரும்படி கொண்டாடப்பட்டதினாலும், மிகுந்த ஆரவார கெம்பீரத்தோடு நடத்தப்பட்டது. மற்றப் பண்டிகைகளில் செலுத்தப்பட்ட பலிகளைப்பார்க்கிலும் இதிலதிகமான பலிகள் செலுத்தப்பட்டது. எண். 29: 12—38. பிற்காலங்களில் மிகுந்த கெம்பீரத்தோடு 113—118 வரையுள்ள சங்கீதங்களைப் பாடிக்கொண்டு, ஒலிவ மலைத்திலிருந்து தண்ணீர் மொண்டுகொண்டு வந்து தேவாலயத்தின் பிராகாரங்களில் சோணமாரியாய் ஊற்றுவது வழக்கமாயிருந்தது. இந்த நாள் சாயங்காலத்தில் ஸ்திரீகளின் பிராகாரத்தில் தீபங்களேற்றி, 120—134 வரையுள்ள சங்கீதங்களைப் பாடுவார்கள். இந்தச் சடங்காசாரங்கள் ஏசா. 12: 3. யோவான் 7: 37, 39. 8: 12. இந்த வாக்கியங்களில் சுட்டிப் பேசப்படுகிறதென்றும், இந்தப் பண்டிகை பெந்தெகொஸ்தே பண்டிகையைப் பார்க்கிலும் அதிக விசேஷமாய்ப் பரிசுத்த ஆவியானவர் ஊற்றப்படுவதை முன் குறித்ததென்றும் அநேகர் நினைத்திருக்கிறார்கள். மற்றநேகமோ, புறச்சாரியாரின் திருச்சபையில் நிறைவாய்ச் சேர்க்கப்படுகிற முக்கியமான காலத்தை இந்தச் சடங்குகள் குறித்தென்று சொல்லுகிறார்கள். சகரியா. 14: 16.

படிப்பினை.

நாம் ஒய்வுநாளை லேசாய் எண்ணக்கூடாது. நம்முடைய வீடு களிலும் அது அநுசரிக்கப்படவேண்டும்.—நம்முடைய வரவுக்குத்தக்கதாகவும் அது அநுசரிக்கப்படவேண்டும். கிறிஸ்துவை அறிவிக்கும் சுவிசேஷகர்த்தரை கனம்பண்ணவேண்டும். ஆத்தின் எக்காளத்தை நாம் தொனிக்கப்பண்ணவேண்டும்.

Blunt's undesigned Coincidences.

புதிய ஏற்பாட்டுச் சரித்திரப்புத்தகங்களின் உண்மையை விளக்கும்படி அவற்றிலிருந்து பளன்ட் ஐயர் எடுத்துக்காட்டுகிற கருதாத சம்பந்தங்கள்.

XVI. மாற்கு. 15: 21. "ரூப்பு"

இரண்டாம் நூற்றாண்டின் கடைசிபோலிருந்த அலெக்சந்தரியாப்பட்டணத்து இளமெந்து: மாற்கு தன் சுவிசேஷத்தை ரோமையிலிருந்து பேதுருவின் போதகத்தினால் எழுதினனென்று சொல்லுகிறான். சான்காம் நூற்றாண்டிலிருந்த ஏரோம்: பேதுருவின் சீஷனும் அபாகியுமான மாற்கு, ரோமையிலுள்ள சகோதரர் கேட்டுக்கொண்டதினிமித்தம் ஒரு சுருக்கமான சுவிசேஷத்தை எழுதினனென்று சொல்லுகிறான்.

பவுல், ரோமர் நிருபத்தை எழுதும்போது, ரூப்பு என்று பேர் கொண்ட ஒரு பேர்போன சீஷனிருந்திருக்கிறான். ரோ. 16: 13. ஆகையால் மாற்கு தன் சுவிசேஷத்தை ரோமையிலிருந்து எழுதும்போது அந்த இடத்திலேயே வாசமாயிருந்த ஒரு பேர்போன மனுஷனுடைய பேரைச் சொல்லுவதில்; மாற்கு எழுதுகிற சங்கதியின் உண்மை வெளிப்படுமல்லவா? கிறிஸ்தவர்களுக்கு மகா முக்கிய காரியமாகிய சிலுவையை, அவன் மகன் சுமந்திராவிட்டால்: என் மகன் எங்கே சிலுவை சுமந்தான் என்று உடனே ரூப்பு பிடித்துக்கொள்வானே. மாற்கும் பவுலும் சொல்லுகிற ரூப்பு ஒருவனானென்ற அபிப்பிராயத்தின்மேல் இந்த ஒற்றுமை எடுத்துக்காட்டப்பட்டது.

XVII. மாற்கு. 15: 25, 33. "மூன்றும்...ஆறும்.....ஒன்பதாம்"

கிறிஸ்துநாதரைப் பரியாசம்பண்ணி நிந்தைசெய்தது அவரைச் சிலுவையிலறைந்த முதல் 3 மணி நேரத்தில்தான் என்று தோன்றும். மாற்கு. 15: 29, 31, 32. லூக். 23: 36. இது பின்னை 3 மணிநேரமெல்லாம் தேசமெங்கும் அந்தகாரமுண்டானதற்கும், அதினாலே அவரை நிந்தைப்படுத்தினவர்கள் பயந்து விட்டுவிட்டதற்கும் இசைகிறதல்லவா? மத். 27: 45. மாற்கு. 15: 33.

XVIII. லூக். 9: 53. "அவர் எருசலேமுக்குப் போக நோக்கமாயிருந்தபடியினால்"

இப்போது இரட்சகர் எருசலேமுக்குப் பண்டிகைக்குப் போகிறார். அதினால் மெய்த்தேவனே வணங்கும் இடம் எருசலேம் என்று காட்டினார். இதற்கெதிரிடையாக சமாரியர் கெரிம் மலையில் ஒரு ஆலயத்தைக் கட்டித் தொழுதுவந்த விரோதத்தினால் ஏவப்பட்டு அவ்வூரார் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. இந்தக் காரியம் யோவான். 4ம் அதிகாரத்தோடு நோக்கமில்லாமலிசைகிறது. எப்படியென்றால் சமாரியா ஸ்திரீயோடு இரட்சகர் தர்க்கித்தபோது அவர் யூதேயாவுக்கல்ல, யூதேயாவில் இருந்து வடக்கேபோனார். அப்போ பண்டிகை முதலான தேவகாரியமாய் இரட்சகர் போய் விட்டு வருகிறானென்று சமாரியர் சந்தேகிக்க ஏதுவிருந்ததில்லை. ஏனென்றால் "அறுப்புக்காலம் வருகிறதற்கு (அத்தோடு பஸ்காவருகிறதற்கும்) இன்னம் நாலு மாதம் செல்லும்." அதினாலே மேற்காட்டிய விரோத நினைவில்லாமல் அவரை வெறுவாய் உபசரித்தார்கள். பண்டிகை காலங்களில் இப்படி அதை விரோதங்கொள்வதும், மற்றக் காலங்களில் சற்று சாந்தமாயிருப்பதும் இயல்புதானே. இதை இவ்விரு சுவிசேஷகர்களும் பேசினவைத்துக்கொண்டா எழுதினார்கள்?

XIX. யோவான். 2: 7. "சாடிகளிலே தண்ணீர் நிரப்புங்கள் என்றார்."

இருந்த தண்ணீர் எங்கே? மாற்கு சுவிசேஷத்தால் தெளிவாகிறது. மாற்கு. 7: 3. கால்கை சுத்தஞ் செய்ததில் செலவாய்ப் போயிற்று. இதுவும் 10ம் வாக்கியமும் அற்புதம் செய்யப்பட்ட சமயத்தை ருசுப்படுத்துகிறதல்லவா?

XX. யோவான். 4ம் அதிகாரத்திலும் விசேஷமாய் 35ம் வாக்கியத்தினாலும் அவ்விடத்தில் சபை உண்டாகுமென்று தெரிவித்தார். இது நடபடி 8ம் அதிகாரத்தோடு நோக்கமில்லாமல் இசைகிறதாகித்துப்பார்க்கவும்.

XXI. 6: 16—25. "பெருங்காற்று அடித்தபடியினாலே கடல் கொந்தளித்தது" 22: 23. திரும்பத் திரும்ப வாசி.

25. "ரபீ நீர் எப்பொழுது இவ்விடம் வந்தீர்".

மத். 14: 22 முதல் வாசி. "எதிர் காற்றாயிருந்தபடியால்"

ரட்சகர் அற்புதஞ் செய்த இடத்தில்தான் இன்னமிருக்கிறாரென்று சனங்கள் நினைத்ததாக யோவான் சுவிசேஷத்தினால் விளங்குகிறது. சனங்கள் ஏன் இப்படி நினைத்தார்களென்றால், கடலின் மேல் கரையிலிருக்கிற கப்பர்நகூமுக்குப்போகும்படி மூன்னை சாயங்காலத்தில் சீஷர்மட்டும் ஏறின அந்த ஒரே படவு தவிர வேறே படவுகளிருந்ததில்லை என்று அறிந்ததினாலேதான். பிற்பாடு "திபேரியாவிலிருந்து வேறே படவுகள் வந்தது" என்று சொல்லியிருக்கிறது. அப்படியானால் இரட்சகர் இவைகளில் ஒன்றில் போயிருக்கமாட்டார் என்று சனங்களுக்கு எப்படித்தெரியும்? இது அவர்களுக்குத் தெரிந்த வகையை யோவான் சொல்லவில்லை. மத்தேயு சொல்லுகிறார். அதாவது "எதிர் காற்றாயிருந்தபடியால்." எதிர் காற்றென்பது, கப்பர்நகூம், திபேரியா இந்தப் பட்டணங்களின் கரைபிடிக்கப்போகிற படவுகளுக்கு எதிராயடிக்கிற காற்றும். இதினாலே யோவான் சொல்லுகிறபடி திபேரியாவிலிருந்து படவுகள் வினாவாய் வரக்கூடும். ஆனால் அப்படிவந்த படவுகள் எதிர் காற்றில் மாறித்திரும்புவது லேசல்ல.

ஆகையால்தான் ரட்சகர் இவைகளில் ஒன்றில் போயிருக்கமாட்டார் என்று அறிந்துகொண்டார்கள். இது என்ன ஆச்சரியமான ஒற்றுமை! இதெல்லாம் சரி வரும்படியாகவா மத்தேயு "எதிர் காற்று" என்று எழுதினவைத்தான்? இது அந்த ஒரே மூச்சோடு, அக்கடலின் மேல் நடந்தார் என்று சொல்லிய அற்புதத்தை மெய்ப்படுத்துகிறதல்லவா.

மேலும் இந்தப் படவுகள் மீன் படவுகளாயிருக்கவேண்டும். காற்றின் போக்கிலே போய்விட்டது. மற்றப்படி இத்தனை படவுகள் (24 வாசி) கடல்த்துறையாவது சந்தையாவது இல்லாத இந்த வனாந்தரமான இடத்துக்கு வரவேண்டிய நியாயமில்லை. சாயங்கால நேரத்தில் இத்தனை படவுகள் இந்த வனாந்தரத்துக்கு வந்ததே காற்றின் தன்மையைக் காட்டுகிறது. இது காரியம் மறுநாள் சனங்கள் இரட்சகரை நோக்கி "ரபீ நீர் எப்போது இவ்விடம் வந்தீர்." என்று கேட்ட கேள்வியினாலும் விளங்கும். எப்படியெனில் சீஷர் ஏறின படவிலாவது தங்களோடேயாவது வரவில்லையே, ஏதோ ஒரு அதிசயமானவகையாய் வந்திருக்கவேண்டும் என்ற அர்த்தம் அந்தக் கேள்வியில் அடங்கியிருக்கிறது. எல்லாம்கூடி இரண்டு சுவிசேஷகரும் எழுதிய சங்கதியும்

அதோடு சம்பந்தப்பட்ட அற்புதங்களும் உண்மையென்று வெளிப்படுத்துகிறது.

XXII. யோவான். 18: 10. "அந்த வேலைக்காரனுக்கு மல்குஸ் என்று பெயர்."

18: 15. "அந்தச் சீஷன் பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமானவன்."

18: 16. "வாசல் காக்கிறவளுடனே பேசி பேதுருவை உள்ளே அழைத்துக்கொண்டுபோனான்."

15 ம் வாக்கியத்தில் "பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமான சீஷன்" என்று சொல்லப்படுபவன் இரண்டு மூன்று முகாந்தரங்களினாலே இந்தச் சுவிசேஷத்தை எழுதினவனே என்று தோன்றும்.

1. கிறிசொஸ்தம், தியாவிலாகட், எரோம் ஆகிய ஆசிரியர் இப்படியே சொல்லுகிறார்கள்.

2. இந்தச் சுவிசேஷத்தில் யோவான் அடிக்கடி தன்னைப் படர்க்கையிடமாகப் பேசியிருப்பது பிரத்தியட்சமாயிருக்கிறது. 20: 2-3

3. பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமாயிருந்த சீஷன் "வெளியேவந்து." "உள்ளே அழைத்து." இப்படிச் சொல்லப்படுவதைக் கவனித்தால், அவனே அந்தச் சங்கதியை எழுதினானென்று தோன்றும். மற்றச் சுவிசேஷகர்கள், பிரதான ஆசாரியனுடைய வீட்டுக்கு பேதுரு போனானென்று சொல்லுகிறார்களேயல்லாது, உள்ளே போன வகை இன்னபடியென்று சொல்லவில்லை. ஆகையால் பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமான சீஷன் யோவானென்று விளங்குகிறது.

இப்போ கருதாத சம்பந்தத்தை கவனிப்போம்.

நாலு சுவிசேஷகர்களும், பேதுருவால் காதற வெட்டப்பட்ட சங்கதியைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் யோவான்மட்டும் அவனுடைய பெயரைச் சொல்லுகிறான். இதற்கு முகாந்தரமென்ன? இவன் பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமாயிருந்ததுதான் முகாந்தரம். ஆசாரியனுக்கு அறிமுகமாயிருந்தவன் அவன் வேலைக்காரரோடு அறிமுகமாயிருப்பதும், அவர்கள் இவனோடு பழக்கமாயிருப்பதும் இயல்புதானே. அதினாலேதான், பேதுரு வெளியே நின்றபொழுது, இவன் உள்ளே பிரவேசித்திருக்கிறான். வாசலைக் காக்கிறவளுடனேசொல்லிப் பேதுருவையும் உள்ளே அழைத்திருக்கிறான். மேலும் 26. வசனம் "பேதுரு காதற வெட்டினவனுக்கு இனத்தான்" என்று சொல்வதினாலும் இது தெளிவாகிறதே. ஆகையால் பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரரோடு பழக்கமாயிருந்த யோவான், "மல்குஸ் என்று பெயர் சொல்வதும், மற்றச் சுவிசேஷகர் பிரதான ஆசாரியரில் ஒருவனுடைய வேலைக்காரரில் ஒருவனே என்று சொல்வதும் இயல்பாகவே இருக்கிறது. இது காரியம் அது சம்பந்தமாய் நடந்த அற்புதத்தையும் மெய்ப்பிக்கிறதல்லவா?

XXIII யோவான். 18:36. "என் ஊழியக்காரர்போராடியிருப்பார்களே"

கிறிஸ்துநாதருக்கு விரோதமாய்ப் பொய்யும், அநியாயமும், ருபிக்கக்கூடாததுமான பிராதுகளைச் சொன்னார்களே, "சங்கத்தார் யாவரும் அவருக்கு விரோதமாய்ப் பொய்ச்சாக்ஷி தேடினார்கள்" என்று சொல்லியுமிருக்கிறதே, அப்படியானால், மல்குஸ் காதை வெட்டின சங்கதியை, ஏன் பிராதாய்ச் சொல்லவில்லை? இது மெய்யான சங்கதியாயும், இரகசியர் கண்ணுக்குமுன்னே நடந்ததாயும்; அநந்தம் சாக்ஷிகளால் ருபிக்கக்கூடியதாயும், காது வெட்டப்பட்டவன் பிரதான

ஆசாரியனுடைய வேலைக்காரனுமிருக்கிறபடியினாலே, இது விரோதிகள் காரியத்துக்கு நல்ல பிடியாச்சுதே; இப்படியெல்லாமிருக்க, ஏன் இந்த பகிரங்கமான சங்கதியை தோக்கத்தோடே விட்டுவிட்டார்கள். நமக்கு லூக்காச் சுவிசேஷமில்லாவிட்டால் இதைக்குறித்து சந்தேகமும், வெகு கவலையும் இருக்கும். வேதத்துக்கு விரோதமாய் இப்போது சொல்லப்படுகிற அநேக ஆட்சேபணைகளில் இதுவும் ஒன்றாயிருக்கும். அப்படிக்கில்லாமல் லூக். 22: 51 வாசி.

XXIV. 20: 4. "பேதுருவைப்பார்க்கிலும் மற்றச் சீஷன் துரிதமாய் ஓடி"

20: 5. "அவன் உள்ளே போகவில்லை"

20: 6. "கல்லறைக்குள்ளே பிரவேசித்து"

20: 8. "மற்றச் சீஷனும் உள்ளே பிரவேசித்து."

இவற்றில் இரண்டு கருதாத சம்பந்தங்களிருக்கிறது. அவைகள் சிறிதாயிருந்தாலும், சரித்திர உண்மையைக் காட்டுகிறது.

1. யோவான் பேதுருவைப்பார்க்கிலும் மூர்த்தியோடினான். பூர்வத்திலிருந்த திருச்சபைச் சரித்திரக்காரரெல்லாரும், அப்போஸ்தலர் எல்லாரிலும் யோவான் இளையவனென்று சாக்ஷியிடுகிறார்கள். யோவான். 21: 18ல். "நீ இளவயதுள்ளவனாயிருந்தபோது." என்பதைச் சொல்வதில், பேதுரு இப்பொழுது நடுப்பிராயங்கடந்தவனாயிருந்தானென்று நிதானிக்கலாம். மேலும் பேதுரு மரித்தபின்னும், யோவான் 36 வருஷம் ஜீவனோடிருந்திருக்கிறான். ஆகையால் பேதுருவைப் பார்க்கிலும் யோவான் வெகுகாலத்திற்கு இளையவனென்றுதோன்றும்.

2. யோவான்மூர்க்கி கல்லறைக்குள் போகவில்லை. பேதுருவோ கல்லறையினிடத்தில் வந்து யோவானைப்போல் கல்லறைக்குள்குனிந்து பாராமல், உடனே தயிரியமாய் அதற்குட்பிரவேசித்தான். இப்படிப்பட்ட தைரியத்தை முன்னமேயும் காட்டியிருக்கிறான் என்றுவிளங்கும். தண்ணீரின்மேல் நடக்கக்கேட்டான்; மல்குசைக்காதற வெட்டினான்; ஒருவிசை தண்ணீரில்குதித்தான், அப்போஸ்தலன்மார் சிறைச்சாலை ஒருவிசை தண்ணீரில்குதித்தான், அப்போஸ்தலன்மார் சிறைச்சாலையிலே தள்ளப்பட்டால், இவனே அங்கே முதலில் காணலாம். அப். 18: 29. 12: 3. 16: 25 இப்படியாகச் சரித்திரங்களொன்றுக்கொன்று இசைவாயிருக்கிறதைக் காணலாம்.

XXV. அப். 4: 36. "சீப்புரு தீவான்.....பர்னபா."

பர்னபாவின் சரித்திரத்தில் நடபடியிலுள்ள அநேக சங்கதிகள் உண்மை என்று விளங்கும்.

1. பவுல் குணப்பட்ட தருவக்கத்தில் மற்றச் சீஷர்கள் பவுலைக்குறித்து பயமாயிருந்தபோது, இவன் பவுலை அழைத்து வந்திருக்கிறான். இப்படி மற்றவர்களைப்பார்க்கிலும் இவன் பவுலோடு பழக்கமாயிருந்ததற்கு, நடபடியை எழுதினவர் முகாந்தரஞ் சொல்லவில்லை. ஆனால் பர்னபா இருந்த இடமாகிய சீப்புருதீவு, பவுலின் பட்டணமாகிய தருசு இருந்த செலூஷியா நாட்டுக்குச் சேர்த்திக்கையானதுதான். மேலும் தருசு, கல்விக்கு உறைவிடமாயிருந்தபடியினாலே, பர்னபாவும் பவுலும், அங்கே தோழராய்ப் படித்திருக்கலாம். பர்னபா இருந்த இடத்திற்கும் அதற்கும் 70 மைல் தூரம்தான். பின்பு இருவரும் எருசலேமுக்குப் போயிருப்பதிலும் பழக்கமுண்டாயிருக்கும். இன்னொரு சமயத்தில், பவுலை அந்தியோகியாவுக்கு அழைத்துவரும்படி தருசுவுக்குப் போயிருக்கிறான். இந்த முகாந்தரங்களினாலே இரண்டுபேருக்கும் அதிகப் பழக்கமுண்டாயிருக்கும்.

2. 11: 20ல், சீப்புரு தீவாரும் அந்தியோகியாவுக்கு வந்ததாகச்

சொல்லியிருக்கிறது. 22ல், "எருசலேமிலுள்ள சபையார் அந்தியோகியாவரைக்கும் போகும்படி பர்னபாவை அனுப்பினார்கள்" என்று சொல்லியிருக்கிறது. பர்னபாவையனுப்பின முகாந்தரஞ் சொல்லப்படவில்லை. ஆனால் 20ல்ச் சொல்லியபடி, சீப்புரு தீவாரும் பிரசங்கித்தபடியினாலேயும், பர்னபா சீப்புரு தீவானபடியினாலும் இவனை அனுப்பினார்களென்று நாம் கண்டுபிடித்துக்கொள்ளலாமே.

3. 13: 4 வாசி. பவுலும் பர்னபாவும், சீப்புரு தீவுக்குக் கப்பலேறிப் போனார்களென்று சொல்லியிருக்கிறது. பவுலின் 2ம் பிரயாணத்தில் மனஸ்தாபமுண்டானபோது, பர்னபா மாற்குவைக்கூட்டிக்கொண்டு, சீப்புரு தீவுக்குப் போனானென்று சொல்லியிருக்கிறது. இதெல்லாம் இயல்பாகவே வருகிறது. 15: 3 வாசி.

4. பர்னபாவுக்கும், பவுலுக்கும், மாற்குவினிமித்தம் கோபமுண்டானதற்கும், பர்னபா மாற்றுபட்சமாய்ப் பேசி, மாற்குவைக் கூட்டிக்கொண்டு போனதற்கும், இங்கே முகாந்தரஞ் சொல்லப்படாவிட்டாலும், கொலோ. 4: 10னால் தெரியவருகிறது. இப்படியாக இந்தக் கருதாத ஒற்றுமைகளினால், சரித்திரங்கள் ஒன்றுக்கொன்று இசைவுபட்டு மெய்ப்படுகிறது.

XXVI. அப். 6: 1—3 வாசி "கிரேக்கர் எபிரேயருக்கு விரோதமாய்..... .....ஸ்தேவான் மூ"

இதில் ஒரு முக்கியமான கருதாத ஒற்றுமை இருக்கிறது. இங்கே கிரேக்கர் எபிரேயருக்கு விரோதமாய், முறு முறுத்திருக்கிறார்கள். அதை நீக்கும்படி ஏழுபேர் நியமிக்கப்பட்டார்கள். அவர்களுடைய தேசத்தையாவது அல்லது சம்பந்தத்தையாவது குறித்து ஒன்றும் சொல்லப்படவில்லை. அவர்கள் உண்மையுள்ளவர்களா என்று மாத்திரம் சோதித்து ஏற்படுத்தியிருக்கிறார்கள். முறு முறுத்தவர்கள் கிரேக்கரானதினாலே இந்த ஏழுபேரும் அவர்கள் வகைப்பேராச்சேர்ந்தவர்களென்று தோன்றும். ஏனென்றால் அவர்கள் பேர்கள் எல்லாம் கிரேக்கப்பேர். ஆனால் லூக்கா இதைக்குறித்து யாதொன்றும் சொல்லுகிறதில்லை. இது நோக்கமில்லா ஒற்றுமையாகவே வருகிறது.

XXVII. 24: 26. "தனக்கு அவன் பணங்கொடுப்பானென்று நம்பிக்கையுள்ளவனாயிருந்தான்." பவுல் 17ம் வாக்கியத்தைச் சொல்லாவிட்டால், பேலிக்ஸ் ஒரு கைதியிடத்திலிருந்து பணம்வாங்கலாமென்று நம்பிக்கையாயிருக்கமாட்டான் என்று லாட்னர் சொல்லுகிறார். அதினாலே பேலிக்ஸ் தருமப்பணங்கள் இன்னம் செலவாயிருக்கமாட்டாது என்றாவது, பவுல் பரோபகாரியமாகக் காணப்பட்டபடியினாலே இவனுக்காகச் சிநேகிதர்கள் ஏற்படுவார்களென்றாவது நினைத்திருப்பான். மற்றப்படி பவுலின் தோற்றத்தினாலே இவனிடத்தில் பணமிருக்குமென்று நினைத்ததாகத் தோன்றுது. ஏனென்றால் பவுல் ரோமனென்று லீசியாவுக்குச் சொல்லப்பட்டபோது அவன் நம்பவில்லையே. 22: 28. ஆகையால் இதினாலே, பவுல் சொன்னதைவைத்துக்கொண்டு தான் பேலிக்ஸ் இப்படி நினைத்தானென்று தோன்றும். இது 23ம் வாக்கியத்தோடு நோக்கமில்லாமல் இசைகிறதல்லவா? 26ம் வாக்கியத்துக்குச் சரிபண்ணும்படியாகவா, 23ம் வாக்கியத்தை லூக்கா எழுதினான்?

XXVIII. அப். 27: 6 "இத்தாலியாவுக்குப் போகிற அலெக்சந்தரியாப் பட்டணத்துக்கப்பலே?"

10. "சரக்குக்கும்."

38. "கோதுமையை."

லூக்கா எழுதின சரித்திரத்துக்கும் வேதத்தின் உண்மைக்கும் அப். 27ம் அதிகாரம் நல்ல திருஷ்டாந்தமாயிருக்கிறதென்று எல்லாரும் அறிவார்கள். அதில் இந்த நோக்கமில்லா ஒற்றுமையும், மகா முக்கியமானதாயிருக்கிறது. பவுலே ஏற்றின கப்பலில் சரக்கும் போனதினாலே அது வியாபாரக் கப்பல் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் ஏற்றப்பட்ட சரக்கின் தன்மையை, நேராய்ச் சொல்லவில்லை. புசினிமித்தம் கப்பலை லகுவாக்கும்படியாகக் கடலில் எறியக்கூடிய சாமான்களை எல்லாம் எறிந்தபின், கோதுமையையும் எறியும்படி நேரிட்டதினாலேதான் சரக்கின் இனம் கோதுமை என்று சொல்ல நேரிட்டது. கப்பலை அதிகமாய் லேசாக்க, அவசியம் நேரிடாவிட்டால், கோதுமை என்ற பேச்சுவந்திருக்கவேமாட்டாது. ரோமாபுரிக்கு அலெக்சந்தரியாவிலிருந்துதான் தானியவகை போகும் என்பது, எல்லாருக்கும் பிரத்தியட்சமாய்த் தெரிந்த காரியம். இப்படிப் போகிற கப்பலிக்குறித்து அந்தக் கப்பல்கள் இக்காலத்து யுத்தக்கப்பல்களைப்போல் பெரிதாயிருந்தது. 6ல் மீறுப் பட்டனத்தில் கப்பல் மாற்றினதாகச் சொல்லுவதும்; இன்னம் சில வாக்கியங்களுக்குப்பின் சரக்கேற்றின கப்பலென்பதும்; 38ல் கோதுமைக் கப்பலென்பதும்; 6ல் அலெக்சந்தரியாக் கப்பலென்பதற்கும், இத்தாலியா தேசத்துக்குப் போகிற கப்பலென்பதற்கும், இத்தாலியாவுக்குப் போகிற கப்பலென்பதற்கும் ஆச்சரியமாய் இசைகிறது. இதை ஒருவன் உறபத்தி செய்வது எவ்வளவும் நிமித்தமில்லாததும் கூடாததுமான காரியமாயிருக்கிறது. கப்பல் மாற்றினதும், புசலடித்ததும், புசலினால் வந்த நஷ்டங்களும், மறுக்கப்படாத சத்தியமென்று விளங்குமானால். அத்தோடு சேர்ந்த மற்றக்காரியங்களும் அப்படியேஇருந்திருக்கவேண்டும். திருஷ்டாந்தமாக, மோசம் வருமென்று பவுல் முன்னறிவித்தது. 10; அதின் மத்தியில் தப்பித்துக்கொள்ளலாமென்று முன்னறிவித்தது. 22; தேவனுதன் காணப்பட்டது. 23: 34. மூதலானவைகளே. மேற்சொல்லிய மெய்யான சங்கதிகளோடு, இந்தப் பொய்ச் சங்கதிகளையும், மகா கபடாயும் சூட்சமாயும் ஒருவன் கலந்து எழுதிப்போட்டானென்று நடபடியை வாசிக்கிற ஒருவரும் சொல்லமாட்டார்கள். ஆகையால் இரண்டும் ஒன்றுபோல நிசமாயிருக்கவேண்டும். அப்படியானால் இதிற் காட்டிய தீர்க்கதரிசனங்களும் அற்புதங்களும் மெய்யென்று விளங்கும். இவைகளால் முத்திரையிடப்படிருக்கிற ஆகமங்களும் நித்ய ஆகமங்களென்று ரூபகாரப்படும்.

பஞ்சகால பிரசங்கக்குறிப்பு.

"அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும்."

மத். 6: 11.

நமது வயல்கள் தானியத்தாலும், பணைகள் பதனீராலும், ஜனங்கள் தண்ணீராலும் நிரம்பி எப்பக்கத்திலும் ஏராளமான ஆகாரம் காணப்படும்போது நாம் அச்செழிப்பையிட்டு அக்களிப்பாயும் மனரம்மியமாயுமிருக்கிறோம். ஆனால் செழிப்பான காலமோ சோதனைகாலம். அப்போது நாம் தேவனை மறந்து பெருமைக்கு இடங்கொடுக்க ஏதுவாயிருக்கிறது. திருஷ்டாந்தமாக, சோதோமின் பாவங்களைக் கவனியுங்கள். எசே. 16: 49.

நாம் விதைக்கும் விதை தளாயும், மேய்ச்சலுள்ள வெளி நிலங்கள் பாழாயும், கிணறுகள் வற்றினதாயும் போய், பிச்சைக்காரர் கூட்டங்கூட்டமாய்த் திரியும்போதுதான் நாம் தேவனண்டைக்குத் திரும்பி "பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை இன்று எங்களுக்குத் தாரும்" என்று ஊக்கமாய்ச் செபிக்கிறோம்.

I. இந்த வாக்கியத்தில் நாம் ஆகாரத்துக்காக தேவனையே நோக்கவேண்டுமென்று நமது இரட்சகர் போதிக்கிறார்.

1. அவரே தாவக்கத்தில் அதையுண்டாக்கினவர். அவர் நிலத்தை ஆசீர்வதித்தார். ஆதியாகமம் 1: 11, 12. அவரே ஒவ்வொரு தேசத்துக்கும் அதற்கேற்ற ஆகாரத்தைக் கொடுத்துவருகிறார். இந்தியாவுக்கு நெல், இங்கிலாந்துக்குப் பொன் நிறமான கோதுமை, மற்றநாடுகளுக்கு திராட்சச்செடி, ஒலிவமரம், தெங்கு, வாழைமுதலியவைகளைக் கொடுத்திருக்கிறார்.

அவருடைய நன்மைகள் எவ்வளவு ஏராளமானவை. சங். 107: 8—15 பார்க்க.

2. அவர் அதை (ஆகாரத்தைக்) கொடுத்துக்கொண்டே வருகிறார். (இஸ்ரவேலர் மன்னாவினால் போஷிக்கப்பட்டதுபோலும், கிறிஸ்தவானவர் 5000 பேரைப் போஷித்ததுபோலும்) அற்புதவகையாயல்ல, கால மழையைப் பெய்யப்பண்ணுகிறதினாலும், நமது சூரியனை உதிக்கச்செய்கிறதினாலும் தானியத்தை விளைவிப்பதினாலேதான்.

அவர் சிலவேளைகளில் அதைக் கொடாதபடி நிறுத்திப்போடுகிறார். அப்படியே அவர் இஸ்ரவேலருக்கும் செய்தார். உபா. 11: 13—17.

அவர் ஏன் ஆகாரத்தை நிறுத்திப்போடுகிறாரென்றால், நாம் அவரில் நம்பிக்கையாயிருக்கவும் அவரை நோக்கிச் செபம்பண்ண நம்மை உணர்த்தவும், பசியாயிருக்கிறவர்களுக்கு உதாரம் காட்டவும் நமக்குப் போதிக்கும்படியாகவே அவர் அப்படிச் செய்கிறார்.

II. இப்போது சீவ அப்பத்தைப் பற்றிப் பேசவேண்டியதிருக்கிறது. "நானே சீவ அப்பமென்று" யோவான். 6: 48—51 ல் இயேசுவானவர் சொல்லுகிறார்.

சரீரத்தைவிட ஆத்துமா முக்கியமாயிருக்கிறதுபோல இந்த அப்பமும் மிகவும் விசேஷித்தது.

1. நாம் அவரை விசுவாசத்தினால் அறிந்து, நேசித்துப், பின்பற்றி, அவரில் சார்ந்துகொள்வதே அவரைப் புசிப்பதாம். தேவகுமாரன் பரிசுத்தமும், இதற்கேதுவாகவே அன்பும், சாந்தமும், எளிமையும், தைக்கமும் நிறைந்த மனிதனுமானார்.

2. உலகத்துக்கு கிறிஸ்துவையேயன்றி வேறு ஜீவ அப்பமில்லை. உலகத்தில் அநேக இடங்களில் இந்த ஆத்தும பஞ்சமிருக்கிறது.

படிப்பினை.

இஸ்ரவேலர் அதிகாலையில் எழுந்து அன்றன்றுள்ள மன்னாவைச் சேர்த்து சாப்பிட்டதுபோல கிறிஸ்தவர்களும் தினந்தோறும் காலையில் கிறிஸ்துவாகிய பரம மன்னாவைப் போஷிக்கவேண்டும்.

கிறிஸ்தவர்கள் மற்றவர்களையும் போஷிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

வி. ஹா.

மகமது ஜீவிய விருத்தாந்தம்.

(தொடர்ச்சி.)

மகமது 40 வயசாயிருக்கையில் இந்தத் தரிசனம் அவருக்குக் காணப்பட்டது. ஹோரா என்னும் குகையில் அவர் உபவாசித்துச் செபஞ் செய்துகொண்டிருக்கையில் சடுதியாய் ஒரு ஒளி அவர்மேல் பிரகாசித்ததாயும், ஒரு தேவதூதன் காணப்பட்டு அச்சரங்கள் நிறைந்த ஒரு பட்டித் துண்டை அவருக்குக் காட்டி அதை வாசிக்கும்படிக் கற்பித்ததாயும், தமக்கு வாசிக்கத் தெரியாதென்று சாதித்தும் அதை கேளாமல் உன்னதமானவரின் நாமத்தில் திரும்பத் திரும்பக் கட்டளையிட்டதாயும், சடுதியாய் அவர் மனதில் பரம வெளிச்சம் பிரகாசித்ததால் அவர் தூதனுடைய சுருளில் பதிந்திருந்த வார்த்தைகளை லேசில் வாசித்ததாயும் அதில் தேவ கட்டளைகள் அடங்கியிருந்ததால் அதைக் கோரானில் எழுதினதாயும் சொல்லுகிறார்.

மகமது தீர்க்கதரிசியாக ஒப்புக்கொள்ளப்பட்டதற்கு முன் அவருக்குத் தொடுத்த கேரிட்ட கொடிய துன்பங்களைப்பற்றி இப்போது சொல்லப்போகிறோம்.

சில காலம் மகமது தமது குடும்பத்திலும் சூழ இருந்தவர்களுக்குள்ளும் தமது உபதேசங்களைப் போதித்துவந்தார். அவருடைய மனைவி அவரில் உறுதியான விசுவாசமுடையவளாயிருந்தாள். லேய்ட் என்னப்பட்ட அடிமையும் அவரை விசுவாசித்துச் சுயாதீனஞ்செய்தற்கு இடம் பெற்றாள். வேறு 50-60 பேரும் அவருடைய ஸ்திதியினால் ஏவப்பட்டு அவர் ஒன்றான தேவனுடைய தீர்க்கதரிசியென்று ஒப்புக்கொண்டார்கள். அவர்களில் முதியானவர்கள் ஏழைகளும் அடிமைகளுமாயிருந்தார்கள். மகமதுவின் கோத்திரத்தாராகிய அராபியர் வெவ்வேறு கோத்திரங்களாகப் பிரிந்திருந்தார்கள். அவரைச் சேர்ந்த கூட்டத்தார் அவருடைய காரியத்தைக் கேள்விப்பட்ட பிறகு பிரதிகூலம் செய்யாமல் அம்மட்டிலேயே இருந்துவிட்டார்கள். சிறு பிள்ளைமுதல் தாங்கள் அறிந்திருந்த ஒருவனைத் தங்களுக்குப் போதகராக ஒப்புக்கொள்ள அறிந்திருந்த ஒருவனைத் தங்களுக்குப் போதகராக ஒப்புக்கொள்ள அவர்கள் இயற்கையாய் மனமற்றவர்களாயிருந்தார்கள்.

அவருக்கு எதிர் கூட்டத்தார் அவரைத் தீர்க்கதரிசியாக ஒப்புக்கொள்ளாமலிருந்தது மாத்திரமல்ல, அவரைப் பரியாசம்பண்ணவும் அவர் பேரில் மூர்க்கங்கொள்ளவும் தலைப்பட்டார்கள்.

இருகட்சிக்காரரும் தாம் சொல்லக்கேட்கும்படி கூடிவரச்செய்தார். அவர் பேசிமுடிக்கிறதற்கு முன்னடியே அவருடைய சொந்தச் சிறிய தகப்பனாகிய அபூலகாத்தென்பவர் அவருடைய அகந்தைக்காக அவரை நிந்தித்து அவர்மேல் போம்படி ஒரு கல்லைத் தூக்கினார். மகமது ஒன்றுக்கும் பயப்படாமல் தமது ஊழியத்தை ஏற்றுக்கொள்ளாதினிமித்தம் அவர்மேலும் அவர் பெண்சாதிமேலும் நித்தியகாலத்துக்குச் செல்லத்தக்க ஒரு தண்டனையைத் தைரியமாய்க் கூறினார். அந்தக் கூட்டம் குழப்பத்தோடு கலைந்தது. மகமது தைரியத்தையும் விடாமுயற்சியையும் உறுதியாய் பிடித்திருந்தார். இரண்டாந்தரமும் ஒரு கூட்டம் வைத்தபோது அதில் உத்தேசம் 40 பேர்வரையும் கூடியிருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் மகமது எழுந்து பின் வருமாறு சாரம் பேசினார்.

"நான் இப்போது உங்களுக்காகச் செய்கிறதிலும் அதிக நல மானவைகளைத் தன் இனத்தாருக்குச் செய்யக்கூடிய மனிதனை நான் அறியேன். நான் உங்களுக்கு இந்தச் சீவனிலும் இனி வரப்போகிற சீவனிலும் சுக வாழ்வுண்டாகும்டி கோருகிறேன். சாக்ஷாத் கடவுள் உங்களை அவரண்டை அழைக்கும்படி கட்டளை கொடுத்திருக்கிறார். உங்களில் யார் எனக்குப் பிரதானியாவான்" என்றார். அப்போது கூடியிருந்த அனைவரும் மிகுந்த பிரமிப்போடு அமரிக்கையாயிருந்தார்கள். அப்புத்தாலெப் என்பவனுடைய குமாரனாகிய அலி, என்னப்பட்ட ஒரு வாலிபன் ஊக்கத்தோடே ஆ! கடவுளின் தீர்க்கத்தரிசியே நான் உமது பிரதானியாயிருப்பேனென்றும் உம்மை எதிர்க்கத் துணிபவரின் பற்களை நானே தகர்த்துக், கண்களைப் பிடுங்கி, வயிற்றைக் கிழித்துப் போடுவேனென்றும் சொன்னான்.

பஞ்சம்.

தென்மேற்குமழை அங்கங்கே பலவிடங்களில் பெய்திருக்கிறதாக சந்தோஷச்செய்தி வந்தெட்டியிருக்கிறது. அதினால் இப்போதிருக்கிற மிகுந்த கஷ்டம் சற்றுத்தணியுமென்று நம்ப ஏதுவுண்டு. திருவாங்கூரிலிருந்து கோட்டை ஒன்றுக்கு 9, 10 ரூ யாக ஏராளமான நெல் வாங்கிவந்திருக்கிறது. இந்த அனுகூலங்களுக்காக கர்த்தருக்குத் தோத்திரமுண்டாவதாக.

யுத்தம்.

சென்ற வாரங்களில் ருஷியரும் துருக்கியரும் யாதொரு முயற்சியும் செய்யவில்லை. ருஷியருக்கு அதிகமான தளங்கள் வந்து கூடியிருக்கிறது. சமீபித்து வந்தெட்டிய செய்தியில் இருகட்சிக்காரரும் ஒரு பெரும்போர் புரிகிறார்களென்றும் அதில் ருஷியர் பிளவ்னா என்னும் பட்டணத்தை மீண்டும் கைப்பற்றிக்கொள்வதற்கு மிகுந்த வைராக்கியத்தோடு கடைப்பிடியான பிரயத்தனஞ் செய்கிறார்களென்றும் துலங்குகிறது. ருஷிய சக்கிரவர்த்தி தமது சேனையுடன் பிளவ்னா பட்டணத்துக்கு எதிராக பாளையமிறங்கியிருக்கிறார். செப்ற்றெம்பர்மீ 18உ வரையுள்ள சமாச்சாரத்தின்படி, ருஷியர் ஆறுதினமாக பலமாய் பீரங்கிப்பிரயோகஞ்செய்து கோட்டைக்குச் சமீபமாயுள்ள முக்கியமான மலைச்சிகரங்களில் போய்நின்று அதை தாக்கியதின்பேரில் சில சில இடங்களில் திறப்புகள் உண்டானதாகத் தெரியவருகிறது.

பால்கன் குன்றுகளுக்கிடையே உள்ள சிப்காக் கணவாயை ருஷியர் பிடித்துக்கொண்டு அதின்பேரில் சூலிமான்பாஷாவும் அவரைச்சேர்ந்த துருக்கியரும், செய்த வீரமான பிரயத்தனங்கள்யாவையும் வியர்த்தமாக்கிவிட்டார்கள். இந்தக்கணவாயை, மீளவும் பிடித்துக்கொள்வதற்கு, இவர் வேண்டிய விதங்கள் வைத்துப்பார்த்தும், சித்தியடையவில்லை.

மொத்தமாய் ருஷியர் முன்னோக்கிச்சென்று அவர்களுக்கெதிரே வந்து போர் கலக்கும் இராணுவங்களை தங்களுடைய பெரும்படைகளால் மேற்கொள்ளக்கூடுமென்று சொல்லியதுபோல் காட்டுகிறார்கள்,

புருஷியரும் ஆஸ்திரியரும் ருஷியர் பக்ஷம் சகதாபககுறிப்புகள் காட்டுகிறார்கள். இது ருஷியருக்குத்திடன் கொடுக்குமென்பது நிச்சயம். இங்கிலிஷ்க்காரர் அமைதியாய் இருக்கிறார்கள். அவர்கள் கவனமெல்லாம் இந்தியாவின் பஞ்சத்தை நோக்கினதாயிருக்கிறது. இராணி அம்மாளவர்களும், ராஜ வம்சத்தார்களும் ஆலோசனைக்கர்த்தாக்கள் பிரபுக்களும் பஞ்ச நிவர்த்திக்கென்று பெரும் பெரும் நன்கொடைகளை ஈந்து தங்கள் அனுதாபங்களைக் காண்பித்திருக்கிறார்கள்.

சுவிசேஷ பிரபல்லிய சங்கத்தைச் சோந்த திருநெல்வேலி நாட்டு சர்ச் கவுண்சில் என்னும் ஆலோசனைச் சங்கத்து அக்கிராசனாதிபதி மகாகனம் கால்வேல் அத்தியக்ஷரவர்களும், சுவிசேஷ பிரபல்லியத்து சென்னை அத்தியக்ஷ ஆதீனக்கமிற்றியின் சம்பிரதி கனம் டாக்ற்றர் ஸ்ற்றிரான் ஐயரவர்களும், ஐரோப்பிய குருமாரும், சுதேச குருமாரும், சபை அங்கத்தாரும், சபையாரும் சென்ற சூலைமீ 10-ம்உ முதல் 13-ம்உ வரையுமுள்ள நாட்களில் நாசரேத்தூரில் கூடி திருச்சபையின் விர்த்திக்கென்று நடப்பித்த காரியங்களை சுதேச கிறிஸ்தவர்களின் இகபர நன்மைக்காக இதனடியில் எழுதிப் பிரசுரஞ்செய்ய ஆசையானோம்.

இந்நாட்களில் நடந்த காரியங்களெல்லாம் சர்ச் கவுண்சல் சம்பிரதி கனம்: ஜே. எல். உவையற்றையரவர்கள் ஒழுங்குபண்ணி பிரசித்தப்படுத்தியிருந்த முறைப்படி நடந்தேறின. ஒவ்வொரு நாள் காலையிலும் மாலையிலும் தேவாராதனையும் பிரசங்கமும், குறித்த முறைப்படி சுதேச குருமாரால் நடப்பிக்கப்பட்டது.

10-ம்உ செவ்வாய் காலையில் ஆராதனை நடந்தது. கனம் சாமுவேல் ஐயர் "நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவிசெய்ய வேண்டும்" (அப். 16: 9.) என்ற வசனத்தின்பேரில் முதல் பிரசங்கம் செய்தார்.

பின் மிஷன் ஆசாமிகளுடைய வருஷாந்தர வேத பரீட்சை நடந்தது. இப்பரீட்சையின் ஒரு பாகமாகிய எழுத்துப் பரீட்சை சூன்மீ நடந்தேறிற்று. பரீட்சைக்குக் குறிக்கப்பட்ட பாடங்களாவன.— 1-ம் 2-ம் வகுப்புக்கு 1 கொரிந்தியர் நிருபம், விசுவாசப்பிரமாணவிளக்கத்தில்—"தேவனாகிய பிதாவை: இயேசுக்கிறிஸ்துவை, பரிசுத்தாவியை" என்கிற பாகங்கள்; மனப்பாடம்:—எபேசியர் நிருபம் முதல் 3 அதிகாரங்கள், 3-ம் வகுப்புக்கு மோசேயின் ஐந்து ஆகமங்களிலுள்ள சரித்திரங்கள் இவைகளின்பேரில் கனம் ஜே. எல். உவையற்றையரவர்களும், கனம். றி. ஆடம்சன் ஐயரவர்களும், கனம். ஜி. பில்லிங் ஐயரவர்களும் கேள்விபோட்டு பரீட்சைசெய்தவர்கள். பரீட்சையின் மீதிப்பாகமாகிய பிரசங்கப் பரீட்சையும் மங்க்ற்றன் வெகுமதிப் பரீட்சையும் நாளது தேதியில் நடந்தது. ஆலோசனை சங்கத்து எக்செகற்றிவ் கமிற்றிமார் பரீட்சை நடத்தினார்கள். இடையன்குடி, இராதாபுரம், முதலூர், கிறிஸ்தியானகரம், நாசரேத், சாயற்புரம், புதியம்புத்தூர், நாகலாபுரம், ராமநாதபுரம், தூத்துக்குடியாகிய மிஷன் சேகரங்களிலிருந்து பரீட்சைக்கு வந்து கூடின ஆசாமிகள் 135 பேர். பரீட்சை வரலாறு:—

1-ம் 2-ம் வகுப்புக்கு அப். 9: 6-ம், 3-ம் வகுப்புக்கு பரி. லூக். 10: 37-ம், பிரசங்சத்திற்காகக் கொடுத்த வாக்கியங்கள். பிரசங்க ஆய

த்தத்திற்கு 20 நிமிஷமும் எழுதுவதற்கு 15 நிமிஷமும் பரீட்சைக்குக் குறித்த நேரம். சோதனையின் முந்தின பாகத்தில் போதுமான சீட்டுப் பெறாதவர்கள் இப்பரீட்சைக்கு வர இடம்பெறாததினால் பரீட்சைக்கு வந்தவர்கள் 34 பேர். இதற்குப்பின் மங்ற்றன் பரீட்சை நடந்தது. பரீட்சை கொடுத்தவர்கள் 18 பேர். இப்பரீட்சைக்கு மூன்று பொதுக் கேள்விகள் கொடுக்கப்பட்டன. அவையாவன,

1. மற்ற மார்க்கங்களைப்போல கிறிஸ்துமார்க்கமும் ஒரு திவ்விய மார்க்கந்தானென்று சொல்லுகிற அஞ்ஞானிக்குச் சொல்லத்தக்க நியாயங்களென்ன?

2. இங்கிலாந்து திருச்சபையில் வழங்குகிற செப ஆராதனைகளும் முறைமைகளும் இத்தேசத்துத் திருச்சபைக்கும் ஏற்றதென்றுகாட்டுக.

3. எசேக்கியா ராஜாவின் சரித்திரத்திலுள்ள முக்கிய விசேஷங்களை எழுதுக.

சாயந்தரம் 7 மணிக்கு ஆராதனை நடந்தது. கனம் மாசில்லாமணி ஐயர் "கிறிஸ்து ஏசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கைநோக்கித் தொடருகிறேன்" (பிலிப். 3: 14) என்ற வசனத்தின்பேரில் பிரசங்கம் செய்தார்.

11-ம்உ. புதன் காலை 7 மணிக்கு ஆராதனை நடந்தது. அதில் கனம் வேதமுத்து ஐயர், பிலிப்புப்பட்டணத்தில் பரி. பவுல் நடப்பித்த காரியங்களைக்கொண்டு தேவ பணிவிடைக்காரர் படிக்கவேண்டிய போதனை இன்னவையென்றும் ஜெபமே அவர்களுக்கு விசேஷித்த ஆயுதமென்றும் (அப். 16: 11—40) காட்டி பிரசங்கம் செய்தார். ஆராதனைக்குப்பின் பரீட்சையில் தேறின ஆசாமிகளுக்கு வெகுமதிகள் கொடுக்கப்பட்டன.

I உவாத்திமார் வகுப்பு வெகுமதிகள்.

1-ம் வகுப்பு.

1-ம்	வெகுமதி லாசறு உபா.	இடையன்குடி.	ரூ 20.	சீட்டு	182
2-ம்	,, காபிரியேல் உபா.	இராதாபுரம்.	,, 16.	,,	168

2-ம் வகுப்பு.

1-ம்	வெகுமதி மா. மனுவேல் உபா.	இடையன்குடி.	ரூ 15.	சீட்டு	181
2-ம்	,, கோவிற்பிள்ளை உபா. / கொர்நேலியு ,,	நாசரேத். / இடையன்குடி.	ரூ 10.	,,	165

3-ம் வகுப்பு.

1-ம்	வெகுமதி பெ. வேதமுத்து உபா.	இடையன்குடி.	ரூ 7.	சீட்டு	91
2-ம்	,, தானியேல் ,, / அருளானந்தம் ,,	இடையன்குடி.	ரூ 5.	,,	82

மங்ற்றன் உபதேசிமார்.

1-வது.	மங்ற்றன் ஆ. சத்தியநாத உபா.	இடையன்குடி.		சீட்டு	214
2-வது.	,, ஆபேல் உபா.	,,		,,	190

மங்ற்றன் வெகுமதிகள்.

1-ம்	வெகுமதி திரவியம் உபா.	இராதாபுரம்.	ரூ 15.	சீட்டு	173
2-ம்	,, யோவான்நாயகம் உப.	புதியம்புத்தூர்.	,, 12.	,,	172

வெகுமதிகள் கொடுத்தபின் கனம் டாக்ற்றர் ஸ்றிரான் ஐயரவர்கள் வெகுமதி பெற்றவர்களும் பெறாதவர்களுமான ஆசாமிகளுக்கு அவர்கள் கற்ற கல்வியினால அடைந்த அறிவின் பயனையும், அவர்கள் அதை உபயோகிக்கவேண்டியதையும் குறித்து ஊக்கமும் சமய உசிதமுமான நல்ல போதனை சொல்லி கூட்டத்தை முடித்தார்கள்.

11 மணியில் திருச்சபையின் சீர் பெருகும்படி கூடும் கூட்டமாகிய சர்ச் காங்கிரெஸ் என்னும் கூட்டம் கூடிற்று. இதின் முதல் உற்சவம் போனவருஷம் இடையன்குடியில் கூடிற்று. இது 2-வது உற்சவமாம். அத்தியக்ஷரவர்கள் செபம் செய்து பின்பு இவ்வித உற்சவங்களின் பிரயோசனத்தையும் பயனையும் எடுத்துரைத்து கூட்டத்தை ஆரம்பித்தார்கள். பின்வரும் காரியங்களின்பேரில் எழுதி ஆயத்தம் செய்த 3 பிரபந்தங்கள் வாசிக்கப்பட்டன.

1-வது "மிஷன் ஆசாமிகளுக்குள் நடக்கும் விவாகங்களில் நேரிடும் செலவுகளில் முக்கியமாய் நகைகள் விஷயத்திலும் ஆடம்பர விஷயத்திலும் செலவிடப்படும் செலவுகள் மிதமிஞ்சின செலவுகளா? அல்லவா? அவைகள் அப்படி மிதமிஞ்சின செலவுகளேயானால் அவைகளைச் சுருக்கி மட்டுத்திட்டப்படுத்துவதற்கு உமக்குத் தோன்றுகிறபடி கையாடவேண்டிய எத்தனங்கள் என்ன?" என்பது.

இது எழுதினவர் நாசரேத கனம் ஏசடியான் ஐயர்.

2-வது "கிறிஸ்தவர்கள் பொய்ச் சாட்சி சொல்லும் வழக்கத்தை என்னென்ன வகையாய் நிறுத்தலாம்" என்பது.

இது எழுதினவர் தூத்துக்குடி மிஸ்ற்றர் ஆ. தாவீது.

3-வது "சுதேச சபைகள் சுயபரிபாலன வகையாய் ஆதரிக்கப்படுவது அவசியமாயிருப்பதால் அந்த வகை நடந்தேறுவதற்கு என்னென்ன நல் முயற்சி செய்யவேண்டும்" என்பது.

இது எழுதினவர் இராமநாதபுரம் கனம் தேவசகாயம் ஐயர்.

இப்பிரபந்தங்கள் இருபது நிமிஷ நேரத்துக்குள் வாசித்து முடிக்கத்தக்க அளவாய் எழுதியிருக்கவேண்டியதென்ற ஒழுங்குப்படி எழுதி வாசிக்கப்பட்டன. குறித்த பொருள்களின்பேரில் எழுதியிருந்த பிரபந்தங்கள் வெகு திறமையாய் எழுதப்பட்டிருந்தன. அவைகளில் ஒவ்வொன்றைக்குறித்தும் மும்மூன்று பேர் ஆளுக்கு பப்பத்து நிமிஷ நேரம் பேசும்படி குறித்திருந்தது. இவர்களும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களையும் எண்ணங்களையும் தெளிவாய் வெளியிட்டுப் பேசினார்கள். இதில் விவாகச் செலவைக்குறித்து எழுதியிருந்த முதல் பிரபந்தம் பாஷை நடை சிறப்பாயும், விபரமாயும், தெளிவாயும், வாசிக்கக் கேட்டவர்களுக்கு எக்களிப்பைக் கொடுக்கத்தக்கதாயுமிருந்தது. அது திருநெல்வேலி நாட்டாருக்குள் நடக்கிற விவாகங்களில் புராதன, நவீன ஆசாரங்கள் வழக்கங்களைக் குறித்து விரிவாயும் நேர்த்தியாயும் எழுதியிருந்தது.

சர்ச் காங்கிரெஸ் என்ற சங்கக்கூட்டம் வாய்க்குமோ, வாய்க்காதோ என்று அறியும்படி இடையன்குடியில் முதல் உற்சவம் வைக்கப்பட்ட நோக்கமாகவே இந்த இரண்டாம் உற்சவமும் வைத்திருந்தது. ஆனால் கூட்டத்துக்கு வந்த சங்கத்து அங்கத்தாருடைய தொகையையும், ஸ்திரீகளின் தொகையையும் எழுதி வாசிக்கப்பட்டதும் பேசப்பட்டதுமான காரியங்களைக் கேட்டு, கூடின சகலரும் காட்டின பிரியத்தையும் சந்துஷ்டியையும் கவனிக்கும்போது, கருதிய நோக்கம் வாய்த்ததென்றும், சங்கம் பரீட்சை நிலையைக் கடந்து வளர்ந்தோங்குமென்றும் சந்தேகமறச் சொல்லலாம். சர்ச் கவுண்ச

லாரும் சபையாரும் வருஷார்த்தரம் கூடும் பொதுக்கூட்டங்களில் சர்ச் காங்கிரெஸ் என்ற இக்கூட்டம் இல்லாமற்போனால் கூட்டங்கள் குறைவுள்ளவைகளாகவே எண்ணப்படும்.

புதன் சாயங்தரம் 5 மணிக்கு கைம்பெண் சங்கம் கூடினது. சங்கத்தின் சம்பிரதி கனம் ஆடம்சன் ஐயரவர்கள் சங்க ரிப்போட்டு வாசித்தார்கள். அதினால் சங்கத்துப் பொக்கிஷம் திருப்திகரமான நிலைமையிலிருக்கிறதென்றும், காளது வரை ரூ 7000 கவர்ண்மென்றில் வட்டிக்கு விட்டிருக்கிறதென்றும், செலவைவிட வருமானம் அதிகமென்றும் கைம்பெண் சங்க கையொப்பக்காரரின் தொகை காளது வருஷத்தில் மிகவும் அதிகரித்திருக்கிறதென்றும் தெரியவந்தது. அதினால் சங்கத்தாருக்கு திர்பதியும் சந்தோஷமுமுண்டாகிறது. சங்கத்தின் நோக்கத்தையும் அதின் கலங்களையும் குறித்து கனம் ஜி. ஏசடியான் ஐயரும், கனம் யோ. ஞானஒளிவு ஐயரும் பேசினார்கள். மேற்படி சங்கத்துக்குச் சேராதவர்களும் ஒருவிசை சேர்ந்து பின் தவறிப் போனவர்களுமான மிஷன் ஆசாமிகளுடைய சமுசாரங்கள் தங்கள் புருஷருடைய காலத்துக்குப்பின் அடையும் வருத்தங்களின்னவையென்று சில திர்ஷ்டாந்தரங்களினால் எடுத்துரைத்து சங்கத்துக்குச் சேரவேண்டியது முக்கிய அவசியமென்று கனம் ஞானஒளிவு ஐயர் காட்டினார். சங்கம் ஜெபத்தோடே முடிந்தது.

மாலை 7 மணிக்கு ஆராதனை நடந்து கனம் பெரியநாயகம் ஐயர் "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" பரி. மத். 5: 13-ன் பேரில் பிரசங்கம் செய்தார்.

சூலை 12வ வியாழன்: இக்காளில் கான்வெரஸ் (Devotional Conference) என்னும் சபையின் பக்திவிர்த்திக்கென்று கூடும் சங்கமும் ஜெபக்கூட்டமும் கூடினது.

காலை 7 மணியில் ஆராதனை நடந்தது. "விசுவாசித்தேன், ஆகையால் பேசினேன்" (2 கொரி. 4: 13.) என்ற வாக்கியத்தின் பேரில் மகா கனம் கால்வேல் அத்தியக்ஷரவர்கள் பிரசங்கம் செய்தார்கள். 350 பேருக்கு பரிசுத்த நற்கருணை பரிமாறப்பட்டது. பின் 11 மணியில் சங்கம் கூடினது. அக்கிராசனாதிபதி மகாகனம் அத்தியக்ஷரவர்கள் ஜெபம் செய்து தேவபக்தியின் உற்பத்தியையும் அது ஒருவரிலிருந்து ஒருவரில் பிறக்கும் வகையையும் குறித்து உபந்யாசம்பண்ணி, கூட்டத்தைத் தவக்கினார்கள். குடும்பத்திலும், ஆலயத்திலும், உலகத்திலும் தேவ பணிவிடைக்காரரான சுதேச குருமாரும் மிஷன் ஆசாமிகளும் தேவபக்தியை விளங்கக்காட்டும் விதத்தைக்குறித்து 3 சுதேச குருமார் எழுதியிருந்த சுருக்கப் பிரபந்தங்கள் வாசிக்கப்பட்டன. அப்பிரபந்தங்களாவன:—

1-வது. "தேவ பணிவிடைக்காரரான சுதேச குருமாரும் மிஷன் ஆசாமிகளும் தம்தம் குடும்பத்தில் தேவபக்தியை விளங்கக் காட்டும் விதம் என்ன?" என்பது.

இது எழுதினவர் தூத்துக்குடி கனம் ஆ. சுவாமிதாசன் ஐயர்.

2-வது. "தேவ பணிவிடைக்காரரான சுதேச குருமாரும் மிஷன் ஆசாமிகளும் ஆலயத்தில் தேவ பக்தியை விளங்கக் காட்டும் விதம் என்ன?" என்பது.

இது எழுதினவர் இடையன்குடி கனம் வே. ஞானமுத்து ஐயர்.

3-வது. "தேவ பணிவிடைக்காரரான சுதேச குருமாரும் மிஷன் ஆசாமிகளும் உலகத்தில் தேவ பக்தியை விளங்கக் காட்டும் விதம் என்ன?" என்பது.

இது எழுதி வாசித்தவர் பொதியம்புத்தூர் கனம் யோ. ஞானஒளிவு ஐயர்.

ஒவ்வொரு பிரபந்தமும் வாசித்தபின் வாசித்த காரியத்தின்பேரில் குறிக்கப்பட்ட இரவிரண்டுபேர் பேசினார்கள். அதன்பின் பிரபந்தம் வாசித்தவர் தாம் வாசித்ததில் கண்ட நன்மைகளுக்காக ஜெபஞ்செய்தார். கூட்டத்தின் முடிவில் கனம் டாக்டர் ஸ்தரான் ஐயரவர்கள் முடிவுரையாக சமயத்திற்கேற்ற சுருக்க புத்திமதி சொன்னார்கள். பின் மகாகனம் அத்தியக்ஷரவர்கள் ஜெபஞ்செய்து கூட்டத்தை முடித்தார்கள்.

மாலை 7 மணிக்கு ஆராதனை நடந்தது. கனம் எஸ். ஜி. ஏசடியான் ஐயர் "உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள், அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்." நீதி. 3: 6 என்ற வசனத்தின்பேரில் பிரசங்கம் செய்தார்.

சூலை 13வ வெள்ளி:—இந்நாள் சர்ச் கவுன்சல் என்னும் ஆலோசனைக் கூட்டத்துக்காகக் குறித்த நாள். இந்நாளிலும் காலை 7-மணிக்கு ஆராதனை நடந்தது. மகாகனம் அத்தியக்ஷரவர்கள் "பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடுகிறேன். (பிலிப். 3: 13) என்ற வசனத்தின் பேரில் பிரசங்கம் செய்தார்கள். கவுன்சல் அங்கத்தாருக்கு பரிசுத்த நற்கருணை பரிமாறப்பட்டது. பின் வழக்கம் போல 11-மணிக்கு நாசரேத் ஆலயத்திலதானே ஆலோசனைச் சங்கத்தின் காரியாதிகளை நடப்பிக்கும்படி ஆலோசனைச் சங்கம் கூடிற்று. மகாகனம் அத்தியக்ஷரவர்களும் ஐந்து யூரோப்பிய குருமாரும் 21 சுதேச குருமாரும் 35 சபை மெம்பர்களுமாக 62 பேர் சங்கத்துக்குக் கூடினவர்கள். இது வரையில் ஆலோசனைக் கூட்டம் கூடினதில் இதுவே தொகையில் பெரிய கூட்டம். இது சுவிசேஷ பிரபல்லிய சங்கத்து திருநெல்வேலி திருச்சபையின்முதல் அத்தியக்ஷரவர்கள் அக்கிராசனாதிபதியாயிருந்து நடத்தின முதல் கூட்டமாம். மேலும் அச்சங்கத்து, சென்னை அத்தியக்ஷ ஆதீன கமிற்றியின் சம்பிரதி கனம் டாக்டர் ஸ்தரான் ஐயரவர்கள் வந்திருந்து சங்கத்துக்கு அனேக நன்மைகளை ஏவி எழுப்பிவிட்டார்கள். இவை இரண்டும் கவனிக்கத்தக்க விசேஷங்களாம்.

சங்கத்து அங்கத்தாரில் 9 பேர் மாத்திரம் குடும்பத் தொல்லைகளினால் கூட்டத்துக்கு வரத் தடைப்பட்டுப்போனார்கள். சங்கத்துக்கு காரியாதிகளைக் கவனிக்கும்போது திருச்சபையின் விருத்தியையும் சீரையும் குறித்து சபையாருக்கு நல்ல அபிமானம் இருக்கிறதென்பதும் திருநெல்வேலித் திருச்சபை நாளுக்கு நாள் தேறி வருகிறதென்பதும் தெளிவான காரியமாயிருக்கிறது. கூடிவந்த சங்கத்தார் சபை காரியங்களின் புற அகவிர்த்திக்கும் வளர்த்திக்கும் ஏற்றதான பல காரியங்களைப் பேசி சில தீர்மானங்களைச் செய்தார்கள். கடைசியாய் மகாகனம் அத்தியக்ஷரவர்கள் ஜெபஞ் செய்து தேவாசீர்வாதம் கூறி முடித்தார்கள்.

திருநெல்வேலி ஜில்லாவில் இவ்வித நற்கிரியையைத் தவக்கின தேவன் அதை இயேசுக்கிறிஸ்துவின் நாள் பரியந்தம் முடிய நடத்தி வருவாரென்று நம்பி அவருக்கே எப்போதும் துதியும் தோத்திரமும் வல்லமையும் மகிமையும் செலுத்துவோமாக.

அக்டோபர்மீ நாள்31.புரட்டாசிமீ 17உமுதல், ஐப்பசிமீ 17உவரை

வாரம்.	இங்கிலிஷ் தேய்தி.	தமிழ்த் தேய்தி.	அன்றாடகத் தியானம்.
தி	1	கஎ	தேவனுடைய கிருபையை நீங்கள் விருதாவாய்ப் பெறாதேயுங்கள்.
செ	2	கஅ	நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித்திரிந்தோம். ஏசா. 53:
பு	3	௰௯	என் மகிமை விளங்குமென்று கர்த்தர் சொல்லுகிறார். ஆகா. 1: 8.
வி	4	உ0	அரணுக்குத் திரும்புங்கள். சகரி. 9: 12.
வெ	5	உக	ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்துகொள்ளுங்கள். கலா. 6: 2.
ச	6	உஉ	கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன். சங். 34: 1.
ஞா	7	உ௩	யாவருக்கும் செலுத்தவேண்டிய கடமைகளைச் செலுத்துங்கள்.
தி	8	உச	பொல்லாத மனுஷர்மேல் பொறாமை கொள்ளாதே. நீதி. 24: 1.
செ	9	உ௫	அவரோ தப்புவிக்கிறவரும் இரட்சிக்கிறவருமாயிருக்கிறார். தா. 6:
பு	10	உ௬	நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது.
வி	11	உஎ	அவரைத்தேடக் காலமாயிருக்கிறது. ஓசி. 10: 12. (யோ. 6: 29.
வெ	12	உஅ	தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொள்ளுங்கள். யூதா.
ச	13	உ௩	கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள். ஏசா. 26: 4. [21.
ஞா	14	௩0	கர்த்தாவே என் சத்துருக்களுக்கு என்னைத்தப்புவியும். சங். 143: 4.
தி	15	க	நீங்கள் நீதிக்கென்று விதை விதையுங்கள். ஓசி. 10: 12.
செ	16	உ	அசதியாயிராமல் சாக்கிரதையாயிருங்கள். ரோ. 12: 11.
பு	17	௩	என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான். யோ. 6:
வி	18	ச	ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யும் கிருபையை அடையுங்கள்.
வெ	19	௫	ஆடுகளை ஓனாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல உங்களை அனு.
ச	20	௬	எல்லா மனுஷருக்கும் சாந்தகுணத்தைக்காண்பியுங்கள். தீத். 3:
ஞா	21	எ	அவர் அதிகமான கிருபையை அளிக்கிறார். யாக். 4: 6. [29.
தி	22	அ	என்னைக்கண்டடைகிறவன் சீவனைக் கண்டடைவான். நீதி. 8: 35.
செ	23	௯	சோதனைக்குட்படாதபடிக்குச் செபம் பண்ணுங்கள். லூக். 22: 40.
பு	24	க0	நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள். 1தெச. 5: 21.
வி	25	கக	கர்த்தாவே உம்முடைய வழிகளை எனக்குத்தெரிவியும். சங். 25: 4.
வெ	26	கஉ	நீ உன்னை ஞானியென்று எண்ணாதே. நீதி. 3: 7.
ச	27	க௩	என்னையல்லாமல் இரட்சகரில்லை. ஏசா. 43: 11.
ஞா	28	கச	என்னிடத்தில் வாருங்கள். மத். 11: 28.
தி	29	க௫	சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுக்கிறார். ஏசா. 40:
செ	30	க௬	உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிக்கும். எண். 32: 23. [2.
பு	31	கஎ	அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. சங். 103: 2.

விசேஷித்த நாட்கள்.

7. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும், பத்தொன்பதாம் ஞாயிறு.
7. அமாவாசை.
14. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும், இருபதாம் ஞாயிறு.
21. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும், இருபத்தோராம் ஞாயிறு.
22. பௌரணமி.
28. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும், இருபத்திரண்டாம் ஞாயிறு.

நற்போதகம்.

௰க. நவம்பர்மீ. ௬௮௭௰௬.

II கொரிந்தியர் நிருபத்தின் பொருளடக்கம்.

முகவுரை.

பரி. பவுல் கொரிந்து சபையாருக்கு வாழ்த்துதல் சொல்லி அவர்களைப்பற்றித் தமக்கிருந்த நம்பிக்கையை அறிவிக்கிறார். அதி. க. 1—7.

இந்த நிருபம் 3 விசேஷ பாகங்களுள்ளது.

I. (Apologetical.) அப்போஸ்தலனாகிய பவுல் தமது பேரில் சொல்லப்பட்ட வீண் குற்றங்களை நிராகரிக்க நியாயங்களுரைத்தல். க. 8 சு. 10.

1. பவுல் தாம் சொல்லியிருந்தபடி கொரிந்துவுக்குப் போகாததினால் அவர் மனவுறுதியற்றவரென்று எதிரிகள் சொன்னது தப்பிதமென்பதற்கு முகாந்தரங்கள். க. 8 உ. 1—4.

a. ஆசியாவில் அவருக்கு நேரிட்ட வருத்தம். க. 8—14.

b. அவர்கள், தப்பறைகளிலிருந்து சீர்ப்பட்டதை அறியும்படிக்கு பவுலுக்கிருந்த விருப்பம். க. 15 உ. 1—4

2. கொடிய தப்பிதஞ்செய்தவனுடைய காரியத்தைப்பற்றி எழுதின தீர்ப்பினால் பவுல் மிகவும் கண்டிப்புள்ளவனென்று சொன்னதற்கு எதிர் நியாயம். உ. 5—13.

a. அவனைப்பற்றிக் கண்டிப்பாய் எழுதவேண்டியது அவசியம். உ. 5—9.

b. சீர்ப்பட்ட அவனைச் சேர்த்துக்கொள்ள உத்தரவு. உ. 10, 11.

c. கொரிந்துவிலிருந்து வரும் செய்தியை அறிய தாம் கொண்டிருந்த ஆவலைப்பற்றித் தெரிவித்தல். உ. 12, 13

3. பவுல் நியாயப்பிரமாணத்தின் (சடங்கு) அதிகாரத்தைக் குறைத்துப் பேசியிருக்கிறபடியால், அவன் வீண் மகிமையை நாடுகிறவனென்று எதிரிகள் சொன்னதை ஆக்ஷேபிக்கும் நியாயங்கள். அதி. உ. 14 சு. 1—10.

a. அப்போஸ்தல ஊழியம் சுவிசேஷத்தின் மகிமைக்கேயன்றி சுய மகிமைக்கல்ல என்பதற்கு பவுல் சுவிசேஷத்தில் தாம் அடைந்த சித்தியை குறித்துக்காட்டல். உ. 14 ௩. 1—4.

b. மோசேயின் நியாயப்பிரமாணத்தைப் பார்க்கிலும் கிறிஸ்துவின் சுவிசேஷப்பிரமாணமானது சிறந்த மகிமையுள்ளதென்பது.
கூ. 5—18.

c. தமது இந்த ஊழியத்தில் நேரிடும் எந்த உபத்திரவங்களையும் பொறுமையோடி சகித்து, தேவனுக்குமுன்பாக அதை உண்மையோடி நிறைவேற்றி வருகிறதால் இனி தமக்கு மகிமைகிடைக்குமென்கிற நிச்சயம்.
சு, டு, சூ. 1—10.

II. (Hortatory.) பவுல் கொரிந்தியரிடத்திற் கண்ட நற்காரியங்களுக்காகப் புகழ்ந்து சுவிசேஷத்தின் உயர்ந்த கற்பனைகளுக்கு இணங்கும்படி அவர்களை ஏவுதல்.
சூ. 11—கூ.

(எபி. சூ. 9 ஐ வாசித்துப்பார்க்க.)

1. கொரிந்தர் பூரண பரிசுத்தமுள்ளவர்களாய் நடக்கும்படி தேவனுடைய வாக்குத்தத்தங்களால் எழுப்பிவிடப்படல். சூ. 11 எ. 1.

2. பவுல் தம்மால் அனுப்புவிக்கப்பட்ட தீத்துவை ஏற்றுக்கொண்டதற்காக அவரைப் புகழ்ந்து தாம் எழுதின 1-ம் நிருபத்திற் கண்ட கட்டளைகளுக்கும் எச்சரிப்புகளுக்கும் அவர்கள் கீழ்ப்படிந்ததற்காகச் சந்தோஷமடைந்தார் என்பது.
எ. 2—16.

3. தரும காணிக்கை கொடுக்கும்படி அவர்கள் ஏற்கெனவே கொண்டிருந்த நல் விருப்பத்தைப்பற்றி அவர்களைப் புகழ்ந்து, அதை உடனே நிறைவேற்ற உற்சாகப்படுத்தல்.
அ, கூ.

a. மக்கேதோனியா நாட்டுச் சபைகள் திருஷ்டாந்தம். அ. 1—6

b. பவுல் சொல்லும் புத்திமதிகள்.
அ. 7—15

c. தீத்துவையும், இன்னும் 2 சகோதரரையும் அது காரியத்துக்காக அனுப்புகிறதாகத் தெரிவித்துத் தாம் போகுமுன் தர்மப்பணத்தை ஆயத்தப்படுத்திவைக்கக் கேட்டுக்கொள்ளல். அ. 16 கூ. 1—7.

d. அதை உற்சாகமாய் நிறைவேற்றும்படி தேவனே விருப்பத்தையும் செய்கையையும் அவர்களில் உண்டாக்குகிறவர் என்று தைரியப்படுத்தல்.
கூ. 8—15.

III. (Menacing or Threatening.) பவுல் அப்போஸ்தலனைப்பற்றிக் கள்ளப் போதகர்கள் சொன்ன அவதூறுகளைக் கண்டித்தல்.
ய—யஉ. 1—10.

(1 கொரிந். சு. 21 ஐ பார்.)

1. கொரிந்து சபையில் இன்னும் நிலைத்திருந்த பிரிவினைகள் முதலிய தவறுகளைத் தடுத்தல்.
ய. 1—6.

2. கள்ளப் போதகர்கள் பவுலின் சரீர தோற்றத்தை அசட்டை பண்ணினதைக் கண்டித்தல்.
ய. 7—18.

a. கள்ளப் போதகர்களுடைய மேட்டிமையையும் கிறிஸ்துநாதருடைய அப்போஸ்தலரிலும் தாழ்ந்தவனென்று பவுலைப்பற்றி அவர்கள் சொன்ன அவதூறுகளையும் அகற்ற அவர் தமக்குக் கிடைத்த வரங்கள், தம்முடைய பிரயாசங்கள், தமக்குண்டான தரிசனங்கள், தாம் நடப்பித்த அற்புதங்கள், தாம் சுயநன்மை நாடாதிருத்தலாகிய இவைகளை எடுத்தறைக்கப் பலவந்தம்பண்ணப்படல். ய உ. 1—13.

3. பவுல் தாம் கொரிந்தவுக்குப்போன பிற்பாடு பிடிவாதமும் சீர்ப்படாதவர்களுமாயிருப்பவர்களைக் கண்டிதம்பண்ண நேரிடாதபடி அவர்கள் நடந்துகொள்ள முன்னுடியே எச்சரித்தல். ய உ. 14 யஊ.

முடிவுரை.

அப்போஸ்தலன் கொரிந்து, அகாயா காடெங்குமுள்ள சகல பரிசுத்தவான்களையும், பக்தியுள்ள எழுப்புதலோடும் பரிசுத்த முத்தத்தோடும் வாழ்த்தி அவர்களுக்காக ஜெபம் செய்து முடிக்கிறார்.
யஊ. 11—14

G. S.

இத்தப் பொருளடக்கத்தை நற்போதகம் வாசிப்போருக்கு அனுகூலமாக எழுதிக்கொண்டதில் பவுல் அப்போஸ்தலன் நிருபத்தை எழுதுகையில் இப்படியே யோசித்து வரிசைப்படுத்தி எழுதினானென்ற கருத்தாயல்ல, 2. நிருபம் படிக்கிறவர்கள் மேற்படி நிருபத்தின் பங்குகளை ஒன்றோடொன்று சம்பந்தப்படுத்திக் கோர்வையாக்கிக்கொள்வதற்கு அனுசரணையாகவே எழுதியிருக்கிறது.

II. கொரிந்தியர் நிருபத்தைப் படிப்பதற்கு உதவியான குறிப்புக் கேள்விகள்.

1. இந்த நிருபத்தை, அப்போஸ்தலன் (1) தமது பட்சத்தில் எதிரிக்குச் சொல்லிய நியாயங்கள். (Apologetical), (2) எழுப்பிவிடுங்காரியங்கள். (Hortotary), (3) (Menacing) கண்டிப்புக்கடுத்தவை ஆகிய மூன்று பிரதான பங்குகளாய் வைத்து அததின் விபரங்களை காரியம் காரியமாய் எழுதவேண்டும்.

2. பரி. பவுல் தாம் திவ்ய அதிகாரம் பெற்ற அப்போஸ்தலனென்று ரூபிக்க விபரமாய் எழுதுவது அவசியமென்று காட்டவும்.

3. இந்த நிருபத்திற்கும் நடபடியாகமத்திற்குமுள்ள, கருதாத சம்பந்தங்களுக்கு உதாரணங்கள் காட்டுக.

4. பரி. பவுல் கூ. 8-ல் ஒழித்தபோகிற மகிமைகளையுடைய அந்த ஊழியமென்கிறார். a. அந்த ஊழியத்திற்குரிய மகிமைகளென்ன? b. ஆவிக்குரிய ஊழியம் எப்படி அதிக மகிமையுடையதாயிருக்கிறது?

5. மெய் மனந்திருப்புதலுக்கு அப்போஸ்தலன் சொல்லுகிற 7 குறிப்புகளையும் எழுதி அவைகளை விளக்கிக் காட்டவும்: தருமசகாயஞ்செய்வதினாலுண்டாகிற (அப்போஸ்தலன் சொல்லுகிற) 2 பலன்களென்ன?

6. விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுகிறோம் என்கிற உபதேசம் இந்த நிருபத்தில் காட்டப்படுகிறதா?

காட்டப்படும் முறையென்ன?

7. மரித்தோரின் உயிர்த்தெழுதல், நித்திய நியாயத்தீர்ப்பு ஆகிய மூல உபதேசங்கள் இந்த நிருபத்திற் காட்டப்பட்டிருக்கும் சம்பந்தமென்ன?

8. பவுல் அப்போஸ்தலனுக்குக் கொடுக்கப்பட்டிருந்த முள்ளைப் பற்றி வெவ்வேறான அபிப்பிராயமென்ன? உமக்குத் தோன்றுகிறதை வேதவாக்கியங்களுடன் காட்டும்.

9. பின் வருகிற வாக்கியங்களின் சம்பந்தத்தை எழுதவும்,
V. 14. "கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது."
VIII. 14. "கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்குக் குறைவானதுமில்லை."

XI. 23. "நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன்."

10. பின்வரும் வாக்கியங்களுக்கு வியாக்கியானம் எழுதவும்.

XII. 2-ல் "அவன் சரீரத்திலிருந்தானே சரீரத்திற்குப் புறம்பேயிருந்தானே அதை அறியேன்."

VII. 10. "லௌகீக துக்கம் மரணத்தை உண்டாக்குகிறது."

VI. 9. "நாங்கள்.....சாகிறவர்களென்னப்பட்டாலும் உயிரோடிருக்கிறவர்களாகவும் எங்களை விளங்கப்பண்ணுகிறோம்."

IV. 12. "மரணமானது எங்களிடத்திலும், ஜீவனானது உங்களிடத்திலும் பலன்செய்கிறது."

IV. 3. "சுவிசேஷம் மறைபொருளாயிருந்தால் கெடுப்போகிறவர்களுக்கே அது மறைபொருளாயிருக்கும்."

II. 15. "இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும் கெடுப்போகிறவர்களுக்குள்ளேயும் நாங்கள் தேவனுக்கு கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம்."

11. a. தீத்துவைக்குறித்து பவுல் கொடுக்கிற நற்சாட்சி என்ன? இதற்கு முன்னும் பின்னுமாயுள்ள அவனுடைய சரித்திரத்தைச் சொல்லவும்.

b. "சுவிசேஷ ஊழியத்தில் எல்லாச் சபைகளிலும் புகழ்ச்சிபெற்ற ஒரு சகோதரன்" இது யார் என்று நினைக்கப்படுகிறது. மேடி வார்த்தைகள் ஜெபபுத்தகத்தில் எங்கே எடுத்துவைக்கப்பட்டிருக்கிறது?

12. கள்ளப் போதகர்கள் என்னப்பட்டவர்கள் ஆர்? அவர்கள் பவுலின் அப்போஸ்தல அதிகாரத்தைக் குறைக்கப்பார்த்ததில் அவர்களுக்கென்ன அனுகூலமிருந்திருக்கும்? பவுல் அதற்கு இடங்கொடுத்தால் சபைக்கு உண்டாகக்கூடிய பிரதிகூலமென்ன?

G. S.

Life of Rev: Bernard Gilpin.

பெர்னார்ட் கில்பின் போதகர் சரித்திரம்.

பெர்னார்ட்கில்பின் போதகர் "வடக்கத்தி அப்போஸ்தலன்" என்றும், "தரித்திரர் தந்தை" என்றும் சிறந்த பட்டப்பெயர்கள் பெற்றிருந்தார். வெறும் பெயர்களே ஒன்றுக்கும் உதவாது என்பது மெய். என்றாலும் ஒரு மனுஷனுடைய எதார்த்தமான குணாதிசயங்களுக்கு அறிகுறிகளாகும் விஷயத்தில், அவைகள் அம்மனுஷனுக்கு மகிமையான பட்டப்பெயர்களாகின்றன என்பதற்கு ஐயமே இல்லை. மேற்படி பட்டப்பெயர்கள் இவ்வுத்தமனுக்கு எவ்வளவோ பொருந்திய வைகளென்றும் நியாயமானவைகளென்றும் அடியில்வரும் அவரது விர்த்தாந்தங்களால் நன்றாய்க் கண்டுகொள்ளலாகும்.

பெர்னார்ட்கில்பின் என்பவர் 1517-ம்வரு இங்கிலாந்திலுள்ள வெஸ்ற்மோர்லாந்து மாகாணத்தில் அந்தஸ்துள்ள ஓர் குடும்பத்தில் பிறந்தவர். அவர் தகப்பனின் பெயர் எட்வின்கில்பின் என்பது. அவர் சிறு பிராயத்தில் உயர்தரமான ஓர் கிராமப்பாடசாலையில் கல்விப்போதனையடைந்தார். அக்காலத்தில் அதிகத்திறமையும் முயற்சியும் அவரிடத்தில் விளங்கினதாகக் குறிப்பித்திருக்கிறது. அப்பால் அவர் பதி

னாறு வயசானபொழுது ஓக்ஸ்போர்ட் சர்வகலாசாலைக்கு அனுப்பப்பட்டார். அவ்விடத்திற்சேர்ந்து கலாப்பியாசஞ்செய்துகொண்டிருக்கையில், அக்காலத்தில் பாப்புமார்க்கத் தவறுகளையும் குருமார்களுடைய ஜெஷ்ரோங்களையும் பகிரங்கமாய்ப் பிரசித்தப்படுத்தித் தைரியமாய்க்கண்டித்துவந்த எராஸ்மூஸ் என்பவர் இயற்றிய நூல்களைக் கவனமாய் வாசிக்கவேப்பட்டார்.

கில்பின் என்பவர் இளம்பிராயத்திலேயே, எராஸ்மூஸ் காண்பித்தகியாயங்களைத் திட்பநுட்பமாய் ஆராயத்தூண்டுகிற்பார்த்ததில் அவரது மனோபலமும் புத்திக்கூர்மையும் நன்றாய் வெளிப்படுகின்றது. இந்த ஆராய்ச்சியினாலே முதல்முதல் அவர் மேற்படி நூல்களை மிகவும் மெச்சிக்கொண்டு நன்குமதிக்கவும், கடைசியில் புரோட்டெஸ்தாந்து உபதேசங்களைப் பூரணமாய் அங்கீகரித்துக்கொள்ளவும் ஏதுவுண்டாயிற்று. அப்புறம் முக்கியமாய் அவர் வேதசாஸ்திரத்தை அப்பியாசிக்க முயன்று வேதாகமத்தை அதிகப்பிரீதியுடன் வாசித்துவந்தமல்லாமல், அதன் பொருட்டு சிரேக்கு, எபிரேயுப்பாஷைகளையும் தீர்க்கற்றுக்கொண்டார்.

அதுமுதல் அக்கலாசாலையிலுள்ள முக்கியமானவர்களெல்லாரும் அவரை மகா திறமையுடைய வாலிபனென்று நன்குமதித்துக் கணிசப்படுத்தத்தொடங்கினார்கள். சிறிதுகாலத்துக்குள் அவர் கல்விப்பட்டமடைந்து கலாசாலையின் ஓர் அவயவமாக நியமகம் பெற்றார். கில்பின் என்பவர் பாப்புமார்க்கத்திலே வளர்க்கப்பட்டவர், தற்காலம்வரையும் அதிலேயே நிலைத்துமிருந்தார். ஓக்ஸ்போர்ட் கலாசாலையில் அவர் வாசமாயிருக்கையில் மேற்படி மார்க்கத்துக்குச் சார்பாய்ஹூப்பர் கண்காணியாரோடு ஒரு விசை தர்க்கமும் பண்ணினார். அரும் எட்வார்ட் அரசன் சிம்மாசனமேறின கொஞ்ச காலைக்குள் பீற்றர் மார்ட்டர் என்பவர் ஓக்ஸ்போர்ட் சர்வகலாசாலையில் வந்து வேதப்பிரசங்கங்கள் செய்துவரவே, கில்பின் என்பவர் அவரை எதிர்த்து நியாயம் பேச ஏவப்பட்டார். ஆகிலும் நியாயத்தில் அவரை மேற்கொள்ளுகிறது தமக்கு மிஞ்சின காரியமென்று சீக்கிரம் உணர்ந்து கொண்டார். அதன்பேரில் அவருக்கு எதிர் நியாயம் சொல்லத்தம்மால் முடியாதென்று வெளியிட்டு, இப்போருக்குவேண்டிய மூஸ்திப்புகள் சவதரித்துக்கொள்ளும்வரையில் தர்க்கம்பண்ணத் தணியேன் என்று தீர்மானம் பண்ணிக்கொண்டார். பீற்றர் மார்ட்டர் என்பவர் அவருடைய உண்மையையும் நேர்மையையும் பார்த்து ஆச்சரியப்பட்டு, "கில்பின் என்பவரோடு தர்க்கம்பண்ணின வெஸ்ற்றன் மார்கன் செட்டீ முதலிய மூர்க்கர்களே நான் பொருள் செய்கிறதேயில்லை, அந்தக்கில்பின் என்பவனுடனேயோ எனக்கு அதிகப்பிரியமுண்டாகிறது. அவன் பேசுகிறதும் செய்கிறதுமெல்லாம், மகா நேர்மையாயிருக்கிறது. மற்றவர்கள் தங்கள் வயிற்றைக்குறித்து முக்கியமாய்க் கவலைப்படுகிறதாகக்காணப்படுகிறார்கள். கிலியற்றவர்களாய் பொருளாசையினாலும் அதிகாரப் பிரியத்தினாலும் வாரிக்கொள்ளப்படுகிறார்கள். கில்பின் என்பவனோ சன்மார்க்க ஒழுக்கத்தையும் நல்மனச்சாக்ஷியையும் காத்து, தான் கையிட்டுக்கொள்ளுங்காரியத்தை மேன்மைப்படுத்துகிறவனாயிருக்கிறான்" என்று பலமுறையும் சாக்ஷியிட்டிருக்கிறார். மேலும் கில்பின் என்பவர் சத்தியத்தையறிந்த அறிவுக்கு வரவேண்டுமென்று ஊக்கத்தோடு பிரார்த்தித்துக்கொண்டும் வந்தார். அந்தச்செபத்தை தேவன் கேட்டருளினார். சுவிசேஷ சத்தியத்தைக் குறித்து நாளுக்கு நாள் அவர் உள்ளத்தில் அதிகமதிகமான தெளி

வுண்டாகி கடைசியில் அதைப்பூரணமாய் அங்கீகரித்துக்கொண்டார்.

அப்பால் அவர் குருப்பட்டம் பெற்றுக்கொண்டு முப்பத்தைந்து வயதுமட்டும் ஒக்ஸ்போர்ட் கலாசாலையிலேயே வாசம்பண்ணினார். பின்பு டர்ஹம் கண்காணியாட்சிக்குட்பட்ட நார்ட்டன் நகரத்தில் திவ்விய பணிவிடை நடப்பிக்க அழைப்பிக்கப்பட்டதில், தம் மனோஸ்திதி நிலைவரமில்லாதிருக்கையில் திவ்விய ஊழியத்துக்கு ஏற்படேனென்று அவர் வெகுவாய் மறுத்தும், சிநேகிதர் போராட்டத்தின் பேரில் அதற்கு உடன்பட்டார். அவர் தன் அலுவலைக் கைக்கொள்ளப்போகுமுன், தற்சமையத்தில் கிரீனிச் நகரத்திலிருந்த இராசாவுக்குமுன் பிரசங்கிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். சரித்திர நூலாசிரியர் குறிப்பித்திருக்கிறபடி அக்காலத்தில் எத்திறத்தோருக்குள்ளும் நடப்பாயிருந்த பாவம் பொருளாசை. கில்ப்பின் போதகர் துன்மார்க்கத்தை எங்கே கண்டாரோ அங்கே கண்டிக்கவேண்டுமென்று தீர்மானித்திருந்தவராகையால், பொருளாசை என்ற பாவத்தையே பிரசங்கவிஷயமாகஎடுத்துக்கொண்டு இராசா, பிரபுக்கள், அதிகாரிகள், குருமார்முதலியசகலருக்கும் உண்மையோடு மனதில் தைக்கத்தக்க விதமாய்ப் புத்தி சொன்னார். இந்தப் பிரசங்கம் அவ்வளவு கண்டிப்பானதாயிருந்தபோதிலும், வெகுவாய் மெச்சிக்கொள்ளப்பட்டது ஆச்சரியம். பிற்காலத்தில் பிரபுத்துவம் அடைந்த செசில் என்னும் துரைத்தன லிகிதர் அவருக்காக இராஜாவினிடத்திற் பரிந்து பேசி இராஜாவின் சீவகாலமெல்லாம் எங்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறதற்கு, இராஜ அதிகாரப் பத்திரம் வாங்கிக்கொடுத்தார்.

அக்காலத்தில் இவ்வகையான அதிகாரப் பத்திரம் பெறுகிறது லேசான காரியமல்ல. போந்த திறமையும் தேறின பக்தியுமுள்ளவர்களுக்குமாத்திரம் அவைகள் கொடுக்கப்படும். இந்த அரசன் செங்கோல் செலுத்தின காலமெல்லாம் அந்த இராச்சியமுழுமையிலும் இருபத்து மூன்றுபேர் மாத்திரம் இவ்விதப் பொதுவான அதிகாரப் பத்திரம் பெற்றவர்கள். இன்னமும் கில்பின் போதகர் மனதில் போதுமான சமாதானமிருந்ததில்லை. அதன்பேரில் தமக்குக் கிட்டின இனமும் தம் பேரில் அதிக பட்சமுமாயிருந்த டர்ஹம் கண்காணியாரிடத்தில் தம் மனோஸ்திதியை வெளியிட்டு யோசனைகேட்டார். மேற்படி கண்காணியார் ரோமான் சபைச் சார்பாயிருந்தபோதிலும் குருட்டுப் பக்தியும் வைராக்கியமுமுடையவரல்ல. ஆகையால் கில்பின் என்பவர் தம்மனதிலிருந்த சந்தேகங்களை எதார்த்தமாய் வெளியிட்டதினிமித்தம் சந்தோஷப்பட்டு, மத விஷயத்தில் தம்மனதுக்கு நல்ல திர்பதியும் நிர்ணயமுமுண்டாகிற வரையில் ஒன்றுஞ் செய்யவேண்டாமென்று யோசனைசொன்னதோடு, தமது சபைக்குரிய காரியாதிகளை தகுந்த ஓர் மனுஷனிடத்தில் ஒப்புவித்துவிட்டு ஜர்மனி பிரான்சு ஒல்லாந்து முதலிய தேசங்களில் இரண்டொரு வருஷம் பின்னிடுகிறதானால் இம்மதக் கோட்பாடுகளுக்குச் சார்பாய்ப் பேசுகிறவர்களும் விரோதமாய்ப் பேசுகிறவர்களுமான இரு கட்சியாரையும் கண்டுபேசித் தம் மனதை வருத்தின சந்தேகங்களை நிவர்த்திசெய்துகொள்ள நல்ல அவகாசங்கிடைக்குமென்று சொல்லி அவ்விடங்களுக்குப் போய்வரப் பலமாயேவினார். அதன்பேரில் கில்பின் என்பவர் அவ்வாறே செய்யத்தீர்மானித்து, தம் வேலையையும் விட்டுவிட்டு ஒல்லாந்து தேசத்துக்குப் போகக் கப்பலேறி தம் சகோதரன் கலாப்பியாசம் செய்துகொண்டிருந்த மெலினீஸ் நகரத்துக்குப்போய் அவனைக் கண்டுபேசிக்கொள்ளப் புறப்பட்டார். மத விஷயங்களைக்குறித்துப் பேசிக்கொள்ளவே தம் சகோ

தரனிடத்துக்குப் போனாரென்று நினைக்கத்தக்கது. அவருடைய சகோதரன் தற்காலத்தில் பாப்புமார்க்க அநுசாரியாயிருந்தும், கொஞ்சநாளைக்குள்ளாக சீர்திருத்தத்துக்காகப் போராடின வீரர்களில் ஒருவனானான். இதன்பொருட்டே, "ரோமான்சபையாகிய தேன்கூடு" என்ற பெயரால் ஒல்லாந்துப் பாஷையில் பாப்புமார்க்கத்துக்கு வசையாயெழுதியிருந்த ஒரு நூலை இங்கிலிஷில் மொழிபெயர்த்துப் பிரசுரஞ் செய்தான். கில்பின் என்பவர் இவ்விடம்விட்டு, லூவேன்நகரத்துக்குப்போய் அங்கே சிறிதுகாலம் சஞ்சரித்தார். இந்நகரத்தில் வேதசாஸ்திரப் பண்டிதர்களும் மாணாக்கர்களும் திரள்பேரிருந்தபடியால் தாம் கொண்டிருந்தநோக்கம் நிறைவேறுதற்கு மிக்க அனுகூலங்கிடைத்தது. ஆகையால் அவ்விடத்தைக்குறித்து அவர் எப்பொழுதும் பட்சமாயும் அக்களிப்பாயும் பேசுவது வழக்கம்.

இக்காலம்போல, புரோட்டெஸ்தாந்து உபதேசங்களைக்குறித்து அவர் மனதில் அதிகமான தெளிவும் நிச்சயமுமுண்டாகிக்கொண்டு வருகையில், டர்ஹம் கண்காணியார் ஆதீனத்திலிருந்த அதிக வருமானமுள்ள ஒரு குருமானியம் காலியாகவே, கில்பின் என்பவர் போய் மேற்படி திவ்விய ஊழியத்தைப் பெற்றுக்கொள்ளும்படி கண்காணியார் அவர் தமையனார் மூலமாய்ச் செய்தியனுப்பினார். கண்காணியார் நம்பியிருந்தபிரகாரம் அவருக்கு இதற்குள் நல்ல தெளிவுண்டாயிருந்தபோதிலும் புரோட்டெஸ்தாந்து உபதேசங்களை அவர் அனுசரித்துக் கொண்டபடியால், கண்காணியாருடைய நிபந்தனைகளுக்கு இணங்கி மேற்படி உத்தியோகத்தைக் கைக்கொள்ளக் கூடாதிருந்தது. ஆகையால் கில்பின் என்பவர் கண்காணியாருக்கு வணக்கமான ஒரு நிருபமெழுதி, அதில் அவர் தம்மைக்குறித்துக் கொண்டிருந்த கரிசனைக்காகவும் பாராட்டிவந்த உருக்கமான அன்புக்காகவும் நன்றியறிதல்சொல்லியபிறகு, பல நியாயங்கள்காண்பித்து மேற்படி உத்தியோகம் தமக்கு வேண்டாமென்று மறுத்துவிட்டார்.

Notes on Leviticus.

லேவியராகம வியாக்கியானம்.

உச. அதிகாரம்.

தேவதூஷணம் கண்டிக்கப்பட்டது.

---

10. எபிரேயருக்குள் இப்படிப்பட்ட இரு சாதிப்பிறவிகள் அநேகர் இருந்தார்கள். இவர்கள் கெடுதியான அநேகக் குறும்புச்சேட்டைகள் செய்தார்கள். இப்படிப்பட்டவர்கள் தங்கள் வழியில் அடிக்கடி கேவலமான ஜாதியைப் பின்பற்றுவது இயல்பாய் இருக்கிறது.

11. "கர்த்தரின்" அதாவது எகோவாவின். இது பெரிய பாதகம். மோசேயின் பிரமாணத்தின்படி இது இராஜ துரோகமாயுமிருந்தது. ஆகையால் அதற்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது நியாயமே.

படிப்பினை.

அஞ்ஞானிகளோடு சம்பந்தங்கலப்பது எவ்விதமும் கெடுதியாய் முடியும்.—மனுஷன் தேவனைத் தூஷணிக்கிறதைப் பார்க்கும்போது, மனுஷனுக்கும் தேவனுக்கும் உள்ளத்தில் எவ்வளவோ விரோதம் இருக்கிறதென்று அறிந்துகொள்ளலாம். இருதயத்தின் நிறைவினால் வாய் பேசுமே.—"மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம்பெறுமல் சாகிறானே, தேவகுமாரனை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாய் இருப்பான என்பதை யோசித்துப்பாருங்கள்"

உரு. அதிகாரம்.

ஓய்வு வருஷம். யூபிலி வருஷம்.

---

2. ஓய்வு வருஷமும் யூபிலி வருஷமும் 2 முகாந்தரங்களுக்காக ஏற்படுத்தப்பட்டதென்று தோன்றும். (1) தேசமே நிலச்சுவானென்று இஸ்ரவேலருக்கு எப்போதும் நினைப்பூட்டும்படியாக இவை ஏற்படுத்தப்பட்டது. இஸ்ரவேலர் சில நிபந்தனைகளின்பேரில் எகோவாவின் நிலங்களைச் சாகுபடிசெய்கிற புறக்குடிகளாய்மடுமிருந்தார்கள். அந்த நிபந்தனைகளிலொன்று, அந்த நிலங்களை அனுபவிக்கிற இஸ்ரவேல் வம்சத்தாருடைய சொத்துக்கள் பராதீனப்படாதபடி அந்தந்த வம்சத்துக்குள்காக்கப்படவேண்டும். 1 ராசா 21: 3. இன்னொரு நிபந்தனையானது, அந்த நிலங்களை மேலும் மேலும் கெருக்கிச் சாகுபடிசெய்து கெடுத்துப்போடாமல் மட்டாய் அனுபவிக்கவேண்டும் என்பதை. (2) அவர்கள் இஸ்ரவேல்புத்திரராயும் எகோவாவின் குடிகளாயும் இருக்கிற கன்யத்தை அவர்களுக்கு ஞாபகப்படுத்தும்படியாக ஏற்படுத்தப்பட்டது. இதினாலேதான் அடிமைத்தனத்துக்கு காலம் குறிக்கப்பட்டு மட்டிடப்பட்டது.

ஓய்வு வருஷமானது அவர்களுடைய உலக வருஷத்திலோ, அல்லது வைதிக வருஷத்திலோ எதில் ஆரம்பித்ததென்பது சந்தேகமாயிருக்கிறது. அப்படியே 21-ம் வாக்கியத்தில் சொல்லிய 3 வருஷங்களானது, மூன்று முழு வருஷங்களோ அல்லது தொடர்ச்சியான மூன்று வருஷங்களின் பாகங்களோ என்பதும் சந்தேகமாயிருக்கிறது. மேலும் 49-ம் வருஷம் யூபிலி வருஷமா? அல்லது 50-ம் வருஷம் யூபிலி வருஷமா? அல்லது 49 க்கும் 50 க்கும் ஊடேயுள்ள வருஷம் யூபிலியா என்பதும் சந்தேகந்தான். அது கடைசியில் சொல்லியபடி என்றால், உலக வருஷத்தின் முதல் மாசமும் வைதிக வருஷத்தின் ஏழாம் மாதமுமாகிய திசிரி மாசத்தில் யூபிலி வருஷம் ஆரம்பிக்கும். ஓய்வு வருஷமோ வைதிக வருஷத்தின் முதல் மாசமாகிய ஆபிப் மாதத்தில் ஆரம்பித்தது.

21. இஸ்ரவேலர் இந்தக் கற்பனையை உண்மையாய்க் கைக்கொண்டுவந்தார்களானால், அவர்களுக்கு விதிக்கப்பட்ட பிரமாணங்களும் ஏற்பாடுகளும் தேவனால் உண்டானதென்பதற்கு இது அவர்களுக்கு எப்போதும் ஞாபகப்படுத்திக்கொண்டிருக்கிற அற்புதமாயிருக்கும்.

27. "மீந்த தொகை ஏற்றி" அதாவது, யூபிலி வருஷம் வருகிறதற்கு இன்னம் எத்தனை வருஷமிருக்குமோ அத்தனை வருஷத்தின்

பலனுக்குச் சரியான கிரயத்தைக் கொண்டவனுக்குக் கொடுக்கவேண்டும். அதற்கு நிர்வாகமில்லாவிட்டால் யூபிலி வருஷத்திலேதான் அவன் வம்சச் சொத்து அவனுக்குக் கிடைக்கும். அதுவரைக்கும் அவன் காத்திருக்கவேண்டும்.

30. "யூபிலி வருஷத்திலும் அது விடுதலையாகாது." இதொன்றுதான் விடுதலையாகாத பொருள். இதினாலே புறச்சாதி புரோசலித்தகள் இஸ்ரவேலின் ராஜாவாகிய எகோவாவின் குடைக்குள் வந்து நிலையாய்த் தங்கும்படி ஏதுவாயிருந்தது.

39. இதுவரையும் அடிமைத்தன ஆவி குறைக்கப்பட்டு வந்தது. என்றாலும் அது நிருமிக்க விலக்கப்படவில்லை. இருந்தபோதிலும் இப்படிப்பட்ட பிரமாணங்களினாலே அடிமைத்தனத்தை மட்டுக்கட்டியிருந்தது. இப்படி மட்டுப்படுத்தினது அது கடைசியாக முழுவதும் நிறுத்தப்படுவதற்கு வழி உண்டுபண்ணுகிறதாயிருந்தது.

படிப்பினை.

யூபிலி வருஷத்தில் நிலங்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும்படி அந்தந்த இஸ்ரவேலனுடைய வம்ச அட்டவணை வெகு நிட்டமாய் எழுதப்பட்டுவந்தது. சொத்து இழந்தவனுக்கு யூபிலி வருஷத்தில் பாத்தியமுண்டாகும்படி இந்த அட்டவணையே அல்லாது வேறொரு ஆதாரமும் இல்லை. இதினாலே மேசியாவைக்குறித்த அட்டவணை புதிய ஏற்பாட்டில் நன்றாய் எழுதப்பட ஏதுவாயிற்று. இந்த ஏற்பாடானது மேசியாவைக்குறித்த தீர்க்கதரிசனங்கள் நிறைவேறின வகையைக் காண்பிக்கவுமுதவுகிறது.

யூபிலி வருஷத்தில் யாதொரு கிரயமில்லாமல் பாத்தியம் உண்டாகும். யூபிலி வருஷத்தில் கிடைத்த விடுதலைகள் கிறிஸ்துநாதரால் உண்டான இலவசமான மீட்புக்கு முன்னடையாளமாயிருந்தது. ஏசா. 61: 1—3. லூக். 4: 1—3. யூபிலியின்தொனி சுவிசேஷத்தின் கிருபைத் தொனிக்கு முன்னடையாளமாயிருந்தது. நாம் நீதிமான்களாக்கப்படுகிற வகையும் அப்படியே இருக்கிறது. நமது கிரியைகளினாலே யல்ல தேவனுடைய இலவசமான கிருபையினாலே ஆகிறது. நாம் இழந்தவிட்ட சுதந்தரமாகிய மோட்சம் தேவனுடைய ஈவாகவே விசுவாசிகளுக்குக் கிடைக்கிறது. கடைசியாக நம்முடைய சரீரங்களும் கல்லறையினின்று மீட்படைந்து பரம சுதந்தரத்தில் பங்கடையும்.

Bible Sketches and their Lessons.

பாலபோதனை.

நெகேமியாவின் சரித்திரம்.

நெகேமியா. 1-ம், 2-ம் அதிகாரங்கள்.

(தொடர்ச்சி.)

நானூறு வருஷத்துக்குப் பின்பு மேற்படி தீர்க்கதரிசனவார்த்தைகள் நிறைவேறின. இந்த இரண்டாம் தேவாலயம் கட்டப்பட்

டமுகாந்தாரமும் தெரிந்துகொள்ளப்பட்ட இந்த நகரம் மறுபடியும் எடுப்பிக்கப்பட்ட முகாந்தாரமும் இன்னதென்று இதினுலே தெரிய வருமே. தீர்க்கத்தரிசி குறிப்பித்த நாளும் வந்தது. எருசலேமின் தெருக்களின் வழியாய் ஒரு தாய் தன் பிள்ளையை மேற்படி தேவாலயத்துக்குப் பக்ஷமாய்க் கொண்டுபோனுள். அவர்கள் தேவாலயத்தின் பிராகாரங்களுக்குள் பிரவேசிக்கவே, வயோதிபன் ஒருவன் அவர்களுக்கு எதிர்கொண்டு வந்து அந்தக் குழந்தையைத் தன் கைகளிலேந்திக்கொண்டு, அகமகிழ்ந்து பூரித்து அடியில் வருமாறு கர்த்தரைப் புகழ்ந்து போற்றினுன். "ஆண்டவரே உமது வார்த்தையினபடி உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போக விடுகிறீர்; புறச்சாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும், உம்முடைய சனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும், தேவரீர் சகல சனங்களுக்கு முன்பாக ஆயத்தம் பண்ணின உமுடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டன" என்று தேவனை ஸ்தோத்திரித்தான்.

ஆயிரம் வருடக் கீர்த்தனைகள்.

90, 23, 110, 150-ம் சங்கீதங்கள்.

ஏராளமான ஓர் சனசமூகம் நானுவிதமான இராகங்களோடும் கீர்த்தனைகளோடும் பவனிபோகிறதுபோல என் மனக்கண்ணிலுல் காண்கிறேன். கண்ணுக்கெட்டாததூரம் அவர்கள் அணிவகுத்துநின்று, மெல்லென முன்னுக்கு நடந்து போகிறதுபோல் தோன்றுகிறது. அந்தச்சனத்திரள் ஏராளமாயிருப்பதுமன்றி விதம்விதமாயும் நிறுசு நிறுசாயுங் காணப்படுகின்றது. இதோ ஒரு அரசன் சிரசில் மகத்துவமான கிரீடந்தரித்து அலங்கிருதமான வஸ்திராதிகளும் பூண்டவனுய் நடந்துபோகிறுன். அதோ ஒரு கூட்டம் அடிமைகள் கைகளிலும் கால்களிலும் விலங்கிடப்பட்டு துக்கசாகரத்தில் மூழ்கினவர்கள்போல் முகங்குறுவினவர்களாய் அயர்ந்து நடந்துகொண்டிருக்கிறார்கள். இங்கே ஆழ்ந்த சிந்தையும் மன அடக்கமுமுள்ள வயோதிபனை ஞானி ஒருவன் தென்படுகிறுன். அங்கே அநேக வாலிபர் கூடி அக்களித்து ஆர்ப்பரிக்கிறார்கள். அவர்களெல்லாரும் முன்னுக்கே செல்லுகிறார்கள். ஒவ்வொரு கூட்டத்திலும் ஒவ்வொருவகையான இராகம் கேட்கிறது. ஒருவேளையில் சனங்கள் ஏகோபித்துப்பாடி ஆர்ப்பரிக்கிறதுபோலிருக்கிறது. இன்னொருவேளையில் தனித்த சப்தமாய் புலம்பிப் பிரலாபிக்கிறதுபோல தோன்றுகிறது. அப்புறம் இன்னராம் வீணை தம்புரு சுரமண்டலம் முதலிய கீதவாத்தியங்களோடும் பற்பல விதமான மேள தாளங்களோடும் அல்லேலூயா என்று சனங்கள் ஆர்ப்பரித்து முழங்குகிற சத்தம் கேட்கிறது.

இவ்வாறு பவனிபோகிறதுபோல நான் பாவித்துப்பேசின சனக்கூட்டம் தலைமுறை தலைமுறையாயுள்ள தேவனுடைய சனங்கள்தான். ஆதிமுதல் அவர்கள் முன்னுக்கு நடந்து வந்த விவரங்களை இதுவரையும் கவனித்துக்கொண்டு வந்திருக்கிறோமே. அவர்களுடைய வித்தாந்தங்களில் எத்தனையோ மாறுதல்களைக்கண்டோம். சில வேளைகளில் எல்லாம் சந்தோஷமும் மகிழ்ச்சியுமாயிருந்தது. மற்றும் வேளைகளில் எல்லாம் பாவமும் சங்கடமுமாயிருந்தது. எதிலிலும் வனுந்

தரத்திலும் அப்புறம் வாக்குத்தத்த தேசத்திலும் சிறையிருப்பின் பூமியிலும் தேவனுடைய சனங்களின் நடபடிக்கைகளைப்பார்த்தோம். ஒரு காலத்தில் அவர்கள் சத்துருக்களோடு போராடுகிறவர்களாயும், இன்னொரு காலத்தில் சமாதானமாய் வாழுகிறவர்களாயும், ஒரு வேளையில் பாவஞ்செய்கிறவர்களாயும் இன்னொரு வேளையில் அதற்காக மனஸ்தாபப்பட்டு தேவனிடம் திரும்புகிறவர்களாயும் காணப்பட்டார்களே. இப்படியே ஒரு தலைமுறை கழிந்துபோக வேறொரு தலைமுறை வருகிறது. இந்த ஏராளமான கூட்டம் நடந்து போகையில் அவர்களிடத்திற் கேட்கும் இராகத்தை நீங்கள் சற்று கவனிக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

அந்த இராகம் சங்கீதங்களில் அடங்கியிருக்கிறது. பாதேசிகளாய்ப்பயணம்பண்ணுகிற தேவனுடைய சனங்களிடத்தில் சந்தோஷத்திலுலோ துக்கத்திலுலோ பிறக்கிற இராகங்களைத்தான் இந்த ஆகமத்தில் கேட்கிறோம். இந்தக்கீர்த்தனை ஆயிரம் வருஷமாயுள்ளது. அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்தில் அது தொடங்குகிறது. நாற்பது வருஷக்காலம் வனாந்தரத்தில் கேட்கப்படுகிறது. தாவீது தன் தகப்பனின் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த பெத்லேகேமின் வெளிகளிலிருந்தும், அவன் இராசாவாய் தேவனை ஆராதித்த சீயோன் வாசல்களிலிருந்தும் அது இன்ப இசையாய் நம்முடைய காதுகளில் தொனிக்கிறது. சாலமோனின் மகத்தான ஆலயத்தின் பிராகாரங்களில் அது முழங்குகிறதைக்கேட்கிறோம். தூரமான பாபிலோன் ஆறுகளண்டையிலிருந்தும் துயர சத்தமாய் அது நமது காதுகளில் வந்து படுகிறதாயுமிருக்கிறது. இரண்டாம் தேவாலயம் கட்டி தேவனுக்குப் பிரதிஷ்டை செய்யப்பட்டபொழுது அல்லேலூயா கர்த்தரைத்துதியுங்களென்று வெற்றிப்பாட்டாய் ஆர்ப்பரிப்போடி பாடப்படுகிறதையும் கேட்கிறோம்.

சங்கீத ஆகமம் வேதசரித்திரங்களைப்போல பாலியருக்கு நன்மை விளங்காமலிருந்தாலும் இருக்கும். ஆனலும் கிறிஸ்தவன் வளர, அது மிகவும் அருமையானதாகும். நம்மை அறிந்துகொள்ள அது நமக்குப்போதிக்கிறது. செபிக்கிறதற்கு நமக்கு உதவி செய்கிறது. தேவனை ஸ்துதிக்கிறதற்கு ஏற்ற ஞானப்பாட்டுகள் அதிலுலே நமக்குக்கிடைக்கிறது. கிறிஸ்தனதருக்கு நாம் வழங்குகிற அருமையும் அன்புமான மேய்ப்பர் என்ற நாமத்தைச் சங்கீதத்திலிருந்து படித்துக்கொள்ளுகிறோம். இரட்சகர் எருசலேம் தேவாலயத்துக்கு வந்தபொழுது பிள்ளைகள் அவரை ஓசன்னா என்று கூப்பிட்டார்களே, அந்தப்பெயரும் சங்கீதத்திலிருந்து கற்றுக்கொண்டதானே. நம்முடைய ஞானப்பாட்டுகளில் வருகிற அல்லேலூயா என்ற சொல்லும் அந்த ஆகமத்திலிருந்தும் தேவாலயத்திலும் நாம் பிரியமாயும் இனிமையாயும் பாடுகிற எத்தனையோ ஞானப்பாட்டுக்கள் இந்தச்சங்கீதங்களிலிருந்து பிறந்தவைகள். இந்த இராகங்களைப் பவனிபோகிற அந்த மகா கூட்டத்தாரிடத்தில் கற்று நாமும் அதனுலே விசுவாசத்தோடும் சந்தோஷத்தோடும் அன்போடும் பாடிக்கொண்டு வருகிறோம்.

ஆகையால் இந்த வேதபாடக்குறிப்புகளை முடிக்கிறதற்குமுன் சங்கீதங்களைப்பற்றி இரண்டொரு வார்த்தைகளை சொல்லுவது பிரயோசனமாயிருக்குமென்று நம்புகிறேன். நீங்கள் சங்கீதங்களின் பொருளைக் கூடிய அளவு உணர்ந்துகொள்ளவும் அவைகளை இப்பொ

ழுதும் பிற்காலத்திலும் அதிகமதிகமாய் நேசித்து வாஞ்சிக்கவும் உதவியாயிருக்குமென்பதற்குஞ் சந்தேகமில்லை.

சங்கீதங்களெல்லாம் பாட்டுகள் என்று சொல்ல நீங்கள் கேள்விப்பட்டபொழுது ஒருவேளை ஆச்சரியப்பட்டிருப்பீர்கள். அது எப்படி? வேதபுத்தகத்தில் வாசக நடையான சரித்திர ஆகமங்கள் வாக்கியம் வாக்கியமாக எழுதப்பட்டிருக்கிறபடிதானே சங்கீதங்களும் எழுதப்பட்டிருக்கின்றன. நம்முடைய கவிகளுக்கு இருக்கிறதுபோல அவைகளுக்கு எதுகை தொடை முதலிய குறிப்புகளிருக்கிறதாகக் காணுமே. அவைகளை நமக்குள் வழங்குகிற இராகங்களிற் பாடவும் ஏதுவில்லையே. பின்னையெப்படி அவைகள் பாட்டுகளாகும் என்று ஒருவேளை நினைத்தாலும் நினைத்திருப்பீர்கள். அவைகளில் நேர்த்தியான கருத்துக்கள் அடங்கியிருக்கின்றன, மகத்தான உபமானங்களிருக்கின்றன, மிகுந்த உருக்கமும் உணர்ச்சியுமுண்டு, பாஷை நடையும் மகா இன்பமானதுதான். ஆனாலும்என்ன! இந்தச் சிறப்புகளெல்லாம் உரைவாசகங்களுக்கும் இருக்கலாமே என்கிறீர்களோ? நல்லது, சரித்திர ஆகமங்களுக்கும் இந்தச் சங்கீதங்களுக்கும் வேறு விசியாசங்கள் உண்டோ இல்லையோவென்று சற்று நுட்பமாய் ஆராய்ந்து பார்ப்போம். ஒருகாரியம் லேசாய்க் கண்டுகொள்ளலாம். அது என்னவென்றால், கொஞ்சங்குறைய ஒவ்வொரு வசனமும் இரண்டிரண்டு பங்குகளாக அல்லது சோடுசோடாக அமைந்திருக்கிறதுதான். உதாரணமாக,

23-ம் சங்கீதம்.

1. "கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்
நான் தாழ்ச்சியடையேன்.
2. அவர் என்னை புல்லுள்ள இடங்களில் மேய்த்து, [றார்."
அமர்ந்த தண்ணீர்களண்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகி

103-ம் சங்கீதம்.

1. "என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி,
என் முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி.
2. என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்திரி,
அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே.
3. அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து,
உன் நோய்களையெல்லாம் குணமாக்கி,
4. உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு,
உன்னைக் கிருபையினாலும் இரக்கங்களினாலும் முடிசூட்டி,
5. நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார். [கிறது."

கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வால வயதுபோலா

இவ்வாறே ஒவ்வொரு சங்கீதத்தையுமெடுத்து, ஒவ்வொரு வசனமும் சோடுசோடாய் அமைந்திருக்கிறதைக் காண்பிக்கலாம். மேலும் ஒவ்வொரு வசனத்திலும் இரண்டாம் பங்கு முதலாம் பங்கின் பொருளாயாவது, அதின் விஸ்தரிப்பாயாவது, அதின் முடிவுரையாயாவது, சில வேளைகளில் எதிர் நிலைப்பொருளாயாவது இருக்கிறதையுங் கண்டுகொள்ளலாம். நம்முடைய செய்யுட்களிலுள்ள எதுகைக்கு ஒப்பானது இதுதான். இந்த எதுகை சுரத்தில் அல்ல, கருத்திலேதான் விளங்கும். ஒரு திருஷ்டாந்தம்.

92-ம் சங்கீதம்.

1. "கர்த்தரைத் துதிப்பதும்,
உன்னதமானவரே உமது நாமத்தைக் கீர்த்தனம்பண்ணுவதும்,
3. காலையிலே உமது கிருபையையும்,

இரவிலே உமது சத்தியத்தையும் அறிவிப்பதும் நலமாயிருக்கும்."

இந்த வசனங்களில், நான் கருத்து எதுகை என்றதைத் திட்டமாய்க் கண்டுகொள்ளலாம். எப்படியென்றால், முதல் வரியில் "துதிப்பது" என்பதும், இரண்டாம் வரியில் "கீர்த்தனம்பண்ணுவது" என்பதும் எதுகைகள்.

மேலும், முதல்வரியில் "கர்த்தர்" என்ற பெயரும் இரண்டாம்வரியில் "உன்னதமானவர்" என்ற பெயரும் எதுகைகள்.

அப்படியே இரண்டாம்வசனத்தில் "காலையிலே" என்பது "இரவிலே" என்பதுக்கும், "கிருபை" என்பது "சத்தியம்" என்பதுக்கும் எதுகைகள். இந்தக் குறிப்புகளைக்கொண்டு, நம்முடைய செய்யுட்களைப்போல இந்தச் சங்கீதங்களும் செய்யுள்தானென்பதைக் கண்டுகொள்வீர்களென்று நினைக்கிறேன்.

நீங்களே இதுகாரியத்தை இன்னம் ஆராய்ந்து தெளிந்துகொள்ளும்படி கோருகிறேன். அப்படி ஆராய்ந்து பார்ப்பீர்களானால், இந்தச் சங்கீதங்கள் மாத்திரமல்ல, தீர்க்கத்தரிசன ஆகமங்களும் வேறு சில பாகங்களும் செய்யுள் முறையாயெழுதப்பட்டிருக்கின்றன என்று தெரியவரும். வேத செய்யுளைப்பற்றி மற்றும் பல விசேஷங்களையும் கண்டுகொள்ள ஏதுவிருக்கும். அதுகளையெல்லாம் இங்ஙனம் விவரித்தமுடியாது.

இப்பொழுது சங்கீதங்களைப்பற்றி இன்னம் ஒரு விசேஷத்தை யோசித்துக்கொள்வோம். ஒருவேளை நீங்கள் இதுவரையும் கவனியாமலிருக்கலாம். அது என்னவென்றால் இந்த ஆகமத்தில் ஐந்து பாகங்களிருப்பதுதான். தேவனுடைய பூர்வீகச் சனங்கள் வழங்கின ஐந்து கீர்த்தனைப் புஸ்தகங்கள் நமக்கு கிடைத்திருக்கிறதென்றும், அவ்வைந்தும் இந்த ஒரே சங்கீத ஆகமத்தில் அடங்கியிருக்கின்றனவென்றும் எதார்த்தமாய்ச் சொல்லலாம். ஒவ்வொரு பாகத்தின் முடிவிலும் வருகிற ஸ்துதி வாக்கியத்தைக்கொண்டு மேற்படி பகுதிகளை அறிந்துகொள்ளலாம். அப்படியே முதலாம் பாகம் நாற்பத்தோராம் சங்கீதத்தில் முடிகிறது. இதில் வருகிற ஸ்துதி வாக்கியமாவது, "இஸ்ரவேலின் தேவனுகிய கர்த்தர் அநாதியாய் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் ஸ்தோத்திரிக்கப்படத்தக்கவர்; ஆமென், ஆமென்" என்பதே.

இந்தப் பாகத்திலுள்ள சங்கீதங்களில் நாலு மாத்திரம் தவிர மற்றச் சங்கீதங்களெல்லாம் தாவீதின் சங்கீதங்கள் என்று குறிப்பித்திருக்கிறது.

இரண்டாம் புஸ்தகம் எழுபத்திரண்டாம் சங்கீதத்தோடு முடிகிறது. இதின் கடைசியில் வருகிற ஸ்துதி வாக்கியம் யாதெனில், "இஸ்ரவேலின் தேவனுயிருக்கிற கர்த்தராகிய தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக; அவரோ அதிசயங்களைச் செய்கிறவர். அவருடைய மகிமைபொருந்திய நாமத்துக்கு என்றென்றைக்கும் ஸ்தோத்திரமுண்டாவதாக; பூமி முழுவதும் அவருடைய மகிமையால் நிறைந்திருப்பதாக, ஆமென், ஆமென்" என்பதே. அதன்றியும் ஈசாயின் புத்திரனுகிய தாவீதின் விண்ணப்பங்கள் முடிந்தது" என்றுஞ் சொல்லியிருக்கின்றது. இவைகளிற் சில சங்கீதங்கள் ஆசாப்பினாலும் மற்றவர்களாலும் இயற்றப்பட்டிருந்தபோதிலும், அவைகள் இனம் தாவீதின் விண்ணப்பங்களென்றே சொல்லப்படுகிறது.

மூன்றும் புஸ்தகம் இவ்விடத்திலிருந்து தொடங்கி எண்பத்தொன்பதாம் சங்கீதம் வரையும் வருகிறது. "கர்த்தருக்கு என்றென்

றைக்கும் ஸ்தோத்திரமுண்டாவதாக, ஆமென், ஆமென்" என்று இந்தப் பகுதி முடிகிறது. இதிலுள்ள மிகுதியான சங்கீதங்களின் தலைப்பில், தேவாலயத்தின் இராகத் தலைவர்களாகிய ஆசாப் கோராகின் புத்திரர் என்றவர்களுடைய பெயர்கள் காட்டியிருக்கிறது. இவைகளுக்குள் தாவீதின் சங்கீதம் ஒன்றுமாத்திரங் காண்கிறோம்.

அப்புறம் ராலாம் புஸ்தகம் நூற்றியாறும் சங்கீதத்தில் முடிகிறது. இதற்கு முடிவுரை வாக்கியம் "இஸ்ரவேலின் தேவனுகிய கர்த்தர் அநாதியாய் என்றென்றைக்கும் இஸ்தோத்திரிக்கப்படத்தக்கவர்; சனங்களெல்லாரும் ஆமென் அல்லேலூயா என்பார்களாக" என்பது. இந்தப் பகுதியிலுள்ள முதலாம் சங்கீதம் வனாந்தரத்தில் மோசேயினால் எழுதப்பட்டதாகச் சொல்லப்படும். தாவீதினால் இயற்றப்பட்ட சங்கீதங்கள் இரண்டுமாத்திரம் இதிலுண்டு.

ஐந்தாம் புஸ்தகத்தில் நூற்றியேழுமுதல் நூற்றியைம்பது வரையுமுள்ள சங்கீதங்கள் அடங்கும். இதிலும் சில சங்கீதங்கள் தாவீதினால் இயற்றப்பட்டவைகள். மற்றவைகளோ அதற்கு வெகு காலத்துக்குப்பின் எழுதப்பட்டவைகள் என்பதற்குச் சந்தேகமில்லை. நூற்றுநாற்பத்தாறுமுதல் முடிவுவரையுமுள்ள சங்கீதங்கள் ஒவ்வொன்றும் "அல்லேலூயா" அல்லது கர்த்தரைத் துதியுங்கள்" என்று தொடங்கி முடிகிறது. இவைகளே யூதர்கள் மகா அல்லேலூயா என்று சொல்லுவது வழக்கம். தங்கள் விசேஷித்த பண்டிகை நாட்களில் இவைகளே அவர்கள் பாடியும் வந்தார்கள். கிறிஸ்துநாதர் கடைசிவிசையாய்ப் பஸ்காப் போசனத்தைப் புசித்துக் கர்த்தருடைய இராப்போசனத்தையும் ஏற்படுத்திய பிறகு ஒலிவமலைக்குப் போகுமுன், தமது சிஷ்யர்களோடு ஸ்தோத்திரப்பாட்டைப் பாடினதாகச் சொல்லியிருக்கிறதே, அந்த ஸ்தோத்திரப் பாட்டு இவைகள்தானென்றும் நிதானிக்கத்தக்கது.

இந்த ஐந்தாம் புஸ்தகத்திலேயே "ஆரோகண சங்கீதங்கள்" அல்லது படிகளின் பாட்டுக்கள் என்ற சங்கீதங்களையுங் காண்கிறோம். இவைகள் நூற்றியிருபது முதல் நூற்றுமுப்பத்தாறுவரையுமுள்ள சங்கீதங்களே. "ஆரோகணம்" என்பதற்கு "படிகள்" அல்லது "ஏறிப்போதல்" என்பது பொருள். சனங்கள் எருசலேமுக்குப் போகும்பொழுதாவது தேவாலயத்துக்கு ஏறிப்போகும்பொழுதாவது இந்தச் சங்கீதங்கள் பாடப்பட்டுவந்ததினால் மேற்படி பெயர் வழங்கியிருக்கலாம். இவைகள் மகா இனிமையும் கேர்த்தியுமான பாட்டுக்கள். மிகுதியானவைகள் கன்றியறிதலான பூரிப்பும் அக்களிப்பும் நிறைந்தவைகள். தேவாலயத்தில் பண்டிகை ஆசரிப்புக்காக எருசலேமுக்குக் கூட்டம் கூட்டமாய்ப்போகும் சனங்கள் பாடுவதற்கு மிகவும் ஏற்றவைகள். அவர்கள் வழி நடக்கும்பொழுதும் மத்தியான வெயிலுக்கு நிழலிலுட்கார்ந்து இளைப்பாறும்பொழுதும் இரவில் தங்கள் கூடாரங்களில் கூடியிருக்கும்பொழுதும் தாவோனின் இந்த இன்பமான பாட்டுக்களைப் பாடியிருப்பார்கள். அப்படியே நாமும் பரம எருசலேமுக்குப் பயணம் போகிறமார்க்கத்தில் சந்தோஷமாய்ப் பாடிக்கொண்டு நடந்துபோவதற்கும் அவைகள் ஏற்ற பாட்டுக்கள்தான். தேவசனமுழுமையிலும் இந்தப் பதினைந்து சுருக்கமான சங்கீதங்களைப் பார்க்க அதிக மதுரமும் இன்பமுமான கீர்த்தனைகளைக் காண்பது மிகவும் அரிது.

மகமது ஜீவிய விருத்தாந்தம்.

(தொடர்ச்சி.)

கோரைசியனென்னப்பட்டவர்கள் இந்த வாலிபத்தனமான பேச்சையிட்டு நகைத்தபோதிலும், அவர்களிற் சிலர் மனதில் அழுத்தண்டி அந்தாள் முதல் அந்தரங்கமாய் அவரிடத்தில் வந்து தங்கள் கையைத் தீர்க்கதரிசியின் கைக்கு ஊடே வைத்து கடவுள் ஒருவனென்றும் மகமதுவே அவருடைய தீர்க்கதரிசியென்றும் அரிக்கையிட்டார்கள். இதற்குப் பின் மகமதுவென்பவர் மெக்காவில் வெளிப்படையாய்ப் பிரசங்கிக்க ஆரம்பித்தார். தேவன் ஒருவனென்பதை உறுதிப்படுத்தவும், விக்கிரக வணக்கத்தைக் கொலைத்துப்போடவும், மனிதரை மெய்யான ஒரே மார்க்கத்திற் சேர அழைக்கும்படியாகவும், கடவுளாலே தாம் உலகத்தில் அவரது தீர்க்கதரிசியாயிருக்க அதிகாரம் பெற்றிருப்பதாய் அவர்களுக்கு விளம்பினார்.

அவருடைய ஜனங்கள் அவரின் உபதேசத்தைப்பற்றி முதலாவது ஆனந்தாரவும் கடையாய் சோர்படைந்தவர்களாய் அவரைத் துன்பப்படுத்தத் தொடங்கினார்கள். அவர்கள் அவருடைய சிறிய தகப்பனாரில் ஒருவனுகிய அப்புத்தாலெப்பை அவருக்கு விரோதியாக்கும்படியாக முயற்சித்தும் அவரே மகமதுவைவிட்டுப் பிரிக்கக் கூடாதிருந்தது.

அவருடைய சிஷ்யர்களையுந் துன்பப்படுத்தினதுமன்றி, விற்பனை கொள்வினை விவாக விஷயங்களில் இனிமேல் மகமதுவைச் சேர்ந்தவர்களுடன் கலந்துகொள்ளக்கூடாதென்பதையும் பிரமாணத்துடன் ஏற்பாடு செய்துகொண்டார்கள்.

அக்காலத்தில் தம்முடைய பட்சத்தில் நடந்ததாகக் கூறின ஒரு அதிசயத்தினால் மகமது என்பவருடைய கீர்த்தி அதிகமாயிற்று. தமக்கு விரோதமாயிருந்த கோரைஷ் வம்சத்தாரால் செய்யப்பட்ட புறம்பாக்குதல தீர்ப்பைக்குறித்து முன் சொன்னோமே. அந்தத் தீர்ப்பை அவர்கள் பத்திரத்தில் எழுதித் தங்கள் விசேஷித்த ஸ்தலமாகிய காபாவிலே பத்தோபஸ்தாய் வைத்திருந்தார்கள். நடந்த காரியத்தை மகமது இரகசியமாய் அறிந்திருக்கலாம். அதின்பேரில் விக்கிரகாராதனைக்காரரான கோரைஷ் வம்சத்தார் செய்த கட்டுப்பாடு அபாத்தென்று காட்டும்படி கடவுள் திருநாமந்தவிர மற்றெல்லாவற்றையும் அழிக்கும்படி 'ஒரு பூச்சியை (கரையானை?) அனுப்பினார் என்று தமது பெரிய தகப்பனுகிய அபுத்தாலிப்புக்குச் சொன்னார். அபுதாலிப் காரியந் தெரிந்தவுடனே சோதித்த பின், அப்படியல்ல பெய்ப்பு காரியந் தெரிந்தவுடனே சோதித்த பின், அப்படியல்ல பெய்யென்றிருந்தால் மகமதுவை அவர்கள் இஷ்டத்துக்கு ஒப்புவிக்கவும் தாம் சொன்னது மெய்யென்று காணப்பட்டால் அவர்கள் தங்கள் விரோதத்தை விட்டுவிடாவிட்டாலும் அந்தக் கட்டுப்பாட்டிலே அடங்கியதெல்லாவற்றையும் தள்ளிவிடவும் சம்மதிக்கும்படியாய் எதிர்க்கட்சிக்காரரிடத்தில் கேட்டுக்கொண்டான். இதற்கு அவர்கள் உடன்பட்டார்கள். உடனே சோதனை நடந்தது. சோதிக்கவே கோரைஷ்

கட்சிக்காரருக்கு வெட்கமும் ஆச்சரியமுண்டாகத்தக்கதாய் அபிதாலிப்பு என்பவருடைய சொல் மெய்யென்று தலைங்கிற்று. "சர்வ வல்லமையுள்ள தேவனுடைய உம்முடைய நாமத்தினாலே" என்கிற வார்த்தைகள் தவிர மற்றவைகளெல்லாம் அழிந்துபோனதாகக் காணப்பட்டது. இந்தச் சங்கதியினால் அவருடைய சீஷர்கள் பெருகினதோடு தாம் திரும்பவும் மக்கத்துக்கு வந்து சஞ்சரிக்கும்படி இடங் கிடைத்தது. அராபியர் எத்திக்கிலுமிருந்து கூட்டங் கூட்டமாய் மக்கத்துக்குப் பரிசுத்த யாத்திரைபண்ணுகிற சமயம் மகமதுவுக்கு பலி ரங்கமாய் உபதேசம்பண்ணுகிறதற்கு சிரேஷ்ட காலமாயிருந்தது. இந்தச் சமயங்களை மகமது வீணாய் இழந்து விடவுமில்லை. இப்படிப்பட்ட காலத்தில் சண்டை விரோதங்கள் எல்லாம் திட்டமாய் விலக்கப்பட்டிருந்தன. என்றாலும் அக்காலத்திலும் அவருக்கு விரோதமாயாவது அவர் பட்சமாயாவது சனங்கள் அதிக வைராக்கியங்கொண்டதினால் அவருடைய பிரசங்கம் அடிக்கடி கட்சிக்காரருடைய சண்டையினாலும் வாள்களுடைய மோதுதலினாலும் தடைப்பட்டுப்போயிற்று. ஒரே மெய்த் தேவனுடைய வணக்கத்தை நிலை நிறுத்தி விக்கிரகாராதனையைக் கீழே தள்ளும்படி தாம் கையிட்டுக்கொண்ட பெரிய வேலையில் தாம் பயப்படவும் அதைரியப்படவும் இடங்கொடுக்கவேயில்லை. ஆனாலும் இச்சமயத்தில் எழுதப்பட்ட கோரானிலடங்கிய சில அதிகாரங்களினால் அவருடைய ஜனத்தார் சாதித்த பகை, விரோதம் அவருக்குப் பெரிய சஞ்சலமாயிருந்ததென்றறிகிறோம். தளர்ந்து போகாமல் அவர் காண்பித்த தைரியத்தையும் விடாமுயற்சியையும் பற்றி நாம் புகழாமலிருக்கக்கூடாது. அவர் பெரிய தகப்பனுடைய அபுதாலிப்பு மரித்துப்போனதினாலே ஒரு பலத்த சிநேகிதனே இழந்துபோய் சிலகாலம் சமீபத்திலுள்ள அன்னிய கிராமத்துக்கு அடைக்கலந் தேடி ஓடவேண்டியதாயிருந்தது. அப்போதும் அவருக்குப் பட்சமும் நம்பிக்கையும் ஆலோசனைக்காரியுமாயிருந்த அவருடைய மனைவியையும் இச்சமயத்தில் இழந்துபோனார். அவருடைய கலியாண விஷயங்களைப்பற்றி இவ்விடத்தில் சில வார்த்தைகள் சொல்வது தகுதியாயிருக்கும். காடிஜா உயிருள்ளளவும் அவர் வேறொருத்தியையும் விவாகம்பண்ணவில்லை. அவள் சீவித்துப்போகவே அவர் தம்முடைய ஆசைக்கு இணங்கித் திட்டமாய்ப் பதினேந்து ஒருவனை இருதாரமட்டும் மனைவிகளின் இலக்கத்தை அதிகப்படுத்துவதில் அவர் ஓயவில்லை. இந்தக் கலியாணங்களில் அநேகம் சுற்றியிருக்கிற அதிகாரிகளுக்குள் தம்மை நிலை நிறுத்தும்பொருட்டே நடந்ததென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் வாலிபமும் அழகுமுள்ள ஸ்திரீகளோடே நடந்த கலியாணங்கள் அநேகமுண்டு. அவர் வயசாளியான பிற்பாடும் பாலியத்தையும் அழகையும் கண்டமாத்திரத்தில் தமது நெஞ்சை அடக்கிக்கொள்ள சக்தியிருக்கமாட்டாது. அவர் புது மனைவியாகிய அயெஷாவை மணம்புரியும்பொழுது அவள் சிறுவியானதால் தகுந்த வயதாகுமட்டும் தமது சீஷர்களிலொருவனுடைய விதவையை காடிஜாவுக்குப் பின்பு விவாகம்பண்ணிக்கொண்டார். ஆனால் சாகுமட்டும் அயெஷாவை அதிகமாய் நேசித்து மரிக்கும்போழுதும் அவள் மடியிலேதான் சாய்ந்து சீவித்துப்போனார்.

பிரசங்கக்குறிப்பு.

தானியேல் செபத்தை விடாமல் நடத்துதல்.

(By the Rev. John Richardson, M. A. Vicar of Camden Church Camberwell.)

தானியேல். 6: 10.

"தானியேலோ வென்றால், அந்தப் பத்திரத்துக்கு கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்த போதிலும், தன் வீட்டுக்குள்ளே போய்..... முழங்கால்படியிட்டுச் செபம்பண்ணி ஸ்தோத்திரஞ்செலுத்தினான்.

இந்தக் குரூரனுடைய கட்டளை அவனுடைய அதிகாரத்துக்கு மிஞ்சினது. ஜனபவாத வர்மத்தால் சாற்றப்பட்ட குற்றத்தை லேசில் ஒத்துக்கொள்ளுதல்—மனநேர்மையான ஊழியத்துக்குக் குரூரமான பதில் செலுத்தப்படுதல்.

தானியேல் 85 வயதுள்ளவனும் இராசாவுக்கு இரண்டாவது அதிகாரியாயுமிருந்தான். அவனுடைய விருத்தாப்பியத்தைப்பற்றி மனதருகவாவது அவனுடைய அனுகூலமான ஊழியத்தை நினைக்கவாவது இல்லை.

I. அவன் கடைப்பிடித்த ஆசாரனை.

(1) அது அவனுடைய ஸ்தாபகமான வழக்கம்.
(2) அது அவனுடைய வீட்டறைக்குள் நடந்தது.
(3) முழங்காலில் நின்று நடத்தப்பட்டது.

அப்படியே ஸ்தேவான், பேதுரு, பவுல், திருப்பட்டணத்துக் கிறிஸ்தவர்கள், சாலோமோன் இராசா, இயேசுவானவர், ஆகிய இவர்களும் முழங்காலில் நின்று செபஞ் செய்திருக்கிறார்கள். (அப். 7. 60: 21, 5: 9. 40: 20, 36: 1 இராசா. 8, 54: லூக். 22. 41,)

(4) நிதசரி மூன்று தரம் நடத்தப்பட்டது.
(1) திட்டமாயும்.
(2) பலமுறையும்.

II. அவன் சோதிக்கப்பட்ட விதம்.

(1) இராஜா யாதொன்றை வணங்கச் சொல்லவில்லையே.
(2) செபத்தைச் சமயத்துக்குமாத்திரம் நிறுத்தவேண்டியது.
(3) நிறுத்தாவிட்டால் நேரிடும் தண்டனை கடுமையானது.

III. அவனை ஸ்திரப்படுத்தினவைகள்.

(1) ஒரு வேளை தேவன் உதவியாய்வருவார்.

(2) அப்படியில்லாமல் மரணம் நேரிட்டாலும் அது மோட்சவாசல்.

(3) ஜீவனாலாகிலும் சாவினாலாகிலும் தேவன் மகிமைப்படுகிறார்.

IV. அவனுக்குண்டான விடுதலை.

(1) அவனுடைய இருதயத்தில் களிப்பு மிகுதி.

(2) யூதரின் ஆவி எழுப்புதலடைதல்.

(3) இராசா சாட்சி பகர்ந்தான்.

(4) எகோவாவின் பேர் பிரஸ்தாபமாதல்.

படிப்பினை.

முகஸ்துதிக்காரர், பெருமைக்காரர், வஞ்சகர் எல்லாருஞ் சூழ நிற்க தேவனுடைய தாசன் அவர்கள் நடுவில் மகிமை நிறைந்தவனாய் நின்றான்.

கனம் ஹோஸ்லி ஐயரவர்களும் அம்மாளவர்களும் முதற்றட வையாய் சாட்சியாபுரத்துக்கு வந்த சந்திப்பில் கூடின மிசியோன் உத்தியோகஸ்தர், சபையாரால் வாசிக்கப்பட்ட

மங்கள வாழ்த்து.

சங்கைபொருந்திய எங்கள் அருமை அய்யாவே!

தேவானுக்கிரகத்தினாலே வட திருநெல்வேலி சுதேச போதகன்மாரும் சபையின் மற்ற உத்தியோகஸ்தரும் சபையாருமாகிய நாங்கள் இந்தத் தினத்தில் தங்களுக்கும் கனம்பொருந்திய அம்மாளவர்களுக்கும் சுபமங்கள வாழ்த்துதல் சொல்லக் கூடியிருக்கிறோம்.

கனம்பொருந்திய மேடோஸ் ஐயரவர்களும் அன்புள்ள அம்மாளவர்களும் எங்களை விட்டுப் பிரிந்து சீமைக்குப் போனபின் தாங்கள் இதுவரையில் ஒன்றியாய் எங்கள் முந்தின அருமைப் போதகரவர்களுடைய இடத்தில் எங்கள் நடுவில் தேவ ஊழியத்தை நடத்திவந்தீர்கள். இப்போது தங்களுக்கு நல்ல துணையும் ஆறுதலுமான திருமங்கிலியாகவும், எங்களுக்குக் கனம் மேடோஸ் அம்மாளவர்கள் மூலமாயுண்டான நன்மைகள், சலாக்கியங்கள் மீண்டும் கிடைக்கத்தக்கதாகத் தாயாகவும் இருக்கும்படி இந்த உத்தமியான மங்கையரை மணம்புரிந்து, தாங்களும் அவர்களும் எங்கள் நடுவில் பூமானும் பூவையுமாக வந்திருப்பதைக் காண்பது எங்களுக்குப் பெரிய சந்தோஷத்தைக் கொடுக்கிறதென்று அறிவித்து, அதற்காகக் கருணை நிறைந்த கடவுளைத் தோத்திரிக்கிறோம்.

கனம்பொருந்திய ஐயாவே, தங்களுடைய கௌரவ பிதா அவர்கள் இராசாங்க உத்தியோகம் பார்த்துவந்த தங்களுடைய ஜனன ஸ்தலமாகிய இந்த ஜில்லாவில் தானே அவர்களுடைய அருமைப் புதல்வராகிய தாங்கள் தேவ ஊழியக்காரராக வந்து தமிழப் பாஷையைக் கற்று எங்கள் நடுவில் இப்போது விவாக புருஷராக இருந்து நன்மை செய்ய நேர்ந்தது தேவாதீனமே.

கனம்பொருந்திய அம்மாளவர்களும் சீமையிலிருந்து வந்த நூதன துரைசானியாயிராமல் எங்கள் பாஷையை நன்றாய்க் கற்று இத்தேச மதகுலாசாரங்களை அறிந்தவர்களாயிருப்பதாலும், அவர்களுடைய சங்கைத் தகப்பனாரவர்களுடனிருந்து சபைகள் பள்ளிக்கூடங்கள் முதலியவற்றின் காரியங்களை நிர்வகிப்பதில் பரீட்சைப்பட்டவர்களாயிருப்பதாலும் தங்களுத்தியோக காரியாதிகளை நடத்திவருவதில் அவர்கள் தங்களுக்குப் பேருதவியாக இருப்பார்களென்றும், அதால் இந்தச் சேகரமும் கனம் மேடோஸ் அம்மாளவர்கள் காலத்திலிருந்தது போலவே க்ஷேமம்பெறக் கூடுமென்றும் நிச்சயிக்கிறோம்.

கனம் மேடோஸ் ஐயரவர்களும் அம்மாளவர்களும் எங்களுக்கிருந்தவண்ணமே தாங்களும் கனம் அம்மாளவர்களும் இருந்து எங்கள் ஆத்தும சரீர க்ஷேமங்களைக் கருதிவருவீர்களென்று நம்புகிறோம்.

கிருபை நிறைந்த தேவன் தாங்களும் அன்புள்ள அம்மாளவர்களும் அவருடைய திவ்விய ஊழியத்தை எங்கள் நடுவில் இடையூறின்றி நடத்தி எக்காலத்திலும் தேவ நாமத்துக்கு மகிமையான கருவிகளாகவும் எங்கள் சபைக்கு ஆசீர்வாதமாகவும் இருக்கத்தக்கதாகத் தங்களுக்கும் அவர்களுக்கும் இகபர நன்மைகளை அபரிமிதமாக ஈந்தருளுவாராக. அவரே உங்களுக்கு நற் சுகத்தையும் பெலனையும் தீர்க்காயுசையும் அருள்வதோடு இகத்துக்கும் இல்லறத்துக்குமுரிய மற்ற ஆசீர்வாதங்களாகிய உயர வானத்திலிருந்துண்டாகும் ஆசீர்வாதங்களினாலும் கீழே ஆழத்திலிருந்துண்டாகும் ஆசீர்வாதங்களினாலும் புத்திர பௌத்திர சந்தானங்களுக்குரிய ஆசீர்வாதங்களினாலும் உங்களை ஆசீர்வதித்து நீங்களும் உங்கள் குடும்பங்களும் தழைத்திருக்கச்செய்வாராக. இப்படியே தேவ ஊழியக்காரரும் சீயோனின் நன்மையை விரும்புகிறவர்களுமான யாவரும் சுகித்திருக்கவும் இந்தத் தேசத்திலுள்ள திருச்சபையும் மற்றும் உலகமெங்குமுள்ள திருச்சபையும் நன்றாயிருக்கவும் ஆண்டவர் கிருபைபுரிவாராக.

தங்களுடைய விவாகத்தின் ஞாபகத்திற்கென்றும், சிவகாசிச் சேகரத்தாராகிய எங்களெல்லாரையும் எப்போதும் தங்களுடைய சமுசார ஜெபத்தில் ஞாபகப்படுத்திக்கொள்வதற்கென்றும், தங்களுடைய சமுசார ஜெப உபயோகத்திற்காக நாங்கள் எங்கள் நல்விருப்பங்களுடன் இச்சமையத்தில் ஈகிற இந்த இங்கிலீஷ் வேதாகமத்தைத் தாங்கள் தயவாய் ஏற்றுக்கொள்ளத் தாழ்மையாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ருஷிய போர்ச்சேவகரும் வேதாகம சங்கமும்.

புரூத் ஆற்றைக்கடந்த பிற்பாடி ருஷிய சேனையின் போர்ச்சேவகர் முழு வேதாகமங்களும் பங்குகளுமாக 60000-க்கு அதிகமான புத்தகங்கள் வாங்கியிருக்கிறதாக (British and Foreign Bible Society) பிரித்தானிய, புறத்தேசத்து வேதாகம சங்கத்தாருடைய முதலாளியாரால் லண்டன் பட்டணத்து டைம்ஸ் பத்திரிகையிலே பிரசுரப்படுத்தப்பட்ட நிருபத்தால் அறியலாகிறோம். ஷே. சங்கத்தைச்சேர்ந்த கோல் போர்ட்டர் பியூக்கொஸ்ற்றிலிருந்து எழுதுகிறதென்னவெனில் "நாம் சொல்லப்போகிறது ஆச்சரியப்படத்தக்கதாயினும் எவ்வளவேனும் பொய் இல்லாதது. அதென்னவெனில் யுத்தக்கருவிகள் தேகமெங்கும் அணிந்திருந்த காஷேக் என்னும் ருஷிய போர்ச்சேவகர் தங்களுக்குப் புதிய ஏற்பாடுகளைக்கொண்டு வந்ததற்காக எங்களுக்கு அதிகமாய் வந்தன உபசார வார்த்தைகள் சொன்னதுமல்லாமல் நாங்கள் சற்றென்கிலும் இடங்கொடுத்திருந்தோமானால் இந்த வீரர் தங்களுடைய பலத்த கைகளால் எங்களை அணைத்துக்கட்டிக்கொண்டிருந்திருப்பார்கள். அவர்கள் வாங்குகிறவர்களாய் மாத்திரமல்ல வாசிக்கிறவர்களாயுமிருக்கிறார்கள். அவர்களுக்கு வாசிக்கத்தெரியும். இதவிஷயத்தில் அவர்கள் திறமை ஆச்சரியத்தையுண்டாக்கிற்று. ருஷிய போர்ச்சேவகரில் பெரும்பாலும் கொஞ்சப்பேர் மாத்திரம் வாசிக்கத்தெரியாதவர்கள். எல்லாரும் தவறின்றிப் போர்வேலையைப்படிக்க வேணுமென்று சில வருஷங்களுக்கு முன்னே கட்டளை பிறந்ததோடே நூதனமாய்ப் பட்டாளத்தில் சேருகிற போர்ச்சேவகருக்கு உடனே வாசிக்கக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்றும், பட்டாளத்து தலைகளுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டதே இதற்குக் காரணம். ருஷியாவிலே கொடிய மாரிகாலத்தில் உறைந்த மழை மிகுதியாய்ப்பெய்து கபாத்து நடப்பிக்கக் கூடாதிருக்கையில் எழுத்துப்படிப்பு இவர்களுக்குப் பாடமாகத்தோற்றாமல் சந்தோஷமாகவேயிருக்கிறது. அவர்கள் சாவகாசத்தில் பாளையத்திலாவது ரோட் ஓரத்திலாவது உட்கார்ந்துகொண்டு வாசிப்பதைப்பார்ப்பது கண்ணுக்கு மகிழ்ச்சியுண்டாக்கத்தக்கது. பட்டாளத்துத் தலைமார்கள் தாங்களே கோல்ப்போர்ட்டரிலிருந்து பிரதிகளை வாங்கித்தங்களைச்சூழ நிற்கிற சாதாரண போர்ச்சேவகருக்குக்கொடுப்பதைப் பார்க்கலாம்."

Spinning and Weaving Mills in Madras—சென்னையில் நூனூற்கும்-சவளி நெய்யும் யந்திரங்கள்—இப்பொழுது பெரியமெட்டில் ஒன்று, ராயபுரத்தில் ஒன்று ஆக இரண்டு யந்திரங்களில் நூல்நூற்கும் தொழில், சவளி நெய்யும் தொழில் நடக்கின்றது. ராயபுரத்து யந்திரப்பிரயோகம் நடத்துவோர் பம்பாய்ப் பார்லிய வர்த்தகர்.

அந்த யந்திரத்தைச்சேர்ந்த பஞ்சு பன்னும் கருவி மூப்பதைந்து; ஆகமனை ஐம்பத்தேழு; நூற்கும் கருவி இருபது; இராட்டினம் 14,960. தினம் ஒன்றுக்கு நூற்கும் பஞ்சு ஆறு சிப்பம். அன்றன்று நூற்கும் இழை 2500, 3000 முத்தல் வாயும் தொகையேறும். மேற்சொல்லிய வைகளன்றி, இப்பொழுது பின்னும் இரண்டு யந்திரசாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவற்றில் ஒரு கட்டடம் முக்காலே மூன்றுவீசம், வேலை முடிந்தது. இவ்வருஷ அறுதியோடு தொழில் ஆரம்பிக்க எத்தனமாகும். மற்றது சிறிது காலம் செல்லும்.

தினவர்த்தமானி.

CEYLON.

இலங்கை.

தென் இந்தியாவில் வியாபித்துக் கெடுதிசெய்யும் பஞ்சம் இத்தீவுப்பிரஜைகளுக்கும் உறைக்கத்தொடங்குகின்றது. மாத்தரை-காலி நீர்க்கொழும்பு-ரத்தினபுரி என்னும் இடங்களில் வசிப்பவர்கள் பஞ்சக்கொடுமையால் வருந்திப்பிரலபிக்கும் சத்தம் கேட்கின்றது. சென்ற மே மாசத்திற்குப்பின் அகவிலை இரட்டிக்கதிகம். இன்னும் ஏறப்பார்க்கின்றது. செலவிற்குச் சரக்கு தீர்ப்பாய் இல்லாதிருக்கவில்லை. அரிசி வியாபாரத்தைச் செட்டிகள் ஒருதலைப்பாடாய்க் கட்டிக்கொண்டதனால், யாவரும் ஏகோபித்துத் தமக்கு இஷ்டமானபடி விலையை ஏற்றிக்கொண்டுவருகிறார்கள். தங்கள் முதலுக்குக் காணிகாணியாய் ஏற்றிப் பெருலாபம் பெறுவதன்றி, ஏழைகள் படும் தயரை நினைந்து மனம் கசிந்து விலையைத்தர்மப்படி தணிப்பது அவர்கள் பிரகிருதியல்ல. இந்த அவஸ்தை உண்டாயிருக்கும் காலத்தில் எங்கள் தீவில் விளைவும் குன்றியது பரிதாபம்! இத்தீவில் அங்கங்கிருந்து வரப்பெற்ற செய்தியால் விளைவு எங்கும் இளைத்ததெனத்தோன்றுகிறது. இந்தியாவில் பிறக்கும் ஆண்டும் சிறிது காலம் பஞ்சம் நீடிக்குமெனத் தோன்றுவதால் இங்குள்ள ஏழைகளுக்கு விளையும் நிலம் இம்மட்டம் மட்டல்ல. இப்படி இருக்கும், தென்னிந்தியாவில் பஞ்சம் தவிர்க்க ஆமளவிற்கு உதவும்படி கேட்டகேள்வியைச் சிறக்கணித்துவிடாமல், அவரவர் தம் இயல்பிற்குத்தக்கபடி திரவியம் சேர்த்து அனுப்பினோம். ஆனால், இப்பொழுது இங்கும் கரிப்பு தலைக்கொள்ளப் பார்ப்பதனால், இனி இங்குள்ள ஏழைகளை ஆதரிக்கும் உபாயம் செய்வதொழிய, சென்னைக்குமேற்பணம் சேர்த்தனுப்பச் சந்தர்ப்பிக்காது.

(ஷே.)

Curiosity—போன திழமை பெங்களூர் போலீசுக்கு இருகைகளும் பாதங்களுமில்லாத ஒரு தலுக்க முடவனை, சுவேசிலிருந்தவந்தல்ல சுகமுள்ள கறுத்த அரபியை, ஒரு கூலிக்காரன் தூக்கிக்கொண்டுபோய் ஒரு பெஞ்சின்பேரில் நிறுத்திவைத்தான். மேஸ்திரொட்டி தனை அவனை வெகு ஜனங்கள் ஆச்சரியமாக சூழ்ந்து பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டு, அவனிடம் போய் உனக்கு என்ன வேணுமென்று கேட்க, அவன் தன்னை அடித்த ஒருவன்பேரில் சம்மன் கொடுக்கவேணுமென்று, நல்ல தெளிவான இங்கிலீஷில் சொல்லி, வாயில் பேனாவைத்துக்கொண்டு தன்னை அடித்தவன் பேரை எல்லாரும் ஆச்சரியப்பட இங்கிலீஷில் எழுதிக்கொடுத்தான். தலை அவனுக்குத் தர்மச்சம்மன் கொடுக்கும்படி உத்தரவு செய்தார்.

(ஷே.)

TURKEY'S HOPES.

துர்க்கியர் ஆசாபந்தம்.

வீரசூரர் வெகு பெயரை படுகளத்தில் மடியக்கொடுத்த பெருந் தியர் மறந்து, ருஷர் 1878-ம் ஆண்டு வசந்தகாலாரம்பத்தில் மீளவும் சண்டைதொடங்கக் கங்கணம் கட்டி நிற்கும்பொழுது, துர்க்கியர் தங் கள் சொக்கக் கணக்கை கூட்டி, நூதன யுத்தம் செய்யத் தொடங்க, அல்லது மாரிகாலத்தில் அங்கங்கே சந்துபொந்து கண்டு சிறுகச் சண் டையிட சொக்க மீதி எவ்வளவு உண்டென்று பார்க்கிறார்கள். ருஷர் இப்பொழுது நடந்தேறிய சண்டையில் அடைந்த இழிவை நினைந்து நினைந்து மனம் வெந்து வருந்துகிறார்கள். எப்படியெனில் இச்சண்டை யில் அவர்களுக்கு அனுகூலிகளாயிருந்த கடிதகிர்தர்கள் டானியூப் நதி தாண்ட நாற்பதினாயிரம் பெயர் சேவகர் வேண்டுமென மதிப்பிட்டி ருந்தும், இதுவரையில் சண்டையில் அதற்கு இரட்டித்தொகையான சேவகரைச் சாகக்கொடுத்தார்கள். இத்தனை கஷ்ட நஷ்டப்பட்டும், பல்கேரியாவின் வட எல்லையாகிய டானியூப் நதிக்கரைக்கு அப்புறம் அவர்கள் சென்ற தூரம் ஸ்வல்பந்தானே. அன்றியும், மாரிகாலம் தங்க அவர்கள் குறித்திருக்கும் ஸ்தலம் கருங்கடற்கரைச் சார்பையும் பருத் நதிக்கரை அயலிடத்தையும்போல் அத்தனை சௌக்கிய ஸ்தலமல்ல. துர்க்கியர் தாமாவது தம் மித்திரராவது ஆதியில் எண்ணியிராத பிர பல ஜெயம் பெற்றதை நினைந்து மனம் தேற இடமிருக்கின்றது. ருஷர் குறை சைனிய வகுப்பு வரையறை திருந்தச் செய்து சண்டையிடாத ரை ஒன்றுமாத்திரம் அல்ல; நிரளான ரணவீரரைத் தெளிந்த அதி காரிகள் வசப்படுத்தி ரணகளத்தில் கூட்டமாய்க் கொண்டுவராததும் ஒரு பெருங்குறைதான். இது கண்டு, சத்துருக்களுக்கு வெகு தைரி யம் உண்டாயிற்று. ருஷர் தளத்தை நிறுத்தவும் இதர முயற்சிகள் செய்யவும் குறித்திருக்கும் இடவிஸ்தாரம் போதாது. பிறக்கும் ஆண்டு துர்க்கியர் ஜெயம் பெறுவதற்கு முக்கியமாய் அனுகூலிக்கும் ஏது இது தான். ஸ்கிப்கா கணவாய் தளம் நீங்கிய வெளிநிலமாகுமெனத் தோ ன்றுகிறது. இவ்வருஷம் அவர்கள் கண்டறிந்ததை மறுவருஷம் நினைந் திருப்பார்களே தவிர, மறந்திடார்கள். மறுவருஷம் தொடங்கும் சண்டையில் பால்கென்ஸை வலிமையாய்த் தாண்டிச் செல்பவர்களும் அதனிடையில் பலெவ்னுவைக் கட்டிக்கொள்ள, அல்லது நெருங்கி முற்றுகைசெய்யச் சந்தர்ப்பிக்குமானால், ஸொபயாமார்க்கம் கன்ஸ் டாண்டிநோபிலுக்குச் செல்பவர்களும் ருஷரே தவிரத் துருக்கியர் அல்ல. அவர்கள் இவ்வாண்டு செய்ததுபோல, பிறக்கும் ஆண்டும் இர ண்டாயிரத்தைந்நூறு ரணவீரர் பலத்தை நம்பித் தாவடிபோகத் து ணியும் பேதைமைக்கு இடம் கொடார்களென்று நம்புகிறேம். துர்க் கியர் ஏற வட்டி கொடுத்தாவது நிரவியம் கடன் வாங்கி அதமம் மூன் நூலக்ஷம் பெயரை ரணகளத்துக்குக் கொண்டுவருவார்கள். இத்தனை தளத்தை அபஜெயப்படுத்த, அல்லது பலம் ஒடுக்க ருஷர் குறைந்தப க்ஷம் இத்தொகைக்கு மிஞ்சாதபோனாலும், சமமாகவாயினும் தளம் சே ர்த்துக்கொண்டு போவது ஆகியகம். குறித்த தளம் கணக்கிற் குறை யாது சேர்ந்தால், ரொமேனிய இருப்புப்பாதைகளைத் தொடர்ச்சியாக

விஸ்தரிப்பித்து, பின்னும் செலவு பெருகும் எத்தனைக்களைச் செய்தபின், ருஷர் தளம் அட்ரியானோபில் நகரத்திற் போய்ச் சேரலாகும். ஆனா லும், ஏற்கென ருஷருக்கு நேர்ந்த பிரதிகூலங்களை நினைக்கும்பொழு தே, மறு வருஷம் அவர்களுக்கு இவ்வகை அனுகூலம் விளைந்துண்டா மெனத் தோன்றவில்லை. சேனைவீரர் சமர்த்தரல்லவென்று ருஷ பிர ஜைகள் மனதில் உறுதியாய்ப்பட்டிருக்கின்றது. அவர்களைத் தள்ளி அருஞ்சமர்த்தள்ளவர்களை இரண்டு மூன்று மாசத்திற்குள் நூதனமா ய்ச், சேர்த்துக்கொள்வது கஷ்டம். பலெவ்னுவைப்போல அட்ரியா நோபிலிலும் துர்க்கியர் நூதனமாய்க் கொத்தளங்கள் சமைத்து, பத் தேரிகளில் காத்திரமுள்ள பீரங்கிகளை ஸ்தாபித்திருக்கிறார்கள். அத்த கைமையுள்ள கோட்டைக்கு இப்பொழுது ரொமேனியாவில் இறங்கிய தளம் தடையின்றிப் படையேறமாட்டுமென்று ருஷர் ஆசையோடி ருக்க இடமில்லை. ஒருவேளை அவர்களுக்கு ஆசைப் பெருக்கம் உண்டா னாலும், பால்கென்ஸுக்குத் தெற்கேயுள்ள பலமான கோட்டையைக் கைவசப்படுத்தி, கன்ஸ்டாண்டிநோபில்மேல் தாவடிபோகத் தொடங் குமுன், புயபல பராக்கிரமம் மிக்க ரணசம்பீர் வெகு நிரளாய்ப் படுக ளத்தில் மாய்ந்து போவார்களென்பதை அவர்கள் மூர்த்தவே நினைக் கவேண்டும்.

துர்க்கியர் ஸ்திதியோ இதல்ல; அவர்கள் ஆனந்தாவேசராகி, மீளவும் ஒரு கை பார்ப்போமென்று யுத்தத்திற்கு எத்தனிக்கலாமே. துர்க்கியர் சாமர்த்தியத்தாழ்வற்றவர்களல்ல; தங்கள் பலம் எந்தெந் தத் தூரையில் குறைவென்று அவர்கள் பட்டறிந்தார்கள். ஆனால், மாற் நத் தூரையில் குறைவென்று அவர்கள் பட்டறிந்தார்கள். ஆனால், மாற் ருனைச் சண்டைசெய்து ஜெயிக்கும் சூக்ஷமம் அவர்களுக்கு இப்பொழு தே அனுபவ சித்தமாய்த் தெரிகிறது. ராணுவக் கிரமத்தாழ்வு தமது பக்ஷத்திலும் ருஷர் பக்ஷம் அதிகமென்று அவர்கள் பரீக்ஷித்தறிந்தார் கள். டான்யூப் நதி கல்லாய் உறையும் சமயம் கண்டு ரொமேனியாவிற் குள் சென்று சண்டையிடவரினும் வருமென்று அவர்கள் எண்ணியி ருப்பார்கள்.

ஆர்மீனியாவில் யுத்தஞ்செய்துகொண்டு வருவது அசாத்தியமெ ன்று காணும்பொழுது, துர்க்கியர் பின்னும் சில சேனைவகுப்புகளைப் பல் கேரியாவிற்குள் அனுப்பி, வலிஸ்திரியாவிற்கு எதிரில் தாம் பிடித்தி ருக்கும் புது ஸ்தானத்தின் உதவியால் ரொமேனியாவில் ருஷர் செய் துகொண்டிவரும் இருப்புப்பாதை வேலையைத் தடுக்கவும் தமது சொத் தை நாசஞ்செய்ததற்காக ரொமேனியரிடத்தில் ஈடு வாங்கவும் தணிவார்களோ அல்லவோ இதை ருஷர் அபிப்பிராயம் வெளிவரு முன் உறுதியாய் அறிவது கூடாது. நிழக்கு பல்கேரியாவிலாவது மே ற்கு பல்கேரியாவிலாவது இப்பொழுது உள்ள துர்க்கிய தளத்துடன் பின்னும் கூடப்படைபோய்ச் சேருமானால், ருஷர் திர்கோவாவையும் ஸ்கிப்காகணவாயையும் கைவிடாதிருந்தும், மூலபலஸ்தானத்தைக் காத்துக்கொள்ள ஆசைப்படுவது வியர்த்தம்.

தினவர்த்தமானி.

நவெம்பர்மீ நாள்30. ஐப்பசிமீ 18உமுதல், கார்த்திகைமீ 17உவரை.

வாரம்.	இங்கிலீஷ் தெய்தி.	தமிழ்த் தெய்தி.	அன்றாடகத் தியானம்.
வி	1	கஅ	மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள். எபி. 12: 1.
வெ	2	ம கூ	உமது வெளிச்சத்தையும் உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்
ச	3	உ 0	உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தமாயிருங்கள்.
ஞா	4	உக	மேட்டிமையாய் இராதேயுங்கள். ஏரோ. 13: 15. [2
தி	5	உஉ	எல்லா மனுஷருக்கும் சாந்த குண்த்தைக்காண்பியுங்கள். தீத். 3
செ	6	உங	நான் இஸ்ரவேலுக்குப் பனியைப்போலிருப்பேன். ஓசி. 14: 5.
பு	7	உச	நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள். 1கொரி. 3: 16.
வி	8	உரு	இடைவிடாமல் உன் தேவனை நம்பிக்கொண்டிரு. ஓசி. 12: 6.
வெ	9	உசு	இனி எனக்கும் விக்கிரகங்களுக்கும் என்ன. ஓசி. 14: 8. [11
ச	10	உஎ	நித்திரையை விட்டு எழுந்திருக்கத்தக்க வேளையாயிற்று. ரோ. 13
ஞா	11	உஅ	அவருடைய கையைத்தடுக்கத்தக்கவன் ஒருவனுமில்லை. தானி. 4
தி	12	உசு	சத்தியம் உங்களை விடுதலையாக்கும். யோ. 8: 32. [35
செ	13	கூ0	ஒருவர்மேலொருவர் பட்சமாயிருங்கள். ரோ. 12: 10. [9: 35.
பு	14	க	நீ தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறாயா? யோ
வி	15	உ	உங்கள் பாவங்கள் பலத்ததென்று அறிவேன். ஆமோஸ். 5: 12
வெ	16	கூ	உற்சாகப்பலிகளைக்கூறித் தெரியப்படுத்துங்கள். ஆமோஸ். 4: 5
ச	17	ச	எதைச்செய்தாலும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்
ஞா	18	ரு	கர்த்தர் நம்மோடிருக்கிறார். எண். 14: 9.
தி	19	சூ	அசதியாயிராமல் சாக்கிரதையாயிருங்கள். ரோமர். 12: 11.
செ	20	எ	நான் விழுந்தாலும் எழுந்திருப்பேன். மீகா. 7: 8. [தாக.
பு	21	அ	உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயிருப்ப
வி	22	கூ	செயமோ கர்த்தரால் வரும். நீதி. 21: 31.
வெ	23	க0	தீமையினாலே வெல்லப்படாதே. ரோமர். 12: 21.
ச	24	கக	அறுப்பு மிகுதி. மத். 9: 37.
ஞா	25	கஉ	நீ உன் தேவனிடத்தில் திரும்பு. ஓசி. 12: 6.
தி	26	கரு	உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது. மத். 9: 29.
செ	27	கச	நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச்செய்யவேண்டும்.
பு	28	கரு	பயப்படாதே உன்னை மீட்டுக்கொண்டேன். ஏசா. 43: 1.
வி	29	கசு	அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்கிறோம்.
வெ	30	கஎ	நான் உங்களைச் சிநேகிதர் என்றேன். யோவா. 15: 15.

விசேஷ நாட்கள்.

1. சகல பரிசுத்தவான்களின் திருநாள்.
4. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும், இருபத்து மூன்றாம் ஞாயிறு.
5. அமாவாசை.
11. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும், இருபத்து நாலாம் ஞாயிறு.
18. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும், இருபத்தைந்தாம் ஞாயிறு.
21. பௌரணமி.
25. திரித்துவ திருநாளுக்குப் பின்வரும், இருபத்தாறாம் ஞாயிறு.
30. பரி. அந்திரேயாவின் திருநாள்.

நற்போதகம்.

௰உ. டிசம்பர்மீ. ௲அஎஎ௵.

கொரிந்தியரின் இரண்டாம் நிருபம்.

VI. அதிகாரம்.

கிறிஸ்துவின் ஸ்தானாபதியாக அப்போஸ்தலனானவர் தமது ஊழியத்தை எத்தன்மையுள்ளதென்று இன்னம் குறிப்பிடுகிறார். அது தேவனுடைய கிருபையை மனுஷர்கள் விருதாவாய்ப் பெறாதபடிக்கு ஏவிப் போதிக்கிறதாயும் (1, 2 வா.) பல நிலைமையில் அவர்கள் நடந்துகொண்ட குணசீலங்களாலும் அப்போஸ்தலர் தங்களைத் தேவ ஊழியக்காரராக விலக்குகிறதாயும் இருந்தது. (3—10 வா.)

1-ம் வா—பவுல் அப். கொரிந்தியருக்கு இந்த வார்த்தைகளை நேராய் புத்திமதியாகச் சொல்லாமல் தாம் ஏவி விடுகிற தமது வழக்கத்தைக் காட்டுகிறார்.

"தேவனுடைய கிருபையை"—முன் சொல்லிய ஒப்புரவாக்குதலே.

"விருதாவாய்"—ஒப்புரவாக்குதலுக்கேற்ற பரிசுத்த நடக்கையில்லாமையா.

2-ம் வா.—இவைகள் இடையில் சொல்லியிருக்கிற வார்த்தைகள். இதை இங்கிலீஷ் பைப்பில் குறித்திருக்கிற வகையைப் பார்க்க.

"நான் உனக்கு செவிகொடுத்து" இந்த வார்த்தைகள் தேவனாகிய பிதா தமது சபைக்காக மன்றாடுகிற தமது பிரியமான குமாரனானவருக்குச் சொல்லுகிறவை. அப்போஸ்தலனானவர் தமது பக்தி வைராக்கியத்தால் மூலப்பாஷையில் போட்டிருக்கிறதை விட அதிபலமான வார்த்தையாகிய "அதி அனுக்கிரக காலம்" என்ற பதத்தைப் பிரயோகித்திருக்கிறார்.

மனுஷர் தங்கள் ஆத்தும விஷயத்தில் எவ்வளவு ஆச்சரியமான கவலைத்தாழ்ச்சியோடே நடக்கிறார்கள். "நீர்மேல் குமிழிபோல் நிலையில்லாத மனுஷர், மரணம், நியாயத்தீர்ப்பு, மோட்சம், நரகமாகிய இவை இல்லாததுபோலவே தங்கள் காலத்தைப் போக்குகிறார்கள்.

3—10 ம்-வா. அப்போஸ்தலன் தமது வாயினாலே போதிக்கிறதுமல்லாமல் தமது பரிசுத்த நடக்கையினாலே அச்சத்தியங்களை அலங்கரிக்கிறார்.

6. இந்நிருபம் எழுதப்படும் காலத்தக்குள் நடபடிகளில் கண்டபடி பிலிப்புவில் மாதிரம் அடிபட்டார். இதைத் தவிர 11, 23-ல் காட்டியபடி பலமுறையும் அவர் அடிபட்டிருக்கலாம். தவிர, அந்தியோகியாவிலும் லிஸ்திராவிலும் கொரிந்துவிலும் அவர் சிறைச்சாலையிலே வைக்கப்பட்டிருக்கலாம்.

6. "பரிசுத்த ஆவியிலும்" அவருடைய வல்லமையால் அப்போஸ்தலர் செய்த அற்புதங்களால்,

7. நீதிக்குரிய ஆயுதங்களின் அட்டவணையை அறிகிறதற்கு, எபே. 6: 13—17. கவனிக்க.

8. "கனத்திலும் கனவீனத்திலும்" பவுல் அப். தமது நிலைமையை வலாந்து காட்டுகிறவரே பூர்வீகக் கிறிஸ்தவன் ஒருவன் தன் காலத்து கிறிஸ்தவர்களைப்பற்றியும சாட்சியிடுகிறான.

10. "தரித்திரர் என்னப்பட்டாலும்" அவர்கள் (கிறிஸ்தவர்கள்) தனவான்கள், அரதேசிகளாகிய அவர்களுக்கு நிலையுள்ள ஒரு பட்டணமுண்டு. வெட்கத்திலே கனமும், பெலவீனத்திலே உறுதியும், பிள்ளையில்லாமையிலே புத்திரசந்தானமும் அவர்களுக்கு உண்டு என்பதே.

12—13 வா. இருதயத்தின் பரிபூரணத்தால் வாய் பேசுகிறது. கொரிந்தியர் அப்போஸ்தலனுடைய மிக அன்பையும் அவர்களுக்காக அவர் பட்டகவலையையும் சரியானபடி உணரவில்லை. அவர்கள் இருதயம் அவருக்குப் பூரணமாய்ச் சொல்லவில்லை நெருக்கப்பட்டார்கள். சமுசயப்பட்டார்கள். அப்போஸ்தலன் இதையிட்டு முறையிடுகிறார். என் இருதயம் உங்களுக்காக எவ்வளவோ பெரிதாயிருக்கிறது நீங்களோ நெருக்கம் அடைந்தவர்கள் என்கிறார்.

பவுல் அப்போஸ்தலன் தம்மால் குணப்பட்டவர்களுக்காகக் கொண்டிருந்த மன உருக்கமானது அவரது குணகுணத்தில் ஒரு பலத்த குறிப்பாயிருந்தது.

14. வா. "அன்பிய மதத்தில் அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக." ஒருநக வகையாயாவது கலியாண வகையாயாவது அஞ்ஞானிகளுடன் நாம் அதிக அன்னியொன்னிய ஐக்கியத்தை நாடக்கூடாது. நாம் எல்லாருக்கும் மரியாதையைக்காட்டவேண்டியபோதிலும் நம்முடைய கிறிஸ்தவ நடக்கைக்கு அனுகூலமாயிருக்கிறவர்கள் பேரில் அல்லாமல் அதற்கு பிரதிகூலமாயிருக்கிறவர்களோடே அதிகப் பழக்கமாயிருக்கலாகாது.

18. இது எவ்வளவு சிறந்த வாக்குத்தத்தம் தேவனுடைய குமாரரும் குமாரத்திகளுமாயிருக்கிறோம் என்கிற நம்பிக்கை நமக்குண்டாயிருந்தால் நாமெப்படி பொறுமையும் கவலையும் பொருளாசையுமுடையவர்களாயிருக்கலாம்? நாம் அவருடைய முகப்பிரகாசத்திலே சகல அசுத்தங்களையும் விட்டு நடக்கும்படி எவ்வளவோ கருத்துடையவர்களாயிருக்கவேண்டும்.

Bible Sketches and their Lessons.

பாலபோதனை.

ஆயிரம் வருடக் கீர்த்தனைகள்.

(தொடர்ச்சி.)

மேற்சொல்லிய புஸ்தகங்கள் ஐந்தும் எக்காலத்தில் ஒன்றுய்ச் சேர்க்கப்பட்டது; எவ்வாறு, யாராலே அவைகள் ஒரே ஆகமமாயின என்று எவர்களாவது விசாரிக்கிறதண்டானால், அதற்கு நிர்ப்திகரமான உத்தரம் சொல்வது பிரயாசந்தான். ஆகிலும் சாலோமோனி ராசா தேவாலயத்திற் பாடுகிறதற்காக முதலிரண்டு புஸ்தகங்களையும் ஒன்றுய்ச் சேர்த்திருக்கலாம். அப்பால் எசேக்கியாவின் மனுஷர், தேவாலயம் சுத்திகரிக்கப்பட்டு தேவாராதனை திரும்பவும் ஸ்தாபிக்கப்பட்ட சமையத்தில், மூன்றும் புஸ்தகத்தைக் கூட்டியிருப்பார்களென்று சாதாரணமாயெண்ணப்படுகிறது. (2 நாளாகமம் 29: 30-ஐப்பார்க்கவும்.)—காலம், நிதானிக்கத்தக்கது. (2 நாளாகமம் 29: 30-ஐப்பார்க்கவும்.)—காலம், நிதானிக்கத்தக்கது. ஐந்தாம் புஸ்தகங்கள் நெகேமியாவின் காலத்தில் இரண்டாம் தேவாலயத்தில் வழங்குகிறதற்காகச் சேர்க்கப்பட்டிருக்கவேண்டுமென்று

சங்கீதங்களை வாசிக்கையில், அது அதின் தலைப்பிற் போட்டிருக்கிற பெயர்களைக் கவனித்தக்கொள்வது மிகவும் அவசியம். சங்கீதங்களின் பொருளை அறிகிறதற்கு அவைகள் பலமுறையும் அனுகூலமாயிருக்கின்றன. எல்லாவற்றிற்கும் முதல் முதல் எழுதப்பட்ட சங்கீதம் எது? சிலர் நினைக்கிறபடி எண்பத்தெட்டாம் சங்கீதமே. அதை இயற்றினவன், எகிப்துதேசத்தில் பார்வோன் என்னும் நிஷ்டூர அரசனுக்கு முதலில் அடிமைப்பட்டிருந்தவர்களில் ஒருவனுயிருந்திருக்கலாம். இந்தச் சங்கீதமுழுமையும் தொறுங்குண்ட இருதயத்தின் புலம்பல்போலிருப்பதைக் காண்பீர்கள். அப்புறம் தொண்ணூறும் சங்கீதம் இரண்டாவது எழுதப்பட்டதாகத் தோன்றுகிறது. அது வனந்தரத்திலே மோசேயினல் பாடப்பட்டதாகச் சொல்லப்படும். அதில் தரக்கத்துக்கும் நம்பிக்கைக்குமுரிய பல விசேஷங்கள் அடங்கியிருக்கின்றன. இவ்வாறே மற்றனேக சங்கீதங்களின் வரலாறுகளையும் அறிய விரும்புவோம். அவைகளை வாசித்துக்கொண்டு வருகையில், மேற்படி சங்கீதங்களைப் பாடின உத்தமரின் அன்பங்கள், இன்பங்கள், விருப்பங்கள், இரக்கங்கள், பாவங்கள் எனனவென்று விசாரிக்கவும் ஏவப்படுவோம். ஆகிலும் இதைகளைக்குறித்து அவ்வளவாய்க் கவலைப்படாமல், நம்முடைய இருதய ஸ்திதிக்கும் ஏற்றமளவாய் அவைகளைக் கற்றுக்கொண்டு இஸ்ரவேலின் இனிய பாடகர்கள் வெகு காலத்தக்குமுன் நமக்குப் போதித்திருக்கிற பிரகாரம், தேவனை ஸ்துதித்துப் போற்றிப் பிரார்த்தித்தக்கொண்டிவருவோமாக.

வேறொரு கேள்வி கேட்டாலும் கேட்பீர்கள். அநேக சங்கீதங்களின் தலைப்புகளில் பல கடினமான சொற்கள் வருகின்றனவே.

மாசில், மிக்தாம், நெகிழத், சேலா முதலிய சொற்களின் பொருளென்ன என்று கேட்கிறீர்களோ? நல்லது, இவற்றைக்குறித்து வேத சாஸ்திரிகளுக்குள்ளும் பற்பல அபிப்பிராயங்களுண்டு. அவர்கள் சொல்

லும் அப்பிராயங்களையும் வியாக்கியானங்களையுமெல்லாம் இங்ஙனம் எடுத்து விவரிக்கமுடியாது. அதுகளைப்பற்றிப் பொதுப்படமாத்திரம் இரண்டொரு வார்த்தை சொல்லக்கூடும். சில சொற்கள் கீதவாத்தியங்களின் பெயர்களாயும், சில இராகங்களின் பெயர்களாயுமிருக்கின்றன. சில சொற்கள் சங்கீதங்களின் சாரத்தைக் குறிப்பிக்கிறவைகளென்றும், மற்றவைகள் பாடகர்களுக்கும் கீதவாத்தியக்காரருக்கும் சொல்லிய கவனிப்புகளென்றும் நிதானிக்கத்தக்கது. இந்தச் சங்கீதங்கள் பாடப்படுகிறவைகளென்பதையும், பாடகர்கள் சப்தத்தோடே கைதாளம், தம்புரு, கின்னரம், சுரமண்டலம், நாகசுரம், வீணை முதலிய கீதவாத்தியங்களின் ஓசையும் கலந்து இசைந்து வருமென்பதையும் நினைத்துக்கொள்ளுங்கள். கீதவாத்தியக்காரரும் பாடகர்களும் ஒரே சப்தமாய் கர்த்தரைஸ்துதித்துப் பாடும்பொழுது அவர்கள் பாட்டு எவ்வளவோ மதுரமாயிருந்திருக்கும். தம்புரு, கின்னரம், நாகசுரம், வீணை, சுரமண்டலம் முதலிய கீதவாத்தியங்களோடு அவர்கள் தம் சப்தத்தை உயர்த்தி, "அவர் தேவன் அவர் கிருபை என்றுமுள்ளது" என்று இன்ப ஓசையாய்க் கர்த்தரைப் போற்றிப் பாடினது எத்தனையோ மகத்துவமாயிருந்திருக்கும்.

இந்த இராகத்தின் கருத்தென்ன, சங்கீதங்களிலுள்ள அநேக சுந்தோஷ சொற்களின் பொருளென்ன என்று கேட்கிறீர்களோ? இவைகள் தேவனுடைய ஸ்துதியைப் பிரஸ்தாபப்படுத்துகிறவைகளாயும், அவரது ஊழியக்காரருக்கிருந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறவைகளாயுமிருந்ததன்றியும், மகிழ்ச்சியோடு அவர்களுக்குண்டாயிருந்த திவ்விய நம்பிக்கையையும் காண்பிக்கிறவைகளாயுமிருக்கின்றன. ஆரம்பத்தில் ஒரு பெருங்கூட்டம் கீர்த்தனங்களோடும் பாடல்களோடும் பவனிபோகிறதுபோல சொல்லியிருக்கிறதே. அந்த மகிமையான கூட்டம் முன்னுக்குச் செல்லுகிற நோக்கமுமுடிவுமென்ன? தலைமுறைகள் ஒவ்வொன்றாய்க் கழிந்து போகப்போக மகத்துவம்பொருந்திய ஒரு காள் அதிகமதிகமான பிரகாசமாய்த் தோன்றுகின்றது. வரப்போகிற கிறிஸ்துவின் அம்மகிமையான காளையே அவர்கள் நோக்கிப் பார்க்கிறவர்களாய் முன்னுக்குச் செல்லுகிறார்கள். மெசியாவின் மகத்துவங்களையும் அவரது இராச்சியத்தின் சலாக்கிய பாக்கியங்களையும் அவர்கள் நினைத்து, இன்பமாய்ப் பாடி ஆர்ப்பரித்தார்கள். அவருக்கு நேரிடும் துக்கங்களைக் கண்ணுற்றும் சிலவேளைகளில் தூய சப்தமாய்ப் புலம்பினார்கள். கிறிஸ்துநாதர் சிலுவையில் தொங்கும்பொழுது, "என் தேவனே என் தேவனே என் என்னைக் கைவிட்டீர்" என்று பிரலாபித்தாரே, அந்தச் சொற்கள் ஒரு சங்கீதத்திலுள்ளவைகளென்று அறிவீர்களே. மேலும் "என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர், உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்" என்று இன்னொரு சங்கீதம் கூறுகிறது. ஒரு சங்கீதத்தில், "சாத்தானே உமக்குச் சுதந்தரமாகவும் பூமியின் எல்லைகளே உமக்குச் சொந்தமாகவும் தருவேன்" என்றும்; மற்றொரு சங்கீதத்தில், அவனைச் சர்வத்துக்கும் ஆண்டவராக முடிசூட்டி, "தேவனே உமது சிங்காசனம் என்றென்றைக்கும் உள்ளது" என்றும் சொல்லியிருக்கிறது. இந்த ஆகமம் முழுமையிலும் இயேசு இரட்சகனாக்குறித்த விர்த்தாந்தங்களையே மிகுதியும் விவரித்திருக்கிறதைக் காணலாம். "மோசேயின் நியாயப்பிரமாணத்திலும், தீர்க்கதரிசன ஆகமங்களிலும், சங்கீத ஆகமங்களிலும் என்னைக்குறித்து எழுதியிருக்கிற யாவும் நிறைவேறவேண்டியதாயிருந்தது" என்று அவர் தாமே விளம்பியிருக்கிறார்.

பிரியமானவர்களே, இந்தப் பாட்டைப் பாட நீங்கள் தகுதியுள்ளவர்களா? வரப்போகிற இரட்சகரைப் போற்றிப் பாடுகிற கெம்பீர சத்தம் ஸ்வர்க்கத்திலிருந்து நமக்குக் கேட்கிறதே. அந்தப் பாடகர்களெல்லாம் ஆசையோடு எதிர்பார்த்திருந்த காள் வந்து இப்பொழுது கழிந்துபோயிற்று. அவர்களுக்குத் தீர்க்கதரிசனமாயிருந்தது நமக்குச் சுவிசேஷமாயிற்று. இயேசுநாதர் வந்தார். அவருடைய தக்கங்களும் சஞ்சலங்களுமெல்லாம் முற்றுப்பெற்றன. அவர் தமது மகிமையின் இராச்சியத்தில் பிரவேசித்துமிருக்கிறாரே. ஆகையால் நம்முடைய வாயினுற் பிறக்கும் ஸ்துதிதோத்திரங்களினாலும், நடக்கையில விளங்கும் ஊழியத்தினாலும் பூரிப்போடும் பட்சத்தோடும் நாம் அவரை மகிமைபடுத்தவேண்டாமோ? நமது சீவனும், மரணமும், மறுமையுமெல்லாம் மகிமையும் இன்பமுமான கீர்த்தனையாயிருக்கும்படி, தேவ கிருபையைத் தேடிக்கொண்டு பிரயாசப்படுவோமாக.

Life of Rev: Bernard Gilpin.

பெர்னர்ட் கில்பின் போதகர் சரித்திரம்.

(தொடர்ச்சி.)

கில்பின் போதகர் பிளாண்டர்ஸ் தேசத்தில் இரண்டு வருஷம் சஞ்சரித்தபிறகு, டரஹம் கண்காணியார் இயற்றிய ஓர் நூலை அச்சிடும் பொருட்டு பாரிஸ் நகரத்துக்குப் போனார். பாரிஸ் நகரத்தில் அவர் இருக்கையில், முன் அவருக்குச் சினேகிதனும் பாப்புமார்க்க அபிமானியுமான நீல் என்பவன் அவருக்குத் தென்பட்டான். பாப்புமார்க்கத்தப்பறைகளைக்குறித்தும் விசேஷமாய் சொரூபனைக்கத்தைப் பற்றியும் மேற்படி நீல் என்பவனோடு அவர் பல முறையும் சம்பாஷித்துத் தர்க்கம்பண்ணிக்கொண்டிவருகதார். ஒரு சமையத்தில் நீல் என்பவன், "பரிசுத்தவான்களின் சொரூபங்கள் விக்கிரகங்கள் அல்லவே, ஆதலால் அவர்களை சொரூபங்களை வணங்குவது விக்கிரகாராதனையல்ல" என்று தற்கால ரோமானித்தனைப்போல பிதற்றினபொழுது; கில்பின் என்பவர் பிரதியுத்தரமாக, "இரண்டாங் கற்பனையில் ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்கவும் வேண்டாம், நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம் என்று வெகு திட்டமாய்ச் சொல்லியிருக்கிறதே" என்றார். அதன்பேரில் நீல், "சபையின் நியமங்களைத் தீர்க்காலோசனையின்றி மாற்றப்படாது" என்று நியாயம்பேச, அதற்கு கில்பின் என்பவர், "மெய்தான் சபையின் நியமங்களை மாற்ற நமக்காலாகாது, அனுதினமே தேவ ஒத்தாசையை முன்னிட்டு என்னை மாற்றிக்கொண்டு தேவனை உண்மையாய் ஆராதிக்கப் பிரயாசப்படுகிறேன்" என்றார்.

இவ்வாறு, மூன்று வருஷம் பிறதேசங்களில் கழித்தபின், கில்பின் போதகர் பாப்புமார்க்கம் மகா கேடுபாடுள்ளதென்றும், சீர்திருத்த உபதேசங்கள் வேதாதாரமுடையவைகளென்றும் ஐயந்தீரத் தெளிவடைந்தவராய், இங்கிலாந்து தேசத்துக்குத் திரும்பினார். அவ்விடம் வந்து சேரவே, டரஹம் கண்காணியார் அவரைப் பட்சமாயேற்

றுக்கொண்டு தம் சேகரத்துக்கு ஆர்ச்டீக்கன் போதகராக நியமித்தார். ஈசிங்ற்றன் என்ற இடத்துக் குருத்தொழிலும் மேற்படி உத்தியோகத்தோடு சேர்ந்திருந்தது. கில்பின் என்பவர் உடனே புறப்பட்டுப்போய்த் தமது கடமைகளை ஊக்கத்தோடும் உண்மையோடும் நிறைவேற்றிவந்ததுமல்லாமல், துன்பம் அதிமிச்சமாய் நடந்துகொண்டிருந்தபோதிலும் அக்காலத்தில் நடப்பாயிருந்த பாவங்களையும் துன்மார்க்கங்களையும் தாராளமாய்க் கடிந்துகொண்டும் வந்தார். இதினிமித்தம் அச்சீமையிலுள்ள குருக்கள்மார் அவர் பேரில் உக்கிரகோபமாகி, அவரைச் சபைக்குச் சத்துருவென்றும், குருக்கள்மாரைத் தூஷிக்கிறவனென்றும், கேடுபாடான உபதேசங்களைப் போதிக்கிறவனென்றும், அவன் நாளுக்கு நாள் வெளியிடுகிற தப்பறைகளால் மார்க்கத்துக்குக் கெடுதி நேரிடும் என்றும் பல வாறாய் அவரைக்குறித்துக் கோளும் குண்டுணியும் பேசிக்கொண்டுதிரிந்தார்கள். இந்த அவதூறுகளைக்குறித்து, தம் சகோதரனுக்கு எழுதிய ஓர் நிருபத்தில் அவர் சொல்வது; "நான் ஈசிங்ற்றன் நகரத்துக்குப் போய் என் உத்தியோகத்தைக் கைக்கொண்டு பிரசங்கிக்க ஆரம்பித்ததோடு, வருமானத்தினிமித்தம் ஒருவரே பல அலுவல்களை ஏற்றுக்கொள்ளுகிற வழக்கத்துக்கும், மற்றவர்களைக்கொண்டு வேலை நடப்பித்துவருகிற வழக்கத்துக்கும் விரோதமாய் நான் பிரசங்கிக்கிறேனென்று அநேகர் எனக்குக் கொடிய சத்துராதிகளாய் எழும்பினார்கள். இந்த உபதேசத்தைப் போதிக்கிறவர்களெல்லாரும் தப்பறைக்காரர் ஆவார்கள் என்கிறவர்கள் சிலர். மற்றவர்களோ, தங்களைப்போல நானும் கர்த்தருடைய இராப்போசனத்தில் அப்பமும் திராட்சரசமும் கிறிஸ்துநாதருடைய சரீரமும் இரத்தமுமாய் மாறிப் போகிற காரியம், உத்தரிக்கும் ஸ்தலம், புண்ணிய தீர்த்தம், சொரூப வணக்கம், அர்ச்சிஷ்டரைப் பிரார்த்தித்தல் முதலிய விஷயங்களைப் பற்றியே பிரசங்கியாமல், குணப்படுதல், கிறிஸ்துநாதர் உண்டுபண்ணின இரட்சிப்பு இதுகளைப்பற்றிப் போதிக்கிறேனென்று குறைகூறிக் குற்றம் பாரிக்கிறார்கள்" என்பதே.

அப்பால் அவர் பேரில் பதின்மூன்று குற்றங்கள் தயார்செய்துகொண்டு கண்காணியாரிடத்தில் பிரியாது செய்தார்கள். துன்ஸ்ற்றல் என்று பெயர்கொண்ட ஒரு குருவானவனே இது காரியத்தில் முதன்மையாய் நின்றவன். கண்காணியாரோ இவர்களுடைய பொறாமையையும் பகையையும் நன்றாய் அறிந்திருந்தபடியால், கில்பின் போதகருக்கு இவர்களால் யாதொரு கெடுதியும் நேரிடாதபடி காரியத்தைச் சாமர்த்தியமாய் நடப்பித்ததுமல்லாமல், ஹாட்டன்லேஸ்பிரிங் என்ற வேறொரு சேகரத்துக்கு அவரை நியமித்து அனுப்பினார். கில்பின் போதகர் ஏகாந்தமாய் பிறர் தீமையை விரும்பாமல் நன்மையையே நாடி நடந்துவந்த புனிதனாயிருந்தும், அதினாலே குருமார்களுடைய குரோதத்துக்கும் காய்மகாரத்துக்கும் தப்பிக்கொள்ளக் கூடவில்லை. என்னத்தினாலென்றால் அவருடைய ஊக்கமான முயற்சியும் துப்புரவான நடக்கையும் அவர்களை எப்பொழுதும் கண்டிக்கிறதுபோலிருந்ததினாலேதான். இம்முகாந்தரத்தினாலே அவர்கள் திரும்பவும் கண்காணியாரிடத்தில் அவர்பேரில் பிரியாது செய்தார்கள். இந்த விசையும் அவர்கள் காரியம் பலிக்கவில்லை. இவ்வாறு அவர்கள் நோக்கம் தவறிப்போனதுபற்றிக் கோபப்பிராந்தர்களாகி, கில்பின் போதகருக்கு விரோதமாய் முப்பத்திரண்டு குற்றங்கள் தயார்செய்து லண்டன் நகரத்துக் கண்காணியான பொன்னரிடத்தில் கொடுத்தார்கள். துஷ்டமிருகத்துக்கொப்பான இந்த மத வெறியன் அவர்கள் பிரியாதைப்

பிரியத்தோடு அங்கீகரித்துக்கொண்டு, கில்பின் போதகரை உயிரோடே தகனித்துவிடத் தீர்மானித்து தக்ஷணமே அவரைப் பிடித்துக் கொண்டுவரும்படி உத்தரவு செய்தான். அவருடைய சிநேகிதர் இதைக் கேள்வியாகி, அவருக்கு நேரிட இருந்த மோசத்தைச் சொல்லி எச்சரித்து உடனே எங்கேயாவது ஓடித் தப்பித்துக்கொள்ளும்படி யோசனை சொன்னார்கள். அவரோ அப்படி ஓடியொளிக்கமாட்டேனென்று மறுத்துவிட்டு உண்மையுள்ள ஓர் வேலைக்காரனையழைத்துச் சொன்னது என்னவென்றால்,—"கடைசியில் என்னை மேற்கொண்டார்கள், லண்டன் நகரத்துக் கண்காணியாரிடத்தில் என்பேரில் பிரியாதுசெய்திருக்கிறார்கள், அவர் கைக்குத் தப்பவேகூடாது, தேவன் அவர்கள் குரோதத்தை மன்னிப்பாராக, இந்தத் துன்பத்தைச் சகிப்பதற்கு வேண்டிய பெலனை தேவன் எனக்கு அனுக்கிரகிப்பாராக, நான் யோக்கியமாய்க் கொலைக்களத்துக்குப் போகத்தக்கதாக நீளமான ஓர் வஸ்திரம் தயார்செய், எவ்வளவு சீக்கிரம் அது எனக்கு வேண்டியதிருக்குமோ தெரியாது, ஆதலால் தாமதப்படுத்தாமல் உடனே அப்படிச் செய்" என்பதே. மேற்படி வஸ்திரம் தயாராகவே, கண்காணியாரால் அனுப்பப்பட்ட உத்தியோகஸ்தர் வந்து அவரைப் பிடிக்கிறவரையில், நாடோறும் அதைப் போர்த்துவந்தார். அப்பால் அவர் பிடிபட்டு லண்டன் நகரத்துக்குப் போகிற மார்க்கத்தில் அவருடைய கால்களிலொன்று முறிந்துபோயிற்று. இந்தக் காரணத்தினால் அவர் உடனே லண்டன் நகரம்போய்ச் சேரக்கூடாமல் வழியில் தாமதித்திருக்க நேரிட்டது. அவர் சொஸ்தமடைகிறதற்குள்ளாக மேரி இராணி இறந்துபோனாளென்ற செய்தி வந்து எட்டியது. அதன்பேரில் அவர் விடுதலையடைந்து யாதொரு தொல்லையுமின்றி தம் சேகரத்துக்குத் திரும்பிவர, சனங்கள் அவரைச் சொல்லமுடியாத அக்களிப்போடு ஏற்றுக் கொண்டார்கள்.

எலிசபேத்து இராணி சிம்மாசனமேறினதோடு, பாப்புமார்க்கக் கண்காணிமார்கள் தங்கள் உத்தியோகங்களினின்று தள்ளப்பட்டார்கள். மேற்படி கண்காணியாட்சிகளில் ஒன்றை கில்பின் போதகருக்குக் கொடுக்கும்படி இராணியினிடத்தில் பலரும் சிபார்ஸ் செய்தார்கள். அதன்பேரில் கார்லயில் சேகரத்துக்கு அவரைக் கண்காணியாராக நியமித்தும், மேற்படி கனமான உத்தியோகம் தமக்கு வேண்டாமென்று மறுத்துவிட்டார். கண்காணி முறைமையை அவர் ஒப்புக்கொள்ளாததே மேற்படி உத்தியோகம் வேண்டாமென்று தள்ளினதற்குக் காரணம் என்று சிலர் சொல்லுகிறதுண்டு. ஆனாலும் அப்படி நினைக்கிறதற்கும் சொல்லுகிறதற்கும் எள்ளளவேனும் இடமில்லை. சபை முறைமையைக்குறித்து இதுதான் சரி, அது தப்பிதமென்று சாதித்தவருமல்ல, வைராக்கியம் பாராட்டினவருமல்ல. ஆகிலும் அவர் ஒருவாறு கண்காணி முறைமையையே ஒப்புக்கொண்டவர் என்று நிதானிக்கத்தக்கது. டிசென்றர்ஸ் என்னப்பட்ட வகுப்பார் அவரைத் தங்கள் பட்சத்தில் இழுத்துக்கொள்ளும்படி பிரயாசப்பட்டபொழுது அவர் நடந்துகொண்ட விதத்தினால் இது நன்றாய் விளங்கும்.

சிறிதுகாலத்துக்குப்பின் ஒக்ஸ்போர்ட்டைச் சேர்ந்த இராணியின் கலாசாலைக்கு விசாரணைத்தலைவனாக அழைக்கப்பட்டார். அது எப்படியென்றால், எலிசபேத்து இராணி சிம்மாசனமேறின உடனே, புரோட்டெஸ்தாந்து மார்க்கத்தானான டாக்ற்றர் பிரான்சிஸ் என்னும் ஓர் வைத்தியனை இராணி மேற்படி உத்தியோகத்துக்கு ஏற்படுத்தியிருக்க, அக்கலாசாலையைச் சேர்ந்தவர்களோ பாப்புமார்க்கச் சார்பாயிருந்த

படியால், அவனை மகா பிரியமின்மையோடு ஏற்றுக்கொண்டார்கள். அவ்வேதனையால் அவன் கொஞ்சக்காலத்துக்குள்ளாக வெறுப்படைந்து அவ்வுத்தியோகம் விட்டு நீங்கினான். அதன்பேரில் கில்பின் போதகரை மேற்படி உத்தியோகத்தைக் கைக்கொள்ளும்படி கேட்டார்கள். கில்பின் என்பவரோ அக்கலாசாலையின்பேரில் மிகுந்த பாசமும் நேசமுமுடையவராயிருந்தபோதிலும், தம் சபைக்குரிய கடமைகளை முழுமனதோடும் முழுச் சிரத்தையோடும் நடப்பித்துவரும்பொருட்டு, அதை வேண்டாமென்று தள்ளிவிட்டார். அக்காலத்தில் எத்திறத்தோரையும் பிடித்திருந்த அறிவீனத்தைக்குறித்து கில்பின் போதகருக்கிருந்த விசனம் கொஞ்சமல்ல. இந்த அறிவீனத்துக்கு சர்வகலாசாலைகளே முக்கிய ஏதுக்களாயிருந்தன. எப்படியென்றால் அக்காலத்தில் சர்வகலாசாலைகளை விசாரித்து நடத்திவந்த காரியஸ்தர்கள் வீண் பக்தியும் குருட்டு வைராக்கியமுமுடையவர்களாயிருந்ததால், பிரயோசனமான கல்வித் துறைகளைக் கற்றுக்கொடாமல், அனர்த்தமான விஷயங்களிலேயே பொழுதுபோக்கிவந்தார்கள். இதினால்உண்டான கெடுதியை நிவர்த்திக்க கில்பின் போதகர் தீர்மானித்து, தம் சொந்தச் செலவுகளை வெகுவாய்ச் சுருக்கிக்கொண்டு அதினால் மீர்ந்த வருமானங்களால் உயர்தரப் பாடசாலை ஒன்றை யேற்படுத்திப் பரிபாலித்துவந்தார். இந்தப் பாடசாலை விர்த்திக்காக, ஒக்ஸ்போர்ட் சர்வகலாசாலையிலிருந்து நிறமையுள்ள உபாத்தியாயர்களைச் சுவதரித்தக்கொண்டதுமல்லாமல், தாமும் கூடியபொழுதெல்லாம் அதைக் கரிசனையாய் மேற்பார்த்தக்கொண்டுவந்தார். இப்பாடசாலை வளர்ந்தோங்கவும் சித்திபெறவும் என்னென்ன வழிவகைகளுண்டோ அவைகளையெல்லாம் புத்திபூர்வமாய்க் கையாண்டுவந்தார். மாணாக்கருக்குள் முயற்சி பெருகத்தக்கதாக, சுறுசுறுப்புள்ள பிள்ளைகளுக்கு விசேஷித்ததை பாராட்டி, பலமுறை தாமும் அவர்களுக்குக் கல்விப்போதனை செய்துவந்தார். இப்பேர்ப்பட்ட பரிபாலனத்தினால் அப்பாடசாலை வெகுவாய் அனுகூலமடைந்தது. சமையம் வாய்க்கும்பொழுதெல்லாம் அதற்குப் பிள்ளைகளைச் சேர்த்துக்கொண்டும்வந்தார். அவர் நடந்து போகையில் ஒரு எளிய பிள்ளையை வழியிற் காண்பாராகில், அவன் வளர்ப்பையும் படிப்பையும்பற்றி அவனிடத்தில் பட்சமாய் விஜவி, தமக்குத் தீர்பதிகரமாய்க் காணப்பட்டால் அவன் பாடசாலையிற் சேர்ந்து படிக்கவும் சவராட்சணைசெய்யப்படவும் திட்டம்பண்ணுவார். இந்தப் பாடசாலையிற் கல்விகற்றுத் தேறின மாணாக்கரிற் பலரை சர்வகலாசாலைகளிலுங் கலாப்பியாசஞ்செய்வதற்கு அனுப்பி அவர்களுக்குச் சென்ற செலவெல்லாம் அவர் தாமே கொடுத்துப் பராமரித்துவந்தார். மேற்படி மாணாக்கர்களுடைய இகபர நன்மையைக்குறித்து அவர் மகா கருத்தும் கரிசனையுமுடையவராயிருந்ததால், கலாசாலை உபாத்தியாயர்களுக்கு அடிக்கடி எழுதி அவர்கள் காரியாதிகளைத் திட்பநுட்பமாய் விசாரித்துக்கொண்டும் வந்தார்.

கில்பின் போதகர் மனச்சாவிக்கேற்க மகா உண்மையாய் நடந்துவந்தவரானபடியால், தமது சேகரத்துச் சபையாருடைய இகபர நன்மையை மிகவுங் கருதி, அது பெருகும்பொருட்டு தம்மாலியன்றமட்டும் பிரயாசப்பட்டுவந்தார். அவருடைய வைராக்கியமும் நன்முயற்சிகளும் அவருடைய சேகரத்துக்குள்ளேயே மட்டுப்பட்டிருந்தனவென்று நினைக்கலாகாது. அவரிருந்ததற்கு வடக்கே பல சேகரங்களிருந்தன. இங்குள்ள சபையாரைக்குறித்துக் கவலைப்படுவோர் ஒருவருமிருந்திலில்லை. இதினிமித்தம் அவர் வருஷத்துக்கு ஒருமுறை

போய் சுவிசேஷத்தைப் போதித்தும், மற்றும் தம்மாற்கூடிய நன்மைகளைச் செய்தும் வருவார். நோர்தம்பர்லாந்து, யோர்கஷியர், செஷியர், வெஸ்ற்மோர்லாந்து, கம்பர்லாந்து மாகாணங்களைச் சுற்றிப் பிரயாணஞ்செய்து ஒவ்வொரு இடத்திலும் இரண்டு மூன்று நாள் தாமதித்திருந்து அங்குள்ள சனங்களைக் கண்டுபேசி நயமும் பயமுமாய்க் கடிந்துகொண்டு பட்சமாயும் உருக்கமாயும் புத்திசொல்லி வருவது வழக்கம். கிறிஸ்துவின் ஜனன திருநாளையடுத்த நாட்களிலே இத்தப் பிரயாணத்துக்கு அவர் வழக்கமாய்த் தெரிந்துகொள்வாராம். இந்தக் காரியத்தைக்கொண்டு அவருடைய பரோபகார குணத்தை விசேஷமாயறிந்துகொள்ளலாம்.

Notes on Leviticus.

லேவியராகம வியாக்கியானம்.

உசு. அதிகாரம்

விக்கிரகாராதனைக்கு விரோதமான சட்டங்கள்.

பலவாக்குத்தத்தங்களும் எச்சரிப்புகளும் தீர்க்கதரிசனமாய் சொல்லப்பட்டது.

"ஓய்வுநாட்களை" 19: 3, 30. யாத். 20: 8.

4. இந்தச் சட்டங்கள் தேசச் சட்டங்களானதால், அதற்குத் தக்கதாகப் பலாபலனும் சொல்லப்படுகிறது. இங்கே சொல்லப்படுகிற வாழ்வு, தேச வாழ்வு. அப்படியே இங்கே சொல்லப்படுகிற கண்டிப்புகளும் யூதருடைய தேசத்துக்குரிய கண்டிப்புகளே.

6. "துஷ்டமிருகங்களை" குடிகள் பெருகி தேசம் விஸ்தாரமாய் சாகுபடியாவதினால் துஷ்டமிருகங்கள் அற்றுப்போம்.

16. இங்கே சொல்லப்படுகிற ஆக்கினைகள் ஒன்று மற்றதைவிட முறையே படிப்படியாய்க் கொடிதானது.

சனங்கள் முதலாவது ஆக்கினைக்குப் பயப்படாமல் தங்கள் அக்கிரமத்திலே நிலைத்திருப்பார்களானால், அதற்குப் பிற்பாடு வரும் ஆக்கினை முன்னதைவிட கடினமாயிருக்கும்.

19. "பூமியை வெண்கலத்தைப்போலவும்" வெகுகாலம் மழையில்லாமல பூமி காய்ந்து கடினமாய்ப்போவதைக்காட்டிய சிறந்த உபமானமாம்.

26. "பத்து ஸ்திரீகள் ஒரே அடுப்பில்" மழையில்லாமல் பஞ்சம் வந்து அப்பம் இடையாமல் கொஞ்ச தானியமட்டும் இடைக்கும் போது ஒவ்வொரு வீட்டிலும் சமையல்பண்ணுகிறதற்கு ஆகாரம் போதாமல் அநேக வீட்டார் சேர்ந்து உலை ஏற்ற நேரிடும்.

"நிறுத்து" அப்பம் அவ்வளவு அபூர்வமாய் இருக்கும். அவனவன் தன்தன் பாகத்தை குறையவிடாமல் நிறுத்து வாங்குவான்.

29. இந்தப் பயங்கரமான ஆக்கினை நிரும்பத் நிரும்ப நிறைவே

மியது. 2 ராசா 6: 28, 29. புலம்பல் 4: 10-வாசி. மேலும் எருசலேம் ரோமரால் முற்றிக்கை போடப்பட்டிருக்கும்போதும் இப்படி நடந்ததாக யோசேப்புஸ் சொல்லுகிறார். எப்படியென்றால் "ஒரு பிரபுஸ்திரீ பால் குடிக்கிற தன் பாலகனைக் கொன்று அவித்து பாதியைத் தின்றபின், மற்றப் பாதியை இன்னொரு வேளைக்கு மறைத்து வைத்தாள்" என்பதே.

44. "நிர்மூலமாக்கத்தக்கதாகவும்" யூத சாதி முற்றிலும் அழிந்து போகமாட்டாது. இந்தச் சத்தியத்தை இக்காலவரைக்கும் காணலாம்.

படிப்பினை.

நாம் பாக்கியராய் வாழவேண்டுமானால், தேவனே நமக்கு முதல் காரியமாகவேண்டும். அவருடைய பரிசுத்த ஒய்வுநாளை பயபக்தியாய் கைக்கொள்ளவும் வேண்டும். கிறிஸ்துவே நமக்கு பெரிய ஆஸ்தி 1-23—பாவம் எவ்விதமும் நம்மைக் கண்டுபிடிக்கும். 14-41—கர்த்தர் நமது பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் சரிக்கட்டுகிறதில்லை. நாம் குணப்பட்டால் கர்த்தர் நம்மை ஏற்றுக்கொள்வார். கிறிஸ்துநாதர் நமக்கு மன்னிக்க ஆயத்தமாயிருக்கிறார் 42—46.

உஎ. அதிகாரம்.

பொருத்தனைகளையும் தசமபாகங்களையும்குறித்த கட்டளைகள்.

2. ஒருவன் தன்னையாவது, தன் பிள்ளையையாவது, தன் ஆஸ்தியில் ஒருபாகத்தையாவது தேவனுக்கென்று நேர்ந்துகொள்ளுவது பொருத்தனை என்னப்படும். இப்படி நேர்ந்துகொள்ளப்பட்ட பொருள் தேவனுக்காக பிரித்துவைக்கப்படும். ஆதி. 28: 20, 22. நியா. 11: 30, 31. 1 சாமுவேல் 1: 11, 28.

3—8. இப்படி தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆளுக்கு அல்லது பொருளுக்குப் பதிலாக செலுத்தப்பட்ட பணம் அவர்களை மீட்க்கும் கிரயம் என்று பெரும்பாலும் நிர்ணக்கப்படுகிறது. ஆனால் சிலரோ, தேவனுக்கென்று படைக்கப்பட்டவன் தன்னை அப்படிப்பட்டவனென்று மற்றவர்களுக்கு முன்பாக அறிக்கையிடும்படி இந்தப் பணத்தையும் கூடச் சேர்த்துச் செலுத்தவேண்டுமென்று அர்த்தம்பண்ணுகிறார்கள்.

26. தலையிற்றுகளை எல்லாம் கர்த்தருக்குப் பலியிடவேண்டியதால் அதை நேர்ந்துகொள்வது பரியாசமாயிருக்கும். யாத். 13: 15.

29. இது மனுஷர் தங்களை நேர்ந்துகொள்ளுவதை குறிக்கமாட்டாது. ஆனால் மனுஷருக்குள் காபத்தீடாக தேவனுலே அழிவுக்கென்று நியமிக்கப்பட்டவர்களைக் குறிக்கும். திருஷ். காணுனியர். (எண். 21: 2. உபா. 7: 2, 24) எரிகோ, (யோசு. 6: 17.) ஆமலேக்கியர், (உபா. 25: 19. 1 சாமுவேல் 15: 3.)

32. இது ஆடு மாடுகளை எண்ணுகிறவகையையும், பிரிக்கிற வகையையும் குறிக்கிறது.

படிப்பினை.

நம்மை கர்த்தருடைய ஊழியத்தக்கு ஒப்புக்கொடுக்கும்படி கவலையாயிருக்கவேண்டும். "கிரயத்தக்குக் கொள்ளப்பட்டீர்களே, ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்."

லேவியராகமத்தின்பேரில் பொதுக் கவனிப்புகள்.

I. "பழய ஏற்பாடு, முக்காடெடுபட்ட புதிய ஏற்பாடு; புதிய ஏற்பாடு முக்காடிடப்பட்ட பழய ஏற்பாடு," என்று ஒரு சாஸ்திரியார் சொல்வது இவ்வாகமத்தினால் தெளிவாகிறது.

II. மத்தியஸ்தர்மூலமாய் பாவிகளுக்கு ரட்சிப்புக் கிடைக்குமென்ற சத்தியம் பலிகளைக்கொண்டு போதிக்கப்பட்டது. பாவிகளுக்குப் பதிலாக பலி அங்கிகரிக்கப்பட்டது; பலி கொல்லப்பட்டதினால் பாவி பிழைத்தான்.

III. கிறிஸ்துநாதர் மரிக்கவேண்டியது அவசியம் என்ற சத்தியம் நிட்டமாய்க் காட்டப்பட்டது. "ரத்தம் சிந்துதலில்லாமல் மன்னிப்பும் இல்லை."

IV. நம்முடைய ரட்சிப்பு கிறிஸ்துநாதருடைய பிராயச்சித்தத்தினாலாகவேண்டியது.

V. தேவனுடைய ஏற்பாடுகளை விசுவாசியாதவனுக்கு அவைகள் பைத்தியமாய்த்தோன்றும். விசுவாசிக்கிறவனே இவ்வாகமத்தில் சுவிசேஷத்தைக் காண்பான். கிறிஸ்துநாதரையும் அவருடைய மகத்தான ரட்சிப்புகளையும் இதிலே கண்டடைவான்.

மஹமது ஜீவிய விருத்தாந்தம்.

(தொடர்ச்சி.)

மஹமதுவுக்கும் அயிஷாவுக்கும் காடிஜாவைப்பற்றி நடந்த ஒரு சம்பாஷணையைக் குறித்த ஒரு கதை சொல்லப்பட்டிருக்கிறது.

அயிஷா ஒரு சமயத்தில் கணவரை நோக்கி: "என் பிராணநாயகரே, உமது முதல் மனைவி விருத்தையும் விரூபியுமாயிருந்தாள். இப்பொழுது உமது மனைவிகள் எல்லோரும் பாலிய ஸ்திரீகள், அதிரூபவதிகள், குணவதிகள்!" என மொழிய, மஹமது "நீங்கள் பாலிய ஸ்திரீகளும் அதிரூபவதிகளுமாயிருப்பது மெய்யே, ஆனால் குணவதிகளோ அல்ல; குணாபூஷணத்தில் நீங்கள் என் முதல் மனைவியிலும் சிறந்தவர்களல்லவென்று அல்லா அறியச் சொல்லுகிறேன். அவளே மிஞ்சிய குணாபூஷணி ஒருத்தி இவ்வுலகில் எப்பொழுதுமில்லை. எனக்கு ஆப்தர் எவரும் இல்லாக்காலத்தில் அவள் எனக்கு ஆப்தமானாள். எவரும் என்னை நம்பாதிருக்கையில் அவள் மனதார, நெஞ்சார நம்பினாள்" என மறுமொழி பகர்ந்தார்.

மஹமதுவைத் தங்கள் தீர்க்கதரிசியாக ஏற்றுக்கொள்ளவும் அவருக்கு அடைக்கலங்கொடுக்கும்படி தங்கள் பட்டணத்தைத் திறக்கவுமான கனம் மெதினு பட்டணத்தாருக்கே முதலாவது கிடைத்தது.

இதற்குக் காரணம் என்னவெனில்,—இரு கூட்டத்தாரான யூதர்கள் மெதினுவில் வாசம்பண்ணி அவ்விடத்து அரபியரோடு சிநேகஐக்கியமாயிருந்து மஹமதுவின் உபதேசத்துக்குச் சார்பாக பழைய ஏற்பாட்டுச் சத்தியங்களை சம்பாஷணை வகையாய் அவர்களுக்குத் தெரியக்காட்டியிருந்ததுதான். இந்த அரபியரில் சிலர் மெக்காவுக்கு யாத்திரை போகும்பொழுது அவ்விடத்திலிருந்த மஹமதுவின் ஜக்கமான பிரசங்கங்களைக் கேட்கவே, அவர் விளம்பின சத்தியங்கள் நூதனமாய்த் தோன்றாமல் யூதர்களான தங்கள் சிநேகிதர்களால் முன் கேட்டிருந்தவைகளுக்கு ஒற்றுமையாயிருக்கிறதைக் கவனித்ததுமல்லாமல் அவர்களால் வருவார் என்று சொல்லப்பட்ட மேசியா இவராயிருக்கலாமோ என்று தங்களுக்குள்ளே ஆலோசிக்கலானார்கள். இவர்கள் தங்கள் பட்டணத்திற்குத் திரும்பின பின்பு அவரைப் பற்றித் தாங்கள் கண்டுகேட்டவைகளையும், அவருக்குண்டாயிருந்த நெருக்கங்களையும் தங்கள் பட்டணத்தாருக்கு விவரமாய்ச் சொன்னபொழுது அவருடைய உபதேசத்தை ஏற்றுக்கொண்டு அவருக்கு அடைக்கலம் கொடுக்கலாமோ என்று பட்டணத்தின் பிரதானமானவர்கள் ஆலோசனைசெய்யும்படி கூடினார்கள். இச்சமயத்தில் பேசினவைகள் எல்லாம் மஹமதுவுக்கு அனுகூலமாயிருந்ததால் பட்டணத்தார் எல்லாரும் பொதுவான வேறொரு சங்கம் கூடினபோது மேற்சொல்லிய இரு விஷயத்துக்கும் எல்லோரும் ஆவலோடு ஏகமாய் உடன்பட்டார்கள். அவர் விளம்பின மோட்ச பாக்கியத்தை அடைகிறதற்காக இவர்கள் தங்கள் வீண் தேவர்களையும், விக்கிரகங்களையும் எல்லாம் விட்டுவிட்டு அவருடைய உபதேசத்தைக் கற்றுக்கொள்ளும்படி சம்மதித்தார்கள்.

இத்தத் தீர்மானம் தமக்கு வந்தெட்டவே மஹமது என்பவர் சற்றென்றிலும் தாமதப்படாமல் தமக்கு நூதனமாய்க் கிடைத்த வல்லமையுள்ள சிநேகிதரண்டைக்குத் தீவிரித்துப் போகையில், வழியில் தமது பழைய சத்துருக்களாகிய கோரேஷியர் தம்மைக் கொலைசெய்யும்படி பண்ணின சதிமோசத்துக்கு அரிதாய்த் தப்பிப் பிழைத்தார். மூன்று நாள்வரையும் அவர் சீதார் என்னும் மலையின் அடிவாரத்திலுள்ள குகைக்குள் ஒளித்துக்கொள்ளும்படி நேரிட்டது. அவர் ஒழித்திருந்த இடம் இயற்கையாய் நல்ல மறைவிடந்தான். என்றாலும் பிற்காலத்தில் அவருடைய சீஷர்கள், கடவுள் தமது தீர்க்கதரிசியைக் காப்பாற்ற அதிசயம் நடப்பித்ததாகச் சாதிக்கிறார்கள். எப்படியெனில் மஹமது அக்குகையில் பிரவேசித்தவுடனே அதின் வாயை மறைக்க ஒரு மரம் அற்புதமாய் முளைத்துண்டானதாகவும், ஒரு புறு அதின் இலைகளில் கூடிகட்ட, ஒரு சிலந்திப் பூச்சி எல்லாவற்றிற்கும் மேலே தன் நொய்மையான வலையைப் பின்னினதாகவும், அதினால் பின்தொடர்ந்த அவருடைய சத்துருக்கள் குகை வாயைப் பாராமலும் சமுசயிக்காமலும் போனதாகச் சொல்லுகிறார்கள். இவ்வாறு சகல அபாயங்களையும் கடந்து கப்பின அவர் மெதினுவுக்குச் சமீபித்து மஹமதிய பட்டணம் ஒன்றை இப்பொழுது முதல் முதல் பார்க்கிறார். சமீபிக்கவே தமது கீர்த்தியால் அவர்களுக்குள் பிரபலப்பட்டிருந்த தங்கள் புதுக்குருவை வாழ்த்தவும் தாங்கள் அவரது சீஷர்கள் என அவர்முன் அறிக்கையிடவும், அதின் குடிகள் அநேகர் பட்டண வாசலிலிருந்து புறப்பட்டு அவருக்கெதிர்கொண்டு வந்தார்கள். மெக்காவில் தாம்

ண்டவர்களும், தமது பிரசங்கங்களைக் கேட்டு உடன்படச் சாடை காண்பித்தவர்களும், தங்கள் போதனையால் பட்டணத்துக்குள் தம்மை அழைக்கும்படி மெதினுப் பட்டணத்தாரை ஏவினவர்களுமான தமது பழைய சிநேகிதர்களில் அநேகரை அவர்கள் நடுவில் பார்த்தார். அவருடைய உத்தம சிஷ்யனிய அலியும் அருமை மனைவியாகிய அயிஷாளும் தங்கள் சமானுக்குண்டான அனுகூல வித்தியில் சந்தோஷமுடைய அதிதிக்கிரம் அவ்விடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். மஹமது மக்காவைவிட்டு மெதினுவுக்கு ஓடின இந்தச் சம்பவம் கி.—பி. 622-ல் நடந்ததாக மஹமதியர் கணக்கிட்டு இருக்கிறார்கள். இது ஹிஜைரா என்றழைக்கப்படுகிறது. இந்தக் காலமுதல் மஹமதமார்க்கம் அங்கங்களென்னத்தெரியலாய்ச் சிதறியிருந்தவர்களின் கொள்கையாயிராமல் ஒரு சாதியாருடைய மதமாயிற்று.

கர்த்தருக்குச் சித்தமானால் அடுத்த நற்போதகமுதல் மஹமதவுடைய பட்டயத்தைப் பற்றி எழுதப்படும்.

SERMON NOTES.

By the Rev. W. O. Purton, Rector of Kingston.

பிரசங்கக்குறிப்பு.

ஓசெயா 14: 5—9.

"நான் இஸ்ரவேலுக்குப் பனியைப்போலிருப்பேன்" &c.

இது கிருபையான வாக்குத்தத்தம். இதில் இயற்கைபோல கிருபையும் இரங்கி விளங்குகிறதைக் குறிப்பித்திருக்கிறது. பனியே இயற்கை; பரிசுத்த ஆவியே கிருபை. இவராலே பக்தர் ஆசீர்வதிக்கப்பட்டும் பிறர்க்கு ஆசீர்வாதமாயிருந்தும் வாழ்கிறார்கள்.

I. பரிசுத்த ஆவியின் கிரியை.

1. பனி நம்மைச் சுற்றியிருக்கிற ஆகாயத்தினின்று பெய்கிறதுபோல இவரும் தமதடியார்களைப் புதுப்பிக்கவும், பரிசுத்தஞ்செயயும், பெலப்படுத்தவும் அவர்களருகில் அவர்களைச் சுற்றிக்கொண்டிருக்கிறார். அவருடைய வாக்குத்தத்தங்கள், திவ்ய நடத்துதல்கள், மூகப்பிரசன்னமாகிய ஞானகாயமண்டலம் பத்தர்களைச் சுற்றி வளைத்துகொண்டிருக்கிறது. சங். 139.

2. பனி சந்தடியற்ற இரவில் பெய்கிறதுபோல, இவரும் அடியார் இருதயம் அமைந்து பரதியானத்திலிருக்கிற தருணமதில் இறங்குகிறார். அவரைத் தேடி ஓடுகிற திவ்யவேளையும், சர்வத்தையும் மறந்து நிற்கும் ஏகாந்த காலமும், ஒற்றுமையுமற்றிருக்கும் பலவீன தருணமுமே அந்த அருட்பனி இந்த ஆத்தும புஷ்பத்திலிறங்கும் முக்கிய சமயம். முதிர்ந்தவருக்கும் மூப்பருக்கும் ஒரே அளவான வரங்கொடாமல் அவரவர் தாங்கிக்கொள்ளுகிறதற்கேற்றபடி அளவாய் வரங்களைக்கொடுத்து வரவரப் பெலப்படுத்தி வளர்க்கிறார்.

4. பனி யாதொரு தோற்றமும் தொனியுமின்றி, பெய்வது தெ
யாமல் பெய்கிறதுபோல இவரும் தமது தாசருள்ளத்தில் இரகசிய
மாய் ஞான சீவனை சிருஷ்டித்த, சிருபையின்மேல் சிருபையை ஊற்
றி அந்தரங்கமாக அதை அன்பு வல்லமைமுதலிய சகல ஆவியின் வர
களிலும் வளர்க்கிறார். 2 கொரி. 3: 18. மார்ச். 4: 27.

5. பனி, காடோறும் வரண்டு கூப்பிடுகிற தரைக்கு காடோறும்
பெய்துகொண்டிருப்பதுபோல, இவரும் காடோறும் கூப்பிடுகிற ஏ
ழிசுவாசிக்கு காடோறும் புதுப் பெலன் கொடுத்துக்கொண்டு வ
ருகிறார். அவருடைய இரக்கங்கள் ஒவ்வொரு காலையிலும் புதியவை
யோபு 29: 19. சங். 40: 5. 71: 15.

பனி கல்லில் அதிகம் பெய்யாது. தேவ அருளைப் பெற நீ
லும் சீவனுமுள்ளவனே? செத்தவனே? நீ உயிருள்ளவனைநோக்கி பரிசுத்த
ஆவி உனக்குப் புதுப்பெலன் தருவார்.

II. ஆவியின் கிரியையாலுண்டாகும் பயன்.

1. ஆசீர்வதிக்கப்படுவார்கள். தம் தம் நிலைமையில், புல்முதல்
கேதுரு வரையுமுள்ள பற்பல வகையான தாபரங்களும், உயர்ந்த சிக
ரமுதல் ஆழ்ந்த பள்ளத்தாக்குவரையுமுள்ள பற்பல விடிவான மலைக
ளுமாகிய இவற்றில் சிலவை வெளிப்படையாய் எவர்க்கும் தோற்றி
யும் சிலவை மறைபொருளாய் அங்கங்கே இடந்தும், தம் தம் இடத்தில்
தம் தம் முறை புரளாது தம் தம் பயனைக் கொடுக்கிறதுபோல எளி
யோர் முதல் வலியோர் வரையும், கற்றோர் முதல் மற்றோர் பரியந்த
மும் உள்ள சபையின் எத்திறத்தோரும் பரிசுத்த ஆவியாகிய பனி
யைப் பெற்று அவரவர் எந்த நிலைமையில் எந்த அளவில் அழைக்கப்
பட்டாரோ அந்த நிலைமைக்கும் அந்த அளவுக்குத்தக்கதாக பலன்கொ
டுத்து தேவனை மகிமைப்படுத்தவேண்டும்.

2. பிறருக்கு ஆசீர்வாதமாயுமிருப்பார்கள். பனியைப் பெற்று வா
ழும் ஒவ்வொரு தாபரமும் பிறருக்குப் பலனைக்கொடுத்து வாழ்கிறது
போல, அருளைப் பெற்று வாழும் ஒவ்வொரு விசுவாசியும் பிறருக்கு
அருளைக் கொடுத்து வாழ்வான். உத்தம பந்தன் தன்புற்றோருக்கு
ஆறுதலும், துணையற்றோருக்கு உதவியும், பலவீனருக்கு ஜெயமும்
குளிர்ந்துபோனவருக்கு அனலுமாயிருக்கிறான். இப்படியே இருவ
யின் கருவியாய் மேலும் மேலும் பிரயாசப்படு. 2 கொரி. 2: 14. யாக்
5: 19. மத். 5: 16.

Evangelistic work in Striviguntam.

ஸ்ரீவைகுண்டத்தில் ஒரு வாரமாக எழுப்புதலான சுவிசேஷ
பிரசங்கம் நடந்தது. தினந்தினம் சூரிய அஸ்தமனவேளையில், கனம
வீ. ஜர்க்கோட் ஐயரவர்களும், அவர்களைச் சேர்ந்த உபதேசிமாரும
பாடகருமான கூட்டத்தார் புதுக்குடியிலிருந்து, இந்தப் பிரதான
பட்டணத்தின், ஏதாமொரு தெருவுக்குச் செல்லுவதற்காக அணிக்கட்
டிண்மார்க்கமாய் நடந்து போவதைக்காணலாம்.

பாட்டையும், சுவிசேஷ பிரசங்கத்தையும் கேட்கும்படி, அப்பட
டணத்தின் பெரியோரும், பிராமணர், கச்சேரி உத்தியோகஸ்தர்க
மாய் ஏறக்குறைய 200—400 பேர் வரையும் அவர்களைச் சூழ்ந்
கொள்வார்கள். அவ்விடம் சர்ச்சு மிஷியோன் அங்கிலோ தமிழ்

பாடசாலைத் தலைமை உபாத்தியார் ஞானவுயிர்ப் பிள்ளையின், அன்
பான உதவியினால் சனங்கள் ஒழுங்கும் அமைதலுமாய் கேட்டார்கள்.
அப்போது சந்திர பிரகாசமில்லாத காலமாயும் அதுவே சுவிசேஷ
பிரசங்கக் கூட்டத்தார் முதலாவதாக இப்பிரதான பட்டணத்தைச்
சந்தித்த காலமாயுமிருந்ததால் அந்தச் சனங்களுக்குள்ளிருந்த அமை
தலும் கவனமும் மிகவும் விசேஷிக்கப்படத்தக்கது.

மத்தேயுப் பிரசங்கியும் அவர் சமூசாரம் அவரைச் சேர்ந்தவர்
களும் அந்தக் காலத்தில் பிரசங்கம் நடத்திவந்தார்கள்.

கனம். ஜர்க்கோட் ஐயரவர்கள் பிரசங்கம் தொடங்கின முதல்
எல்லில் இருகூட்டத்தாரும் ஒன்று சேர்ந்து கடைத்தெருவின் ஓர் சந்
தில் கூடி வந்த பற்பல வகுப்பாராகிய கூட்டத்தாருக்கு பிரசங்கிக்க
தொடங்கினார்கள்.

ஏறக்குறைய 8000 பேர் அந்தப் பட்டணத்தில் வாசமாயிருக்கிறார்
கள். அவர்களனைவரும் பிரசங்கக் கூட்டத்துக்கு வந்திருக்காவிட்டா
லும், கிறிஸ்து மார்க்கத்தைப் போதிக்கிற போதகர் வந்திருக்கிறார்
கள் என்றும், போதனையின் முக்கியம் இன்னதென்றும், யாவருக்கும்
தெரியத்தக்கதாய் அங்கே பப்பிளிக்கையான நல்ல ஓசை உண்டா
யிருந்தது. எல்லாரும் கவனமாய்க் கேட்கத்தக்கதாகக் கர்த்தர் அப்
பட்டணத்தாருடைய காதுகளைத் திறந்ததுபோல அதை அங்கிகரிக்க
அவர்களுடைய இருதயங்களைத் திறப்பாராக.

The new Bishop of Lahore.

லாகூர் புது அத்தியட்சர்.

பஞ்சாப் நாட்டுக் கிறிஸ்தவர்களுக்கு கனம். T. வால்ப்பி. விரை
ஞ ஐயரவர்களை அத்தியக்ஷராக பட்டாபிஷேகம் சூட்டியிருக்கிற
தற்காக மிகவும் ஆனந்த சந்தோஷப்படுகிறோம். கொழும்பு டையோசி
ன் சபையில் சில குழப்பங்கள் சேரிட்டதுபோல பஞ்சாப்பிலும்
சேரிடாதபடி சாலிஸ்பரி பிரபு அவர்கள் இவ்விஷயத்திற் செய்த உத
வுக்காக நன்றியறிந்தவர்களாயிருக்கவேண்டியது.

இந்தியாவிலும் கொழும்பிலுமாக 20 அத்தியக்ஷர்கள் நேமகம்
பற்றதில் இதுவரையும் ஒருவராவது மிஷனேரி வகுப்பிலிருந்து
வரும்பவில்லை. சர்ச் மிஷனிலிருந்து இவரே ஒரு நாட்டுக்கு அல்லது
டையோசேசுக்கு முதலாவது அத்தியக்ஷராக நேமி
யம் பெற்றவர்.

இவர் இந்தியாவின் ஏழு பாஷைகளில் நிபுணராயும் நெடுங்கா
லம் சர்ச் மிஷனில் பஞ்சாப்பில் குருத்தொழில் புரிந்தவராயுமிருப்ப
தால் தாம் ஏற்பட்டிருக்கிற இச்சிறந்த வேலைக்கு ஏற்ற யோக்கியமும்
தகுதியுமுடையவரென்பது வாஸ்தவமே.

Burial of a Sanyasi.—சன்னியாசி பிரேதக்ஷேமம்—சென்ற சனிக்கிழமை பாலைக்காட்டைச் சேர்ந்த நந்தி எனும் இடத்தில் சன்னியாசி ஒருவர் இறந்து, நாகபட்டணத்தில் அக்கரைக் குளத்திற்கு அயலில் பிராமண சன்னியாசி ஒருவரை முன் க்ஷேமித்தவண்ணம், உப்பு குவித்து, அதில் அன்று சாயரக்ஷை க்ஷேமிக்கப்பட்டார். இந்தப் பிரேதக்ஷேமத்தால் குளத்தெண்ணீரைப் பழுதாக்கும் எத்தனம் ஒன்றும் செய்யாதுவிட்டது பிரேதக்ஷேமத்திற்கு வாய்க்கும் குளம் சமீபத்தில் இல்லாததனாலோ? ஆள் உயரத்திற்குக் குழி கில்லி, அது நிறைய உப்பு கொட்டி, மண்ணுலகில் உப்பைப்போலும் சாரமுள்ளவராயிருந்த சன்னியாசி உடலைத் தலைமாத்திரம் வெளியாகத் தெரிய அதிற் புதைத்த பின், அவர் தலையிற் சிதற உடைத்த தேங்காய் ஆயிரத்திற்கு அதிகம். இவ்வாறு உடைந்த தேங்காயில் திவ்ய சுகிர்தம் உண்டென்று நம்பி, இவ்வதிசயம் பார்க்கக்கூடிய திரளான ஜனம் அத்தனை பெயரும் பாய்ந்து விழுந்து ஒவ்வொரு துண்டெடுத்துச் சாப்பிட்டார்கள். முக்கியமாய் மலடிகள் புத்திரபாக்கியம் உண்டாமென்று ஆவலுடன் புசித்தார்கள். ஆயிரம் தேங்காய் சின்னாபின்னமாய்ச் சிதறும்படி உடைக்க இலக்காயிருந்த மஹானாகிய சன்னியாசி தலை என்னபாடுபட்டிருக்குமோ! கண்டவர்களன்றி, காணாதவர்களும் இந்தப் பரிதாபக் காட்சியை மனோபாவனையாற் காணலாம். கண் துடிக்க, மனம் பதைக்க, உடல் நடுங்கத்தக்க இக்காட்சி காணக்கூடிய ஜனத்திரளில் உபாத்தியாயரும் வித்தியார்த்திகளும் அனேகர் நின்றார்கள். இந்தக் கண்ணராவியைக் கண்குளிரக் காண அவர்கள் ஆவலோடு அவ்விடத்திற்குச் சென்றதனால், அவர்கள் கற்ற கல்வி அவர்களுக்குச் சிறிதாயினும் பயன்படவில்லையென்று சொல்லலாம்.—Western Star.

THE RELIEF FUND CLOSED.

பஞ்ச சகாய நிதி நிறுத்தப்படல்.

பக்கிங்ஹம் டியூக் பட்டவர்த்தனர் சொற்படி, சென்னைப் பஞ்ச நிதி கமிற்றிசபையார் லண்டன் லார்ட் மேயர் அதிகாரிக்கு மின்சொல் போக்கி, "பிரபு அவர்கள் செய்த பிரயத்தனத்தால் நாற்றிசையிலுமிருந்து பஞ்சநிவிர்த்தி நிதி திரளாக வந்து சேர்ந்துகொண்டிருக்க, காலமும் அனுகூலித்திருப்பதினால், செய்நன்றி நினைந்து களிகூர்ந்து, இனி நிதி சேர்த்தனுப்புவதைநிறுத்திவிடக் கேட்டுக்கொள்ளுகிறோம்" எனத் தெரிவிக்க, லார்ட் மேயர் அதிகாரி "மான்ஷன் ஹௌஸ் இனி நிதி வேண்டுமென்று கேட்பதில்லை; ஸ்தல கமிற்றி சபையார் வசமும் பிறர் வசமும் சேர்ந்திருக்கும் நிதி விரைவில் தருவித்துக்கொள்ளப்ப

டும். கணக்குச் சோதனைபார்த்து, மீந்த பணம் அனுப்பிவிடப்படும். ...றையத்தினம் இருபதினாயிரம் பௌன்ட் அனுப்பப்படுகிறது" என் இன்னதரம் எழுதினார்.

The War. **யுத்த வர்த்தமானம்.** இதனடியில் கடைசி ஆரண்டு மாசங்களில் மின் கம்பியின் வழியாய் வந்த சில வர்த்தமானங்களை நமது இஷ்டர்கள் பிரியத்தோடே வாசிப்பார்களென்று எண்ணுகிறோம்.

துர்க்கோ-ருஷிய சண்டையில் அன்னிய துரைத்தனத்தார் மத்தியஸ்தம் பேசிவருவதாக ஏற்கெனப் பிறந்த வதந்தி அபத்தமென்று துரைத்தன சாதன மூலமாகத் தெரிகின்றது.

லண்டன், அக்டோபர்-17—15௳ அலத்ஜடாவில் ருஷர் ஆமெத் முக்தார் பாக்ஷாவையும் படை ஜனத்தையும் தீர்ப்பாய் முறியடித்து வெகு பெயரைச் சிறைபிடித்து அனேக பீரங்கிகளைக் கைவசப்படுத்தி துர்க்கிய சைநியத்தைக் கார்ஸ் சாலையினின்று துரத்திவிட்டதாக ருஷ துரைத்தனபத்திரம் ஒன்று வெளியிடுகின்றது.

நாளது மாசம் 24௳ இடையறாது பத்து மணி நேரம் சண்டைசெய்து, கோர்க்கோ தளபதி, ஸொபாயாவிற்குச் செல்லுமார்க்கத்தில் உள்ள டனெக் நகரத்தைக் கைவசப்படுத்தி, பீரங்கி நாலுடன், பாக்ஷா ஒருவரையும், துர்க்கிய தளபதியையும், ராணுவ உத்தியோகஸ்தர் பலரையும், காலாள் வீரர் மூவாயிரம் பெயரையும், குதிரைப்பட்டாளம் ஒன்றையும் பிடித்துக்கொண்டு, அவ்விடத்தில் அகழிமுதலிய நட்டடங்கள் எத்தனஞ்செய்திருக்கிறார். இச்சண்டையில் ருஷர் கனசேதமடைந்தனர். இப்படிச் சொல்லியது ருஷ துரைத்தனப் பத்திரம் ...ன்று.

லண்டன், அக்டோபர் - 28— மன்ஸூர்காயில் பகைஞருடன் சிறு ...ண்டை நடந்ததாக நாளது மாசம் 26௳ ஸுலிமான் பாக்ஷா அறிக்கைசெய்தார்.

நாளது மாசம் 24௳ டூபிரிக்கில் நடந்த போரில் ருஷர் பக்ஷம் இறந்தோர் ஊறுபட்டோர் இருபத்தையாயிரம் பெயர்.

துபுக்கிலும் தெலிசியிலும் நடந்த சண்டைகளில் ருஷர் 6800-துர்க்கிய ராணுவ சேவகரையும் இருநூறு சேனைவகுப்புத் தலைவரையும் சிறைபிடித்தார்களென்று ருஷ துரைத்தன பத்திரம் சொல்லியது.

செப்கெத் பாக்ஷா ராங்தோமிர்ஸியை விட்டு நீங்க, ருஷ குதிரை...ர் அவரைத் தொடர்ந்துபோகிறார்கள். அக்டோபர்மீ 25௳ வரை ...ருஷர் பட்சத்தில் ஊறுபட்டோர் இறந்தோர் அறுபத்தீராயிரம் ...யர்.

கைத்துணையாக வைத்திருந்த துர்க்கிய ரணவீரர் லக்ஷத்தறுபத்

தையாயிரம் பெயரும், ரூதனமாய்ச் சேனகத்திற் சேர்ந்தோர் ஆ
யிரம் பெயரும் யுத்தசன்னத்தராய்ப் புறப்படவேண்டுமென்று க
தாலுல் கட்டளை பிறந்தது.

ருஷர் கோப்ரிகாய் கோட்டையைப் பிடித்துக்கொண்டா
ஒற்றறியப் போயிருந்த ரொமேனிய படைவீரர் ஒரு வரு
ப்லெவ்னுவிற்கு வடமேற்குத் திசையில் உள்ள ரஹோஹாவின் ச
திலிருக்கும் கொத்தளத்தினின்று துர்க்கியரைத் துரத்திவிட்டார்கள்.

லண்டன், நொவெம்பர்-1—ஆர்மீனிய யுத்தகளத்தினின்று வரப்
பெற்ற அறிக்கை, துர்க்கியர் ஹஸ்ஸன்கலியைவிட்டு நீங்கும்பொழுத
காவற்பட்டாளத்தின் பின்னணிவீரரை இருட்டில் ருஷ படைகள்
சூழ்ந்து நெருங்கி, இரண்டு பத்தாலியன் வகுப்பாரைச் சிறைபிடித்
தார்களென்று சொல்லியது. இச்சண்டையில் ருஷர் பக்ஷத்தில் சே
தம் ஸ்வல்பம்.

ADVICE TO STUDENTS.

கல்விகற்கும் மாணாக்கன்மாருக்குப் புத்திமதி.—வாசிக்கும்போ
து காற்காலியில் சாயாமல் நிமிர்ந்திருந்து வாசி. சுகமாய்ச் சாய்ந்து
கொண்டு கவனமில்லாமல் வாசிப்பது மனதில் தங்காது. உட்கார்ந்து
கொண்டு ஒரே புஸ்தகத்தை ஒருமிக்க வெகு நேரம் வாசிக்கலாகாது.
ஒரு மூலே வாசித்துச் சற்று சோர்புண்டானவுடனே அதை வைத்து
விட்டு. வேறு விஷயத்தில் எழுதியிருக்கிற மற்றொரு புஸ்தகத்தை
எடுத்து வாசி. ஒரு வாரத்தில் ஐந்து நாள், நாள் ஒன்றுக்கு மூன்று
மணி நேரம் கிரமமாய் விட்டுவிடாமல் வாசித்துக்கொண்டிவருவாயா
னால் இது போதும். சிலர் புத்தியீனமாய் தவாலையைத் தண்ணீரி
னேத்து அடிக்கடி முகத்தைத் துடைத்துக்கொள்வதாலும் காரமா
காப்பி சாப்பிடுவதாலும் அதிக நேரம் அலுப்பின்றி வாசிக்கலாமென்
று எண்ணுகிறார்கள். ஒரே நேரத்தில் ஒருமிக்க வாசித்த விஷ
முறையாய்க் குறித்துவைத்துக்கொள். இரவில் பதினோரு நாழி
கைக்கமாய் விழித்திருந்து வாசியாதே. வாசித்து முடிந்தவுடன் நித
ரைசெய்யாதே. புஸ்தகத்தை வாசித்தபின் அதிலே கவனம்வைத்து
சாப்பிட்ட போசனம் சீரணியாதபடி செய்வதும் தேக அப்பியாசம்
பண்ணமல் விட்டிவிடுவதும் நல்லதல்ல. மாணாக்கன்மார் அனுசரிக்க
வேண்டிய புத்தியீனத்தையும் மொத்தமாய்ச் சொல்லுகிறேன் கேள்.
புத்தி கலங்காதிருக்கவும் பரிதாபனம் உண்டாகவுந்தக்கதாக மனி
தத்தக்குக் கொஞ்சமும் இடங்கொடாமல் எப்பொழுதும் "உள்
ருக்குள்" சந்தோஷமாயிரு.

Postage Parcels—இப்போது புதிதாக உள்ளூருகளுக்கு அனுப்
இனவும் சிப்பங்களுக்கும், கட்டுகளுக்கும் தபாற் செலவு குறைந்தி
று உத்
பத்தருபா இடைக்கதிகப்படாத நிறையில் திறந்த சிப்பங்க
-அணு 1, நாற்பது ரூபாய்க்கதிகப்படாத நிறையைகளுக்கு
க, மூற்றிலும் மூடப்பட்டவைகளுக்கு அணு 8. இதற்கு அதன
ம் ஒவ்வொரு 40 ரூபா இடைக்கு அணு 2. மூடப்பட்டவைகளு
க்கு அணு 4. காகிதங்களை ரெஜிஸ்தர் செய்தனுப்பும்போது அதிகமாக
ஒரு அணு தபாற் செலவு கட்டிலுல் காகிதமனுப்புகிறவனுக்கு காசி
தத்தை பெற்றுக்கொள்ளுகிறவனுடைய கைச் சீட்டு கொடுக்கப்படும்.
அப்படியே ரசித கொடுக்கப்பட்ட சிப்பங்கள் கட்டுகளுக்கும் பெற்
றுக்கொள்ளுகிறவர்களுடைய கைச் சீட்டுகள் வாங்கி கொடுக்கப்படும்.

SARAH TUCKER INSTITUTION.

NOTICE.

சேரற்றக்கர் பாடசாலை இஷ்டர்களாகிய சுதேச கிறிஸ்தவர்
கள் யாவருக்கும் இதனுல் தெரியப்படுத்துகிறதென்னவென்றால்,

ஷை பாடசாலை நமது கமிட்டியாருடைய பேருதவியாலும்;
தாரத்தனத்தாருடைய கிராண்டு சகாயத்தினாலும் நடந்து வருகிற
தென்பது உங்களுக்குத்தெரியுமே. ஆனால்,

இனிமேற்பட நமது சோசையிட்டியார் முன்போல அத்தனை
பொருள்கொடுக்க ஏதுவில்லாதிருக்கிறதாலும், தாரத்தனத்தாரும்
செய்து வந்த சகாயத்தில் பெரும்பாகத்தை நிறுத்திக்கொண்டபடி
யால், படிக்க வருகிற மாணாக்கருடைய பீஸ்ப்பணத்தை உயர்த்தவேண்
டியதாயிற்று. ஆகையால்,

1. அடுத்த 1878-ம்-வரு ஜனுவரிமீ முதல் பிள்ளை ஒன்றுக்கு
மாசம் (1) ஒரு ரூபாய் கொடுக்கவேண்டும்.

2. தகுந்த முகாந்தரமிருந்து பள்ளிக்கூடத்துக்கு வராத மாசங்
களுக்கும், விடுதலை மாசங்களுக்கும் பிள்ளைகளிடத்தில் பீஸ்ப்பணம்
வாங்குகிறதில்லை.

Palamcottah.
Nov. 13-1877.

A. H. Lash.

161293

வாரம்.	இங்கிலீஷ் தேதி.	தமிழ்த் தேதி.	அன்ருடகத் தியானம்.
ச	1	௧௮	உமது பிரமாணங்களில் மனமகிழ்ச்சியாயிருக்கிறேன். சங். 119:
ஞா	2	௧௯	உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு. ஆமோஸ். 4:12. [16.
தி	3	௨0	சீராய் நடக்கக்கடவோம். ரோமர். 13:13.
செ	4	௨௧	தேவன் எனக்குப் பலத்த அரணானவர். 2 சாமு. 22:33.
பு	5	௨௨	பூரணராகும்படி நடந்து போவோமாக. எபி. 6:2.
வி	6	௨௩	சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள். மத். 5:9.
வெ	7	௨௪	கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு. சங். 55:22.
ச	8	௨௫	உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள். எபி:
ஞா	9	௨௬	கிறிஸ்துவைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள். மத். 22:42.
தி	10	௨௭	அவருடைய வார்த்தைகளை உம்முடைய இருதயத்தில் வைத்துக்
செ	11	௨௮	கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார். யோவேல். 2:21.
பு	12	௨௯	தேவனுடைய இராச்சியம் சமீபமாயிற்று. லூக். 21:31.
வி	13	௩0	நான் போகும் வழியை அவர் அறிவார். யோபு. 23:10.
வெ	14	௧	என் சனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை யோவே.
ச	15	௨	தேவன் தண்டிக்கிற மனுஷன் பாக்கியவான். யோபு. 5:17. [2:27.
ஞா	16	௩	விழித்துக்கொண்டு காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான். வெளி.
தி	17	௪	யாதொன்றைக்குறித்தும் தீர்ப்புச் சொல்லாதிருங்கள். 1 கொரி. 4:
செ	18	௫	காணப்படாதவைகளை நோக்கியிருக்கிறோம். 2 கொரி. 4:18. [5.
பு	19	௬	நீ நித்திரை பண்ணுகிறது என்ன. யோனா. 1:6.
வி	20	௭	இவ்வுலகத்தை அநுபவியாதவர்கள்போலும் இருக்கவேண்டும்.
வெ	21	௮	அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு. யோ. 20:27. [1 கொ. 7:31.
ச	22	௯	நான் காவலிலே தரித்திருப்பேன். ஆப். 2:1.
ஞா	23	௧0	கர்த்தர் சமீபமாயிருக்கிறார். பிலி. 4:5.
தி	24	௧௧	ஆசீர்வாதமான மழை பெய்யும். எசேக். 34:26.
செ	25	௧௨	தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார். கலா. 4:5.
பு	26	௧௩	கர்த்தராகிய இயேசுவே என் ஆவியை ஏற்றுக்கொள்ளும். அப். 7:
வி	27	௧௪	ஜீவ வார்த்தையைக்குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம். 1 யோ. 1:
வெ	28	௧௫	முதல் விளைவாக மீட்டுக்கொள்ளப்பட்டார்கள். வெளி. 14:4. [1.
ச	29	௧௬	சகோதரரே இனி வருங்காலம் சுருக்கம். 1 கொ. 7:29.
ஞா	30	௧௭	வருஷத்தை உம்முடைய நன்மையால் முடி சூட்டுகிறீர். சங். 65:
தி	31	௧௮	எங்கள் தேவனே உமது மகிமையுள்ள நாமத்தைத் துதிக்கிறோம்.

விசேஷ நாட்கள்.

2. அட்வெந்து நாட்களில் முதலாம் ஞாயிறு.
5. அமாவாசை.
9. அட்வெந்து நாட்களில் இரண்டாம் ஞாயிறு.
16. அட்வெந்து நாட்களில் மூன்றாம் ஞாயிறு.
20. பௌரணமி.
21. பரி. அப். தோமாவின் திருநாள்.
23. அட்வெந்து நாட்களில் நாலாம் ஞாயிறு.
25. கிறிஸ்துவின் ஜநந திருநாள்.
26. பரி. ஸ்தேவான ரத்தசாட்சித் திருநாள்.
27. பரி. அப். யோவான் சுவி. திருநாள்.
28. குற்றமில்லாப் பாலகர் திருநாள்.
30. கிறிஸ்து ஜநந திருநாளுக்குப் பின்வரும் ஞாயிறு.

(1)	(2)	(1)	(2)